# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதினான்கு

## (VOLUME FOURTEEN)

**1955 - 1956**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறை நாடகத்திற்கு இறைவன் எழுதிய திரைக்கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஏப்ரல், 2023
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/30.05.2025

# நிகழ்வுகளின் காலவரிசை

**1955**
- டிசம்பர் 9, அஹமதுநகர் ரயில்வே அலுவலகங்களில் ஏறக்குறைய 300 ஆண், பெண் ஊழியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மெஹர் பாபாவின் தரிசனம்

**1955-56**
- டிசம்பர் 18, பூய்ஞ்ச் கிராமத்தில் மெஹர் பாபாவின் தரிசன நிகழ்ச்சி
- ஜனவரி 14, மெஹர் பாபாவின் பூனா - கணேஷ்கிந்த் தரிசன நிகழ்ச்சி

**1956**
- ஜனவரி 24, கும்தா கிராமத்தில் மெஹர் பாபாவின் தரிசன நிகழ்ச்சி
- ஜனவரி 26, ஸாக்கோரி வருகை

,

**1956**
- ஜனவரி 27, ஸங்கம்னேர் தரிசன நிகழ்ச்சி
- ஜனவரி 28-29, மும்பை வருகை. நவ்ஸாரி, பாஜ்வா தரிசன நிகழ்ச்சிகள்

**1956**
- ஜனவரி 31, சத்தாரா வருகை; கிராம மக்களுக்கு தரிசனம்
- ஜனவரி 31 - மார்ச் 19, 'ஜட்ஜ்' பங்களாவில் ஏகாந்தவாசம், மஸ்துகளுடன் பணி

**1956**
- மார்ச் 29 - ஏப்ரல் 2 - 56 சன்னதிகளையும் 56 ஏழைகளையும் வணங்க மெஹராஸாத், ஔரங்காபாத், குல்தாபாத் மீண்டும் சத்தாரா வருகை

**1956**
- ஏப்ரல் 12 , 13, 15 - பாபா தண்ணீர் கூட அருந்தாமல் முழு உபவாசம்
- ஜூன் 10 வரை , சத்தாராவில் உபவாசம், ஏகாந்தவாச பணி தொடர்ந்தது

**1956**
- ஜூன் 10, சத்தாராவிலிருந்து மண்டலியுடன் மெஹராஸாத் பயணம் - உபவாசம், ஏகாந்தவாசம், மேற்கத்திய பயணத்திற்கான ஆயத்த பணி தொடர்ந்தது

**1956**
- ஜூலை 2, எதிர்வரும் 'பேரிடர்' குறித்த 'வாழ்க்கை சுற்றறிக்கை' வெளியீடு
- ஜூலை 7, சத்தாரா பயணம், மேற்கத்திய பயணத்திற்கான பணி தொடர்ந்தது

**1956**
- ஜூலை 16, பாபா சத்தாராவிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, நான்கு மண்டலியுடன் ஏர் இந்தியா விமானத்தில் ஸூரிக் பயணம்

**1956**
- ஜூலை 17 , ஸூரிக்கிலிருந்து பாரிஸ் வழியாக லண்டன் பயணம்
- ஜூலை 19 - 20, லண்டனிலிருந்து பான் ஆம் விமானத்தில் நியூயார்க் வருகை

**1956**
- ஜூலை 24, பாபா குழுவுடன் மர்டில் பீச் மையம் வருகை
- ஜூலை 30, அமெரிக்காவின் அரசியல் தலைநகரான வாஷிங்டன் விஜயம்

**1956**
- ஜூலை 30 , 60 பேர் அடங்கிய குழுவுடன் பாபா கலிஃபோர்னியா பயணம்
- ஜூலை 31, லாஸ் ஏஞ்சலஸ் சர்வதேச விமான நிலையம் வருகை

1956 • ஆகஸ்ட் 2, கலி∴போர்னியா, ஓஹாய் 'மெஹர் மவுண்ட்' மையத்திற்கு காரில் பயணம்

1956 • ஆகஸ்ட் 2, லாஸ் ஏஞ்சலஸிலிருந்து விமானத்தில் ஸான்∴பிரான்சிஸ்கோ வருகை

1956 • ஆகஸ்ட் 7 - 9, முதல் முறையாக ஆஸ்திரேலியா பயணம் - ஹவாய், ஹொனலுலு, ஸுவா ∴பிஜி தீவுகள் வழியாக ஸிட்னி வருகை

1956 • ஆகஸ்ட் 11, பாபாவும் மண்டலியும் 20 ஆஸ்திரேலியா அன்பர்களுடன் ஸிட்னியிலிருந்து மெல்போர்ன் நகருக்கு விமானத்தில் பயணம்

1956 • ஆகஸ்ட் 13, மெல்போர்னிலிருந்து ஸிட்னி வருகை

1956 • ஆகஸ்ட் 14 - 16, ஆஸ்திரேலியாவிலிருந்து பாபாவும் மண்டலியும் டார்வின், ஜகார்த்தா, சிங்கப்பூர், கொழும்பு வழியாக மும்பை வருகை

1956 தொடரும்...

# பொருளடக்கம்


தரிசன நிகழ்ச்சிகள் - பூனா & ஸாக்கோரி ........................... 3

தரிசன நிகழ்ச்சிகள் - ஸங்கம்னேர், நவ்ஸாரி, மும்பை.. 32

சத்தாரா ஏகாந்தவாசம் ............................................................... 68

மேற்கத்திய பயணம் - ஸூரிக் & லண்டன்........................102

மேற்கத்திய பயணம் - நியூயார்க் ........................................125


மேற்கத்திய பயணம் - மர்டில் பீச் ........................................171

லாஸ் ஏஞ்சலஸ், ஓஹாய் &
ஸான் ஃபிரான்சிஸ்கோ..............................................................236

ஸிட்னி, மெல்போர்ன் & ஆஸ்திரேலியா ............................287



பூனா,
ஜனவரி 1955



ஸாக்கோரி, 1955

# தரிசன நிகழ்ச்சிகள் - பூனா & ஸாக்கோரி

(**Darshan In Poona & Sakori**)

1955 டிசம்பர் 9 அன்று பாபா குஷ்ரு குவாட்டர்ஸ், மெஹராபாத், அக்பர் அச்சகம் தொடர்ந்து பிற்பகலில் அஹமதுநகர் மத்திய ரயில்வே அலுவலகங்களுக்கும் சென்றார். ரயில்வே அலுவலகங்களில் 300 ஆண், பெண் ஊழியர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு பாபா 20 நிமிடங்கள் தரிசனம் வழங்கினார்.

டிசம்பர் 11 அன்று மெஹரா, மெஹரு, கோஹெர் ஆகியோருடன் பாபா, மெஹர்ஜியின் காரில் சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார். மணி, நாஜா, ரானோ ஆகியோர் நரிமனின் காரில் எரச்சுடன் சென்றனர். அலோபா, பைதூல், பாவ், டான், குஸ்தாஜி, கிஷன் ஸிங், கிருஷ்ணாஜி, குமார், நீலு, பெண்டு, ஸவக், விஷ்ணு ஆகியோர் மெஹராபாத்திலிருந்து பின்தொடர்ந்தனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி கிருஷ்ணா நாயர் மலபாரில் (கேரளா) தனது இல்லத்திற்குத் திரும்பிச் செல்லவே, காக்கா மீண்டும் மெஹராஸாத்தில் தனியாக மேற்பார்வை செய்து வந்தார். வழியில், பூனா, பிந்த்ரா ஹவுஸிற்கு சென்று, அங்கிருந்து நகரின் மையப் பகுதியில் அமைந்த 489 புத்வார்பேட்டில் (BUDHWAR PETH), பாப்புஸாஹேப் ஷிண்டே (BAPUSAHEB SHINDE) நடத்தி வந்த 'ஸமர்த் லெதர் ஒர்க்ஸ்' (SAMARTH LEATHER WORKS) நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்; அங்கு தரிசன நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சிறிய கடைதான், பூனா நகரில் முதன்முதலில் 'பாபா மையமாக' (BABA CENTER) நிறுவப்பட்டது; இங்கு, ஒவ்வொரு திங்கட்கிழமையும், வாராந்திர விடுமுறை நாளன்று 'பாபா சத்சங்கம்' (BABA MEETING) நடத்தப்பட்டது. தரிசனம் என்பது நெருங்கிய தோழர்களுக்காக மட்டுமே இருந்தபோதிலும், பாபாவை சந்திக்க கிட்டத்தட்ட 300 அன்பர்கள் ஒன்று திரண்டனர். சாலைகள் ஸ்தம்பித்த நிலையில், மக்கள் கூட்டம் அதிகமாகவே, அவரை வாழ்த்தி, வணங்க அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்காததால், 1955 ஜனவரியில் பூனாவிற்கு வந்து மிகப் பெரிய அளவில் தரிசனம் வழங்குவதாக பாபா உறுதியளித்தார்.

ஹபிபுல்லா பெய்க் (HABIBULLAH BAIG), பாபாவின் கழுத்தில் அணிவிக்க, மலர் மாலை ஒன்றைக் கையில் ஏந்திய வண்ணம் அங்கு வந்தவரின் மனதில், இப்படி ஓர் எண்ணம் அலைபாய்ந்தது: "பாபா, ஷிண்டே மீது எவ்வளவு கருணை காட்டுகிறார். ஏழையாக இருந்தவர், இப்போது பெரிய செல்வந்தர்!" சிந்தனை அலைபாயந்த அந்த நேரத்தில், அவரை நேராகப் பார்த்து, பாபா சிரித்தார்; ஆனால் எதுவும் கூறவில்லை. அந்தத் தருணத்திலிருந்து, ஹபிபுல்லா வணிகத்தில் ஈடுபடுவதில் உறுதியாக இருந்தார், மேலும், பல ஆண்டுகளாக அவர் காஷ்மீரி பொருட்களை வியாபாரம் செய்வதில் ஈடுபட்டு செல்வந்தரானார்.

பாபா முன்னிலையில் ஆரத்தி நிகழ்த்திய பின்னர், அவர் சிலருக்கு பிரசாதம் வழங்கினார். பாபா, பின்பு ஷிண்டே குடும்பத்தினரை தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அதே நாளில் பாபா சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு அவர் பெண்மணிகளுடன் 'கிராஃப்டன் பங்களா'விலும் (GRAFTON BUNGALOW), ஆண் மண்டலி 'ரோஸ்வுட் பங்களா'விலும் (ROSEWOOD BUNGALOW) தங்கினர்.

சகவாச காலகட்டத்தில் வந்த ஏராளமான கடிதங்கள் குவிக்கப்பட்டிருந்தன; அவர்கள் சத்தாராவிற்கு வந்ததும், ஒவ்வொரு கடிதமும் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்ட அந்த நேரத்தில், அவர் பதிலையும் எடுத்துரைத்தார். கிருஷ்ணாஜியை கவனிக்கும் பாவ் கல்சூரியின் கடமை மீண்டும் தொடர்ந்தது; ஆனால், சத்தாரா வந்தடைந்த அவ்வேளையில் கிருஷ்ணாஜி நோய்வாய்ப்பட்டார்; நீலு, வழக்கம்போல் அவருக்கு சிகிச்சை அளித்து வந்தார். இதற்கிடையில் மலபாரிலிருந்து கடிதம் வரவே, அவர் குணமடைந்ததும் பாபா, கிருஷ்ணாஜியை அவரது இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்; 'அவர் பாபாவுடன் தங்குவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை' என்று அவரது பெற்றோரிடமிருந்து கடிதம் வாங்கி வருமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். கிருஷ்ணாஜி மலபார் சென்று, பல நாட்கள் கழித்து, கடிதம் எதுவும் இல்லாமல் திரும்பி வந்தார். பாபா உடனடியாக அவரைத் திருப்பி அனுப்பி பெற்றோரின் எழுத்துப்பூர்வ அனுமதியுடன் வருமாறு அறிவுறுத்தினார். ஆனால், கிருஷ்ணாஜி கடிதம் இல்லாமல் மீண்டும் சத்தாராவிற்கு வந்தார்; இந்த முறை பாபா அவரைத் தங்க அனுமதித்தார்.

இந்தக் காலகட்டத்தில், 'பூய்ஞ்ச்' (BHUINJ) கிராமத்தைச் சேர்ந்த தாத்யா ஸாஹேப் ஜாதவ்ராவ் பூய்ஞ்ச்கர் (TATYA SAHEB JADHAVRAO BHUINJIKAR) என்ற நபர், பாபாவின் தரிசனத்திற்காக சத்தாராவிற்கு வந்தவர், அவரது கிராமத்து மக்களுக்கு தரிசனம் வழங்க வருமாறு பாபாவை வேண்டினார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து டிசம்பர் 18ஆம் தேதியை தரிசன நாளாக நிர்ணயித்தார்.

சத்தாராவிலிருந்து 15 மைல் தொலைவில் அமைந்த சிறிய கிராமமான பூய்ஞ்ச், 1700ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில், மன்னர் சிவாஜியின் தாயார் ஜிஜாபாயின் (KING SHIVAJI'S MOTHER JIJABAI) சொந்த ஊராக இருந்தது. தாத்யா ஸாஹேப் இந்தப் புகழ்பெற்ற மராட்டிய குடும்பத்தின் வம்சாவளியைச் சார்ந்தவர், சர்தார் (ஒரு மரியாதையும், மதிப்பிற்குமுரிய நபர்) என்று அழைக்கப்பட்டார். அவர் மூதாதையர்கள் அரச மாளிகையில் வாழ்ந்து, மிக்க பிரபலமானவர்கள். பூய்ஞ்ச் கிராமத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் செலவிடப் போவதில்லை என்று பாபா அவருக்குத் தெரிவித்தார்; அதற்கிணங்க, தாத்யா ஸாஹேப் அனைத்தையும் ஏற்பாடு செய்தார்.

இதற்கிடையில், பாபா, காவல்துறை மேல் அதிகாரியான கே.எஸ். ஸாவந்த் (K.S. SAWANT) அவரது மனைவி ஹேம்லதா (HEMLATA) இருவரையும் சத்தாராவிற்கு அழைத்தார்; அவர்கள் டிசம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை காலை வந்தனர். பாபாவின் பழைய, நெருங்கிய அன்பர்கள் இருவரும் எதிர்கொள்ளும் ஒரு குறிப்பிட்ட சிரமத்திற்குத் தீர்வு காணும் வகையில், பாபா அவர்களை அழைத்தார். ஹேம்லதா அவரது பூஜை அறையில், பாபாவின் நினைவில் ஆழ்ந்து அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். ஸாவந்த், மாலை வேளையில் தனது அலுவலகத்திலிருந்து திரும்பும் வரை, பசியால் வாடும் தனது குழந்தைகளுக்கு உணவளித்து, அவர்களை கவனித்துக் கொள்ள ஹேம்லதா தவறிவிட்டார். ஸாவந்த் இதைக் குறித்து பாபாவிற்கு எழுதிய போது, பாபா அவர்களை வரவழைத்தார்.

ஹேம்லதாவிற்கு பாபா அறிவுரை வழங்கினார், **“உங்கள் அன்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் என்னை எப்படி இரவும் பகலும் நினைவில் கொண்டு, என் மீது கவனம் செலுத்துகிறீர்கள் என்பதை நான் அறிவேன். உங்கள் மனம் ஒருபோதும் அலைபோல் அங்கும் இங்கும் அலைவதில்லை, இது நல்லது. நான் கடவுள், ஆதலால் நான் எல்லோரிடமும் இருக்கிறேன். ஆனால், நான் உங்களில் மகிழ்ச்சியாக இருக்கும் அதே நேரத்தில், ஸாவந்த் மற்றும் குழந்தைகளில் நான் மகிழ்ச்சியற்றவனாக உள்ளேன், இந்த குழந்தைகளில் நான் பசியாக உணர்ந்து, உணவின்றி இருக்கும்போது, நான் உங்கள் மீது மகிழ்ச்சியற்றவனாக இருக்கிறேன்; இந்தக் குழந்தைகளில் நான் அணிந்துகொள்ள சுத்தமான ஆடை இல்லை என்றால், நான் மகிழ்ச்சியற்றவனாக உணர்கிறேன்; ஸாவந்தில் நான் ஒரு கடினமான முழு நாள் பணிக்குப் பிறகு, வீட்டிற்குத் திரும்பும் வேளையில், குழந்தைகள் பரிதாபமாக இருப்பதைக் கண்டு, உங்களிடத்தில் மகிழ்ச்சியாக இல்லை.**

**“எனவே உங்களில், நீங்கள் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறீர்கள், ஆனால் ஸாவந்த் மற்றும் குழந்தைகளில், நீங்கள் என்னை மிகவும் வருத்தமுறச் செய்கிறீர்கள்! நீங்கள் என்னை எல்லோரிலும் எல்லாவற்றிலும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்தால், உங்கள் அன்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன், நான் உங்கள் அதிர்ஷ்டத்தைக் கூட மாற்றுவேன்!”**

பாபாவின் எளிய அறிவுரை ஹேம்லதாவை மிகவும் பாதித்தது, அது அவரை முற்றிலுமாக மாற வழிவகுத்தது. பூனாவிலிருந்து அவர்கள் வரும் வழியில், அவர் ஸாவந்திடமோ அல்லது குழந்தைகளிடமோ ஒரு வார்த்தை கூட பேசாமல், முற்றிலும் உள்வாங்கிய மனநிலையில் இருந்தார். ஆனால் பாபாவின் அறிவுரையைக் கேட்டு அவர் சிரித்துக்கொண்டே ஸாவந்தைத்

தழுவிக் கொண்டார், அந்தத் தம்பதிகள் மகிழ்ச்சியுடன் வெளியேறினர். அவரை வழிபடுவதற்கான உண்மையான வழியை பாபா அவருக்குக் காட்டினார். தியானத்தில் அமர்ந்தால் போதாது; ஒருவர் தனது நடைமுறை வாழ்க்கை பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

பூய்ஞ்ச் கிராமத்தில் மெஹர் பாபா தரிசனம் வழங்கும் செய்தி எங்கும் பரவியதால், பூனா, போர் (BHOR), வை (WAI), சத்தாரா போன்ற இடங்களிலிருந்து பலரும் அங்கு ஒன்று திரண்டனர். 1955 டிசம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், பாபா சில மண்டலியுடன் பூய்ஞ்ச் கிராமத்திற்கு வருகை தந்தார். கிராம மக்கள் அவரை கிராமத்திற்கு வெளியே வரவேற்று, காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்ல விரும்பினர்; இருப்பினும், பாபா காரிலிருந்து இறங்கி, பஜனைகள் மற்றும் மேள தாளத்துடன் மக்களோடு இணைந்து வெகுதூரம் நடந்து சென்றார். பழங்கால பிரம்மாண்டமான மாளிகையைச் சென்றடைந்தபோது, தாத்யா ஸாஹேப் வாசற்படிகளில் காத்திருந்து அவரை வரவேற்றார். குடும்பத்தினர் பாபாவிற்கு நிகழ்த்திய பூஜையைத் தொடர்ந்து, பாபா பெரிய மாளிகை வழியாக அழைத்துச் செல்லப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட அறையில் வசதியாக அமர்ந்தார். பாபா அவர்களின் இல்லத்திற்கு விஜயம் செய்ததில் தாத்யா ஸாஹேப் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; அவரால் அமைதியாக நின்று அவரைப் பார்த்துக்கொண்டிருக்க மட்டுமே முடிந்தது. பாபாவும் தமது இல்லத்தில் இருப்பதை போன்ற உணர்வுடன், குழந்தைகளுக்கே உரித்தான மகிழ்ச்சியுடன் இதை வெளிப்படுத்தினார்.

திடீரென தாத்யா ஸாஹேப், தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களை அறிமுகப்படுத்த நினைவு கூர்ந்தார், மேலும் அவர் பகற்கனவு காண்பது போல், ஆழ்ந்த சிந்தனையிலிருந்து வெளிவந்து முன்னும் பின்னும் மும்முரமான வேக நடையுடன், ஒவ்வொரு நபரையும் பாபாவின் முன்னால் அழைத்துவர ஆயத்தமானார். அங்கிருந்தவர்களில் ஒருவர் பழைய பாபா அன்பரான சோஹன் (CHOHAN) என்ற உறவுக்காரர். அவர் மூலம்தான் பாபாவைப் பற்றி பூய்ஞ்சகர் அறிந்துகொண்டார். பாபா, குடும்பத்தில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார், அவர்கள் பல ஆண்டுகளாக அவரது தொடர்பில் இருந்ததாகத் தோன்றியது! பாபா வீடு முழுவதும் சுற்றி வந்தார்; பாபா மற்றும் மண்டலிக்கு தேநீர், சிற்றுண்டி பரிமாறப்பட்டது.

பங்களாவிற்கு வெளியே அமைந்த பெரிய திறந்த வெளியில் கிராம மக்கள் ஒன்று திரளவே, பாபா வெளியே வந்து வராண்டாவில் இருக்கையில் அமர்ந்ததும், நான்கு பள்ளி மாணவிகள் பாபாவின் தெய்வீகத் தன்மையையும் அவரது அன்பின் செய்தியையும் விவரிக்கும் வரவேற்புப் பாடலைப் பாடினர்; பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் இந்த நிகழ்ச்சிக்காக வாழ்த்துப் பாடலை சிறப்பாக இயற்றியிருந்தார். பக்தி நிறைந்த உணர்ச்சிகரமான குரலில், தாத்யா

ஸாஹேப் உரை ஒன்றை நிகழ்த்தினார், முடிவில் அவர் சுருக்கமாகக் கூறியதாவது:

“பேரரசுகள் மற்றும் அவற்றின் வம்சங்களின் வீழ்ச்சியை உலக வரலாறு பதிவு செய்கிறது; அதேசமயம், ஆன்மீக வரலாற்றை ஆராய்வதற்கு ஒருவர் அக்கறை கொண்டால், அது துறவிகள் மற்றும் சத்குருக்களின் தர வரிசையால் நிரம்பியுள்ளது; அதன் ஆன்மீகத் தன்மையில் நித்தியமாகவும் நிரந்தரமாகவும் இருந்து, காலத்தின் அணிவகுப்புடன் எண்ணிக்கையிலும், அன்பின் வழிபாட்டிலும் வலிமையைப் பெற்று, அதன் ஆதரவாளர்களால் காலத்தால் அழியாமல் பாதுகாக்கப்படுகிறது!”

சில முக்கிய கிராமவாசிகளால் பாபாவிற்கு மலர் மாலையும், புகழாரமும் சூட்டப்பட்டது. அருகில் அமைந்த கிராமங்களான போர் மற்றும் வையைச் சேர்ந்த பூய்ஞ்ச்கரின் உறவினர்கள், பாபா தங்கள் இல்லங்களுக்கும் விஜயம் செய்து, அருள் புரியுமாறு கேட்டுக் கொண்டதற்கு, நேரமின்மையால் பாபா அமைதியாக மறுத்துவிட்டார்.

வராண்டா சற்று உயரமாக இருந்ததால் கிராம மக்கள் மத்தியில், பாபா கீழே இறங்கி தரிசனம் வழங்கத் தொடங்கினார். சீரான முறையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் அவரை அணுகி அன்புடனும் மரியாதையுடனும் மாலை அணிவித்து தலை வணங்கினர். பாபா அவ்வப்போது புன்னகைத்து, சிலரைத் தட்டிக்கொடுத்து, பிறரின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தது, இந்தப் பௌதீக உடல் தொடர்பால் அவர்களின் இதயங்களை விழிப்புறச் செய்ய உதவியாக இருந்ததோடு, அவரது நினைவுகளை எப்பொழுதும் அவர்களின் மனதில் புதுப்பொலிவுடன் வைத்திருக்கும் ஊடகமாகவும் அமைந்தது.

ஏறக்குறைய 1,000 பேர் கூடியிருந்தனர், ஒரு மணி நேரத்தில் பாபா தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்தார். பூய்ஞ்ச்கர் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் விடைபெற்று, பாபா சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; பள்ளிக் குழந்தைகள் ‘ஜெய்’ முழக்கங்களுடன் சிறிது தூரம் அவரது காரைப் பின்தொடர்ந்தனர்.

பாபா 1956 பிப்ரவரி 15ஆம் நாள் ஏகாந்தவாசத்தில் நுழைய இருந்தார்; அந்தக் காலகட்டத்தில், எந்தத் தொந்தரவும் இல்லாமலிருக்க பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருந்தது. இந்த ஏற்பாடுகள், முதன்மையாக மண்டலியின் தங்குமிடம், உணவு மற்றும் அவர்களுக்கு தனிப்பட்ட கடமைகளை வழங்குவது ஆகியவற்றுடன் தொடர்புடையது. மேலும், பாபாவின் ஏகாந்தவாசம், பெண் அன்பர்களுக்கு சகவாசம் வழங்குவது குறித்தும் பல கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. மெஹர் பாபாவின் ஒவ்வொரு பெண் அன்பரும் அவரது இடத்திற்கு பாபா விஜயம் செய்வதை விரும்பினார்; பாபா

இதற்காக ஒதுக்கப்பட்ட குறுகிய நேரத்தைக் கருத்தில் கொண்டால் இது ஒரு பெரும் கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனாலும், கடிதப் பரிமாற்றம் முன்னும் பின்னும் தொடர்ந்தது. இறுதியில் சகவாச நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. 1955 டிசம்பர் 24ஆம் நாள், பாபாவிடமிருந்து (21ஆம் தேதி பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது) வெளியிடப்பட்ட இந்தச் செய்தியின் மூலம் அமைப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது:

**டிசம்பர் 5ஆம் தேதி அனுப்பப்பட்ட தொலைத்தந்தியின் தொடர்ச்சியாக, எனது ஒரு முழு வருட ஓய்வு காலத்திற்கான முன் ஏற்பாடுகள் இன்றியமையாதவை. தேவையான ஏற்பாடுகளும், ஒதுக்கீடுகளும் இதுகாறும் செயல்படுத்தப்படவில்லை. அதற்கும், நான் பல இடங்களுக்குச் செல்வதற்கும் இடையேயான நேரம் மிகக் குறைவு, எனவே எல்லா இடங்களிலும் பெண்களுக்கான சகவாச நிகழ்ச்சிகளை நான் நிச்சயமாக ரத்து செய்தாக வேண்டும். நான் என்ன முடிவெடுத்தாலும் அது அனைவருக்கும் சிறந்த ஒன்றாகவே இருக்கும்; எனவே, ஒருவரும் மனம் தளர வேண்டாம்.**

**எனது பெண் அன்பர்களின் தியாகங்களும், சேவைகளும் என் ஆழ் இதயத்தைத் தொட்டன; எனவே, எனது சகவாசிகளின் உற்சாகம் எந்த வகையிலும் குன்றிவிடக்கூடாது. எதிர்வரும் ஓய்வு காலகட்டத்தில், அன்பர்கள் அனைவரும் எனது அன்பின் புத்துணர்ச்சியை பளிச்சிடச் செய்து, தங்கள் அன்பிற்குரியவருக்காக ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும், இதன் மூலம் எனது அன்பு மற்றும் உண்மையின் செய்தியின் வலிமையைப் பிறரும் உணர வேண்டும்.**

**1956 பிப்ரவரி 14க்குப் பிறகு, கடிதப் போக்குவரத்து குறித்த எனது வழிமுறைகளை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.**

பாபா 1956ஆம் ஆண்டு அமெரிக்கா செல்வதற்கான திட்டத்தையும் முடிவு செய்தார். டிசம்பர் 20 அன்று அவர் மர்ட்டில் பீச்சில் வாழ்ந்த எலிஸபெத் பேட்டர்ஸனுக்கு அனுப்பிய தொலைத்தந்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது: **“நான் நிச்சயமாக அடுத்த ஆண்டு மேற்கு நோக்கி வர விரும்புகிறேன். அமெரிக்க அன்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கவும்.”**

டிசம்பர் 30ஆம் நாள் பாபா, எலிஸபெத்திற்கு மேலுமொரு தொலைத்தந்தி அனுப்பினார்:

**பாபா, எதிர்வரும் கோடை காலத்தில் மேற்கத்திய நாடுகளுக்கு வரவிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவும், வழக்கம் போல் அனைவருக்கும் தெரியப்படுத்தவும் விரும்புகிறார். இம்முறை அவருடன் பெண்மணிகளில் எவரும் வரப்போவதில்லை. அவர் மூன்று பேரை மட்டும் அழைத்து வருவார்; அது ஒரு சிறப்பு ஆனால் குறுகிய வருகையாக**

**இருக்கும். வரும் வழியில், பாபா இங்கிலாந்தில் இரண்டு நாட்கள் தங்க விரும்புகிறார்.** (ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதாக இல்லை) **நியூயார்க்கில் நான்கு நாட்கள், மர்டில் பீச் மையத்தில் நான்கு நாட்கள் மற்றும் கலி:ஃபோர்னியாவில் ஏழு நாட்கள் - வடக்கு கலி:ஃபோர்னியாவில்** (ஐவி டியூஸுடன்) **சுமார் மூன்று நாட்களையும், தெற்கு கலி:ஃபோர்னியாவில்** (ரத் வைட்டுடன் - RUTH WHITE) **மூன்று நாட்களையும் - செலவிட திட்டமிட்டுள்ளார். இதுவே அவரது மேற்கத்திய பயணத் திட்டத்தின் சாராம்சம். விவரங்கள் பின்னர்.**

முழு அமெரிக்கப் பயணத்தின் போதும், பாபாவுடன், டான் ஸ்டீவன்ஸ் இருப்பதை பாபா விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. மத ஆய்வு வகுப்புகளில் பல்கலைக்கழக மாணவர்களுடன் (UNUVERSITY STUDENTS IN RELIGIOUS STUDY CLASSES), பாபா ஒரு சந்திப்பை நிகழ்த்த வேண்டும் என்ற யோசனையை டான் முன்வைத்தார். பாபா அதற்கு பதிலளிக்கும் விதத்தில் (மணி மூலமாக) தெரிவித்தார்: "**யார், எத்தனை பேர் என்னைப் பார்க்க வருகிறார்கள் என்பது குறித்து எனக்குக் கவலையில்லை, ஆனால், அமெரிக்க தேசத்திற்கு என்னை மீண்டும் ஒருமுறை அன்பால் ஈர்க்கும் என்னுடன் நெருக்கமானவர்களுக்கும், என் அன்பானவர்களுக்கும் எனது சகவாசத்தை வழங்கவே நான் வருகிறேன்.**"

டிசம்பர் 26ஆம் நாள், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் நகல்கள் வந்து சேர்ந்தன; அவற்றில் சிலவற்றை பாபா மண்டலிக்கு விநியோகித்தார் - கையொப்பமிடப்பட்ட நகல்களை மெஹரா, மணி, எரச் மூவருக்கும், கையொப்பமிடாத நகல் ரானோவிற்கும், மேலும் ஒவ்வொரு பிரதியையும் பகிர்ந்து கொள்ளுமாறு ஆண், பெண் மண்டலிக்கும் வழங்கினார். இருப்பினும், ஜனவரி 8ஆம் தேதிக்கு முன்னர் அதைப் படிக்க வேண்டாம் என்று பாபா கேட்டுக் கொண்டார். முதல் பதிப்பில் புத்தகத்தின் ஐந்தாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன.

டிசம்பர் 26ஆம் தேதி டாக்டர் நீலு ஒருமாத பயணமாக மும்பைக்கு சென்றார். ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர் ஆகியோர் 30ஆம் தேதி காலையிலும், ஜனவரி 1ஆம் தேதி மஜெட்டி ராமமோகன் ராவ், சிந்தா சர்வராவ், டாக்டர் கனகதண்டி ஆகியோரும் பாபாவை சந்தித்தனர்.

1956 ஜனவரி 3 செவ்வாய் அன்று, எரச், குமார், ராம்ஜூ ஆகியோருடன் பாபா சத்தாராவிலிருந்து மெஹராஸாத் சென்றார். ஆதி சீனியர் காரை அவர் அலுவலகத்தில் பணிபுரியும் வாமன் பட்டாலே என்ற இளைஞனுடன் அனுப்பிவைத்தார். பாபா முன் இருக்கையில் அமர, பிற மூவரும் பின்பக்கம் அமர்ந்தனர். வாமனிடம் புகைப்பிடிக்கக் கூடாது என்று பாபா

கட்டளையிட்டிருந்தார், ஆனால் அஹமதுநகர் கல்லூரியில் பயிலும் வேளையில், அவரது நண்பர் ஒருவர் அதை முயற்சிக்குமாறு வாமனை வற்புறுத்தினார். பயணத்தின் போது, வாமன், அந்த உத்தரவை மீறியதை அறிந்த பாபா, அதை எடுத்துரைத்து, ஏறக்குறைய ஆறு மைல் தூரம் அவரைத் (ராம்ஜூவின் ஓங்கி ஒலித்த குரலில்) திட்டினார். கார் ஓட்டிக்கொண்டிருந்த வாமனின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

பாபா, ராம்ஜூவிடம் ஒரு சிகரெட் கேட்டபோது, ராம்ஜூ தனது சார்மினார் சிகரெட்டுகளில் ஒன்றை (இந்திய தொழிற்சின்னம்) பாபாவிடம் கொடுத்தார். பாபா அதை, தானாகவே பற்றவைத்து, வாயில் வைத்து ஓரிரு முறை உறிஞ்சிவிட்டு, வாமனிடம் கொடுத்து, "**இதை முடித்து விடுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

வாமன் தன்னால் முடியாது என்று கூறவே, பாபா அவரிடம் சில முறை உறிஞ்சிவிட்டு ஜன்னலுக்கு வெளியே வீசி எறியுமாறு கூறியதும், அதை அவர் செய்தார்.

அனைவரும் பிந்த்ரா ஹவுஸில் சிறிது நேரம் நின்றனர்; ஆனால், பாபாவின் கட்டளையை மீறியதற்காக வாமன் வருந்தினார். அவர் வெளியே அமர்ந்திருந்த போது, பாபா, அவர் கைகளால் பரிமாறிய ஒரு தட்டு நிறைய உணவை, குமார் மூலமாக அனுப்பி வைத்தார். அந்த சம்பவத்திற்குப் பிறகு வாமன் மீண்டும் புகைபிடிக்கவில்லை, ஆனால் பாபா பின்னர் அவரிடம், '**நீங்கள் விரும்பினால், ஒரு நாளைக்கு இரண்டு சிகரெட்களைப் புகைக்கலாம்**' என்று கூறினார்.

வாமன், பாபாவின் வசைமொழிக்கு ஆளானது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னர் ஒருமுறை, 1947 அல்லது 1948ஆம் ஆண்டில், ஆதி சீனியர், பாபாவுடன் ஒரு மஸ்த் பயணத்திற்குச் சென்றிருந்தபோது, கோதாவரி மாயை சந்திக்க விரும்பிய குல்மாய், அவரை ஸாக்கோரிக்கு, காரில் அழைத்துச் செல்லுமாறு வாமனிடம் கேட்டுக்கொண்டார். எந்த ஒரு குருநாதரையும் அல்லது எந்த ஒரு சமாதியிலும் தலைவணங்க வேண்டாம் என்று வாமனுக்கு பாபா அறிவுறுத்தியிருந்தார். ஆனால் அவர்கள் ஸாக்கோரிக்கு வந்தபோது, குல்மாய், அவரை கோதாவரி மாயை சந்திக்க அழைத்தார்; குல்மாய் அவரைத் தலைவணங்கியதால், வாமனும் வணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் உபாஸனி மஹாராஜின் சமாதியிலும் வணங்கினார். அதைத் தொடர்ந்து, மெஹராஸாத்தில், பாபா, வாமனைத் தனியாக காக்கா பாரியாவின் அறைக்கு அழைத்து, அவரை மன்னிக்கும் முன்னர், அவர் செய்த தவறுக்காக ராம்ஜூ கடினமான வார்த்தைகளால் சிறிது நேரம் அவரைத் திட்டனார். பாபா, தண்டனையாக அவருடைய மூக்கைத் தரையில் மிகவும் கடினமாக உரசச் செய்தார்.

சகன் இரவு கண்காணிப்புப் பணிக்காக ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு பாபா, ஆதி சீனியருடன் சில நிமிடங்கள் உரையாடினார். பின்னர் அனைவரும் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர். அடுத்த நாள் ஜனவரி 4 காலை, மெஹர்ஜியுடன் திருமல ராவ் வந்தபோது, ஆதி சீனியர் அவர்களை, பாபாவை சந்திக்க மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். திருமல ராவ் தெலுங்கு குழுவுடன் சகவாச நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர், பின்பு, விந்திய பிரதேசத்தின் (VINDHYA PRADESH, மத்திய இந்தியாவில் ஒரு மாநிலம்) லெப்டினன்ட் கவர்னராக (LIEUTENANT GOVERNOR) நியமிக்கப்பட்டார். திருமல ராவ் தனது கடமைகளை ஏற்பதற்கு முன்னதாக, பாபாவை தரிசனம் செய்ய விரும்பி, அவர் சத்தாராவில் இருந்த போது கடிதம் எழுதியிருந்தார், ஆனால் பாபா தமது பணியின் நிமித்தம் மெஹராஸாத்திற்கு செல்ல இருந்ததால், அவரை அங்கு அழைத்தார்.


பாபா, திருமல ராவிற்கு அறிவுரை வழங்கினார், “**எனது அறிவுரைகளைத் தவறாமல், தொடர்ந்து பின்பற்றுங்கள், என்னை நேசியுங்கள், நேர்மையாக இருங்கள்**. (பிரதமர்) **நேரு மற்றும்** (ஜனாதிபதி) **பாபு ராஜேந்திர பிரசாத் இருவரையும் வீழ்த்தி விடாதீர்கள். ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தை முழு மனதுடன் தெலுங்கில் மொழிபெயர்க்க வேண்டும்**”. பாபா புத்தகத்தின் ஒரு பிரதியைத் தொட்டு ஆசீர்வதித்து அவரிடம் கொடுத்தார். திருமல ராவ், பாபாவின் ஆசியால் உள்ளம் நெகிழ்ந்து போனார். இறுதியில், பாபா அவரைத் தழுவி விடையளித்தார்.

4ஆம் தேதி மாலை சத்தாராவிற்குத் திரும்புவதற்கு முன்பு (வாமன் காரை ஓட்டிச் சென்றார்), பாபா, மெஹராஸாத்தில் இல்லாத நேரத்தில் அதன் நிர்வாகத்தைக் குறித்து, காக்காவிடம் விரிவாக அறிவுறுத்தினார். அஹமதுநகர் வழியாகச் சென்ற அவர், ஆதியை சந்திக்க சிறிது நேரம் நின்றார்.

அடுத்த நாள் சத்தாராவில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. பாபா கிரா:ஃப்டனிலிருந்து ரோஸ்வுட்டுக்கு பாவ் மற்றும் அலோபாவுடன் சென்று கொண்டிருந்தபோது, பதினைந்து வயது சிறுவன் ஒருவன், சாலையில் மாட்டுச் சாணத்தை சேகரித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, அவனை அழைத்து, பாபா, “**என்ன செய்கிறீர்கள்?**” என்று கேட்டார்.

சிறுவன் அழத் தொடங்கி, “எனது குடும்பம் ஏழ்மையானது” என்றான்.

பாபா அவனிடம், “**வீட்டிற்குச் சென்று கை கால்களைக் கழுவிவிட்டு ரோஸ்வுட்டுக்கு வாருங்கள்**” என அறிவுறுத்தினார். சிறுவன் வெளியேறவே, பாபா மண்டலியின் `ரோஸ்வுட் குடியிருப்புக்குச் சென்றார்.



மெஹராவின் பிறந்தநாள், **25 டிசம்பர் 1955**
(MEHERA'S BIRTHDAY, 25 DECEMBER 1955)



பூனா, **14 ஜனவரி 1956**
(POONA, 14 JANUARY1955)

சிறிது நேரத்தில் ரோஸ்வுட்டுக்கு வந்த இஸ்மாயில் என்ற சிறுவனிடம் பாபா, **“நீங்கள் பள்ளிக்கூடம் செல்லவில்லையா?”** என வினவ, அவன் பள்ளியை விட்டு விலகிவிட்டதாக பதிலளித்தான்.

**“உங்களைப் பள்ளிக்கூடம் அனுப்பினால் செல்வீர்களா?”** என்று பாபா கேட்டார். **“நாங்கள் அதற்கான செலவுகளை கவனித்துக்கொள்வோம்.”** அதற்கு சிறுவன், “நான் பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை” என்று பதிலளித்தான்.

பாபா, பெண்டுவிடம் சிறுவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கச் சொன்னார்; அதை வாங்கிக் கொண்டு சிறுவன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் சென்ற பிறகு, பாபா மண்டலியிடம், **“சிறுவன் புத்திசாலியாகத் தெரிகிறான், பள்ளிக்கூடம் சென்றால் நன்றாக இருக்கும்”** என்று கூறினார்.

சிறிது நேரத்தில் இஸ்மாயில் திரும்பி வரவே, என்ன என விசாரித்தபோது, “உங்கள் ரூபாயைத் திருப்பித் தர வந்தேன். உழைக்காமல் எதையும் ஏற்கக்கூடாது என்று எனது தாயார் கூறுகிறார்” என்றான்.

**“இங்கே அதிக வேலை இல்லை, ஆனால் நீங்கள் படிக்க ஒப்புக்கொண்டால், அதை ஏற்பாடு செய்யலாம்”** என்று பாபா பதிலளித்தார்.

“எனக்குப் பள்ளிக்கூடம் செல்ல விருப்பமில்லை என்று சொன்னேனே! ஆனால், எவரேனும் எனக்கு இங்கே பாடம் சொல்லித் தருவதாக இருந்தால் பாடம் கற்க வருவேன்” என்றான்.

பாபா, மண்டலி பக்கம் திரும்பி, **“பாவ், நீங்கள் அவனுக்குப் பாடம் கற்றுத் தந்து, அவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்! குறைந்த பட்சம் பிறருக்கு ஏதேனும் நல்லது செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்!”** என்று சைகையால் தெரிவித்தார்.

இஸ்மாயில் உடனே, “அவர் எனக்குக் கற்றுத் தந்தால், நான் கற்றுக் கொள்வேன் என உறுதியளிக்கிறேன்” என்றான்.

எனவே பாபா, ஆசிரியரின் கடமையை பாவ் கல்சூரிக்கு வழங்கினார். இஸ்மாயில் தனது மாணவனாக இருந்ததைத் தவிர, தனது மேலதிகாரியாக எப்படி மாறுவான் என்பதை பாவ் விரைவில் அறிந்து கொண்டார்!

ஷிண்டே, காடேக்கர், மதுசூதனன், காம்ப்ளே, லக்ஷ்மண் தாடே மற்றும் சதாஷிவ் பாட்டீல் உள்ளிட்ட பூனா அன்பர்களுக்கு, ஜனவரி 14 அன்று பூனாவில் வெகுஜன தரிசனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. ஜனவரி மாத தொடக்கத்தில் பாபாவிடம் ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க அவர்கள் சத்தாரா வந்தனர்.

எரச், பாவ், குமார், அலோபா ஆகியோருடன் ஜனவரி 13ஆம் தேதி சத்தாராவிலிருந்து பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்று, பாபா, கணேஷ்கிந்த் தோட்டத்தில் தாதி கேராவாலாவின் இல்லத்தில் தங்கினார். (ஒரு நாள்

முன்னதாகவே பெண்டு அங்கு அனுப்பப்பட்டார்.) கணேஷ்கிந்தில் அமைந்த ஒரு பங்களாவில் (பங்களா எண் 5, ஷிவாஜிநகர், பூனா வானிலை ஆய்வு மையத்திற்கு அருகில்), ஒரு ஸிந்தி (SINDHI) வம்சத்தைச் சார்ந்த ஜவர்மல் ஆஹுஜாவிற்குச் (JAVARMAL AHUJA) சொந்தமான பங்களாவில் தரிசனத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் விசாலமான வளாகத்தில், வீட்டிற்கு எதிரே ஒரு பெரிய பந்தல் அமைக்கப்பட்டது, அன்றிரவு பெண்டு ஒரு மேடையை எழுப்பியதால், பாபாவை கூட்டத்தில் அனைவரும் எளிதாகப் பார்க்க முடியும் விதத்தில் அமைந்தது. பூனா அன்பர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் இரவும் பகலும் உழைத்தனர், மேலும் அவர்கள் மேடை, பந்தல் இரண்டையும் அலங்கரிக்க விடியும் வரை விழித்திருந்தனர்.

1956 ஜனவரி 14ஆம் தேதி சனிக்கிழமை அதிகாலை முதல், பல்லாயிரம் பேர் ஒன்றுதிரண்ட பெருங்கூட்டம், தரிசனம் தொடங்கும் வரை காத்திருந்தது. நாக்பூர், ஆந்திரா, ஹமிர்பூர், டெஹ்ரா டூன், மும்பை போன்ற தொலைதூரங்களில் இருந்தும் ஏராளமான அன்பர்கள் கலந்துகொண்டனர். காலை 8:00 மணியளவில், 'ஜெய்' ஆரவாரங்களுக்கு மத்தியில் பாபா அந்த இடத்தை வந்தடைந்தார். ஆண்களும் பெண்களும் தனித்தனி வரிசைகளை உருவாக்கினர், பாபா உடனடியாகப் பிரசாதத்தை வழங்கத் தொடங்கினார். இந்த நிகழ்ச்சி முதலில் அன்று காலை மட்டுமே நீடிக்கும் என திட்டமிடப்பட்டிருந்தாலும், தரிசனத்திற்கான நீண்ட வரிசை முடிவடையாததால் மாலை ஆறு மணி வரை தொடர்ந்தது. பாபா 30 நிமிட இடைவேளையை அனுமதித்த அந்த நேரத்தில் அவர் பிற இடங்களிலிருந்து வருகை தந்த அன்பர்களை ஒரு தனி அறையில், தனிப்பட்ட முறையில் சந்தித்தார். முழு நாளும், பாபா, ஒரு குவளை சோடா நீர் அல்லது குளிர்பானம் மட்டுமே அருந்தினார்.

பஜனை, கவாலி இசை நிகழ்ச்சிகள் நாள் முழுவதும் நடந்தன; மேலும் பூனாவைச் சேர்ந்த புகழ்பெற்ற பாரம்பரிய பாடகர் மாஸ்டர் கிருஷ்ணாவும், அவரது மகளும் இணைந்து தெய்வீக அன்பானவரை மகிழ்வித்தனர். மாஸ்டர் கிருஷ்ணா 1929இல் பாபாவின் பிறந்தநாள் நிகழ்ச்சியின் போது மெஹராபாத்தில் பாபாவின் முன்னிலையில் முதன்முதலில் பாடிய நாளிலிருந்து, ஏறக்குறைய 30 ஆண்டுகளாக பாபாவின் தொடர்பில் இருந்தார். இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் நாசிக்கில் பாபாவின் சகோதரர் பெஹராமின் திருமணத்திலும், மீண்டும் நாசிக் நகரில் 1937ஆம் ஆண்டு பிரமாண்டமான பிறந்தநாள் விழாவிலும் இசை நிகழ்ச்சியை நடத்தினார். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்குப் பின்னர், அவருக்கு மீண்டும் இறைவன் முன்னால் இசை நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது, பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

தொழில்முறை புகைப்படக் கலைஞராக மாறிய ராம்ஜூவின் மகன் தாது (DADU), நாசிக்கிலிருந்து புகைப்படம் எடுக்க வந்திருந்தார். காவல்துறை மேல் அதிகாரி மற்றும் பூனா மேயர் உட்பட பல அதிகாரிகளும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

ஜனவரி 14 இந்துக்களுக்கு ஒரு புனிதமான நாள் - சங்கராந்தி (SANKARANT) - ஆகையால் பூனா அன்பர்கள் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். நிகழ்ச்சியின் போது பாபா, செய்தி, சொற்பொழிவு போன்றவற்றிற்கு பதிலாக, இரு கைகளாலும் 'தில்-குல்' (TIL-GUL, எள்ளு-வெல்லம் கலவை) பிரசாதமாக வழங்கினார். அதுவே அவரது உண்மையான பரிசு. அவர் சிலரை இதமாகத் தட்டினார், சிலரின் கன்னங்களை வருடினார், அல்லது சில நேரங்களில் ஒருவரின் தலையில் கை வைத்தார். அவரது ஒளிரும் புன்னகை எங்கும் பரவியது, மேலும் அவரது பார்வையின் கதிர்கள் அன்பர்களின் இதயங்களில் ஏக்கத்தின் இனிமையான தீப்பொறிகளைத் தூண்டியது.

மாலை 6:00 மணிக்கு பாபா தரிசனத்தை நிறுத்திவிட்டு, மேடையிலிருந்து இறங்கி காரில் சென்று அமர்ந்தார்.

அவரது நெருங்கிய அன்பர்கள் பாபாவின் காரை சூழ்ந்துகொண்டனர், கண்ணீர் அவர்களின் கன்னங்களில் வழிந்தோடியது. பாபா அவர்களின் அன்பு மற்றும் அயராத உழைப்பில் திருப்தியை வெளிப்படுத்தினார்; கார் மெதுவாக, திரளான கூட்டத்தினூடே சென்றது. 'ஜெய் அவதார் மெஹர் பாபா!' எல்லா திசைகளிலிருந்தும் எதிரொலித்தது, அவர் புறப்பட்டுச் சென்ற பிறகும், கணேஷ்கிந்திற்கு திரள் திரளாக வரும் மக்கள் கூட்டம் தொடர்ந்தது. பாபா, தொட்டு ஆசீர்வதித்துச் சென்ற எஞ்சிய பிரசாதம் பூனா அன்பர்களால் இரவு 9:00 மணி வரை விநியோகிக்கப்பட்டது. அன்றைய தினம் ஏறக்குறைய 20,000 பேர் பாபாவின் பிரசாதத்தை பெற்றுக்கொண்டனர். பாபா பிறந்து, விளையாடி, படித்து, பாபாஜானின் தொடர்பில் வந்து இறை உணர்வை அடையப்பெற்ற பூனாவில், பாபா வழங்கிய முதல் வெகுஜன தரிசனம் இதுவாகும்.

பிந்த்ரா ஹவுஸில் ஜெஸவாலா குடும்பம், தூன் ஸட்டா, அவரது சகோதரி அலு (ALU) ஆகியோரை சந்தித்த பிறகு, பாபா அன்று மாலை சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார். "திரும்பி வந்தபோது, பாபா மிகவும் சோர்வாகக் காணப்பட்டார், ஆனால் மறுநாள் காலை, அவர் வழக்கம் போல தமது பணியில் ஈடுபட்டார்" என்று மணி மேற்கத்தியர்களுக்கு எழுதியிருந்தார்.

பூனா தரிசன நிகழ்ச்சியானது 1956 தொடக்கத்தில், ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்பு, பாபா வழங்கிய குறுகிய தரிசன நிகழ்ச்சிகளில் முதன்மையானது. சத்தாராவிற்குத் திரும்பிய பின்னர், அங்கிருந்து பதினைந்து மைல்களுக்கு அப்பால் அமைந்த 'கும்தா' (KUMTHA) கிராமத்தில் பாபாவின் அன்பைத் தீவிரமாக பரப்பி வந்த மௌனி புவா (MAUNI BUA), பாபாவை சந்தித்து,

அங்கு தரிசனம் வழங்குமாறு மன்றாடினார். 2,000 கிராமவாசிகளில் எவரும் இதற்கு முன்பு பாபாவை சந்தித்ததில்லை அல்லது தரிசனம் செய்ததில்லை; அவர்கள் அதற்காக ஆர்வமாக இருந்தனர். பாபா இணக்கம் தெரிவித்து, தரிசனத்திற்கான தேதியை நிர்ணயம் செய்தார்.

1956 ஜனவரி 24ஆம் தேதி செவ்வாய்க் கிழமை நண்பகல் வேளையில், ஒரு சில மண்டலியுடன் பாபா, சத்தாராவிலிருந்து கும்தா கிராமத்திற்கு ஒரு ஸ்டேஷன் வேகனில் (STATION WAGON) அழைத்துச் செல்லப்பட்டு, அரை மணி நேரத்தில் அதன் எல்லையைச் சென்றடைந்தார். கோரேகாவ்ம் (KOREGAON) ரயில் நிலையத்திலிருந்து, மண் சாலை வழியாக மூன்று மைல் தொலைவில், தீல் கங்கா நதிக்கரையில் (TEEL GANGA RIVER) இந்த கிராமம் அமைந்திருந்தது. அவரை வரவேற்க கிராம மக்கள் காத்திருந்தனர். ஒரு மாட்டு வண்டியை தேர் போல் அலங்கரித்து, அதை இழுக்க ஒரு டஜன் ஜோடி வலிமைமிக்க காளைகளைப் பயன்படுத்தினர்! மௌனி புவா, பாபாவை அதில் அமரும்படி கேட்டுக் கொண்டார்; காரிலிருந்து இறங்கிய பாபா, அலங்கார மாட்டு வண்டியில் ஏறினார். பஜனை மற்றும் நடனக் குழு வழிநடத்திச் செல்ல, சிலர் சங்குகளை ஊதி மரியாதையுடன், கிராம மக்கள் தங்கள் இறைவனை ஊர்வலமாக தரிசன நிகழ்ச்சிக்கான இடத்திற்கு அழைத்துச் சென்றனர். கிராமத்தின் ஒரே பிரதான சாலை வழியாகச் செல்லும் போது, கிராம மக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் நின்று, பாபாவின் மீது பூமழை பொழிந்தனர். அவருக்கு மாலை அணிவிப்பதற்காக மக்கள் ஆங்காங்கே மீண்டும் மீண்டும் 'தேரை' நிறுத்தினர். 'இந்தக் கண்கொள்ளா காட்சி கிருஷ்ண பெருமானின் சகாப்தத்தை நினைவூட்டியது' என்று எரச் பின்னர் எடுத்துரைத்தார்.

பாபா தரிசன ஸ்தலத்தைச் சென்றடைந்தார்; அங்கு ஓர் ஆலமரத்தின் கீழ் சிறிய கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

மாட்டு வண்டியிலிருந்து இறங்கிய பாபாவை, மௌனி புவா மற்றும் சில முக்கிய கிராம மக்கள் மேடைக்கு அழைத்துச் சென்றனர். கிராமத்து மக்கள் திரும்பத் திரும்ப எழுப்பிய 'ஜெய்' கோஷங்களுக்கு மத்தியில், பாபா தமது இரு கரங்களையும் கூப்பி நமஸ்காரம் செய்தார். பின்பு, கிராம மக்கள் அவருக்கு மாலை அணிவித்து ஆரத்தி நிகழ்த்தினர். தரிசனம் தொடங்கும் நேரத்தில், பாபா இவ்வாறு கூறினார்: "**எனக்கு மாலை அணிவித்து, ஆரத்தியை நிகழ்த்தி உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். இவை முக்கியமல்ல. முக்கியமான விஷயம் எனது கைகளிலிருந்து பிரசாதத்தை அடையப் பெறுவது.**"

கிராமத்து மக்கள் பாபாவின் பாதங்களைத் தொடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டனர், ஆனால், அவ்வாறு எச்சரித்த போதிலும், சிலர் தங்கள் இதயங்களையும் வழக்கத்தையும் எதிர்க்க முடியாமல், பாதங்களைத் தொட முயன்றனர். இதன் காரணமாக, பாபா மேடையிலிருந்து வெளியே வந்து, கிராம

பஞ்சாயத்து மண்டபத்திற்கு நடந்து சென்று, அங்கு அவர் அமர்ந்தார். பாபாவிற்கும் மண்டலிக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிறிதளவு பருகிவிட்டு, பாபா தனது கோப்பையில் இருந்த தேநீரை மௌனி புவாவிடம் கொடுத்தார்.

அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், ஏறக்குறைய 5,000 பேர் வந்திருந்தனர். சிலர் பாபாவை அணுகி, தரிசனத்தைத் தொடருமாறு கேட்டுக் கொண்டனர். **"எனது பாதங்களை எவரும் தொடவில்லை என்றால் நான் தயார்"** என்று பதிலளித்தார். அனைவரும் அதற்கு இணங்கியதன் பேரில், பாபா பந்தலுக்குத் திரும்பிச் சென்றார். இம்முறை எவரும் அவரது பாதங்களைத் தொட முயற்சிக்கவில்லை. ஆண்களும் பெண்களும் ஒவ்வொருவராக அவரிடம் சென்று முழு நம்பிக்கையுடனும் பக்தியுடனும் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். பாபா ஓர் அற்புதமான மனநிலையில் இருந்தார்; **"இந்த சுற்றுப்புற சூழல்களைப் பார்க்கும்போது, கோப்பர்காவ்ம்** (KOPARGAON) **பகுதியை ஒட்டிய கிராமங்களுக்கு, சாய்பாபா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டதைப் போன்ற சம்பவம் எனது நினைவிற்கு வருகிறது"** என்று பாபா குறிப்பிட்டார்.

பாபா முதலில் இரண்டு மணிநேரம் மட்டுமே தரிசனம் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார், ஆனால் அவர் மதியம் 3:30 மணி வரை, இரண்டு கைகளாலும் பிரசாதம் வழங்கினார். இருப்பினும், கூட்டம் திரள் திரளாகப் பெருகிக்கொண்டே இருந்தது; எனவே, பிரசாதத்தின் எஞ்சிய பகுதியைத் தொட்டு ஆசீர்வதித்து, பாபா மேடையிலிருந்து வெளியேறினார். அப்போது பாபா, நதிக் கரையில் அமைந்த ஒரு கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு துறவி ஸ்ரீ தர்நாத்தின் (SHRI DHARNATH) சமாதி எழுப்பப்பட்டிருந்தது. ஒரு வயதான சாது அந்த இடத்தை கவனித்துக் கொண்டிருந்தார்; அந்த சாது தரையில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, பின்னர் அவருக்கு மாலை அணிவித்தார். பாபா அவரைத் தழுவியபோது, உள்ளே நுழைந்து சன்னதியை அருளும்படி பாபாவிடம் வேண்டினார்; பாபா சன்னதியை மிகவும் விரும்பினார்.

தரிசனத்தின் போது, பலர் மேடையில் தேங்காய், பூக்கள் மற்றும் பழங்களுடன் பணத்தையும் வைத்தனர். பாபா, மௌனி புவாவிடம், **"தரிசன நிகழ்ச்சியின் செலவுகளைச் சமாளிக்க இந்தத் தொகையை பயன்படுத்துங்கள்"** என்று அறிவுறுத்தினார். கிராம மக்கள் மனம் விருப்பி செலவுகளுக்குப் பங்களித்ததால், மௌனி புவா தயங்கினார். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் குருநாதருக்குக் கீழ்ப்படிவதைக் குறித்து பாபா அவருக்கு நினைவூட்டினார்; அதற்குப் பிறகு, பணத்தை ஏற்றுக்கொண்டு, மௌனி புவா அதை வரவேற்புக் குழுவிடம் ஒப்படைத்தார்.

மெஹர்ஜி அவரது காரில் அன்று மதியம் கும்தா கிராமத்தை வந்தடைந்தார். மறுநாள் ஸாக்கோரிக்கு, மெஹராஸாத் வழியாகக் காரில் செல்ல பாபா விரும்பினார், மேலும் மெஹர்ஜியைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைந்தார். பாபா மாலை 5:00 மணியளவில் சத்தாரா திரும்பிவந்தார்.

அடுத்த நாள், அருகாமையில் இருந்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பாபா, பிற இடங்களுக்கு வருகை தந்ததைப் போலவே தங்கள் கிராமங்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று வேண்டினர். நேரமின்மையால், பாபாவால் இணக்கம் தெரிவிக்க முடியவில்லை. அவர் விரைவில் ஏகாந்தவாசத்தில் நுழைய இருந்ததால், அவ்வாறு செய்வதற்கு முன்பு, சில இடங்களுக்குச் செல்லவும் திட்டமிட்டிருந்தார். இருப்பினும், பிப்ரவரி 2ஆம் தேதிக்குப் பிறகு, சத்தாரா ரோஸ்வுட் பங்களாவில் அவர்களுக்கு தரிசனம் வழங்க பாபா ஒப்புக்கொண்டார்.

1955 நவம்பர் முதல் வார மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிக்கு, கோதாவரி மாய் வந்து, சகவாசம் நிறைவடைந்த பிறகு, பாபா சில நாட்கள் ஓய்வுக்காக ஸாக்கோரிக்கு வரவேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தெரிவித்தார். பாபா, அவரது அழைப்பை ஏற்று, "**நான் ஸாக்கோரிக்கு வந்தால், உங்கள் கைகளால் தயார் செய்த உணவை உண்ணுவேன். யஷோதா** (கிருஷ்ணரின் வளர்ப்புத் தாய்) **கிருஷ்ணருக்கு எவ்வாறோ, அவ்வாறே நீங்கள் எனக்கும். நீங்களே எனது யஷோதா**" என்று குறிப்பிட்டார்.

முதலில் பாபா ஒரு வாரம் ஸாக்கோரியில் ஓய்வெடுக்க முடிவு செய்தாலும், அவர் ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்பு நேரம் இல்லாததால், இரண்டு நாட்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டு, கோதாவரி மாய்க்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் பல நாட்களுக்குப் பிறகு, பாபா, ஆதி சீனியரை ஸாக்கோரிக்கு இந்தச் செய்தியுடன் அனுப்பி வைத்தார்: "**வாக்குறுதி வழங்கியதற்கு இணங்க, பாபா, ஸாக்கோரிக்கு விஜயம் செய்வார், ஆனால் அவர் இரண்டு மணிநேரம் மட்டுமே அங்கு இருப்பார்.**" கோதாவரி ஏமாற்றமடைந்து, பாபா ஒரு நாளாவது அங்குத் தங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இறுதியில், பாபா காலை 8:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை அங்கு இருப்பதாக ஒப்புக்கொண்டு, ஜனவரி 26 அன்று விஜயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. பாபா, கோதாவரிக்கு மேலும் ஒரு செய்தியை அனுப்பி வைத்தார்: "**நான் ஸாக்கோரியில் தரிசனம் வழங்க மாட்டேன், நீங்கள் தயார் செய்த உணவை மட்டுமே உண்பேன்.**"

அதற்கிணங்க ஜனவரி 25ஆம் தேதி எரச், பெண்டு, பாவ், நீலு, குஸ்தாஜி, குமார், கிஷன் ஸிங் ஆகியோருடன் பாபா, சத்தாராவிலிருந்து அஹமதுநகருக்குப் புறப்பட்டார். குஷ்ரு குவாட்டர்ஸ் அருகில், அவர் ஆதியை சந்தித்துக் கூறினார், "**நாளை காலை ஸாக்கோரிக்குச் சென்று, கோதாவரி**

**மாயிடம் காலை 9:00 மணிக்கு வருவதாகவும், மதிய உணவை முடித்து உடனே திரும்ப இருப்பதாகவும் கூறுங்கள். தரிசனம் அல்லது வரவேற்பு நிகழ்ச்சி எதுவும் ஏற்பாடு செய்யக்கூடாது.**"

பாபா மெஹராஸாத்தில் இரவைக் கழிக்கப் புறப்பட்டார்; மறுநாள் அதிகாலையில் ஆதி ஸாக்கோரிக்குச் சென்று பாபாவின் செய்தியை கோதாவரி மாய்க்கு வழங்கியபோது, அவர் இவ்வாறு பதிலளித்தார்: "பாபா என்னை அவரது யஷோதாவாகக் கருதுகிறார், மாலை வரை அவர் இங்கே இருக்க வேண்டும் என்பதே யஷோதாவின் விருப்பம்."

ஸாக்கோரிக்கு பாபா வருகை தருவதை அறிந்த அஹமதுநகர், பூனா, மும்பை மற்றும் பல இடங்களிலிருந்து அன்பர்கள் அங்கு ஒன்று திரண்டனர். 1956 ஜனவரி 26 காலை 7:30 மணிக்கு மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டு, பாபா ஒரு மணி நேரத்தில் ரஹாட்டா (RAHATA) கிராமத்தைச் (ஸாக்கோரியிலிருந்து ஒரு மைல்) சென்றடைந்தார். ரஹாட்டாவில், கோதாவரியின் செய்தியை ஆதி வழங்கிய வேளையில், அதைக் கேட்டு பாபா மகிழ்ச்சியடைந்தார்.

பாபா ஸாக்கோரிக்கு வந்ததும், ஆசிரமவாசிகளும் அவரது அன்பர்களும் சில நூறு அடி தூரத்தில் அவரை வரவேற்றனர். பாபா காரை விட்டு இறங்குவதற்கு முன்னரே ஆசிரமத்தின் மேலாளர் வாக் (WAGH) அவருக்கு மாலை அணிவித்தார். பாபா இசை மற்றும் மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தின் முன்னணியில் அழகாக அலங்கரிக்கப்பட்ட வெண் குதிரை ஒன்று இருந்தது (கல்கி, கலியுகத்தில் அவதார புருஷரின் சின்னம்). பாபா கோவிலுக்கு வந்ததும், பிரதான பூசாரி வஸந்த் தேஷ்முக் (சகனின் சகோதரர்) பூஜை நிகழ்ச்சியை நிறைவு செய்தார். பாபாவின் கார் யஷ்வந்த் ராவின் புதிய இல்லத்தை நோக்கி நகர்ந்து சென்றது. பாபா காரிலிருந்து இறங்கியதும், கோதாவரி மாய் அவருக்கு மாலை அணிவித்து, அவர் பாதங்களில் தலைவணங்கினார்; இதர கன்யாக்களும் அவ்வாறே செய்தனர்.

பாபா, யஷ்வந்த் ராவ் இல்லத்தில் சோஃபா ஒன்றில் அமர்ந்திருந்தபோது, அவரது ஆரத்தியை நிகழ்த்திய பின்பு, பாபா, கோதாவரியின் உடல்நிலை குறித்து விசாரித்தார். மேலும் தொடர்ந்து, "**நான் மாலை 4:00 மணி வரை இங்கு இருப்பேன்**" என்று அவரிடம் தெரிவித்தார்.

யஷ்வந்த் ராவின் இல்லத்திலிருந்து புறப்பட்ட பாபா, உபாஸனி மஹாராஜின் குடிசைக்குச் சென்று, சிறிது நேரம் உள்ளே அமர்ந்தார். அங்கிருந்து அவர் மஹாராஜின் சமாதிக்கு நடந்து சென்று, மஹாராஜின் இருக்கைக்கு எதிரே ஒரு பக்கத்தில் பாபாவுக்காக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இருக்கை ஒன்றில் அமர்ந்தார். கன்யாக்களில் ஒருவர் (1920இல்) மஹாராஜுக்காக, பாபாவால் பிரத்யேகமாக இயற்றப்பட்ட பாடலைப் பாடினார்; இது மஹாராஜ் வாழ்ந்த

காலத்தில் பாடப்பட்டது. பின்னர் அவர் பாபாவின் மகிமையைப் புகழ்ந்து மற்றுமொரு பாடலைப் பாடினார். மகிழ்ச்சியான மனநிலையில், பாபா மனமுவந்து புன்னகைத்தார்.

கோதாவரி எங்கே என்று பாபா கேட்க, அவர் சமையலறையில் பாபாவின் உணவைத் தயார் செய்து கொண்டிருந்ததாகத் தெரிவித்தனர். மஹாராஜின் குடிசையில் மின்சார இணைப்பு உள்ளதா என்று அவர் வாகிடம் வினவ, வாக் இவ்வாறு பதிலளித்தார், "இப்போது மின்சாரம் இல்லை, ஆனால் தேவைப்படும் வேளைகளில் அது ஜெனரேட்டர் மூலம் தற்காலிகமாக வழங்கப்படுகிறது."

புரந்தரே குறுக்கிட்டு, "பாபா அதைப் பற்றிக் கேட்பதால், நிச்சயமாக மின்சார இணைப்பு வழங்கப்படும்" என்று கூறினார்.

பாபா உடனே, "**மின்சார இணைப்பு இந்த இடத்தின் சிறப்பை மேம்படுத்தும்**" என்று குறிப்பிட்டார்.

ஜிஜி என்றழைக்கப்பட்ட கன்யாக்களில் ஒருவர் மஹாராஜின் பழைய அன்பர், ஸாக்கோரியில் வாழ்ந்து வந்தார். உடல்நிலை சரியில்லாமல் ஹைதராபாத்தில் இருந்ததால் அவரால் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்க முடியவில்லை.

அதற்கு பதிலாக, பாபாவைத் தன் அறையில் அமரும்படியாக வேண்டிக்கொண்டதோடு, அவரது ஆரத்தியை அங்கேயே நிகழ்த்துமாறு, தனது சகோதரரை ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார். அவரது சகோதரர் பாபாவிற்கு அறிமுகமாகி, மேலும் அவரை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்த அவர், "இன்று நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். உபாஸனி மஹாராஜின் அருளால் நாங்கள் மெஹர் பாபாவை எங்கள் மத்தியில் கண்டோம்" என்று குறிப்பிட்டார்.

பாபா பிறகு சமையலறைக்குச் சென்ற போது, அங்கு கோதாவரி, இதர கன்யாக்களின் உதவியுடன் உணவு தயார் செய்வதில் மும்முரமாக இருந்தார். பூரிகளை உருட்டுவதில் பாபாவே கைகொடுத்ததைக் கண்டு காலம் வியந்தது. ஒரு கட்டத்தில், "**நான் கோதாவரி மாயைப் போல சமையலில் கைதேர்ந்தவன் இல்லை**" என்று குறிப்பிட்டார்.

சமையல் அறையில் இருந்த பெண்மணிகளை அவதானித்த பாபா, "**இங்கே விரைவில் மின்சாரம் பொருத்தப்பட வேண்டும்**" என்றும் அறிவுறுத்தினார். சிரித்துக்கொண்டே, கோதாவரியுடன் கேலி செய்து, "**எனக்கு இப்போது பசியாக இருக்கிறது. இனி எனக்கு பஜன்** (பாடல்) **தேவையில்லை, ஆனால் போஜன்** (உணவு)!" என்றார். அதைத் தொடர்ந்து சற்று தீவிரமான தொனியில் கூறினார்:

**நான் ஒரு பெரிய பாரத்தை சுமக்கிறேன், நாளை நான் ஸங்கம்னேரில் வெகுஜன தரிசனம் வழங்க வேண்டும், தொடர்ந்து நவ்ஸாரி மற்றும் பாஜ்வா** (குஜராத் மாநிலத்தில்) **செல்ல வேண்டும். முழுப் பிரபஞ்சமும் துன்பத்தில் துடித்துக் கொண்டிருக்கிறது, ஆனால் இன்று நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம்! நீண்ட நாட்களுக்குப் பின்னர், என் அன்பான யஷோதா, மிகுந்த பிரியத்துடன் தயார் செய்த உணவை இன்று நான் ருசிப்பேன். நான் எப்பொழுதும் நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கிறேன். ரசிப்பதெற்கென எனக்கு வேறெதுவும் இல்லை; ஆனால் ஒரே நேரத்தில், ஒவ்வொருவரின் துன்பங்களாலும் நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறேன், ஏனெனில் நானே எல்லாமும் எல்லோரும்.**

**பல இடங்களில் தரிசனம் வழங்குவதற்கு பதிலாக, மேலும், என்னை வழிபட்டு, ஆரத்தியை வழங்கும் சடங்குகளில் அமர்வதற்கு பதிலாக, நான் இங்கேயே இருந்து, கோலி விளையாடி, எனது யஷோதா தயார் செய்த உணவில் பங்கெடுக்க விரும்புகிறேன்! நான் என்றென்றும் சுதந்திரமாக இருக்கிறேன், ஆனால் எனது சுய காரணங்களுக்காக, எனது விருப்பத்துடன் என்னை பிணைத்துக்கொள்கிறேன். இதற்கெல்லாம் அனைவரின் மீதுள்ள அளப்பரிய அன்பு ஒன்றுதான் காரணம்!**

அனைவரின் முழு கவனமும் பாபாவின் மீது குவிந்தபோது, அவர் திரும்பி, கோதாவரியை அன்புடன் தட்டிக் கொடுத்து, அவரிடம் கூறினார், **“நெருப்பின் வெப்பம் அதிகமாக உள்ளதால் உங்களுக்கு மிகவும் வியர்க்கிறது, இப்போது நீங்கள் உடனடியாக திறந்த வெளியில் செல்ல வேண்டாம், சளி பிடிக்கும்.”**

பாபா சமையலறையிலிருந்து வெளியே வந்த வேளையில், மெஹராபாத் சகவாசத்தில் கலந்துகொண்ட மஹாராஜின் பழைய அன்பரான நஸர்வான் பரூச்சாவை சந்தித்து, அவரைத் தழுவினார். அவரது கன்னங்களில் கண்ணீர் வழியவே, அவர் உணர்ச்சிவசப்பட்டார்.

வாகின் கையைப் பற்றிக் கொண்டு, பாபா அவரை விறுவிறுப்பாக மஹாராஜின் குடிலுக்கு அழைத்துச் சென்று, “நீங்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்!” என்று கூறியதைக் கேட்டு, சிரித்துக்கொண்டே, பாபாவை அவரது இருக்கைக்கு அழைத்துச் சென்றார்.

இதற்குள் சமையல் பணியை முடித்த கோதாவரி மாய் அங்கு வந்து, அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பாபாவின் அருகில் அமர்ந்தார்.

உபாஸனி மஹாராஜின் சமாதியை தரிசனம் செய்யும்படி பாபா மண்டலிக்கு அறிவுறுத்தினார். நோஷிர் ஸிகன்போரியா, பாபாவிற்கு மாலை அணிவிக்க முன்வந்த போது, பாபா அவரையும் மஹாராஜின் சமாதியில் வணங்கும்படி கட்டளையிட்டார். பஜனைகள் பாடப்பட்டன, கை சைகைகள்

மூலம், பாபா, தபலா இசைக்கலைஞரிடம் எப்படித் தாளம் தப்பாமல் இசைக்க வேண்டும் என்பதை தெரிவித்தார். கோதாவரியின் உடல்நிலையை கவனித்துக் கொள்ளுமாறு அவ்வப்போது நினைவூட்டினார். இந்தக் குளிர் காலத்தில் அறை குளிர்ச்சியாக இருந்தது, அவர் வெதுவெதுப்பூட்டும் ஆடைகளை அணியவில்லை. 'தாயும்' 'மகனும்' அருகருகே அமர்ந்து, இனிமையாகப் பேசுவதைக் காண எவ்வளவு அருமையாக இருந்தது!" என்று காலம் வியந்தது.

பாடலை நிறுத்தக் கோரி, பாபா கூறினார்:

**இப்போது நான் கூறுவதை கவனமாகக் கேட்க முயற்சி செய்யுங்கள். எரச் எனது சைகைகளை நன்றாகப் புரிந்து கொள்கிறார். எழுத்துப்பலகையில் நான் எடுத்துரைத்ததை 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **என்ற புத்தகமாக எழுதியிருக்கிறார். கடந்த காலத்தில், அவர் மிகவும் வலிமையும், கட்டுரம் வாய்ந்தவராகவும் இருந்தார், ஆனால் அவர் இப்போது பலவீனமாகிவிட்டார். அவர் நன்றாக தூங்குவதில்லை, மிகக் குறைவாகவே உண்கிறார், நடைபயிற்சிக்காக வெளியே செல்வதில்லை, நல்ல பசியாக உணர்வதுமில்லை. இருப்பினும், அவர் எனக்காக மிகவும் கடினமாக உழைக்கிறார்.**

**எனது சகோதரி மணியும் மிகவும் கடினமாக உழைக்கிறார். அவர் மேற்கில் இருந்து வரும் அனைத்து கடிதங்களையும் கையாளுவதோடு, நாள் முழுவதும் தட்டச்சு செய்வதில் மும்முரமாக இருக்கிறார். இதனால் அவர்கள் இருவர் மீதும் என் இதயத்தில் தனிப்பட்ட பிரியம் எதுவும் இல்லை. என் இதயம் அன்பின் மஹாசமுத்திரம் என்பது உண்மை. அதே அன்பினால்தான் எனது பக்தர்களின் உடலையும், மனதையும், உள்ளத்தையும் தூள் தூளாக்குகிறேன். ஒருவர் துகளாக மாறாதவரை, நித்திய வாழ்வில்** (அழியாத்தன்மை) **உயிர்த்தெழுதல் சாத்தியமில்லை.**

**நீங்கள் அனைவரும் பார்க்கும் எனது உடல், நீங்கள் பார்க்க வேண்டிய, நினைக்க வேண்டிய, நான் யார் என்று உணர வேண்டிய உடல் அல்ல. நான் எல்லோரிலும் எல்லாவற்றிலும் இருக்கிறேன். நானே உண்மைப்பொருளாகவும், நித்திய பேரின்பத்திலும் இருப்பவன்.**

**நான் கோதாவரியை மிகவும் நேசிக்கிறேன் - அளப்பரிய விதத்தில். இதற்கெல்லாம் காரணம் அவருடைய முற்கால தொடர்புகள். அவருக்கு என்னுடன் பல தொடர்புகள் உள்ளன.**

மஹாராஜின் புகைப்படத்தைச் சுட்டிக்காட்டி, பாபா, "**அந்த முதியவர் என்னை இந்த உலகில் கொண்டு வந்தார். நீங்கள் சில நேரங்களில் உணரும் அல்லது அனுபவிக்கும் உலக மகிழ்ச்சியின் மிக உயர்ந்த வகையானது, அந்த நித்திய பேரின்பத்தின் ஏழாவது நிழலைத் தவிர வேறொன்றுமில்லை**" என்று குறிப்பிட்டார்.

மாதவ் ராவ் மிஸாலின் பக்கம் திரும்பிய பாபா, "**இப்போது அனைவருக்கும் தூக்கம் வருவதால், நல்லதொரு பாடலைப் பாடுங்கள்**" என்று கேட்டுக் கொண்டார். அனைவரின் சிரிப்பு ஆரவாரத்திற்கு மத்தியில், மாதவ் ராவ் ஒரு பாடலைத் தொடங்கினார்.

பாபா தனது மலர் மாலையிலிருந்து ரோஜா இதழ் ஒன்றை எடுத்து ஜிஜியின் சகோதரரிடம் கொடுத்து, அதை உண்ணுமாறு சைகையால் தெரிவித்தார். ஜிஜியின் சகோதரர் பாபாவிடம், "ஜிஜி ஹைதராபாத்தில் சிறந்த ஆன்மீகப் பணிகளைச் செய்கிறார். அவர் நோய்வாய்ப்பட்ட காலத்திலும், தினமும் ஏராளமான ஏழைகளுக்கு உணவளிக்கிறார், மேலும் மஹாராஜை மிகவும் நேசிக்கிறார், அவர் மீதான அன்பின் நிமித்தம் எப்பொழுதும் அந்தப் பகுதியில் ஏதாவது செய்து கொண்டிருக்கிறார்."

அதற்கு பாபா, "**ஹைதராபாத்தில் ஜிஜியின் பணி தொடர்ந்து நடைபெறுவதில் எந்தத் தடையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்**" என்றார்.

பாபா ஸாக்கோரி ஆசிரமவாசிகளுக்கும் கன்யாக்களுக்கும் பிரசாதம் வழங்கத் தொடங்கினார், பின்பு கோதாவரியிடம், "**பூனா தரிசனத்தின் போது நான் 15,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு பிரசாதம் வழங்கினேன், இப்போது நான் மிகவும் சோர்வாக உணர்கிறேன்**" என்று தெரிவித்தார். அங்கிருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கிய பிறகு, பாபா சிறிது பிரசாதத்தை கோதாவரி மாய்க்கு ஊட்டினார்.

பாபா, பின்னர் ஓர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு கன்யாக்களில் ஒருவர் நோய்வாய்ப்பட்டு பல நாட்களாகப் படுத்த படுக்கையாக இருந்தார். பாபா, அவருக்கு பிரசாதத்தை வழங்கி, அவரது கையை தனது கைக்குள் பற்றிக்கொண்டு, அவர் முகத்தின் மேல் தனது கையை மென்மையாக நகர்த்தினார். பின்னர் அவர் ஜிஜியின் அறைக்குச் சென்ற போது, அங்கு, கன்யாக்களில் ஒருவர் ஜிஜியின் சார்பாக பாபாவிற்கு ஆரத்தியை நிகழ்த்தினார். பாபா, ஜிஜியின் சகோதரனிடம், "**ஜிஜி என்னை மிகவும் நேசிக்கிறார். என் அன்பை அவருக்குத் தெரிவியுங்கள்**" என்று கூறினார்.

அங்கிருந்து பாபா, நஸர்வான் பரூச்சாவின் குடியிருப்புக்குச் சென்றார். பரூச்சா வாத நோயால் பாதிக்கப்பட்டு பாபாவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தார். பாபா அறைக்குள் நுழைந்ததும், பரூச்சா அவரைத் தழுவி கண்ணீர் விட்டார். அவர் பாபாவை தனது பூஜை அறைக்கு அழைத்துச் சென்று, 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பிரதியை பாபாவிடம் காட்டி அவர், "நான் புத்தகத்தைப் படித்தாலும், படித்ததை மறந்து விடுகிறேன்" என்று கூறினார். பாபா அந்தப் புத்தகத்தைத் தொட்டு, குறிப்பிட்டார், "**திரும்பத் திரும்பப்**

**படியுங்கள். நான் அதைத் தொட்டதால் இப்போது நீங்கள் அதை வாசித்து புரிந்துகொள்ள முடியும்"** என்று அறிவுறுத்தினார்.

பரூச்சாவின் படுக்கையில் அமர்ந்து, பாபா அவரிடம், **"நான் யாருடைய படுக்கையிலும் அமர்வது அரிது. நான் உங்கள் படுக்கையில் அமர்ந்திருப்பதால் நீங்கள் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி. நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை"** என்று கூறினார்.

பரூச்சா பதிலளித்தார், "பாபா, நான் என் உடலை உபாஸனி மஹாராஜிடம் அர்ப்பணித்துவிட்டேன், அதனால் நான் கவலைப்பட ஒன்றுமில்லை."

பாபா மகிழ்ச்சியடைந்தார், அங்கிருந்து யஷ்வந்த் ராவின் புதிய இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார். கோதாவரி உணவு தயாராக இருப்பதாகக் கூறி அனுப்பவே, பாபா உணவறைக்குச் சென்றபோது, கோதாவரி மாய் அவருக்கு உணவு பரிமாறினார். அவர் பாபாவிடம் அன்புடன், "தயவுசெய்து சிறிது காய்கறிகளை எடுத்துக்கொள்ளுங்கள்... இதை முயற்சிக்க மாட்டீர்களா?... இன்னும் சிறிதளவு சாதம் மற்றும் பருப்பு சாப்பிடுங்கள்" என்று உண்ணத் தூண்டினார். பாபா மிகுந்த ஆர்வத்துடன் உண்டார், ஒவ்வொரு வகை உணவையும் பாராட்டினார். கடவுள் ஒரு குழந்தையாகி, தாயின் பாசமான கவனிப்பை அனுபவித்துக் கொண்டிருந்தார்! கோதாவரி அவருக்குப் பரிமாறிக் கொண்டே இருந்தார், ஆனால் அவரது 'குழந்தையால்', பரிமாறப்பட்ட அனைத்தையும் உண்ண முடியவில்லை, மேலும் ஒரு குழந்தையைப் போல், அதிகமாக உண்ணும் இயலாமையை அது வெளிப்படுத்தியது. அவரது தட்டில் எஞ்சியிருந்த உணவை பாபா, கோதாவரியிடம் அவரது பிரசாதமாக கன்யாக்களுக்கு வழங்குமாறு கூறினார்.

அங்கு அறையிலிருந்த அனைவருக்கும் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"உலகில் உள்ள அனைத்து பெண்மணிகளிலும், கோதாவரியின் இதயம் தூய்மையானது, நான் அவரை மிகவும் நேசிக்கிறேன் - அவர் என்னை நேசிப்பதை விட அதிகமாக நேசிக்கிறேன்!"**

அறையை விட்டு வெளியே வந்த பாபா ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். இதற்கிடையில், சிலோன் தேசத்திலிருந்து சச்சிதானந்த (SATCHITANANDA MATA) மாதா என்றழைக்கப்பட்ட, சுவாமி சிவானந்தாவின் (SWAMI SIVANANDA) பெண் பக்தர் ஒருவர் ஸாக்கோரிக்கு வந்தார். சுவாமி சிவானந்தாவின் பெயரில், அவர் அப்பகுதியில் தெய்வீக வாழ்க்கை சங்கத்தை (DIVINE LIFE SOCIETY) நடத்தி வந்தார், மேலும் பாபாவுடன் தனிப்பட்ட நேர்காணலைக் கோரி ஸாக்கோரிக்கு வந்தவரை, பாபா, எரச்சுடன் தனியாக ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று சில நிமிடங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பேட்டி அளித்தார்.

பாபா திரும்பி வந்து மீண்டும் மரத்தின் கீழ் அமர்ந்து, ஒரு ரப்பர் பந்தைக் கேட்டு வாங்கி, கன்யாக்கள் மற்றும் அன்பர்களிடம் அதைப் பற்றிப்பிடிக்க முயற்சிக்குமாறு கூறினார். விளையாட்டுத்தனமான மனநிலையில், அவர் சிறிது நேரம் அதை அங்கும் இங்கும் வீசத் தொடங்கியது, கன்யாக்களுக்கும் பிற அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. பாபா பின்னர் அனைவரையும் மதிய உணவுக்காக அனுப்பிவிட்டு, யஷ்வந்த் ராவ் இல்லத்தில் தரிசனத்திற்காகக் காத்திருந்தவர்களை சந்திக்கச் சென்றார். பாபா அமர்ந்ததும், ருஸ்தம் காக்கா பஜனைப் பாடல்களைத் தொடரவே, அனைவரும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

சிறிது நேரத்தில் அங்கு மலர் மாலைகள் குவிந்தன, பாபா தரிசன நிகழ்ச்சி முடிந்ததும் மஹாராஜின் குடிலுக்குச் சென்று, பந்தலின் கீழ் ஒரு கூட்டத்திற்காக அமர்ந்தார். கோதாவரி மாயும் பாபாவின் அருகில் அமர்ந்தார். பாபா அவரிடம், "**நீங்கள் உணவு உண்டீர்களா? கன்யாக்களுக்குப் பிரசாதம் வழங்கினீர்களா?**" என்று கேட்டார்.

அவர் சிரித்துக்கொண்டே, "ஆமாம், பாபா" என்று பதிலளித்தார். அவதார புருஷரின் தெய்வீக அன்பின் கதிர்கள் அன்று ஸாக்கோரி முழுவதும் வியாபித்திருந்தன, அங்கிருந்தவர்கள் அவரது அன்பின் உள்ளார்ந்த நெருக்கத்தை அனுபவித்தனர்.

பின்னர் அவர் பின்வருமாறு கூறினார்:

**மெஹராபாத் சகவாச நிகழ்ச்சியின் போது, நான் பல சொற்பொழிவுகளை வழங்கி, என்னுடன் இருந்த அன்பர்களுக்கு பல விஷயங்களை விளக்கினேன். நான் அளித்த விளக்கங்களில் இன்றியமையாத ஒன்று 'பாசாங்குத்தனம்'. பாசாங்குத்தனத்தின் அர்த்தம் என்ன? உள்ளொன்று வைத்து புறம் ஒன்றைக் காட்டுவது! கடவுள் எல்லாவற்றையும் மன்னிக்கிறார், ஆனால் நான் உங்களுக்கு இந்த உண்மையைச் சொல்கிறேன், அவர் மன்னிக்காத ஒன்று பாசாங்குத்தனம்.**

**சகவாச நிகழ்ச்சிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர், உ.பி.யில் ஓர் இடத்தில் என் அன்பர் ஒருவர் நிகழ்த்திய கீர்த்தனையின் போது, யார் ஒருவர் வீட்டில் கீர்த்தனை நடந்து கொண்டிருந்ததோ, அந்த வீட்டுக் குழந்தை திடீரென உயிரிழந்தது; அந்த உயிரிழந்த குழந்தை என் அன்பரால் மீண்டும் உயிர் பெற்று வந்ததாக எனக்கு செய்தி வந்தது.**

**இந்த செய்தி என்னை மகிழச் செய்யவில்லை. மாறாக, கீர்த்தனை செய்து கொண்டிருந்த என் அன்பர் உயிரைத் துறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கத் தொடங்கினேன்!**

பாபா தொடர்ந்து கூறினார்:

**ஆன்மீகப் பாதையில் மாய சக்திகளில் (ரித்தி-சித்தி) ஆதிக்கம் செலுத்தும் சித்தர்கள், நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ளனர். உயிர் துறந்தவர்களைக்கூட அவர்களால் உயிர்த்தெழச் செய்ய முடியும். ஆனால் அதன் மூலம் அவர்களே மாயையின் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். என்னிடமிருந்து இதுபோன்ற சக்திகளின் வெளிப்பாட்டை எதிர்பார்க்காதீர்கள்! நீங்கள் சூரியனையும் அதன் பிரகாசத்தையும் பார்க்கிறீர்கள், அது மாபெரும் சக்திவாய்ந்த ஒன்று என்று நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையில் சூரியன், அதன் சக்தி, பிரகாசம் அனைத்தும் யதார்த்தத்தின் (உண்மைப்பொருளின்) நிழல்கள். இதில் வேடிக்கை என்னவெனில், நிழல் என்பது ஒரு சத்குருவின் கட்டளையின் பேரில் சக்தி, பிரகாசம், ஒளி, அழகு ஆகியவற்றின் ஏழாவது நிழலாகும் - அதை அவர் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துகிறார்.**

**ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒவ்வொரு மனிதனும் (இறை உணர்வை அடைய) உதவியற்றவனாக இருக்கையில், ஒரு சத்குருவின் உதவியின்றி ஒருபோதும் ஏழாவது ஆன்மீகத் தளத்தை அடைய முடியாது. நான் நித்திய பேரின்ப உணர்வு நிலையில் இருந்தேன், ஆனால் அனைத்தும் - இந்த முழுப் பிரபஞ்சமும் மஹாராஜால், எனது கழுத்தை சுற்றிக்கொண்டது. நான் என்றென்றும் சுதந்திரமாக இருந்தாலும், என்னை இப்பூவுலகோடு பிணைத்துக் கொள்கிறேன்.**

மீண்டும் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது. பாபா ஒரு தலையணையை தமது கையில் எடுத்து, தப்லாவைப் போலத் தாளமிடத் தொடங்கினார். திடீரென, பாபா தமக்குள்ளேயே லயிக்கப்பட்ட வேளையில், அவருடைய விரல்கள் அதி விரைவில் மேலும் கீழும் அதிர்ந்தன. அவர் கண்களை மூடிக்கொண்டு வலது காலில், எதையோ உதைப்பது போல, சில விறுவிறுப்பான நடுக்கத்தைக் விளைவித்தார்; இரண்டு நிமிடங்களுக்கு இந்த மனநிலை நீடித்தது.

குடிலை விட்டு வெளியே வந்த பாபா, தரையில் பளிங்கு கோலிகளுடன் விளையாடத் தொடங்கினார். கோதாவரி மாயுடன், அனைத்து கன்யாக்களும், ஆசிரமவாசிகளும் அந்த நேரத்தில் அங்கு இருந்தனர். பாபா கோலி விளையாடுவதைக் காண கோதாவரி மிகவும் ஆர்வமாக இருந்ததால், அவர் வரும் வரை விளையாட்டைத் தொடங்க வேண்டாம் என்று பாபாவிற்குத் தெரிவிக்குமாறு கூறினார்.

பாபா சில நிமிடங்களுக்கு, பளிங்கு கோலிகளை விரல்களால் வேகமாக அடித்ததைத் தொடர்ந்து கூறினார்: "**நான் மிகவும் சிறப்பாக விளையாடுகிறேன், ஏனெனில் ஆரம்பத்திலிருந்தே நான் பிரபஞ்சத்துடன் விளையாடி வருகிறேன்!**

**"பண்டைக் காலத்தில், ரிஷிகளும் முனிகளும் இந்த விளையாட்டை விளையாடினர், இதில் ஆழமான அர்த்தமும், முக்கியத்துவமும் அடங்கியுள்ளது. விளையாட்டில் வெற்றி பெற, வீரர் வெற்றியாளராகத் தீர்வு செய்வதற்கு முன்பு, பதினான்கு முறை பளிங்கு கோலிகளை அடிக்க வேண்டும். பதினான்கு முறை அடிப்பது என்பது, ஏழு 'கீழ்நிலை'களையும், இறுதி இறை உணர்வை அடையும் முன்பு, தெய்வீக விளையாட்டு எனும் ஆன்மீக உணர்வு நிலையின் ஏழு 'மேல்நிலை'களையும் அடையாளப்படுத்துகிறது."**

அதற்குப் பிறகு பாபா கோதாவரியின் அறைக்குச் சென்று, அங்கு அவர் மஹாராஜின் ஊஞ்சலில் அமர்ந்தார். யாரோ ஒருவர், அப்போது, வெள்ளை முயல் ஒன்றை உள்ளே கொண்டு வந்து, அதை பாபாவின் மடியில் வைக்க, சிறிது நேரம் பாபா அதைச் செல்லமாகக் கொஞ்சிய பிறகு, முயலை கோதாவரியிடம் திருப்பிக் கொடுத்தார். எரச் உடனே, ஷீபா என்று அழைக்கப்பட்ட பெண் குதிரையை பாபா நேசிப்பதாகவும், அது இப்போது சத்தாராவில் இருப்பதாகவும் கூறினார். பாபா, ஷீபாவிற்குக் கேரட்டை கொடுத்த போதெல்லாம், குட்டிக் குதிரை அவருக்கு முத்தம் கொடுத்தது.

பாபா, கன்யாக்களிடம், **"நீங்கள் அனைவரும் கோதாவரியை தொடர்ந்து நேசியுங்கள்"** என்று வலியுறுத்திய அந்த கணத்தில், கடிகார மணி ஒலித்ததைக் கேட்டு ஒரு கன்யா கூறினார், "கடிகார ஒலி பாபாவின் விருப்பத்தை உறுதிப்படுத்தியது!" அங்கிருந்த அனைவரும் பாபாவின் புனித சகவாசத்தின் மகிமையில் மனமார மகிழ்ந்து சிரித்தனர்.

பாபா அவர்களிடம், **"உங்களில் யார் நன்றாகப் பாடக் கூடியவர்?"** என்று கேட்கவே, ஒரு சிறுமி முன் வந்ததும், ஹார்மோனியமும் தப்லாவும் கொண்டுவரப்பட்டன.

இதற்கிடையில், கோதாவரிக்கு பாபா அறிவுரை வழங்கினார், **"உங்கள் ஆரோக்கியத்தை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். கோடை வெயிலில் பயணம் செய்யாதீர்கள். கோடையில் இங்கு தங்குவது கூட உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. நீங்கள் மே மாதத்தில் ஏதேனும் மலைப்பகுதிக்கு செல்ல வேண்டும். மே மாதத்தில் முஸோரி அற்புதமாக உள்ளது; மிகவும் இனிமையான இடம்."**

சிறுமியின் பாடலைத் தொடர்ந்து பாபா குறிப்பிட்டார், **"ஆறு மாதங்களுக்குப் பிறகு, நான் பதினைந்து நாட்களுக்காக அமெரிக்காவிற்கும், இரண்டு நாட்களுக்கு இங்கிலாந்துக்கும் செல்ல வேண்டும். மேற்கில், ஒரு திரைப்பட நட்சத்திரம்** (லிண்டா கிறிஸ்டியன், LINDA CHRISTIAN) **'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்த பின்னர், அவர் என் மீது மிகுந்த அன்பும், மரியாதையையும் வளர்த்துக் கொண்டார். பிப்ரவரி 15 முதல், நான்**

**ஒரு வருடத்திற்கு ஓய்வெடுக்கப் போகிறேன்; அமெரிக்கா மற்றும் இங்கிலாந்துக்கான எனது பயணம் இந்த ஓய்வு காலத்தில் மேற்கொள்ளப்படும். நான் திரும்பி வந்த பின்னரும், 1957 பிப்ரவரி 15 வரை ஏகாந்தவாசத்தைத் தொடருவேன்.**"

பாபா மேலும் கூறினார், "**இன்று உங்கள் அனைவருக்கும் நான் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தோற்றமளிக்கிறேன். நான் உங்களுடன் கோலி விளையாடினேன், பந்து விளையாடினேன், நகைச்சுவை துணுக்குகளைப் பகிர்ந்துகொண்டேன், ஆனால் உண்மையில் என்னையும், எனது பணியையும் நீங்கள் எவரும் புரிந்து கொள்ளவில்லை. நான் அதே கிருஷ்ணா, அதே ராமா மேலும் நீங்கள் படித்து அறிந்த பல எண்ணிக்கையிலான இறை மனிதனும் நானே!**"

கிருஷ்ணரின் கதையையும் அவருடைய ஆசிகளையும் மீண்டும் எடுத்துரைக்குமாறு பாபா, குமாரிடம் கேட்டுக்கொண்ட போது, அவர் அந்த சம்பவத்தை விவரித்தார்: "உத்தராவின் மகன் பரிக்ஷித் (PARIKSHIT) பிறந்தபோது, அவர் இறந்து பிறந்தார் என்று கூறப்படுகிறது. கிருஷ்ணா கூறினார், "நான் எந்த அற்புதமும் செய்யவில்லை; ஆனால் நான் ஒருபோதும் பொய் கூறவில்லை என்றால், நான் கொடுத்த வாக்குறுதிகளை மீறவில்லை என்றால், நான் பிறருக்குத் தீங்கிழைக்கும் விதத்தில் எதையும் செய்ததில்லை என்றால் - அப்போது மட்டுமே இந்தக் குழந்தை உயிர்பெற்று சுவாசிக்கட்டும்!"

தொடர்ந்து பாபா விளக்கினார், "**அனைவருக்கும் ஆச்சரியமளிக்கும் விதத்தில் குழந்தை உயிர்பெற்று வந்தது, ஆனால் கிருஷ்ணா வழங்கிய பிரார்த்தனை மிகுந்த வேடிக்கையின் ஆதாரமாக இருந்தது. கிருஷ்ணா தமது குறைபாடுகள் வெளிப்படுவது போன்ற தோற்றத்தை வேண்டுமென்றே வலியுறுத்தினார், அவரது உறவினர்கள் மற்றும் அவரது பக்தர்களின் மனதில் வேடிக்கையாக விளையாடினார்; அவர் சொன்னது போலத் தோன்றிய அனைத்தும், உண்மையில் தோற்றம் மட்டுமே என்ற உண்மைக்கு அவர்களின் கண்கள் திறக்கும் பொருட்டு, அவர் அதைச் செய்தார். அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் உண்மையாக நிறைவேற்றினார்.**

"**கிருஷ்ணா பொய் சொல்லிக் கொண்டிருந்தார் என்பது எல்லோருடைய பொதுவான கருத்து, நானே கிருஷ்ணா. பொய் சொல்வது, வாக்குறுதிகளை வழங்கி அவற்றை நிறைவேற்றாதது போன்ற கலைகளில் நானும் கைதேர்ந்த மன்னன். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், நான் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவன், எனவே நான் வழங்கிய ஒவ்வொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுகிறேன்.**"

பாபா மேலும் விளக்கினார், "**முதலில் நான் ஸாக்கோரியில் ஏழு நாட்கள் தங்குவேன் என்று உங்களுக்கு வாக்குறுதி அளித்தேன். பிறகு நான்**

**இரண்டு நாட்கள் தங்குவதாக சொல்லி அனுப்பினேன். இப்போது ஏழு மணிநேரம் இங்குத் தங்கி அசல் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன்! எப்படி? நித்தியத்தில் ஏழு நாட்கள் அல்லது ஏழு மணி நேரம் என்பது எல்லாமே ஒன்றுதான்.**" பாபாவுடன் கோதாவரி உட்பட அங்கிருந்த அனைவரும் மனம் நிறைந்த சிரிப்பில் ஆழ்ந்தனர்.

பாபா இந்த அறிவுரையுடன் நிறைவு செய்தார்: "**உங்கள் உள்ளங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள், என்னை நேசியுங்கள். வேறு எந்த எண்ணங்களும் அதில் ஊடுருவ இடந்தர வேண்டாம். இதயம் தூய்மையாக இருக்கும்போது, நான் அதில் நிலைத்திருப்பேன். இதயம் அசுத்தத்திலிருந்து** (மனப்படிவங்களிலிருந்து) **தூய்மையானதும், நான் ஏற்கனவே அங்கு இருப்பதைக் கண்டுகொள்ளப்படுகிறேன்.**"

பாபா, கன்யாவிடம் மேலும் ஒரு பஜனைப் பாடச் சொன்னார். பாடலைத் தொடங்கியதும் மீண்டும் அவர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். மனநிலையை கடந்து வந்து, அவர் டோலக் ஒன்றைக் கையில் எடுத்து, தாளத்துடன் இசைத்தார். கோதாவரியும் இதர கன்யாக்களும் அவர் அமர்ந்திருந்த ஊஞ்சலை இதமாக ஆட்டத் தொடங்கினர். உபாஸனி மஹாராஜ் அங்கு அமர்ந்திருந்த வேளையில் பாடிய அதே பாடலை அனைவரும் ஒன்றிணைந்து பாடினர்.

அறையை விட்டு வெளியே வந்த பாபா, அருகிலிருந்த கிணற்றை நோக்கி நடந்தார். ஒருவேளை அவர் வழி தவறிவிட்டாரோ என்று நினைத்து கன்யாக்கள் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். ஆனால் பாபா அந்தக் கிணற்றில் போதுமான தண்ணீர் உள்ளதா என்று பார்க்கச் சென்றிருந்தார். அவரை மீண்டும் தன் அறைக்கு அழைத்த கோதாவரி மாய், பாபாவிற்குத் தேநீர் வழங்கினார். இரண்டு வாய் மட்டும் அருந்திவிட்டு, மீதத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்து, சைகையால் இவ்வாறு தெரிவித்தார்: "**நான் உணவு உண்டேன், கோலி விளையாடினேன், தேநீர் அருந்தினேன்; ஊஞ்சலில் ஆடியதோடு தரிசனமும், பிரசாதமும் வழங்கினேன். பாடல்களை ரசித்தேன், ஏறக்குறைய, நாள் முழுவதும் எனது யஷோதாவின் அருகில் கழித்தேன். இப்போது நான் புறப்பட்டாக வேண்டும்.**"


அவசரமாக, அவர் தமது ஆரத்தி பாடப்பட்ட கோவிலுக்கும், தொடர்ந்து மஹாராஜ் வாழ்ந்த இடத்திற்கும் சென்றார். பாபா அங்கே நின்று காடேக்கரிடம் ஆரத்தியை நிகழ்த்தக் கூறினார். அதன் பின்னர், அங்கு வைக்கப்பட்டிருந்த மஹாராஜின் பாதணிகளை வணங்குமாறு மண்டலியிடம் அறிவுறுத்தவே, அவர்கள் அதை மிகுந்த மரியாதையுடன் செய்தனர். பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இந்த அறையில்தான், நான் அவதார புருஷர் என்பதை, கூப்பிய கரங்களுடன் மஹாராஜ் எனக்கு வெளிப்படுத்தினார்.**"

ஏறக்குறைய ஓடுவது போல வேக நடை நடந்த பாபா, கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று அதில் ஏறினார். மக்கள் ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்று கோஷமிட்டு அவரைப் பாராட்டினர். மாலை 4:00 மணிக்கு கார் புறப்பட ஆயத்தமானபோது, ஒளிரும் முகத்துடன், கோதாவரி மாயிடம் கைகளை அசைத்து விடைபெற்றார் பாபா. இரண்டு மணி நேரத்தில் மெஹராஸாத் வந்தடைந்த பாபா, தமது ஸாக்கோரி விஜயத்தால் அடைந்த மகிழ்ச்சியில் ஓய்வெடுத்தார்.

ஸாக்கோரி ஆசிரமவாசிகள், பாபாவின் கார் புறப்பட்டுச் சென்றதை, கண்களுக்கு எட்டிய தூரம் வரை பார்த்துக் கொண்டிருந்தனர். “இதயங்களைத் திருடும் இறை மனிதன் அனைவரின் இதயங்களையும் திருடிச் சென்றார்!” என்று காலம் பறைசாற்றியது.



நவ்ஸாரி, ஜனவரி **1956**
(NAVSARI, JANUARY 1956)



**ஏழை குழந்தைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி, சத்தாரா, ஜூன் 1956**
(POOR CHILDREN'S FEEDING PROGRAM, SATARA, 9 JUNE1956)



மோனா & மனோஹர்
ஸாக்கரேயுடன் பாபா
(BABA WITH MONA &
MANOHAR SAKHARE)

# தரிசன நிகழ்ச்சிகள் - ஸங்கம்னேர், நவ்ஸாரி, மும்பை

(**Darshan - Sangamner, Navsari & Mumbai**)

ஸங்கம்னேர் அப்போது சுமார் 18,000 மக்கள் வாழ்ந்த நகரம், மெஹெராஸாத்திலிருந்து 55 மைல் தொலைவில் அமைந்துள்ளது. வாமன் ஸப்னிஸ், ஆர்.எம். வாக்மாரே (R.M. WAGHMARE) மற்றும் பலர், சத்தாரா வந்து, பாபாவிடம் தரிசனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். அவர்களின் பிரார்த்தனையை ஏற்று, பாபா ஒரு நாளை நிர்ணயித்தார். ஸங்கம்னேரில் இந்த அளவுக்கு மக்களின் கொந்தளிப்பு இருக்கும் என எதிர்பாராமல், சுமார் 4,000 முதல் 5,000 பேர் வரை மட்டுமே பங்கெடுக்கும் வகையில் ஒரு பந்தலை ஸப்னிஸ் எழுப்பினார்.

1956 ஜனவரி 27 வெள்ளிக்கிழமை அதிகாலையில், பாபா, பல மண்டலியுடன் புறப்பட்டு, காலை 8:00 மணிக்கு ஸங்கம்னேரை வந்தடைந்தார். அன்பர்கள் அவரை அன்புடன் வரவேற்று, பந்தலை ஒட்டிய சிறப்பு அறைக்கு அழைத்துச் சென்றனர். நகரின் முக்கியஸ்தர்கள் அவருக்கு மாலை அணிவித்து, தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். அறையை விட்டு வெளியே வந்த பாபா, மேடையில் அமர்ந்தார். அந்தச் சிறிய கூடாரத்தில் ஒரு சில மக்கள் 'ஜெய்' முழக்கத்துடன் அவரை வரவேற்றனர். நாற்காலியிலிருந்து எழுந்து பாபா வெளியே மேடையின் ஓரத்தில் அமர்ந்து பிரசாதம் வழங்கத் தொடங்கினார். ஆண்களும் பெண்களும் தனித்தனி வரிசைகளை உருவாக்கி பாபாவை அணுகினர். சிறிது நேரத்தில் சுமார் 10,000 பேர் குவிந்தனர், மேலும் அந்த இடம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. ஒன்றுதிரண்ட மக்களின் தலைகள் மட்டும் கடல் அலைபோல தெரிந்ததே தவிர, வேறு எதையும் பார்க்க முடியவில்லை. ஸங்கம்னேர் நகரில் இதுவரை கண்டிராத காட்சி அது. திடீரென உணர்ச்சிவசப்பட்டு, பாபாவை நோக்கி திரள் திரளாக மக்கள் கூட்டம் அலைமோதியது. கிஷன் ஸிங் அந்தக் காட்சியை பின்வருமாறு வர்ணித்தார்:

ஆரம்பத்தில் இருநூறு பேர் மட்டுமே பந்தலில் கூடியிருந்தனர். ஆண்களும் பெண்களும் சீரான முறையில் பிரசாதத்தைப் பெற பாபாவிடம் சென்றனர். ஆனால் கண்மூடித் திறப்பதற்குள், ஸங்கம்னேர் அன்பர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதத்தில், ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பந்தலுக்கு விரைந்தனர். வரிசையை சீர்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பலவீனமான மூங்கில் வளைந்து, திரண்டு வரும் மக்கள் கூட்டத்தின் அழுத்தத்திற்கு வழிவகுத்து, கட்டுப்படுத்த முடியாததாக மாறியது. ஒலிப்பெருக்கி வழியாக மீண்டும் மீண்டும் வெளிவந்த அறிவிப்புகள் செவிடன்

காதில் ஊதும் சங்கு போல், எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. பாபா அதி வேகத்தில் புனிதமான பிரசாதத்தை வழங்கினாலும், ஒவ்வொருவரும் மற்றொருவரை கடந்து, முன்னால் சென்று பாபாவை அணுக முயன்றனர். கலவரமான சூழ்நிலையில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நசுக்கப்பட்டனர். ஏதோ ஒரு அதீத சக்தி ஆயிரக்கணக்கானோரின் இதயங்களைத் தொட்டது போல் இருந்தது.

பாபா, பிரசாதத்தை இரு கைகளாலும் வழங்கினார்; ஆனால், ஒன்று திரண்டு வந்த மக்கள் கூட்டம் முன்னோக்கி அழுத்திக் கொண்டே இருந்தது. இந்தத் திடீர் தாக்குதலில், வாமன் ஸப்னிஸ், “பாபாவின் அதிசயத்தைப் பாருங்கள்! பாபாவின் அதிசயத்தைப் பாருங்கள்! இது அதிசயத்தைத் தவிர வேறொன்றும் இல்லை! இல்லையெனில், இப்படி ஒருபோதும் நடந்திருக்க முடியாது! இத்தனை பேர் எப்படி, எங்கிருந்து வந்திருக்க முடியும்?” என்று உணர்ச்சிவசப்பட்டு அழுதார்.

ஓர் ஏழைப் பெண்மணி, இளமையும் வலிமையும் உடையவராக இருந்தாலும், பிரசாதத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு மயக்கமானார், பாபா அவரை சிறிது நேரம் தாங்க வேண்டியதாயிற்று. ஸப்னிஸ் அந்தப் பெண்மணியை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, ஓய்வெடுக்கச் செய்த சற்று நேரத்தில் அவர் நன்றாக உணர்ந்தார். பாபா அவரை மேடையில் தன் அருகில் அமர அனுமதித்தார். பத்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் அவருக்குப் பிரசாதத்தை வழங்கி, அதை அங்கேயே உண்ணுமாறு அறிவுறுத்தினார். உணர்ச்சிவசப்பட்டு, மிகவும் சிரமப்பட்டு கூட்டத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

தரிசனத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது, அவர்களைக் கட்டுக்குள் வைத்திருக்க நிர்வாகம் மற்றும் காவல்துறையின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. கிஷன் ஸிங் கூறியது போல: ‘பாபாவைப் பார்ப்பதற்கான மக்களின் பெருகிவரும் உற்சாகமும், அளப்பரிய ஆர்வமும் அனைத்து ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிக்க இயலாமலாக்கிவிட்டது.’ பாபா தம்மால் இயன்றவரை, அதி விரைவாகப் பிரசாதம் வழங்கினார், ஆனால் கூட்டம் வெறித்தனமாக இருந்தது. வரிசையில் நிற்கும் மக்களை முன்னால் தள்ளிவிடுவதால், பாபா மீது வீழும் அபாயம் நிலவியது. கூட்டத்தை வரிசையில் நிற்க வைக்கும் முயற்சி முற்றிலும் தோல்வியடைந்தது; மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மிதிக்கப்படும் அபாயமும் இருந்தது. எனவே பாபா, பக்க அறை ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அதிலிருந்து கொண்டே அவர் தரிசனமும் பிரசாதமும் வழங்கினார். மண்டலி மற்றும் காவல்துறையினர் மக்களை வரிசையில் நிற்கச் செய்து, பெண்மணிகள் முதலில் ஒவ்வொருவராக உள்ளே அனுப்பப்பட்டனர்.

பிரசாதம் பெற்றுக் கொண்ட பின்பு, பின்வாசல் வழியாக வெளியே வந்தனர். பின்னர் ஆண்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

பாபா முதலில் ஸங்கம்னேர் தரிசனத்திற்கு இரண்டு மணிநேரம் மட்டுமே அனுமதித்தார், ஆனால் நான்கு மணிநேரம் தொடர்ந்து பிரசாதம் வழங்கிய பிறகும் மனிதக் கடலில் மக்கள் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்திருந்ததால், பாபா எஞ்சியிருந்த பிரசாதத்தைத் தொட்டு ஆசீர்வதித்து, அதை விநியோகிக்குமாறு அறிவுறுத்தி, பின் கதவு வழியாக வெளியே வந்து, காரில் தமது இருக்கையில் அமர்ந்தார்.

அருகாமையிலிருந்த சிறுவர்களுக்கான அனாதை இல்லத்தின் தலைவர், பாபாவை விஜயம் செய்யும்படி வேண்டிக்கொண்டார்; மதிய நேரத்தில் பாபா அங்குச் சென்றார். அவரை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன; மேலும் பாபா 85 குழந்தைகளுக்குப் பிரசாதம் வழங்கி, அதன் பொறுப்பாளரையும் அவரது குடும்பத்தினரையும் சந்தித்தார். அனாதை இல்லத்திற்கு வெளியே நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்ததைக் கண்டு பாபா புறப்பட ஆயத்தமானார்.

இருந்தாலும், பாபா அவர்களுக்கும் பிரசாதம் வழங்கினார்; இதைக் கண்டு, பிரதான கூடாரத்தில் கூடியிருந்தவர்களும் அனாதை இல்லத்தை நோக்கி விரைந்தனர். ஆனால் பாபா அரை மணி நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டு மெஹராஸாத் திரும்பிச் சென்றார். ஸப்னிஸ், வாக்மாரே மற்றும் பிறர் ஊருக்கு வெளியே சாலையில் பாபாவை சந்திக்குமாறு அறிவுறுத்தப்பட்டதால், அவர்கள் பாபாவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். பாபா அவர்களை ஆரத்தழுவி, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததில் தமது திருப்தியை வெளிப்படுத்தினார். ஸப்னிஸ் அவரிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்: "பாபா, இன்று ஸங்கம்னேரில் உங்கள் அற்புதத்தை நாங்கள் கண்டோம். அதன் வரலாற்றில் இது போன்ற மக்கள் கூட்டம் இருந்ததில்லை! இன்று ஸங்கம்னேர் மக்கள் அனைவரும் வெறிபிடித்தவர் போலாகிவிட்டனர்!" பாபா சிரித்துக் கொண்டே விடைபெறவே, கார் மெஹராஸாத்தை நோக்கிச் சென்றது.

1956 ஜனவரி 28 சனிக்கிழமை காலை, பாபா, ஆதி சீனியர் உட்பட பல மண்டலியுடன் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்குச் சென்று, அன்று இரவு அனைவரும் நரிமன்-அர்னவாஸின் இல்லம் ஆஷியானாவில் தங்கினர். அடுத்த நாள் பாபா, மும்பை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து, பத்து மண்டலியுடன் (எரச், பெண்டு, பாவ், நீலு, குஸ்தாஜி, குமார், கிஷன் ஸிங், ஆதி சீனியர், மெஹர்ஜி மற்றும் நரிமன்) நவ்ஸாரிக்கு ரயிலில் பயணம் செய்தார். ஏராளமான மும்பை அன்பர்களும் ரயில் நிலையத்திற்கு வந்திருந்தனர். சிலர் அவருடன்

தனிப் பெட்டியில் பயணம் செய்ய, பிறர் ரயில் நடைமேடையில் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பாபா நவ்ஸாரிக்கு விஜயம் செய்து பதினெட்டு நீண்ட வருடங்கள் கடந்துவிட்டன; 1937 டிசம்பரில் ஸொராப்ஜி தேசாயின் மறைவிற்குப் பின்னர் அவர் அங்குத் திரும்பிச் செல்லவில்லை. மினூ, பபாய் தேசாய் இருவரும் கட்டிய புதிய வீட்டிற்கு 'மெஹர் காட்டேஜ்' (MEHER COTTAGE) என்று பெயரிட்டிருந்தனர். பாபா புதிய இல்லத்தில் பாதங்களைப் பதித்து, அதைப் புனிதப்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்; குடும்பம் அவருடைய நெருங்கிய தொடர்பில் இருந்ததால், பாபா அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

அவர் நவ்ஸாரிக்கு விஜயம் செய்வதை அறிந்த பாபாவின் சில 'எதிராளிகள்' மும்பையிலிருந்து (ஸொராப் பாம்ஜி - SOHRAB BAMJI என்ற இராணுவ மேஜரால் ஏற்பாடு செய்யப்பட்டது) ஏற்கனவே அங்கு வந்து, ஒரு கூட்டத்தை நடத்தி, மெஹர் பாபாவின் வருகையைப் புறக்கணிக்க ஏற்பாடு செய்ய முடிவு செய்தனர். ஹோஷங் பரூச்சாவின் தாயாரும் அவர்கள் மீது அபிமானம் கொண்டிருந்ததால், ஹோஷங் தங்கள் வீட்டிற்கு பாபாவை அழைப்பதைத் தடை செய்தார். பாபாவின் வருகையை, இத்தகைய நடவடிக்கைகளால் உள்ளூர் மக்கள் முற்றிலுமாகப் புறக்கணிப்பர் என்று தரிசன அமைப்பாளர்கள் நினைத்தனர். ஹோஷங் (HOSHANG), கோவாஸ் வெஸுனா (COWAS VESUNA), நாகிந்தாஸ் வி. லாப்சிவாலா (NAGINDAS V. LAPSIWALA), தாகோர்லால் ஜி. காந்தி (THAKORLAL G. GANDHI), பச்சூபாய் ஸோனி (BACHOOBHAI SONI), ஆதேர் தேசாய் (ADER DESAI) போன்ற அன்பர்கள் மற்றும் தேசாய் குடும்பத்தினர் அனைவரும், நவ்ஸாரியில் பாபாவிற்கு வழங்கும் வரவேற்பு, அத்தனை இணக்கமாக இருக்காது என்று அஞ்சினர்.

நவ்ஸாரியில் எதிர்ப்புப் புயல் வீசிக் கொண்டிருந்த வேளையில், பாபாவும், மண்டலியும் அவரது பாராட்டுக் கோஷங்களுக்கு மத்தியில், பிரத்யேக மூன்றாம் வகுப்புப் பெட்டியில் மும்பையிலிருந்து புறப்பட்டனர். ஒரு பார்சி நபர் பெட்டிக்குள் நுழைந்து, தாதர் ரயில் நிலையம் வரை பாபாவின் அருகில் அமர்வதாக வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பாபா அவரை அனுமதித்தபோது, அந்த மனிதர் கூறினார், "கடந்த மூன்று வருடங்களாக நான் உங்களது தரிசனத்திற்கான மிகுந்த தாகத்துடன் இருந்தேன், இன்று எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது! உங்கள் சகவாசத்தில் சிறிது நேரம் இருக்கும் வாய்ப்பு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். துறவிகள் மீது அதீத ஆர்வம் கொண்ட நான், அவர்களில் ஒருவரான சாது வாஸ்வானி (SADHU VASWANI), உங்கள் மீது மிகுந்த மரியாதை கொண்டிருப்பதை அறிவேன். அவர் உங்களைப் பற்றி மிகவும் உயர்வாகப் பேசுகிறார், உங்கள் தெய்வீகத்தின் மீது ஆழ்ந்த மரியாதை கொண்டவர்."

“**அவர்கள் அனைவரும் என் அன்பர்கள்**” என்று பாபா பதிலளித்தார்.

அந்த நபர் தொடர்ந்து கூறினார், “மிர்ச்சந்தானியும் ஒரு நல்ல துறவி, அவரை உங்கள் தொடர்பில் அழைத்து வர நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன்!”

“**எல்லோரிலும் நான் இருப்பதால், மிர்ச்சந்தானியிலும் இருக்கிறேன். நானே எல்லாமும்.**”

அந்த நபரின் பெயர் ஈ. என். வடேகர் (E.N. VADEGAR); மேலும் பாபாவின் சில புத்தகங்களைப் படிக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தவே, அவருக்கு ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகம் வழங்கப்பட்டது. அதற்கான பணத்தைக் கொடுக்கும் போது, ”இப்போது என்னிடம் இருக்கும் பணத்தை அக்யாரிக்கு (நெருப்புக் கோவிலுக்கு) நன்கொடையாக வழங்க வேண்டும்” என்றார்.

ஆதி கிண்டலாக, “அது இப்போது ஒரு சிறப்பான அக்யாரிக்குச் செல்கிறது!” என்றார்.

புத்தகத்தைப் பற்றிக் குறிப்பிட்ட வடேகர், “‘கடவுள் பேசுகிறார்’ புத்தகத்தின் மூலமாக பாபா பேசியுள்ளார்! பாபாவே கடவுள், எனவே நான் கடவுளைக் கண்டேன்! இப்போது கடவுள் கூறுவதை நான் படிப்பேன்!” என்று கூறி மேலும் தொடர்ந்தார், “பாபாவைப் பற்றிய கருத்துக்களில் பார்சிகள் மிகவும் பகுத்தறிவற்றவர்கள், ஆனால் நான் அதிர்ஷ்டசாலி. இது அனைத்தும் எனது தாயின் ஆசீர்வாதத்தால் வந்தது. நான் எப்பொழுதும் உண்மைப்பொருளைத் தேடுகிறேன். நான் இன்று வரை அவ்வாறு செய்து வருகிறேன். நான் பாபாவை சந்தித்து, தரிசனம் செய்யும் வாய்ப்பை அடையப்பெற்றதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.”

ரயில் தாதரில் நின்ற வேளையில், பாபாவின் பாதங்களில் வணங்கி, வடேகர் விடை பெற்றார். பாபா அவருக்கு ஆரஞ்சுப் பழம் ஒன்றைப் பிரசாதமாக வழங்கினார். பாபாவின் பல அன்பர்கள் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர்; சிலர் நவ்ஸாரி செல்ல இருந்தனர். தரிசனத்திற்காக வந்தவர்களுக்கு பாபா பிரசாதம் வழங்கினார். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும், பாபாவை வாழ்த்தி வணங்க திரளான மக்கள் வரிசையாக நின்று, அவர் பிரசாதம் வழங்குவதைக் கண்டதும், அவரது ரயில் பெட்டியை நோக்கி விரைந்தனர்.

மதியம் ஒரு மணியளவில், பாபா மண்டலியுடன் நவ்ஸாரிக்கு வந்து சேர்ந்தார்; ரயில் நிற்கும் முன்பே, பாபாவின் அன்பர்கள் அவரை உற்சாகமாக வாழ்த்தி வரவேற்றனர். அவர் வெளியே வந்ததும், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளால் சூழப்பட்டார். தொண்டர்கள் குழு அவருக்கு மலர்மாலை அணிவித்து, கூட்டத்தினூடே வழிநடத்திச் சென்றனர். பாபாவை வரவேற்பதற்காக நூற்றுக்கணக்கானோர் ரயில் நிலையத்தில் ஒன்று திரண்டனர்; எதிர்ப்பின் அலையையும் மீறி, சூழ்நிலை வெகுவாகத் தணிந்திருந்தது. பாபா

மெஹர் காட்டேஜுக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவரை தேசாய் குடும்பத்தினர் அன்புடன் வரவேற்றனர்.

ஊரெல்லாம் அவரது தரிசனத்தை ஆவலுடன் எதிர்நோக்கி, ஏற்கனவே பந்தலில் ஒன்றுதிரண்டு விட்டதாகவும், அனைவரும் அவரது வருகைக்காகக் காத்திருப்பதாகவும் செய்தி வந்தது. எதிர்ப்பானது உண்மையில் மக்களிடையே அதிக ஏக்கத்தையும் ஆர்வத்தையும் உருவாக்கியது, மேலும் நவ்ஸாரியில் ஒவ்வொரு குழந்தையும் அவர் வருவதை அறிந்திருந்தது.

ஹோஷங் பரூச்சாவிடம் பாபா கூறினார், "**இங்குத் தங்கியிருக்கும் வேளையில், நேரம் இல்லாததால் நான் எவருடைய இல்லத்திற்கும் செல்லமாட்டேன்.**"

ஹோஷங் தனது தாயாரின் உணர்வுகளைப் பற்றி பாபாவிற்குத் தெரிவிக்கவில்லை, மேலும் பாபா அவரிடம் கூறியது, அவர் உள்ளத்தை வெகுவாக நெகிழச் செய்தது; இது அவரது தாயாரின் கடுமையான அணுகுமுறையை வெளிப்படுத்தும் இக்கட்டான நிலையிலிருந்து அவரைப் பாதுகாத்தது. பாபா அவசரமாக உணவு உண்ண அமர்ந்தபோது, 'தரிசன நிகழ்ச்சிக்கு அனைத்தும் ஒழுங்காக உள்ளதா' என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பரூச்சா, வெஸுனா இருவரையும் அனுப்புவதற்கு முன்னர் உணவில் ஒரு சிறு பாகத்தை அவர்களுக்கும் வழங்கினார்.

மெஹர் பாபா, அவர்கள் இல்லத்திற்கு வரப்போவதில்லை என்று தனது தாயாருக்குத் தெரிவிக்க ஹோஷங் வழியில் நின்றார்; ஆனால் அவர் வந்தபோது தாயார் மனதில் அற்புதமான மாற்றத்தைக் கண்டார். தாயாரும் இப்போது பாபாவின் தரிசனத்திற்காக ஆர்வமாக இருந்தார்; பாபாவின் செய்தியை ஹோஷங் வழங்கிய அடுத்த கணமே, தாயார் மெஹர் காட்டேஜுக்குப் புறப்பட்டுச் சென்று இரவு 9:00 மணி வரை பாபாவுடன் இருந்தார்.

உள்ளூர் தலைமை ஸொராஸ்ட்ரிய பாதிரியாரின் மனைவி கோர்ஷெத் தஸ்தூரும் (KHORSHED DASTUR) மெஹர் காட்டேஜுக்கு வந்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது; ஏனெனில் ஒரு பாதிரியாரின் மனைவி, வேறொருவரை தரிசனம் செய்வது அவர்களின் மரபுக்கு எதிரானது. தரிசனத்தை சீர்குலைக்கும் முயற்சியில் சில பார்சி இளைஞர்கள் மெஹர் பாபாவிற்கு எதிராக, கோஷங்களை எழுப்பவும் தூண்டப்பட்டனர் - ஆனால், மக்கள் தங்கள் தலைமை பாதிரியாரின் மனைவி, பாபாவுடன் உரையாடுவதைக் கண்டு, தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டனர்! அந்தப் பெண்மணி பயபக்தியுடன் பாபாவின் பாதங்களைக் கழுவி, அவருக்கு மாலை அணிவித்து, பாபாவின் பாதங்களை குங்குமம் நிறைந்த ஒரு வெள்ளித் தட்டில் பதித்து, குங்குமத்தை நெற்றியில் திலகமாக வைக்க அனைவருக்கும் வழங்கினார்.

மும்பையைப் போலவே நவ்ஸாரியும் பார்சிகளின் கோட்டையாகக் கருதப்பபட்டதால், பாபாவிற்கு எதிரான போராட்டங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்டன. இதைக் குறித்து கூறியபோது, பாபா சாதாரணமாக, "**மெஹர் காட்டேஜில் வாழும் என் அன்பர்களுக்காக நான் இங்கு வந்துள்ளேன். அவர்கள் நான் இங்கு வருவதை விரும்பினர். எனது தரிசனத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்த நவ்ஸாரி பிரியர்களை சந்திக்கும் நோக்கத்தில் நான் வந்துள்ளேன். நான் மெஹர் காட்டேஜில் தங்கியிருப்பதன் மூலம் எனது நோக்கத்தில் பாதி நிறைவடைந்தது. மறு பாதி, மதியம் 2:30 முதல் 5:00 மணி வரை, தரிசனம் வழங்கும் இடத்தில் நான் இருப்பதன் மூலம் நிறைவடையும்**" என்றார்.

மதியம் 2:15 மணிக்கு பாபா அந்த தரிசன இடத்திற்கு வந்தார். பிரமாண்டமான பந்தல் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாபாவின் ஜெய் முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தது; மேலும் பாபா மேடையில் ஏறும் வேளையில், பச்சூபாயின் பஜன் குழுவினர் பாடிய 'யுக அவதார், யுக அவதார்' என்ற மிருதுவான இசையால் அவர் வரவேற்கப்பட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர், தெய்வீக மதுபானத்தின் நறுமணம் மக்கள் கூட்டம் முழுவதும் வியாபித்திருந்தது.

வரவேற்புக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் பாபாவிற்கு ஏராளமான மலர்மாலைகளை அணிவித்த பிறகு, பாபா தமது இருக்கையை விட்டு வெளியே வந்து, பிரசாதம் வழங்க மேடையின் ஒரு பக்கத்தில் அமர்ந்தார். பச்சூபாய் குழுவின் இனிமையான மெல்லிசை ஆரம்பமான வேளையில், சிறிது நேரம் சூரியன் அவர்களின் நிலையற்ற வாழ்வின் இருளைத் துளைத்தது போலத் தோன்றியது. மக்கள் வரிசையாக பாபாவிடம் செல்ல ஆரம்பித்தனர்; அவர் முகத்தில் நம்புதற்கரிய பிரகாசம் தென்பட்டது. அவரது புன்னகை சுற்றுப்புற சூழ்நிலை முழுவதும் வியாபித்திருக்க, அங்கிருந்த அனைவரும் அவரை வழிபட்டு வணங்கும் விதத்தில் பார்த்துக்கொண்டிருந்தனர். மண்டபம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது, வெகுதூரத்தில் இருந்தவர்கள் கூட பாபாவின் முகத்தைப் பார்க்க முடிந்தது. இந்த நாட்களில் பாபா தமது மகிமையின் கதிர்களை முழு கம்பீரத்துடன் பிரகாசிக்க அனுமதித்தார்; மண்டலி கூட அவரை ஆச்சரியத்தில் உற்று நோக்கத் தொடங்கினர்.

ஏறக்குறைய 20,000 பேர் வந்திருந்தனர், மேலும் மக்கள் கூட்டம் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததால் முக்கிய சாலைகளிலிருந்து பந்தலை நோக்கி மக்கள் தொடர்ந்து வெள்ளம் போலப் பாய்ந்தனர். பாபா அவரது வழக்கமான துரித வேகத்தில் பிரசாதத்தை வழங்கிக் கொண்டிருந்த போது, ஐந்து அல்லது ஆறு குறும்புக்கார பார்சி இளைஞர்கள் அவரை அணுகவே, பாபா அவர்களைப் பார்த்து சிரித்து, பிரசாதம் வழங்கினார். அவர்கள் நெற்றியில்

இரண்டு விரல்களை வைத்து அவருக்கு வணக்கம் செலுத்தினர், அதை பாபா மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். பந்தலுக்கு நெருப்பு வைக்க அந்த இளைஞர்கள் ரகசியமாகத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய முற்பட்டபோது, அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க பாபா, லாப்சிவாலாவை (LAPSIWLA, ஒரு பெரிய, தடித்த மனிதர்) பந்தலுக்குப் பின்னால் அனுப்பினார்; அவரைக் கண்டதும் இளைஞர்கள் ஓடி மறைந்தனர். லாப்சிவாலா இது குறித்து மண்டலி மற்றும் பிறரிடம் தெரிவிக்க, இளைஞர்கள் திரும்பி வராமல் இருப்பதை விழிப்புடன் கண்காணித்தனர்.

மக்கள் கூட்டம் ஏறக்குறைய 50,000ஐ எட்டியது, ஆனால் ஸங்கம்னேரில் இருந்ததைப் போல, தேவையற்ற அவசரமோ குழப்பமோ இங்கு இல்லை. 4:45 மணிக்கு, பெண்டு பாபாவிடம் கூறினார், “கூட்டம் தொடர்ந்து அதிகரித்து, சாலைகளில் மக்கள் வெள்ளம் அலைமோதுகிறது. அவர்கள் வெளியே அமைதியின்றி அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர். உள்ளே இருப்பவர்கள் மூச்சுவிட முடியாமல் திணறும் வாய்ப்புள்ளது. நீங்கள் பிரசாதம் வழங்குவதை நிறுத்திவிட்டு ஒலிபெருக்கி மூலம் ஏதாவது செய்தியை அறிவிப்பது நல்லது.”

பாபா பதிலளித்தார், “**இந்தப் பிரசாதத்தின் மூலம் நான் என்ன வழங்குகிறேன் என்று எவருக்கும் தெரியாது! இது போன்ற நிகழ்ச்சிகளின் போது நான் விரும்புவதைத் தருகிறேன்.**”

ஒரு நிமிடத்திற்கு 70 நபர்கள் என்ற வேகத்தில் பாபா விரைவாகப் பிரசாதம் வழங்கத் தொடங்கினார் (மண்டலியில் ஒருவர் உண்மையில் நேரத்தைக் கணக்கிட்டுக் கூறினார்!). உத்வேகம் அடையப்பெற்ற பச்சூபாயின் குரல், அவர் இறையின்பக் கடலில் லயிக்கப்பட்டு உள்ளூர ஊடுருவியது போலத் தோன்றியது!

இவ்வளவு நெரிசல் இருந்தபோதிலும், நவ்ஸாரி மக்கள், சிறிதளவு தொந்தரவும் இல்லாமல், அற்புதமான ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தனர். மாலை 5:00 மணிக்கு மேடையை விட்டு வெளியேறிய பாபா, மனிதக் கடலில் மெதுவாக நகரத் தொடங்கிய காரில் தமது இருக்கையில் அமர்ந்தார். இந்த சந்தர்ப்பத்திலும், பாபா வெளியேறுவதைக் கண்டு, மக்கள் கோஷத்துடன் அவரை மகிழ்வித்தாலும், அமைதியாகவும் மரியாதையுடனும் நடந்து கொண்டனர். அவர்கள் அவதார புருஷரை உடல் ரீதியாக பார்த்து திருப்தி அடைந்ததோடு அவரது மகத்துவத்தையும் காண நேர்ந்தது.

இருப்பினும், ஆயிரக்கணக்கானோர் பாபாவைப் பார்க்கவில்லை, ஏனெனில் அவர்கள் பந்தலை நோக்கி சாலையில் வந்து கொண்டிருந்தனர்; பாபா, மெஹர் காட்டேஜுக்குச் சென்றதைக் கேள்விப்பட்டதும், அவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். சாலைகள் பெரும் திரளால் நிரம்பியிருந்தாலும், அவர்கள் ஒருவரையொருவர் முட்டி, மோதி, கலகலப்பு எதுவும் இல்லாமல்,

அமைதியாகவும் ஒழுங்காகவும் சென்றனர். அவர்களைப் பார்த்த பாபா, மக்கள் தூரத்திலிருந்தே தரிசனம் செய்யும் விதத்தில், மெஹர் காட்டேஜின் மேல் தளத்தின் மொட்டை மாடியில் நின்றார். பாபாவின் முகம் பிரகாசமாக ஒளிர்ந்ததில் கால் மைல் தொலைவில் இருந்தவர்களும் அதைப் பார்க்க முடிந்தது. 'சூரியன் உதயமாகிக்கொண்டிருந்தது', வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே காணக்கூடிய காட்சியைக் கண்டு மக்கள் வியந்தனர்.

சிறிது நேரத்தில், பாபா கீழே வந்தார், ஆனால் மெஹர் காட்டேஜ் முன்னால் தொடர்ந்து கூட்டம் அலை மோதியபோது, பாபா மீண்டும் ஒருமுறை மேலே சென்று அவர்களுக்கு தரிசனம் வழங்க வேண்டியிருந்தது. இதனால், மக்கள் வந்து செல்வதால், பங்களாவின் எதிரே அமைந்த சாலை எப்பொழுதும் நிறைந்து காணப்பட்டது.

ஒருபுறம், ஆயிரக்கணக்கானோர் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தனர், மறுபுறம், ஒரு சில எதிரிகள் இடர்பாடுகளை ஏற்படுத்துவதில் குறியாக இருந்தனர். தரிசனத்தை சீர்குலைக்க வந்த ஆறு பார்சி இளைஞர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டதால், அவர்கள் எதிர் வீட்டு சுவரில் ஏறி 'மெஹர் பாபா ஒழிக', 'மெஹர் பாபா வெளியேறு' என்ற விபரீத கோஷத்தை எழுப்பினர்.

பாபா இந்த முரண்பட்ட காட்சியை ரசித்தார்; ஆனால் ஹோஷங் பரூச்சா, சீற்றத்தில் அவர்களைத் தாக்க விரும்பியதால் அவரைத் தடுத்து, பாபா இவ்வாறு விளக்கினார்: **"என் அருகில் அமருங்கள்; அவர்களின் கோணங்கித்தனமான செயல்களைப் பொருட்படுத்தாதீர்கள். சிலர் கடவுளை நினைந்து அன்புடன் அவரது பெயரைத் திரும்பத் திரும்ப மொழிகிறார்கள், ஆனால் சிலர் அதை வெறுப்புடன் செய்கிறார்கள். எதுவாயினும் இரு தரப்பினரும் கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிகிறார்கள், அதனால் அவர்கள் மன்னிக்கப்படுகிறார்கள்."**

பாபா மேலும் கூறினார், **"அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது; அவர்கள் முற்றிலும் அப்பாவிகள். அவர்களைக் கண்டு பரிதாபப்பட வேண்டும்; அவர்கள் நேசிக்கப்பட வேண்டும்."**

காட்டேஜில் இருந்த அனைவரையும் '**அமைதியாக இருக்கும்படியும், உணர்ச்சிவசப்படாமலும், இளைஞர்களைக் கடிந்து கொள்ளாமலும் இருக்குமாறு**' பாபா அறிவுறுத்தினார். அவர் இவ்வாறு விளக்கினார்: **"எதிர்ப்புக் குரல்களை முற்றிலும் கவனத்தில் கொள்ளாமல் இருங்கள். அவர்கள் மூலம் இதுபோன்ற உணர்ச்சிக் குரல்களை நானே எழுப்புகிறேன். எல்லாவற்றையும் நானே செய்கிறேன் - ஏனெனில் என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை!"**

அவர் மேலும் எச்சரித்தார்: **"எதிர்ப்பு முழக்கங்களுக்கு எவரும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டாம், இளைஞர்களை எவரும் தொந்தரவு செய்ய வேண்டாம். நீங்கள் அனைவரும் அமைதியாக இருந்து,**

**மகிழ்ச்சியுடன் சூழ்நிலைகளை எதிர்கொள்ளுங்கள். அனைத்திலும் நான் இருப்பது போல், அவர்களிலும் நான் இருக்கிறேன்! எனது பக்தர்களின் ஆரவாரத்தை நான் எப்படி ரசிக்கிறேனோ, அதே போல, பிறரின் வேடிக்கையான கோஷங்களையும் ரசிக்கிறேன். என்னை உற்சாகப்படுத்துபவர்கள் மற்றும் என்னை கேலி செய்பவர்கள் இருவரும் சமமாக அறியாமையில் மூழ்கியவர்கள். ஒருவரின் அறியாமை இன்பமாக இருக்கும் அதே வேளையில் வேறொருவரின் அறியாமை வேடிக்கையாக உள்ளது. எவரும் தவறிழைக்கவில்லை, எனது உண்மை ரூபம் எவருக்கும் தெரியாது.**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**அவர்களும் கோஷமிடும்போது எனது பெயரைத் திரும்பத் திரும்ப மொழிகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பக்தியாக இருந்தாலும் சரி, பரிகாசமாக இருந்தாலும் சரி, என்னை நினைவில் கொள்வதே மேலானது. அவர்கள் அப்பாவிகள். அவர்கள் உரக்கக் கத்தி கூச்சலிடட்டும். நான் அதை மிகவும் ரசிக்கிறேன்.**"

பார்சி இளைஞர்கள் கடைசியில் சோர்வடையும் வரை கோஷமிட்டுக்கொண்டே இருந்தனர். பாபாவின் அறிவூட்டும் விளக்கத்திற்குப் பின்னர் அன்பர்களிடையே கோபத்தின் எந்த வெளிப்பாடும் இல்லை. அனைவரும் அமைதியாக, எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல், மகிழ்ச்சியாக இருந்தனர்.

இளைஞர்கள் கலைந்து சென்றபோது, பாபாவின் தரிசனத்திற்கான மற்றுமொரு வாய்ப்பை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த ஸ்லோகங்கள், உண்மையான அந்த உள்ளங்களில் பக்தியைக் கிளறி, பாபா மீது அதிக அன்பைத் தூண்டின. புறப்படுவதற்கு முன்பு, பாபாவின் ஒரு கடைசி பார்வைக்காக பொறுமையுடன் ஏங்கினர். அவர்களின் அன்பால் மனம் நெகிழ்ந்த பாபா, அவரது அறையில் அமர்ந்து தரிசனம் வழங்க இணக்கம் தெரிவித்தார். அன்பர்கள் வரிசையாக அறைக்கு வழிநடத்தப்பட்டனர். பாபாவின் அருகில் நிற்காமல், சில கணங்கள் அவரைப் பார்த்துவிட்டு, வேகமாக வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனால் மேலும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் 'விழி வழியாக' பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அவரது தரிசனத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்ததாலும், பாபா அவர்களை வீட்டின் உள்ளே அழைத்து, ஒவ்வோர் அரை மணி நேரத்திற்கும் அவரைப் பார்க்க அனுமதித்த வேளையில், தேசாய் குடும்பத்தினர், மினூ, அவரது மனைவி பபாய், மகள் மெஹர் மற்றும் பபாயின் சகோதரி ஹோமாய் ஆகியோர், பாபா உணவருந்திய பின்னர், அமைதியாக ஓய்வெடுக்கும் நோக்கத்தில், வேறு இடத்தில் தூங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக கேட்டுக்கொண்டனர். இரவு 8:00 மணியளவில், குடும்பத்தினரும், மண்டலியும் இரவு உணவை முடித்ததும், பாபா

ஒரு கழியைக் கையில் எடுத்துக்கொண்டு, குடும்ப உறுப்பினர்களை நோக்கி, **“உடனே வெளியேறுங்கள், இல்லையேல் நான் உங்களை அடித்துத் துரத்துவேன்!”** என்றார்.

பாபா, கழியை அச்சுறுத்தும் வகையில் சுழற்றி, தேசாய் குடும்பம் முழுவதையும் வெளியேறச் செய்தார். எவ்வாறாயினும், மெஹர் காட்டேஜ் யாருக்காக கட்டப்பட்டதோ அந்த நபர் - அதாவது பாபாவே - அவரது உரிமையை நிலைநாட்டியதில் அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். குளிரிலிருந்து பாதுகாக்க போர்வைகள் ஏதுமின்றி, பாழடைந்த குடிசையில் தூக்கமில்லாத இரவைக் கழித்தாலும், தேசாய் குடும்பத்தினர் பாபா மீது கொண்டிருந்த அன்பு அளப்பரியது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அப்போது பாபா கதவுகளைத் திறக்கும்படிக் கேட்டுக்கொண்டார். மக்கள் வளாகத்திற்குள் விரைந்ததும், பாபா பலமுறை ஜன்னல் அருகே சென்று அவரை தூரத்திலிருந்து பார்க்கும் வாய்ப்பை வழங்கி, பின்னர் அவர்களை தத்தமது இல்லங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

வெகு நேரத்திற்குப் பின்னரும் மக்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர். மெஹர் மையத்திற்குச் செல்ல பாபாவிற்கு நேரமில்லை, அங்கத்தினர்கள் மற்றும் பலர் அவருக்காகக் காத்திருந்தனர். தலைமை அமைப்பாளர்களில் ஒருவர் மெஹர் காட்டேஜிலிருந்து அவர்களுக்கு, ‘பாபா தனது வருகையை ரத்து செய்ததால், அவர்கள் அனைவரும், தரிசனத்திற்காக மெஹர் காட்டேஜுக்கு வந்தால் நல்லது’ என்ற செய்தியைத் தெரிவித்தார். எனவே மையத்தின் உறுப்பினர்களும் பிற அனைவரும் வந்து பாபாவின் முன்னிலையில் சிறிது நேரம் பஜனை நிகழ்ச்சியை நடத்தினர். இரவு மணி பதினொன்று, பாபா அவர்களைப் புறப்படுமாறு கூறினார். காலையில் மையத்திற்கு விஜயம் செய்யுமாறு அவர்கள் பாபாவை நினைவுபடுத்தினர், ஆனால் பாபா ஒவ்வொருவருக்கும் பிரியாவிடை அளித்தாலும் எந்த வாக்குறுதியும் வழங்கவில்லை.

சுவர் மீது அமர்ந்து கடுமையான கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்த பார்சி இளைஞர்கள், சில மணிநேரங்களுக்கு முன்பு தங்கள் நிலைப்பாட்டைக் கைவிட்டு திரும்பிச் சென்றனர்; இருப்பினும், அவர்களில் சிலர், பின்பு மெஹர் காட்டேஜில் தரிசனம் வழங்கியபோது, வரிசையில் நின்று பாபாவை அணுகியதைக் கண்டு ஆச்சரியப்பட எதுவுமில்லை. காட்டேஜுக்குத் தாமதமாக வந்தவர்களுக்கு, பாபாவின் தாராள மனப்பான்மையால், வீட்டின் உள்ளே தரிசனம் வழங்கியதற்கு, அவரும் அவரது பக்தர்களும் அச்ச உணர்வை வெளிப்படுத்தியதே காரணம் என நகரத்தின் ஒரு சில வெறித்தனமான பார்சிகள் கூறினர்! அவர்கள் இந்தச் செய்தியைப் பரப்ப முயன்றாலும்,

இதுபோன்ற தவறான தகவல்களை வெளியிடுவதை நிறுத்துமாறு பலரால் எச்சரிக்கப்பட்டனர்.

நேரம் இரவு பதினொன்றைத் தாண்டியதும், பாபா ஓய்வெடுக்கச் சென்றார். இரவு கண்காணிப்பாளர்களாக கிஷன் ஸிங் - குமார், நீலு - நரிமன், பாவ் - ஆதி சீனியர், மற்றும் பெண்டு - மெஹர்ஜி ஆகிய நான்கு ஜோடிகளும் தலா ஒன்றரை மணி நேர இடைவெளியில் காவல் புரிந்தனர். முதல் ஜோடி தங்கள் கடமையைச் செய்யத் தொடங்கினாலும், அவர்களால் பாபாவின் சைகைகளைப் பின்பற்ற முடியவில்லை; மேலும் அவற்றை விளக்குவதற்கு பெண்டுவை அடிக்கடி தொந்தரவு செய்ய வேண்டியிருந்தது. நரிமன்-நீலு இருவரும் பொறுப்பேற்ற நேரம் சுமூகமாக கடந்தது. பின்னர் ஆதி-பாவ் இருவரின் முறை வந்தபோது, நரிமனும் நீலுவும் பாபாவின் அறைக்கு வெளியே தூங்கச் சென்றனர். சிறிது நேரத்தில் நீலு குறட்டை விட ஆரம்பித்ததும், '**யார் சத்தம் செய்கிறார்கள்**' என்று பாவ் கல்சூரியிடம் பாபா கேட்கவே, அவர் 'நீலு' என்றார்; பாபா அவரை எழுப்பக் கூறியதும், பாவ் அதைச் செய்தார்.

நீலு தூக்கக் கலக்கத்தில் ஆவேசமாக, "என்ன விஷயம்?" என்று தடுமாறினார்.

பாவ், "நீங்கள் மிகவும் சத்தமாக குறட்டை விட்டீர்கள், உங்களை எழுப்புமாறு பாபா என்னிடம் கூறினார்" என்றார்.

"நான் விழித்திருக்கிறேன், தூங்கவில்லை! வேறு எவரேனும் குறட்டை விட்டிருக்க வேண்டும், நீங்கள் ஏன் என்னிடம் வந்தீர்கள்?" பாவ் மீண்டும் பாபாவிடம் சென்று நீலு சொன்னதை தெரிவித்தார், பாபா சிரித்தார்.

அதைத் தொடர்ந்து நரிமன் குறட்டை விடத் தொடங்கியதும், பாபாவின் அறிவுறுத்தலின்படி பாவ் அவரையும் எழுப்பினார். நரிமன், "என்ன?.. முழு இரவும் நான் விழித்திருக்கிறேன்.. எப்படிக் குறட்டை விட முடியும்... உங்களுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?" என வினவினார்.

இப்படி நரிமனும் நீலுவும் மீண்டும் தூங்கச் சென்று குறட்டை விட்டுக் கொண்டே இருந்தனர், ஒவ்வொரு முறையும் பாவ் அவர்களை எழுப்பிக்கொண்டே இருந்தார். திரும்பத் திரும்ப இருவரும் இதையே கூறினர், "இல்லை, நாங்கள் தூங்கவில்லை, எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?"

பாபா நிலைமையை வேடிக்கையாகப் பார்த்தார், ஆனால் பாவ் சங்கடத்தில் ஆழ்ந்து, இறுதியாக ஆதியிடம், "இருவரும் என் மீது கோபமாக இருக்கிறார்கள், இப்போது நீங்கள் அவர்களை எழுப்புங்கள்" என்றதும், ஆதியும் முயற்சி செய்து அதே பதில்களை எதிர்கொண்டார்.

**1956** ஜனவரி **30** திங்கட்கிழமை அதிகாலை **4:00** மணிக்கு எழுந்து, பாபா டோங்காவில் மெஹர் மையத்திற்குச் சென்றார். அதன் உறுப்பினர்கள் மெஹர் காட்டேஜிலிருந்து முந்தைய நாள் மாலை, பாபா, மெஹர் மையத்திற்கு

வரக்கூடும் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டுச் சென்று, இரவெல்லாம் மண்டபத்தை அலங்கரித்து, அவரது வருகைக்காக காத்திருந்தனர். பாபா அவரது கையில் வைத்திருந்த கோலால் அவர்களை மெதுவாக எழுப்பினார்; அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மையத்தில் பாபாவின் ஒரு பெரிய உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது; பாபா அதன் அருகே சென்று, பாதங்களைத் தொட்டு, அவரது நெற்றியைத் தொட்டார். பின்னர் அவர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்தார்; அதன் மேல், உயரத்தில் ஒரு கூடை நிரம்ப ரோஜாக்கள் வைக்கப்பட்டிருந்தது. அன்பர்கள் அத்துடன் இணைக்கப்பட்ட சரத்தை இழுக்க, பாபா மீது ரோஜா இதழ்களின் மழை பொழிந்தது. ஆரத்திக்குப் பிறகு, பாபா மெஹர் காட்டேஜுக்குத் திரும்பிச் சென்றார்.

அன்று இரவு வெளியே அனுப்பப்பட்ட தேசாய் குடும்பம், அதிகாலை 5:00 மணியளவில் மெஹர் காட்டேஜுக்குத் திரும்பியது. அவர்கள் தூங்கவில்லை என்பதைத் தெரிந்த பாபா, அவர்கள் எப்படித் தூங்கினார்கள் என்று கேட்கவில்லை. விரைவில் நவ்ஸாரியின் பல பெண்மணிகள் வந்து, சிறிது நேரம் பஜனை பாடினர். அப்போது பாபா புறப்பட ஆயத்தமானார். அவர் குடும்ப உறுப்பினர்களைத் தழுவிய போது, பபாய் கண்ணீருடன் பாபாவிடம் கூறினார், “நீங்கள் விரைவில் நவ்ஸாரிக்குத் திரும்பி வருவீர்கள்.”

பாபா பதிலளித்தார், “**இது எனது கடைசி வருகை**.” அவர் குறிப்பிட்டது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, பிரிவின் துயரத்தை அதிகரித்தது; தேசாய் குடும்பத்தினர் அழுதுகொண்டே அவருக்குப் பிரியாவிடை அளித்தனர்.

பாபா ரயில் நிலையத்தைச் சென்றடைந்த வேளையில், அங்கு அவரது அன்பர்கள் ஏராளமானோர் அவரை வழியனுப்பக் காத்திருந்தனர். அவர் நடைமேடையில் விறுவிறுப்பாக நடந்து செல்லவே, கூழாங்கற்களை ரயில் தண்டவாளத்தில் வீசிய காட்சியால் கவரப்பட்ட மக்கள், அமைதியாக அவரைப் பார்த்துக்கொண்டே நின்றனர். ரயில், நிலையத்திற்குள் நுழைந்ததும், மும்பையைச் சேர்ந்த சி.பி.வியாஸ் (C.B. VYAS), அவர்களுக்காக முன்னேற்பாடு செய்திருந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பாபாவும், மண்டலியும் பயணம் செய்தனர்.

அன்றைய தினம் பாஜ்வா குறுநகரில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பாபாவுடன் வந்தவர்கள், மும்பை மற்றும் நவ்ஸாரியைச் சேர்ந்த பலர், வேறொரு பெட்டியில் அமர்ந்திருந்தனர். ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!’ என்ற தொடர்ச்சியான முழக்கங்கள் பட்டாசு வெடித்தது போன்ற சத்தத்தை எழுப்பின. காலை 8:00 மணிக்கு ரயில் நகர ஆரம்பித்ததும், வாசல் அருகே நின்று, பாபா கை அசைத்து ஆசீர்வதித்தார், அவரது அன்பர்கள் கைகளை

அசைத்துக் கொண்டே, கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தனர்.

வழியில், மற்றுமொரு பெட்டியில் அமர்ந்திருந்த பாபாவின் அன்பர்களில் சிலர், அவரது சகவாசத்தை அடையப்பெறும் வாய்ப்பை அனுமதிக்குமாறு அவரிடம் மன்றாடினர், அதற்காக பாபா அவர்களை ரயிலில் தமது பெட்டிக்கு அழைத்தார். சிறிய இடம், முழுவதுமாக அங்கும் இங்கும் அசைய முடியாமல் நிரம்பியது; பாபா தனது இருக்கையில் கால்களை நீட்டவோ, வசதியாக அமரவோ இடமின்றி நசுக்கப்பட்டார்; மேலும் மண்டலி எழுந்து நின்று பயணிக்க வேண்டியிருந்தது. ஆனால் பாபா தனது தீவிர உணர்ச்சி மிக்க அன்பர்களிடையே மகிழ்ச்சியாக காணப்பட்டார். பச்சூபாய் இனிமையான பாடல்களாலும் (பாஜ்வாவைச் சேர்ந்த ஹரிபாய் பட்டேல் என்ற அன்பரால் இயற்றப்பட்டது) சூரத்தைச் சேர்ந்த ரவிகாந்த் ராவல் எடுத்துரைத்த நகைச்சுவைக் கதைகளாலும் அனைவரும் மகிழ்ச்சி பொங்கும் உற்சாகமான மனநிலையில் காணப்பட்டனர்.

ஒவ்வொரு வழித்தட ரயில் நிலையங்களிலும், மக்கள் கூட்டம் பாபாவைப் போற்றி, கோஷமெழுப்பி தரிசனத்திற்காக அவருடைய இருக்கையை நோக்கி வந்தது. சூரத் ரயில் நிலையத்தில் தரிசனத்திற்காக, திணறடிக்கும் கூட்டம் திரண்டு வந்தது; பாபா பலருக்குத் தமது ஸ்பரிசத்தை வழங்கினார். ரயில் தாமதமாக வாய்ப்பு இருந்ததால், ரயில் காவலர் பணிவுடன் பாபாவை அணுகி, "ரயில் புறப்படுவதற்கு வேண்டிய உத்தரவை வழங்கட்டுமா?" என்று வினவ, பாபா சிரித்துக்கொண்டே '**ஆம்**' என்று சைகையால் தெரிவித்தார்.

ரயில் புறப்பட்டது, பச்சூபாய் குழுவினர் தொடர்ந்து பஜனை பாடல்களால் பாபாவை மகிழ்வித்தனர். ரவிகாந்த் ராவல் ஒரு காட்டுமிராண்டி கதையால் அனைவரையும் சிரிக்க வைத்தார். அவர் வேறொரு கதையைச் சொல்லிக்கொண்டிருந்த போது, பாபா குறுக்கிட்டு, "**நான் 700 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வந்து கதையின் மறு பாதியைக் கேட்பேன்!**" என்றார்.

ராவல் சாதுரியமாக பதிலளித்தார், "உங்கள் கைகளைப் பற்றிப் பிடித்த பிறகு, நான் ஏன் வேறொரு பிறவி எடுத்து வரப் போகிறேன்?"

ரவிகாந்த் ராவல் பாபாவின் பழங்கால அன்பர் மற்றும் வினோதமான முறையில் அவரது அரவணைப்பில் வந்தவர். அவர் குறிப்பாக ஆடவருக்கான அழகான தோற்றம் மிக்க நபர் அல்ல, ஆனால் ஓர் அழகான பெண்ணிடம் காதல் வயப்பட்டு கல்யாணம் செய்து கொள்ள விரும்பினார். பெண்ணின் பெற்றோர் அதை எதிர்த்தனர், மேலும் ராவல் அவர்களை இணங்க வைக்கும் முயற்சியில் வெற்றி பெறவில்லை. பின்னர் எப்படியாவது திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்றும், பாபா அதைச் செய்தால் வாழ்நாள் முழுவதும் அவருக்கு அடிமையாக இருப்பதாகவும் கூறி பாபாவிடம் மன்றாடினார்.

பாபா மனமார சிரித்துக்கொண்டே, **“என் அன்பில் கூட பேரம் பேசுகிறீர்களா?”** என்று கேட்டார்.

ராவல், “எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது, நான் உங்கள் காலடியில் இருக்கிறேன், எனது விருப்பத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்” என்றார்.

**“அப்படியானால் ஒன்றைச் செய்யுங்கள், ஒரு வருடத்திற்கு, கல்யாணப் பேச்சையெல்லாம் நிறுத்திவிடுங்கள், பெண்ணின் தந்தையார் தகவல் ஏதேனும் அனுப்பினால், திருமணம் செய்துகொள்ள மறுத்து விடுங்கள்! ஒரு வருடம் கடந்ததும் நான் பார்த்துக்கொள்கிறேன்”** என்று பாபா அறிவுறுத்தினார்.

அவர் கீழ்ப்படிந்தார்; எனவே, ராவல் இப்போது, தங்கள் மகள் மீது ஆர்வம் காட்டவில்லை என்பதை பெண்ணின் பெற்றோர்கள் தெரிந்து கொண்டனர். இப்படிப்பட்ட அழகற்ற ஒருவருக்கு தனது மகளை யார் கொடுப்பார்கள்? இதற்கிடையில், அவர் தனது மகளின் திருமணத்தை ஏற்பாடு செய்ய எவ்வளவோ முயன்றும், வெற்றி காணவில்லை.

கடைசியாக, பெண்ணின் தந்தையார் ராவலுக்கு செய்தி அனுப்பினார்; ராவல் அதற்கு பதிலாக, “நான் உங்கள் மகளை ஒருபோதும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்! அதைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள்” என்று விரும்பத்தகாத முறையில் பதிலளித்தார். அப்போது பெண்ணின் பெற்றோர் அவரைப் புகழ் பாடத் தொடங்கினர், ஆனால் ராவல் அவரது மறுப்பில் பிடிவாதமாக இருந்தார். இப்படியே ஒரு வருடம் கழிந்தது. அவர் அனைத்து நிகழ்வுகளையும் பாபாவிடம் தெரிவித்தபோது, பாபா அவரைத் திருமணம் செய்து கொள்ள அனுமதித்தார். ராவல் பெண்ணின் பெற்றோரிடம், “எனக்குத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லை, ஆனால் நீங்கள் வற்புறுத்துவதால், நான் ஒப்புக்கொள்கிறேன்” என்று கூறினார். எனவே, இறுதியில், ராவல், தான் காதலித்த அழகான பெண்ணை மணந்தார், அன்றிலிருந்து எப்பொழுதும் பாபாவின் பாதங்களில் அடிபணிந்து, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாபாவிடம் வரத் தொடங்கினார்.

ரயிலில், பாபா அடிக்கடி இடைவெளியில் இனிப்புகள் மற்றும் பிரசாதங்களை விநியோகித்தார்; மேலும் பாசாங்குத்தனம் மற்றும் குருநாதராக காட்டிக்கொள்வதால் விளையும் ஆபத்துகள் குறித்து ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கினார். இல்லாததை இருப்பது போலக் காட்டும் நபர்களுக்கும் அவர்களால் வழிதவறி நடத்தப்படுபவர்களுக்கும் இடையே உள்ள ஆபத்துகளை அவர் வலியுறுத்தினார், மேலும் கூறுகையில்:

**அவதார புருஷருக்கும் சத்குருக்களுக்கும் மட்டுமே அவர்களைத் தலைவணங்க, பிறருக்கு அனுமதி வழங்க உரிமை உண்டு. அவர்கள் அன்பு மற்றும் கருணையின் இறைப்பெருங்கடல், அனைத்து**

**பிணைப்புகளிலிருந்தும் விடுபட்டவர்கள். ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஒருவர், பிறர் தன்னைத் தலைவணங்க அனுமதித்தாலும், அவர் பிறரின் சுமையைத் தன்மீது ஏற்றுக்கொள்வதோடு, ஏற்கனவே தனது சுய மனப்படிவங்களால் கட்டுண்டிருக்கும் வேளையில், தன்னை அறியாமலேயே மேலும் பல பிணைப்புகளை உருவாக்கிக் கொள்கிறார்.**

**உதாரணமாக, ஒரு குட்டையில் தொடர்ந்து மலமும் சிறுநீரும் கழிப்பதாக இருந்தால், அந்தக் குட்டையில் தாங்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசும்; ஆனால் நீங்கள் ஒரு கடலில் அவ்வாறு செய்வதானால், அது சிறிதும் பாதிக்கப்படாது. அது நல்லது, தீயது, எதையும், எல்லாவற்றையும் உள்வாங்கும் திறன் படைத்தது, மேலும் சுத்தம், அசுத்தம் எதுவும் அதை எந்த வகையிலும் பாதிக்காது.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: “**இன்று என்னுடன் பயணம் செய்ததில் நீங்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நான் யார் என்பதும், பாபா என்ன என்பதும் எவருக்கும் தெரியாது. என்னுடன் இருக்கும் நீங்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள்.**”

மதியம் சுமார் 2:00 மணியளவில், ரயில் பாஜ்வா கிராமத்திற்கு (பரோடாவிலிருந்து ஐந்து மைல் தூரம்) வந்து சேர்ந்தது, ஹரிபாய் பட்டேல், நூற்றுக்கணக்கான மக்களுடன் இணைந்து, “மொழியுங்கள்! மெஹர் பிரபுவிற்கு ஜெய் என்று மொழியுங்கள்!” எனக் கோஷமிட்டார். பாபா ரயிலிலிருந்து வெளியே வந்ததும், ஹரிபாய் அவருக்கு மாலை அணிவித்தார்; தொடர்ந்து, பாபா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட காரைச் சென்றடையும் வரை, அன்பர்கள் அவருக்கு மாலை அணிவித்தனர். அந்தக் காட்சி அனைத்தும் ஹமிர்பூரில் பாபாவிற்கு வழங்கப்பட்ட கோலாகலமான வரவேற்பை மண்டலிக்கு நினைவூட்டியது. ‘பாபாவிற்கு ஜெய்’ என்று முழக்கமிட்டு, ஹரிபாய் பட்டேல் குழுவுடன் பஜனைப் பாடியபடிச் செல்லவே, காருக்கு முன்னால் கூட்டத்துடன் நீண்ட ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலம் ஒரு செழிப்பான புகையிலை வியாபாரியான தஹ்யாபாய் ஈஷ்வர்தாஸ் பட்டேலின் (DAHYABHAI ISHWARDAS PATEL) வீட்டை வந்தடைந்தது, அங்கு அனைவரும் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஹரிபாய் பட்டேல் அனைவரையும் பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார், வரவேற்புக் குழு உறுப்பினர்கள் அவருக்கு மீண்டும் மாலை அணிவித்தனர். பாஜ்வாவில் பாபாவின் அன்பைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்த பாபாவின் நீண்டகால அன்பரான ஹரிபாயின் அழைப்பின் பேரில் பாபா அங்குச் சென்றிருந்தார்.

அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது, பாபா அருகில் அமைந்த தரிசன இடத்திற்குச் சென்றார். அழகான பந்தல் ஒன்று எழுப்பப்பட்டு, மேடை சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய 5,000 பேர் கூடியிருந்தனர்.

பாபா மேடையில் ஏறியதும், ஹரிபாய் மாலை அணிவித்து, தனது குடும்பத்துடன் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினார். பாபா, இருபுறமும் இரண்டு தனித்தனி வரிசைகளில் காத்திருந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரசாதத்தை வழங்கத் தொடங்கினார். இசை நிகழ்ச்சி தொடர்ந்தது, ஹரிபாய் மிகவும் மகிழ்ச்சியடைந்தார், அவர் பாடியபடி நடனமாடினார். அவருக்கு அது நினைவுகூரும் வகையில் ஒரு முக்கியமான நாள், மேலும் காலம் இதை இவ்வாறு அறிவித்தது, "ஹரிபாய் எப்பொழுதும் பேசிக் கொண்டிருந்த ஏக இறைவன் இப்பொழுது அவர்களிடையே இருக்கிறார்!"

பாபா மாலை வரை பிரசாதம் வழங்குவதைத் தொடர்ந்தார், அதன் பின்னர் அவரது ஆரத்தி மீண்டும் நிகழ்த்தப்பட்டது, மேலும் பாபா, தனது நெருங்கிய பாஜ்வா பிரியர்களுடன் புகைப்படம் எடுத்தார். அதைத் தொடர்ந்து, பாபா, ஹரிபாய் மற்றும் பிற அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார்.

பாபா, நடந்து செல்லும் விருப்பத்தை முன்வைத்து, மண்டலி மற்றும் உள்ளூர்வாசிகள் சிலருடன் இருளில் புறப்பட்டுச் சென்றார். குறுகிய, வளைந்து நெளிந்த பாதைகள் வழியாக, ஏழையிலும் ஏழையான புகையிலை தொழிலாளர்கள் வாழும் பகுதிக்கு அவர் வந்தார்; அனைவரும், எதிர்பாராமல் அவர்கள் மத்தியில் இறைவனைக் கண்டு வியந்தனர். பாபா சிறிது நேரம் சில குடிசைகளில் அமர்ந்தார், தொழிலாளர்கள் அவரது தரிசனத்திற்காக விரைந்து வந்து பாதங்களில் விழுந்து வணங்கினர்.

பாஜ்வா ஒரு முக்கியமான புகையிலை சந்தையாகும், தஹ்யாபாய் பட்டேல் ஒரு புகையிலை தொழிற்சாலையின் உரிமையாளர். இந்தத் தொழிலாளர்கள் அவருடைய தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்தனர். ஆதலால் அவர்கள் மிகவும் விரும்பிய தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே, பாபாவே தனது கருணையால் அவர்களுக்கு தரிசனம் வழங்கி ஆசிகளைப் பொழிந்தார்.

கிராமத்து மக்கள் அக்கம்பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்த வேளையில், பாபா திடீரெனச் சென்று, தனியாக அமர்ந்திருந்த ஓர் ஏழை முதியவரின் குடிலுக்கு வெளியே அமைந்த உயர்ந்த ஒரு மேடையில் அவரும் அருகில் அமர்ந்தார். அந்த முதியவர் உடனடியாக தனது குடிலுக்குள் சென்று, பாபா அமருவதற்காக ஒரு கிழிந்த கோணிப்பையைக் கொண்டு வரவே, பாபா சில நிமிடங்கள் அவருக்கு அருகில் அமைதியாக அமர்ந்திருந்தார். பாபாவின் திடீர் வருகையைக் கண்டு அந்த ஏழை முதியவர் திகைப்பில் ஆழ்ந்தாலும், உள்ளம் நெகிழ்ந்து போனார்; பாபா புறப்படுவதற்காக எழுந்து நின்றபோது, அந்த முதியவர் பயபக்தியுடன் அவருடைய பாதங்களில் தலைவணங்கினார்.

அடுத்ததாக பாபா மற்றுமோர் ஏழை தம்பதியினரின் வீட்டிற்குச் சென்றபோது, மனைவி தனியாக நின்று கொண்டிருந்தார். அவர் கணவன்

வேலையிலிருந்து திரும்பி வராததால், அவர் என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். பாபா அந்தக் குடிசைக்குள் நுழைந்தபோது, அந்தப் பெண்மணி பெரிதும் அதிர்ச்சியடைந்து, சிலை போல நின்றார். அவரை முறையாக உபசரிக்க எதையும் செய்யும் முன்பு, பாபா அந்தப் பெண்மணியைப் பார்த்துப் புன்னகைத்து வேகமாக வெளியேறினார்.

சந்தை வழியாக நடந்து, பாபா தஹ்யாபாயின் வீட்டைச் சென்றடைந்தார்; அங்கு அனைவரும் ஆடம்பரமான விருந்தில் பங்கெடுத்து மகிழ்ந்தனர். இருப்பினும், பாபா தனது வழக்கமான சாதம்-பருப்பை மட்டுமே உண்டார். உணவுக்குப் பிறகு, பாபாவின் அன்பர்கள் ஓர் அறையில் அவரை சூழ்ந்து கொண்டனர்; ஹரிபாய் அவரது குஜராத்தி பாடல்களைப் பாடினார். பாபா, ஹரிபாயின் அன்பைப் பாராட்டி அவரது வருகை வெற்றிகரமாக நிறைவடைந்ததில் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

இரவு 8:30 மணியைத் தாண்டிவிட்டதால், பாபா புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டதாகக் கூறினார். அன்பர்களைத் தழுவி, பாபா காரில் பரோடா நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். மண்டலி மற்றும் பிற அனைவருக்கும் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன; பாஜ்வாவைச் சேர்ந்த சில அன்பர்களும் உடன் சென்றனர்.

பரோடாவில் அவர், சாய்பாபா மையத்திற்கும், பாபாவின் அன்பர்களில் ஒருவரான கான்டிராக்டர் (CONTRACTOR) என்பவரின் தனிப்பட்ட வேண்டுகோளின் பேரில், அவரது இல்லத்திற்கும் விஜயம் செய்தார். அங்கிருந்து ரயில் நிலையத்திற்கு வந்ததும், பாபா திடீரென நகருக்குள் செல்ல விருப்பம் தெரிவித்து மீண்டும் காரில் சென்று அமர்ந்தார். ஹோஷங் பரூச்சா அவருடன் இருந்தார்; பாபா, ஒட்டுநருக்குச் சாலையைக் காட்டி வழிநடத்தவே, சுமார் பதினைந்து நிமிடங்கள் அங்கும் இங்கும் பயணித்த பிறகு, பாபா அவரது பணி முடிந்ததாகத் தெரிவித்து, ரயில் நிலையத்திற்குத் திரும்பிச் சென்றார். பாபாவின் வினோதமான கோரிக்கையைக் குறித்து ஹோஷங் பரூச்சாவிற்கு தலை கால் புரியாமல், அதைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார். பாபா சிரித்துக்கொண்டே, **“நான் ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ள விரும்பினேன், காரில் கடந்து செல்லும் போது அவரைத் தொடர்பு கொண்டேன்”** என்று விளக்கினார்.

இரவு 11:00 மணியளவில் ரயில் புறப்படவே, தனது அன்பர்களிடம் விடைபெற்ற பிறகு, பாபா மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அவரது இருக்கையில் அமர்ந்தார். இரவு முழுவதும் பஜனை பாடல்கள் மற்றும் வேடிக்கையான கதைகளில் கழிந்தது. பாபா ஒவ்வோர் அன்பரின் இதயத்தையும் தொட்டு, அரைத்தூக்கத்தில் இருப்பவர்களை தூங்கவிடாமல் நகைச்சுவையாகப் பேசினார்.

பச்சூபாயின் பாடலானது பாபாவை, தொடர்ந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது; மேலும் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ஹோஷங் பரூச்சா சத்தமாக 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று கத்தினார். இறுதியில் அவருக்குத் தொண்டை வலி ஏற்படவே, பாபா கத்துவதைத் தடைசெய்து, அவரைத் தன் அருகில் அமர வைத்தார். ஹோஷங் தனது மென்மையான தலையணையை பாபாவின் முதுகுக்குப் பின்னால் இதமாக வைத்தார். ரயிலில் சில முறை ஆரத்தியும் நிகழ்த்தப்பட்டது. சில நேரங்களில் பாபாவைச் சுற்றியுள்ள சூழ்நிலை உற்சாகமாகவும் கலகலப்பாகவும், சில நேரங்களில் தீவிரமாகவும் இருந்தது. நவ்ஸாரி, மும்பை மற்றும் பூனா அன்பர்கள், உண்மையில் பயணம் முழுவதும் பாபாவின் நெருங்கிய சகவாசத்தை அடையப்பெற்ற அதிர்ஷ்டசாலிகள்.

ஒரு கட்டத்தில் பாபா, ஹோஷங் பரூச்சாவிடம் கூறினார், "**நீங்கள் விரும்புவது மட்டுமின்றி, ஒரு கண இடைவெளி கூட இல்லாமல் பன்னிரெண்டு வருடங்கள் என்னுடன் ஐக்கியமாகும் ஏக்கத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே நீங்கள் இறை-உணர்வை அடைய முடியும்**!"

சூரத்தில் ரயில் நின்றதும், உள்ளூர் ரயிலில் நவ்ஸாரிக்குத் திரும்பிச் செல்வதற்காக அன்பர்கள் பலர் அங்கே இறங்கினர். ஹோஷங் இதை இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நாங்கள் ரயிலிலிருந்து இறங்கி நடைமேடையில் நின்றபோது, எங்கள் அனைவரின் கண்களும் கண்ணீர் குளமாக இருந்தது. பாபா எங்களை விட்டுப் பிரிந்ததால், நாங்கள் அனைவரும் அழுது கொண்டிருந்தோம். பாபா எங்கள் இதயங்களைத் தவிக்க விட்டுச் செல்வதாக நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் பாபாவின் சகவாசத்தில் முற்றிலும் மூழ்கியிருந்ததால், இரண்டு நாட்கள் முழுவதும் உலகம் எங்களைப் பொறுத்தவரை இல்லாமல் போனது. அப்போது பாபா மட்டுமே எங்களுக்காக இருந்தார்."

ரயில் புறப்படும் மணியோசை கேட்டபோது, பாபா, திடீரென தலையணையை நினைவுகூர்ந்து, அதைக் கையில் எடுத்து "**இது உங்கள் தலையணைதானே, நான் வைத்துக்கொள்ளலாமா**?" என்று ஹோஷங்கிடம் கேட்டார்.

ஹோஷங் உடனடியாக பதிலளித்தார், "ஆம், பாபா நிச்சயமாக. இது உங்களுடையது." பாபா அந்தத் தலையணையை தமது மார்போடு அணைத்து வைத்திருந்தது, பாபா, ஹோஷங் பரூச்சாவை எவ்வளவு நேசித்தார் என்பதற்கான அடையாளம்.

இப்போது ரயிலில் மும்பை மற்றும் பூனா அன்பர்கள் மட்டுமே இருந்தனர், பாபா அவர்களுடன் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி பேசினார். அவர் ஸொராப்ஜி ஸிகன்போரியாவிடம் மும்பை மையத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டார், மேலும் ரயில் மும்பையில் நிற்கும் முன்னர், அவரது ஆரத்தி மீண்டும் ஒருமுறை நிகழ்த்தப்பட்டது. பாபா ஒவ்வொருவரையும் தழுவி, "**நான்**

**15ஆம் தேதி தொடங்கி, ஒரு வருடம் ஏகாந்தவாசம் ஆரம்பிப்பதற்கு முன்பு, பிப்ரவரி 6ஆம் தேதி உங்களை மீண்டும் சந்திப்பேன்"** என்று கூறினார்.

அனைவரும் காலை 6:00 மணிக்கு மும்பை வந்தடைந்து, பாபாவும் மண்டலியும் ஆஷியானாவிற்குச் சென்றனர்; தேநீர் மற்றும் காலை சிற்றுண்டியை முடித்து, அதே நாளில் (ஜனவரி 31) மெஹர்ஜியின் காரில் சத்தாராவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த குஜராத் ரயில் பயணம் மெஹர் பாபாவின் வாழ்நாளில் கடைசி முறையாக மேற்கொண்ட ரயில் பயணம் ஆகும்.

1956 பிப்ரவரி 1 புதன்கிழமை முதல், பாபாவின் தரிசனத்திற்காக அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து கிராம மக்கள் சத்தாராவிற்கு வரத் தொடங்கினர்; மேலும், பாபா உறுதியளித்ததற்கு இணங்க, ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் அவர்களை சந்தித்தார். சத்தாராவின் சில குடியிருப்பாளர்களும் இந்த நேரத்தில் பாபாவின் தரிசனத்திற்கான வாய்ப்பைப் பெற்றனர், அவர்களில் ஒருவரான வி. ஸ்வரங்கர் ரங்கோலே (V. SWARANGAR RANGOLE), அவரது தொடர்பில் மிகவும் நெருக்கமாக வந்தவர்களில் ஒருவர்.

நவ்ஸாரி மற்றும் பாஜ்வா பயணத்திற்குப் பிறகு, பாபா, குமாரை மீண்டும் டெஹ்ரா டூனுக்கு அனுப்பி, ஒரு வருடத்திற்கு சத்தாராவிற்குத் திரும்பி வர வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.

ஆதி சீனியர், மெஹர்ஜி, விஷ்ணு, ஐரீன் கோனிபியர் ஆகியோர் 4ஆம் தேதி சத்தாராவிற்கு அழைக்கப்பட்டனர்; அவர்கள் அங்கு இரண்டு நாட்கள் தங்கினர். ஐரீன் கிராஃப்டனில் தங்க வைக்கப்பட்டார். 4ஆம் தேதி ஆதி சீனியர், எரச், மணி, ராம்ஜூ ஆகியோருடன் நடந்த சந்திப்பில், பாபா அமெரிக்காவில் 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' (SUFISM REORIENTED) அமைப்பிற்கு வழங்கிய 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைத் தவிர, அவரது எழுத்து தொகுப்புகளின் அனைத்து பதிப்புரிமைகளும் ஆதி சீனியருக்கு சொந்தமானது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தினார். ஜூலை முற்பகுதியில் ஆதி சீனியர், நீலு, எரச், மெஹர்ஜி ஆகியோருடன் மேற்கு நோக்கி பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் பாபா சுட்டிக்காட்டினார்.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தைச் சேர்ந்த ஈனா லெமன் (ENA LEMMON) என்ற பெண்மணி, குழந்தைப் பருவத்திலிருந்தே மதத்தில் நாட்டம் கொண்டிருந்தார். பல்வேறு தத்துவங்கள் மற்றும் உளவியலை ஆராய்ந்த பின்னர், அவர் கிழக்கத்திய சிந்தனையால் ஈர்க்கப்பட்டு ஸூஃபியிஸத்தில் (SUFISM) ஈடுபாடு மிக்கவராக இருந்தார். மெஹர் பாபாவைப் பற்றி அவர் முதன்முதலில் 1947இல் ஸூஃபி தலைவர் பாரன் வான் ஃபிராங்கன்பெர்க் (BARON

VON FRANKENBERG) மூலம் அறிந்துகொண்டார். ஈனாவின் தோழி ஒருவர் பாபாவின் சொற்பொழிவுகளின் நகலை அவர் கைகளில் கொடுத்த வேளையில், அவர் புத்தகத்தைத் திறந்து பாபாவின் சித்திரத்தைப் பார்த்த போது (அவருக்கு முன்னால் கைகளைக் கூப்பி நின்று), ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றி அவரை மகிழச் செய்யும் உணர்வை வெளிப்படுத்தியது. பின்னர், ஈனா இவ்வாறு விவரித்தார்:

சித்திரத்தைப் பார்த்ததும், “நான் இந்தியாவிற்குப் போகிறேன்!” என்றேன். அந்த சொற்பொழிவுகள் என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் அவற்றை விட்டுப் பிரிய மனமின்றி அட்டைபோல பற்றிக் கொண்டு இருந்தேன், அவற்றைப் படிக்கும்போது என் இதயம் படபடத்தது.

பாரன் வான் ஃபிராங்கன்பெர்க் எனக்கு ‘அவதார்’ (ஜீன் அட்ரியல் எழுதியது) புத்தகத்தின் ஒரு பிரதியைக் கொடுத்தார், அதை நான் படித்தேன், அது எனது கண்களில் கண்ணீரை வரவழைத்தது. வான் ஃபிராங்கன்பெர்க், பாபாவிற்கான எனது பிரதிபலிப்பைக் குறிப்பிட்டு, இந்த விஷயத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்கும்படியும், நான் மிகவும் விரும்புவதாக உணர்ந்தால், பாபாவிற்கு நேரடியாக எழுதி, அவருடைய வழிகாட்டுதலைக் கேட்டு, என்னை அவருடைய சிறகுகளின் கீழ் அழைத்துச் செல்லும்படி வேண்டுமாறும் கூறினார்.

ஈனா அதைச் செய்தார்; நவம்பர் 1947இல், ஆதியிடமிருந்து ஒரு பதிலை அடையப்பெற்றார், அதில் ஒரு பகுதி:

உங்கள் கடிதத்தைப் படித்து பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். உங்களை அவருக்கு நன்றாகத் தெரியும் என்றார். அவர் எப்பொழுதும் உங்கள் இதயத்தில் இருக்கிறார். உங்களால் இயன்றவரை அடிக்கடி அவரை நினைவில் கொள்ள வேண்டும். அவர் உங்களை உள்நோக்கி வழிநடத்துகிறார். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்.

மேலும் கடிதப் பரிமாற்றங்கள் தொடர்ந்தன, ஆனால் செப்டம்பர் 1948க்குள், ஸூஃபி தியானங்களில் பங்கு கொள்வதில் ஈனா லெமனின் ஆர்வம் குறைந்து, என்ன செய்வது என்று பாபாவிடம் கேட்டார். அவர், டாக்டர் கனி மூலம் இவ்வாறு பதிலளித்தார்:

**ஹஸ்ரத் பாபா நிச்சயமாக வழக்கத்தை (நடைமுறைகளில்) ஊக்குவிப்பதை எதிர்க்கிறார், மேலும் அத்துடனான உங்கள் வெறுப்பு புரிகிறது. தற்போதைக்கு, ஸூஃபி பயிற்சிகள் மற்றும் பிரார்த்தனைகள் உங்களை ஈர்க்கும் வகையில் இல்லாவிடில், நீங்கள் அதில் ஈடுபட வேண்டியதில்லை. மெஹர் பாபாவைப் பற்றி தியானம் செய்து, அதன் பலனை அவரிடம் விட்டுவிடுவதுதான் உங்களைப் பொறுத்தவரை இப்போது அனுமதிக்கப்படும் வழிமுறை.**

**உங்கள் மனமும், வாழ்வும் எவ்வாறு அவரது புனிதமான பிரசன்னத்தால் ஆட்கொள்ளப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை பாபா நன்கு அறிவார். எதிர்காலத்தில் நீங்கள் அவருக்கு சிறந்த சேவை செய்வீர்கள்.**

இதன் விளைவாக, ஈனா லெமன் விரைவில் ஸூஃபியிஸத்தை கைவிட்டு, ஸிட்னி நகரில் வாழ்ந்த ஃபிரான்சிஸ் பிராபஸோனுக்கு உதவச் சென்றார். ஈனா அவரது கதையைத் தொடர்ந்தார்:

ஃபிரான்சிஸ், பாபாவை சந்திக்கும் இந்திய பயணங்களில் ஒன்றிற்குப் பின்னர், அவர் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பி வந்து, மெல்போர்ன் நகரில் நிகழ்த்திய உரை ஒன்றில், பாபாவின் சகோதரி மணி தபால் தலைகளை சேமித்து வைத்திருப்பதாகக் குறிப்பிட்டார். எனது தந்தை ஓர் அரசியல்வாதி ஆனதால், கணிசமான அளவுக்கு தபால் தலைகள் சிறப்பு சலுகைப்படியாக வந்ததில் சிலவற்றை, நான் மணிக்கு அனுப்பி வைத்தேன்; இது இருவரையும் பேனா நண்பர்களாக இணைக்க வழிவகுத்தது; மேலும் எனது செயல்பாடுகள் பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்று நான் நினைக்கிறேன். ஒருமுறை, நான் மணிக்கு எழுதும்போது, பாபாவின் மீது ஆர்வமுள்ள எனது தோழி கிளாரிஸ் ஆடம்ஸும் (CLARICE ADAMS) நானும் ஒரு நாள் இந்தியாவிற்குச் சென்று, ஒருவேளை, பாபாவைப் பார்க்க முடியும் அல்லது அவர் எங்களைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையில், எங்கள் பணத்தை சேமித்து வருவதை சாதாரணமாகக் குறிப்பிட்டேன்.

எனக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில், மணியிடமிருந்து பதில் வந்தது, கிளாரிஸ் எப்போது வருவதாகத் திட்டம் என்று கேட்டு எழுதியிருந்தார், மேலும் கிளாரிஸ் சில குறிப்பிட்ட தேதியில் இந்தியா வருவதானால், பாபாவை மும்பையில் பார்க்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். இது ஒரு தவறான புரிதலாகத் தோன்றியது, நான் எழுதிய கடிதத்தில், 'நாங்கள்' வருவோம் என்ற நம்பிக்கையில் பணம் சேமிக்கிறோம் என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தேன், அப்போது எங்கள் இருவரிடமும் பயணத்திற்குப் போதுமான பணமும் இல்லை. சொல்லப்போனால், கடிதம் நான் எழுதியிருந்தேன் - ஆனால் நான் பாபாவை சந்திப்பது குறித்து, மணி எதுவும் குறிப்பிடவில்லை. நான் மனம் உடைந்து போனேன், ஆதலால் நான் இந்தியாவிற்கு வந்தால், கிளாரிஸுடன் பாபாவைப் பார்க்க முடியுமா என்று மணிக்கு தொலைத்தந்தி அனுப்பினேன்.

1956 ஜனவரி 6 அன்று, மணி சத்தாராவிலிருந்து ஈனா லெமனுக்கு தொலைத்தந்தி அனுப்பினார்: "**பிப்ரவரி 15ஆம் தேதிக்கு முன்னர் ஒரு நாள் பாபா உங்களை மும்பையில் சந்திப்பார். கடிதம் பின்தொடர்கிறது.**"

மிகுந்த அவசரத்துடன், ஈனா இந்தியா புறப்படத் தயாராகத் தொடங்கினார். அவருடைய தந்தையார் சமீபத்தில் காலமானார், அவருடைய

பயணச்செலவுக்கு பணம் கடன் வாங்க வேண்டியிருந்தது. கிளாரிஸ் ஆடம்ஸை விட்டுவிட்டு மெல்போர்ன் நகரிலிருந்து மும்பைக்குக் கப்பலில் புறப்பட்டார். கிளாரிஸ் மும்பைக்கு வருவது சாத்தியமாகுமா என்று இப்போது உறுதியாகத் தெரியவில்லை. இறுதியில் அவர் விமானத்தில் இந்தியாவிற்கு வர முடிந்தது; பாபா தரிசனத்திற்காக வழங்கிய தேதிக்கு சில நாட்களுக்கு முன்னதாகவே மும்பையில் ஈனாவை சந்தித்தார்.

இதற்கிடையில், 1956 பிப்ரவரி 6 திங்கட்கிழமை காலை, எரச், மெஹர்ஜி இருவருடன் பாபா சத்தாராவிலிருந்து காரில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஐரீன் கோனிபியர், பாவ், விஷ்ணு, அலோபா, இஸ்மாயில் ஆகியோரை ஆதி காரில் அழைத்துச் சென்றார்.

கிஷன் ஸிங்கும் உடன் சென்றார். வழியில், பாபா பூனாவில் காடேக்கரின் இல்லத்தில் சிறிது நேரம் நின்ற வேளையில், அங்கு மனோகர் எம். ஸாக்கரே (MANOHAR M. SAKHARE) என்ற விமானப்படை அதிகாரியும் அவரது மனைவி மோனாவும் (MONA) பாபாவை முதல் முறையாக சந்தித்தனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி, முன்னர் ஒருமுறை, காடேக்கர் இல்லத்தில் தங்கியிருந்த ஐரீன் கோனிபியர், பாபாவைப் பற்றி ஸாக்கரேயிடம் கூறியிருந்தார். இந்த முதல் சந்திப்பிற்குப் பிறகு, ஸாக்கரே தம்பதியினர் பாபாவுடன் மிகவும் நெருக்கமாகிவிட்டனர்.

பாபா அவர்களை சந்திக்க ஒப்புக்கொண்டார், ஆனால் என்ன செய்ய வேண்டும் என்பதைத் துல்லியமாக எடுத்துரைத்தார்: "**நான் அவர்களுக்கு காடேக்கரின் இல்லத்தில் தரிசனம் வழங்குவேன், ஆனால் காடேக்கர், கோனிபியர், ஸாக்கரே தம்பதியர் தவிர வேறு எவரும் அறையில் இருக்கக் கூடாது.**" காடேக்கரின் குடும்ப உறுப்பினர்கள் இல்லத்தில் இருந்தபோதிலும் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. அன்று காலை, காடேக்கரின் மனைவி குணாதாய், பாபாவிற்கு வேண்டிய முழு உணவையும் தயார் செய்து, அதை மேசை மீது பத்திரமாக வைத்திருந்தார்; பாபாவின் கார் வரும் ஓசையைக் கேட்டதும், அவரது அறிவுறுத்தலின்படி, குடும்பத்தினர் வீட்டின் உட்புறத்தில் மறைந்துகொண்டனர். பாபா, மனோகர் ஸாக்கரே, அவரது மனைவி இருவரையும் சந்தித்தார்; புறப்படுவதற்கு முன்னர், அவர் அறையின் கதவில் இருந்த திரை வழியாக, அவரை ரகசியமாக 'தவறிழைப்பவர்கள்' எவரேனும் பார்க்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தினார், நிச்சயமாக, அங்கு எவரும் இல்லை. அவருக்காக உணவு தயார் செய்து வைக்கப்பட்டிருந்ததை அவருக்குத் தெரிவித்த போதும், அவர் அதை உண்ணாமல், காரை நோக்கி விறுவிறுப்பாக நடந்து சென்றார்; பாபாவுக்காக பிரத்யேகமாக வைத்திருந்த கேக்கை கையில் ஏந்திக் கொண்டு காடேக்கர் அவரைப் பின்தொடர்ந்தார், ஆனால் அதையும் பாபா ஏற்கவில்லை.

மிகுந்த அன்புடன் தயாரிக்கப்பட்ட உணவை, பிரியமான பாபா தொடாமல் போனதால் குணாதாய் பெரும் ஏமாற்றம் அடைந்தார். அவர் பாபாவிற்குக் கடிதம் எழுதி தனது துக்கத்தை வெளிப்படுத்தினார். பாபா அவருக்கு இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: "**ஸாக்கரே தம்பதியர்**, **கோனிபியர்**, **நீங்கள் அனைவரும் அந்த உணவை உண்டது**, **நான் உண்டதற்கு சமம்**!"

பாபா மும்பைக்கு வந்து, ஸயன் (SION) பகுதியில் வாழ்ந்த டி.எம். ஷிண்டேயின் (D.M. SHINDE) இல்லத்திற்குச் சிறிது நேரம் விஜயம் செய்த வேளையில், அங்கு அவரது ஆரத்தி நிகழ்த்தப்பட்டது, பின்னர் அவர் ஆஷியானாவிற்குச் சென்றார். புது வாழ்வின் தொடக்கத்திலிருந்து கேட்டி ஈரானி, அர்னவாஸ்-நரிமன் இருவருடன் தங்கியிருந்தார், மேலும் கோர்ஷெத் அவரது தாயார் ஸூனாமாசியுடன் மும்பையில் 'தஃப்தி மேன்ஷனில்' (TAFTI MANSION) வசித்து வந்தார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் உடல்ரீதியாக அவரை விட்டு விலகியிருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் பாபா அவர்களை அழைப்பதுண்டு.

ஆஷியானாவைச் சென்றடைந்ததும், பவானி பிரசாத் நிகம், புக்கார், அவரது தாயார், லக்ஷ்மிசந்த் பாலிவால், அவரது மருமகன் ஆகியோர் ஹமிர்பூரிலிருந்து வந்து ஒரு ஹோட்டலில் தங்கியிருப்பதாக பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டது. பாபா, நரிமனிடம் தொலைபேசி மூலமாக அவர்களை அழைக்குமாறு கூறினார். பாபாவும் மண்டலியும் அவசரமாக, தேநீர் மற்றும் சிற்றுண்டியை உண்டனர்.

இதற்கிடையில், ஈனா லெமன் (50 வயது), கிளாரிஸ் ஆடம்ஸ் (43 வயது) இருவரையும் மெஹர்ஜி அழைத்து வந்தார். பாபா இரண்டு பெண்மணிகளையும் தழுவி வரவேற்றார்; இருவரும் ஐரீன் கோனிபியரின் அருகில் அமர்ந்தனர். உரையாடலின் போது, அவர்கள், '**அவரது தொடர்புக்கு எவ்வாறு வந்தனர்**' என்று பாபா கேட்கவே, கிளாரிஸ் கூறினார், "என்னுடைய நண்பர் ஒருவர், நீங்கள் எழுதிய புத்தகம் ஒன்றை எனக்குப் படிக்கக் கொடுத்தார்; அதில், நீங்கள் கடவுள், என்ற உங்கள் உறுதிப்பாட்டை நான் படித்து பெரிதும் சீற்றமடைந்தேன், உங்களின் கூற்று தவறு என்பதை நிரூபிக்கும் நோக்கத்தில் நான் அதை மீண்டும் மீண்டும் படிக்கத் தொடங்கினேன்! நான் எந்த அளவுக்கு அதிகமாகப் படித்தேனோ, அந்த அளவுக்கு அதிகமாக உங்கள் மீதான ஆர்வம் பெருகியது. நான் புத்தகத்தைப் பலமுறை படித்தேன், இறுதியில் உங்கள் தரிசனத்திற்காக ஆசைப்பட்டு உங்களுக்கு எழுதினேன்."

ஈனா, "நான் சொற்பொழிவுகள், கருத்தார்ந்த உரைகள் மற்றும் 'அவதார்' புத்தகத்தைப் படித்தேன்; உங்கள் சித்திரத்தில் எனது கண்கள் பதிந்த அந்த கணத்திலிருந்து, உங்களைப் பார்க்க வேண்டும் என்ற மிகுந்த ஏக்கத்துடன்

இருந்தேன், இந்தியாவிற்கு வர முடிவு செய்தேன்." இருவரும் மெஹர் பாபாவிடம் காட்டிய அளப்பரிய ஆர்வத்தில் அவர்களின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. அவர்களால் பாபாவின் வினவல்களுக்கு பதிலளிக்க முடியவில்லை, அவர்களின் இதயம் நிறைந்திருந்ததால் அவர்கள் பேசாமல் அமர்ந்து, அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஈனா லெமன் பின்பு நினைவு கூர்ந்தார்:

இறை-மனிதனை சந்திப்பதில் நான் பதட்டமும் வெட்கமாகவும் உணர்ந்தேன், நாங்கள் இருவரும் பாபாவை அணுகியபோது, நான் எனது நண்பருக்குப் பின்னால் பதுங்கி, ஒளிந்து, ஒரு வகையில் அடைக்கலம் நாடுவதுபோல் உணர்ந்தேன்… எங்கள் பிரியமானவர் ஆரம்பத்திலிருந்தே எங்களை உள்வாங்குவதையும், அவரை நோக்கி ஈர்ப்பதையும் நான் கண்டேன். ஒரு கட்டத்தில், அங்கே வெதுவெதுப்பாக இருந்ததால், பாபா எங்களிடம் 'வெளியே செல்ல விரும்புகிறீர்களா?' என்று கேட்டார்; ஆனால் நாங்கள் இருவரும் பாபாவுடன் இருக்க இவ்வளவு தூரம் பயணம் செய்தோம், 'இல்லை' என்று பதிலளித்தோம். பின்னர் அவர் எங்களுக்கு விடையளித்து, மறுநாள் காலையில் அவரை மீண்டும் பார்க்கலாம் என்றார்.

பாபாவின் நெருங்கிய அன்பர்களால் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டேன், மேலும் பாபாவுடன் பற்று மிக்கவர்கள் அப்படித்தான் இருப்பதானால், நான் அவர்களைப் போல் இருக்க விரும்புகிறேன், அது எனக்கு மிகவும் ஏற்புடையது என்று முடிவு செய்தேன்.

கிளாரிஸின் மூத்த மகன் நோயல் (NOEL), பாபாவிற்குப் பரிசாக தனது விலைமதிப்பற்ற தபால் தலைகளின் பொக்கிஷத்தை அனுப்பியிருந்தார். பின்னர், அத்துடன் மேலும் தபால் தலைகள் சேர்க்கப்பட்டு பாபாவின் கையொப்பத்துடன் நோயலுக்கு, பாபாவிடமிருந்து பரிசாக தபால் மூலம் திருப்பி அனுப்பப்பட்டது! காலின் (COLIN), அவரது இரண்டாவது மகன், இனிப்பு வழங்கும் கருவியையும், அவரது மகள் சிந்தியா (CYNTHIA) ஒரு கைவினைப்பொருளையும் அனுப்பியிருந்தனர்.

நாக்பூரிலிருந்து டாக்டர் தேஷ்முக் வந்த வேளையில் பாபா அவரிடம், **"என்னைத் தனியாக விடவே மாட்டீர்களா?"** என்று கேட்டார்.

தேஷ்முக், "நான் உங்களைத் தனியாக விட்டுவிட்டால், நான் எங்கும் இருக்கமாட்டேன்!" என்றார்.

சிறிது நேரத்தில், புக்காரும் ஹமிர்பூரிலிருந்து பிற அன்பர்களும் வந்தனர்; பாபா, புக்காரைக் கண்டித்தார்: **"கடந்த மாதம் 14ஆம் தேதி தரிசன நிகழ்ச்சிக்காக நீங்கள் பூனா வந்திருந்தீர்கள், மீண்டும் இங்கே இருக்கிறீர்கள்! எனது ஓராண்டு ஏகாந்தவாச காலத்தில், உங்களுக்கு ஒரு வருட பணியை ஒதுக்கீடு செய்தேன். நீங்கள் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் ஏழு நாட்கள்**

**உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும். அதைத் தொடர்ந்து, ஓராண்டு காலம் எனது பெயரையும் அன்பையும் பரப்பி, ஊர் ஊராக அலைந்து திரிந்து பயணத்தைத் தொடங்கும் முன்னர், உங்கள் குடும்பத்தினருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதுவெல்லாம் தெரிந்தும், ஏன் மீண்டும் இங்கு வந்து நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கிறீர்கள்?"**

புக்கார் அமைதியாக இருந்தபோது, பாபா கேட்டார், "**உங்கள் குடும்பத்திற்கு வேண்டியதை எப்போது ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்?"**

புக்கார் கூறினார், "நான் அதை விரைவில் செய்வேன், ஆனால் நான் எப்படி எனது பணியைத் தொடங்குவேன் என்று எனக்கு எதுவும் புரியவில்லை, அதனால் நான் உங்களிடம் வழிகாட்டுதலுக்காக வந்துள்ளேன்."

பாபா சிரித்துக்கொண்டே பதிலளித்தார், "**கவலைப்படாதீர்கள், பணியைத் தொடங்குங்கள், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் அதை முழு மனதுடன், நேர்மையாகச் செய்யுங்கள். இடம் விட்டு இடம் செல்லுங்கள், தேவைப்பட்டால் உங்கள் இல்லத்திற்கும் செல்லலாம். ஆனால் எதுவும் செய்யாமல் வெறுமனே அமர்ந்திருக்க வேண்டாம். நீங்கள் உங்கள் குடும்ப விவகாரங்களை கவனித்தவுடன், எனது பணியை உடனடியாகத் தொடங்கி, ஒரு வருடம் அதைச் செய்து கொண்டே இருங்கள்.**"

புக்காரின் தாயார் அவரைப் பற்றி பாபாவிடம் குறை கூறி முறையிடும் நோக்கத்துடன் வந்திருந்தார், ஆனால், பாபா அவரிடம், "**அவரைப் போன்ற ஒரு மகனை ஈன்றெடுத்த நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, நான் உங்களுக்கு ஐந்து குழந்தைகளைத் தந்தேன், அவர்களில் ஒருவரை எனக்குத் தர முடியாதா?**" என்று கேட்டார்.

தாயார் உடனே, "ஆமாம், பரமேஸ்வரி (புக்கார்) உங்களுடன் இருக்க முடியும், ஆனால் அவர் எங்களையும் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

பாபா கிண்டல் செய்தார், "**அவர் ஒரு கையால் தப்லாவும், மற்றொரு கையால் டோலக்கும் இசைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்!" அதாவது இரண்டையும் செய்ய வேண்டும் என்று அர்த்தம். "இப்போது உங்கள் 'குழந்தை' உங்கள் கையை விட்டு நழுவிச் செல்கிறது!"**

அப்போது புக்காரின் தாயார், "அவன் போகட்டும்! உங்கள் பார்வையின் எல்லையைத் தாண்டி அவன் எங்கே போக முடியும்?" என்று கேட்டார்.

புக்கார், பாபாவின் இந்தப் பணியைத் தொடங்கியபோது, தினமும் 30 முதல் 40 மைல்கள் நடந்து, பாபாவின் பெயரை ஊர் ஊராகப் பரப்பி வந்தார். அவர் ஒரு கிராமத்தைச் சென்றடைந்ததும், ஒரு வீதியிலிருந்து வேறொரு வீதிக்குச் சுற்றித் திரிந்து, ஆதிகாலத்தவர், இப்போது அவதார் மெஹர் பாபாவாக மனித உருவில் வந்திருப்பதாக அறிவித்தார். "அவரே ராமா, கிருஷ்ணா,

கிறிஸ்து, முஹமது மற்றும் ஸொராஸ்டர் மீண்டும் மெஹர் பாபாவாக வந்துள்ளார்" என்று புக்கார் அவரது உரத்த குரலில் முழங்கினார். "அவரே இறையன்பின் உருவானவர்! அவரைப் பற்றி மேலும் கேட்க விரும்புபவர்கள் என்னை வந்து பார்க்கவும்." அவர் கிராமத்தில் இரவைக் கழித்து, கீர்த்தனைகள் மற்றும் பஜனை பாடல்களுடன் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, ஏழை கிராமவாசிகளுக்கு பாபாவைப் பற்றி கூறுவதை வழக்கமாகக் கொண்டார். மக்களின் ஆதரவைப் பொறுத்து, அவர் மேலும் ஓரிரு நாட்கள் அந்த கிராமத்தில் தங்கிவந்தார். அதைத் தொடர்ந்து அவர் வேறொரு கிராமம் அல்லது நகரத்திற்குச் செல்வதும், அங்கு பாபாவின் பெயரைப் பரப்பும் பணியைச் செய்வதும் தொடர்ந்தது.

அர்னவாஸின் சகோதரி ரோடா மிஸ்த்ரி தனது கணவர் ஜிம் மற்றும் அவர்களது மகன் மெஹர்வானுடன் ஆஷியானாவிற்கு வந்திருந்தார். பாபா சிறுவனைப் பார்த்ததும், "**அவன் ஒரு குழந்தை அல்ல, ஆனால் எனது பழைய, பழங்காலத் தோழன்**" என்று குறிப்பிட்டார். பாபா மீண்டும் அர்னவாஸிடம், அவருக்கு ஒரு மகனையும் தருவதாகக் கூறினார். அவரும் நரிமனும் பாபாவின் விருப்பத்திற்கு முற்றிலுமாக சரணடைந்தனர், மேலும் பாபா அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று பலமுறை உறுதியளித்தாலும், தம்பதிகள் குழந்தை இல்லாமல் இருந்து, பாபாவின் சேவையில் தங்களை முழுவதுமாக அர்ப்பணிக்க முடிந்தது.

அப்போது பிற்பகல் சுமார் 3.00 மணி, தரிசனத்திற்கான நேரம். சில மும்பை அன்பர்களுக்கு மட்டுமே தகவல் தெரிவிக்கப்பட்டது, ஆனால் எப்படியோ ஒரு பெரிய கூட்டம் வீட்டு வாயிலில் ஒன்றுதிரண்டது; மும்பை அன்பர்கள் மட்டுமின்றி, ஆந்திரா, ஹமிர்பூர், நாக்பூர், பூனா, நவ்ஸாரி மற்றும் சில இடங்களிலிருந்தும் அன்பர்கள் வருகை தந்தனர். பாபாவின் தரிசனத்திற்காக அனைவரும் குறிப்பாக ஆர்வத்துடன் இருந்தனர், ஏனெனில் அவர் அடுத்த வாரத்திலிருந்து ஒரு வருடம் ஏகாந்தவாசம் மேற்கொள்ள இருந்தார்; எனவே, அதற்கு முன்னர் அவரைப் பார்ப்பதற்கான கடைசி வாய்ப்பு என அன்பர்கள் கருதினர்.

மதியம் 3:00 மணியளவில், முதல் மாடி குடியிருப்பு வாசல்கள் திறக்கப்பட்டு, மக்கள் ஒவ்வொருவராக அனுமதிக்கப்பட்டனர். பார்சிகள், ஈரானியர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர். 'பாபாவின் மேலங்கியைப் பற்றிப் பிடிப்பவர்களிடையே ஜாதி, மத வேறுபாடு எதுவும் இல்லை' என காலம் விவரித்தது. "பாபா, மனித உருவில் கடவுளாக இருப்பதால், எந்த மதம் அல்லது ஜாதி என்ற கேள்விக்கு இடமில்லை. பிரபஞ்சம் அவருக்கு சொந்தமானது, அவர் மட்டுமே எங்கும் நிறைந்தவர். அவருடைய இறையன்பின் அமிர்தத்தைப் பருக

ஏங்குபவர்களுக்கு இடையே எவ்விதமான வேறுபாட்டை நிலைநாட்ட முடியும்? மதம், இனம், குலம் போன்ற எல்லா வேறுபாடுகளும் அவரில் ஒன்றிணைகின்றன."

பாபா தொடர்ந்து தரிசனம் வழங்கினார். இந்த நேரத்தில், அவர் பிரசாதம் வழங்கவில்லை, ஆனால் அவர் அவ்வப்போது சிலரை இதமாகத் தட்டினார், பிறரிடம் நகைச்சுவையாகப் பேசினார் அல்லது அவர்களின் உடல்நலம் பற்றி விசாரித்தார். மும்பை அன்பர்கள் அனைவரும் அவருடைய அன்பில் ஆழமாக உறைந்து, அவருக்குப் பிரியமானவர்களாய் இருந்தனர்.

இரண்டு மணி நேரம் கழித்து பாபா தரிசனத்தை நிறுத்தினார். கிட்டத்தட்ட 700 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் வந்திருந்தனர். கிளாரிஸ், ஈனா இருவரும் பாபாவின் அருகில் அமர்ந்து அவருடைய அன்பில் மூழ்கினர். மாலை 5:00 மணிக்கு, பாபா கூறினார், "**மும்பை அன்பர்கள் அனைவரும் திரும்பிச் செல்லலாம்**; **வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் தங்கலாம்**."

அதற்கிணங்க, மும்பை அன்பர்கள் வெளியேறவே, பாபா, ஆந்திரா மற்றும் ஹமிர்பூர் அன்பர்களிடம் கூறினார்: "**தவறாமல், நீங்கள் அனைவரும் இன்று உங்கள் இல்லங்களுக்குத் திரும்பியாக வேண்டும்**!"

மேலும் சில நிமிடங்கள் உரையாடல் தொடர்ந்தது, பிறகு பூனா அன்பர்களின் முறை. மதுசூதனன் முதலில் பாடல்களைப் பாடினார்; பாபா பூனா குழுவிடம் வலியுறுத்திக் கூறினார், "**பிப்ரவரி 15 முதல், ஒரு வருடத்திற்கு நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன். இந்த நேரத்தில், உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிக்காக எந்த சிரமத்தையும் பொருட்படுத்தாதீர்கள் என்று நான் உங்கள் அனைவருக்கும் கூற விரும்புகிறேன்**."

மதுசூதனனிடம் பாபா இவ்வாறு கூறினார்: "**என்னைப் போற்றி, புகழ்ந்து பஜனைகள், ஆரத்திகள் மற்றும் பாடல்களை நீங்கள் இயற்றியுள்ளீர்கள்; உங்கள் பாடல்களைக் கேட்டு, பாடும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் தொலைதூரத்தில் உள்ளனர். இவை, என்னை மேலும் மேலும் நேசிக்க அவர்களுக்கு உதவியாக இருந்தன. எனவே, பூனா எனது பிறப்பிடமாக இருப்பதால், எப்போதும் போல சுறுசுறுப்பாகவும், பூனாவில் எனது பணியை அன்பு, ஆர்வம், வைராக்கியம் மற்றும் பக்தியுடனும் தொடர்ந்து செய்யுங்கள்**."

பாபா அனைவரையும் அரவணைத்து, உடனே தத்தமது இல்லங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். காடேக்கர் அழத் தொடங்கினார், பாபா அன்புடன் அவரிடம் விடைபெற்றார். ஈனா, கிளாரிஸ் இருவரையும் பாபா தழுவி, மறுநாள் காலை அவர்களை அழைப்பதாகக் கூறினார்.

அறையை விட்டு வெளியே வந்த கிளாரிஸ் மண்டலியிடம், "பாபாவின் சைகைகளால் வெளிப்படும் பேச்சுத்திறனுக்கு நிகராக நான் எதையும் பார்த்ததில்லை. அவரை நான் பார்த்து உணர்ந்தது போல, பாலே, தியேட்டர், இசை அல்லது ஓவியம் என்னை இந்த அளவுக்கு ஆழமாகத் தொட்டதில்லை. நான் ஒருபோதும், இன்று வரை, 'நீங்கள் சொல்வதை நான் எந்தக் கேள்விக்கும் இடமின்றி செய்வேன்' என்று கூற முடிகிற அளவுக்கு, நான் எவரையும் சந்தித்ததில்லை.

ஈனா லெமன், பாபாவுடனான தனது சந்திப்பை சுருக்கமாகக் கூறினார்: "இது எனது வாழ்க்கையின் மிகப்பெரிய அனுபவம். நான் முழுமையாகத் திருப்தி அடைகிறேன், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."

'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா'வின் (ILLUSTRATED WEEKLY OF INDIA) ஆசிரியர், சி.ஆர். மேண்டி (C.R. MANDY) என்ற ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர் வந்ததும், ஐரீன் கோனிபியர் அவரை பாபாவிடம் அறிமுகப்படுத்தினார். பாபாவை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்த மேண்டி, பூனா தரிசனத்தின் சில புகைப்படங்கள் தன்னிடம் இருப்பதாகவும் (தாது எடுத்தது) நிகழ்ச்சியைப் பற்றிய கட்டுரை ஏதேனும் இருந்தால் அதை, புகைப்படங்களுடன் வெளியிடுவதாகவும் கூறினார். தேஷ்முக் அடுத்த நாள் ஒரு சுருக்கமான கட்டுரையை அனுப்ப முன்வந்தார்.

இரவு 7:00 மணிக்கு, பாபாவும் மண்டலியும் உணவு உண்ட பின்பு, தாதரில் தாதாசாஞ்சியின் குடும்ப வீட்டில் இரவைக் கழிக்க அர்னவாஸும் கேட்டியும் புறப்பட்டனர்.

அன்று காலையில், தேஷ்முக், "எனக்கு இறை ஞானத்தை வழங்குங்கள், பாபா!" என்று கேட்டதற்கு பாபா, "**செய்வேன்**!" என்றார்.

அவர்கள் இரவு உணவு உண்ணும் வேளையில், தேஷ்முக் மற்றும் அர்னாவாஸின் தந்தை நௌரோஜி, கடுமையான சைவ உணவு உண்ணும் பழக்கத்தைக் கொண்ட இருவருக்கும் பாபா, ஒரு துண்டு மீன் பரிமாறினார். அதை பாபாவின் பிரசாதமாக எடுத்துக் கொண்டாலும், அதற்கு முழு நியாயம் செய்தனர். பின்னர் அவர்கள் எதிர்காலத்தில் அசைவ உணவைத் தொடுவதை பாபா தடைசெய்தார்; மேலும் தேஷ்முக்கிடம், "**எனக்குக் கீழ்ப்படிவதே மிகச்சிறந்த அறிவாற்றல், நான் உங்களை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்**" என்று கூறினார்.

அடுத்த நாள் காலை, 1956, பிப்ரவரி 7 செவ்வாய்க் கிழமை, பாபா இரண்டு ஆஸ்திரேலியப் பெண்மணிகளையும் ஆஷியானாவிற்கு அழைத்து, அவர்களிடம் கூறினார்:

**எந்த சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருங்கள், எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டாம். முழு உலகமும் அதிர்ந்தாலும், அதனுடன் நீங்கள் பாறை போல் அசையாமல் இருங்கள்! குறிப்பாக, எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நீங்கள் எதையேனும் மாற்ற விரும்பினால், அதைச் செயல்களுடன் தொடங்குங்கள். ஏன்? ஏனெனில் எண்ணங்கள் ஆழ் மன உலகைச் சார்ந்தவை, நீங்கள் ஆழ் மன தளத்தில் நிலைகொண்டாலொழிய அவற்றின் மீது உங்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்க முடியாது. ஆனால் உங்கள் செயல்களை நீங்கள் கட்டுப்படுத்தலாம்.**

**உதாரணமாக** (கிளாரிஸ்), **நீங்கள் திருமணமானவர், வேறொரு நபரை நேசிக்கலாம். சரி, அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், ஆனால் உங்கள் காதற்செயலை கணவருடன் தவிர வேறு எவருடனும் வெளிப்படுத்த வேண்டாம்.**

**இரண்டாவது விஷயம், இது மிக முக்கியமானது. உள்ளொன்று வைத்து புறம் ஒன்று கூறுவது. உதாரணமாக, நீங்கள் திரும்பிச் செல்லும் வேளையில், எவரேனும் உங்களிடம் பாபாவைப் பற்றி கேட்டால், நான் அவதார புருஷர் என்று நீங்கள் நினைத்தால், அதைச் சொல்லுங்கள்; நீங்கள் அவ்வாறு நினைக்கவில்லை என்றால், அதையே சொல்லுங்கள். நீங்கள், உங்கள் நிலைப்பாட்டில் மாறுபட்டால் - 'ஒருவேளை இருக்கலாம்' என்று நினைத்து, பின்னர் 'எனக்கு உறுதியாக தெரியவில்லை' என்றும், 'ஒரு நாள் நான் அப்படி நினைக்கிறேன், வேறொரு ஒரு நாள் நான் இல்லை என்று நினைக்கிறேன்' - அப்படியானால் அதையே சொல்லுங்கள். ஒன்றை விட மற்றொன்றை நினைப்பது சிறந்தது அல்ல. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதிலும் வெளிப்படுத்துவதிலும் முக்கியத்துவம் உள்ளது. மேலும் இந்த கொள்கையை எல்லாவற்றிற்கும் பயன்படுத்தவும். வெறுமனே இல்லாததை இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டாம்.**

இந்தியாவிற்கு வரும் வழியில், கிளாரிஸ் மனதில், பாபா அவரது அன்பர்களிடம் 'நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?' என்று கேட்கும் தவிர்க்க முடியாத கேள்வியைப் பற்றிய சிந்தனை அலைமோதியது. அவர் நினைத்தார்: 'பாபா கட்டளையிட்டால் நான் விமானத்தின் ஜன்னலுக்கு வெளியே குதிப்பேனா? நான் ஊரைச் சுற்றி நிர்வாணமாக நடப்பேனா?' ஹாஃபீஸின் ஈரடி கவிதைகள் அடங்கிய புத்தகத்தை அவர் கையில் எடுத்துக்கொண்டு இந்த எடுத்துக்காட்டுகளுக்காகப் புத்தகத்தைத் திறந்தார்:

**வரம்பற்ற அன்பின் பெருங்கடலின் இரகசிய**
**மறைபொருளை அறிவதில் என்ன சாதகம்?**
**துறந்திடு, வாழ்வெனும் மாயையையும் அதன் ஆதாரத்தையும்!**

பின்னர் அவர் ஹாஃபீஸின் மற்றுமோர் ஈரடி கவிதையைப் படித்தார்:

**நீ உன் இதயத்தை இறை அன்பருக்கு வழங்கும் போது,**
**அந்தத் தருணத்தை அதிர்ஷ்டமாக மாற்றுகிறாய்!**
**நற்செயல்களைப் புரிவதற்கு நல்ல நேரமும்**
**சகுனங்களும் தேவையில்லை என்பதை அறிவாய்!**

அப்போது அவர் நினைத்தார்: "ஆம், நிச்சயமாக நான் பாபாவிற்குக் கீழ்ப்படிவேன்."

இப்போது, ஆஷியானாவில், பாபாவின் கேள்வி எழுந்தது: "**நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?**" என்று பாபா கேட்டார்.

"ஆம்," கிளாரிஸ் கூறினார்.

"**நீங்கள் மெல்போர்னுக்குத் திரும்பிச் சென்று உங்கள் மூன்று குழந்தைகளைக் கொல்வீர்களா?**"

கிளாரிஸ் அழ ஆரம்பித்தார். அவரிடம் கைக்குட்டை இல்லாததால் அவர் கைச்சட்டையில் கண்களைத் துடைத்தார். சிறிது நேரத்தில், 'நான் ஒரு குழந்தையைக் கையில் ஏந்தி தாலாட்டுவது போல, பாபாவிடமிருந்து ஓர் அழகான, ஆறுதலை உணர்ந்தேன்' என்றார்.

பாபா உடனே, "**அவ்வாறு செய்யும்படி நான் உங்களைக் கேட்டிருக்க மாட்டேன். உங்களால் எனக்குக் கீழ்ப்படிய முடியாது என்பதை நான் உங்களுக்குக் காட்ட வேண்டும்**" என்றார்.

பாபா தொடர்ந்து கூறினார், "**நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ, மேலும் அவர் கூறுவதைக் கடைப்பிடிக்க முழு விருப்பத்துடன் இருந்தால் ஒழிய, பாபாவைப் பின்பற்ற முயற்சிப்பதில் எந்த பயனும் இல்லை. நீங்கள் பின்பற்ற விரும்பாவிட்டாலும் பரவாயில்லை - சாதாரண வாழ்க்கை வாழ்வதே சிறந்தது; பாபாவைப் பின்பற்றுவதை மறந்துவிடுங்கள்; பிறரிடமும், அன்றாட வாழ்விலும் கடவுளைக் காண வேண்டும், ஆனால் பாபாவை நேசிப்பதும், அவருக்கு சேவை செய்வதும் உங்கள் உண்மையான விருப்பமாக இருந்தால், அதை எப்படிச் செய்வீர்கள்? அதைச் செய்வது மிகவும் கடினம், விளக்குவது கடினம். எனது மனைவியை நான் எப்படி நேசிப்பேன் என்று என்னால் கேட்க முடியாது. நான் நேசிக்கிறேன் அல்லது நேசிக்கவில்லை. உங்களால் அந்த சத்தத்தைக் கேட்க முடிகிறதா** (வெளியே ஒன்றை பலமாக ஓங்கி அடித்த ஒலி)?

ஆம் என்றனர். "**சரி, நீங்கள் என்னை நேசித்திருந்தால், நீங்கள் என்னுடன் இருக்கும்போது அதை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள்!**" பாபா இவ்வாறு கூறி முடித்தார்.

பிற அன்பர்கள் வரவழைக்கப்பட்டனர், மேலும் பாபாவை எப்படி நேசிக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்டு, விளக்குமாறு கூறினார். ஒருவர், "ஆழந்த பக்தி மூலமாக" என்றார்.

பாபா, "**அது நல்லது, ஆனால் உங்களால் அதைச் செய்ய முடியாது**" என்றார்.

"பாபாவை இடைவிடாமல் நினைத்துக் கொண்டே இருப்பதன் மூலம்" என்று வேறொருவர் பரிந்துரைத்தார்.

பாபா மிகையாகப் புன்னகைத்து, சரியாக சொன்னீர்கள் என சைகையால் (கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டி விரல் இரண்டையும் தொட்ட வண்ணம்) தெரிவித்தார், ஆனால் அவர் சற்று முன்னோக்கி சாய்ந்து, கிட்டத்தட்ட மகிழ்ச்சி பொங்க "**ஆனால் நீங்கள் செய்கிறீர்களா?**" என வினவினார்.

பிற அன்பர்களும் அதை விளக்க முற்பட்டனர், ஆனால் பாபா கூறினார், "**இறை அன்பு ஒன்றுதான் உண்மையான அன்பு, ஆனால் உங்களால் அதைச் செய்ய முடியாது, ஆதலால் தொடர்ந்து என்னை நினைவில் கொள்வதே அடுத்த சிறந்த வழி. அதுவும் உங்களால் முடியாது. நீங்கள் இயல்பாக எனது பெயரை, பணிபுரியும் போதும், அமைதியாக அமர்ந்திருக்கும் போதும் உங்களால் முடிந்தவரை தன்னிச்சையாக மொழிந்தால் - அது நல்லது; ஆனால் ஒருவேளை உங்களால் அதையும் செய்ய முடியாது, எனவே இதைச் செய்யுங்கள்: ஒவ்வொரு நாளும் குறைந்தது அரை மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் வரை பாபாவின் பெயரை உரக்க மொழியுங்கள். இப்போது, அதில் அன்பு இருக்காது - திரும்பத் திரும்ப தன்னிச்சையாக மொழிவதில் எந்த மதிப்பும் இல்லை - ஆனால் நான் கூறிய இந்த விஷயத்தில், இது அன்பைக் கொண்டுவருவதோடு, அது** (என்னுடனான) **இணைப்பை ஏற்படுத்தும், ஏனெனில் நான் அதைச் செய்யச் சொல்கிறேன்.**

"**ஆனால் நீங்கள் அதைச் செய்யவும் விரும்பவில்லை என்றால், செய்யாதீர்கள். பரவாயில்லை. நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள் ஆனால் நான் எல்லோரிடமும், ஒவ்வோர் ஆண், பெண் மற்றும் குழந்தையிலும் இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ள முயற்சி செய்யுங்கள். மகிழ்ச்சியாக, இயல்பாக வாழுங்கள், ஆனால் உங்களால் முடிந்தவரை, பிறரில், எனக்கு சேவை செய்யுங்கள்.**"

பாபா, ஈனா லெமனின் பக்கம் திரும்பி, "**உங்கள் தந்தையை நீங்கள் நன்றாக கவனித்துக் கொண்டீர்கள்; உங்களைப் பற்றி நீங்கள் நினைத்ததை விட, அவரைப் பற்றி அதிகம் நினைத்தீர்கள். நான் இப்போது உங்களின் தந்தை. எனவே திரும்பிச் சென்று எனது பணியைச் செய்யுங்கள்**" என்று கூறியபோது அவர் அழத் தொடங்கினார்.

"எனக்கு வேறு ஏதேனும் அறிவுறுத்தல்கள் உள்ளனவா?" என்று ஈனா கேட்டார்.

"**நீங்கள் புரியும் பணியில் ஃபிரான்சிஸுக்கு உதவியாக இருந்தால், அது அற்புதமாக இருக்கும்.**"

இரண்டு பெண்மணிகளிடமும், **"ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிச் சென்று, என் அன்பர்களுக்கு என் அன்பை வழங்குங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன், நானும் உங்களுடன் வருகிறேன்"** என்று கூறினார்.

ஒரு கட்டத்தில், பாபா, கிளாரிஸிடம், **"உங்களால் இந்த அளவுக்கு பணம் செலவு செய்து வர முடிந்ததா?"** என வினவினார்.

அதற்கு கிளாரிஸ், "ஆம் பாபா, நான் பணிபுரிகிறேன்" என்று கூறிவிட்டு, அவர் பயன்படுத்திக் கொண்ட 'இப்போது பறந்து, பயணம் செய்து - பிறகு பணம் செலுத்தும்' திட்டத்தைப் பற்றி அவரிடம் விளக்கினார்.

**"ஆனால் ஏன் வந்தீர்கள்?"** பாபா கோரினார். **"நான் ஆஸ்திரேலியாவிலும் இருக்கிறேன், ஒவ்வோர் ஆண், பெண் மற்றும் குழந்தையிலும் இருக்கிறேன்."**

"நான் வர விரும்பினேன்," என்று பதிலளித்தார்.

**"நீங்கள் வர வேண்டும் என்று நான் விரும்பினேன்,"** என்று பாபா அவரிடம் கூறினார், **"அனைவரிடமும் என் அன்பை எடுத்துச் செல்ல நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். நான் 'அனைவரிடமும்' என்று கூறுவதன் அர்த்தம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?"**

மெல்போர்ன் குழுவிற்குள் பிளவுகள் உருவாகின; இதை பாபா கூறியதும், கிளாரிஸ், பாபாவால் இதுபோன்ற சண்டை சச்சரவுகள் மற்றும் தனித்தனி கட்சிகளின் பிரிவுகள் குறித்து கவலைப்படாமல் இருக்க முடியாது என்பதை உடனடியாக அறிந்தார். அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது என்பதை உணர்ந்தார். **"என் அன்பை அனைவரிடமும் எடுத்துச் செல்லுங்கள்"** என்று மீண்டும் கூறியபோது, பாபா இதை வலியுறுத்தினார். (கிளாரிஸ் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிய நேரத்தில், இரு குழுக்களும் அவரது இல்லத்திற்கு வந்திருந்தனர், மேலும் சிறப்பான ஒரு நல்லிணக்கம் ஏற்பட்டது.)

கிளாரிஸ், ஈனா இருவரையும் பாபா தழுவி, அவர்களை மகிழ்ச்சியாக இருக்குமாறு வலியுறுத்தி கூறினார். மெஹர்ஜி அவர்களை ஹோட்டலுக்குத் திரும்ப அழைத்துச் சென்றார். பின்பு, பாபா, அவர்கள் காரில் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைப் பற்றி அவரிடம் கேட்டார், அவர்கள் பாபாவை விரும்புகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புவது போலவும், அவர்களின் வருகையால் நன்றாக உணர்ந்தார்களா, திருப்தி அடைந்தார்களா என்றும் வினவினார். அவர் மெஹர்ஜியிடம், **"இருவரும் இங்கே இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், அதனால்தான் அவர்கள் வந்தார்கள். இருவரையும் நான் மிகவும் நேசிக்கிறேன்"** என்று கூறினார்.

கிளாரிஸ் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பியதும், பாபாவின் சார்பாக குழுவின் உறுப்பினர்களைத் தழுவியபோது, அவரது உள்ளளவிலான

ஸ்பரிசத்தை பலர் உணர்ந்தனர். ஆஸ்வால்ட் ஹால் (OSWALD HALL) போன்ற சிலர், பாபா யார் என்பதை முதன்முறையாக உணர்ந்ததாகக் கூறினர்.

பாபாவும் மண்டலியும் மதிய உணவு உண்ட பின்னர் அன்றே சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றனர். நௌரோஜி தாதாசாஞ்சியையும் அவரது குடும்பத்தினரையும் பார்க்க தாதரில் சிறிது நேரம் நின்றனர். பூனாவில், சத்தாராவிற்குச் செல்வதற்கு முன்பு, ஜெஸவாலா மற்றும் கேரவாலா குடும்பங்களை சந்திப்பதற்காக பாபா சிறிது நேரம் பிந்த்ரா ஹவுஸில் தங்கினார்.

கிளாரிஸ் ஆடம்ஸ் விமானத்தில் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிச் சென்ற வேளையில், ஈனா லெமன் கப்பலில் வந்தவர் விமானத்தில் திரும்ப விரும்பியதால், சுமார் இரண்டு வாரங்கள் மும்பையில் தங்க வேண்டியதாயிற்று. மும்பையில் இருந்தபோதுதான் மெஹர்ஜி, பாபா அமெரிக்காவிலிருந்து பஸிபிக் சமுத்திரம் (PACIFIC OCEAN) வழியாக இந்தியா திரும்பப் போகிறார் என்று குறிப்பிட்டார். 'அது ஆஸ்திரேலியாவின் திசையில் வருகிறது,' என்று ஈனா நினைத்தார்.

மெஹர்ஜி, ஈனாவிடம், "நீங்கள் ஏன் பாபாவை ஆஸ்திரேலியாவிற்கு அழைக்கக்கூடாது? அவரை அழைக்கவும்! அவரை அழைக்கவும்!" என்று வற்புறுத்தியதைத் தொடர்ந்து, ஈனா இந்த சிந்தனையில், மிகுந்த ஆர்வத்துடன் மும்பையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆஸ்திரேலியாவில் வாழும் பிற அன்பர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்க அவரால் பொறுமை காக்க முடியவில்லை.

மும்பையிலிருந்து திரும்பிய பின்பு, கிஷன் ஸிங் டெஹ்ரா டூனுக்கு அனுப்பப்பட்டார். தரிசன நிகழ்ச்சிகள் அனைத்தும் இப்போது நிறைவுக்கு வந்தன; ஆனால் சத்தாராவில் பாபா பிப்ரவரி 10ஆம் தேதி வரை, ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் அக்கம் பக்கத்து கிராம மக்களுக்கு தரிசனம் வழங்கி, பின்னர் அதை நிறுத்தினார்.

ருவானோ போகிஸ்லாவ் (RUANO BOGISLAV), நியூயார்க் நகரில் 1956 பிப்ரவரி 8ஆம் நாள் அதிகாலை 1:00 மணிக்கு, தனது 80ஆவது வயதில், மாரடைப்பால் காலமானார். ருவானோ 1933ஆம் ஆண்டு, பாரிஸில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார், மேலும் அவர் இந்தியாவில் நிறுவப்பட்ட நாசிக் ஆசிரமத்தில் பல மாதங்கள் வாழ்ந்தார். அவர் ஒருமுறை பாபாவிடம், "பாபா, உங்களைப் பார்க்கும்போது, எனது முதுகில் சிறகுகள் துளிர்ப்பது போலவும், கழுகைப் போல் உயரத்தில் பறக்கலாம் எனவும் உணர்கிறேன்!" மேலும் ருவானோ தனது 'இறக்கைகள்' படபடக்கும் நடைமுறை காட்சிகளை பாபா முன்னிலையில் வெளிப்படுத்தினார்.

பாபா அதைக் கண்ட மகிழ்ச்சியில் அவரை '**எனது கழுகு**' (MY EAGLE) என்று குறிப்பிட்டு வந்தார். ஃபிரெட் வின்டர்ஃபெல்ட் (FRED WINTERFELDT), பாபாவிற்கு இந்தத் தொலைதந்தியை அனுப்பினார்: "உங்கள் கழுகு பறந்து உங்களிடம் வந்தது."

பாபா அதற்கு பதில் அனுப்பினார்: "**எனது கழுகு உயிரைத் துறக்கவில்லை**, **ஆனால் எனது சாம்ராஜ்யத்தில் எப்பொழுதும் உலாவி வருகிறது**."

சத்தாராவில் ருவானோவின் மரணம் பற்றிய செய்தி கிடைக்கப்பெற்றதும், பாபா கூறினார், "**மேலும் மூன்று பேர் விரைவில் என்னிடம் வருவார்கள்**."

"கிழக்கிலிருந்தா அல்லது மேற்கிலிருந்தா?" என்று மணி வினவிய போது, பாபா "**இரண்டிலிருந்தும்**" என்றார்.

சில வாரங்களுக்குப் பிறகு, பிப்ரவரி 25 அன்று, நியூயார்க் நகரில் வாழ்ந்த மற்றுமொரு நீண்டகால அன்பரும், பாபாவின் ஆதரவாளருமான மார்கரெட் ஸ்காட் (MARGARET SCOTT), அவரது குடியிருப்பின் ஜன்னலிலிருந்து விழுந்து உயிரிழந்தார்.



மெஹர் பாபா மண்டலியுடன், சத்தாரா (MEHER BABA WITH MANDALI, SATARA) **1955 - 56**
காக்கா பாரியா (KAKA BARIA), சி.டி. தேஷ்முக் (C.D. DESHMUKH), எரச் ஜெஸவாலா (ERUCH JESSAWALA), வீர் ஸிங் (பாவ்) கல்சூரி (VEER SINGH - BHAU - KALCHURI) & குஸ்தாஜி ஹன்ஸோட்டியா (GUSTADJI HANSOTIA)



மெஹர் பாபா & மெஹரா, சத்தாரா, **1956**
(MEHER BABA & MEHERA, SATARA. 1956)

# சத்தாரா ஏகாந்தவாசம்

(**Seclusion In Satara**)

சத்தாராவில் பாபாவின் ஏகாந்தவாசத்திற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்தன; பாபா, மண்டலிக்கு வெவ்வேறு கடமைகளை வழங்கினார். வெங்கோபா ராவை (VENKOBA RAO) சத்தாராவிற்கு அழைத்து, அவர் ஒரு வருடம் அங்குத் தங்க வேண்டும் என அவரிடம் கூறியபோது, அவர் உடனடியாக ஒப்புக்கொண்டார். ஸவக் கொத்வால், பைதூல், வெங்கோபா ராவ் மூவரும் இரவு கண்காணிப்பாளர்களாக இருந்தனர்; விஷ்ணு பஜார் சென்று வேண்டியவற்றை கொள்முதல் செய்த வேளையில், எரச், பாவ் கல்சூரி இருவரும் பாபாவின் தனிப்பட்ட பணிகளை கவனித்து வந்தனர். மேலும், பாவ், இஸ்மாயிலுக்கு அவனது பாடங்களைக் கற்பிக்க வேண்டியிருந்தது, அஞ்சல் மற்றும் தொலைத்தந்திகளை அனுப்ப, எடுத்து வர தபால் நிலையத்திற்குச் செல்லவும், தேவைப்படும் வேளையில் இரவுக் கண்காணிப்பில் பங்கெடுக்கவும் வேண்டும். வெங்கோபா ராவ் ஒரு மாதத்திற்குப் பின்னர் அவரது இல்லத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார், அவர் சென்ற பின்பு, ஸவக் அதிகாலை 2:00 மணி வரை இரவுக் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டார். தொடர்ந்து, ஒருவருக்குப் பின்னர் ஒருவராக பெண்டு, நீலு, பைதூல் ஆகியோர் அந்தக் கடமையைப் பகிர்ந்து கொண்டனர்.

பிப்ரவரி 13 அன்று, ஆதி சீனியரை மீண்டும் அழைத்து, நிதிக் கணக்குகள் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கான பயணம் குறித்த சில அறிவுறுத்தல்களை வழங்கினார். அந்த ஆண்டு பாபாவின் பிறந்தநாள் இரண்டு நாட்களுக்கு முன்பு பிப்ரவரி 11 அன்று கொண்டாடப்பட்டது. '**எதிர்காலத்தில் அவரது அன்பர்கள் குழப்பமடையக்கூடாது என்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 25ஆம் தேதி அவருடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும், ஸொராஸ்ட்ரிய நாட்காட்டியின்படி அனுஷ்டிக்க வேண்டாம்**' என்று ஆதியிடம் பாபா கூறினார்.

ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னதாக உலகம் முழுவதும் வாழும் அன்பர்கள், ஒரு வருடத்திற்கு மெஹர் பாபாவை பார்க்கவோ அவருக்கு எழுதவோ கூடாது என்றும், பிப்ரவரி 14 நள்ளிரவிலிருந்து 15ஆம் தேதி நள்ளிரவு வரை, 24 மணிநேரம் உபவாசம் மேற்கொள்ளும் காலகட்டத்தில், ஒரு முறை இரண்டு கப் தேநீர் அல்லது கா஁பி மட்டும் அருந்த வேண்டும் என்றும் தேவையான அளவு நீர் அருந்தவும் அனுமதிக்கப்பட்டது; ஆனால், அதைத் தவிர, வேறு எதுவும் அனுமதிக்கப்படவில்லை. இந்த அறிவிப்பு, சுற்றறிக்கை மூலம் (1956 பிப்ரவரி 1ஆம் தேதி) தெரிவிக்கப்பட்டது.

1956 பிப்ரவரி 14 செவ்வாய் அன்று, பாபாவின் பொருட்கள் அனைத்தும் கிரா஁ப்டனிலிருந்து ஜால் வில்லாவிற்கு கொண்டு வரப்பட்டது, பாபா அவரது

ஏகாந்தவாசத்தைத் தொடங்க மாலையில் ஜால் வில்லாவிற்குச் சென்றார். கைக்கோபாத், நீலு இருவரும் பாபாவுடன் ஜால் பங்களாவில் இருந்தனர், இதர மண்டலி அனைவரும் ரோஸ்வுட்டில் தங்கினர். நள்ளிரவில், பாபா அவர்களிடம் பிரார்த்தனைகளை மொழியுமாறு கூறி, உபவாசத்தைத் தொடங்கியது போல, கைக்கோபாத், நீலு இருவரும் அவர்களது உபவாசத்தைத் தொடங்கினர். ஆனால் இரண்டு மண்டலியும் 24 மணி நேரம் மட்டுமே உபவாசம் கடைப்பிடித்தனர், அதே வேளையில் பாபா தமது உபவாசத்தை ஐந்து நாட்கள் தொடர்ந்தார்.

1955இல் மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிகளின் போது, ஒவ்வொரு மொழிக் குழுவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர்கள், பிப்ரவரி 15 முதல் ஏழு நாட்கள் உபவாசம் மேற்கொண்டனர். உபவாசம் பின்னர் ஐந்து நாட்களுக்கு குறைக்கப்பட்டது, எனவே பாபா அவர்களுடன் அதே காலகட்டத்திற்கு உபவாசம் மேற்கொண்டார். இந்த 20 நபர்களுக்கும் பாபாவின் பணியில் பங்குகொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதே உண்மை.

பிப்ரவரி 15, 16ஆம் தேதிகளில், பாபா ஒவ்வோர் 24 மணி நேரத்திற்கும் இரண்டு கப் தேநீர் அல்லது கா.ஃபி மட்டுமே அருந்தினார். 17 அன்று இரண்டு கப் பானகமும், 18ஆம் தேதி குழாய் நீர் மட்டும் அருந்தி உபவாசம் கடைப்பிடித்த அவர், குழாய் நீர் கொதித்த பின்பும் குளோரின் (CHLORINE) வாசனை வருவதாகப் புகார் கூறினார்.

இந்த ஏகாந்தவாசத்தில், பாபா, கைக்கோபாத்துடன் ஜால் வில்லாவில் மணிக்கணக்கில் பணிபுரிந்து கொண்டிருந்தார். கைக்கோபாத் கடவுளின் ஏழு நாமங்களைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதும், ஒவ்வொரு முறையும் பாபா அவரை ஏழு முறை வணங்குவதும் தொடர்ந்து நடந்தது. பாபா என்ன பணிபுரிந்தார் என்பது பற்றி கைக்கோபாத் சிறிதும் கூட சிந்திக்கவில்லை. அவரது உலகளாவிய பணியின் முக்கியத்துவத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது.

1956 பிப்ரவரி 19 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, ஜால் வில்லாவை விட்டு வெளியேறி, மீண்டும் கிரா.ஃப்டனில் பெண் மண்டலியுடன் தங்கத் தொடங்கினார். அங்கு அவர் எவரையும் பார்க்கவோ, வீட்டை விட்டு வெளியேயும் செல்லாமல், தொடர்ந்து ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். மறுநாள் உபவாசத்தை நிறுத்திக் கொண்ட அவர், மீண்டும் 22ஆம் தேதி முதல், ஏகாந்தவாச பணிக்காக ஜால் வில்லாவிற்குச் சென்றார். அவர் கைக்கோபாத்துடன் இரண்டு நாட்கள் பணிபுரிந்து, மீண்டும் கிரா.ஃப்டனுக்குத் திரும்பி வந்தார்; அங்கு அவரது 62ஆவது பிறந்தநாள் பிப்ரவரி 25 அன்று பெண் மண்டலியுடன் தனிப்பட்ட முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

பாபா கிரா.ஃப்டனில் தங்கியிருந்த வேளையில், மெஹரா, மெஹரு இருவரும் அவருடைய தனிப்பட்ட பணியை கவனித்துக்கொண்டனர், ஆனால் அவர் பிற பங்களாக்களில் இருந்தபோது, அதை எரச்சும், பாவ் கல்சூரியும்

செய்தனர். ஜால் வில்லாவில் இரண்டு நாட்கள் பணிபுரிந்த பின்பு, பாபா அங்கு நிகழ்த்திய ஏகாந்தவாச பணி நிறைவடைந்துவிட்டதாகக் கூறி, அவர் பங்களாவைத் திரும்பத் தருமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார்; மேலும் அவரது ஏகாந்தவாசப் பணிக்காக முத்தாவின் பங்களாவிற்கு எதிரே அமைந்த ‘கிட்டே’ அல்லது ‘ஜட்ஜ்’ (GITE’S OR JUDGE’S) பங்களா வாடகைக்கு எடுக்கப்பட்டது.

பாவ் கல்சூரி, பாபாவின் பணிகளை கவனிப்பதைத் தவிர, கிருஷ்ணாஜியின் ‘தேவைகளை’யும் கண்காணித்துக் கொண்டிருந்தார்; அவர் பாவ் கல்சூரியை ஒரு சாதாரண ஊழியரைப் போல நடத்தினார். கிருஷ்ணாஜி ஜால் வில்லாவில் ஒரு தனி அறையை ஆக்கிரமித்தார்; பாபா பங்களாவைக் காலி செய்ய உத்தரவிட்டபோது, கிருஷ்ணாஜி அவரது சாமான்களை ரோஸ்வுட் பங்களாவிற்குக் கொண்டு செல்லும்படி பாவ் கல்சூரிக்குக் கட்டளையிட்டார். பாவ், கிருஷ்ணாஜியின் படுக்கையை சுருட்டி, தலையில் சுமந்து, பெட்டியைக் கைகளில் ஏந்திச் சென்றார். ரோஸ்வுட்டிற்கு நடந்து செல்லும் போது, கிருஷ்ணாஜி ஊன்றுகோல் ஒன்றை சுழற்றிய வண்ணம் வழி நடத்திச் சென்றார், பாவ் கல்சூரியும் ஒரு கூலியைப் போல் அவரைப் பின்தொடர்ந்தார்.

நீலு அவர்களைப் பார்த்து பாவ் கல்சூரியிடம் சாமான்கள் யாருடையது என்று கேட்க, அவை கிருஷ்ணாஜியின் பொருட்கள் என்று பாவ் பதிலளித்தார். ஆத்திரமடைந்த நீலு, “நீங்கள் என்ன அவருடைய வேலைக்காரனா?” என வினவினார்.

“இந்த வேலையைச் செய்ய பாபா எனக்குக் கட்டளையிட்டுள்ளார்” என்று பாவ் பதிலளித்தார்.

நீலு மிகவும் வருத்தமுற்று, நேராக கிரா஁ப்டனுக்குச் சென்று, பாபாவிடம் புகார் செய்தார். பாவ் கல்சூரியை வரவழைத்து பாபா, “**கிருஷ்ணாஜியின் சாமான்களை ஏன் தலையில் சுமந்து சென்றீர்கள்?**” என்று கேட்டார்.

அந்தக் கேள்வியால் திடுக்கிட்டுப் போன பாவ், “இது உங்கள் உத்தரவு, பாபா!” என்றார்.

**“ஆமாம், இது என் உத்தரவு, ஆனால் உங்களுக்கு புத்தி இல்லையா? ஒரு மலர், புத்தம் புதியதாக இருக்கும் வரை, அதன் நறுமணத்தை நுகர்ந்து ரசிக்க வேண்டும் - ஆனால் அது காய்ந்ததும், வீசி எறியப்படும்! நான் கிருஷ்ணாஜிக்கு ஒரு புத்தம் புது மலராக இருக்கும் வாய்ப்பை வழங்கினேன்; ஆனால் அவரால் முடியவில்லை, இப்போது அவர் வாடி வதங்கி விட்டார், எனவே அவரை வெளியே எறிந்துவிடுங்கள்! நான் அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தருகிறேன், மேலும் அவர் என் அன்பால் பயனடைந்தால், அதிர்ஷ்டசாலி என்பேன்.”**

மிகவும் நிம்மதியடைந்த பாவ், ரோஸ்வுட்டிற்குத் திரும்பி வந்த சில நிமிடங்களில் கிருஷ்ணாஜி, அவரது படுக்கையை ஏன் இதுவரை

அவிழ்க்கவில்லை என்று எச்சரிக்கை கலந்த தொனியில் கேட்கத் தொடங்கியதும், "நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்! உங்களை கவனிக்க எனக்கு நேரமில்லை" என பாவ் பதிலளித்தார்.

கிருஷ்ணாஜி இதை பாபாவிடம் தெரிவித்ததும், அவர் விளக்கினார், **"பாவிற்கு நேரம் எங்கே? அவர் அதிகாலையிலிருந்து இரவு வரை பணிபுரிகிறார், அவர் மீது கருணை காட்டுங்கள்.**" கிருஷ்ணாஜி அமைதியாக இருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா, கிருஷ்ணாஜியிடம் முடி திருத்தி சவரம் செய்யவும், உத்தரவிட்டார், அவரே அதைச் செய்ய வேண்டியதாயிற்று.

சத்தாராவில், பாபா, பாவ் கல்சூரியிடம் ஃபு மேஞ்சு (FU MANCHU) என்ற சீன பாணி மீசையை வளர்க்குமாறு அறிவுறுத்திய போது, அதை அவர் செய்தார். பலமுறை, அவர் தபால் நிலையத்திற்குச் சென்ற வேளையில், மக்கள் அவரைப் பார்த்து சிரித்தனர். ஒருமுறை ஒருவர் பாவிடம் கேட்டார், "ஏன் இந்த வகை மீசையை வளர்க்கிறீர்கள்? அது அசிங்கமாகத் தெரிகிறது."

பாவ் பதிலளித்தார், "நான் சீனாவிற்குச் செல்கிறேன், நான் அவர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அவர்களின் வழிகளையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்ற முயற்சிக்கிறேன்."

"ஆனால் நீங்கள் சீனராகத் தெரியவில்லையே!" அந்த நபர் வாதாடினார், "அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

பாவ், "சரி, என்னுடைய அம்சங்கள் சீன மக்களைப் போல் இல்லாவிடிலும், குறைந்தபட்சம் எனது மீசையாவது இருக்கும்!"

சிறுவன் இஸ்மாயில் குறித்து பாபா, '**அவன் அதி புத்திசாலி என்றும், பள்ளியில் படிப்பது போலவே படிக்க வேண்டும்**' என்றும் கூறியிருந்தார். சத்தாராவில் இந்தக் காலகட்டத்தில், நடைமுறையில் தினமும் இஸ்மாயில் பற்றிய விவாதம் நடந்தது. பாபா, அந்த சிறுவனுக்குப் பாடம் கற்பிக்கக் கட்டளையிட்டார்; ஒரு நாள், பாவ் கல்சூரியை கிராஃப்டனுக்கு அழைத்த பாபா, **"இஸ்மாயில் மிகவும் நல்ல பையன், முழு மனதுடன் அவனுக்குப் பாடம் கற்றுக்கொடுங்கள். அவன் நான்காம் வகுப்பு வரை படித்திருக்கிறான், ஆனால் அவன் ஒரே வருடந்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெறுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்!**" என்றார்.

இது ஒரு வருடத்திற்குள், நான்காம் வகுப்பிலிருந்து உயர்நிலைப் பள்ளி தேர்ச்சி பெறுவதைக் குறிக்கிறது! இயற்கையாகவே, பாவ் கல்சூரிக்கு இது முடியாத காரியமாகத் தோன்றியது, ஆனால் பாபா கூறினார், "**அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நான் உள்ளளவில் உதவுவேன். உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்.**"

பஜாருக்குச் சென்று பாவ், இஸ்மாயிலுக்குப் புத்தகங்களை வாங்கி, கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா, பாவ் கல்சூரியிடம் கூறினார், **“இஸ்மாயிலுக்கு நல்ல ஆடை இல்லை; பஜாருக்குச் சென்று விலையுயர்ந்த ஆடைகளை வாங்குங்கள், அதனால் அவன் மகிழ்ச்சியாக இருந்து, படிப்பில் கவனம் செலுத்துவான். நான் உங்களுக்கு உதவுகிறேன், ஆதலால் நீங்கள் ஒரு வருடத்திற்குள் அவனைத் தயார் நிலைக்கு கொண்டுவந்து, மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சிபெறச் செய்வீர்கள்.”**

பாவ் பஜாரிலிருந்து இஸ்மாயிலுக்கு நேர்த்தியான ஆடைகளை வாங்கி வந்தார், சில நாட்களுக்குப் பிறகு, பாபா, **“இஸ்மாயிலின் பெற்றோர் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆதலால், அவன் வீட்டில் நல்ல உணவை உண்பதில்லை; அவனுக்கு சரியான ஊட்டச்சத்து இல்லாதபோது, அவன் எப்படி அவனது அறிவுத்திறனைப் பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ஒரு வருடத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமெனில், முதலில் அவனுக்கு நல்ல உணவு வழங்குங்கள்”** என்றார்.

“அவனுக்கு நான் எப்படி உணவு ஏற்பாடு செய்வது?” பாவ் கேட்டார்.

**“நான் உங்களுக்கு எவ்வளவு உதவுகிறேன்!”** பாபா கூறினார். **“இதையெல்லாம் நான் செய்யச் சொல்கிறேன், ஏனெனில், ஒரு வருடத்தில் அவன் தேர்ச்சி பெறலாம். அவனது பெற்றோரை அணுகி, அவனுடைய உணவுக்குத் தேவையான பணத்தை ஒவ்வொரு மாதமும் செலுத்துங்கள். பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம், நான் தேவையான அனைத்தையும் தருகிறேன்.”**

இஸ்மாயிலின் பெற்றோரை சந்தித்த பாவ், சிறுவனுக்கு நல்ல உணவு, பால், பழங்கள் மற்றும் இனிப்புகளை வழங்க அவர்களிடம் ஏற்பாடு செய்தார், பாபா மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அவர் மேலும் கட்டளையிட்டார், **“இப்போது ஒன்று செய்யுங்கள். தினமும் காலையில் இஸ்மாயிலின் வீட்டிற்குச் சென்று, அவனை ரோஸ்வுட் பங்களாவிற்கு அழைத்து வாருங்கள்; படிப்பு முடிந்ததும் வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்லுங்கள். அவன் தகாதவர்களுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தால், அவனது படிப்பில் நீங்கள் எடுக்கும் முயற்சி வீணாகிவிடலாம்! அது நடந்தால், நீங்கள் அவனைத் தேர்ச்சி பெறச் செய்ய முடியாது. அதை நினைவில் கொள்ளுங்கள்.”**

தினமும், பாவ், இஸ்மாயிலை அழைத்து வந்து, மாலையில் அவனது வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார். மீண்டும், பல நாட்கள் கடந்த பின்பு, பாபா, **“இஸ்மாயிலை நீங்கள் சரியாக கவனிக்காமல், வெயிலில் எந்த பாதுகாப்புமின்றி அழைத்து வருகிறீர்கள்! அவன் உடல்நிலை**

**பாதிக்கப்பட்டால், அவன் படிப்பு சீரழிந்துவிடும், அப்போது நீங்கள் அவனை ஒரு வருடத்தில் அவனது தேர்வில் தேர்ச்சி பெற உதவ முடியாமலாகிவிடும் - அது நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாத சூழ்நிலையை உருவாக்கும்! வெயிலால் அவன் பாதிக்கப்படாமல் இருக்க, அவனை ரோஸ்வுட்டிற்கு ஒரு குடையின் கீழ் பாதுகாப்பாக அழைத்து வாருங்கள்; நான் உங்களுக்கு என்ன உதவி செய்கிறேன்! எப்போதேனும் நீங்கள் அதை யோசனை செய்து பார்க்கிறீர்களா?"**

எனவே மாட்டுச் சாணம் சேகரிக்கும் ஏழை சிறுவன் மீது, ஏன் இவ்வளவு மதிப்பும் மரியாதையும் பொழியப்படுகிறது என்று அக்கம் பக்கத்தினர் யோசித்துக் கொண்டிருந்தபோது, பாவ், இஸ்மாயிலின் தலை மேல் குடை பிடிக்க வேண்டியதாயிருந்தது! முதலில், இஸ்மாயில் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தான், ஆனால் அதிகமாகச் செல்லம் கொடுக்கக் கொடுக்க, மேலும் அதிகமாக அவன் தனது படிப்பில் கவனக்குறைவாக இருந்தான் - ஆணவத்துடன் பாவ் கல்சூரியைத் தொந்தரவு செய்யத் தொடங்கினான்.

பல நாட்களுக்குப் பிறகு, பாபா, பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தினார், **"தினமும் இஸ்மாயிலை கிரா:ப்டனுக்கு அழைத்து வாருங்கள். அவனது உடல்நிலையை பராமரிக்க அவனுக்கு சில சிற்றுண்டி உணவுகள் தேவை, அதனால் அவன் படிப்பிலும் அதிக கவனம் செலுத்த முடியும்!"** எனவே பாவ், சிறுவனை தலை மேல் குடை பிடித்து கிரா:ப்டனுக்கு அழைத்துச் சென்றார்; அங்கு பாவ் நின்றுகொண்டிருக்க, பாபா அவனை, அவருக்கு முன்னால், சோ:பாவில் அமர வைத்தார்; இதுதான் ஓர் ஆசிரியரின் நிலை. கோஹெர் ஒரு தட்டில் உணவுப் பொருட்களை நிரப்பி, ஒரு டம்ளர் பானகத்தை எடுத்து வந்தார், பாவ் அவற்றை இஸ்மாயிலுக்கு வழங்கவே, சிறுவன் அதை முடித்ததும், பாவ் அந்தத் தட்டு மற்றும் கண்ணாடி டம்ளரைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டியிருந்தது.

இஸ்மாயில் மீதான இந்த அன்பின் இன்பக் குவியல், பாவ் கல்சூரியின் சகிப்புத்தன்மையில் ஓர் அழுத்தத்தை உருவாக்கியது. பாவ் அவருக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்த அறையில் ஒரு படுக்கை இருந்தது, இஸ்மாயில் அதன் மீது சாய்ந்து கொள்வது வழக்கம். பாவ் அவனிடம் படிக்கச் சொல்லும் வேளையில், "ஒரு நிமிடம் பொறுமையாக இருங்கள். நான் சோர்வாக இருக்கிறேன், ஓய்வெடுத்து பின்பு படிக்கிறேன்" என்று பதிலளித்து வந்தான். சில சமயங்களில், தலையணைகளுக்கு எதிராக சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டு, கால்களை நீட்டும்போது, படிப்பில் கவனமாக இருக்குமாறு பாவ் கேட்டுக்கொண்டால், "நீங்கள் வாசியுங்கள், நான் கேட்கிறேன். எனக்குக் கற்பிப்பது உங்கள் கடமை; உங்கள் விரிவுரையை இரண்டு மணி நேரம் தொடரவும்" என்று பதிலளித்தான்.

இவற்றின் விளைவு இறுதியில், இஸ்மாயில் எதையும் கற்றுக்கொள்ளாத சூழ்நிலை. பாவ் கல்சூரி, மணிக்கணக்காக அவனைப் படிக்கக் கூறி வற்புறுத்திய பின்னர், “உங்கள் விரிவுரையை வழங்குவதில் என்ன இருக்கிறது? பாபாவின் கடைக்கண் பார்வை இருந்தால், நான் எல்லாவற்றையும் ஒரு நொடியில் கற்றுக்கொள்வேன்!” என்று கூறினான். பாபா, இஸ்மாயிலைப் புகழ்வதும், பாவ் கல்சூரியை இகழ்வதும் தினமும் நடந்து வந்தது. ஆனால் இஸ்மாயில், பாவ் கல்சூரிக்கு ஒரே ஒரு நல்ல காரியத்தைச் செய்தான். ஒருமுறை அவன் பாபாவிடம் கூறினான், “பாவின் மீசை எனக்குப் பிடிக்கவில்லை. அவர் தினமும் எனது வீட்டிலிருந்து என்னை அழைத்து வரும் வேளையில், மக்கள் அவரைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள்!” எனவே பாபா உடனடியாக பாவ் அவரது சீன மீசையை அகற்றுமாறு கட்டளையிட்டார், அதை நினைத்து பாவ் நிம்மதி அடைந்தார்.

இஸ்மாயிலுடனான ஈடுபாடு பாவ் கல்சூரிக்கு சகிப்புத்தன்மையின் நீண்டதொரு பாடமாக அமைந்தது. அவன், அந்த அளவுக்குக் குறும்புக்காரனாக இல்லாவிடில், பாவ் கல்சூரி அவரது கோபத்தைக் கட்டுப்படுத்தி, அமைதியாக இருக்கக் கற்றுக்கொள்வதற்கு வேறு எப்படி வாய்ப்பு கிடைத்திருக்கும்? பாபா இந்த விஷயங்களை மனதில் கொண்டு அனைத்தையும் ஏற்பாடு செய்தார், மேலும் இஸ்மாயில் தனது பாகத்தை முழுமையாக நிறைவேற்றினான். அவ்வப்போது, பாவ் கல்சூரியை இதுபோன்ற வார்த்தைகளால் இஸ்மாயில் கேலி செய்வது வழக்கம்: ‘நீங்கள் சிறப்பாக எப்படிக் கற்றுத்தருவது என்பதைக் கற்றுக்கொள்வது நல்லது! அதை எப்படிச் செய்வது என்று உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?’

அல்லது, சில சமயங்களில், ‘உங்கள் நாடித்துடிப்பு எனது கைகளில் உள்ளது! நான் பாபாவிடம் குறையாக ஒரே ஒரு வார்த்தையைக் கூறினால், நீங்கள் மிகவும் மோசமான நிலைக்கு ஆளாவீர்கள்!’

இவ்வாறு, சத்தாராவில் தங்கியிருந்தபோது, பாவ் இந்தத் ‘தகுதி வாய்ந்த’ மாணவன் தனது தலையில் திணிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்.

1956 மார்ச் 6, செவ்வாய் அன்று, பாபா அவரது ஏகாந்தவாசப் பணிக்காக ‘ஜட்ஜ்’ பங்களாவிற்கு மாறினார். இந்த பங்களாவும் பழைய அமைப்பாக இருந்தபோதிலும், ஜால் வில்லாவைப் போல் அந்த அளவுக்குப் பாழடைந்த நிலையில் இல்லாமல், அமைதியான இடத்தில் பெரியதாகவும், குளிர்ச்சியாகவும் காணப்பட்டது. பாபா அறிவுறுத்தியபடி, சிது ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த் அலி ஷாவை மெஹராபாத்திலிருந்து சத்தாராவிற்கு, அடுத்த நாள் ரயிலில் அழைத்து வந்தார். குமாரின் தாயார் மாதாஜியும் மார்ச் 8ஆம் தேதி ஹரித்வாரிலிருந்து ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட நீல்கந்த்வாலா மஸ்துடன் வந்தார். டெஹ்ரா

டூனிலிருந்து நீண்ட இரண்டு நாள் ரயில் பயணத்தில் நீல்கந்த்வாலா முற்றிலும் அமைதியாக இருந்தார், ஆனால் அவர் பாபாவைக் கண்ட அந்த கணமே அவர் முன் மண்டியிட்டு நின்று, மன்றாடி, மிகையாக அழுதுகொண்டே, 'முக்தி (விடுதலை)' என்ற ஒரே வார்த்தையை உச்சரித்தார். பாபா அவரது தலையில் கை வைத்தார்.

இரண்டு மஸ்துகளும் 'ஜட்ஜ்' பங்களாவில் தங்கவைக்கப்பட்டனர். கைக்கோபாத்தும் அங்கேயே உடனிருந்தார். பன்னிரண்டு நாட்கள், மார்ச் 9 முதல் 20 வரை, பாபா ஒரு நாளைக்கு இரண்டு முறை அருந்திய இரண்டு கப் பாலில்லா தேநீரில் உபவாசம் மேற்கொண்டார்; மேலும் தினமும் கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் இரண்டு மஸ்துகள் மற்றும் கைக்கோபாத்துடன் பணியாற்றினார். அதே காலகட்டத்தில், ஆண்களும் பெண்களும் மாறி மாறி 24 மணிநேரம் உபவாசம் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர் (பாபா உபவாசத்தைத் தொடர்ந்தார்).

அலி ஷா, பாபாவை 'பெருந்தலைவர்' (BIG BOSS) என்று குறிப்பிடுவது வழக்கம். பாபாவிடமிருந்து பிரிந்திருப்பதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; இரவுகளிலும் படுக்கையிலிருந்து எழுந்து, தனது அன்பான எஜமானரைக் கேட்பதுண்டு. ஒருமுறை மெஹராபாத்தில், அவர் பாபாவின் சித்திரத்தை நோக்கி கைகளை அசைத்து முறையிடுவதை பாதிரி நேரடியாகக் கண்டார்: "பாபா உங்களிடம் எவ்வளவு இருக்கிறது - ஓ எவ்வளவு! ஏன் எனக்கு மேலும் அதிகமாகத் தரக்கூடாது?"

நீல்கந்த்வாலா சில நேரங்களில் மிகவும் சுறுசுறுப்பாகவும், இதர நேரங்களில் முற்றிலும் அசையாமலும் இருப்பதாகத் தோற்றமளித்தார். உதாரணமாக, அவர் அசையாமல், கண்களை மூடிக்கொண்டு படுக்கையில் சாய்ந்து கொள்வதும், பாபா நீராடுவது போன்ற ஏதாவது ஒன்றைச் சொல்லும்போது, நீல்கந்த்வாலா படுக்கையிலிருந்து குதித்து குளியலறைக்குச் செல்வதும், அங்கு பாபா அவரை நீராட்டுவதும் வழக்கம். அது முடிந்ததும், அவர் மீண்டும் படுக்கைக்குச் சென்று, ஒரே நொடியில் அசையாமல் இருப்பதையும், உணவு உண்ணுவது குறித்து ஏதேனும் வினவினால், உடனடியாக அவர் சமையலறைக்கு விரைவதையும் காண முடிந்தது. மஸ்த் பொதுவாக அவருக்கு வழங்கும் எதையும் உண்ண மறுக்கும் நாட்களில் அவரது உணவை அவரே தயார் செய்தார்.

தினமும், எரச், பாவ் இருவரும் ரோஸ்வுட்டிலிருந்து அதிகாலை 5:00 மணிக்கு, பாபாவின் தனிப்பட்ட பணிகளில் கலந்து கொள்ள, 'ஜட்ஜ்' பங்களாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. எனவே, தினமும் காலை 6:30 மணிக்கு ரோஸ்வுட் பங்களாவிலிருந்து எரச், பாவ், கைக்கோபாத், சிது, அலி ஷா, நீல்கந்த்வாலா ஆகியோருக்குத் தேநீர் கொண்டு வருமாறு கிருஷ்ணாஜிக்கு பாபா

கட்டளையிட்டார். அவர் கட்டளையிட்டபடி அதைச் செய்தார், ஆனால் பாவ் கல்சூரியைத் தவிர அனைவருக்கும் தேநீர் கொண்டு வந்தார், அவர் மீது கிருஷ்ணாஜிக்கு கோபம், வெறுப்பு. இந்த விஷயத்தில் பாபா மிகவும் குறிப்பாக இருந்தார். தேநீர் வந்த வேளையில், பாபாவின் அறையை பாவ் கல்சூரி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார், பாபா அவரிடம் தேநீர் அருந்தி வருமாறு கூறவே, பாவ், கிருஷ்ணாஜியிடம் சென்றார், அவர் “நான் உங்களுக்குத் தேநீர் கொண்டு வரவில்லை!” என்றார்.

பாவ் கல்சூரி அமைதியாக பாபாவின் அறையில் தனது வேலையைத் தொடர்ந்த வேளையில் பாபா கேட்டார், “**நீங்கள் தேநீர் அருந்தினீர்களா?**”

“கிருஷ்ணாஜி எனக்காகத் தேநீர் கொண்டு வரவில்லை” என்று பதிலளித்தார்.

பாபா, கிருஷ்ணாஜியிடம் காரணத்தைக் கேட்டபோது, மறுநாளிலிருந்து கொண்டுவருவதாக உறுதியளித்தார். ஆனால் பாபா, “**ஏன் இன்று கொண்டு வரவில்லை?**” என வினவினார்.

“நான் மறந்துவிட்டேன்!” என்று கூறியது நிச்சயமாக ஒரு பொய்.

கீழ்ப்படியாமல் இருந்ததற்காக பாபா அவரை எச்சரித்தார். அடுத்த நாளிலிருந்து, கிருஷ்ணாஜி, பாவ் கல்சூரிக்குத் தேநீர் கொண்டு வரத் தொடங்கினார், ஆனால் அவரால் அந்தக் கடமையை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. இதுவரை, பாவ் அவருடைய சேவகனைப் போலவே இருந்தார்; ஆனால் இப்போது நிலைமை நேர்மாறாகத் திரும்பியது. இது கிருஷ்ணாஜிக்கு அவமானமாக இருந்தது! முதலில், அவர் மதிக்கப்பட்டார்; இப்போது அவருக்கு பொதுவான பணி வழங்கப்பட்டது. அவரது தாடியும் நீண்ட முடியும் கூட மறைந்துவிட்டது, அவருக்கு அதை ஏற்றுக்கொள்ள கடினமாக இருந்தது. வீறாப்பு, அகங்காரம் நிறைந்த எவரும் பாபாவுடன் வாழ முடியாது. அவரிடம் சரணடைந்து சுயத்தை இழந்தவர்களால் மட்டுமே சாத்தியம். கிருஷ்ணாஜிக்கு அது முடியாத காரியம், ஏனெனில் அவரை ஒரு துறவியாகக் காட்டிக் கொள்வதில் வல்லவர். குருவாக நடத்தப்படுவதில் ஆர்வம் மிக்கவர்.

ஒரு நாள் அவர் பாபாவிடம், “நான் சில நாட்களுக்காக இங்கிருந்து செல்ல விரும்புகிறேன்” என்று கூறினார்.

பாபா உடனே, “**சரி, செல்லுங்கள்! இப்போதே செல்லலாம்!**” என்று சைகையால் தெரிவித்தார். ஒரு மணி நேரத்திற்குள் கிருஷ்ணாஜி வெளியேறும்படிச் செய்யப்பட்டார், அதற்குப் பிறகு, பாபா அவரை மீண்டும் மண்டலியுடன் தங்க அனுமதிக்கவில்லை. ஓரிரு முறை அவர் தரிசனத்திற்காக வந்தார், ஆனால் பாபா அவரை தன்னுடனோ அல்லது மண்டலியுடனோ தங்க அனுமதிக்கவில்லை.

பாபா, 1956 மார்ச் 19 வரை 'ஜட்ஜ்' பங்களாவில் அலி ஷா, நீல்கந்த்வாலா ஆகிய இரண்டு மஸ்துகளுடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்து, அன்று மாலை அவர் கிரா்ஃப்டனுக்குத் திரும்பிச் சென்றார். இரண்டு மஸ்துகளும் மறுநாள் அவர்களது இருப்பிடங்களுக்கு - அலி ஷா மெஹராபாத்திற்கும், நீல்கந்த்வாலா ஹரித்வாருக்கும் அனுப்பப்பட்டனர்.

மூன்று நாட்களுக்குப் பின்னர் 23ஆம் தேதி, 'ஜட்ஜ்' பங்களாவிற்கு வெளியே ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. திடீரென, இயற்கையான காரணம் எதுவும் தென்படாத நிலையில், வளாகத்தில் இருந்த மிகப் பெரிய மரம் ஒன்று, நெருப்பில் எரிந்து தரையில் வீழ்ந்தது. பாபா, "**இது குறிப்பிடத்தக்கது; எனது பணியுடன் தொடர்புடையது**" என்று மட்டும் கூறினார்.

தனது ஏகாந்தவாசத்திற்குப் பிறகு தொடர்ந்து மூன்று மாலைகளில், பாபா, ஜிகரின் இந்த வரிகளை பெண்மணிகளுக்கு மேற்கோள் காட்டினார்:

**இந்த அன்பு எளிதானது அல்ல, நன்கு புரிந்து கொள்ளவும்!**
**இது ஒரு நெருப்புக் கடல், அதில் நீங்கள் மூழ்க வேண்டும்!**

1956 மார்ச் 29 வியாழன் காலை 8:00 மணிக்கு எரச், பெண்டு, நீலு ஆகியோருடன் பாபா, மெஹர்ஜியின் காரில் 56 சன்னதிகளையும் 56 ஏழைகளையும் வணங்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றார். சத்தாராவிலிருந்து, முதலில் மெஹராஸாத்தை மதியம் 12 மணிக்கு வந்தடைந்தனர். ஆதி சீனியர் அவர்களின் மதிய உணவை அக்பர் அச்சகத்திலிருந்து கொண்டு வந்த வேளையில், நிதிக் கணக்குகள் மற்றும் 'கடவுள் பேசுகிறார் (GOD SPEAKS) புத்தகத்தின் மீது மக்கள் கவனத்தை வரவழைப்பது குறித்து சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. சகன், பிங்கர் (BHINGAR) கிராமத்திலிருந்து இரவு நேரக் கண்காணிப்புப் பணிக்காக அழைக்கப்பட்டார்.

பாபா இரவு மெஹராஸாத்தில் ஓய்வெடுத்து, நான்கு மண்டலியுடன் 30ஆம் தேதி காலை 6:00 மணிக்கு ஔரங்காபாத் புறப்பட்டுச் சென்று, காலை 11:00 மணியளவில் குல்தாபாத்திற்கு வந்து சேர்ந்தனர்; அங்கு பாபா 56 ஏழைகளுடன் தனது பணியை நிறைவு செய்தார் - அவர்களின் கால்களைக் கழுவி, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாயைத் தமது அன்புப் பரிசாக வழங்கினார். தொடர்ந்து பாபா அங்கு அமைந்த ஒவ்வொரு தர்காவிலும் (சமாதி) 56 முறை வணங்கி, அவர் மாலை 5:00 மணிக்கு ஔரங்காபாத் நகரில் பல்வேறு ஆலயங்களுக்குச் சென்று, சில மஸ்துகளையும் தொடர்பு கொண்டார். இரவும் பகலும், பாபா வெவ்வேறு இடங்களில் பல சமாதிகளையும் ஆலயங்களையும் தேடிக் கண்டுகொண்டதன் மூலம், அவர் விரும்பிய எண்ணிக்கை 56ஐ நிறைவு செய்ய முடிந்தது. கோடை காலம், மிகவும் வெப்பமாக இருந்தது, ஆனால் பாபா

எதிர்பார்த்ததை விட துரிதமாகப் பணியை முடித்தார்; தொடர்ந்து காரில் பயணம் செய்து, ஏப்ரல் 2ஆம் தேதி இரவு சத்தாராவிற்குத் திரும்பி வந்தார்.

மறுநாள் ஏப்ரல் 4ஆம் நாள் காலையில், பாபா தமது வழக்கமான முறையில் மண்டலியுடன் நேரத்தைக் கழித்தார். அன்று, மணி, ஆதி சீனியருக்கு எழுதியது:

பாபா நேற்று நள்ளிரவில் திரும்பி வந்தார். அங்கே (குல்தாபாத்) வெப்பம் அதிகமானதால், அவர் அவசரமாக மஸ்த் பணியை நிறைவு செய்து, விரைவில் திரும்பி, 42 மணி நேரம் இடைவிடாது பயணம் செய்தார். அவரும் மண்டலியும் தொடர்ந்து இரண்டு இரவுகள் தூக்கம் அல்லது ஓய்வு இல்லாமல் சோர்ந்து போனதில் ஆச்சரியமில்லை. இன்று காலை அவர் ஓய்வெடுப்பதாகத் தோன்றினாலும் சோர்வாகவே உணர்கிறார்.

ஜால்பாய், பெஹராம் இருவரும் ஏப்ரல் 9ஆம் தேதி பாபாவை சந்தித்துவிட்டு பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர்.

சத்தாராவிற்குத் திரும்பி வந்த பின்னர் ஒரு நாள், பாபா, பாவ் கல்சூரிக்குத் தெரிவித்தார்: “**அமெரிக்காவிலிருந்து இரண்டு முக்கியமான கடிதங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன, ஆனால் அவை இதுகாறும் வரவில்லை. தபால்காரர் வேறு எவரிடமும் அவற்றைத் தவறாகக் கொடுத்திருக்கலாம். தபால் நிலைய அதிகாரியிடம் இது குறித்து கேளுங்கள்.**”

பாவ் கூறினார், “நாம் அவற்றை அவ்வாறு கண்டுகொள்ள முடியாது. பதிவு செய்யப்பட்ட கடிதங்களை மட்டுமே கண்டுபிடிக்க முடியும்”

“**இருந்தாலும் அங்குச் சென்று விசாரியுங்கள். கடிதங்கள் அவசரமும், மிக முக்கியமும் ஆனவை.**”

கிராப்டனிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் அமைந்த தபால் நிலையத்திற்கு பாவ் சைக்கிளில் சென்று, தபால் அதிகாரியை அணுகிய போது, அவர் கடிதங்கள் பதிவு செய்யப்பட்டனவா என்று கேட்டார். இல்லை என்று பாவ் தலையை அசைத்ததும், தபால் அதிகாரி, “அப்படியானால் அமெரிக்காவிலிருந்து தபாலில் அனுப்பப்பட்டதை எப்படி உறுதியாகக் கூற முடியும்?” என்று வினவினார்.

“கடிதங்கள் ஒரு வாரத்திற்கு முன்பே வந்திருக்க வேண்டும், ஆனால் அவை எங்கள் கைகளுக்கு வரவில்லை; அனுப்பியவர் பதிலளிக்கக் காலம் தாழ்த்துவதில்லை, எனவே அவை தொலைந்துவிட்டதாகத் தோன்றுகிறது” என்று பாவ் கூறினார்.

“மன்னிக்கவும், எங்களால் எதுவும் செய்ய முடியாது” என்றார் தபால் அதிகாரி.

பாவ் கல்சூரி திரும்பி வந்து பாபாவிடம் தெரிவித்ததும், வெளிப்படையான அதிருப்தியுடன் அவர் கூறினார், “**திரும்பிச் சென்று, அந்தக்**

**கடிதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அவரிடம் கூறுங்கள், குறைந்தபட்சம் அவர் அவற்றைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்!**"

பாவ் மீண்டும் தபால் அதிகாரியை அணுகிய போது, அவர் பொறுமை இழந்து கத்தினார், "இது என்ன முட்டாள்தனம்? நான் எனது பணியில் மும்முரமாக உள்ளேன், கடிதங்கள் மிகவும் முக்கியமானதாக இருந்தால், ஒரு தொலைத்தந்தி அனுப்பி, அவை அனுப்பப்பட்டனவா என்று விசாரிக்கவும். சாதாரண அஞ்சலுக்கு நாங்கள் பொறுப்பல்ல, தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள்!"

பாவ் திரும்பிச் சென்றார், அவர் பதிலைக் கேட்டு, பாபா கூறினார், "**அமெரிக்காவிலிருந்து தகவல்கள் நிச்சயமாக எங்களுக்கு அனுப்பப்பட்டன, ஆனால் அவை நம்மை வந்து சேரவில்லை, அவை மிகவும் முக்கியமானவை என்று தபால் அதிகாரியிடம் கூறுங்கள்.**"

தபால் அதிகாரி ஒரு முக்கியமான நபர் என்பதால் பாவ் தயங்கினார், மேலும் அவர் கூறியது நியாயம் எனும்போது, அவரை இப்படித் துன்புறுத்துவதை முட்டாள்தனமாக உணர்ந்தார். பாபா கோபத்துடன் சைகையால் தெரிவித்தார், "**அவர் என்ன அவ்வளவு பெரிய மனிதனா? சரி, நான் கூறுகிறேன், நீங்கள் அங்குச் சென்று அவரிடம் அந்தக் கடிதங்களைத் தேடுமாறு கேட்டுக்கொள்ளுங்கள்.**" அந்த மனிதன் முக்கியமானவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் சரி, பாபாவின் கட்டளைகள்தான் இன்றியமையாதது என்பதை பாவ் புரிந்துகொண்டார்.

பாவ் திரும்பிச் சென்று, மீண்டும் தபால் அதிகாரியைப் பார்த்ததும், அவர் இயல்பாகவே கோபமடைந்தார்; "உங்களுடன் பேச எனக்கு நேரமில்லை, உடனே புறப்படுங்கள்" என்று எரிச்சலுடன் கூறினார். பாவ் அங்கேயே அமைதியாக நின்றார், ஆனால் அந்த நபர் அவரைக் கண்டுகொள்ளாமல் தனது பணியைத் தொடர்ந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், அவர் தலையை உயர்த்தி, பாவ் கல்சூரியைப் பார்த்து, "கடவுளின் நிமித்தம், ஏன் இன்னும் இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள்?" என வினவினார்.

கெஞ்சும் தொனியில், பாவ், "ஐயா, கடிதங்கள் மிகவும் முக்கியமானவை, அதனால்தான் நான் உங்களிடம் திரும்பி வருகிறேன்" என்று மன்றாடினார்.

"ஆனால் நான் என்ன செய்வது?"

"இந்தக் கடிதங்கள் அதன் முகவரிக்கு வழங்கப்பட்டதா என்பதை மட்டும் நீங்கள் சரிபார்க்க முடிந்தால், நான் உங்களுக்கு நன்றியுடையவனாக இருப்பேன். குறைந்த பட்சம் இதையாவது செய்யுங்கள்."

"நீங்கள் சரியாகப் புரிந்துக்கொள்ளும் நிலையில் இருக்கிறீர்களா? என்ன வேலை செய்கிறீர்கள்?"

“நான் வெவ்வேறு இடங்களுக்கான கடிதப் பரிமாற்றத்தைக் கையாளுகிறேன்.”

பாவ் கல்சூரியை தலை முதல் கால் வரை உற்று நோக்கி, தபால் அதிகாரி சந்தேகத்தில், “நீங்கள் படித்தவர் போலத் தோன்றுகிறது - ஆனால் நீங்கள் மிகவும் விசித்திரமான இளைஞன்!” பாவ் கல்சூரியின் பதில்கள் தெளிவற்றதாக இருந்ததால், தபால் அதிகாரி அவரை மிகவும் வித்தியாசமானவர் அல்லது குழம்பிப்போய் இருக்கலாம் என்று நினைத்தார்!

சிறிது நேரம் கழித்து, “சரி, கடிதம் அனுப்பியவர்களின் முகவரிகளை என்னிடம் கொடுங்கள். கடிதங்கள் அடையப்பெற்றதும், நான் ஒரு சிறப்பு தபால்காரர் வழியாக அவற்றை உங்களுக்கு அனுப்புகிறேன்.” பாவ் அவருக்கு இரண்டு முகவரிகளையும் கொடுத்துவிட்டு பாபாவிடம் நடந்ததைத் தெரிவித்தார்.

“**நாளை கடிதங்கள் வரவில்லையென்றால், நீங்களே அதற்குப் பொறுப்பு**!” என்று அச்சுறுத்தும் வகையில் தெரிவித்தார்.

ஆனால் அடுத்த நாள், பாபா கடிதங்களைப் பற்றி கேட்கவில்லை, ஆனால் புதிதாக ஒன்று உருவெடுத்தது. சத்தாராவிலிருந்து மாலை நான்கு மணிக்கு மட்டுமே அஞ்சல் பட்டுவாடா செய்யப்படுவதால், பாவ், தினமும் மாலை 3:00 மணிக்கு தபால் நிலையத்திற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் அன்று, காலை 9:00 மணிக்கு பாபா அவரை அழைத்து, உடனே சென்று ஒரு கடிதத்தை அஞ்சல் செய்யுமாறு அறிவுறுத்தினார். பாவ் அங்குச் சென்று, அதை அஞ்சல் செய்துவிட்டு, திரும்பி வந்ததும், பாபா மேலும் ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்து, “**இதுவும் மிக முக்கியமானது, உடனே அனுப்ப வேண்டும், அஞ்சல் செய்யுங்கள்**!” என்றார்.

பாவ் இவ்வாறு நியாயப்படுத்தினார், “இப்போது அஞ்சல் செய்வதில் என்ன பயன்? மாலை 4:00 மணிக்கு மட்டும் ஒரே ஒரு பட்டுவாடா இருப்பதால் அது விரைவில் அனுப்பப்படமாட்டாது!”

“**என்னிடம் புதிதாக ஏதேனும் சொல்கிறீர்களா?**” என்று பாபா வினவினார். “**அது எனக்குத் தெரியாதா? நான் சொன்னபடி செய்யுங்கள்**.”

அன்று முதல், பாபா, பாவ் கல்சூரியை தபால் நிலையத்திற்கு அனுப்பி ஒன்றன் பின் ஒன்றாக அஞ்சலை அனுப்பத் தொடங்கினார்; வெகு நாட்களுக்குப் பிறகுதான் இது, தனது புத்தியின் மல்யுத்தத்தை அழிக்கும் பாபாவின் முறை என்பதை உணர்ந்தார்.

அதே பாடத்தை பாவ் கல்சூரிக்குக் கற்பிக்க, பாபா மற்றுமோர் ஊடகத்தைப் பயன்படுத்தினார். பாபாவின் ஏகாந்தவாச வேளையில், அவர் தண்ணீருக்கு பதிலாக சாதாரண டியூக் (வணிக அடையாளம்) சோடா நீரை அருந்தி வந்தார்; பாவ், சோடா புட்டிகளை பஜாரிலிருந்து கொண்டு வர

வேண்டியிருந்தது. அவர் கால் நடையாகச் செல்வதும், புட்டிகள் அடங்கிய பெரிய பெட்டியை சுமந்து வர ஒரு பணியாளை அமர்த்துவதும் வழக்கம். சத்தாரா, இந்த சோடா பானங்களின் மொத்த கொள்முதலை மும்பையின் ரோஜர்ஸ் & கோ (ROGERS & COMPANY) நிறுவனத்திடமிருந்து மாதம் ஒரு முறை வரவழைத்தது, மேலும் அவை அனைத்தும், அப்பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு உடனடியாக விநியோகிக்கப்பட்டன. பாவ் ஒரு மாதத்திற்கு தேவையானவற்றை மொத்த விற்பனையாளரிடமிருந்து வாங்கி வந்தார். எந்த சில்லறை வியாபாரியிடமிருந்தும் தேவையான அளவு சோடா புட்டிகள் அதிக விலை வழங்கினாலும் வாங்க முடியாத சூழ்நிலை உருவானது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட மாதத்தில், மும்பையிலிருந்து சத்தாராவிற்கு மொத்தத்தில் சோடா எதுவும் வரவில்லை, மேலும், பாபா அவருக்கே உரிய முறையில், பாவ் கல்சூரியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தினார்: **“ஏன் கடந்த மாதம் அதிகமாக சோடா புட்டிகள் வாங்கவில்லை?”** அவர் புகார் செய்து, **“உங்களுக்கு என்னைப் பற்றி எந்த எண்ணமும் இல்லை, என்னைப் பற்றிய அக்கறை ஏதும் இல்லை! உங்கள் அணுகுமுறை இப்படி இருக்கும்போது, நீங்கள் என்னுடன் இருப்பதில் என்ன பயன்?”** என்று கேட்டார். மிகுந்த சிரமத்துடன், பாவ் வெவ்வேறு விற்பனையாளர்கள் மற்றும் உணவகங்களிலிருந்து ஓரிரு பாட்டிலை வாங்கி வந்தார்; இதனால் பாபா அதிருப்தியை வெளிப்படுத்தினார், ஏனெனில் பல இடங்களிலிருந்து சோடா புட்டிகளை வாங்க நேரம் பிடித்தது; பாபா, அவர் பஜாரிலிருந்து விரைவில் திரும்பி வருவதை விரும்பினார்.

பல நாட்களுக்குப் பிறகு, மும்பையிலிருந்து சோடா பெட்டிகள் மொத்தமாக வந்த வேளையில், பாவ் ஆறு பெட்டிகளை வாங்கினார், இது ஒன்றரை மாதங்களுக்குப் போதுமானதாக இருந்தது. மொத்த விற்பனையாளர், சில்லறை வியாபாரிகளுக்கு தனது தினசரி ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்ய வைத்திருந்த சோடா பெட்டிகளை, பெரும் தயக்கத்துடன் விடுவித்தார். எப்படியோ, பாவ் அவரை சமாதானப்படுத்த முடிந்தது.

அனைத்தும் சுமூகமாக நடந்து முடிந்தது; பாவ் கல்சூரி தன்னை நினைத்து மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்த நேரத்தில், பத்து நாட்களுக்குப் பிறகு பேரிடர் தலைதூக்கியது. பாபா அவரை அழைத்து, **“இந்தப் பெட்டிகளில் உள்ள சோடா பழையதாகி, துர்நாற்றம் வீசுகிறது. அதில் ஒன்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறொன்றை எடுத்து வாருங்கள்!”** என்றார்.

“எப்பொழுதும் சோடா நீர் பற்றாக்குறை இருப்பதால், திரும்பக் கொடுப்பது எளிதானது, ஆனால் மற்றொரு பெட்டியை அடையப்பெறுவது மிகவும் கடினமாக இருக்கும்” என்று பாவ் கூறினார்.

**“அதைத் திருப்பித் தருவதில் பெரிதாக எதுவும் இல்லை; ஆனால் நீங்கள் அதை மாற்றி வாங்கினால் உண்மையிலேயே சிறப்பாக இருக்கும்!”**

எனவே பாவ் பெட்டியைத் திருப்பித் தரச் சென்றார், ஆனால் அவர் சென்ற இடமெல்லாம் சந்தேகத்துடன் கேட்கத் தொடங்கினர், “நீங்கள் ஏன் இதை மாற்ற வேண்டும்? இதில் என்ன தவறு?”

“அதில் ஒன்றும் தவறில்லை. நீங்களே சோதித்துப் பாருங்கள்.”

“அவை அனைத்தும் சரியாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், இந்தப் பெட்டியை ஏன் மாற்ற விரும்புகிறீர்கள்? என்ன காரணம்?”

பாவ் என்ன காரணம் சொல்ல முடியும்? அவர் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான சூழ்நிலையை சந்தித்தார், இறுதியில் அவர் ஒரு தந்திரத்தைக் கையாண்டார். அவர் உணவகம் ஒன்றை அணுகி, “தயவு செய்து எனக்கு 24 குளிர் சோடா புட்டிளைக் கொடுங்கள், அதற்கு பதிலாக இந்த 24 புட்டிகளை வைத்துக் கொள்ளுங்கள். பரிமாற்றத்திற்காக நான் ஒரு ரூபாய் தருகிறேன்” என்று கூறியதும், உரிமையாளர் விருப்பத்துடன் இணங்கினார்; பாவ் புதிய சோடா பெட்டியுடன் கிராஃப்டனுக்குத் திரும்பி வந்தார்.

பாபா அவரிடம் நடந்ததை விசாரித்தபோது, பாவ் அனைத்தையும் எடுத்துரைத்தார், பாபா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

மறுநாள், பாபா கூறினார், **“இந்த முறை என்ன தரமான சோடா நீர் கொண்டு வந்துள்ளீர்கள்? இந்த இரண்டாவது பெட்டி, முதல் பெட்டியிலிருந்த சோடாவை விட மோசமாக துர்நாற்றம் வீசுகிறது! அதைத் திருப்பிக் கொடுத்து புதிய சரக்கிலிருந்து கொண்டு வாருங்கள். ஆனால் நேற்று நீங்கள் சென்ற அதே ஹோட்டலுக்குத் திரும்பிச் செல்ல வேண்டாம்; ஒருவேளை நீங்கள் திருப்பிக் கொடுத்த அதே பெட்டியைத் திரும்பத் தரலாம்!”**

“பாபா, கடந்த மாதம் ஒட்டு மொத்த சரக்குகள் முழுவதும் வந்ததால், நான் எங்கிருந்து புதிய சரக்கைக் கொண்டு வர முடியும்?”

**“இந்த துர்நாற்றமான சோடா நீரை நான் குடிக்க வேண்டுமா?”**

எனவே பாவ் மீண்டும் ஒன்றிலிருந்து மற்றுமோர் உணவகத்திற்குப் முழுப் பெட்டியை எடுத்துச் சென்றார். துரதிர்ஷ்டவசமாக, குளிர் சோடா நீர் அந்த இடத்தில் மட்டுமே கிடைத்தது; அவரது பழைய தந்திரம் இனி பலிக்காது என்பதால் அவரால் அவற்றை மாற்ற முடியவில்லை. இறுதியாக, அவர் ஒவ்வொரு வியாரியிடமிருந்தும் இரண்டு பாட்டில்களை வாங்கி, தன்னிடமிருந்ததை வேறு ஓர் உணவகத்திற்கு விற்பனை செய்தார். பாபா இந்தப் பண்ட மாற்றத்தை விரும்பவில்லை, **“நான் உங்களிடம் ஒரு பெட்டியை இன்னொரு பெட்டியோடு மாற்றிக் கொள்ளச் சொன்னேனா அல்லது நீங்கள் விரும்பியபடி செய்யச் சொன்னேனா?**

“பாபா, நான் என்ன செய்வது? எனது மூளை எனக்கு உதவவில்லை! சோடா நீரைக் கொடுத்து, சோடா நீர் வாங்குவது சாத்தியமற்றது! எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார்கள், என்னைப் பைத்தியம் என்று நினைக்கிறார்கள்!”

**“நீங்கள் பைத்தியம்தான், மக்கள் உங்களை அப்படி அடையாளம் கண்டுகொள்வதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்!”**

சில வாரங்கள் இது இப்படியே தொடர்ந்தது, ஆனால் பாவ் கல்சூரி அவருக்கு விதித்ததை விட்டு விலகி, பாபாவின் குறிப்பிட்ட அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிந்த அடுத்த கணமே, கடினமான பணிகள் எளிதாகிவிட்டன. இது பாபாவின் விருப்பம், அவருக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று பாவ் கல்சூரி ஏற்றுக்கொண்ட பிறகு, பாபா சோடாவைப் பற்றி குறை கூறுவதை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக, அது எவ்வளவு சுவையானது என்று பாவ் கல்சூரியைப் பாராட்டினார். உண்மையில், சோடா புட்டிகளில் எந்தப் பிரச்சினையும் இல்லை; அவற்றில் துர்நாற்றம் எதுவும் இல்லை - ஆனால் பாவ் கல்சூரியின் கடினமான சிந்தனை ஆற்றலை நொறுக்க, பாபா அவருக்கே உரித்தான யுக்தியைக் கையாண்டார்.

1956 ஏப்ரல் 12 வியாழன், 24 மணி நேரம், இரவு 7:00 மணி முதல் 13ஆம் தேதி மாலை 7:00 மணி வரை, பாபா தண்ணீர் கூட அருந்தாமல், முழு உபவாசம் மேற்கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பின்னர், 15ஆம் தேதி, அதே விதிமுறையைப் பின்பற்றினார்.

இதற்கிடையில், சத்தாராவிற்கு அருகில் கிரிக்கெட் விளையாட பொருத்தமான ஒரு தனிமையில் அமைந்த இடத்தைக் கண்டுபிடிக்குமாறு பாபா, அலோபாவிடம் அறிவுறுத்தினார். அலோபா ஒரு நதிக்கரைக்கு அருகிலமைந்த இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்; பாபா மண்டலியுடன், ஏப்ரல் 19 அன்று காலை 8:00 மணிக்கு அங்குச் சென்ற அந்த நாள், தற்செயலாக ராமர் பிறந்த நாள். அவர்கள் சிறிது நேரம் கிரிக்கெட் மற்றும் சீட்டு விளையாடி, சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தனர்.

அன்று மாலை, பாபா ஏகாந்தவாசத்தில் தமது பணியைத் தொடர, ‘ஜட்ஜ்’ பங்களாவிற்குச் சென்றார்.

இந்த பங்களா பிப்ரவரி முதல் வாடகைக்கு எடுக்கப்பட்டது, கைக்கோபாத், டாக்டர் நீலு இருவரும் அங்குத் தங்கி வந்தனர். பைதூல் ஹைதராபாத்திலிருந்து ஸலிக் வகையைச் சார்ந்த மஸ்த் ஒருவரை அழைத்து வந்தார், ஆனால் பாபா அந்த மஸ்துடன் பணிபுரிவதில் மகிழ்ச்சியடையாமல், இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவரைத் திருப்பி அனுப்பினார். சத்தாரா மாவட்டத்தைச் சேர்ந்த மலங் மஹாராஜ் (MALANG MAHARAJ) என்று அழைக்கப்பட்ட மற்றுமொரு மஸ்த் அழைத்து வரப்பட்டார், அவருடன் பாபா 27ஆம் தேதி வரை பணியாற்றினார்.

பாபா, மீண்டும் 19ஆம் தேதி முதல் உபவாசத்தைத் தொடங்கினார். 23ஆம் தேதி வரை, அவரது உணவில் காலையில் பால் இல்லாமல் ஒரு கப் தேநீர், ஒரு வாழைப்பழம், மதிய உணவுக்கு ஒரு மாம்பழம், சிறிதளவு கிரீம் மற்றும் தேநீர், தொடர்ந்து எஞ்சிய நாள் முழுவதும் வேறு எதுவும் உட்கொள்ளவில்லை. ஏப்ரல் 24 அன்று, அவர் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் கடைப்பிடித்தார் (அன்றைய தினம் குறிப்பாக வெப்பமாக இருந்தது); மேலும் ஏப்ரல் 25ஆம் தேதி சோடா நீர் சர்பத்தும், அடுத்த நாள், அவர் மூன்று முறை ஒரு கப் தேநீரும் அருந்தினார்.

1956 ஏப்ரல் 27 வெள்ளிக்கிழமை முதல் அடுத்த பதினான்கு நாட்களுக்கு, பாபா 24 மணி நேரத்திற்கு ஒரு முறை சிறிதளவு சாதமும், பருப்பும் உட்கொண்ட காலகட்டத்தில், கைக்கோபாத்துடன் தனது ஏகாந்தவாச பணியில் ஈடுபட்டிருந்தார். ஸவக் இரவு முழுவதும் கண்காணிப்பாளராக இருந்ததைத் தொடர்ந்து, எரச், பாவ் இருவரும் காலையில் பாபாவுடன் இருந்தனர். நண்பகலில் இருவரும் விடுபடும் நேரத்தில் இஸ்மாயிலுக்கு பாடம் சொல்லித் தருவதும், தபால் அலுவலகத்திற்குச் செல்வதையும் பாவ் வழக்கமாகக் கொண்டார். 'ஜட்ஜ்' பங்களாவில் பெண்டு மதியம் முதல் மாலை வரையிலும், ராம்ஜூ, சத்தாராவில் வசித்து வந்ததால், தினமும் காலை 10:00 முதல் மாலை 5:00 மணி வரை, பாபாவின் அருகில் அமருமாறும் அறிவுறுத்தப்பட்டனர்.

டாக்டர் டான், குஸ்தாஜி இருவருக்கும் எந்தக் குறிப்பிட்ட கடமையும் வழங்கப்படவில்லை; ஆனால், இதுவே அவர்களுக்குக் கடினமான ஒன்றாக இருந்தது. டான் போன்ற திறமைமிக்க ஒருவருக்கு, வேலை எதுவும் இல்லாமல் வெறுமனே நேரத்தை செலவிடுவது, பெரும் சோதனையாக இருந்தது. சில நேரங்களில், அவர் தனது அறையிலிருந்து பொருட்களை வெளியே வீசி எறியும் அளவிற்குச் செல்வதும், அவரது கோபம் தணிந்ததும், அனைத்தையும் மீண்டும் உள்ளே எடுத்து வருவதும், காண்பதற்கு அரியதொரு காட்சியாக அமைந்தது. நேரத்தைப் போக்க, ஒருமுறை டான் வாங்கிய மோட்டார் சைக்கிள் ஒன்றை, அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து, சுத்தம் செய்து, பாகம் பாகமாக ஒன்றிணைத்தார். டான் சுருட்டு பீடி புகைப்பதை, பாபா தடை செய்திருந்தார்; எனவே, டான் தனது வாயில் எரிக்கப்படாத சுருட்டு ஒன்றை வைத்துக்கொண்டு இலக்கின்றி அலைந்து திரிவது வழக்கம். ஒருமுறை, பூனாவிற்குச் செல்லும் வழியில், அவர் வாயில் எரியாத சுருட்டு பீடியை வைத்திருந்த வேளையில், அவருக்கு அருகில் அமர்ந்திருந்த சக பயணி ஒருவர், தீப்பெட்டி தீர்ந்துவிட்டதாக நினைத்து, கம்பீரமாக அவருக்கு சிகரெட் விளக்கை வழங்கினார். சிரித்துக் கொண்டே டான், பணிவாக அவருக்கு நன்றி தெரிவித்து, அது அவருக்குத் தேவையில்லை என்று கூறினார்.

குஸ்தாஜிக்கு வித்தியாசமான தற்போக்கு சிந்தனைகள் இருந்தன. நாள் முழுவதும், அவர் ரோஸ்வுட் வளாகத்திலிருந்து மரக்குச்சிகளையும், கிளைகளையும் சேகரித்து, அவற்றை ஓர் அறையில் நிரப்பி வந்தார். வாரத்திற்கு ஒருமுறை அவர் இந்த மரக்கிளைகளை எரித்து நீராடுவதற்காக தண்ணீரை சுடவைத்தார். பிற மண்டலி அனைவரும் குளிர்ந்த நீரில் நீராடும் வேளையில், குஸ்தாஜி அவரது குளியல் நாளில், காலையிலிருந்து மரக்கிளைகளை எரிய வைக்கத் தொடங்கி, தண்ணீரை மதியம் வரை கொதிக்கவிட்டு, பின்னர் அவர் பல மணி நேரம், மாலை 5:00 மணி வரை குளியலறையில் அமர்ந்து நீராடுவதை வழக்கமாகக் கொண்டார்! அவர் தனது பழக்கவழக்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் விழிப்புடன் இருந்தார்; உடலின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு கவனமாக சுத்தம் செய்தார்.

ஒரு நாள் பாபா மண்டலியுடன் 'லா ரிஸ்க்' (LA RISQUE) என்ற ஒரு வகை சீட்டாட்டம் விளையாடிக் கொண்டிருந்த வேளையில், ஆட்டத்தின் இடையே சீட்டு அட்டைகளை மேசை மீது எறிந்து, "**நீங்கள் அனைவரும் வெளியே சென்று தியானம் செய்ய வேண்டும்**" என்று சைகையால் தெரிவித்தார். மண்டலிக்கு தியானம் செய்யும் பழக்கமே இல்லாததால், அவரது திடீர் அறிவுறுத்தலைக் கேட்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர். வெளியே சுட்டிக்காட்டி, பாபா, "**அங்கே சென்று உங்கள் இருக்கைகளைத் தேர்ந்தெடுங்கள். நான் கைகளைத் தட்டும்போது, கண்களை மூடிக்கொண்டு, சாவகாசமாக அமர்ந்து கொள்ளுங்கள். நான் மீண்டும் கைகளைத் தட்டும்போது, தியானத்தைத் தொடங்குங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

அவர் தொடர்ந்து கூறினார்: "**ஆனால் நீங்கள் எந்தக் கருத்தில், எந்தக் கருப்பொருளில் தியானம் செய்வீர்கள்? கடவுளை தியானம் செய்யுங்கள். கடவுள் என்றால் என்ன? கடவுளை உங்கள் மனக்கண் முன்னால் எப்படிக் கொண்டு வருவீர்கள்? உங்கள் மனதை எல்லா எண்ணங்களிலிருந்தும் அகற்றிவிடுங்கள். உங்கள் மனக்கண்ணின் முன்னால் ஒளியைக் கொண்டு வாருங்கள், பிரகாசம், அளப்பரிய வெளிச்சம் அதுதான் கடவுள், சிந்தித்துப் பாருங்கள், அங்கேயே அமர்ந்திருங்கள்; ஆனால் கடவுள் அளவிறுதியற்றவர், அவருக்கு எல்லையே இல்லை. அவர் பிரகாசத்தின் மாபெரும் கடல், எனவே, நீங்கள் எங்கிருந்து தியானம் செய்வீர்கள்? நீங்கள் அதனுள் இருப்பீர்கள். உங்களைச் சுற்றி அந்தப் பிரகாசம் இருப்பதாகக் கற்பனை செய்து, அதில் அமருங்கள்.**

"**இரண்டாவது முறை நான் கைகளைத் தட்டுவதைக் கேட்கும் போது, அளவிறுதியற்ற, நித்தியமான கடவுள் எனும் உண்மைப்பொருளின் பிரகாசத்தில் தியானம் செய்யத் தொடங்குங்கள். மூன்றாவது முறை**

**கைகளைத் தட்டும் வேளையில், தியானத்தை நிறுத்திவிட்டு என்னிடம் வாருங்கள்.**”

எனவே மண்டலி வளாகத்திற்கு வெளியே சென்று, தரையில் அமர்ந்தனர், ஒவ்வொருவரும் ஒருவரிடமிருந்து சிறிது தூரத்தில் அமர்ந்தனர். பாபா கைகளைத் தட்ட, அவர்கள் கண்களை மூடி, சாவகாசமாக அமர்ந்திருந்தனர்; விரைவில், இரண்டாவது முறையாகக் கைகளைத் தட்டியதும், அறிவுறுத்தியபடி, கடமை உணர்வுடன் தியானத்தைத் தொடங்கினர். ஆனால் சில நிமிடங்களில் - அவர்கள் அதை உள்ளூர ரசிக்கத் தொடங்கிய அந்த கணத்தில் - பாபா மூன்றாவது முறையாகக் கைகளைத் தட்டியதும், மண்டலி மீண்டும் பங்களாவிற்குள் நுழைந்தனர். தியானம் பற்றி எதுவும் குறிப்பிடாமல் சீட்டு விளையாட்டு மீண்டும் தொடங்கப்பட்டது.

1956 ஏப்ரல் 30ஆம் நாள் திங்கட்கிழமை வரை, பாபா தமது ஏகாந்தவாசப் பணியைத் தொடர்ந்தார்; அன்று மதியம் நரிமனின் காரில் எரச், பெண்டு, பைதூல், நீலு, சகன் (அஹமதுநகரிலிருந்து அழைக்கப்பட்டார்) ஆகியோருடன் பாபா, மஸ்த் தொடர்புகளுக்காகப் புறப்பட்டுச் சென்றார். இரவும் பகலும் பயணம் செய்து, பாபா, பண்டர்பூர், ஸோலாபூர், குல்பர்கா, ஹூப்ளி, தார்வாட், பெல்காவ்ம், கோலாப்பூர், ஸாங்ளி, இஸ்லாம்பூர் ஆகிய இடங்களில் வாழ்ந்த மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பயணம், நான்கு நாட்கள் தொடர்ந்தது, ஆனால் தொடர்புகள் குறித்த பதிவு எதுவும் இல்லை.

தாதி கேரவாலா, பெல்காவ்ம் மற்றும் கோலாபூருக்கு இடையே அமைந்த ஆஜ்ரா (AJRA) என்ற தொலைதூர கிராமத்திற்கு, பணி மாற்றம் செய்யப்பட்டார். இந்த மஸ்த் பயணத்தின் போது, பாபா அங்கே நின்று மதிய உணவை உண்டார். தாதியின் தாயார் பானுமாசி, அவரது உறவினர் ரோஷன் ஸட்டா ஆகியோர் அவருடன் தங்கியிருந்தனர்.

பாபா மே 3 மதியம் சத்தாராவிற்குத் திரும்பிய வேளையில், நீண்ட பயணத்திற்குப் பிறகு மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். அவர் நேரடியாக ‘ஜட்ஜ்’ பங்களாவிற்குச் சென்று, அங்கு அவர் ஒரு முழு வாரம் ஏகாந்தவாசம் மேற்கொண்டார்.

1956 மே 9 புதன் அன்று பாபா, கிரா·ஃப்டனுக்கு திரும்பிச் சென்று, மூன்று நாட்கள் அங்குத் தங்கிய பின்னர், அவர் மீண்டும் ‘ஜட்ஜ்’ பங்களாவில் ஒரு வாரம் தங்கினார். மே மாதத்தில் பாபா இந்த இரண்டு பங்களாக்களுக்கும் இடையே, மாறி மாறி மூன்று நாட்கள் கிரா·ஃப்டனிலும் ஒரு வாரம் ‘ஜட்ஜ்’ பங்களாவிலும் தங்கி வந்தார்.

9ஆம் தேதி மாலை முதல், தண்ணீர் கூட அருந்தாமல் 24 மணி நேரம் பாபா உபவாசம் கடைப்பிடித்த வேளையில், மெஹராவும் அவருடன்

உபவாசத்தில் கலந்து கொண்டார். பாபாவுடன் தங்கியிருந்த பிற ஆண், பெண் மண்டலியும், நீர் மட்டும் அருந்தி, உபவாசம் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டனர்.

கிர்பால் ஸிங் என்ற சீக்கிய ஆன்மீகத் தலைவர் 1952 நவம்பரில் பாபாவை புதுடில்லியில் சந்தித்தார். கிர்பால் ஸிங் ஓர் உண்மையான சாது, பாபாவிற்கு மிகவும் பிரியமானவர் என்று அவர் சில தருணங்களில் குறிப்பிட்டதுண்டு. இந்தியாவில் வாழும் அனைத்து சாதுக்கள் மற்றும் யோகிகளில், பாபாவிற்குப் பிரியமானவர்கள் ஏழு பேர் இருந்ததாகவும், அவர்களில் ஒருவராக கிர்பால் ஸிங்கின் பெயரை எப்போதும் குறிப்பிட்டு வந்ததாகவும் பாபா கூறினார்.

ஸந்த் கிர்பால் ஸிங் (SANT KIRPAL SINGH) 1955இல் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த வேளையில், ஐவி டியூஸ் அவரை சந்தித்தார். இந்தியாவில் வாழ்ந்த தனது ஆதரவாளர்களுக்கு, கிர்பால் ஸிங் இவ்வாறு எழுதினார்: “மெஹர் பாபாவின் ஸூஃபி இயக்கத்தின் தலைவர், இன்று என்னிடம் ஒரு நேர்காணலுக்காக வந்தார்; நான் அவருடன் நீண்ட நேரம் உரையாடினேன் - மெஹர் பாபாவின் சீடர்களின் கூட்டத்திற்கு அவர் என்னை அழைத்த போது, நான் அதில் பங்கெடுப்பதாக உறுதியளித்தேன்.”

கிர்பால் ஸிங் இந்தியாவிற்குத் திரும்பிய சில மாதங்களுக்குப் பிறகு, டில்லியைச் சேர்ந்த புர்ஜர் காய் (BURJOR GAI) மூலமாக ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பிரதி அவருக்கு வழங்கப்பட்டது; இந்த சந்திப்பில் துறவி மீண்டும் பாபாவை தரிசனம் செய்யும் விருப்பத்தைத் தெரிவித்தார்; ஏனெனில், அப்போது அவர் பூனா செல்லவிருந்ததால், சத்தாரா வெகு தொலைவில் இல்லை. பாபா அனுமதி வழங்கினார். விரைவில், கிர்பால் ஸிங், கல்யாண் நகரை (மும்பைக்கு அருகில்) வந்தடைந்த வேளையில், மே 14 அன்று, அவர் பாபாவை சந்திப்பதற்கான நேரத்தை நிர்ணயம் செய்ய, எரச் கீழ்வரும் செய்தியுடன் அனுப்பப்பட்டார்: மெஹர் பாபா, “**நீங்கள் அவரது அன்பான குழந்தை**” என்பதை உங்களுக்குத் தெரிவிக்குமாறு எனக்கு அறிவுறுத்தியுள்ளார். அடக்கமான ஸந்த் கிர்பால் ஸிங் இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார், மேலும் பாபாவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை, எரச் எடுத்துரைத்ததை கவனமாகக் கேட்டார்.

1956 மே 18 வெள்ளிக்கிழமை அன்று, கிர்பால் ஸிங், ஒரு பெண் மற்றும் இரண்டு ஆண் சீடர்களுடன் சத்தாராவிற்கு வந்து, காலை 9:30 மணியளவில் ‘ஜட்ஜ்’ பங்களாவில் பாபாவை சந்தித்தார். பாபா வராந்தாவில் நின்று துறவியை அன்புடன் தழுவினார். அவரது கையைப் பற்றிக்கொண்டு, பாபா அவரை தமது அறைக்கு அழைத்துச் சென்றார்; பாபாவின் சைகைகளை விளக்கிக் கொண்டிருந்த எரச்சைத் தவிர, பிற அனைவரையும் வெளியே காத்திருக்குமாறு சைகையால் தெரிவித்தார். பாபா தமது வழக்கமான இருக்கையில் அமர்ந்து,

கிர்பால் ஸிங்கை அமருமாறு கேட்டுக்கொண்டார். கூப்பிய கரங்களுடன், கிர்பால் ஸிங், "உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், மிகவும் அதிர்ஷ்டமாக உணர்கிறேன்" என்று கூறினார்.

பாபா இவ்வாறு தெரிவித்தார்: **"நான் பிரபஞ்சத்தின் இறைவன்; நான் எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன். நான் அனைத்தையும் அறிவேன், இருந்தும், அதே நேரத்தில் நான் எதுவும் அறியாதவன்..."**

"அதுதான் உண்மையான மகத்துவத்தின் அடையாளம்" என்று குறிப்பிட்டார் கிர்பால் ஸிங்.

**"நீங்கள் அனைவரும் உயர்ந்தவர்கள்; நான் என் அன்பர்களின் அடிமை. அவர்களின் கால்களைக் கழுவும் வாய்ப்பை எண்ணி நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களை அரவணைப்பதே எனக்கு மிக்க மகிழ்ச்சி தரும் ஒன்று; நான் அன்பின் இறை பெருங் கடல்."**

பாபா எழுந்து நின்று கிர்பால் ஸிங்கை மென்மையாகத் தட்டிக் கொடுத்ததும், அவரும் உடனடியாக எழுந்து நின்றார். பாபா அவரை அமரச் சொன்னாலும், பாபா அமர்ந்து உரையாடலைத் தொடரும் வரை, பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தார். **"நீங்கள் செய்யும் பணியில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்"** என்று பாபா தொடங்கினார். **"உங்கள் மூலமாகவும், பிறர் மூலமாகவும், எனது சொந்த பணியை நானே செய்கிறேன்."**

கிர்பால் ஸிங், "பாபா, இந்தியாவிலும் இதர நாடுகளிலும் வாழும் உங்கள் அன்பர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால், 'நீங்கள் என்ன அனுபவத்தை அடையப்பெற்றீர்கள்?' என்று நான் கேட்டபோது, அவர்களுக்கு எந்த அனுபவமும் இல்லை என்று கூறினார்கள். தயவுசெய்து, பாபா, நீங்கள் ஏன் அவர்களுக்கு சில அனுபவங்களை வழங்கக்கூடாது? அது அவர்களுக்கு உதவியாக இருக்கும். அனுபவங்கள் இல்லாதவரை ஆன்மீகத்தில் மக்கள் எப்படி ஆர்வம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?"

அதற்கு பாபா பதிலளித்தார்: **"உள்ளளவிலான அனுபவங்களை அடையப்பெறுவது நல்லது என்றாலும், அவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பது மிகவும் ஆபத்தானது. ஆன்மீக ஆர்வலர்கள் முன்கூட்டியே எச்சரிக்கப்படாவிடில், சிறிய அனுபவங்கள் கூட தீமை விளைவிப்பதாக இருந்து, நிலையான முன்னேற்றத்தைத் தடைசெய்கின்றன."**

இதற்கு முன்னர் ஒரு நாள், பாபா கூறினார், **"அனைத்தையும் அறிந்தவர், வெறுமனே தோன்றச் செய்யும் விதத்தில் எதையும் செய்யமாட்டார். ஒவ்வொருவருக்கும், அவர் என்ன நினைக்கிறாரோ அவராகவே நான் தோற்றமளிக்கிறேன்."** இந்த வரிகளை பெரிய எழுத்தில் எழுதுமாறு பாபா, ரானோவிற்கு அறிவுறுத்தி, பாபாவின் நாற்காலியின் அருகே அதைத் தொங்கவிடுமாறு பாவ் கல்சூரியிடம் கூறினார். பாபா அதைச்

சுட்டிக்காட்டி, ஆன்மீகப் பாதையின் உண்மையான முக்கியத்துவத்தை கிர்பால் ஸிங்கிற்கு விளக்கினார். "**அந்த அறிவிப்புப் பலகையைப் படியுங்கள். அங்கே என்ன எழுதப்பட்டிருக்கிறது? எல்லாவற்றையும் அறிந்தவர், இயற்கைக்கு எதிராக எதையும் செய்யமாட்டார்." அதாவது, அனைத்தும் அறிந்த ஒருவர் அற்புதம் எதையும், காட்சி வடிவில் செய்ய மாட்டார் என்று அர்த்தம்.**"

அதைத் தொடர்ந்து பாபா தனது சொந்த சீடர்களின் அனுபவங்களை எடுத்துரைக்கும் விதத்தில் இரண்டு உதாரணங்களை மேற்கோள் காட்டினார். அவர் கிர்பால் ஸிங்கிடம், "**இப்போது அவர்களைப் பின்பற்றுபவர்கள் பலர் உள்ளனர்; குழுக்கள் பல உள்ளன, மேலும் புதியவர்களை ஒன்றுதிரட்ட தொடங்குகின்றனர். அவர்கள் இன்றும் என்னை நேசித்தாலும், அவர்கள் தங்கள் சுயமான, சுதந்திரமான வாழ்க்கை முறையை கொண்டுள்ளனர்.**"

பாபா வலியுறுத்தி கூறினார், "**மிகச்சிறிய, சாதாரணமான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட, இத்தகைய பொறுப்பற்ற நடைமுறை செயல்கள், ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைப்பவர்களுக்கும், பயணிப்பவர்களுக்கும் பேரளவில் தீங்கு விளைவிக்கும்.**"

கிர்பால் ஸிங் பேச்சின் இடையே, "ஆனால் அனுபவங்களை ஆர்வலர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தினால்?" என வினவினார்.

"**என்னுடைய எடுத்துக்காட்டு உங்களுக்கானது அல்ல, ஆனால் அற்பமான அனுபவங்கள் ஆர்வலர்களை எப்படிச் சிக்கவைத்து, வழிதவறச் செய்யலாம் என்பதை நீங்கள் உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**"

பிரேம் ஆசிரம சிறுவர்களின் அனுபவங்களை விவரிக்கும் ராம்ஜூவின் புத்தகமான 'அழுகையும், துடிப்பும்' (SOBS AND THROBS) புத்தகத்தின் நகலை எடுத்துவர பாபா சைகையால் தெரிவித்தார். பாபா எழுந்து நின்ற அந்த கணத்தில், கிர்பால் ஸிங்கும் எழுந்து பாபாவின் அருகில் நின்றார். பாபா அவரை மீண்டும் ஒருமுறை அரவணைத்து அமருமாறு கூறினார். இருப்பினும், மரியாதையின் நிமித்தம் அவர் நின்றுகொண்டிருந்தார். பாபா புத்தகத்தைத் திறந்து, கிர்பால் ஸிங்கிற்கு உள்ளளவில் இறை அனுபவங்களை அடையப்பெற்ற சிறுவர்களின் புகைப்படங்களைக் காட்டினார்.

கிர்பால் ஸிங் உடனே, "அந்த இளம் வயதில், சிறுவர்களுக்கு இதுபோன்ற அனுபவங்கள் ஏற்படுவது கடினம் அல்ல" என்று அப்பாவித்தனமாகக் குறிப்பிட்டார்.

பாபா ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் விதத்தில், "**இளம் வயதா?**" என அவர் சிரித்துக்கொண்டே, "**வயது, இளமையாக இருந்தாலும் சரி, முதுமையானாலும் சரி, 'தெய்வீக ஆன்மா' சேகரிக்கும் அனுபவங்களுக்கும், வயது வரம்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை**" என்றார்.

பாபா, கிர்பால் ஸிங்கை தமது பக்கம் அழைத்து, அவரது கையைப் பற்றிக்கொண்டு, கைக்கோபாத்தின் அறைக்குச் சென்று, "**இப்போது ஒரு முதியவரிடம் அவரது அனுபவங்களைப் பற்றிக் கேட்கப் போகிறீர்கள்**" என்று கூறினார். பாபா கைக்கோபாத்தின் படுக்கையில் அமர்ந்து, கிர்பால் ஸிங்கை அருகில் அமருமாறு கூறி விளக்கினார்:

"**கைக்கோபாத் எனது பழைய அன்பர்; பல உள் அனுபவங்களை அடையப்பெற்றவர். சில நேரங்களில் அந்த அனுபவங்களைப் பற்றி என்னிடம் கூறுகிறார், ஆனால் எனக்குப் புரிவதில்லை. ஒருவேளை கைக்கோபாத் என்ன சொல்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.**"

'**கைக்கோபாத்திற்கு ஹிந்தி நன்றாகத் தெரியாது, எனவே அவர் ஹிந்தி-குஜராத்தி கலவை மொழியில் பேசுவதால், கிர்பால் ஸிங் அதற்குப் பொறுமையாக செவிமடுக்கும்படி**' கேட்டுக் கொண்டார்.

கைக்கோபாத், கிர்பால் ஸிங் இருவரையும் தனியாக விட்டுவிட்டு, பாபா அறையிலிருந்து வெளியேறி, கிர்பால் ஸிங்கின் மூன்று பக்தர்களுடன் இணைந்தார். ஏகாந்தவாசம் கடைப்பிடித்து வந்ததால், பாபா அவர்கள் தலைவணங்குவதை அனுமதிக்கவில்லை, ஆனால் அவர் ஒவ்வொருவரையும் தட்டிக்கொடுத்து, 'ஜட்ஜ்' பங்களாவின் வாசற்படிகளில் அமர்ந்த போது, ஒவ்வொருவரும் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இதற்கிடையில், கிர்பால் ஸிங் கைக்கோபாத்திடம், "உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்குப் பல அனுபவங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த அனுபவங்களை, தயவுசெய்து, என்னிடம் கூற முடியுமா?"

"அனுபவங்கள்?" கைக்கோபாத் கூறினார். "அனுபவங்களைப் பற்றி நான் உங்களுக்கு எப்படி விளக்குவது? சுருக்கமாகச் சொல்கிறேன். நீங்கள் சூரியனைப் பார்க்கிறீர்களா?"

"ஆம், நான் அதை பார்க்கிறேன்," கிர்பால் ஸிங் கூறினார்.

"எவ்வளவு பிரகாசமாக இருக்கிறது?"

"மிகவும் பிரகாசமாக இருக்கிறது, அது முழு உலகத்திற்கும் ஒளியை வழங்குகிறது."

கைக்கோபாத் தொடர்ந்து கூறினார், "சூரியனின் ஒளி உங்களுக்கு மிகவும் பிரகாசமாக இருக்கிறது. ஆனால் நான் என் இதயத்தில் ஒளியைக் காண்கிறேன். இதுவும் மிகவும் பிரகாசமாக இருக்கிறது; நான் உள்ளே பார்க்கும் இந்த ஒளியின் முன்னால், நூற்றுக்கணக்கான சூரியன்களின் ஒளி ஒன்றுமே இல்லை. நான் எனது சுய நினைவை இழந்து கீழே வீழ்கிறேன்."

ஸந்த் கிர்பால் ஸிங் இந்த வார்த்தைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் கைக்கோபாத்திடம் கூறினார், "பாபாவின் அருளால்தான் இந்த

அனுபவங்கள் உங்களுக்கு ஏற்படுகின்றன. பாபாவின் ஆசீர்வாதத்தால் மட்டுமே இத்தகைய அனுபவங்கள் உங்களுக்கு கிடைக்கின்றன! எனக்கு அத்தகைய அனுபவங்கள் இல்லை!”

கிர்பால் ஸிங் அங்கிருந்து வெளியே வந்து, மீண்டும் பாபாவுடன் இணைந்தார். அவரை ஒரு நாற்காலியில் அமருமாறு பாபா கேட்டுக்கொண்டாலும், அவர் படிக்கட்டுகளில் பாபாவின் அருகில் அமர விரும்பினார். கைக்கோபாத் கூறியதைக் குறித்து, பாபாவிடம், “உங்கள் அருளால்தான் அவருக்கு இந்த அனுபவம் கிடைத்தது” என்று கூறினார்.

**“என் அருள்?”** என பாபா வினவி, தொடர்ந்தார். **“என் அருள் யார் ஒருவர் மீது வீழ்ந்தாலும், அது பொய்யும் போலியுமான நான் எனும் அகந்தையை முழுவதுமாக அழித்துவிடும்!”**

கிர்பால் ஸிங்கின் குழுவினர் ஒரு திரைப்பட கேமராவைக் கொண்டுவந்தனர்; பாபாவுடன் கிர்பால் ஸிங் இருக்கும் சில காட்சிகளைப் படமாக்க விரும்பியபோது, பாபா அதை அனுமதித்தார். அதற்குப் பிறகு, பாபா, கிர்பால் ஸிங்கின் சீடர்களிடம் “**கிர்பால் ஸிங்கின் மேலங்கியை உறுதியாகப் பற்றிக் கொள்ளவும், அன்புடனும் பக்தியுடனும் அவருடைய வழிமுறைகளைப் பின்பற்றவும்**” என்று கட்டளையிட்டார்.

மீண்டும் ஒருமுறை, பாபா, சாதுவைத் தழுவிய வேளையில், ஆழ்ந்த பாசத்தை இருவரும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். குழுவில் ஒருவர், பாபாவிடம், விரைவில் டெல்லிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொண்ட போது, பாபா தலையை அசைத்து அழைப்பை ஏற்றுக்கொண்டார். பூனாவைச் சேர்ந்த ஒருவர், பாபா அங்கு தரிசனம் வழங்கவும், கிர்பால் சிங்கின் சொற்பொழிவுகளைக் கேட்கவும் அழைத்த வேளையில், பாபா இவ்வாறு பதிலளித்தார், “**நான் இருக்கும் இடத்திலிருந்து, எல்லா நேரங்களிலும் அனைத்தையும் நான் தொடர்ந்து கேட்கிறேன்.**”

மீண்டும் கிர்பால் ஸிங்கை மிகுந்த அன்புடன் தழுவி, பாபா, அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். மேசை ஒன்றிலிருந்து ஒரு சீட்டை எடுத்து பாபா, கிர்பால் ஸிங்கிடம் கொடுத்தார். காகிதத்தில் “**1957 பிப்ரவரி 15**” (பாபாவின் ஒரு வருட ஏகாந்தவாசத்தின் இறுதி நாள்) என்று தடித்த அக்ஷரத்தால் எழுதப்பட்டிருந்தது.

பாபா கேட்டார், **“அன்றைய இரவை என்னுடன் கழிக்க விரும்புகிறீர்களா?”**

“விருப்பத்துடன் கழிப்பேன்,” கிர்பால் ஸிங் பதிலளித்தார், “நான் இந்தியாவை விட்டு வெளியே செல்லவில்லை என்றால்.”

பாபா, “**அது உங்கள் கவனத்திற்கு உட்பட்டது**” என்று சுட்டிக்காட்டினார்.

இரு கரங்களையும் கூப்பி வணங்கி கிர்பால் ஸிங், “பாபா, அதை நான் உங்கள் கைகளில் விட்டு விடுகிறேன்” என்று பதிலளித்தார்.

பாபா உடனே, “**அப்போது நீங்கள் இந்தியாவில் இருப்பதாக இருந்தால்**, **அந்த இரவை என்னுடன் கழிக்க**, **உங்களை அழைத்து வர**, **எரச்சை அனுப்பி வைக்கிறேன்**” என்றார்.

கிர்பால் ஸிங் அதற்கு இணக்கம் தெரிவித்து, அந்தத் துண்டுச் சீட்டைத் தனது சட்டை பாக்கெட்டில் வைத்தார். மீண்டும் ஒருமுறை அவரைத் தழுவி, பாபா கையைப் பற்றிக்கொண்டு வெளியே அழைத்துச் சென்றார். பாபாவிடமிருந்து விடைபெறுவதற்கு முன்பு, கிர்பால் ஸிங், அன்று காலை, எரச் அவர்களை சந்தித்த அரசு பங்களாவில் நிற்காமல், நேரடியாக பூனாவிற்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். இது பாபாவை மகிழச் செய்தது, அவருடைய வழக்கமான முறைப்படி அனுமதி வழங்கப்பட்டது.

கிர்பால் ஸிங் அவருடைய மூன்று சீடர்களுடன் காரை நெருங்கிய போது, திடீரென அவர்களில் ஒருவருக்கு, பாபாவுக்காகக் கொண்டு வந்த ஒரு கூடை மாம்பழத்தைக் கொடுக்க மறந்ததை நினைவு கூர்ந்தார். சிரித்துக் கொண்டே கிர்பால் ஸிங், “நாம் இங்கு வேறு உலகில் இருப்பதால் எல்லாவற்றையும் மறந்துவிட்டோம்!” என்றார். பாபா மாம்பழத்தை அன்புடன் ஏற்றுக்கொண்ட வேளையில், கிர்பால் ஸிங் மற்றுமோர் அரவணைப்பைப் பெற்றுக் கொண்டார். அவர்கள் காரில் அமர ஆயத்தமான போது, பாபாவிற்காக எடுத்து வந்த இனிப்புப் பண்டங்களையும் நினைவுகூர்ந்தனர். பாபாவை தரிசனம் செய்யும் வாய்ப்பை மறுபடியும் அடையப் பெற்றதாகக் கூறி அனைவரும் மகிழ்ச்சி பொங்க சிரித்தனர்.

இறுதியாக, கிர்பால் ஸிங் தனக்கு பாபா வழங்கிய ‘அழுகையும் துடிப்பும்’ (SOBS AND THROBS) மற்றும் ‘தி வேஃபேரர்ஸ்’ (THE WAYFARERS) புத்தகங்களின் பிரதிகளை மறந்துவிட்டதை எரச் நினைவு கூர்ந்தபோது, கார் புறப்பட்டுச் சென்றது. சரியான நேரத்தில் காரை சாலையோரம் நிறுத்தி, இரண்டு புத்தகங்களையும் கிர்பால் ஸிங்கிடம் கொடுத்தார்.

அன்றைய தினம் மற்றுமொரு பார்வையாளர் இங்கிலாந்தின் மான்செஸ்டரைச் சேர்ந்த 24 வயதான இளைஞன் ‘கீத் என். ஸெக்கர்’ (KEITH N. SECKER FROM MANCHESTER, ENGLAND) ஆவார். நீண்ட காலமாக, கீத், தத்துவம் குறித்து தான் படித்த அனைத்து புத்தகங்களிலும் கண்டுகொள்ள முடியாத ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தார். அப்போது, ஒரு நண்பர் அவருக்கு மெஹர் பாபாவின் சொற்பொழிவுகள் (DISCOURSES) என்ற புத்தகத்தைப் படிக்குமாறு அறிவுறுத்தவே, அதிலிருந்த விளக்கங்கள் அவரை ஆழமாக பாதித்தது. அதில், அவர் எதிர்பார்த்த ‘பதிலைக் கண்டுபிடித்தார்’ என்று கூறினார். ‘காட் டு மேன், மேன் டு காட்’ (GOD TO MAN, MAN TO GOD) புத்தகத்தைப் படித்துவிட்டு, மெஹர் பாபாவைப் பார்க்க

வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்த அவர், தனது பணியைத் துறந்து, மிகக் குறைவான பணத்துடன் இந்தியா வந்தார். இங்கிலாந்தில் வாழும் பாபாவின் அன்பர்கள் எவரையும் அவருக்குத் தெரியாது; ஆனால் பூனா வழியாக பின்பு மெஹராபாத்திற்குச் சென்றவர், அங்கு பாதிரியை சந்தித்தார்; பாதிரி உடனே அஹமதுநகரில் ஆதி சீனியரை சந்திக்க அவரை வழிநடத்தினார்; அவர் பாபா சத்தாராவில் ஏகாந்தவாசத்தில் இருப்பதாகத் தெரிவித்தார்.

கீத்தின் நேர்மையை ஆதி, பாபாவிடம் தெரிவித்த போது, பாபா அந்த இளைஞனை சத்தாராவிற்கு அழைத்து வருமாறு கூறவே, அவர் கீத்துடன் மே 18 அன்று சத்தாரா வந்தார். பாபா கீத்தை சந்தித்து தழுவினார். அவருடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர், **'உடனடியாக இங்கிலாந்து திரும்பவும், லண்டனில் வாழும் தனது அன்பர்களைத் தொடர்பு கொள்ளவும், ஜூலை மாதத்தில் அவருடைய வருகைக்காகக் காத்திருக்குமாறும்'** பாபா அறிவுறுத்தினார். கீத் புறப்படும்போது, "நான் என் இலக்கை அடைந்துவிட்டேன்" என்று எரச்சிடம் கூறினார்.

கிர்பால் ஸிங்கின் வருகையைப் பற்றி எரச் எழுதி பாபாவின் முன்னிலையில் வாசித்த பிறகு, பாபா அத்துடன் இதை இணைத்தார்:

<u>கபீர் கூறுகிறார்</u>:

**புனித ஸ்தலங்களுக்குப் பயணம் செய்வது**
**ஒரே ஒரு பலனைத் தரும்;**
**துறவிகளின் சகவாசமும் வழிகாட்டுதலும்**
**நான்கு பலன்களை நல்கும்.**
**ஓ கபீர்! ஒரு சத்குருவின் அருள்**
**எண்ணற்ற பலன்களை வழங்கும்.**

<u>வேதங்கள் கூறுகின்றன</u>:

**ஆயிரக்கணக்கான மனிதர்களில் ஒருவர்**
**புனிதமான சாது ஆகிறார்;**
**ஆயிரக்கணக்கான துறவிகளில் ஒருவர்**
**இறைநிலையை எய்துகிறார்;**
**இப்படிப்பட்ட பல இறை உணர்வை எய்தவர்களில்**
**ஒருவர் சத்குரு ஆகிறார்.**

<u>நான் கூறுகிறேன்</u>:

**அவதார காலகட்டத்தில் ஐந்து பரிபூரண சத்குருக்கள்**
**கடவுளை மனிதனாக அவதரிக்கச் செய்கிறார்கள்.**

பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், சத்தாராவில் உடனிருந்த ஆண், பெண் மண்டலி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உபவாசம்

கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்; ஆனால் அவர்களுக்கு காலை தேநீரும், இரவு உணவும் அனுமதிக்கப்பட்டது. பாபா 1956 மே 24 வியாழன் அன்றும், மீண்டும் 29ஆம் தேதியும் நீர் கூட அருந்தாமல் 24 மணி நேரம் உபவாசம் கடைப்பிடித்தார். அந்த ஆண்டு மே 24 புத்தரின் பிறந்தநாளாகக் கொண்டாடப்பட்டது (அது அமெரிக்காவில் பாபாவின் கார் விபத்து நடந்த நான்காவது ஆண்டு நினைவு நாள்).

இதற்கிடையில், மேற்கத்திய பயணத்திற்கான ஆவணங்கள் அடையப் பெறுவது தொடர்பான பணிக்காக அஹமதுநகர், பூனா, மும்பை, மஹாபலேஷ்வர் ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்ட எரச், 25ஆம் தேதி சத்தாராவிற்குத் திரும்பினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, கோதாவரி மாய், ஐரீன் கோனிபியர் இருவரையும் சந்திக்க, அவர் மீண்டும் மஹாபலேஷ்வருக்கு அனுப்பப்பட்டார்; அப்போது அவர்கள் அங்குத் தங்கியிருந்தனர். பாபாவின் மேற்கத்திய பயணத்தில் அவருடன் செல்ல விரும்புவதாக கோதாவரி மாய் குறிப்பிட்டிருந்ததால், அவர் பயணம் செய்வதில் தீவிரமாக உள்ளாரா என்பதை ஊர்ஜிதம் செய்ய, பாபா, எரச்சை அனுப்பியிருந்தார். அவர் உடன் செல்வதாக இருந்தால், பாபா, அதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு மண்டலிக்கு அறிவுறுத்த முடியும். எரச், கோதாவரி மாயை சந்தித்த போது, இந்த முறை மிகவும் தாமதமாகிவிட்டது என்று கூறினார். அவர் நிச்சயமாக பாபாவுடன் வர விரும்புகிறார், ஆனால் இம்முறை அல்ல, ஏனெனில் ஏற்பாடுகள் அனைத்தும் மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டும். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் பாபா அவரை சந்திப்பார் என்ற செய்தியுடன் ஆதி அனுப்பப்பட்டார்.

1956 ஜூன் 1 வெள்ளிக்கிழமை காலையில், பாபா, கைக்கோபாத்துடன் பணிபுரிந்தார், தொடர்ந்து வராண்டாவில் தனது வழக்கமான வேக நடையை முடித்து, பின்பு ரானோ அல்லது மண்டலியில் ஒருவர் செய்தித்தாள் வாசித்ததைக் கேட்டார்.

ஐரீன் கோனிபியர் 4ஆம் தேதி மீண்டும் சத்தாராவிற்குத் திரும்பி வந்து, திருமதி கூப்பர் பங்களாவில் தங்கினார். இதற்கு முன்னர் அங்கு வந்தபோது, இரண்டு நாட்களில் திரும்பிச் சென்றார்; இந்த முறை, அவர் நீண்ட நாட்கள் தங்க இருந்ததால், பாபா அவரை அவ்வப்போது பார்ப்பதை வழக்கமாகக் கொண்டார். ரானோ தினமும் அங்குச் சென்று சிறிது நேரம் அவருடன் துணையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்; ஐரீனும் சில சமயங்களில் மெஹரா, மணி ஆகியோரைப் பார்க்க கிராஃப்டனுக்கு அழைக்கப்படுவது உண்டு.

ஜூன் 9 அன்று 105 ஏழைக் குழந்தைகள், 'ஜட்ஜ்' பங்களாவிற்கு அழைத்துவரப்பட்டனர். பாபா, குழந்தைகளின் கால்களைக் கழுவி, துடைத்து, பின்பு லட்டுகளைப் பிரசாதமாக வழங்கினார். ஒவ்வொரு சிறுவர் சிறுமியருக்கும் சிறப்பான மதிய உணவு அளிக்கப்பட்டதோடு, பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு சட்டை அல்லது அதற்கான துணியைக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னரே பாபா மாலையில் உணவு உண்டார்.

1956 ஜூன் 10 காலை 8:00 மணிக்கு, எரச் ஓட்டிச்சென்ற நரிமனின் காரில், பாபா, சத்தாராவிலிருந்து பெண் மண்டலி - மெஹரா, மணி, கோஹெர், மெஹரு ஆகியோருடன் மெஹராஸாத் சென்றார். ஆதி சீனியருடன் ரானோ, நாஜா, குஸ்தாஜி மூவரும் சென்றனர். அடுத்த சில நாட்களில், ஜால்பாய், மெஹர்வான் ஜெஸவாலா இருவரும் பூனாவிலிருந்து வந்திருந்தனர். பாபாவின் மேற்கத்திய பயணத்தைக் குறித்து தினமும் விவாதங்கள் நடந்தன; அதற்காக பாபா சில சிறப்புச் செய்திகளை எடுத்துரைத்தார். மெஹராஸாத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபா, பாவ் கல்சூரியிடம் மேற்கத்திய பயணங்களில் பயன்படுத்தும் நோக்கத்தில் ஏழு செய்திகளைத் தயார் செய்யுமாறு அறிவுறுத்தினார். பாவ் செய்திகளை எழுதி, அவை ரானோவிடம் திருத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்பட்டாலும், பின்னர் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை.

பெரில் வில்லியம்ஸ் (BERYL WIKKIAMS), மணிக்கு எழுதிய கடிதத்தில், அவரும், பிற மேற்கத்திய அன்பர்களும், பாபா வந்ததும் அவருடன் பறக்க, சிறகுகளைத் தயாராக வைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். மணி, பாபா முன்னிலையில் கடிதத்தைப் படித்துவிட்டு, "பிரியமான பாபாவும் உங்கள் சிறகுகளை ஆமோதிக்கும் இவ்வேளையில், பயணத்தின் போது உங்களில் எந்தப் புறாக்களும் அவருடன் பறப்பதைப் பொருட்படுத்துவதாக இல்லை. எனவே, சிறுமிகளே! உங்கள் சிறகுகளை விரித்து, பறக்கத் தயாராகுங்கள்!" என்று பதிலளித்தார்.

மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக, பீட்ரைஸ் வீகோ (BEATRICE VIGO) என்ற மேற்கு ஆப்பிரிக்கப் பெண்மணி ஒருவர் வந்திருப்பதாக ஆதி சீனியர், பாபாவிடம் தெரிவித்திருந்தார். பீட்ரைஸ் வேதாந்தம் கற்றுக்கொள்வதற்காக சில வருடங்கள் இந்தியாவில் இருந்த வேளையில், இதற்கு முன்னர் ஒருமுறை ஏப்ரல் மாதத்தில் வந்திருந்த அவரை, பாபா, சத்தாராவில் ஏகாந்தவாசத்தில் இருந்ததால் சந்திக்கவில்லை; ஆனால் 1956 ஜூன் 12 அன்று காலை, மெஹராஸாத்தில் சில நிமிடங்கள் அவரைப் பார்க்க பாபா அனுமதித்தார். ரிஷிகேஷிலும் பிற இடங்களிலும் பீட்ரைஸ் பல ஆசிரமங்களுக்கு விஜயம் செய்திருந்தார்; பாபா அவரிடம் வலியுறுத்தி கூறினார், "**அன்பின் மூலம் மட்டுமே கடவுளை உணர முடியும்**."

ஆன்மீகத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கு முன்பு, பீட்ரைஸ் லண்டனில் கல்வி பயின்றார், அங்கு அவர் ஆஃப்ரிக்க குடிமக்களின் சுதந்திரப் போராட்டத்திலும், பெண்களின் பிரச்சினைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவர் பாபாவை ஆஃப்ரிக்காவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

பாபா ஒரு நாள் மெஹராஸாத்திற்கு 'பாராகோட்டி' (பன்னிரண்டு கோட்டுகள்) என்று அழைக்கப்பட்ட, உள்ளூரில் இறை-பைத்தியமாக இருந்த ஒருவரை அழைத்து வரச் செய்தார். எந்தக் காலநிலையிலும், மஸ்தின் குணநலன்கள் படைத்த அவர், எப்பொழுதும் பன்னிரண்டு (பாரா) கிழிந்த கோட்டுகளை அணிந்திருந்ததால் அவருக்கு அந்தப் பெயர். பாபா ஒரு அடுக்கை மாற்றி, ஒரு சிறந்த புதிய கோட்டை அணிவித்தார். மண்டலியிடம் '**அவர் உண்மையில் மஸ்த் அல்ல**, **ஆனால்** '**ஆன்மீகப் பாதையை மோப்பம் பிடித்தவர்**' என்று கூறினார்.

இந்தக் காலகட்டத்தில், பூனாவில் வாழ்ந்த ஹபிபுல்லா பெய்க், தனியாக வணிகத்தில் ஈடுபடுவதில் உறுதியாக இருந்து, மெஹராஸாத் வந்து, பாபாவிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். "**நீங்கள் தினமும் நமாஸ் செய்கிறீர்களா?**" பாபா அவரிடம் கேட்டார்.

"இப்போது நான் 'அசல் நமாஸ்' செய்கிறேன்!" அதாவது பாபாவை நினைவில் கொள்வதாக அர்த்தம்.

அவருடைய பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பாபா, "**வியாபாரத்தில் ஈடுபட உங்களுக்கு பணம் எங்கிருந்து வரும்?**" என வினவினார்.

ஹபிபுல்லா உடனே, "பொருட்களை மொத்தமாகக் கடனில் பெறலாம்" என்று விளக்கினார். பாபா அவரிடம் தனது முயற்சியைத் தொடர அனுமதித்து, பிரசாதமாக அவருக்கு ஒரு தொகையை வழங்கினார். ஹபிபுல்லா பூனாவில் காஷ்மீர் பொருட்களின் சிறிய கடை ஒன்றைத் திறந்து, சிறப்பாக வியாபாரம் செய்யத் தொடங்கினார்.

1956 ஜூன் 14 அன்று, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கையை வெளியிடுமாறு, ஆதி சீனியருக்கு பாபா அறிவுறுத்தினார்; ஆரம்பத்தில், அவர் மும்பையிலிருந்து மேற்கு நோக்கிப் பயணம் செல்லும் போது, விமான நிலையத்தில் தனது அன்பர்களை அனுமதிப்பதாகக் கூறியிருந்தாலும், பாபாவின் ஏகாந்தவாசம் இப்போதும் தொடர்ந்து கொண்டிருந்ததால், அவர் புறப்படும் வேளையில் பிரியாவிடை அளிக்க எவரும் வரவேண்டாம் என முடிவு செய்தார்.

நரிமன், மெஹர்ஜி இருவரும் 17ஆம் தேதி வந்து, மறுநாள் அதிகாலையில் பாபாவுடன் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச்

சென்றனர். எரச் காரை ஓட்டிச் செல்ல, ஆதியும், பூனாவிலிருந்து டாக்டர் நீலுவும் அவர்களுடன் இணைந்தனர். அமெரிக்கத் தூதரகத்தில் விஸா ஆவணங்களைப் பெற்று, ஆஷியானாவில் மதிய உணவை உண்ட பின்னர் அவர்கள் ஜூஹூ கடற்கரைக்கு விரைவாகச் சென்று, அன்று இரவு 9 மணிக்கு அஹமதுநகருக்கு வந்து சேர்ந்தனர்.

பாபா, பெண்மணிகளுடன் 21ஆம் தேதி மெஹராபாத்திற்குச் சென்று, பாதிரி, மன்ஸாரி, கைக்கோபாத்தின் மகள்கள் என அனைவரையும் சந்தித்தனர். 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' (JHANAK JHANAK PAAYAL BAAJE) என்ற ஹிந்தி படத்தின் சிறப்புக் காட்சிக்கு, பாபா அனைவரையும் ஆஷா டாக்கீஸுக்கு (ASHA TALKIES) அழைத்துச் சென்றார்.

பாபாவின் சமீபத்திய சொற்பொழிவுகளிலிருந்து சில பகுதிகளை, அவரின் எதிர்வரும் அமெரிக்கப் பயணத்தின் போது, தேவைப்பட்டால் வாசிப்பதற்காகத் தேர்ந்தெடுத்துத் தருமாறு, எரச் தனது சகோதரர் மெஹர்வானிடம் கேட்டுக் கொண்டார். முதலில் டாக்டர் தேஷ்முக் மூலமாகத் தொகுக்கப்பட்டு, திருத்தம் செய்து, தட்டச்சு செய்யப்பட்ட செய்திகளை மணி திருத்தம் செய்யவே, மெஹர்வான் அதை மீண்டும் தட்டச்சு செய்தார். டாக்டர் தேஷ்முக் அவற்றை இறுதியாக திருத்தம் செய்ய மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார்; ஒவ்வொரு செய்திக்கும் தலைப்புகள் வழங்கப்பட்டது. ஜூன் 26 அன்று தேஷ்முக் தனது குடும்பத்துடன் அஹமதுநகர் வந்தார்; ஆனால் முழுக் குடும்பமும் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்படாததால், தேஷ்முக் அங்குத் தங்கிய வேளையில், அவரது மனைவியும் குழந்தைகளும் அஹமதுநகரில் டாக்கேயின் இல்லத்தில் தங்கினர். மெஹர்வான் ஒவ்வொரு திருத்தப்பட்ட செய்திக்கும் புதிய தலைப்புகளைத் தட்டச்சு செய்தார். நியூயார்க் நகரத்தில் தொலைக்காட்சிக்காக படமாக்கப்படவிருந்த இந்த செய்திகளில் ஒன்றை பாபா பலமுறை ஒத்திகை பார்த்தார்.

இந்தக் காலகட்டத்தில், மாலை ஆறு மணி முதல் இரவு நேர கண்காணிப்புப் பணிக்காக சகன் அழைக்கப்பட்டார். பிங்கர் கிராமத்தில் தனது இல்லத்தில் அவர் ஆயுர்வேத மருத்துவமனை ஒன்றை நிறுவி, நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தவர், தினமும் மிதிவண்டியில் மெஹராஸாத் சென்று காலையில் திரும்பி வருவது வழக்கம்.

ஜூன் 28 அன்று குஷ்ரு குவாட்டர்ஸுக்குச் சென்ற பாபா, குல்மாயையும் தேஷ்முக்கின் குடும்பத்தினரையும் சந்தித்தார்.

மெஹராஸாத்தில் பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், அவர், 1956 ஜூலை 2 அன்று வழங்கிய கீழ்வரும் செய்தி, மூன்று நாட்களுக்குப்

பின்னர், 'வாழ்க்கை சுற்றறிக்கை' (LIFE CIRCULAR) வடிவத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பப்பட்டது:

**கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்டபடி, நான் எல்லா வாக்குறுதிகளிலிருந்தும் விடுபட்டுள்ளேன்; இடம், காலம் இரண்டிற்கும் கட்டுப்பட வேண்டியதில்லை. அனைத்து நிகழ்வுகளும் மாயையின் ஆதிக்கத்தின் கீழ் நடந்தாலும், பேரிடர் ஒன்று என்னையும் என் அன்பர்களையும் தாக்கக் காத்துக்கொண்டிருக்கிறது. நான் நீண்டகாலமாக எதிர்நோக்கிய அவமானம் நெருங்கிவிட்டது. இது நாளை அல்லது இந்த வருடத்தின் எந்த நாளிலும் அல்லது எதிர்வரும் வருடத்திலும் நிகழலாம்.**

**என் அன்பர்களின் அன்பு, தைரியம், நம்பிக்கை இவை அனைத்தும் என்னால் அல்ல, தெய்வீகச் சட்டத்தால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும். இந்த நெருக்கடியான சூழ்நிலையின் உச்சக்கட்டத்தில், என்னைப் பற்றிக் கொண்டவர்கள், மாயையைக் கடந்து உண்மைப்பொருள் எனும் யதார்த்தத்தில் நிலைத்திருப்பார்கள்.**

**எனது அவமானம் மற்றும் 'பேரிடர்' இரண்டும் இன்றியமையாத ஒன்றாக இருந்தாலும், அது ஓர் உன்னதமான இலக்கை நோக்கிச் செல்லும் பாதையின் இடைப்பட்ட கட்டங்கள் என்பதை, என் அன்பர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன்.**

**அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.**

பாபா அந்தப் 'பேரிடர்' என்பதன் பொருளைப் பற்றி விரிவாகக் கூறவில்லை, ஆனால் அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதை காலம் விரைவில் அறிந்துகொண்டது.

1956 ஜூலை 7ஆம் தேதி சனிக்கிழமையன்று பாபா, சத்தாராவிற்குத் திரும்பும் வரை, ஒரு நாள் முன்னதாகவே பல்வேறு செய்திகள் குறித்த பணி தொடர்ந்தது. நரிமன் மற்றும் ஆதி சீனியரின் கார்களில் பாபா, எரச், குஸ்தாஜி மற்றும் பெண்மணிகள் பயணம் செய்தனர். செல்லும் வழியில், பூனாவில் அமைந்த பாபாஜானின் சமாதியில் அவர்கள் சிறிது நேரம் நின்ற வேளையில், பாபா, மெஹராவிடம் மலர் மாலை மற்றும் சில நாணயங்களை வைக்குமாறு அறிவுறுத்தினார்.

மௌன தினத்தை முன்னிட்டு பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அவரது இந்திய அன்பர்கள், ஜூலை 9 நள்ளிரவு முதல் ஜூலை 10 நள்ளிரவு வரை, மௌனம் கடைப்பிடித்தனர்; இந்த நேரத்தில் இரண்டு கப் தேநீர் (எந்த நேரத்திலும் அருந்தலாம்) மற்றும் ஒரு வேளை இரவு உணவையும் உண்டு குறுகிய உபவாசத்தைக் கடைப்பிடித்தனர்.

சத்தாராவில் பாபா தமது எதிர்வரும் மேற்கத்திய பயணத்திற்கான ஆயத்தத்தில், மண்டலியின் செயல்பாடுகளுக்கு மத்தியில் கடுமையான ஏகாந்தவாசத்தைக் கடைப்பிடித்தார். பாபா மண்டலியைத் தவிர வேறு எவரையும் பார்க்கவில்லை, வெளியிலிருந்து எவரும் தம்மைப் பார்க்க வருவதையும் அனுமதிக்கவில்லை.

பல நாட்களுக்கு ஒவ்வொரு மாலையும், பாவ் கல்சூரி தபால் நிலையத்திலிருந்து தபால்களுடன் திரும்பும் போது, பாபா, கோஹெரிடமிருந்து ஒரு வாழைப்பழத்தை வரவழைத்து, அதை அவருக்கு வழங்குவது வழக்கம். இந்தப் பிரசாதம் அவருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது என்ற உள்ளுணர்வால், பாவ் ஒரு நாள் எதிர்ப்புத் தெரிவித்தார், "பாபா, நீங்கள் தினமும் எனக்கு மட்டும் வாழைப்பழம் தருகிறீர்கள், பிற அனைவருக்கும் ஏன் கொடுக்கக்கூடாது? நாளை முதல், நீங்கள் அதை பிறருக்குக் கொடுக்காவிட்டால் எனக்கும் கொடுக்காதீர்கள்."

பாபா பதிலளித்தார், "**நீங்கள் எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டசாலி! இதை வெறுமனே வாழைப்பழம் என்று நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்களா? உங்களுக்கு மண்டலியின் மீது அக்கறை உள்ளது, ஆனால் என்னைப் பற்றி எதுவும் இல்லை! என்ன ஓர் அவமானம்! அட முட்டாளே, நான் பிறரைப் பட்டினி போட்டு, உங்களை மனமார உண்ண வைத்தாலும் அதைப் பற்றி நீங்கள் எந்த சிந்தனையும் கொண்டிருக்கக்கூடாது, அதைக் குறித்து உங்களுக்கு என்ன கவலை?**"

**"என்னை மகிழச் செய்வதைக் காண வந்துள்ளீர்களா, அல்லது பிறர் மகிழ்வதைக் காணவா? ஒருவர் அரியணை ஏறவும், வேறொருவர் மண்ணில் புரளவும் நான் தீர்மானிக்கலாம். இருவரும் என் அடிமைகள் என்றால் எனது விருப்பத்தை ஏற்றுக்கொண்டு, அதில் மகிழ்ச்சியடைய வேண்டும்.**

**"நான் உங்களுக்கு வாழைப்பழத்தை வழங்கவில்லை; எனது பிரசாதத்தை வழங்குகிறேன், நீங்கள் அதை மறுக்கிறீர்கள்! நீங்கள் பிறர் மீது அதிக அக்கறையும், எனது பிரசாதத்தின் மீது சிறிதும் அக்கறை காட்டாதபோது, நீங்கள் என்னுடன் இருப்பதில் என்ன பயன்? இந்தப் பிரசாதத்தை எந்த நோக்கத்தில் கொடுத்தேன் என்ற யோசனை உங்களுக்கு சிறிதளவும் இல்லை. இப்போது நீங்கள் அதை இழந்துவிட்டீர்கள்!"**

பாவ் கல்சூரி தனது தவறை உணர்ந்தார்.

1956 ஜூலை 14 அன்று, பாபா மீண்டும் சத்தாராவில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து 200 குழந்தைகள், 'ஜட்ஜ்' பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டனர். பாபா ஒவ்வொரு குழந்தைக்கும் இனிப்புகளையும் ஆடைகளையும் வழங்கிய வேளையில், மேலும் 50

குழந்தைகள் வந்தனர். பாபா, "**அவர்களின் இதயங்களை என்னால் நொறுக்க முடியாது; அவர்களுக்கும் நான் பிரசாதம் வழங்க வேண்டும்**" என்று கூறினார்.

போதுமான அளவு இனிப்புகள் இருந்தும் 50 குழந்தைகளுக்கு வழங்க ஆடைகள் இல்லாததால், விஷ்ணு உடனடியாக பஜாருக்கு அனுப்பப்பட்டார்; பாபா ஒவ்வொரு குழந்தைக்கும் புதிய ஆடைகளை வழங்கினார்.

மறுநாள் காலை, பாபா, யாசித்து வாழ்பவர்கள் அல்லாத 35 உள்ளூர் ஏழை முதியவர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, சிறப்பான உணவும், ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு துணி மற்றும் ஐந்து ரூபாயை வழங்கினார்.

பாபா வெளியே செல்லும் போது, சத்தாராவில் வசித்து வந்த மண்டலி ஒவ்வொருவரும், இரவு ஒன்பது மணிக்கு, ஐந்து நிமிடங்களுக்கு கடவுளிடம், (அவரவர் மதத்தின்படி) பாபா உடல் ரீதியாகவும், பயணம் முழுவதும் ஆரோக்கியமாக இருக்கவும், அவரது பயணம் வெற்றிகரமாக அமையவும் பிரார்த்தனையை மொழியுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.



**வாஷிங்டன் டி.சி.** (WASHINGTON D.C.), **1956**

# மேற்கத்திய பயணம் - ஸூரிக் & லண்டன்

(**Trip To The West - Zurich & London**)

மெஹர் பாபாவின் ஒரு மாத மேற்கத்திய பயணத்திற்கான ஏற்பாடுகள் முழு முனைப்புடன் தொடங்கப்பட்டன. விமான முன்பதிவுகள், வெவ்வேறு இடங்களில் தங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பிற ஆயத்தங்கள் தொடர்பாக, ஏராளமான கடிதப் பரிமாற்றங்கள் தொடர்ந்து நடந்தன. மணியின் தட்டச்சு இயந்திரம் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. கடந்த பல மாதங்களாக, இங்கிலாந்து, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளிலிருந்து தொலைத்தந்திகளும் கடிதங்களும் வந்த வண்ணம் இருந்தன; ஒவ்வொன்றையும் குறித்து பாபாவிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்பு, மணி அயராது பதிலளித்துக் கொண்டிருந்தார்.

மேற்கத்திய அன்பர்கள் பயணச் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், எதிர்வரும் ஜூலை மாதம், பாபா அங்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது: **"சமீபத்தில் நீங்கள் அனைவரும்** (ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் ஓராண்டு காலத்திற்காக) **மிகவும் அன்புடனும்**, **தாராளமாகவும்**, **தியாக மனப்பான்மையுடனும் வழங்கிய அன்பளிப்புகளைப் பொறுத்தவரை**, **இது எவ்வளவு கடினம் என்பதை பாபா அறிவார்**; **உங்கள் ஒவ்வொருவரின் அன்பளிப்புக்கும் பாபா தமது அன்பை வழங்குகிறார்**."

'எனர்ஜி' (ENERGY) என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பட்ட, நியூயார்க் நகரின் ஜேக்ஸன் ஹைட்ஸைச் சேர்ந்த மரியன் ஃப்ளோர்ஷெய்ம் (MARION FLOSHEIM OF JACKSON HEIGHTS, NEW YORK), பயணத்திற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய பாபாவால் நியமிக்கப்பட்டார். 'மெஹர் பாபா விருந்தோம்பல் குழு' (MEHER BABA HOSPITALITY COMMITTEE) உருவாக்கப்பட்டது, மரியன் தலைவராகவும், ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் (FRED WINTERFELDT) துணைத் தலைவராகவும், நியூயார்க் நகரில் பாபாவின் அன்பர்கள் குழுவிலிருந்து ஏழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டு, அவர்களின் உதவியுடன், பாபா மற்றும் நான்கு ஆண் மண்டலிக்கான செலவுக்காக மதிப்பிடப்பட்ட **$12,000** திரட்டப்பட்டது. மர்ட்டில் பீச் மையத்தில் எலிஸபெத் பேட்டர்ஸன் (ELIZABETH PATTERSON IN MYRTLE BEACH), லாஸ் ஏஞ்சலஸில் ரத் வைட் (RUTH WHITE IN LOS ANGELES), ஓஹாயில் ஆக்னஸ் பெரோன் (AGNES BARON IN OJAI) மற்றும் ஸான் ஃபிரான்சிஸ்கோவில் லட் டிம்ஃபில் (LUD DIMPFL) ஆகியோரால் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஐவி டியூஸ் (IVY DUCE), டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS) இருவரும் ஒரு விளம்பரக் குழுவை உருவாக்கினர். ஐரோப்பாவில், வில் பேக்கெட் லண்டனில் (WILL BACKETT IN LONDON) வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்; சுவிட்சர்லாந்தில் குறுகிய வருகைக்காக, ஹெடி மெர்டென்ஸ் (HEDI MERTENS), ஐரீன் பில்லோ (IRENE BILLO)

இருவரும் ஸூரிக்கில் (ZURICH) பாபா தங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தனர். ஆஸ்திரேலியாவில், ஸிட்னி மற்றும் மெல்போர்னில் தங்குமிடங்கள், சந்திப்புகள் மற்றும் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை ஃபிரான்சிஸ் பிராபஸோன் (FRANCIS BRABAZON), பில் லெ பாஜ் (BILL LE PAGE), ஈனா லெமன் (ENA LEMMON) ஆகியோர் கவனித்துக் கொண்டிருந்தனர்.

மண்டலி, பாபாவின் உடல்நிலை குறித்து அக்கறை கொண்டிருந்தனர், மேலும் அவரது உணவு முறை பற்றிய விபரங்களை, மணி 1956 மார்ச் 9 அன்று ஐவி டியூஸிற்கு எழுதியிருந்தார்:

நியூயார்க் குழுவினர், பாபாவுக்கான உணவுக் குறிப்புகளைக் கேட்டு வருகின்றனர். இந்த நாட்களில் பாபா சூடான, காரமான உணவுகளை (நாம் விரும்புவது போல்) உண்பதில்லை, அதனால் இந்திய உணவைத் தயார் செய்ய வேண்டிய தேவையில்லை என்று நான் அவர்களிடம் கூறியுள்ளேன். சீன உணவுகள் மற்றும் ஃபிரெஞ்ச் வகை தயாரிப்பில் பிரியம் அதிகம். அவரும் மண்டலியும் மீன் உண்பது பழக்கம், ஆனால் மாமிசம் இல்லை. பாபா, மென்மையான மீன்கள் (எலும்பு இல்லாதது) மற்றும் மென்மையாக சமைத்த சாதம் போன்றவற்றை விரும்பி உண்பது உண்டு. அவருக்குத் தயிர் பிடிக்கும், அதிக காய்கறிகளைப் (குறிப்பாக பட்டாணி, பீன்ஸ் போன்றவை) பொருட்படுத்துவதில்லை. அதைத் தவிர, கவலைப்பட வேண்டாம் என்று நான் அவர்களிடம் கூறினேன் - பாபாவின் சுவை எளிமையானது, (அவருக்கு கடினமான மிருதுவான உணவு வகைகளில் பிடித்தம் இல்லை) மற்றும் அமெரிக்க உணவு, அதன் மக்களைப் போலவே, 'பரந்த மனம்' படைத்தது. பாபா மிகவும் குறைந்த அளவில் உண்பவர் மட்டுமின்றி, எங்களுக்குத் தெரிந்து வேகமாக உண்பவர்களில் ஒருவர்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் பாபாவின் உணவு முறை குறித்து, 1956 ஜூன் 4 அன்று மணி, ஐவி டியூஸுக்கு எழுதினார்:

பாபாவின் உணவுப்பழக்கம் பற்றிய அன்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, நான் கிட்டிக்கு, பருப்பு மற்றும் பலவற்றை கப்பல் மூலமாக அனுப்பினேன்; ஆனால் பயணத் திட்டத்தைப் பற்றி பேச்சு எழுந்த போது, இந்த விஷயமும் விவாதத்தில் இடம் பெற்றது; பாபா நிச்சயமாக இவற்றை அனுப்ப விரும்பவில்லை. இங்கு எப்பொழுதும் பருப்பும் சாதமும் உண்பதால், அவர் மேற்கில் இருக்கும் போது, உணவில் முழுமையான மாற்றம் வேண்டும் என்ற ஆர்வத்தில், மேற்கத்திய உணவுகளை உண்ணுவார். உணவைப் பற்றி எவரும் கவலைப்படுவதை பாபா விரும்பவில்லை, மேலும் கிட்டி (மற்றும் நியூயார்க் போன்ற பிற இடங்களில் வாழும் அன்பர்களும்) பாபாவிற்காக உணவு தயார் செய்வதில் நேரத்தை செலவிடுவதை அவர் விரும்பவில்லை, ஏனெனில் நீங்கள் அனைவரும் இயன்றவரை பாபாவுடன் இருக்க வேண்டும் என்று அவர்

விரும்புகிறார். தயவுசெய்து இதை 'எனர்ஜி'க்கு அனுப்பவும் - நியூயார்க் குழுவிற்கு எனது அடுத்த கடிதத்தில் இதை மீண்டும் கூறுகிறேன்...

அமெரிக்க அதிபர் டுவைட் ஐஸனோவரின் (DWIGHT EISENHOWER) அழைப்பை ஏற்று, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, ஜூலை 6ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்ள இருந்தார். பாபா, தனது வருகை நேருவின் வருகையுடன் ஒரே நேரத்தில் இணைந்து போவதை விரும்பாமல், முதல் திட்டத்தின்படி, ஜூலை முதல் வாரத்தில் இந்தியாவிலிருந்து புறப்படுவதற்கு பதிலாக, ஜூலை நடுப்பகுதியில் செல்ல முடிவு செய்தார். (பின்னர், ஐஸனோவரின் உடல்நலக்குறைவு காரணமாக, நேருவின் பயணம் டிசம்பர் வரை ஒத்திவைக்கப்பட்டது.)

எரச், டாக்டர் நீலு இருவருடன் 1956 ஜூலை 16 அன்று, பாபா சத்தாராவிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, அன்று ஆஷியானாவில் தங்கினார். ஆதி சீனியரும் மெஹர்ஜியும் அவருடன் அங்கு இணைந்தனர். பாபாவின் ஏகாந்தவாசம் இன்னமும் தொடர்ந்தது. அவருக்குப் பிரியாவிடை அளிப்பதற்காக மும்பை விமான நிலையம் வர அனுமதி கோரி, இந்தியா முழுவதிலுமிருந்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்தாலும், பாபா அதை அனுமதிக்கவில்லை. அவர் மேற்கத்திய அன்பர்களுக்கு சகவாசத்தை வழங்குவதற்காக, ஒரு மாதம் தமது ஏகாந்தவாசத்தை நிறுத்துவதாகக் குறிப்பிட்டார்.

அதே நள்ளிரவில் பாபா, எரச், நீலு, ஆதி சீனியர், மெஹர்ஜி ஆகியோருடன், ஸாந்தா குரூஸ் (SANTA CRUZ) விமான நிலையத்திலிருந்து, ஏர் இந்தியா விமானம் 103இல் (சிக்கன வகுப்பில்) பயணம் செய்தார். லண்டன் செல்லும் வழியில், டமாஸ்கஸ் (DAMASCUS), பெய்ரூட் (BEIRUT) ஆகிய நகரங்களில் விமானம் தலா ஒரு மணி நேரம் நிறுத்தப்பட்டது. பிற்பகலில் அவர்கள் ஸூரிக் க்ளோட்டென் (KLOTEN AIRPORT AT ZURICH) விமான நிலையத்தை வந்தடைந்து, அங்கு பாபா சுமார் 35 ஐரோப்பிய அன்பர்களை சந்தித்தார். ஹெடி மெர்டன்ஸ், ஐரீன் பில்லோ, ஹெலன் டாம் (HELEN DAHM), மேக்ஸ், கிஸேலா ஹெஃப்லிகர் (MAX & GISELA HAEFLIGER) போன்ற நெருங்கிய அன்பர்களும், அவர்களது மூன்று மகள்களும் விமான நிலையத்தின் மாடி முகப்பிலிருந்து பாபாவும், மண்டலியும் விமானத்திலிருந்து இறங்கி, ஐரீன் ஏற்கனவே முன்பதிவு செய்திருந்த 'சந்திப்பு அரங்கத்திற்கு' நடந்து செல்வதைக் கண்டுகளித்தனர். பாபா, ஹெடி, ஐரீன், மேக்ஸ் மற்றும் பிறரை ஒவ்வொருவராகத் தழுவிக் கொண்டார். ஹெடி தனது மகள் அன்னகாத்தரினா (ANNAKATHARINA) மாலை 4:15 மணிக்கு, பாபா வரும் நேரத்திற்கு முன்னால் வர முடியாததால், பாபாவை சந்திக்கத் தவறிவிடுவார் என்ற மனச்சஞ்சலத்தில் இருந்தார்; ஆனால் பாபாவின் விமானம், புயல்

காரணமாக ஒரு மணி நேரம் தாமதமாக வந்ததால், அவரும் பாபாவின் அரவணைப்பைப் பெற முடிந்தது.

ஹெடியின் மகன் டொபி (TOBY), பாபாவிற்கு மாலை அணிவித்தார், பாபா தனது அன்பர்களுடன் வேடிக்கையான முறையில், தோழமை உணர்வுடன் உரையாடலில் ஈடுபட்டார். அவர் எரச்சின் உடல் வலிமை, குழந்தை போன்ற சாந்த குணம் இரண்டையும் குறிப்பிட்டு, தொடர்ந்து எடுத்துரைத்தார்: "**இவை அனைத்தும் கற்பனை, கற்பனையில் மட்டுமே உளதாயிருக்கும். நீங்கள் உடல் ரீதியாக பார்ப்பது பாபா அல்ல; அது எனது பௌதீக உடல் மட்டுமே - வெறும் ஒரு சிறிய உடை! பாபா எல்லையற்றவர்; நீங்கள் இந்தப் பௌதீக கண்களால் அவரைப் பார்க்க முடியாது.**"

1954ஆம் ஆண்டு மெஹராபாத்தில், பாபா தனது மேல் கை முன்தசையை உணரக் கூறி, '**நான் எவ்வளவு வலிமையாக இருக்கிறேன்**' என்பதைக் கண்டறிந்த மேக்ஸின் அனுபவத்தை விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா மேலும் கூறினார், "**நான் மிகவும் வலிமையானவன், எல்லாவற்றிலும் சக்திவாய்ந்தவன்! ஆனால் அதே நேரத்தில் நான் பலவீனமாகவும், ஒரு குழந்தையைப் போல மென்மையாகவும் இருக்கிறேன்.**"

பாபாவின் வரவேற்புக் குழுவில் பங்கெடுத்தவர்களில் டாக்டர் அரவிந்த் வாஸவதா (DR. ARWIND VASAVADA), நரிமனின் நண்பர், பாபாவை இதற்கு முன்னர் 1942இல் சந்தித்தார். அவர் மனோதத்துவ ஆய்வாளர் டாக்டர் கார்ல் யுங்கிடம் (CARL JUNG) மேற்கல்வி பயில்வதற்காக ஸூரிக் சென்றிருந்தார். மேலும், முதல் முறையாக பாபாவை சந்திக்க, டாக்டர் மெடார்ட் பாஸ் (DR. MEDARD BOSS), டாக்டர் ஷூபெல் (DR. SHOEBEL) ஆகியோர் வந்திருந்தனர். 53 வயதான பாஸ், ஸூரிக் பல்கலைக்கழகத்தில் உளவியல் சிகிச்சைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் அவர் இந்தியாவில் மேற்கொண்ட இரண்டு பயணங்களில், பல்வேறு குருக்கள், ரிஷி, முனிகளுடன் உரையாடிய நிகழ்வுகளைப் பற்றி 'ஒரு மனநல மருத்துவர் இந்தியாவைக் கண்டறிகிறார்' (A PSYCHIATRIST DISCOVERS INDIA) என்ற புத்தகத்தை எழுதினார். ஐரீன் பில்லோ 'காட் ஸ்பீக்ஸ்' (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பிரதியை டாக்டர் பாஸுக்கு அனுப்பி வைத்தார்; ஆனால் அவர் அதை படிக்காமல் திருப்பி அனுப்பினார்.

ஸூரிக் குழுவிடம் விடைபெறுவதற்கு முன்பு, பாபா கூறினார், "**இந்தப் பயணத்திற்காக நான் எனது முழுநிறை ஏகாந்தவாசத்தில் குறுக்கிட வேண்டியதாயிற்று, ஆனால் நான் திரும்பிச் சென்று 1957 பிப்ரவரி 15ஆம் தேதி வரை ஏகாந்தவாசத்தைத் தொடருவேன்.**"

புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கவே, பாபா ஒவ்வொருவரையும் மீண்டும் தழுவினார். கிஸேலா ஹெஃப்லிகர் நினைவு கூர்ந்தது போல: "பாபா, நம் அனைவரின் மீதும் தமது அன்பைப் பொழிந்தார். காலம் மிக விரைவாக கடந்து சென்றது; அவரது அளப்பரிய அன்பால் நிறைந்த அரவணைப்பைத் தவிர, இதர அனைத்தும் மறைந்துவிட்டது."

ஐரீன், ஹெடி, மேக்ஸ் மூவரும் பாபா மற்றும் மண்டலியுடன் லண்டனுக்குச் சென்றனர். விமானத்தில் பாபா ஒவ்வொருவருக்கும் அவரவர் இருக்கைகளைத் தீர்மானித்தார். விமானம் புறப்பட்டு ஒரு குறிப்பிட்ட உயரத்தைச் சென்றடைந்த பிறகு, பாபா தனது கைகளை ஜன்னலில் விரித்து, சிறிது நேரம் வெளியே உற்று நோக்கினார், அவரது முகம் ஒரு கருத்து முனைப்புடைய தோற்றத்தைக் கொண்டிருந்தது; அவர் முழு தேசத்தையும் கவனிக்க விரும்பியது போல தோன்றியது. வெகு விரைவில், பாபா அவர்களின் இருக்கைகளை மாற்றினார்: ஹெடி, ஐரீனின் இருக்கையிலும், ஐரீன் நகர்ந்து பாபாவின் பின் பக்கத்திலும், மேக்ஸ், டாக்டர் நீலுவிற்கு அருகில் பாபாவிற்கு முன்னால் ஹெடியின் இருக்கையிலும் அமர்ந்தார். "**மேக்ஸ், நீலு இருவரும் பழங்கால நண்பர்கள்**" என்று பாபா குறிப்பிட்டார்.

ஒரு கட்டத்தில், பாபா, மேக்ஸுடன் நிகழ்த்திய உரையாடலின் போது, அஸிஸியின் புனித ஃபிரான்சிஸைப் பற்றி கூறுகையில் '**அவர் ஒரு பரிபூரண குருநாதர் (சத்குரு)**' என்பதை வெளிப்படுத்தினார்.

அன்று மாலை, விமானம் பாரிஸ் நகரை நெருங்கும் நேரத்தில் பாபா, பாரிஸ், ஸூரிக் நகரை விட குளிர்ச்சியாக இருக்கும் என்று நினைத்து மேக்ஸிடம், "**நான் கால் ஸாக்ஸ் அணிந்து கொள்ளலாமா?**" என்று கேட்க, அவர் 'ஆம்' என்றதும், பாபா அவ்வாறே செய்தார்; ஆனால் வெப்பநிலை அதிகமாக இருந்ததால் அது தவறு என்று நிரூபிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சி.ஈ. டப்ரன்ஃபா (C.E. DUBRUNFAUT) என்று அழைக்கப்பட்ட ஃபிலிப் டுபுயிஸின் ஃபிரெஞ்சு நண்பர், மேக்ஸைத் தொடர்பு கொண்டு, மெஹர் பாபாவைக் காரணம் காட்டி, பல ஆண்டுகளாக அவர் எதிர்கொண்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட (மாய மந்திரம் சார்ந்த) அனுபவங்களை மேக்ஸிடம் விவரித்தார். அவரை பாபா சந்திக்க விருப்பம் தெரிவித்தால், விமான நிலையத்தில் தான் காத்திருப்பதாகத் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தி எழுதிய கடிதத்தை மேக்ஸ், பாபாவிடம் காட்டியபோது, அவர் அதற்கு இணக்கம் தெரிவித்தார்; விமானம் பாரிஸ் நகரில் தரையிறங்கியபோது, அவரை சிறிது நேரம் சந்தித்தார். அனைவரும் விமான நிலைய உணவகத்தில் ஒரு மேசையில் அமர்ந்திருந்த வேளையில், பாபா 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் படித்தீர்களா என்று டப்ரன்ஃபாவிடம் கேட்டு, அதைப் படிக்குமாறு அறிவுறுத்தினார். "**உங்களுக்கு என்னுடன் சில தொலைதூரப் பழங்கால**

**தொடர்புகள் உள்ளன**" என்று பாபா அவரிடம் தெரிவித்தார். 'காட் ஸ்பீக்ஸ்' புத்தகத்தை நான்கு முறை படிக்குமாறு மேக்ஸ் அறிவுறுத்தப்பட்டார்.

டப்ரன்ஃபா வரவழைத்த ஒரு டம்ளர் ஆரஞ்சு ரசத்தைச் சுட்டிக்காட்டி பாபா கூறினார், "**பழங்கால ஆன்மீக குருநாதர்கள் தங்கள் சீடர்களுடன் அமர்ந்து பழரசம் அருந்துவதன் மூலம் அவர்களுடனான அன்பை வெளிப்படுத்தினர்.**" தொடர்ந்து பாபா, மதுவின் போதையை தெய்வீக அன்பின் மூலம் அடையப்பெறுவதுடன் ஒப்பிட்டார்: "**மது போதையில் ஒரு மனிதன் தன்னை மறந்துவிடுகிறான், ஆனால் தெய்வீக அன்பின் போதையில், ஒருவர் தெய்வீக அன்பில் தன்னை இழந்து அனைத்தையும் மறந்துவிடுகிறார்.**"

பாபா, இந்த வார்த்தைகளுடன் டப்ரன்ஃபாவிடமிருந்து விடைபெற்றார்: "**நீங்கள், உங்கள் பழங்கால பாபாவை நேசிக்க ஆரம்பிக்கலாம்!**"

பாரிஸ் நகரிலிருந்து விமானத்தில் பயணத்தைத் தொடர்ந்து, இரவு உணவை முடித்த பின்னர், இரவு 8:15 மணிக்கு லண்டனில் தரையிறங்கினர். 1956 ஜூலை 17 அன்று வில்-மேரி பேக்கெட், சார்லஸ் பர்டம், டிலியா, மிண்டா, அவரது புதிய கணவர் க்ளின் பார்டன் (GLYNN BARTON) ஆகியோர் பாபாவை வரவேற்கக் காத்திருந்தனர். நான்கு கார்களில், பாபாவும் மண்டலியும் 1952இல் பாபா தங்கியிருந்த ரூபன்ஸ் ஹோட்டலுக்கு (RUBENS HOTEL) அழைத்துச் செல்லப்பட்டனர். விமான நிலையத்திலிருந்து பாபாவின் கார் முதலில் புறப்பட்டாலும், ஹோட்டலுக்கு கடைசியாக வந்த வேளையில், அங்கு அனைத்து அன்பர்களும் அவரை வரவேற்கக் காத்திருந்தனர்.

மூன்று நாட்கள் இடைவிடாத பயணத்தால், ஹோட்டலுக்கு வந்த வேளையில் பாபா, மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். அவர் தனது அறைக்குச் செல்வதற்காக, கூட்ட நெரிசலான லிஃப்ட்டின் பின்புறம் நின்றுகொண்டிருந்தார். "இதர ஹோட்டல் விருந்தினர்களுக்கு மத்தியில் மிகவும் சோர்வடைந்த நிலையில் அவர் தோற்றமளித்தது, பரிபூரணத்தை உள்ளடக்கிய அந்தப் பணிவுத் தன்மைக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு" என்று வில் பேக்கட் பதிவு செய்திருந்தார்.

பாபாவிற்கு சௌகரியமான சொகுசு அறை ஒன்றும், மண்டலிக்கு மற்றுமோர் அறையும், தரிசனம் மற்றும் நேர்காணல்களுக்காக, கீழ் தளத்தில் ஒரு பெரிய மண்டபமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (வில், மேரி, டிலியா, கீத் ஸெக்கர் - KEITH SECKER ஆகியோர் பாபாவுடன் ஹோட்டலில் தங்கினர்.) சோர்வாகக் காணப்பட்டாலும், அவருக்காக ஹோட்டலில் காத்திருந்தவர்களைத் தனது அறைக்கு அழைத்த வேளையில், விமான நிலையத்தில் அவரை சந்தித்த குழுவினரும் அழைக்கப்பட்டனர்; அவர்களுடன் சுருக்கமாக உரையாடலை நிறைவு செய்து, அடுத்த நாள் காலையில் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்குவதாகக் கூறினார்.

ஹோட்டலில் தங்கியிருந்த குழுவில் ஃப்ரெட் மார்க்ஸ் (FRED MARKS), டாம் & டோரதி ஹாப்கின்ஸன் (TOM & DOROTHY HOPKINSON), சார்லஸ் பர்டமின் மகன் எட்மண்ட் (EDMOND), டிலியாவின் சகோதரர் ஜாக் டிலியான் (JACK DELEON) மற்றும் அனிதா & ரோஜர் வியய்யார்ட் (ANITA & ROGER VIEILLARD) ஆகியோரும் அடங்குவர். பாபா, தனது சகோதரர் ஆதி ஜூனியர், அவரது மனைவி ஃபிரீனி, சமீபத்தில் லண்டனுக்குச் சென்ற அவர்களின் மகன் தாரா (DARA) ஆகியோரையும் சந்தித்தார். (ஆதி ஜூனியர் தொல்பொருள் வணிகத்தில் ஃபிரெட் மார்க்ஸுடன் பங்குதாரராகப் பணிபுரிந்தார்.)

ஜூலை 18 அன்று, காலை 9:30 மணிக்குத் தொடங்கி, பதினான்கு தனிப்பட்ட நேர்காணல்களை பாபா வழங்கினார். முதலில் அழைக்கப்பட்டவர் ஹெடி. பாபா, அனிதா & ரோஜர் இருவரிடம் ஃபிலிப் டுபுயி குறித்து பேசினார். ஃபிலிப், 1952ஆம் ஆண்டு மர்ட்டில் பீச் மையத்தில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார், மேலும் 1954இல் மெஹராபாத்தில் நடந்த ‘மூன்று வியத்தகு வாரங்கள்’ (THREE INCREDIBLE WEEKS) நிகழ்ச்சியில் பங்கேற்ற மேற்கத்திய அன்பர்களில் ஒருவராகவும் இருந்தார். ரோஜரிடம், டுபுயியைத் தொடர்புகொண்டு, முடிந்தால் பாபாவை ஐந்து மணிக்கு ஐந்து நிமிடங்கள் சந்திக்குமாறு அறிவுறுத்தினார். பாபாவைப் பார்க்க வில் பேக்கெட், ஜோஃபர் (JOFFRE) என்பவரை அழைத்து வந்தார். சத்தாராவில் பாபாவை சந்தித்த மான்செஸ்டரைச் சேர்ந்த கீத் ஸெக்கர் என்ற இளைஞனுக்கு அடுத்ததாக ஒரு பேட்டி வழங்கப்பட்டது.

அர்னவாஸின் சகோதரர் ஹோமா தாதாசாஞ்சியும் அப்போது லண்டனில் இருந்தார். அவரது சகோதரர் நோஸர் விமான விபத்தில் உயிரைத் துறந்ததால் அவர் மிகுந்த துயரத்தில் காணப்பட்டார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினார்: “**அவரது இறுதி மூச்சு வரை நோஸர் என்னை நினைவு கூர்ந்து, இப்போது என்னுடன் இருக்கிறார், எனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். அனைவரும் என்னுள் இருக்கின்றனர், கவலைப்பட வேண்டாம். அவர் என்னிடம் வந்துவிட்டார்.**”

ஐரீன் பில்லோவை தனிப்பட்ட முறையில் சந்தித்த பிறகு, பாபா, ஜே.எம். பொனெல் (J.M. PUINELL) என்பவரிடம் மூன்று வகையான அறிவு மற்றும் திட நம்பிக்கையைப் பற்றி விளக்கினார்:

1. **அறிவுப்பூர்வமாகப் புரிந்துகொள்வது** (INTELLECTUAL)
2. **பார்வை மூலமாகத் தெரிந்துகொள்வது** (THROUGH SIGHT)
3. **ஏக இறைவனாக மாறுவதன் மூலம் அறிந்துகொள்வது** (BY BECOMING)



லண்டன் விமான நிலையம், **1956**, ஹோமா தாதாசாஞ்சி வலதுபுறம்
(LONDON AIRPORT, 1956, HOMA DADACHANJI FAR RIGHT)



ரூபென்ஸ் ஹோட்டல், லண்டன், **18** ஜூலை **1956**, மேரி பேக்கட் (இடதுபுறம்)
(RUBENS HOTEL, LONDON, 18 JULY 1956, MARY BACKETT – LEFT SIDE)

31 வயதான எட்மண்ட் பர்டம், ஒரு நடிகர், இரண்டு சிறு குழந்தைகளுடன் சமீபத்தில் விவாகரத்து பெற்றார். பாபா அவரிடம், **“பற்றுதல்களைப் புறக்கணிக்காமல், அதே வேளையில் அவற்றிற்கு அடிமையாகி விடாமல், என்னை நினைவுகூருங்கள்”** என்று கூறினார்.

எட்மண்ட் பதிலளித்தார், “நிச்சயமாக, நான் எனது தந்தையால் உங்கள் அன்பு மற்றும் போதனைகளின் சூழலில் வளர்க்கப்பட்டேன்.”

47 வயதான ராபர்ட் அன்தோனி (ROBERT ANTONI) மற்றும் அவரது மனைவி யுவோன் (YVONNE, 52) என்ற ஃபிரெஞ்சு தம்பதியர், பாரிஸிலிருந்து ஆண்ட்ரீ அரோனுடன் (ANDREE ARON) பாபாவை சந்திக்க வந்திருந்தனர். 1940ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் நிகழ்ந்த ஜெர்மன் விமானத் தாக்குதலின் போது, பாபாவைப் பற்றி யுவோன் முதன்முதலில் கேள்விப்பட்டார். தாக்குதல் நிகழ்ந்த வேளையில் அவர் ஒரு நண்பரைப் பார்க்கச் செல்லவே, இருவரும் அவசரமாக அடித்தள புகலிடத்திற்குள் விரைந்தனர். விமான தாக்குதலின் எச்சரிக்கை மணி ஓய்ந்த அந்த நேரத்தில், லிஃப்ட் செயல்படாததால், அவர்கள் ஆறாவது மாடிக்கு திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு செய்ததன் மூலம், அவர்கள் ஒரு வயதான பெண்மணிக்கு நான்காவது மாடியில் அமைந்த அவரது குடியிருப்பைச் சென்றடைய உதவ முடிந்தது; அவர்கள், அவரது குடியிருப்பின் முன் வாசலுக்கு வந்ததும், அந்தப் பெண்மணி தனது கைகளைக் கூப்பி, “நன்றி, பாபா” என்று கூறினார்.

“பாபா யார்?” யுவோன் வினவினார்.

அந்தப் பெண்மணி உடனே அவரிடம் கொடுத்த ஒரு சிறிய காகிதத்தில் ‘ஸ்ரீ மெஹர் பாபா, இந்தியாவின் மெஹராபாத் அல்லது நியூயார்க் நகரில் இளவரசி நோரினா மேட்சபெல்லிக்கு எழுதுங்கள்’ என்று அச்சிடப்பட்டிருந்தது.

இரண்டாம் உலகப் போரின் போது, வெளிநாடுகளுடனான அவர்களின் கடிதத் தொடர்பு அனுமதிக்கப்படவில்லை, ஆனால் 1945இல் போர் முடிந்ததும், யுவோன் உடனடியாக, பாபாவிற்குக் கடிதம் எழுதவே, ஆதி சீனியரிடமிருந்து அடையப்பெற்ற பதில் கடிதத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: **“நான் உங்களை அறிவேன், உங்களைப் பாதுகாத்து வருகிறேன்.”**

யுவோன் இறுதியாக பாபாவை சந்தித்தபோது, அவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: “நாங்கள் ஒரு சிறிய வரவேற்பு அறையை நோக்கிச் சென்றோம், அங்கு பாபா எங்களுக்காகக் காத்திருந்தார்; ஒரு ஸோஃபாவில் அமர்ந்திருந்த அவரைப் பார்த்தபோது, நான் ஒரு ஒளிமயமான மனிதனைப் பார்ப்பது போன்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அறை வெள்ளை விளக்கு வெளிச்சத்தால் நிரம்பி இருந்தது.”

ராபர்ட் அன்தோனி தீயொழுக்கம் உடைய இளைஞர்களுடன் பணிபுரிய நேர்ந்ததால், தனது பணியில் மனமுடைந்து காணப்பட்டார்; பாபா அவரிடம் கூறினார்: **“அவர்களால் நீங்கள் தோல்வியைத் தழுவக் கூடாது; மாறாக**

**நீங்கள் அவர்களை எழுச்சியுறச் செய்து, அவர்களின் இதயங்களில் கடவுளைத் தேடத் தூண்ட வேண்டும். இதயத்தின் வார்த்தைகளுக்கு மொழி முக்கியமில்லை. கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவர் எங்கும் இருக்கிறார். அவருக்கு வார்த்தைகள், மொழிகள் எதுவும் தேவையில்லை, அவர் நமது உதடுகளிலிருந்து வெளிவரும் பிரார்த்தனைகளுக்குச் செவிமடுப்பது இல்லை, ஆனால் நம் இதயத்தின் குரலைக் கேட்கிறார்; எப்பொழுதும், பாதகமான சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருங்கள்; எந்தக் குழப்பமும் இல்லாத நிலையில், நீங்கள் அமைதியாக இருப்பதற்கான உங்கள் திறனை சோதிக்க முடியாது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள், ஒருவர் பிறரை மகிழ்விக்க முயற்சிக்க வேண்டும்.**"

ஆண்ட்ரீ நினைவு கூர்ந்தார், "ராபர்ட் என்னைப் போலவே உணர்ச்சிவசப்பட்டார். நாங்கள் இருவரும் இனம் புரியாத ஆனந்தத்தில் அழுது கொண்டிருந்தோம்." அவர்களின் நேர்காணலுக்குப் பிறகு, தம்பதியர் அதே மாலையில் பாரிஸ் நகருக்குத் திரும்பிச் சென்றனர்.

குடும்பங்களைப் பொறுத்தவரை, பாபாவின் அணுகுமுறை தனிப்பட்டது, அனைத்தையும் ஒன்றாக அரவணைக்கும் தன்மையுடையது; மேலும் அவர் கணவன்-மனைவி இருவரையும் ஒன்றாகத் தழுவியபோது, தம்பதியர் தங்கள் திருமணத்தில் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்ததாக அடிக்கடி உணர்ந்தனர்.

டாம் ஹாப்கின்ஸன் என்ற பத்திரிகையாளர், 1952இல் பாபாவை முதன்முதலில் சந்தித்தார். இந்த முறை அவர் பாபாவைத் தழுவியபோது, இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் அவரைத் தழுவியதை நினைத்துப் பார்த்தேன்; ஒருவர் மென்மையும், திடத்தன்மையும் இணைந்த அவரது உடலைத் தழுவும்போது, எப்பொழுதும் உணர்ந்த விசித்திரமான உணர்வை நான் உணர்ந்தேன்; அது மிகவும் உண்மையானது; கண்ணுக்குப் புலப்படாதது."

ஹாப்கின்ஸனிடம் அவர் ஏதாவது சொல்ல விரும்புகிறாரா என்று கேட்டபோது கூறினார், "பாபா, உங்களைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் என்னால் உங்களை கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியாது, உங்களைக் கடவுளாக அங்கீகரிக்கும் அளவுக்கு எனது மனம் பக்குவம் அடையவில்லை, ஆனால் நீங்கள் எனக்காக செய்த அனைத்திற்கும் நன்றி."

பாபா கூறினார், "**இதனால் என்னவாகும்? ஒவ்வோர் இரவும் நீங்கள் படுக்கைக்குச் செல்லும் போது, ஒரு நிமிடம் என்னைப் பற்றி சிந்தியுங்கள். ஆனால் இப்போது என்னைப் பார்ப்பது போல நினைவுகூராதீர்கள்; எனது உண்மை நிலையை மனத்திரையில் கொண்டு வாருங்கள். நீங்கள் என்ன செய்தாலும் எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிடுங்கள். நல்லது தீயது எதுவாயினும், கடவுள் எல்லாவற்றையும் அறிவார், எனவே கவலை இல்லாமல், திட நம்பிக்கையுடன் இருங்கள்; நான்தான் உங்கள் இதயத்தில்**

**அந்த வார்த்தைகளை வைத்தேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் படுக்கைக்குச் செல்லும் போது, 'நான் பாபாவை பாபாவாக ஒவ்வொருவரிலும், ஒவ்வோர் இடத்திலும் பார்க்க வேண்டும்' என்று சிந்தனை செய்யுங்கள். ஒரு நாள் நீங்கள் என்னைக் காண்பீர்கள்.**"

பனாமாவைச் சேர்ந்த ஓட்டிலியா டி தெஜெய்ரா (OTILIA DE TEJEIRA), **1952**ஆம் ஆண்டு, மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்தார். அவர் லண்டனுக்கு வந்து பாபாவிடம், "நீங்கள் எனக்கு நல்ல பல உதவிகளைச் செய்திருக்கிறீர்கள்" என்று கூறினார்.

"உங்கள் அன்புதான் அதைச் செய்தது" என்று பாபா பதிலளித்தார்.

ஹர்ஜீவன் லாலின் மகன்கள் இந்தர் (INDER), சுகந்த் (SUGANDH) இருவரும் லண்டன் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்தனர். அவர்கள் ஹோட்டலுக்கு வந்து பாபாவை சந்தித்தபோது, அவர்களிடம் பாபா இவ்வாறு வலியுறுத்தி கூறினார்: "**சபலத்திலிருந்து விலகி இருங்கள், புனிதமான வாழ்க்கையைப் பேணுங்கள், உங்களால் இயன்றவரை அடிக்கடி என்னை நினைவுகூருங்கள்.**"

ஃப்ரெட் மார்க்ஸ், பாபா மீதான அவருடைய அன்பு அதிகரித்ததாகக் கூறினார், பாபா அந்தச் செய்தியால் மகிழ்ச்சியடைந்து, அவரைத் தழுவிக்கொண்டார்.

அதீத அன்பால் ஆட்கொள்ளப்பட்ட மற்றுமோர் அன்பர் மோலி ஈவ் (MOLLIE EVE). அவர் தனது முழுக் குடும்பத்துடன் வந்தார். பாபாவின் முன்னால் மண்டியிட்டு நின்றபோது அவர் இவ்வாறு நினைவுகூர்ந்தார்: "நான் எனது கண்களை மூடியிருக்க வேண்டும். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் அதைச் செய்தேன். பாபாவின் கைகள் எனது முகத்தைச் சுற்றி இருந்தது போன்ற ஸ்பரிசத்தை உணர்ந்தேன் - அவரது அழகான, எழில் நிறைந்த கைகள், மிகவும் மென்மையாக இருந்தன - இறகுகளால் வருடியது போல் இருந்தது. இது என்னால் மறக்க முடியாத ஒன்று. நான் அடிக்கடி அதை நினைவில் கொள்கிறேன். அந்தக் கைகளை இப்போதும் என்னால் உணர முடிகிறது."

சில நிதிச் சிக்கல்களைப் பற்றி பாபாவின் வழிகாட்டுதலை நாடிய ஒருவரிடம், அவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பாபாவின் நாமத்தை ஒவ்வொரு நாளும் ஏழு முறை உரத்த குரலில் உச்சரிக்குமாறு கூறினார். இருப்பினும், பாபாவின் அறிவுரை சில எதிர்ப்பைத் தூண்டியது, ஏனெனில் அது அவரது குடும்ப வழக்கத்திற்கு இடையூறாக இருக்கும் என்று அந்த மனிதர் கூறினார். ஆனால் பாபா தனது ஆன்மீக நிவாரணத்தின் அவசியத்தையும் எளிமையையும்

வலியுறுத்திய வேளையில், அந்த மனிதர் அதைப் பின்பற்ற முயற்சிப்பதாக இணக்கம் தெரிவித்தார். இவ்வாறு பாபாவுடனான அவரது 'ஒரு நிமிட' சந்திப்பு ஏழு நிமிடங்களாக நீடித்தது.

அன்று காலையில் பாபாவைக் கடைசியாகப் பார்த்தவர் மேக்ஸ் ஹெஃப்லிகர். பங்குத் தரகராக அவர் புரிந்த பணியைப் பற்றி பாபாவிடம் எடுத்துரைத்து, அவரது தொழில் குறித்து விவாதித்தார். மேக்ஸ் தான் கண்ட பல கனவுகளை பாபாவிடம் கூறியபோது, அவர் விளக்கினார், "**உங்கள் கனவுகளில் பாபாவை நீங்கள் காணவில்லை என்றால், அவற்றில் கவனம் செலுத்தாதீர்கள் அல்லது தேவையற்ற முக்கியத்துவம் அளிக்காதீர்கள்; உங்கள் கனவில் என்னைக் காண்பதானால், நான் உங்களுக்கு தெளிவான உத்தரவை வழங்கினால், மிக மிக தெளிவாக இருந்தால் மட்டுமே அதைப் பின்பற்றுங்கள்.**"

சுவிஸ் குழுவிடையே (மேக்ஸ், ஹெடி மற்றும் ஐரீன்) எப்பொழுதும் நல்லிணக்கம் நிலவவில்லை. மேக்ஸ் ஒரு அறிவார்ந்த வகையைச் சார்ந்த நபர், அதே வேளையில் ஐரீன் அதற்கு நேர்மாறாக இருந்தார். ஆனால் எப்படியோ லண்டனில் பாபாவுடன் இருந்தபோது, அமைதியும், நல்லிணக்கமும் திரும்பியது.

ஆங்கிலேய அன்பர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் இருந்தன. பாபா அவரது முதல் பொது வரவேற்புக்கு சற்று முன்பு, மதிய வேளையில், ஒரு மணி நேரம் அவர்களை சந்தித்தார். இங்கிலாந்தில் அவருடைய பணியைச் செய்ய, அவர்கள் பாபாவைத் தலைவராக நியமித்து, 'உலகளாவிய ஆன்மீகக் கழகம்' (UNIVERSAL SPIRITUAL LEAGUE) ஒன்றை நிறுவினர். கூட்டத்தில் ஒவ்வோர் அன்பரும் தத்தமது குறைகளை வெளிப்படுத்தவே, பாபா அடுத்த நாள் மீண்டும் அவர்களை சந்தித்து அவரது முடிவை தெரிவிப்பதாகக் கூறினார்.

1956 ஜூலை 18ஆம் தேதி மதியம், ஹோட்டலின் பெரிய வரவேற்பு அறையில் 120க்கும் மேற்பட்ட மக்கள் தரிசனத்துக்காக வந்தனர். வில், மேரி, சார்லஸ் மூவரும் பாபாவின் அருகில் அமர்ந்தனர், டோரதி, டாம், டிலியா ஆகியோர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஒரு நிமிடம் பாபாவை சந்திக்கச் செய்தனர். புதியவர்களை அறிமுகப்படுத்த, ஃப்ரெட் மார்க்ஸ் ஒரு பணியாளரைப் போல ஒளிரும் நீல நிறத்தில், தோள்பட்டை ஒன்றை மார்பின் குறுக்கே அணிந்த வண்ணம், வாசல் அருகே நின்றுகொண்டிருந்தார். பாபா பிரசாதமாக இனிப்புகள் மற்றும் அவரது புகைப்படங்களை அன்புடன் வழங்கினார். வந்தவர்களில் டாரியஸ் ஹொாடிவாலா (DARIUS HODIVALA), ஃபிலிஸ் (PHYLLIS, இவர் பாபாவை பல ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கு சால்லகோம்பில் (EAST CHALLACOMBE) சந்தித்தார்), ஆன் பவல் (ANN POWELL), தீனா பட்டேல் (DINA PATTEL, மினூ கராஸின் சகோதரி)

மற்றும் அவரது மகன் ஹோஷங் (HOSHANG), மார்கரெட் க்ராஸ்கேயின் சகோதரி, வில் பேக்கெட்டின் சகோதரி ஜாய்ஸ் பர்ட் (JOICE BIRD) மற்றும் அவரது குடும்பத்தினர், சார்லஸ் பர்டமின் மனைவி ஆன்டனியா (ANTONIA), மிலிஸென்ட் டீக்ஸ் (MILICENT DEAKES) மற்றும் நார்மன் ஃபிராங்க்ளின் (NORMAN FRANKLIN) ஆகியோரும் அடங்குவர்.

வில் பேக்கட், பாபாவின் வரவேற்பை பின்வருமாறு விவரித்தார்:

வரவேற்பு... ஒவ்வொரு விருந்தினரைப் பற்றிய பாபாவின் தனிப்பட்ட புரிதலை வெளிப்படுத்தியது. ஒருவருக்கு, ஆழ்ந்த குறிப்பிடத்தக்க பார்வை; வேறொருவருக்கு, கன்னத்தில் ஓர் அன்பான ஸ்பரிசம்; அல்லது, ஒருவேளை கையில் ஒரு மென்மையான வருடல். பாபா, அவர்களின் முதல் சந்திப்பில், கைகளைக் குலுக்கி வரவேற்கப்பட்ட சிலர், அன்பான அரவணைப்பை அடையப் பெற்றனர். அறிவுரையை எதிர்பார்த்த சிலருக்கு அவ்வாறு எதுவும் கிடைக்கவில்லை; மேலும் சிலர், தங்கள் நீண்டகால சிரமங்களை விளக்குவதற்குக் குறைந்தது பத்து நிமிடங்களாவது எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள், அவருடைய பரிச்சயமான ‘எனக்கு எல்லாம் தெரியும், நான் உங்களுக்கு உதவுவேன்’ என்ற ஆறுதல் மொழிக்கு செவிமடுத்தனர். நண்பர்கள் அல்லது குழந்தைகளுடன் பெற்றோர்கள் பாபாவிடம் முதன்முறையாக ஒன்றுதிரண்ட தருணத்தில், சிறு குழந்தையிலிருந்து தந்தை வரை, பாபா தமது பார்வையை சுழற்றி, அனைவர் மீதும் அவரது அன்பின் மழையைப் பொழிந்தது, நண்பர்கள், குழந்தைகள், குடும்பம் ஏன் அனைத்து மனித இனத்தின் மீதும் புத்துணர்வை வரவழைத்தது.

ஓர் இளம் பெண் தனது காதலனுடன் ஹோட்டலைக் கடந்து சென்று கொண்டிருந்த வேளையில், உள்ளே பாபாவை தரிசனம் செய்யக் காத்திருந்த வரிசையைப் பார்த்ததும் அவர்களும் அதில் இணைந்து கொண்டனர்.

அவர்கள் பாபாவை எதிர்கொண்ட போது, அவர் இருவரையும் வாழ்த்தினார். ஏன் என்று உணர்வுபூர்வமாக தெரியாமல், அந்தப் பெண், தனது கண்கள் முன்னால் ஒளிர்ந்த பிரகாசத்தைக் கண்டு, திடீரென பாபாவின் பாதங்களில் விழுந்து அழுதார். அந்த இளைஞனும் மண்டியிட்டு, அவர்களுக்கு என்ன நடக்கிறது என்ற திகைப்பில் ஆழ்ந்தார். பாபா அவர்கள் இருவரையும் தட்டிக் கொடுத்து, மதியம் முழுவதும் அவர்களைத் தனது அருகில் தரையில் அமர வைத்தார்.

இரண்டு இளம் ஓரினச்சேர்க்கையாளர்கள், ஒருவர் நன்கு அறியப்பட்ட ஓவியர், மற்றொருவர் நடனக் கலைஞர், இருவரும் தரிசனத்திற்காக நகர்ந்த வரிசையில் நின்றனர். இருவரும் டிலியாவின் நெருங்கிய நண்பர்கள், பாபாவின்

தரிசனத்திற்காக வருமாறு வற்புறுத்தி அழைக்கப்பட்டனர். அவர்கள் பாபாவை அணுகியதும், பாபா அவர்கள் இருவரையும் கண்டிக்கப் போகிறாரோ என்ற சந்தேக உணர்வில் வெளியேற நினைத்தவர்கள், இறுதியில் அங்கே இருக்க முடிவு செய்தனர். அவர்கள் அச்சத்தில் அவர் முன்னால் வந்தபோது, பாபா அவர்களைப் பார்த்து, கைகளை உயர்த்தி, "**தோழர்கள்**!" (CHUMS) என்று சைகை செய்தார். இருவரும் மிகுந்த நிம்மதியடைந்தனர், அவர்கள் கிட்டத்தட்ட முன்னோக்கித் தாவிச் சென்று பாபாவைக் கட்டி அணைத்தனர்!

பில் பிட்ஸ் (BILL PITS, 43), பாபாவைப் பற்றி முதன்முதலில் மனநல சிகிச்சையாளரும் ஊடகவியலாளருமான திருமதி கில்லிங்ஹாம் (MRS. GILLINGHAM, A PSYCHIC HEALER AND MEDIUM) மூலமாகக் கேள்விப்பட்டார். ஆனால் பாபா வருவதற்கு முன்னர், அவர் பில் பிட்ஸை எச்சரித்தார், "பில், மிகுந்த கவனத்துடன் இருங்கள். மெஹர் பாபாவின் கண்களை நேருக்கு நேர் உற்று நோக்காதீர்கள், ஏனெனில் அவர் உங்களைக் குருடாக்கக்கூடும்!" இதன் விளைவாக, பாபாவை சந்திக்க பில் அருகில் வந்ததும், அவர் கண்களை மூடிக்கொண்டு கீழே பார்த்தார்! சில கணங்களுக்குப் பிறகுதான் ஆர்வம் மேலோங்கி, அவர் கவனமாகக் கண்களைத் திறந்து பாபாவை வேகமாகப் பார்த்தார். வில் பேக்கட்டிடம் பாபா, "**அவரை கவனித்துக் கொள்ளுங்கள், உங்கள் கவனத்தின் கீழ் வைத்துக் கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

ஐடா போல்லி என்ற பெண்மணி (MADAM IDA POLLI) வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பாபாவுடனான அவரது முதல் தொடர்பு மாயமும் மர்மமும் நிறைந்ததாக இருந்தது. 1931ஆம் ஆண்டு, மத்திய லண்டன், 'ஸெவன் டயல்ஸ்' (SEVEN DIALS) மாவட்டத்தில் தொல்பொருள் விற்பனை செய்யும் அங்காடியை நிர்வகித்து வந்தார். ஒரு நாள் காலை அவர் அங்காடியிலிருந்த வேளையில், ஒரு காட்சியை அவர் கண் முன்னால் காண நேர்ந்தது. அது கிறிஸ்துவின் கண்களில் கண்ணீர் வழியும் முகமாகத் தென்பட்டது. மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளான அவர், தனது முகத்தை நோக்கி கைகளை உயர்த்திய அடுத்த கணமே அந்தக் காட்சி கண்களிலிருந்து மறைந்தது; உடனடியாக அவர் கடையின் ஜன்னல் வழியாகப் பார்க்கவே, தெருவின் தொலைதூரத்தில், அவரது இருபுறமும் கிழக்கத்திய சீடர்களுடன் அவர் நடந்து செல்வதை கவனித்தார். அப்போது பாபா மண்டலியுடன் உலாவிக் கொண்டிருந்தார்.

ரூபன்ஸ் ஹோட்டல் தரிசனத்தின் போது, வரவேற்பறையிலிருந்து நன்றாக உடையணிந்த 'உயர் சமூகத்தினர்' மூன்று பேர் வெளியே வந்தனர், அவர்களில் ஒருவர், "நீங்கள் அவரை ஒருபோதும் ஆழங்காண முடியாது, அறிவுப்பூர்வமாக தெரிந்து கொள்ள முடியாது!" என்றார்.

தரிசனத்திற்காக வந்த நபர்களில் ஒருவர் மிகுந்த மனச்சோர்வுடன் காணப்பட்டார், ஆனால் பாபா நடந்து சென்றதைக் கண்டபோது, அந்த உணர்வு முற்றிலும் திடீரென மறைந்தது. பாபாவின் ஸ்பரிசத்தைப் பெறுவதற்காகப் பலர் அடுத்தடுத்துச் சென்றதால், அவரின் ஆக்கப்பூர்வமான சக்தி குறைந்து கொண்டிருப்பதை வேறொருவர் கவனித்தார். இருப்பினும், ஒவ்வொரு நபரையும் சந்தித்த பின்னர், அங்கு நிகழ்ந்த பொழுதுபோக்கு மற்றும் இசை நிகழ்ச்சியின்போது, பாபாவின் ஒளிரும் தோற்றம் திரும்பி வந்ததைக் காண நேர்ந்தது.

ஒரு பெண்மணி பாடிய பாடலைத் தொடர்ந்து, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**இறைவனின் இசையை இதயத்தில் கேட்கும் ஒருவர் - அத்தகைய அற்புதமான இசையைக் கேட்கிறார், ஏனெனில் அது மூலமுதலான அசல் இசை - தனது உடல் உணர்வை இழந்து கடவுளை எத்திசையும் காண வைக்கும் இசை.**

**கடவுள் ஒவ்வொருவர் உள்ளும் இருக்கிறார். அவர் நம் அனைவரிடமும், எல்லையற்றவராக, எல்லாம் வல்லவராக உள்ளார். நீங்கள் இப்போது உங்கள் பௌதீக உடலில் இருப்பதே, அவரை உணர இயலாமையின் மூல காரணம்; அது அனைத்தும் மாயை; கடவுள் சர்வ வல்லமையுள்ளவராக இருந்தாலும், அது அனைத்தும் மாயையாக இருப்பது ஏன்? உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும் முகத்திரையே அதற்குக் காரணம்.**

**முகத்திரை என்றால் என்ன? அந்த முகத்திரை தான் அறியாமையின் திரை. உடல் உண்மையானது அல்ல, இந்த உடல் நீங்கள் அல்ல என்பதை அறிந்த அடுத்த கணமே, அந்த அறியாமையின் திரை விலகிவிடும். நீங்கள் உண்மையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது, நீங்கள் இல்லாவிட்டாலும், உங்கள் உடல் இருக்கிறது. உடல் சுவாசிக்கிறது, இருந்தும் நீங்கள் ஆழ்ந்து தூங்கும்போது அதன் சுவாசம் உங்களுக்குத் தெரிவதில்லை; நீங்கள் உண்பது போல் அல்லது திரைப்படம் பார்ப்பது போல கனவு காணலாம்; கனவு காண்பது உடல் அல்ல; அது உள்ளத்தின் உள்ளே இருக்கும் ஏக இறைவனான நீங்களாகவே இருக்க வேண்டும்.**

**இந்த உடலின் கால்கள் துண்டிக்கப்பட்டதாக வைத்துக்கொள்வோம்; அதனால் உங்கள் உணர்வு எந்த விதத்திலும் குறைந்து போவதில்லை, நீங்கள் சுயமாக உளதாயிருப்பதில் எந்தக் குறையும் இருப்பதாக நீங்கள் நினைக்கவில்லை. நீங்கள் இன்னமும் நீங்கள் தான், உங்கள் உணர்வு குறைந்து போகவில்லை என்பதை மனம் புரிந்துகொள்கிறது; மேலும் உங்களில் நிலைகொண்டிருக்கும் அறியாமை எனும் திரையின் காரணமாக,**

**மாயை எனும் திரை மறைந்து போகவில்லை என்பதையும் மனம் புரிந்துகொள்கிறது.**

**உங்கள் உள்ளத்துள் இருக்கும் கடவுளை நீங்கள் கண்டதும் உங்களுக்கு நம்பிக்கைப் பிறந்துவிடும். இனி எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல், எல்லையற்ற ஆனந்தத்தின் அனுபவம் மட்டுமே இருக்கும்.**

**உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

தொடர்ந்து பாபா, "**இப்போது, ஒரு நிமிடம் உங்கள் மனதை முழுவதுமாக அமைதிப்படுத்த முயற்சி செய்யுங்கள்**" என்றார். ஒரு நிமிட மௌனத்திற்கு பின்பு பாபா தொடர்ந்தார், அனுதினமும் அவரை நினைவில் கொள்ளுவதற்கான எளிய ஆனால் பயனுள்ள முறையை பாபா வழங்கினார்:

**என்னை நேசிப்பவர்கள் இப்போது போல் ஒரு நிமிடம், தூங்கச் செல்வதற்கு முன்பு, மனதிற்குள் மௌனமாக இருந்து, என்னை நினைத்து, மனத்திரையில் எனது சித்திரத்தைக் கொண்டுவர வேண்டும்; அதைத் தொடர்ந்து செய்து வந்தால், இந்த அறியாமை எனும் திரை உங்களிடமிருந்து மறைந்து, நான் கூறும் இந்தப் பேரின்பத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள்.**

**நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும்போது, சொற்பொழிவுகள் மற்றும் செய்திகளை வழங்குவதில்லை, ஆனால் உங்கள் மீதுள்ள அன்பின் காரணமாக, மேலே குறிப்பிட்டதை உங்களுக்கு விளக்கினேன். உங்கள் மீதான என் அன்பின் காரணமாக, இப்போது என்னை உங்கள் மனத்திரையில் படம்பிடித்து, மௌனமாக ஒவ்வொரு நாளும், ஒரு நிமிடம் என்னை நினைவில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் தவறாமல் செய்யுங்கள்; இந்த தினசரி தொடர் வரிசையைத் துண்டிக்காதீர்கள், அப்போது நீங்கள் இந்தப் பேரின்பத்தை அடைவீர்கள்.**

அன்று மாலை 8:00 மணியளவில், ரூபன்ஸ் ஹோட்டலில் வெகு ஜனங்களுக்கான மற்றுமொரு வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது; கிட்டத்தட்ட 175 பேர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கேத்லீன் பிரிட்சார்ட் (KATHLEEN PRITCHARD), டக்ளஸ் & மோலி ஈவ் (DOUGLAS & MOLLIE EVE), ஸ்டெஃபனி ஹாகார்ட் (STEPHANIE HAGGARD), லாட்டன் (LAWTON) தம்பதியினர், திரு மற்றும் திருமதி இமாய் (MR. & MRS IMAI, 1931இல் பாபாவின் உருவப்படங்களை எடுத்த ஜப்பானிய புகைப்படக்காரர்) மற்றும் ஐரீன் கோனிபியரின் பல நண்பர்கள் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் பாபாவை சந்திக்க அரை நிமிடம் அனுமதிக்கப்பட்டது. டாம் ஹாப்கின்ஸன் ஒவ்வொருவரையும் பாபாவிடம் அழைத்து வந்தார். வில் பேக்கெட், டிலியா இருவரும் அவருக்கு இருபுறமும் அமர்ந்திருந்தனர். வெல்வெட் மெத்தைகள், பின்னணியில் ஊதா நிறத்தில் தொங்கும் பூக்கள், இருபுறமும் டோரதி ஹாப்கின்ஸன் ஏற்பாடு செய்த ஒரு பெரிய விதானத்துடன், ஊதா நிற நீண்ட மென்மையான இருக்கையில் பாபா அழகாக, அற்புதமான

தோற்றத்தில் அமர்ந்திருந்தார். பாபா முழுமையான ரம்மியத்துடன், மாலை முழுவதும் பிரகாசமாகக் காணப்பட்டார். தேநீர், கேக்குகள், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு தொடர்ந்து பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் பின்னர், எரச், பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க விளக்கினார்:

**இந்தியாவில் பிரசாதம் என்று அழைக்கப்படுவதை நீங்கள் அனைவரும் பாபாவிடமிருந்து அடையப் பெற்றிருப்பீர்கள், அது வெறும் வழக்கமாக வழங்கப்படும் அன்பளிப்பு அல்ல. இந்தியாவில், ஒரு நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரிடமிருந்து அடையப் பெறும் பிரசாதத்தை - இனிப்பு போன்ற உணவு பண்டம் - அவர்கள் ஒரு பெரிய விஷயமாக ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் திரும்பிச் செல்லும்போது, அவரது 'ஏக இறைத்தன்மை'யின் ஏதோவொன்று தங்களிடம் இருப்பதை அவர்கள் உணர்கிறார்கள், அது அவருடைய ஆழ் இதயத்திலிருந்து வழங்கப்பட்டது. இந்தப் பிரசாதத்தின் உருவிலான அன்பளிப்பு, உண்மையில் உங்கள் இதயத்தில் விதைக்கப்பட்ட அன்பின் விதை என்பதால், பாபாவை சந்திக்கும் போது உங்கள் மனதில் அந்த எண்ணத்துடன் இனிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

**பாபா, இங்கும் அல்லது எங்கும், எல்லாம் அறிந்தவர் என்ற எண்ணத்தை, இந்த நேரத்தில் அவரை எதிர்கொள்ளும் போது உங்கள் மனதில் கொள்ள வேண்டும். நீங்கள் எந்த மனநிலையில், மகிழ்ச்சியாக அல்லது கவலையாக இருந்தாலும், பாபாவிற்குத் தெரியும் - ஏனெனில் அவருடைய அறிவு இதயத்தின் அறிவு, வெறும் வார்த்தைகளால் மனதளவில் பாராட்டுவது அல்ல. நீங்கள் அவரை அணுகும்போது, அவருடைய இதயம் உங்கள் இதயத்தை சந்திக்கும் போது, பாபா புரிந்துகொள்கிறார், அறிந்திருக்கிறார். அதுவே அவருடனான சந்திப்பின் முக்கியத்துவம்.**

**நீங்கள் அவருக்கு முன்னால் வரும்போது, நீங்கள் அவரிடம் கூற விரும்பும் பல விஷயங்கள் உள்ளன; அவருக்குத் தெரியும் என்பதால், உண்மையில் அவரிடம் சொல்ல வேண்டிய தேவை எதுவுமில்லை. அவருக்குத் தெரியாவிட்டால், அவர் முன் வருவதால் எந்த பயனுமில்லை. இதயத்தின் அறிவாக இருக்கும்போது ஏமாற்றம் என்பதற்கு இடமில்லை.**

**கடவுள் செவிமடுக்கும் பிரார்த்தனை இதயத்தின் பிரார்த்தனை, இதயத்தின் துன்பத்தை அவர் கவனித்து, அதை உயர் நிலைக்கு எடுத்துச் செல்கிறார். எனவே அது ஒரு பொருட்டல்ல; நிச்சயமாக, வழக்கமான மத நடைமுறைகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களை நம்புவது அப்பாவித்தனமாகும். இன்றியமையாதது உங்கள் இதயம், உங்கள்**

**இதயத்திலிருந்து எழும் பிரார்த்தனை. அதுதான் பாபா செவிமடுக்கும் பிரார்த்தனை, கடவுள் கேட்கும் பிரார்த்தனை.**

**"நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது கதவை மூடிக்கொள்ளுங்கள்; இரகசியமாகப் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று இயேசு கிறிஸ்து சரியாகச் சொன்னதாக பாபா கூறுகிறார். எனவே, நீங்கள் 1,000 பேருடன் இருந்தாலும் இதயத்திலிருந்து பிரார்த்தனையை மொழியுங்கள். அனைத்தையும் மக்கள் இதயத்தால் அறிந்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அதை கிரகிப்பதில்லை, இருந்தும் கடவுள் அதைக் கேட்கிறார்.**

**'உங்களையே' அர்ப்பணித்து ஆழ் இதயத்திலிருந்து பிரார்த்தனை செய்யுங்கள். வெறும் வார்த்தைகளை மொழிவது அல்லது அமைதியாக இருப்பது, நீங்கள் உங்களை அர்ப்பணிக்காவிடில், அனைத்தும் பயனற்றது. உங்கள் இதயத்தின் பிரார்த்தனை, உங்கள் இதயம் அன்புடன் வழங்குவது, இன்றியமையாதது. அந்தப் பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைக்கும். 'நீங்கள் பிரார்த்தனை செய்யவில்லை, எதையும் கேட்கவில்லை, ஏனெனில் நீங்கள் உண்மையில் உங்கள் ஆழ் இதயத்திலிருந்து கேட்கவில்லை' என்று இயேசு கூறினார்.**

**ஒருவர் நிரந்தரமாக வாழ விரும்பினால், பாபாவுக்காக சாக வேண்டும். அது என்னவென்று உங்களுக்குத் தெரிந்தால், ஏன் என்று உங்களுக்குப் புரியும். இது மிகவும் ஆழமான விஷயம். சாவது என்பது உடலைத் துறப்பது அல்ல; உள்ளளவில் இறப்பது என்று அர்த்தம்.**

1954ஆம் ஆண்டு ஆந்திராவில் வழங்கப்பட்ட செய்தியான "**பாபாவுக்காக ஒருவர் பணிபுரிவது எப்படி?**" (HOW DOES ONE WORK FOR BABA?) என்ற தலைப்பில் பாபாவின் செய்தியை சார்லஸ் பர்டம் வாசித்தார். பலர் தாமதமாக வந்திருந்தனர், மேலும் பாபா தமது அறைக்கு ஓய்வெடுக்கச் செல்ல இருந்ததால், அவர்களை அங்கேயே சந்திப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எவரும் வாய்ப்பைத் தவறவிட மாட்டார்கள். அப்போது பாபாவின் முன் வந்த ஒரு தம்பதியினர் மிண்டா (MINTA), அவரது கணவர் க்ளின் பார்டன் (GLYNN BARTON), இருவரும் எதையோ நினைத்து ஆழ்ந்த கவலையில் இருந்தனர். பாபா, பார்டனுக்கு உறுதியளித்தார், "**நீங்கள் திடமாக இருந்து, உங்கள் எண்ணங்கள், கவலைகள் அனைத்தையும் என்னிடம் அர்ப்பணித்தால், உங்கள் நம்பிக்கையற்ற சூழ்நிலை நீங்கும் என்று நான் எனது அதிகாரத்துடன் உங்களுக்குக் கூறுகிறேன்.**"

மறுநாள் காலை, 1956 ஜூலை 19 சுமார் 9:00 மணியளவில், பாபா 'உலகளாவிய ஆன்மீகக் கழகம்' (UNIVERSAL SPIRITUAL LEAGUE) என்ற அமைப்பின் உறுப்பினர்களை சந்தித்து அவர்களிடையேயான பிரச்சினைகளுக்கு ((முக்கியமாக

வில் பேக்கெட் மற்றும் டிலியா இவர்கள் இடையே) தீர்வு காண வழிவகுத்தார். பாபா இறுதியில் மூன்று தலைவர்களை நியமித்தார் - அதாவது, வில், டிலியா, சார்லஸ் பர்டம் - ஒவ்வொருவரும் ஆறு மாதங்களுக்குப் பொறுப்பேற்று, பின்பு சுழற்சி முறையில் பணியாற்ற வேண்டும். அந்தக் காலக்கட்டங்களில் மூவருக்கும் இடையே ஏதாவது தகராறு ஏற்பட்டு, முடிவெடுக்க முடியாமல் போனால், அப்போதைய தலைவரே அந்தப் பிரச்சினையை முடிவு செய்ய வேண்டும், பாபாவிடமிருந்து வந்த முடிவாக எண்ணி அனைவரும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கழகத்தின் செயலாளராகவும் பொருளாளராகவும் இருக்குமாறு டோரதி ஹாப்கின்ஸனை பாபா கேட்டுக் கொண்டபோது, அவர் அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டார். “**இதுவே உங்களுக்கான கடைசி வாய்ப்பு**” என்று பாபா சைகையால் தெரிவித்து, குழுவின் ஒவ்வோர் உறுப்பினரையும் கைகோர்க்கச் செய்து, இறுதியில் அனைவரும் ஒத்துழைப்பதாக உறுதியளித்தனர். குழுவை மீண்டும் திடமான நிதிநிலைக்கு கொண்டு வர, தனிப்பட்ட முறையில் நிதி பரிமாற்றத்தையும் ஏற்பாடு செய்தார். ஒவ்வொருவருக்கும் “பாபாவுக்காக ஒருவர் பணிபுரிவது எப்படி?” என்ற செய்தியின் நகல் வழங்கப்பட்டது. அவர்கள் அனைவரும் அரை மணி நேரம் வெளியே சென்றுவிட்டு திரும்பி வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். வில் பேக்கெட் இவ்வாறு நினைவு கூர்ந்தார்; “பாபாவின் உயிரூட்டம் மிக்க அசைவுகள், சொற்பொழிவு நிறைந்த சைகைகள் மற்றும் கட்டளையிடும் பார்வைகள், அவரது வார்த்தைகளை அடையாளங்களால் எடுத்துரைத்த போது, எங்கள் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன.”

டென்மார்க் தேசத்திற்கு அருகிலமைந்த ஃபாரோ தீவுகளில் (FAEROE ISLANDS) தனது ஸ்காண்டிநேவிய மனைவி ஒல்லாவுடன் (SCANDINAVIAN WIFE, OLLA) வாழ்ந்து வந்த ஆங்கிலேயர், லெப்டினன்ட் கர்னல் ஃபிரான்சிஸ் பேக்கனம் கோல்ட்னி, (LIEUTENANT COLONEL FRANCIS PAKENHAM GOLDNEY, 59), பொது வரவேற்பு நிகழ்ச்சியில் பாபாவை முதன்முதலில் சந்திக்க வந்தவர்களில் ஒருவர். 1955ஆம் ஆண்டில், ஐரீன் கோனிபியர், ‘வாய்ஸ்’ (VOICE) என்ற தத்துவ இதழ் ஒன்றில் வெளிவந்த கோல்ட்னியின் புகைப்படத்தைப் பார்த்த பின்னர், அவர் எழுதிய ‘நாகரிகம் அல்லது குழப்பம்? (CIVILIZATION OR CHAOS) என்ற புத்தகத்தை அவருக்கு அனுப்பி வைத்தார் (பின்னர் ஐரீன் அவரிடம், “அனைத்து பங்களிப்பாளர்களிலும் நீங்கள் சிறந்தவராகத் தோன்றினீர்கள்!” என்று குறிப்பிட்டிருந்தார்.)

ஐரீனின் புத்தகத்தைப் படித்த பிறகு, கோல்ட்னி லண்டனில் அவரை சந்தித்து பாபாவைப் பற்றிய ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொண்டார். அவர் எப்பொழுதும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நம்பிக்கை கொண்டிருந்தார் மேலும் பாபாவை சந்திப்பதில் ஆர்வமாக இருந்தார். பாபா

லண்டனுக்கு வர இருப்பதாக வில் பேக்கெட் மூலம் கோல்ட்னிக்கு அறிவிக்கப்பட்டது; பின்னர் அவர் பாபாவின் வருகையை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். தக்க தருணம் வந்ததும், பாபாவின் முன்னிலையில் கோல்ட்னி ஆனந்தமாக உணர்ந்தார். “வாழ்வில் நான் விரும்பியதெல்லாம் தனியாக இருந்து, அந்த சொர்க்க சுகத்தை அனுபவிக்க வேண்டும்” என்று அவர் நினைவு கூர்ந்தார்.

பாபா, கோல்ட்னியிடம், “**நீங்கள் எனக்காகச் செய்யவேண்டிய பணி ஏராளம் உள்ளது**” என்று கூறினார்.

கோல்ட்னி கடந்த 19ஆம் தேதி பாபாவுடனான ஒரு தனிப்பட்ட நேர்காணலில் கலந்துகொண்ட போது, பாபா அவரிடம், “**நீங்கள் கடல் வழியாக இந்தியாவிற்கு வந்து, ஒரு வருடம் எனக்காகப் பணிபுரிய விரும்புகிறீர்களா?**” என்று கேட்டார். கோல்ட்னி “ஆம்” என்றதும், பாபா அவரை டிசம்பரில் வருமாறு அறிவுறுத்தியதற்கு இணங்க, அவரும் அவரது மனைவியும் இந்தியாவிற்குப் பயணம் செய்தனர்.

அதன் பின்னர், ‘அப்ஸர்வர்’ (OBSERVER) செய்தித்தாளின் நிருபரான சார்லஸ் டேவியை (CHARLES DAVY) பாபா பார்த்தார். டேவி, முதல் நாள் பாபாவை சந்தித்த போது அவருடனான கருத்து பரிமாற்றம் பின்வருமாறு.

“**ஏதேனும் ஒரு கேள்வியைக் கேளுங்கள்**” என்றார் பாபா.

டேவி, “உண்மையை எப்படி அறிந்து கொள்வது?”

பாபா பதிலளித்தார், “**இந்தக் கேள்விக்கு இரண்டு பதில்கள் உள்ளன; ஒன்று பல தொகுப்புகளை நிரப்பும் விதத்தில் இருக்கும், மற்றொன்று ஒரு சில வார்த்தைகளில் மட்டுமே அடங்கும். சில வார்த்தைகளில் சொல்லப்போனால்: பொய்யையும், போலித்தனத்தையும் கைவிடுவதன் மூலம். இப்போது சொல்லுங்கள் பொய், போலித்தனம் என்றால் என்ன?**”

“நிலைத்தும், நீடித்தும் இருக்காதது - மாயை.”

“**சரி, இப்போது தொகுப்புகள் தொடங்குகின்றன. நிலைத்தும், நீடித்தும் இல்லாததைப் பொருட்படுத்தாதீர்கள்; நீங்கள் உண்மைப்பொருளை உணர்வீர்கள்.**”

“ஆனால் சுயத்தின் ஏதேனும் ஒரு பாகம் நிலைத்தும், நீடித்தும் இருப்பதுண்டா?”

“**ஆமாம், நீங்கள்** (டேவியை சுட்டிக்காட்டி); **உங்களுள் நிலைகொண்டிருக்கும் பரமாத்மா நிலைத்தும், நீடித்தும் இருக்கும். இந்த உடல் இருக்காது. அது மாயை. உடல் நிராகரிக்கப்பட வேண்டும். அதேபோல் உங்கள் மனமும் ஆற்றலும் உங்கள் மூலம் ஆசைகளாக செயல்படுகின்றன, இவை இரண்டும் மாயை, இவற்றையும் கைவிட்டாக வேண்டும். பொய்யும்**

**போலியுமான இவை அனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டும், அது ஒன்றுதான் உண்மைப்பொருளான ஏக இறைவனை உணரச் செய்யும்.**"

டேவி தொடர்ந்து வினவினார், "பாபா, நீங்கள் கடவுள், அனைத்தும் அறிந்தவர், இருந்தும் 'நான் உங்களை நேசிக்கிறேனா?' என்று அடிக்கடி கேட்கிறீர்கள்... நிச்சயமாக, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்."

பாபா பதிலளித்தார், **"என் அன்பர்கள் என்னை நேசிக்கிறார்கள் என்பதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் அனைத்தும் அறிவேன் என்பதில் சந்தேகமில்லை, இருந்தாலும் நான் கேட்கிறேன். என் அன்பர்கள், 'பாபா, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்!' என்று கூறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. உதாரணமாக, அன்றாட வாழ்வில் ஒருவர் அன்பான ஜோடி ஒன்றை சந்திக்கிறார், அவர்கள் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிக்கின்றனர், இருவருக்கும் அது தெரியும், இருந்தும் கணவனோ மனைவியோ அடிக்கடி கேட்பதுண்டு, 'அன்பே, நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?' எப்போதும் அதற்கான, தவறாத, தெளிவான பதில், 'நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்.' அதுபோல, நான் கேட்கும் போது, 'பாபா, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்' என்று என் அன்பர்கள் அடிக்கடி சொல்லும் பதிலைக் கேட்பதில் நான் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.**"

பாபா, சுவிஸ் மற்றும் ஃபிரெஞ்ச் பிரிவினரை - மேக்ஸ், ஐரீன் பில்லோ, ஹெடி, அனிதா, ரோஜர் வியய்யார்ட் - ஆகியோரை தமது அறைக்கு அழைத்து, அவர்களுடன் சிறிது நேரம் சில விஷயங்களைப் பற்றிய உரையாடலைத் தொடர்ந்தார். பக்கிங்ஹாம் அரண்மனை தோட்டத்தின் (BUCKINGHAM PALACE GARDENS) கிழக்குப் பகுதியில், ரூபன்ஸ் ஹோட்டல் உள்ளது. ஒரு காலை நேரத்தில், அரச காவலர்களின் குழுவினர், இசைக்கருவிகளுடன் சீருடை அணிந்து, அரண்மனையில் ஒரு தோட்ட விருந்துக்கு செல்லும் வழியில், வெளி வீதியில் சென்று கொண்டிருந்தனர். மேக்ஸின் ஜன்னலிலிருந்து அந்த அணிவகுப்பைப் பார்க்க பாபாவை அழைத்துவர டிலியா விரைந்தார். பாபா, சிரித்துக்கொண்டே, தனது விரல்களை இசைக்கு இணங்க தாளமிட்டு தோற்றமளித்த காட்சி, ஃபிரெட் மார்க்ஸுக்கு கிருஷ்ண பெருமானை நினைவூட்டியது.

அன்று மதியம் மிண்டாவின் இல்லத்தில் நெருங்கிய அன்பர்களுக்கு தேநீர் விருந்து வழங்கப்பட்டது. அனிதா பாபாவை மகிழ்வித்து வேடிக்கையான கதைகளைச் சொல்லி சிரிக்க வைத்தார். தோட்டத்தின் அனைத்துப் பறவைகளும் ஒன்று கூடி பாபாவின் சகவாசத்தை அனுபவித்தன. மீண்டும் ஹோட்டலுக்குச் சென்ற வேளையில் அவரது அன்பர்களின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது, பாபா அவர்களிடம் விடைபெற்றார்: **"இது எனது கடைசி லண்டன் வருகை;**

**உங்களுக்கு மீண்டும் இதுபோன்ற வாய்ப்பு கிடைக்காது. நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்று உங்களுக்குத் தெரியாது. எனவே எனக்காக வாழுங்கள், முழு மனதுடன் எனக்காகப் பணிபுரியுங்கள்**."

பாபா அனைவரையும் தழுவி, மாலை 6:30 மணிக்கு, அவரும் மண்டலியும் விமான நிலையத்திற்கு புறப்பட்ட வேளையில், அனிதா, மேரி மற்றும் டிலியா ஆகியோர் காரில் குழுவுடன் சென்றனர். அனிதாவின் கூர்மையான, அறிவார்ந்த நகைச்சுவைத் திறன், பயணத்தை உயிர்ப்பித்தது; அதே ஆர்வத்துடன் பாபா அவருடன் நகைச்சுவை உரையாடலில் இணைந்தார். பாபா மேரிக்கு உறுதியளித்தார், "**உங்கள் இறுதி நாட்களைக் கடந்து செல்லும் போது, என்னுடன் என்றென்றும் இருப்பீர்கள்**."

பாபாவுடன் தான் அமெரிக்கா செல்லாதது எவ்வளவு வருத்தமாக இருக்கிறது என்று டிலியா, பாபாவிடம் கூறினார். பாபா பதிலளித்தார், "**உங்கள் பயணக் கட்டணத்தை நீங்கள் செலுத்த முடியும் என்று எனக்குத் தெரிந்திருந்தால், நான் உங்களையும் அழைத்துச் சென்றிருப்பேன்**." ஆனால், நிச்சயமாக, டிலியாவிற்குத் தெரியும், அவர் உண்மையிலேயே உடன் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தால், அது எப்படியாவது நடந்திருக்கும்.

விமான நிலையத்தில் இதர அன்பர்கள் வரவேற்பு அறையில் பாபாவைச் சுற்றி நின்றனர். பாபா, திருமதி கில்லிங்ஹாமிடம், "**நீங்கள் விரைவில் என்னுடன் இருப்பீர்கள்**" என்று கூறினார். (அவர் மூன்று மாதங்களுக்குப் பின்பு காலமானார்.)

பாபா அமருவதற்காக அருகிலிருந்த உணவகத்திலிருந்து ஒரு நாற்காலியை மேக்ஸ் கொண்டு வந்தார். டிலியாவிடம் இருக்கை ஒன்றைக் கண்டுகொள்ள முயற்சிக்குமாறு சைகையால் தெரிவித்து, பாபா ஒரு சிறிய காகிதத் தொட்டியைச் சுட்டிக்காட்டினார். டிலியா அதை தலைகீழாக மாற்றி அதன் மீது அமர்ந்தார். '**சார்லஸ் பர்டம் எங்கே?**' என்று பாபா கேட்டார், ஆனால் அவர் இதுவரை வரவில்லை.

இரண்டு அந்நியர்கள் பாபாவைப் பார்க்க அங்கே நின்றனர்; ஒருவர் கேட்டார், "அவர் ஒரு தீர்க்கதரிசியா?"

வில் பதிலளித்தார், "அவரது பெயர் மெஹர் பாபா, பரஸ்பர அன்பு மற்றும் சேவை மூலம் உலகம் முழுவதும் சகோதரத்துவம் மற்றும் உண்மையான புரிதலை மேம்படுத்துவதே அவரது பணி."

சிலர் கண்ணீரை அடக்கிக் கொள்ளவே, பிறர் கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது, மேலும் சிலர் உள்ளுக்குள் அழுது கொண்டிருந்தனர். அவர்களுடன் பாபாவின் இரண்டு நாட்கள் வெறும் இரண்டு நிமிடம் போல கடந்து சென்றது!

வரவேற்பு அறையை விட்டு வெளியேற வேண்டிய நேரம் இது, பாபா சோதனைக் கூடம் வழியாகச் சென்றதும், விமான நிலையத்தில் காத்திருக்க

வேண்டாம் என்று அவர்களுக்குத் தெரிவித்தார். அவரது அன்பர்களின் இதயங்கள் அவரைப் பின்தொடர்ந்து செல்லவே, பாபாவும் மண்டலியும் பான் ஆம் விமானம் 71இல் (PAN AM FLIGHT 71) ஏறி இரவு 9:30 மணிக்கு லண்டனிலிருந்து புறப்பட்டனர். சுற்றுலா / பொருளாதாரப் பிரிவில், நியூயார்க் நகரத்திற்கு நேரடியாகச் செல்லும் 'வானவில் வகுப்பில்' (RAINBOW CLASS) பயணம் செய்தனர்.

மெஹர் பாபா இங்கிலாந்துக்குப் பயணம் செய்தது, இது பத்தாவது முறையாகும். 1931 முதல், ஆதிகால புருஷர் ஏறக்குறைய 100 நாட்களைக் கழித்தார். மேலும், அவர் கூறியது போல், இந்த விஜயம் அவரது கடைசி விஜயம் என்பதை நிரூபித்தது.

# மேற்கத்திய பயணம் - நியூயார்க்

(**Trip To The West - New York**)



நியூயார்க் நகரம் (NEW YORK CITY), **20** ஜூலை (JULY) **1956**

1956 ஜூலை 20 வெள்ளிக்கிழமை அதிகாலை, நியூயார்க், கலிஃபோர்னியா, டெக்ஸாஸ் மற்றும் தெற்கு கரோலினாவைச் சேர்ந்த சுமார் 60 அன்பர்கள் அடங்கிய குழு, அவதார புருஷரை, நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் அமெரிக்க மண்ணில் வரவேற்க, 'ஐடில்வைல்ட்' (IDLEWILD) விமான நிலையத்தில் காத்திருந்தனர். சரியாக 7:05 மணிக்கு, பாபாவின் விமானம், 'டக்ளஸ் டி,சி. 7பி' (DOUGLAS DC 7B) தரையிறங்கியது. பாபா கீழே இறங்கியதும், தனது அன்பர்களைப் பார்த்து கையசைத்தார்; அவர் இளஞ்சிவப்பு கோட்டும் வெள்ளை மேலங்கியும் அணிந்திருந்தார்.

எலிஸபெத், ஐவி இருவரும் சுங்கத்துறை அலுவலகத்தில் நுழைந்து அவரை வரவேற்க அனுமதிக்கப்பட்டனர். இருவரும் அவருடைய வருகைக்கு நிதியுதவி செய்த முக்கிய ஆன்மீக அமைப்புகளின் இரண்டு உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் ஆவர்; எலிஸபெத் அமெரிக்காவின் உலகளாவிய ஆன்மீக மையத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளையில், ஐவி மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பாபாவும் அவரது மண்டலியும் சுங்கத்துறை சோதனைகளிலிருந்து விடுவிக்கப்படும் வரை, இதர அன்பர்கள் 45 நிமிடங்கள் வெளியே காத்திருக்க வேண்டியிருந்தது. பாபா முன்னும் பின்னுமாக சுதந்திரமாக நடந்து செல்வதைக் கண்டு அன்பர்கள் பரவசம் அடைந்தனர்.

இறுதியாக, பாபா வெளியே வந்ததும், அன்பர்களின் அமோக வரவேற்பில் மூழ்கினார். அவர் ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தழுவ, சிவப்பு, வெள்ளை மற்றும் நீல நிற மலர் மாலையை ஃபிலிஸ் ஃபிரடெரிக் பாபாவிற்கு அணிவித்தார். பாபாவை முதன்முதலில் சந்தித்த இஸ்ரேலின் கேரி

பென் ஷம்மை (CARRIE BEN SHAMMAI) என்பவருக்கு, அவர் 'வானிலிருந்து இறங்கிய தேவதை'யாகத் தோன்றினார்.

மார்கரெட் க்ராஸ்கேயின் நாட்டிய மாணவர்களில் ஒருவரான பீட்டர் ஸால் (PETER SAUL, 20), பாபாவை முதன்முதலில் சந்தித்தார்: "அவரது ஒளிரும் கதிர்கள் மிகவும் அசாதாரணமானவை; பிற அனைத்தையும் மறையச் செய்தது; பார்வை மற்றும் செவி வழியாக எல்லாமே மங்கலானது. நான் மிஸ் க்ராஸ்கே அருகில் நின்று கொண்டிருந்தேன். அவரும் பாபாவும் ஒருவரையொருவர் வாழ்த்தியபோது, அது கரைபுரண்டு ஓடும் நதி போல் இருந்தது, நான் முற்றிலும் திகைத்துப் போனேன்."

இந்த அசாதாரணமான அன்பும் பாசமும் வெளிப்படுவதைப் பார்த்து, ஐக்கிய நாடுகள் சபைக்கான உக்ரேனிய தூதுக்குழு (UKRAINIAN DELEGATION TO THE UN) உறுப்பினர் ஒருவர், "அவர் யார்? அவர் ஒரு ஆன்மீகத் தலைவரா? அவர் சுங்கத்துறைலிருந்து வெளியே வந்ததும், அவர் உங்கள் ஒவ்வொருவரையும் அணுகியது, என்ன ஒரு கண்ணைக் கவரும் காட்சி! நான் சந்தித்த அனைத்து மக்களிலும், உலகெங்கிலும் உள்ள பிரதான ஆசிரியர்கள் மற்றும் உயரதிகாரிகளில், அவரைப் போல், அனைவரையும் வாழ்த்த முன்னோக்கிச் செல்வதையும், அனைவரையும் தனித்தனியாக அரவணைப்பதையும் நான் பார்த்ததில்லை. அவர் உங்களில் ஒருவரையும் கவனிக்கத் தவறவில்லை" என்று கூறினார்.

பாபா நான்கு மண்டலியுடன் காத்திருப்பு அறைக்குள் சென்றார். அமெரிக்காவில் பாபாவின் முதல் தருணங்களைப் பதிவு செய்ய கேமராக்களை அனுமதிக்கும் வகையில் மேற்பகுதி வடிவமைக்கப்பட்டிருந்தது. பாபாவின் காருக்குப் பின்னால் சரக்கு வாகனங்கள், கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. காவல்துறையினர் அருகில் வந்ததும், ஆன்டி மியோ (ANDY MUIR), பொதுவாக மென்மையான குணம் படைத்தவர், "அவர்களை சற்று பொறுமை காக்க சொல்லுங்கள், இது யார் என்று உங்களுக்குத் தெரியாதா?" என வினவினார்.

அதிர்ச்சியடைந்த காவல்துறையினர் அனைவரையும் பொறுமையாகக் காத்திருக்குமாறு கூறி, பாபாவின் காரை அனுமதித்தனர்.

பார்க் அவென்யூ, 59ஆவது வீதி, ஹோட்டல் டெல்மோனிக்கோ, (HOTEL DELMONICO AT 59TH STREET, PARK AVENUE) எட்டாவது மாடியில் அமைந்த அவரது அறைக்கு, பாபா அழைத்துச் செல்லப்பட்டார். அன்பர்கள் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்தனர். பாபா தங்கும் அறையின் திறவுகோல் மரியன் ஃப்ளோர்ஷெய்மிடம் இருந்தது; மேலும் அவர் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்ததால், அவர் திரும்பி வரும் வரை பாபா அறையினுள் செல்ல இயலவில்லை.

சில நிமிடங்களுக்குப் பின்பு, பாபா தமது அன்பர்களை, ஒரு விரைவான நேர்காணலுக்காக மாடிக்கு அழைத்தார். இந்தப் பயணத்தின் போது, 1952இல் பாபாவின் முந்தைய வருகையைப் போலல்லாமல், விளம்பரத்திற்கு எந்தத் தடையுமில்லை; மேலும் ஐவி டியூஸ் மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநரும், ஐவியின் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை விளம்பரப்படுத்த உதவிய, முன்னாள் நிருபருமான பெர்னார்ட் ஜே.ஓ. கர்வாலோ (BERNARD J.O. CARVALHO) ஆகியோர், தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை பேட்டிகளை ஒவ்வோர் இடத்திலும் ஏற்பாடு செய்தனர். பாபா இப்போது அவர்களுடன் இந்த நேர்காணல்களைக் குறித்து விவாதிப்பதில் ஆழ்ந்தார். அவர் தமது சுற்றுப்பயணத்தின் விபரங்களை மரியனுடன் விவாதித்தார், அவர் கமிட்டியின் சார்பாக அமெரிக்காவில் வாழும் அன்பர்களிடமிருந்து முழுப் பயணத்திற்கான நிதியை சேகரித்தார். பாபா, பல பழைய சீடர்களையும் தனிப்பட்ட முறையில் சந்தித்தார்.

பாபாவும் மண்டலியும் லண்டனிலிருந்து விமானத்தில் தூக்கமில்லா இரவைக் கழித்தனர்; ஆனால் ஐவி ஓய்வெடுக்குமாறு பரிந்துரைத்தபோது, பாபா, நகைப்புடன் கூறினார்: **"நான் சத்தாராவை விட்டு வெளியேறிய நேரத்திலிருந்து ஓய்வெடுக்கவில்லை, என் உடலைக் கைவிடும் வரை நான் ஓய்வெடுக்க மாட்டேன்."**

மதியம் ஒரு மணிக்கு பாபா லிஃப்ட்டில் இறங்கி வந்த போது, அங்கே ஜீன் ஷா, பாபாவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்; பாபா அவர் கைகளைப் பற்றிக்கொண்டு, தனது கன்னத்தில் முத்தமிட அனுமதித்தார். பின்னர் அவரிடம் பாபாவின் ஆடைகள் சுத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்பட்டன. நேர்காணல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடைத்தளத்தில், ஜீன் ஷாவால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த அறைகளுக்கு பாபா அழைத்துச் செல்லப்பட்டார். எனர்ஜியின் கணவர் ஹாரி 'மிக்கி' ஏ. ஃப்ளோர்ஷெய்ம் ஏற்பாடு செய்த திவானில் அருமையான வெள்ளை விரிப்பு ஒன்றைப் பரப்பி, பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பிரசாதத்திற்காக ஒரு கிண்ணத்தில் தாம்ஸன் திராட்சை பழமும் (THOMPSON GRAPES) பாபாவின் திவான் அருகில் வைக்கப்பட்டிருந்தது.

ஐந்து நிமிட நேர்காணல் தொடங்குவதற்கு முன்பு, பாபா, சேவகர்களையும், நெருங்கிய அன்பர்களையும் அழைத்து கூறினார்: **"இன்று உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், உங்கள் அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன். நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் மீதான என் அன்பினால் தான் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். நீங்கள் என்னை மேலும் அதிகமாக நேசிக்க முடிந்தால், என்னை எனது சுய ரூபத்தில் உணரும் நாள்**

**வரும். நான் இந்தப் பௌதீக உடல் உருவம் அல்ல. நான் இறைப்பெருங்கடல் - அன்பின் அளவிறுதியற்ற கடல். என்னை மேலும் மேலும் நேசிக்க முயற்சி செய்யுங்கள், நீங்கள் என்னை அறிவீர்கள்.**"

அவர்கள் திரும்பிச் செல்லும்போது, பாபா, மார்கரெட்டைக் கேலி செய்தார், "**உங்களைத் தவிர இதர அனைவரும் பாபாவை நேசிக்கக் கற்றுக்கொண்டனர்!**"

"என்னைத் தவிர?" மார்கரெட் பதிலளித்தார். "ஆனால் பாபா, நீங்கள் எனக்கு ஆசிரியர். நீங்கள் எனக்குக் கற்றுத் தரவில்லை. நீங்கள்தான் எனக்குக் கற்றுத் தர வேண்டும்!"

"**நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நேர்காணல் தொடங்கியது. அனைவரும் வெளியே காத்திருந்தனர், பாபாவை தனிப்பட்ட முறையில் சந்திக்க அவர்கள் உள்ளே சென்றபோது, எல்லா வின்டர்ஃபெல்ட் ஒவ்வொருவரின் பெயரையும் தனது நேர்காணல் குறிப்புப் புத்தகத்தில் சரிபார்த்தார்.

வந்தவர்களை ஐவி, ஜான் பாஸ், டார்வின் ஷா, ஃபிலிஸ் ஃபிரடெரிக் ஆகியோர் அறிமுகப்படுத்தினர். முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நபர்கள் ரேமண்ட் டி. பாண்ட் (RAYMOND T. BOND, 63) ஒரு துணைத் தலைவர் (VICE PRESIDENT) மற்றும் எஸ். ஃபெல்ப்ஸ் பிளாட் (S. PHELPS PLATT) ஜூனியர், டாட், மீட் & கம்பெனி, (JR. OF DODD, MEAD & COMPANY) 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் வெளியீட்டாளர். இருவரும் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பாபா கருத்துரைத்தார்: "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது, அந்தப் புத்தகம் அருமதிப்புடையதாக இருக்கும். அது முழு உலகிற்கும் இணையில்லா பொக்கிஷமாகத் திகழும்.**"

ஸில்வியா கெய்ன்ஸ் (SYLVIA GAINES), லோரெட்டா வெல்லர் (LORETTA WELLER, ஓர் ஓப்பரா பாடகி) இருவரும் அடுத்ததாக வந்தவர்கள். பாபாவை சந்தித்த பலரில் சார்மியனும், அவரது வருங்கால கணவர் ஜே கொரினெட் (J. CORRNET) ஆகியோர் அடங்குவர். பாபா, சார்மியனின் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், ஐவி அவர்கள் மிகவும் பொருத்தமானவர்கள் என்று நினைக்கவில்லை.

மேலும் ஒரு பழைய தொடர்பில் வந்த, மெர்சிடிஸ் டி அக்கோஸ்டா (MERCEDES DE ACOSTA), 1934ஆம் ஆண்டில் ஹாலிவுட்டில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார்; அவரது நெருங்கிய தோழியான 'கிரேட்டா கார்போ'வைப் (GRETA GARBO) பற்றி பாபாவிடம் கூறினார். டெல்மோனிக்கோவில் பாபாவை சந்திக்க வந்தபோது, அவரது உடல்நிலை மோசமடைந்து கண் செயலிழந்து வருவதாக

அவரிடம் புகார் கூறினார். பாபா அவரிடம் தினமும் 7,000 முறை அவரது நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழிந்து, அதை, அன்று மாலை ஏழு மணிக்குப் பிறகு தொடங்கச் சொன்னார்.

பென் ஹேய்மன் (BEN HAYMAN) ஒரு மாணவனை அழைத்து வந்த வேளையில், "உண்மைப்பொருளை நீங்கள் எப்போது தெரிந்து கொண்டீர்கள்?" என வினவினான்.

"**எனக்குப் பத்தொன்பது வயதாக இருக்கும் போது**" என்று பாபா பதிலளித்தார்

"சக்திகளைத் தன்வசப்படுத்துவதற்கும் இறை உணர்வை எய்துவதற்கும் என்ன தொடர்பு?" என்று அந்த இளைஞன் கேட்டான்.

"**இறை உணர்வை அடையப் பெறுவது உங்களை எல்லையற்ற நிலைக்கு உயர்த்துகிறது, அதே நேரத்தில் சக்திகள் உங்களை ஒரு பாதாளத்தில் தள்ளும்**!" பாபா பதிலளித்தார்.

ஒரு பெண்மணி பாபாவிடம் உடல் நோய்களை குணப்படுத்துவது குறித்து கேட்டார். பாபாவின் சுருக்கமான பதில்: "**நான் இதயத்தின் மருத்துவர், மருந்துகளின் மருத்துவர் அல்ல. நான் மருத்துவர்களின் மருத்துவர்**!"

நியூயார்க் நகரின் 'மன்டே நைட்' (MONDAY NIGHT) குழுவைச் சேர்ந்த பியா டி பியுடே (PIA DE BUDAY), தனது இரண்டு குழந்தைகள், சகோதரர் டிம் (TIM) ஆகியோருடன், பாபாவிற்கு இரண்டு பெரிய தேவதைகளின் சிலைகள் உட்பட, பலவிதமான பரிசுகளை கொண்டு வந்தார். பாபா அனைத்து பெண்மணிகளையும் அழைத்து கூறினார்: "**இந்தியாவில், எனது பக்தர்கள் என்னை வணங்கும்போது, சில நேரங்களில், நான் ஒரு மனிதன் என்பதை மறந்து விடுகிறார்கள். அவர்கள் தூபம் காட்டி, எனக்குப் பரிசுகளை வழங்குகிறார்கள். தூபத்தால் என் கண்களில் நீர் நிரம்புகிறது. அவர்கள் நான் ஒரு சிலையாக இருப்பது போல நினைத்து, எனது காலடியில் தேங்காய் உடைக்கிறார்கள். பாபா அசௌகரியமாக உணர்கிறார், பாபா ஒரு மனிதர்**!

"**இந்தப் பரிசுகளையெல்லாம் ஏன் எனக்குக் கொண்டு வருகிறீர்கள்? அதற்கு எந்தத் தேவையுமில்லை. அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது. பாபாவிற்கு இவை தேவையில்லை; அவருக்கு இவற்றை வழங்குவதன் மூலம், நீங்கள் அவர் மீது ஒரு பெரிய பாரத்தை வைக்கிறீர்கள். அதற்கு பதிலாக தேவைப்படுவோருக்குக் கொடுங்கள்.**"

அதற்கு பியா, "நான் உங்களை நேசிப்பதால் இதைச் செய்கிறேன், பாபா" என்றார்.

"**உங்கள் அன்பை மட்டும் என்னிடம் கொண்டுவந்தால் போதாதா? நீங்கள் ஏழை.**"

"ஆனால் பாபா, நான் உங்களிடம் என் அன்பை வெளிப்படுத்த வேண்டும்."

**“நீங்கள் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்றால், ஏழைகளுக்கு எனது பெயரில் வழங்குங்கள்.”** மேலும், **“மக்கள் விரும்புவதை அல்ல, அவர்களுக்குத் தேவையானதை நான் தருகிறேன்”** என்றும் அவர் கூறினார்.

கரோலின் (‘கேரி’ - CARRIE) பென் ஷம்மாய் (CAROLINE BEN SHAMMAI, 54) தனது வாழ்நாள் முழுவதும் ஆன்மீகத்தில் நாட்டம் மிக்கவராக இருந்தார். ‘தற்செயலாக’ அவரது கணவர் பரிசு சீட்டை (LOTTERY) வென்றதால், அவர் இஸ்ரேலிலிருந்து நியூயார்க் நகரத்திற்கு, தனது பெற்றோரைப் பார்க்கச் செல்ல முடிந்தது. நியூயார்க் நகரில் கேரி, வின்டர்ஃபெல்ட் தம்பதியினரை சந்தித்த வேளையில், பாபாவைப் பற்றியும், அவர் வெகு விரைவில் அமெரிக்கா வரும் செய்தியைக் குறித்த தகவல்களையும் அறிந்து கொண்டார். மெஹர் பாபா விளக்கம் அளித்ததற்கு இணங்க, **“குருநாதரின் வழிகளும், முறைகளும் அற்புதமானவை. ஓர் ஆத்மா குருநாதரின் தொடர்புக்குத் தகுதி வாய்ந்ததாகவும், தயாராக இருப்பதையும் அவர் கண்டுகொண்டால், அந்த ஆத்மாவைத் தம்மிடம் கொண்டு வருவதற்கான அனைத்து வழிகளும் அவரிடம் உள்ளன.”**

கேரியின் சகோதரி மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார், மேலும் அவர் டெல்மோனிக்கோ ஹோட்டலுக்கு வந்தபோது, தனது சகோதரியையும் தன்னுடன் அழைத்து வந்தார். பாபா சகோதரியின் தோளைத் தட்டி, **“அவர் நன்றாகிவிடுவார்”** என்று கேரியிடம் கூறினார். அதன் பின் சில நாட்களில், சகோதரி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

பாபாவின் அருகில் வந்த ஒருவரிடம் பாபா, **“நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?”** என்று கேட்டதற்கு அவர் ‘ஆமாம்’ என்று பதிலளித்தார். அப்போது, எதிர்பாராத விதமாக, பாபா அவரிடம், **“நான் கிறிஸ்து என்று உங்களுக்குத் தெரியுமா?”** என வினவியதும், தயக்கமின்றி அந்த நபர் ‘ஆம்’ என்று கூறினார்; பாபா அவருக்குப் பிரசாதம் வழங்கினார். இது அந்த நபரின் சுயநினைவற்ற, தன்னிச்சையான பதில், ஏனெனில் பாபா உண்மையில் கிறிஸ்துதானா என்று அந்த நிமிடம் வரை அவர் மனதில் சந்தேகம் எழுந்தது என்பதை அவர் பின்னர் ஒப்புக்கொண்டார்.

மார்கரெட்டின் நடனக் கலைஞர்களில் ஒருவரான எல்லா மாஸ்ஸி (ELLA MASSIE) திருமணம் செய்துகொண்டு குழந்தையின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் அவரது கணவரும், பீட்டர் மார்க்ஸ் என்ற இளம் பாதிரியார் (PETER MARKS, A YOUNG EPISCOPALIAN PRIEST), பாபாவை சந்தித்தனர். மற்றுமொரு நடனக் கலைஞரான மைர்னா பெய்லின் (MYRNA BAILIN) என்பவரும்

பாபாவின் முன்னிலையில் அழைத்துவரப்பட்ட வேளையில், அவர் உடனடியாக அழத் தொடங்கினார், பாபா, மைர்னாவைப் பற்றி எல்லாவிடம், "**அவரால் என்னைப் பார்க்க முடியாது**" அதாவது, பாபா யார் என்பதை அடையாளம் கண்டு, அவரை நேசிப்பதை ஏதோ ஒரு திரை தடுக்கிறது என்று சைகையால் தெரிவித்தார். மைர்னாவும் பாபாவால் ஈர்க்கப்படாததால் அவர் ஏன் அழுகிறார் என்று தெரியவில்லை என்பதை ஒப்புக்கொண்டார்.

மார்கரெட்டின் நடனக் கலைஞர்களில் மற்றுமொருவரான பன்டி கெல்லி (BUNTY KELLY) இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் இறுதியாக 'எனது இல்லத்திற்கு வந்துவிட்டேன்' என்று நான் உறுதியாக உணர்ந்தேன். நான் செய்தவை, நினைத்தவை அல்லது உணர்ந்தவை அனைத்தும் பாபாவிற்குத் தெரியும், பாபாவின் அன்பைத் தவிர வேறு எதுவும் முக்கியமல்ல என்பதையும் நான் முதன்முறையாக அறிந்தேன். உண்மையாக, நான் தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தேன்."

பீட்டர் ஸால் (PETER SAUL) நினைவு கூர்ந்தார்: "மிஸ் க்ராஸ்கே என்னுடன் வந்தார், நான் இன்னும் மயங்கிய நிலையில் இருந்தேன். சாய்ந்து அமரும் ஸோஃபாவில் அமர்ந்திருந்த பாபா கிரீம் கோட்டில் மிகவும் அழகாக இருந்தார்; என்னால் அவரைப் பார்க்க முடியவில்லை."

இந்த நேரத்தில் பல ஆஃப்பிரிக்க-அமெரிக்கர்கள் பாபாவை சந்தித்தனர், இதில் லியோனார்ட் வில்லோபியும் (LEONARD WILLOUGHBY) அவரது குடும்பத்தினரும் கலந்துகொண்டனர். பெரில் வில்லியம்ஸ் (BERYL WILLIAMS) அவரது தங்கை பெர்னிஸ் ஐவரி (BERNICE IVORY, 29) மற்றும் பெர்னிஸின் கணவர் ஹாரிஸன் (HARRISON), அவர்களது மூன்று குழந்தைகளான ஜானிஸ் (JANICE), கார்ல்டன் (CARLTON), கார்லீன் (CARLENE) ஆகியோரையும் அழைத்து வந்தார். பாபா குழந்தைகளைத் தம் மடியில் வைத்துக் கொண்டார். பெரில் எப்பொழுதுமே இறை நாட்டம் மிக்கவராக இருந்தார், மேலும் ஆன்மீகம் மற்றும் வெவ்வேறு கிழக்கத்திய குருநாதர்களைப் பற்றி தனது சகோதரியுடன் பேச முயன்றாலும், பெர்னிஸ் ஒருபோதும் அதிக ஆர்வம் காட்டியதில்லை; ஆனால் பெரில் 1952இல் பாபாவை சந்தித்த பிறகு, பெர்னிஸ் தனது சகோதரியில் ஒரு தெளிவான மாற்றத்தை உணர்ந்தார்: "பெரில் பாபாவைப் பற்றி இடைவிடாமல் பேசிக்கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டார்."

பெரில், பெர்னிஸிடம் பாபாவின் புகைப்படம் ஒன்றைக் கொடுக்க, ஒரு நாள் இரவு, அந்தப் புகைப்படத்தை வைத்து தியானம் செய்து கொண்டிருந்தபோது, அதிலிருந்து ஒரு தங்க நிற ஒளி வருவதை பெர்னிஸ் காண நேர்ந்தது. அது அவரது இல்லம் முழுவதும் நிரம்பவே, தூங்கிக் கொண்டிருந்த அவரது குடும்பத்தில் அனைவரையும் தீண்டியது. அவர் பாபாவின் தெய்வீகத்தன்மையில் உறுதியாக இருந்து, அவரது பிரசன்னத்தின் பல

அனுபவங்களை அடையப் பெற்றார். இதன் காரணமாகவே பாபாவை நேரில் சந்திக்க பெர்னிஸ் சற்று 'அஞ்சினார்.' 'நான் சீரழிந்து போகிறேன் என்று நினைத்தேன்!' அவர் நினைவுகூர்ந்தார். அப்போது பாபா, சுற்றியிருந்த திரையினூடே அவரையும் அவரது குடும்பத்தினரையும் உற்றுநோக்கிய போது அவருடைய கண்கள் அனைத்தையும் அங்கீகரிப்பது போல மின்னி மின்னி ஒளிர்ந்தன. "ஓ, அவருக்கு என்னைத் தெரியும்," பெர்னிஸ் கதறினார். "பாபா, உங்களுக்கு என்னைத் தெரியும்!" என்று கூறி அவர் கைகளில் வீழ்ந்தார்.

ஃபிலிஸ் ஃபிரடெரிக் பின்னர் அன்று பிற்பகல் நியூயார்க்கில் நிகழ்ந்ததை, குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தார்:

ஒவ்வொருவராக அல்லது சிறு குழுக்களாக, மக்கள் இப்போது குருநாதரை சந்திக்க வந்தனர். பாபா எப்பொழுதும் கேட்க விரும்பும் சில விரிவான வார்த்தைகளுடன், ஒவ்வொருவரும் பாபாவின் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு 'புதிய' ஆன்மாவும் அறைக்குள் நுழையும் போது, அவரது பிரகாசமான புன்னகை, அவரது அன்பான அரவணைப்பு அல்லது கரங்களை நீட்டுவது, ஒவ்வொரு நபரின் பிரச்சினைகளிலும் அவரது கருணைமிகு அக்கறையை வெளிப்படுத்துவது அனைத்தும் நிகழ்ந்த வண்ணம் இருந்தது; அந்தப் பிரச்சினைகளை வார்த்தைகள், விளக்கங்கள் எதுவும் இல்லாமல் அவர் அறிந்திருந்தார்; அவர்கள் வெளியேறும் போது ஒவ்வொருவருக்கும் வழங்கிய திராட்சை பிரசாதம், அங்கு அறையில் இருந்த அதிர்ஷ்டசாலிகள் மீது அழியாத தாக்கத்தை உருவாக்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது மௌனமான, சொற்களற்ற அன்பின் இதயம், பிற இதயங்களுடன் தொடர்பை ஏற்படுத்தியது; இதற்கு ஆதாரம் தேவைப்பட்டால், இங்கே உண்மையில், தெய்வீக அன்பின் உயிரோட்டம் நிறைந்த இறை மனிதன் இருப்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்தது. ஆன்மாவிலிருந்து ஆன்மாவிற்கும், சுதந்திரமான ஷிவாத்மாவிலிருந்து அடிமைத்தனத்தில் கட்டுண்டிருக்கும் ஜீவாத்மாவிற்கு தாவும்போது, இதயத்தின் அங்கீகாரத்துடன் ஒளிரும், அன்பின் துடிப்பு, கிட்டத்தட்ட புலப்பட்டது. அன்பு, உண்மையில் அமைதியாக இருக்க முடியும், இருந்தாலும், உலகை அதன் உருவில் ஆக்கப்பூர்வமாக மாற்றும்.

இந்தக் காட்சியைக் கண்டதும் காலம் திகைப்புற்றது. பாபாவின் பார்வையிலிருந்து தெய்வீக மதுபானம் வழிந்து கொண்டிருந்தது, அவர் தனது பிரசாதத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை மதுரசத்தை ஊற்றினார். அந்த அறையில் தெய்வீக மதுபானத்தின் நறுமணம் வீசியது. சிலர் வாசனையை நுகர்வதில் திருப்தி அடைந்தனர்; தெய்வீக மதுபானத்தை சுவைக்கும் ஏக்கம் இல்லை; இருந்தாலும் இந்த சொர்க்கலோக சுகந்தத்தை

அந்தத் தருணத்தில் அனுபவிப்பது பல பிறவிகளால் அடையப் பெற்ற அதிர்ஷ்டம்!

நியூயார்க், ஸ்கனெக்டடியைச் (SCHENECTADY) சேர்ந்த ஜீன் ராபர்ட் ஃபாஸ்டர் (JEAN ROBERT FOSTER), டார்வின் ஷா மூலம் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார். இந்த நாட்களை அவர் இவ்வாறு நினைவுகூர்ந்தார்:

வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிற மேலங்கியில் பிரகாசமாக, நீள் ஸோஃபாவில் அமர்ந்திருந்த பாபாவை எவராலும் மறக்க முடியாது. உயர்ந்த குவளைகளில் நிறைந்த பூக்கள், காற்றில் நறுமணத்தைத் தூவியது. மஞ்சள் ரோஜாக்களின் இரண்டு பெரிய தூவானங்கள் வைக்கப்பட்டிருந்தன. இனிமையான சிவப்பு ரோஜாக்கள், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிற ரோஜா மொட்டுகள் மற்றும் பல மலர்களிலிருந்து தயார் செய்த அத்தர், அதன் சுகந்தத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. பழம்பாணியிலான நறுமண மலர் மொட்டுக்கள் அதன் இடத்தைக் கண்டுகொண்டன. மேலும் சில பக்தர்களும் குழந்தைகளும் நீண்ட தண்டுடன் கூடிய ஒற்றைப் பூக்களைக் கொண்டுவந்து குருநாதருக்கு சமர்ப்பித்தனர்.

பாபாவின் மண்டலி அவர் அருகில் இருந்தனர். வலது புறத்திலிருந்து, சில நெருங்கிய அன்பர்கள் அவ்வப்போது வந்தனர். டார்வின் ஷா என்னை பாபாவிடம் அழைத்து வந்தார். எனது கண்களுக்கு, அவரைச் சுற்றி வியாபித்திருந்த ஒளி தெரிந்தது. நான் இந்தியாவிலிருந்து டார்வின் கொண்டு வந்த, எப்பொழுதும் எனது பையில் வைத்து, வணங்கி வந்த குவார்ட்ஸ் துண்டை எடுக்கவே, பாபா அதை அவரது கைகளில் வாங்கிய போது, பாபா மீண்டும் அந்தச் சிறிய பளபளப்பான கல்லை, சக்தி மிக்கதாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். பாபா சிரித்துக்கொண்டே அந்தக் கல்லை இரு கைகளிலும் எடுத்து, அதன் மேல் விரல்களை சேர்த்து அழுத்தி, அதை என்னிடம் திருப்பிக் கொடுத்தார். என் உடல் பதற்றத்தைத் தாங்க முடியாத அளவுக்கு அவருடைய ஆசீர்வாதத்தையும், சுயநினைவின் எழுச்சியையும் உணர்ந்தேன்.

முன் அறையில், மக்கள் அவரைப் பற்றி அடக்கமான குரல்களில் பேசிக்கொண்டிருந்தனர். முதியவர்கள், முதிர்ந்தவர்கள், இளம் வயதினர், வெள்ளை, கருப்பு மற்றும் பழுப்பு நிறத்தில் பலர், சிறு குழந்தைகளும் இருந்தனர். சந்திப்பு நேரத்தை அடையப் பெற்றவர்கள், நேர்காணலுக்காக காத்திருந்தனர்; இல்லாதவர்கள் பாபாவைப் பற்றிய சிறிய, துண்டு பிரசுரங்களை ஆர்வத்துடன் எடுத்துக் கொண்டனர். குழுவின் உறுப்பினர்கள், வாசலில் மேசையில் அமர்ந்து, பார்வையாளர்களை வரிசையாக வழிநடத்துவதில் தொடர்ந்து முழு முனைப்புடன் ஈடுபட்டனர்; பாபாவுடன் நீண்ட காலம் இருந்த அருள்மிகு மந்திரிகளைப் போன்றவர்கள், உள்ளேயும் வெளியேயும் வந்து சென்று, அவரை முதன்முதலில் பௌதீக உடலில் பார்ப்பவர்களுக்கு வழிகாட்டி உதவினர்.

ஆண்களும் பெண்களும் நாள் முழுவதும் பார்வையாளர் அறைக்கு வெளியே அமைந்த மண்டபத்தில் நின்று, பாபா, மேல் தளத்தில் தனது அறைக்கு நடந்து செல்லும் வேளையில் அவரைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தனர். அவர்களின் முகங்களில் சோர்வின் அறிகுறி தென்படவில்லை, அன்பானவரின் ஒரே ஒரு பார்வைக்காக மிகுந்த மகிழ்ச்சியுடனும், நன்றியின் வெளிப்பாடுகளுடனும் பொறுமை காத்தனர். லிஃப்டை நோக்கிச் செல்லும் அந்தக் குறுகிய நேரத்திலும், பாபா ஒவ்வொருவரின் மகிழ்ச்சி, துக்கங்கள், அபிலாஷைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, தனது அன்பின் ஆசீர்வாதத்தை அவர்களுக்கு வழங்குவது போலத் தோன்றியது. ஓர் அந்நிய பெண்மணி, "நீங்கள் பாபாவைக் கண்டுகொள்வது வரை ஒருபோதும் நேசித்ததில்லை" என்று கூறினார். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். நமது மனித வாழ்வின் அனைத்து அன்பும் நேசமும் அவரது தெய்வீக அன்பெனும் உயர்ந்த மரத்தின் கீழ் குறுகிய கூர்மையான புற்கள்.

ஃபிலிஸ் ஃபிரடெரிக் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "எப்பொழுதும் போல, பாபாவின் முழு கவனமும் அவருக்கு முன் இருந்த தனிமனிதர் மீது குவிந்திருந்தது; நூற்றுக்கணக்கான மக்கள் கடந்து சென்றாலும் அவர் சோர்வுறவோ, தளர்ச்சியடைவோ இல்லை. இறுதியில் வருபவரையும் முதலில் வந்தவரைப் போலவே அன்புடன் வரவேற்றார்."

ஹென்றி டேவிட் கஷௌட்டி (HENRY DAVID KASHOUTY, 33), விர்ஜீனியாவைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர், அவர் 'வாழ்க்கையில் என்ன நடந்தாலும் அதைத் தாங்கும் அளவுக்கு விளக்கும் விடைகளுக்காக' தனது வாழ்நாள் முழுவதும் எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் நன்கு கற்றறிந்தவர். ஆனால் 1955ஆம் ஆண்டில், அவர் நியூயார்க்கில் சுவாமி நிகிலானந்தாவிற்கு (SWAMI NIKHILANANDA, கொல்கத்தா ராமகிருஷ்ணரின் சீடர்) எழுதியது போல், "உண்மைப்பொருள் உளதாய் இருப்பதைப் படித்து படித்து நான் சோர்வடைகிறேன். அந்த உண்மைப்பொருளை அனுபவித்த ஒருவரை நான் சந்திக்க விரும்புகிறேன்."

அந்த ஆண்டு, அவரது மனைவி கெச்சாவின் (KECHA), இறை நாட்டம் மிக்க, பால்ய தோழியான எலிஸபெத் ஸக்காலிஸ் - ELIZABETH SACALIS (லிஸ் - LIZ), நியூயார்க் நகரிலிருந்து வருகை தந்த வேளையில், ஹென்றி தனது உள் ஏக்கங்களை அவரிடம் விளக்கினார். லிஸ் வீடு திரும்பியதும், 1955 டிசம்பரில் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை அவருக்கு, கிறிஸ்துமஸ் அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். ஹென்றி தனது அலுவலகத்தில் பொட்டலத்தை அவிழ்த்து, அதிலிருந்த பாபாவின் சித்திரத்தைப் பார்த்தார். 'அவர் ஆதிகாலத்தவராகவும், காலமற்றவராகவும் தோற்றமளித்தார்' என்று ஹென்றி நினைவு கூர்ந்தார். "அந்தச் சித்திரத்தில் ஏதோ ஒன்று இருந்தது. அது

உடனடியான அங்கீகாரம். அவர் அந்த அதிகாரத்தை அடையப்பெற்றவர், தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அறிந்தவர். அவரை நான் பூரணமாக நம்ப முடியும். 100 சதவிகிதம் பரிபூரண நம்பிக்கை."

ஹென்றி கஷௌட்டி, புத்தகத்தின் முதல் பக்கத்தை மட்டுமே பார்த்து, பின்பு தொலைபேசியில், நியூயார்க் நகரில் வாழ்ந்த லிஸ் ஸக்காலிஸை அழைத்து, "நான் தேடிக் கொண்டிருந்த அவர்தான் மெஹர் பாபா, அவரை எப்படி சந்திப்பது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று கூறினார். லிஸ் கூட அந்தப் புத்தகத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். சில வாரங்களுக்குப் பிறகு, லிஸ், ஹென்றியைத் தொடர்பு கொண்டு, 'அவர், 'டாட், மீட்' (DODD, MEAD) அலுவலகத்திற்குச் சென்றிருந்ததாகவும், பாபா 1952இல் அமெரிக்கா வந்ததாகவும், மீண்டும் அவரது வருகை நிச்சயமற்றது என்றும் கூறப்பட்டது' என்று தெரிவித்தார். புத்தகத்தின் பின் அட்டையில் இந்தியாவில் (கிங்ஸ் ரோடு, அஹமதுநகர்) என்ற முகவரி இருந்தது; எனவே ஹென்றி பாபாவிற்கு ஒரு சிறப்பு வான்வழிக் கடிதத்தை அனுப்பினார், அதில் அவர் கூறியிருந்ததாவது: "அன்புள்ள மெஹர் பாபா, உங்களின் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகம் எனது கைகளில் தவழ்கிறது. அது எனக்கு ஆழ்ந்த அர்த்தமுள்ள ஒன்றாக உள்ளது. நான் உங்களை சந்திக்க விரும்புகிறேன், அது சாத்தியமற்றது என்று நான் நினைக்கவில்லை." '**எதிர்வரும் வசந்த காலத்தில் பாபா நியூயார்க் வருகிறார்**' என்று அவருக்கு பதில் கடிதம் வந்தது. ஹென்றி கஷௌட்டி கூறினார்: "அதுதான் ஆரம்பம் - இந்தக் காதல் விவகாரத்தின் ஆரம்பம்."

பாபா அமெரிக்காவிற்கு வந்ததும், ஹென்றியும் அவரது மனைவி கெச்சாவும், 24, விர்ஜீனியாவிலிருந்து நியூயார்க் நகரின் வடக்குப் பகுதிக்கு, காரில் சென்று, 1956 ஜூலை 20 அன்று பாபாவை சந்திக்க டெல்மோனிக்கோ ஹோட்டலைச் சென்றடைந்தனர். கெச்சாவிற்கு சில சிறிய வேலைகள் இருந்ததால், ஹென்றி வெளியே வந்து ஹோட்டலுக்குள் சென்றார். ஹென்றி, லிஸ் ஸக்காலிஸ் இருவரும் மெஹர் பாபா, மக்களை சந்தித்துக் கொண்டிருந்த மாடிக்கு வந்து, ஜான் பாஸிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தனர். 'தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் அறிந்த' ஒருவருடனான தனது முதல் சந்திப்பைக் குறித்து ஹென்றி கஷௌட்டி நினைவுகூர்ந்தார்:

இறுதியாக, பாபா அமர்ந்திருந்த அறைக்குள் செல்லும் வாய்ப்பைப் பெற்ற அந்த கணத்தில், நான் அவரைப் பார்த்தேன், என் எதிர்வினையை கவனித்தேன், அவரைப் பற்றி எனக்கு முழுவதுமாக தெரிந்தது போன்ற ஓர் உணர்வு. எந்த விதமான தடையும், தயக்கமும் இல்லை. ஒரு நபருக்கும் நண்பருக்கும் இடையில் எப்போதும் ஒரு தடை, தயக்கம் நிலவும், அல்லது ஒரு உறவினர், ஒரு தாய் அல்லது தந்தை - நீங்கள் சொல்லாத, சொல்ல விரும்பாத விஷயங்கள், எதுவாகவும் இருக்கலாம். ஆனால் இங்கே, எனக்கும் அந்த

நபருக்கும் (பாபா) இடையில் முற்றிலுமாக எந்தத் தடையும் இல்லை - அதாவது நான் ஓர் ஆத்மாவிடம் சொல்லாத விஷயங்களை, அவரிடம் சொல்லத் தயங்கியிருக்க மாட்டேன். நான் சொல்லும் போது, நான் அவரை எப்போதும் அறிந்திருந்தது போல் உணர்ந்தேன் - அத்தகைய அன்னியோன்யமான நெருக்கம்.

அவர் மிகவும் பழக்கமான நபர், ஒரு நண்பரை விட மிகையானவர். அவரே அந்த இறை நண்பர்; நீங்கள் என்னவாக இருந்தாலும், அவர் உங்களை ஒருபோதும் கண்டிக்கவும், தண்டிக்கவும் மாட்டார். அவர் உங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளும் நண்பர், அதனால்தான் அவர் உங்களை ஒருபோதும் கண்டிப்பதில்லை, அதன் விளைவாக உங்களை முழுமையாக நேசிக்கிறார். அவர் எப்பொழுதும் நம்மிடையே இருக்கும் நண்பர். தேவைப்பட்டால், நீங்கள் அவரைத் தேடி அவர் இல்லத்திற்கு வருவீர்கள் என்று இடைவிடாது காத்திருக்கும் ஒரு நண்பர் அவர்.

பல ஆண்டுகளாக, நான் என் மனதில் இருக்கும் எதையும் சொல்ல ஒருவரைத் தேடினேன். ஆனால் பாபா என்னைத் தழுவியபோது நான் அவருடைய காதில் சொல்ல முடிந்த ஒரே விஷயம் என்னவெனில், “நான் உங்களை இதயபூர்வமாகப் போற்றிப் பாராட்டுகிறேன்!”

பாபாவுடனான நேர்காணலுக்குப் பிறகு ஹென்றி கஷௌட்டி, அனைவரும் சென்றுகொண்டிருந்த தாழ்வாரத்தில் நுழைந்த போது, அவர் முழு அதிருப்தியில் காணப்பட்டார். பாபாவிடம் கூற வேண்டியதைக் கூறியதாக அவர் உணரவில்லை; இருப்பினும் என்ன கூற வேண்டும் என்று அவருக்குத் தெரியவில்லை! ஹென்றி தொடர்ந்தார்:

பாபா கடவுள், நான் கடவுளை மனித உருவில் பார்க்க விரும்பினேன் - அவர் எப்படிக் கண் இமைக்கிறார், எப்படித் தலையை திருப்புகிறார் - அனைத்தையும்! அவரின் தெய்வீகத்தை என்னால் பார்க்க முடியவில்லை என்றால், எனது குருட்டுத்தன்மை, அது போதுமானதாக இருக்குமானால், கூர்ந்து நோக்கட்டும். நான் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தால், அவருடைய இறை உணர்வு, என் ஆழ் இதயத்தைத் தொடும் என்பதில் எந்தக் கேள்விக்கும் இடம் இல்லை.

ஒவ்வொரு முறை கதவு திறக்கப்படும்போதும், ஹென்றி கஷௌட்டி, பாபாவை மேலும் ஒருமுறை பார்க்கும் நோக்கத்தில், உள்ளே எட்டிப்பார்க்க முயன்றார். இறுதியாக, எரச் அவரை அணுகி, “**பாபா, உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை அறிய விரும்புகிறார்**” என்றார்.

ஹென்றி உடனே, “நான் அவரை மீண்டும் பார்க்க வேண்டும்” என்று கூறிய போது, அவர் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் விளக்கினார்: “என்னைப் பற்றிய பொய்யான அனைத்தையும் வெளிப்படுத்துவது மிகவும் சிரமமாக இருப்பதைக் கண்டேன், இந்த மகத்தான உண்மைப்பொருளை

எடுத்துரைக்க, எதிர்கொள்ளப் போதுமான எனது சுய உண்மைத்தன்மையை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது எனக்குத் தெரியும்." அவரால் மிகச் சிறந்த முறையில் கூற முடிந்த ஒன்றே ஒன்று: "பாபா, நான் உண்மைப்பொருளை அனுபவப்பூர்வமாக உணர வேண்டும்."

பாபா மனமார புன்னகைத்து, "**நீங்கள் உண்மைப்பொருளை அனுபவிப்பீர்கள். நான் உங்களுக்கு உதவுகிறேன். நான் உங்களுக்கு உதவுவேன்**" என்றார்.

நேர்காணல் முடிவுக்கு வந்தது, மீண்டும் ஹென்றி ஹோட்டல் நடை பாதையில் காத்திருந்தார். அவரது மனைவி கெச்சா வந்த போது, அவர் வருவதுவரைக் காத்திராமல் ஹென்றி பாபாவைப் பார்க்க உள்ளே சென்றதைக் கண்டு, அவர் உள்ளூர அமைதியாகக் குமுறினார். கடவுளாக இருக்கும் ஒருவரைப் பார்க்க எக்காரணத்தைக் கொண்டும் ஏன் காத்திருக்க வேண்டும் என்பதை மனைவியால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பது ஹென்றியை சீற்றமடையச் செய்வதாக இருந்தது!

பாபா அவர்களை அழைத்து வரக் கூறியதும், இருவரும் ஒன்றாக உள்ளே சென்றனர். அவர்களைக் கண்டதும் பாபா, தலையின் இருபுறமும் கைகளை வைத்து அசைத்து, "**எனது கடவுளே!**" என்று சைகையால் தெரிவித்தார்; அதாவது, அவர்கள் இருவருக்குமிடையே, கோபமான வார்த்தைகள் எதுவும் பரிமாறப்படவில்லை என்றாலும், பாபா அவர்களின் உள்ளக் குமுறலை அகற்றினார்! கெச்சா கீழே இறங்கி, அவர் முன்னால் அமர்ந்தார். பாபா எழுந்து, கெச்சாவின் காதணியைக் கழற்றி அவர் கையில் கொடுத்து விரல்களால் மூடினார். பாபா, அவருக்கு திராட்சைப் பழத்தை ஊட்டினார். அன்று முதல், இந்த ஜோடி அவரது பிரியமான அன்பர்களாக மாறினர். பாபா, ஹென்றிக்கு இவ்வாறு எழுதினார், "**என்னுடனான உங்கள் தொடர்பு, நீண்ட நெடிய காலமாக உள்ளது. நீங்கள் பாக்கியவான்களில் ஒருவர்.**" இறுதியில், பாபா கூறியதன் அர்த்தம் என்ன என்பதை ஹென்றி உணர்ந்தார்.

லிஸ் ஸக்காலிஸ், 26, உள்ளே சென்றபோது, அங்கு நிகழ்ந்ததை நினைவு கூர்ந்தார்:

பாபா அமர்ந்திருந்த இடத்தில் ஒளிர்ந்த வெளிச்சத்தைத் தவிர, அறை இருட்டாகத் தெரிந்தது. நான் மின்சார வட்ட விளக்கு ஏதேனும் ஒளிர்கிறதா என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே இருந்தேன். அதே சமயம், நீரில் மூழ்கும் ஒருவரின் மனதில் அலைபாயும் உணர்வுகளைப் போல், எனது சொந்த வாழ்க்கையைப் பற்றிய மிக முக்கியமான சிந்தனைகள், எனது தலையில் சுழன்று கொண்டிருந்தன. நான் பாபாவை மேலும் நெருங்கிய போது, அந்த வெளிச்சம் அவரிடமிருந்து வெளிவருவதை உணர்ந்தேன். அவரது கன்னம்

பேரிச்சம் பழத்தின் அமைப்பு போல, மிகவும் மென்மையாகவும், பட்டுப் போலவும் இருந்தது.

லிஸ் எப்பொழுதும் புத்தகங்களைப் படிப்பதிலிருந்து அனைத்தையும் கற்றுக்கொண்டார். அவர் ஒரு காரை சரிசெய்ய விரும்பினால் ஒரு புத்தகத்தைப் புரட்டுவது வழக்கம்; வேறு ஏதேனும் செய்ய விரும்பினால் அந்தத் தலைப்பிலான புத்தகத்தைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாபா அவரிடம் முதலில் வினவினார்: **"என்னுடைய புத்தகங்களை நீங்கள் படித்தீர்களா?"** அவர் படித்ததாக பதிலளித்ததும், பாபா தொடர்ந்தார்: **"எனது புத்தகங்களைப் படித்துக்கொண்டே இருங்கள், நீங்கள் நித்திய ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் அறிவீர்கள்."** பாபா, அவருக்கு ஒரு திராட்சையை வழங்கிய போது, அவர் வெளியே சென்றார்.

லிஸ் தொடர்ந்து நினைவு கூர்ந்தார்:

அந்த நேரத்தில் நான், அன்றாட வாழ்க்கையிலிருந்து தப்பிக்க ஆன்மீக விஷயங்களைத் தேடிக்கொண்டிருந்தேன் என்பதை உணர்ந்தேன். குருநாதர் என்னைத் தொட்டதும், நான் இறை உணர்வை அடையப்பெற்று, முழு விஷயத்திலிருந்தும் தப்பிக்கப் போவதில்லை. அந்த நொடியில், பாபாவுடனான அந்த ஒரு நிமிட சந்திப்பில், நான் எனது வாழ்க்கையை வாழ வேண்டும், அதைக் கடந்து செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் வெளியே தளத்திற்குச் சென்றபோது, நான் பாபாவின் அறையைத் திரும்பிப் பார்த்தேன், மறுகோடியில் நான் பாபாவைக் காண முடிந்தது. நான் எனது வாழ்க்கையை வாழ வேண்டும் என்றால், நான் அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்ந்தேன்

லிஸ் மேலும் கூறினார், "நான் ஒவ்வொரு முறையும் பாபாவை சந்திக்கும் போதெல்லாம், வாழ்நாள் முழுவதும், மெல்லவும், விழுங்கவும், ஜீரணிக்கவும், போதுமான அளவு அவர் எனக்கு வழங்கி இருக்கிறார் என்ற உணர்வு என்னில் எப்பொழுதும் இருந்தது. நான் அவரை மீண்டும் ஒருபோதும் பார்க்கவில்லை என்றாலும், நான் திருப்தி அடைந்ததாக உணர்கிறேன். அவர் எப்பொழுதும், இந்த கணத்தில் நம்மை திருப்தி படுத்துவதாக இருந்தாலும், ஓரிரு வருடங்களில் அனைத்தையும் உள்வாங்கிய பின்னர், ஒருவர் அவரை மீண்டும் பார்க்கும் ஏக்கத்தில் இருக்கிறார்!"

அடுத்த நாள், லிஸ், கஷௌட்டி தம்பதிகளுடன் திரும்பி வந்த போது, அவர் தனது மூத்த சகோதரி வர்ஜீனியா (ஜின்னி) க்ளூர், (VIRGINIA – GINNY – GLOOR, 29) மற்றும் ஜின்னியின் ஒன்பது வயது மகள் டெடி (DEDEE) ஆகியோரை அழைத்து வந்தார். ஜின்னியால் காப்பாற்றப்பட்ட ஒரு காயமுற்ற ராபின் பறவைக்கு சிகிச்சை அளிப்பதற்காக நியூயார்க் நகரத்திற்கு வந்தார். அவர் அங்கு இருந்த வேளையில், மெஹர் பாபாவை சந்திக்கச் செல்லலாம் என்று நினைத்து, டெல்மோனிக்கோவிற்கு வந்தபோது ராபின் பறவையை ஒரு கூண்டில்

வைத்திருந்தார். அடெல் வோல்கின் அதைப் பார்த்துவிட்டு, “ஓ, பாபா விலங்குகளை நேசிக்கிறார்... உள்ளே எடுத்துச் செல்லுங்கள்!” என்றார். பாபா பறவையைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

ஜின்னி வெளியே வந்த பிறகு (‘பாபாவிற்கு எல்லாம் தெரியும்!’ என்ற திடமான நம்பிக்கையில் இருந்தார்), லிஸ் உள்ளே சென்று பாபாவின் அருகிலிருந்த திவானில் அமர்ந்தார். பாபா, லிஸ்ஸின் கையைத் தட்டிக் கொடுத்து புன்னகைத்தார். பாபா தன்னிடம் எதுவும் கேட்காமலும், சொல்லாமலும் இருந்ததால், தன்னைப் பற்றி அவர் என்ன நினைக்கிறாரோ என்ற சுய உணர்வு அவரை ஆட்கொண்டது. அவர் சற்று அசௌகரியமாக உணர்ந்தார், பாபாவின் சைகைகளை விளக்கிக்கொண்டிருந்த எரச்சை நிமிர்ந்து பார்த்து, சில கணங்களுக்குப் பிறகு, திக்கித் திணறி பேசினார், (“ஏர்ர்ச்ச், நான் நேற்று வந்திருந்தேன். (பாபா புன்னகைத்து அவர் கையைத் தொட்டார்)... என் பெயர் எலிஸபெத் ஸக்காலிஸ்.” பாபா அவர் கையை மேலும் மேலும் தட்டி சிரித்துக் கொண்டே இருந்தார். திடீரென, லிஸ் முன்னோக்கி சாய்ந்து பாபாவின் கன்னத்தில் முத்தமிட்டார். “இந்த அந்நியருக்கு முத்தமளித்து நான் என்ன செய்கிறேன்?” அவர் தன்னைத்தானே கடிந்து கொண்டார். “நான் இந்த மனிதனை இப்போதுதான் சந்தித்தேன்!” ஆனால் லிஸ், பாபாவிற்கு முத்தமளித்தபோது, ‘அவர் வாழ்நாள் முழுவதும் நேசித்த அனைவரும் பாபாவே’ என உணர்ந்தார்.

பாபா அவருக்கு பிரசாதமாக ஒரு திராட்சை பழத்தைக் கொடுத்து வெளியே அனுப்பினார்.

1956 ஜூலை 20 அன்று மதியம் முழுவதும் நேர்காணல்கள் தொடர்ந்தன. மாலை 4:00 மணிக்கு, எல்லா வின்டர்ஃபெல்ட்டை பாபா அழைத்து, ‘**நேர்காணலுக்காக மேலும் எத்தனை பேர் உள்ளனர்**’ என்பதை அறிய விரும்பினார். எல்லா, பாபாவைக் கனவில் காண நேர்ந்ததை அறிந்து அவரிடம், “**அன்பான என் எல்லா, முழு உலகமும் ஒரு மாயை, அது ஒரு கனவு, கடவுள் மட்டுமே உண்மையானவர்**” என்று கூறினார்.

பாபா வெளியே வேறு அறையில் காத்திருந்த அனைவரையும் அழைத்தார் - நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அங்கு ஒன்றுதிரண்டதும், அவர் எல்லாவிடம் கூறியதை மீண்டும் எடுத்துரைக்குமாறு ஐவியைக் கேட்டுக்கொண்டார். ஐவி, பாபா கூறியதை ஒலிப்பதிவு செய்யாததால், அவர் நினைவிலிருந்ததைக் கூறத் தொடங்கினார்; ஆனால் பாபா கூறிய அதே பொருளில் ஐவியால் எடுத்துரைக்க இயலாததால், பாபா இடையே குறுக்கிட்டு, “**நீங்கள் கனவு காண்பது போல பேசுகிறீர்கள்**!” என்றதும், சிரிப்பு ஆரவாரத்திற்கு மத்தியில், பாபாவே விளக்கினார்:

**பாபா, எல்லாவிடம் கூறினார், இது எல்லாமே ஒரு கனவுதான். கடவுள் மட்டுமே உண்மையானவர். கடவுள் எல்லாவற்றிலும், உங்களிலும்**

என்னிலும் இருக்கிறார். எல்லா, தூங்கச் சென்று, தூக்கத்தில் கனவைக் காணும் போது, அவர் உடல் படுக்கையில் இருக்கிறது. ஆயினும் அவர் பௌதீக உடலில் மூழ்கிப் போய், ஒரு சிறப்பான இரவு உணவை உண்டு அனுபவிக்கிறார், மகிழ்ச்சியாக உணர்கிறார். தொடர்ந்து சில நேரங்களில் அவர் மிகவும் சோகமாக உணர்கிறார், துன்பப்படுகிறார். இன்பம், துன்பம் இரண்டும் கனவில் நிகழ்ந்தாலும், உடல் படுக்கையிலே இருக்கிறது. அது எங்கும் செல்லாது; அது எதையும் செய்யாது; இருந்தாலும் அது இன்பத்தை அனுபவிக்கிறது.

அவர் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது அல்லது ஒரு மாயையில் சிரமங்களால் தவித்துக் கொண்டிருக்கும்போது, பாபா அங்குக் கனவில் தோன்றி, அவரிடம், "அன்பான எல்லா, கவலைப்படாதீர்கள், இவை அனைத்தும் மறைந்துவிடும். இது கனவைத் தவிர வேறொன்றுமில்லை" என்று கூறுகிறார்.

ஆனால், அவர் பதிலளிக்கிறார், "பாபா, அது எப்படி? நான் சிரமப்படுகிறேன். அதற்கு நான் என்ன செய்ய முடியும் பாபா? நான் உங்களைப் பார்க்கிறேன், பிற அனைவரையும் பார்க்கிறேன், சிலர் என்னைத் தொந்தரவு செய்கிறார்கள், சிலர் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறார்கள், அதை நான் கனவு என எப்படி நம்புவது? அது எப்படி இந்த அளவுக்கு நிஜமானதாக இருக்க முடியும்?"

ஆனால் காலையில் எல்லா எழுந்ததும், தான் கண்டது கனவே என்றும், பாபா தனது கனவில் தோன்றி, அது கனவைத் தவிர வேறொன்றும் இல்லை, தான் துன்பப்படக்கூடாது, அழக்கூடாது என்றும் விளக்கினார். ஆனால் அவர், பாபா கூறியதற்கு செவிமடுக்கவில்லை, அதனால் அவர் பணிபுரியும் வேளையில், இரவில் கண்ட கனவை நினைத்து அழத் தொடங்கினார். அப்போது பாபா அவரிடம் கூறுகிறார்: "எல்லா, நீங்கள் தூங்கிய போது, இது ஒரு கனவு. ஆனால் இப்போது நான் இதை இன்னுமொரு கனவு என்று சொல்கிறேன்; நீங்கள் வாழ்ந்து, வேலை செய்து கொண்டிருக்கும் போது, இங்கே என் அருகில் அமர்ந்திருக்கும் போது, இங்கே நீங்கள் காண்பதெல்லாம், இந்த நியூயார்க் நகரம், இங்கு வாழும் என் அன்பர்களும், பாபாவே இங்கு அமர்ந்திருப்பதும் அனைத்தும் மாயையேயன்றி வேறொன்றுமில்லை; இது ஒரு கனவு."

பின்னர் எல்லா கூறுகிறார்: "பாபா, இது மிகவும் அதிகமாகி விட்டது! நான் அதை நம்ப முடியாது, ஏனெனில் அவர்களை நான் பார்க்கவும், அவர்கள் பேசுவதைக் கேட்கவும் செய்கிறேன். நான் உங்களை இங்கு, என் அருகில் அமர்ந்து, எனக்கு விளக்குவதைப் பார்க்கிறேன்." என்றாலும், பாபா, எல்லாவிடம், இது ஒரு கனவைத் தவிர வேறொன்றுமில்லை என்று

**வலியுறுத்தி கூறுகிறார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபாவின் அருள் மழை அவர் மீது பொழியும் போது, எல்லா, இந்த வெற்றுக் கனவிலிருந்து திடீரென விழித்தெழும் வேளையில் என்ன கண்டுகொள்கிறார்? கடவுள் ஒருவரே உண்மையானவர், அளவிறுதியற்றவர் என்று அவர் காண்கிறார். அந்த ஆனந்தத்தை, அந்த எல்லையில்லா ஆனந்தத்தை, தொடர்ந்து அவர் அனுபவிக்கும் போது, பாபா கூறியது உண்மை என்பதை அவர் உணர்கிறார்.**

**கிறிஸ்துவும் அதைத்தான் கூறினார்.**

**நமக்கு ஏன் ஒரு மாற்று மருந்து குறிப்பு தேவை? ஏனெனில், மனிதகுலம் அவர் கூறுவதைக் கேட்பதில்லை. அவரும் அதையே கூறினார்: "நானே உண்மைப்பொருள், ஏக இறைவன். அனைவரும் என்னைப் பின்பற்றுங்கள். கனவிலிருந்து விழித்து எழுங்கள்!" எவரும் செவிசாய்க்கவில்லை. அதுவே மீண்டும் மீண்டும் தொடர்கிறது. அதனால்தான், என்னை மேலும் மேலும் நேசிக்கவும், பிறரை என்னை நேசிக்கச் செய்யவும், நான் உங்களிடம் கூறுகிறேன். நீங்களே எடுத்துக்காட்டாக இருப்பதன் மூலம், பிறரை மகிழ்வுறச் செய்யுங்கள். கடவுள் அதற்கு செவிமடுக்கிறார். நாம் பிறரை மகிழ்விக்கும் அந்த கணமே, கடவுள் அதை அறிந்து, மகிழ்ச்சியடைகிறார். உங்களின் பிரார்த்தனை, தியானம், ஆரத்தி நிகழ்த்துவது எதுவும் கடவுளை மகிழ்வுறச் செய்யாது. அதற்கு அவர் செவிடாகவே இருக்கிறார். ஆனால் நீங்கள் பிறருக்கு உதவி செய்தால், அல்லது உங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பொருட்படுத்தாமல் பிறருக்கு சேவை புரிந்தால், கடவுள் உடனடியாக அதை அறிகிறார், செவிமடுக்கிறார் - உங்கள் செயல்கள், உங்கள் செயல்பாடுகள் - அனைத்தையும் நினைத்து மகிழ்ச்சி அடைகிறார்.**

அப்போது பாபா, "**நான் எனது அறைக்குச் சென்று, நாளை காலை 9:30 மணிக்கு மீண்டும் கீழே வருகிறேன்**" என்று கூறினார்.

பாபா காத்திருப்பு அறை வழியாக மேலே நடந்து சென்ற வேளையில், கடைசி நிமிடத்தில் பல பார்வையாளர்களை தமக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்காக சிறிது நேரம் நின்றார். மாடிக்குச் சென்றதும், தமது நெருங்கிய அன்பர்களில் பத்து அல்லது பன்னிரெண்டு பேரை தமது அறைக்கு அழைத்தார். அவர்களை கேலியும் கிண்டலும் செய்து, பாபா வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார். அன்பர்கள் அனைவரும் அவரை நேசிக்கிறார்களா என்று கேட்டு, பதிலுக்கு, அவர்கள் மீதான தனது அன்பை உறுதிப்பட தெரிவித்தார். நீங்கள் பாபாவை நேசிக்கிறீர்களா என்று ஒரு இளைஞரிடம் கேட்டதற்கு, அவருடைய 'ஆம்' என்ற நேர்மறையான பதிலைக் கேட்டு, அவர் மனைவியிடம் திரும்பி, "**உங்களுக்குப் பொறாமையாக உள்ளதா? நீங்கள் ஒருபோதும்**

**பாபாவின் அன்பைக் கண்டு பொறாமைப்படக்கூடாது. பாபாவின் அன்பு வேறுவிதமானது**" என்று கூறினார்.

பாபா ஒவ்வொருவரையும் ஆரத்தழுவி அவரவர் இல்லங்களுக்கு அனுப்பினார். அன்றிரவு, பாபா, எரச்சைத் தம் அறையின் ஜன்னலுக்கு அருகில் அழைத்து, நியூயார்க் நகரின் ஒளிரும் விளக்குகளைக் காட்டி, "**நன்றாக இல்லையா?**" என வினவினார்.

எரச் எந்தக் கருத்தையும் தெரிவிக்காத விதத்தில் பதிலளித்தார், "ஆமாம், இது இந்தியாவில் இருப்பதைப் போன்றது - ஜனங்கள் மற்றும் கட்டிடங்கள்."

1956 ஜூலை 21 சனிக்கிழமை காலை 8:00 மணி முதல் 9:00 வரை, பாபா தமது ஹோட்டல் அறையில், பல சிறு குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்புகளை நிகழ்த்தினார். பிலி ஈட்டன் (BILI EATON) அவரிடம், "பாபா, நான் என்னை நேசிப்பதை விட உங்களை அதிகமாக நேசிக்க விரும்புகிறேன்" என்றார்.

"**அதைச் செய்யுங்கள்; நீங்கள் அனைத்தையும் அடையப் பெறுவீர்கள்**" என்று பாபா பதிலளித்தார்.

ஜே. கொரினெட்டுடன் (JAY CORRINET) சார்மியனின் திருமணம் குறித்து பாபா, ஐவியிடம் கேட்டார், "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**"

"இல்லை, நான் மகிழ்ச்சியாக இல்லை," அவர் கண் கலங்கி அழுதார்.

பாபா அவரைத் தீவிரமாகப் பார்த்து, "**நான் கடவுள் என்று நீங்கள் நம்புகிறீர்கள், அப்படியானால் ஏன் நீங்கள் மகிழ்ச்சியாக இல்லை? நான் சிறந்ததையே செய்வேன் என்று நீங்கள் நினைக்கவில்லையா?**" என வினவினார்.

"என் இதயம் ஏற்றுக்கொள்கிறது, பாபா, ஆனால் எனது தலை இன்னும் சுழன்று கொண்டிருக்கிறது."

பாபா சிரித்துக்கொண்டே தனது கைக்குட்டையால் ஐவியின் கண்களைத் துடைத்தார். அதை அவரிடம் கொடுத்து, "**எப்பொழுதும் இதை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். தொலைத்து விடாதீர்கள்**" என்றார்.

"பாபா, உங்களுக்காக நான் செய்ய விரும்பும் பல விஷயங்கள் உள்ளன, ஆனால் இந்த உடைந்த பாதங்கள் என்னை அனுமதிக்கவில்லை!" என்று ஐவி தெரிவித்தார்.

பாபா கூறினார், "**இவ்வளவு பாரத்தை உங்களால் சுமக்க முடியாதா? நான் இயேசுவாக இருந்தபோது அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்று பாருங்கள் - இரத்தத்தை வரவழைத்த அந்த முட்களை எனது தலையில் வைத்தனர்; சிலுவையை சுமக்கச் செய்தனர்; என்னை அடித்து, சிலுவையில் அறைந்தனர்; எனது உடலின் பக்கவாட்டில் தாக்கினர். நான்**

**இவற்றையெல்லாம தாங்க வேண்டியிருந்தது! இந்த வலியை உங்களால் தாங்க முடியவில்லையா?"**

ஐவி பின்பு நினைவு கூர்ந்தார்: "பாபா, இதையெல்லாம் எவ்வளவு யதார்த்தமான முறையில் எடுத்துரைத்தார் என்பதை நீங்கள் பார்க்க நேர்ந்திருந்தால், அவர் சிலுவையில் துன்பப்பட்டார் என்பதில் எவருக்கும் ஒருபோதும் எந்த சந்தேகமும் வராது. மேலும் நீங்கள் எதைப் பற்றியும் மீண்டும் புகார் செய்ய மாட்டீர்கள்."

ஒரு சிலருக்கு, பாபா வெளிப்படுத்தினார்:

**1957 பிப்ரவரி மாதத்தில் எனது ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்னர், எஞ்சியிருக்கும் மாதங்களில், எனது பௌதீக உடலைக் கைவிடாத பட்சத்தில், மீண்டும் நிகழ்த்தும் ஒரு பெரிய கூட்டத்தைத் தொடர்ந்து, வெகுஜன தரிசனம் வழங்கத் திட்டமிட்டுள்ளேன். கூட்டத்திற்கு, நான் இந்த முறை மேற்கத்திய ஆண், பெண் அன்பர்களையும் அழைக்கிறேன். இந்த சந்திப்பிற்குப் பின்னர், ஒன்றன்பின் ஒன்றாக - என் அவமானம், என்னை மகிமைப்படுத்தல், மௌனத்தைக் கலைத்து எனது பௌதீக உடலைத் துறத்தல் - அனைத்தும் நிகழும். ஆனால் கவலைப்பட வேண்டாம்.**

**மீண்டும், எனது தெய்வீக அதிகாரத்தின் பேரில் நான் உங்களுக்குக் கூறுகிறேன்: நான் ஆதி புருஷன், நான் பிரபஞ்சத்தின் இறைவன்.**

பாபா தீவிரமாக அனைவரையும் நோக்கினார். அவர் தனது நாற்காலியிலிருந்து எழுந்து நின்று, கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கம் போல் அறையில் வேக நடை நடந்து, தமது ஆற்றலை, அதே வேளையில் முழுநிறை கட்டுப்பாட்டைக் கையாளும் விதத்தில் தோற்றமளித்தார். ஒரு மூலையில், இளம் ஓவியர் ஒருவர் அமர்ந்து, பாபா பேசிக்கொண்டிருந்த அந்தச் செயற்பாட்டை பென்சில் ஓவியமாக வரைய அனுமதித்தார். **"நீங்கள் முடித்துவிட்டீர்களா?"** என்று பாபா கேட்ட போது, அந்த இளைஞர் 'ஆம்' என தலையசைத்து மேசையில் அதை வைத்தார்.

ஜீன் ஷாவிடம் பாபாவின் ஆடைகள் மேலும் அதிகமான அளவில் சலவை, இஸ்திரி செய்ய வழங்கப்பட்டது; அந்த வேலையை ஜீன் ஒரு பாக்கியமாகப் பார்த்தார். சலவை செய்யப்பட்ட பாபாவின் ஆடைகள், சத்ரா, இளஞ்சிவப்பு நிற கோட் அனைத்தையும் பொட்டலமாக ஹோட்டலுக்கு எடுத்துச் சென்றதையும், அதிலிருந்து 'அன்பின் அலைகள்' எப்படி வெளிப்பட்டது என்பதையும் டார்வின் நினைவு கூர்ந்தார்.

காலை 9:30 மணிக்கு நேர்காணல்கள் கீழ் மாடியில் தொடங்கின; ஒவ்வொரு நபரும் முதலில் எல்லா வின்டர்ஃபெல்ட்டின் மேசை இருந்த வாசலில் நுழைந்தனர். அவர்களின் பெயர்களின் வரிசைப்படி, நியமனச்

சீட்டுகளை வைத்திருக்கும் நபர்கள், பாபா இருந்த நேர்காணல் அறையின் நுழைவாயிலில் திரைக்குப் பின்னால் வரிசையாக நின்றனர். திரையின் இடைவெளி வழியாக உற்று நோக்கியவர்கள் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர், ஏனெனில் வரிசை இரண்டு, மூன்று மடங்காக நீண்டுகொண்டே சென்றது; ஆர்வமுள்ள புதிய நபர்கள் பலர் இந்தக் குறுகிய நேரத்தில் பாபாவைப் பார்ப்பதற்காக அமெரிக்காவின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து பறந்து வந்தனர்.

பிலி ஈட்டன், திவானின் அருகில் வைக்கப்பட்ட சில புதர்ச்செடிகளுக்குப் பின்னால் மறைந்துகொண்டு, இலைகளின் வழியாக பாபாவை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார். தன்னை எவரும் பார்க்க முடியாத அளவுக்கு மறைந்திருந்து, எப்பொழுதும் பாபாவைப் பார்த்துக் கொண்டிருந்ததாக அவர் நினைத்தார். அவருடைய குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்ததற்கு இணங்க:

ஒவ்வொரு முறை பாபா ஒருவரை வாழ்த்தும்போதும், அவர் தமது அன்பின் கதவுகளைத் திறந்தது போலத் தோன்றியது. ஒவ்வொரு முறையும் புதிதாக எவரேனும் வரும்போது, இந்த அன்பின் அலை வேகமாக இருந்ததால், நானும் அதன் சாரல் துளிகளில் சிலவற்றை அடையப்பெற்றேன். மேலும் மேலும் மக்கள் உள்ளே வரவே, நான் ஒரு வகையான 'மது போதையில்' இருந்தேன். இறுதியாக, பாபா என்னைக் கண்டுகொண்டார்; திடீரென, அவரது கண்கள் பளிச்சிட்டன, அவர் தனது விரல்களை நேரடியாக என்னை நோக்கி சுட்டிக்காட்டி, எரச்சிடம் சைகையால் தெரிவித்தார். எரச் என்னை அவர் அருகில் அழைத்துச் சென்ற போது, பாபா, கோபப்பட்டதாகத் தெரியவில்லை. அவர் என்னை சிறிது நேரம் அவருடன் இருக்க அனுமதித்து, பின்னர் என்னை வெளியே அனுப்பினார்.

மண்டலியைத் தவிர, நம்மில் பெரும்பாலானோரை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கும் மேலாக, பாபா, தன்னுடன் இருக்க ஏன் அனுமதிக்கவில்லை என்பதை என்னால் அப்போது பார்க்க முடிந்தது. அவர் ஒரு நபரை விரும்பி ஏற்றுக்கொள்ளும் வரை, தன்னுடன் இருக்கச் செய்து, பின்னர் அவரை அனுப்பி விடுவது வழக்கம். பாபாவின் பிரசன்னத்தில், நம்மில் எவராலும் நீண்ட நேரம் அவருடன் இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்; இது ஒரு மின்சக்தி நிலையத்திற்கு மிக அருகில் இருப்பது போன்றது. இந்த உயர் மின் அழுத்தத்தை அவர்களால் மட்டுமே தாங்கிக் கொள்ள முடியும் என்பதால், பாபாவுடன் வாழ மண்டலிக்கு அவர் பயிற்சி அளிக்க வேண்டியிருந்தது.

கூட்டத்தில் பல கர்ப்பிணிப் பெண்மணிகளும் இருந்தனர். அவர்களில் ஒருவர் வர்ஜீனியா ரட் (VIRGINIA RUDD), ஆனால் அவருக்கு அந்த உண்மை தெரியாது. வர்ஜீனியாவிற்கு வயது 40; பல மாதங்களாக 'வயிற்றுக் கோளாறு'களால் அவதியுற்ற போது, மருத்துவர்களால் காரணத்தை கண்டறிய

முடியவில்லை. (அனைத்து கர்ப்ப பரிசோதனைகளும் எதிர்மறையாக இருந்தன.) அவர், பாபாவை சந்திக்க வந்தபோது, அவர் தனது வயிற்றைத் தடவி, '**குழந்தை**' என்று சுட்டிக்காட்டினார். பாபா, அவருள் வளரும் குழந்தையை ஆசீர்வதித்து, '**அது ஒரு சிறப்பு ஆத்மா**' என்று கூறினார்.

மற்றுமொரு 'தாயாகவிருந்த' அனிதா புத்தலிக், (ANITA PUTALIK, **28**), மிச்சிகனைச் சேர்ந்தவர். அனிதா தனது கர்ப்பத்தைப் பற்றி கவலைப்பட்டார், ஆனால் அனைத்தும் சரியாகிவிடும் என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். ஒரு பக்திமிக்க கத்தோலிக்கரான அனிதா, நியூயார்க்கில் வாழ்ந்த கல்லூரி நாட்களில், ஃபிலிஸ் ஃபிரடெரிக்கின் தோழியாக இருந்தார். அவர் பாபாவிடம் தான் இயேசுவின் மீது அதீத பக்தி மிக்கவர் என்று கூறிய போது, பாபா எடுத்துரைத்தார்: "**அது நல்லது. உங்களால் முடிந்தவரை இயேசுவிடம் ஆழ்ந்த பக்தியுடன் இருங்கள். ஆனால் உங்கள் ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் ஒரு முக்கியமான தவறைச் செய்துள்ளீர்கள். நீங்கள் கடவுளைப் பரலோகத்தில் வைத்துள்ளீர்கள். நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும், நீங்கள் அவரைக் கண்டுகொள்ளும் வரை, உங்கள் நம்பிக்கைகள் எப்போதும் சமநிலையற்றதாகவே இருக்கும்**." பாபாவின் வார்த்தைகள் அவரில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது, அவை, அவருடைய வாழ்க்கையின் கருப்பொருளாக மாறியது.

மதிய உணவுக்குப் பின்னர், அது, பாபாவின் அன்றைய ஒரே உணவாக இருந்தது; அவர் அதை, மாடி அறையில் தனியாக உண்டு, பின்பு, நேர்காணல்களுக்காக மீண்டும் கீழே வந்தார். பின்னர், அவர் தனது அன்பர்கள் அனைவரையும் அறைக்கு அழைத்தார். ஜன்னல் திரைகள் திறக்கப்பட்டு, அனைவரும் அவரைச் சுற்றி அமர்ந்தனர்; லோவெல் ஷா, சார்மியன், டான் ஸ்டீவன்ஸ் ஆகியோருடன் என்.பி.சி - தொலைக்காட்சி (N.B.C. TV) ஒளிப்பதிவாளர்கள் திரைப்படத்தை எடுக்கத் தயாராக இருந்தனர். பிரகாசமான திரைப்பட விளக்குகள் ஒளிர்ந்த வேளையில், பாபா பின்வரும் சிறு சொற்பொழிவை வழங்கினார்:

**நீங்கள் கடவுளோடு ஒன்றிவிட்டால், நீங்கள் அனுபவிக்கும் பேரின்பம் நித்தியமாகவும், நிரந்தரமாகவும் இருக்கும். அந்த அளவிறுதியற்ற ஆனந்தம், தங்கு தடையின்றி தொடரும். அதற்குப் பிறகு, நீங்கள் பிறரை மகிழ்விக்க முடியும்; பிறரை மகிழ்விக்கும் அதிகாரம் உங்கள் கைவசம் இருக்கும்.**

**நான் முதன்முதலில் வந்ததிலிருந்து, திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கும் ஒரே விஷயம்: கடவுளை நேசியுங்கள். காலங்காலமாக, நான் 'கடவுளை நேசியுங்கள்' என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்லவில்லை.**

**அன்பு: அனைவரும் இப்போது ‘அன்பு’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்; இது மிகவும் மலிவாக்கப்பட்டுள்ளது. ஒருவர் உண்மையாக நேசிப்பதானால், அந்த வார்த்தையை உச்சரிக்க மாட்டார். கடவுளை நேசிப்பது என்றால் என்ன? இது மிக மிகப் பெரிய விஷயம். கடவுளின் உண்மையான அன்பர் எதையும் மொழிவதில்லை. அவர் கடவுளை நேசிக்கிறார் என்பதை மறந்துவிடுகிறார்.**

**கடவுளை எப்படி நேசிப்பீர்கள்? கடவுளை எப்படி நேசிக்க வேண்டும்? தியானங்கள் மூலம் அல்ல, பிரார்த்தனைகள் மற்றும் பிற நடைமுறை சம்பிரதாயங்கள் மூலமும் அல்ல. இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று எல்லாவற்றையும் விட்டுவிடுவது. அதாவது, உங்களுக்கென சொந்தமாக எதுவும் இல்லாமல் இருப்பது, உங்கள் உடல் கூட இல்லை - மொத்தத்தில் எல்லாவற்றையும் துறக்க வேண்டும். ‘எல்லாவற்றையும்’ எனும்போது, உங்கள் சுற்றுப்புறம் மட்டுமல்ல, உங்களையும் உள்ளடக்கியது.**

**இரண்டாவது மிகப் பெரிய விஷயம். நீங்கள் எதையும் துறக்க வேண்டியதில்லை. நீங்கள் ஒரு குடும்ப வாழ்க்கையை வாழலாம், உலகில் இருக்கலாம், உங்கள் வேலை அல்லது வியாபாரத்தைச் செய்யலாம், உங்கள் சேவைகளில் கலந்து கொள்ளலாம், திரையரங்குகள், விருந்து நிகழ்ச்சிகள், எல்லாவற்றிலும் பங்கெடுக்கலாம். ஆனால் எப்போதும் ஒன்றே ஒன்றை மட்டும் செய்யுங்கள். உங்கள் சொந்த மகிழ்ச்சியையும் பொருட்படுத்தாமல், பிறரை மகிழ்வுறச் செய்ய தொடர்ந்து சிந்தியுங்கள், தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். கடவுளை நேசிப்பதற்கான இரண்டாவது வழி அது.**

பாபா அருகாமையில் வைக்கப்பட்டிருந்த கிண்ணத்திலிருந்து ஒரு பீச் பழத்தை எடுத்து, “**உங்களில் நன்றாகப் பற்றிப் பிடிப்பவர்கள் யார்?**” என வினவி பாபா பல பீச் பழங்களை வெவ்வேறு திசைகளில் வீசி, பின்பு ஜான் பாஸை கேலி செய்தார் (அவர் 1952இல் செய்ததைப் போல), “**ஜான் என்னிடம், ‘பாபா, நிதானமாக அமர்ந்து ஒரு கப் தேநீர் அருந்துங்கள்’ என்று கூறுகிறார். ஆனால் தேநீர் வருவதற்கான எந்த அறிகுறியும் இல்லை.**”

திடீரென, ஏராளமான திரைப்பட விளக்குகள் காரணமாக, எங்கோ பழுது ஏற்பட்டு விளக்குகள் அனைத்தும் செயலிழந்தன; அப்போது அவர்கள் ஒருவித பச்சை நிற, மதிய அந்தி இருளில் மூழ்கினர். யாரோ ஒருவர், பராமரிப்பு பணியாளரை அழைத்துவர முயன்றபோது, பாபா கூறினார், “**உங்கள் கண்களை மூடிக்கொண்டு, ஐந்து நிமிடங்களுக்கு உங்கள் மனதை வெறுமையாக்குங்கள்.**” அனைவரும் தங்கள் மத்தியில் அன்பின் இறைவனைத் தியானித்தபடி அமைதியாக அமர்ந்து, கண்களைத் திறந்தபோது, பாபா கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் பணிபுரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர். அவரது கண்கள் ஒரு விசித்திரமான, தொலைதூர நோக்குடன் மேல்நோக்கியும்

உள்நோக்கியும் திரும்பின. அவரது இடது கை அவரது தலைக்கு மேலே இருந்தது, அவரது விரல்கள் வேகமாக நகர்ந்தன.

விளக்குகள் மீண்டும் ஒளிர ஆரம்பித்த வேளையில், பாபா குழுவுடன் பேச்சைத் தொடர, எரச் விளக்கமளித்தார்:

**பாபா நித்திய பேரின்பத்தில் இருந்தாலும், நித்திய துன்பத்தையும் அனுபவிக்கிறார். பாபா இங்கு, பாபாவாக, சுதந்திரமாக இருக்கும் அதே வேளையில், உங்களில் பாபா பிணைக்கப்பட்டவராக இருக்கிறார். நீங்கள் என்னை உண்மையாக நேசித்தால், ஆழ் இதயத்திலிருந்து நேசித்தால், நீங்கள் என்னைப் போலவே சுதந்திரமாக இருக்க முடியும். அது தொடர்ச்சியான, நித்திய பேரின்பமாக இருக்கும்.**

**எனது சகோதரி மணி என்னை மிகவும் நேசிக்கிறார். அவர் எதைக் குறித்தும் கவலைப்படுவதில்லை. அவர் முழுமையாக எனக்குக் கீழ்ப்படிகிறார். காலை முதல் இரவு வரை, அவர் பாபாவிற்கான பணியில் மூழ்கிவிடுகிறார். அவர், பாபா கடவுள் என்பதை அறிவார், பாபாவைக் கடவுளாக நேசிக்கிறார். கடந்தகால தொடர்புகள் காரணமாக மெஹராவை நான் மிகவும் நேசிக்கிறேன். நான் உங்களையும் நேசிக்கிறேன். நீங்கள் என்னை நேசித்தால், நீங்கள் என்னுடன் ஐக்கியமாகிவிடுகிறீர்கள். அன்பின் மூலம், நீங்கள் என்னுடன் ஒன்றிணைய முடியும்.**

**எனது சகோதரர் ஜாம்ஷெட், என்னை மிகவும் நேசித்தார். அவர் என் மீதான அன்பின் வெறியில் இருந்தார். ஒருமுறை அவரால் அடக்க முடியாத அளவுக்கு என்மீது அன்பு நிறைந்து வழிந்தது. இங்கே** (அவரது தலையைச் சுட்டிக்காட்டி) **நரம்பு முறிந்து, அவர் உடலைத் துறக்க வேண்டியதாயிற்று. ஆனால் உயிரைத் துறக்கும் முன்னர் அவர் உரத்த குரலில் "பாபா!" என்று கத்தினார். அவர் என்னிடம் வந்துள்ளார். அவர் இப்போது என்னுடன் நிரந்தரமாக இருக்கிறார்.**

**உங்கள் அனைவருக்கும் நான் தெரிவிக்க விரும்புவது என்னவெனில், எனது சகோதர்களும் சகோதரியும் என்னை மிகவும் நேசிக்கிறார்கள். நான் வீதியில் கோலி விளையாடி, சிறிய, பெரிய தகராறு செய்து, சண்டையில் ஈடுபட்ட எனது பள்ளி நண்பர்கள் சிலரும், நான் கடவுள் என்பதால் என்னை நேசிக்கிறார்கள். நான் எனது உண்மை நிலையைப் குறித்து சொல்லும் போது, அவர்கள் - டாக்டர் கனி, ஸெயிலர் மாமா மற்றும் பலர் என்னை நம்புகிறார்கள். இதை அவர்கள் ஒரு கருத்தியல் கொள்கை என்று எடுத்துக்கொள்ளாமல், அதைவிட பெரிய ஒன்றைக் காண்கிறார்கள். அவர்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது; நான் கடவுள் என்று அவர்கள் நம்புகிறார்கள்.**

**நீங்களும் நான் கடவுள் என்று நம்புகிறீர்கள். நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னை நேசிப்பது, என்னை மதிப்பது, என்னை நம்புவது, நான் கடவுள் என்ற திட நம்பிக்கையை உருவாக்குவது - என்னுடன் கோலி விளையாடி, என்னுடன் சண்டையிட்டு, பள்ளியில் ஒரே மேசையில் எனது பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பர்களுக்கு என்னைக் கடவுளென நம்புவது, மிகவும் கடினமாக இருந்தது. டான், நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா?**

டான் ஸ்டீவன்ஸ் ஆம் என்று தலையசைத்தார்.

**இது அவர்களுக்கு - எனது பழைய பள்ளி நண்பர்கள் மற்றும் எனது சொந்த குடும்பத்தினருக்கு மிகவும் கடினமாக இருந்தது; ஆனால் அவர்கள் என்னை நேசிக்கிறார்கள் - அவர்கள் எனக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறார்கள். எனது தந்தை ஷெரியார்ஜி - அத்தகைய இனிமையான ஆத்மா - கடவுள் மீது அதீத அன்பு கொண்டவர். உண்மைப்பொருளைத் தேடி அவர் கால் நடையாக இடம் விட்டு இடம் அலைந்து திரிந்தார். பிற்காலத்தில் என்னை வணங்கி வந்தார். அவருடைய தனி அறையில் என்னுடைய புகைப்படம் ஒன்றை வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி, எனது சித்திரத்தை வணங்கி வந்தார். இதில் ஆச்சரியம் என்னவெனில், எனது சொந்த தந்தையே என்னை வணங்கி வந்தார்.**

**நான் பிற இடங்களில் பிற அனைவருக்கும் கூறுவது போல, நான் ஆதிகாலத்தவன் என்று உங்கள் அனைவருக்கும் அதிகாரத்துடன் கூறுகிறேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது நான் யார் என்பதை உலகம் அறியும்.**

இப்போது விளையாடுவோம்.

பாபா கிண்ணத்திலிருந்து திராட்சைப்பழங்களை ஒவ்வொன்றாக எடுத்து, கூட்டத்தை நோக்கி எறிந்து, ஒரு திசையைப் பார்த்து வேறொரு திசையில் வீசத் தொடங்கினார். இரண்டு செய்திகள் வாசிக்கப்பட்ட பிறகு, மீண்டும் பாபாவின் பார்வை உள்நோக்கித் திரும்பியது, அவருடைய விரல்கள் அவர் மட்டுமே கேட்கும் இசைக்கு இசைந்தாற் போல நடனமாடியது. சட்டென்று எழுந்து பாபா அறையை விட்டு வெளியேறினார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா திரும்பி வந்து திவானில் அமர்ந்தார். ஒரு கைதேர்ந்த ஒளிப்பதிவாளர் காணொலி ஒன்றை படம் பிடிக்கவே, **"நான் கடவுள், ஆதிகாலத்தவர்; நானே அவதார புருஷர்"** என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பாபா வரவேற்பு அறையை விட்டு வெளியே வந்ததும், பெரும்பாலான மக்கள் கலைந்து சென்றனர். சில அதிர்ஷ்டசாலிகள் காத்திருக்கவே, பாபா அவர்களை மாடியில் தனது அறைக்கு அழைத்தார். அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பொட்டலத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

மாலையில், பாபாவும் மண்டலியும் இம்பீரியல் தியேட்டருக்கு (IMPERIAL THEATER), ஃபிராங்க் லொஸரின் 'தி மோஸ்ட் ஹேப்பி ஃபெல்லோ' ('THE MOST HAPPY FELLOW' BY FRANK LOESSER) என்ற புதிய இசை நகைச்சுவை நாடகத்தைப் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டனர். பாபா உள்ளே நுழைந்த போது, அவரது அன்பர்கள் நுழைவுச் சீட்டுகளுடன் வரவேற்பறையில் காத்திருந்தனர்; பாபா, அடர் சிவப்பு கம்பளி சட்டையை அணிந்து, தலைமுடியைக் காலருக்குள் திணித்துக் கொண்டார். பாபாவின் இருக்கை, மாடி முகப்பில் முதல் வரிசையில் இடது பக்கம் இருந்தது. எலிஸபெத், பாபாவின் அருகில் அமர, அவரைத் தொடர்ந்து ஐவி, மார்கரெட் இருவரும் அமர்ந்தனர். எரச், நீலு, ஆதி ஆகியோர் மறுபுறத்திலும், டார்வின், ஜீன் ஷா, பென் ஹேய்மன் மூவரும் பின் வரிசையிலும், பிற அனைவரும் அருகிலிருந்த தத்தமது இருக்கைகளிலும் அமர்ந்தனர். தியேட்டரில் வழிநடத்துபவர் ஒருவர், பாபாவுக்காக ஒரு நிகழ்ச்சியை வழங்கியபோது, அவர் அறியாமலேயே பாபாவின் தரிசனத்தை அடையப்பெற நேர்ந்தது. இசை நாடகத்தின் போது, பாபா முற்றிலுமாக உள்வாங்கப்பட்டு, அவரது உள் பணிகளில் ஆழ்ந்திருந்தார். தியேட்டரில் குளிர் அதிகமாக இருந்ததால், டார்வின், பாபாவின் தோள்களில் தனது கோட்டைப் போர்த்தினார். பாபா மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். இடைவேளையில் பாபா, மண்டலியுடன் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றார்.

1956 ஜூலை 22, ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், அவரது அறையிலும், பெரிய முகப்பு வாயிலிலும் பாபா, மீண்டும் தனியாகவும் குழுக்களுடனும் புகைப்படமும், காணொலி திரைப்படமும் எடுக்கப்பட்டார். ஒரு பத்திரிகை புகைப்படக் கலைஞர், கே. ஐயர் (K. IYYAR), ஆந்திராவைச் சேர்ந்தவர், பாபாவின் அமெரிக்க வருகையைக் குறித்து, இந்திய குருநாதரைப் பின்பற்றுபவர்கள் அங்கு, பெரும் எண்ணிக்கையில் இருப்பதை, இந்தியாவில் விளம்பரப்படுத்த விரும்பினார்.

காலை 10.30 மணிக்கு பாபா, கீழே இறங்கி வந்தார். மூன்று ஸ்பானிஷ் சகோதரிகள், ஒரு கறுப்பின இளைஞர் மற்றும் உயரமான ஐரிஷ் நபர் ஒருவர் பாபாவை அணுகியபோது, அவர் காணொலி படம்பிடிக்கப்பட்டார். பாபா ஒவ்வொருவரையும் தழுவி, திராட்சைப் பழத்தைப் பிரசாதமாக வழங்கினார். தொடர்ந்து பாபா, அவரைச் சுற்றி அமர்ந்திருந்த கூட்டத்தினருக்கு திராட்சைப் பழங்களை வீசுவதும் படமாக்கப்பட்டது.

காலதாமதமானதால், தனிப்பட்ட நேர்காணல்கள் ஒவ்வொன்றும் அரை நிமிடத்தில் நிறைவு செய்யப்பட்டன. பாபா, ஏறக்குறைய 200 பேரை சந்தித்தாலும், ஒவ்வொருவரிடமும் முழு கவனத்தையும் செலுத்தினார்.

ஹிப்னாஸிஸ் (HYPNOSIS, மன ஆற்றல்) மூலமாக கடந்தகால அவதாரங்களை நினைவுகூர முடியுமா என்று ஒருவர் கேட்டார். பாபா பதிலளித்தார், "**அரிதான சந்தர்ப்பங்களில் இது சாத்தியம், ஆனால் மிகவும் ஆபத்தானது**."

லோரெட்டா வெல்லர் (LORETTA WELLER) என்பவர் ரட் தம்பதியர் மூலமாக, பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார், மேலும் 1952இல் நியூயார்க் நகரில், பாபாவை சந்திக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார். நியூ ஜெர்சி நகரில் வாழ்ந்த ஆன் ஃபோர்ப்ஸ் (ANN FORBES) என்ற நண்பரிடம் பாபாவைப் பற்றி கூறினார், ஆனால் பாபா, கார் விபத்துக்குள்ளானதைக் கேள்விப்பட்ட ஆன், லோரெட்டாவுடன் செல்ல மறுத்துவிட்டார்; மெஹர் பாபா ஒரு கார் விபத்தைத் தவிர்க்க முடியாவிட்டால், அவர் ஓர் ஆன்மீக குருநாதராக இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டார்.

லோரெட்டா, பாபாவை சந்தித்த பின்னர் ஆனை தொலைபேசியில் அழைத்து, "ஆன், எனக்கு மெஹர் பாபா கடவுள் என்று தெரியும்! பாபாதான் கிறிஸ்து!" என்றார்.

"அது உனக்கு எப்படித் தெரியும்?" ஆன் ஆர்வத்துடன் கேட்டார்.

"ஏனெனில், எனது கைகளிலும் கால்களிலும் (சிலுவையில் அறையப்பட்டதைப் போன்ற) கடுமையான வலியை உணர்ந்தேன், நான் அவர் முன்னால் எனது முழங்காலில் வீழ்ந்து வணங்கினேன்!"

ஆன் நினைவு கூர்ந்தார், "லோரெட்டா அவ்வாறு என்னிடம் கூறியபோது, என் மீது அலை ஒன்று பாய்வது போல் இருந்தது. நான் வாழ்நாள் வாய்ப்பை இழந்தேன்!"

லொரெட்டா பாபாவைப் பற்றிய ஒரு புத்தகத்தை ஆனிடம் கொடுத்தார், அதைத் தொடர்ந்து ஆன், பாபாவைப் பற்றிய அனைத்தையும் படிக்கத் தொடங்கினார்; மேலும் அப்பகுதியில் நிகழ்ந்த கூட்டங்களில் கலந்து கொண்டார். 1953ஆம் ஆண்டு மௌன தினத்தன்று, மௌனம் கடைப்பிடித்த அவர், பாபாவை தன் அறையில் பார்த்த அனுபவத்தை அடையப் பெற்றார்.

ஆன் ஃபோர்ப்ஸ் 1956 ஜூலை 22 அன்று டெல்மோனிக்கோ ஹோட்டலில் பாபாவுடனான தனது முதல் சந்திப்பை விவரித்தார்:

அங்கே பாபா வெள்ளை நிற சத்ராவும், மேல் கோட்டும் அணிந்த வண்ணம் அமர்ந்திருந்ததை நான் பார்த்தபோது, 'இந்தப் பிரபுத்துவம் நிறைந்த மனிதர், தூய்மையின் சாரமாக இருக்கிறார்!' என்ற எண்ணம் என் மனதில் உதயமானது. லோரெட்டாவைப் போலவே, நான் 1952இல் ஏன் அவரைப் பார்க்க வரவில்லை என்பதற்கான எனது மன்னிப்பின் வர்ணனையை சற்றும் சிந்திக்காமல், தானாகவே, அவர் முன்னால் முழங்கால்களில் வீழ்ந்து வணங்கினேன். அனைத்தும் மறந்துவிட்டது. யாரோ ஒருவர் என்னிடம்,

“பாபாவை சந்திக்கும் வேளையில் என்ன செய்வீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது; நீங்கள் எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதிலிருந்து வேறுபட்ட விதத்தில் நடந்துகொள்வீர்கள்” என்று கூறியிருந்தார்.

அங்கே நான் பாபாவின் முன்னால் இருந்தேன். பாபா என்னை என் இடது கையால் மெதுவாக மேலே இழுத்து, மனதாரத் தழுவினார். அவர் என்னை மிகவும் இறுக்கமாக அவரது கைகளில் பற்றிப்பிடித்தபோது, அவரது அன்பை என்னால் உணர முடிந்தது, “இது சாத்தியமா? கடவுளின் கைகளில் நான்?” பாபா என் எண்ணங்களை அறிந்திருக்க வேண்டும், ஏனெனில் அவர் உடனடியாக தமது கைகளை விலக்கி, எனது தோள்களில் கைகளை வைத்து, என்னை நேராகக் கூர்ந்து நோக்கினார். நாங்கள் ஒருவரையொருவர் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தோம். என்னால் முடிந்தவரை கண் இமைக்காமல் இருக்க முயற்சித்தேன், ஆனால் நான் அவ்வாறு செய்ததும், பாபா தமது கைகளைத் தளர்த்தினார்.

அதற்குப் பிறகு நான் நடைபாதைக்கு வெளியே வந்தபோது, நியூயார்க் நகரம் அப்படியே இருந்தது, ஆனால் நான் கட்டிடங்களைப் போல் உயரமாகவும், இறகு போல் இலகுவாகவும் உணர்ந்தேன். அது ஓர் அழகான, அற்புதமான உணர்வு. பாபா எனக்கு தெய்வீக அன்பை வழங்கினார் என்று நான் நம்புகிறேன். இது ஏறக்குறைய மூன்று நாட்கள் நீடித்தது.

‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகம் தனக்கு அதிகம் புரியவில்லை என்று ஒப்புக்கொண்டாலும், அந்தப் புத்தகம் பரவலாகக் கிடைக்கச் செய்வதில் ஆன் ஆர்வமாக இருந்ததாக ஜான் பாஸ் குறிப்பிட்டார். பாபா அவரிடம், **“ஐந்து முறை படியுங்கள், முடிவிலா காலம் வரை நீங்கள் அதை அறிந்து கொள்வீர்கள்”** என்று கூறினார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா உள்ளே இருந்த சுமார் 100 பேரை குழு சகவாசத்திற்காக அழைத்தார். டான் ஸ்டீவன்ஸ் பாபாவின் ‘உண்மையான பரிசு’ (REAL GIFT) மற்றும் ‘நித்திய நிகழ்காலம்’ (ETERNAL NOW) என்ற தலைப்புகளில் ‘உன்னதமான வாழ்க்கை’ (LIFE AT ITS BEST) எனும் புத்தகத்தில் அச்சிடப்பட்ட செய்திகளை வாசித்தார். பாபா பின்னர் ‘ஏழு நபர்கள்’ அடங்கிய பல்வேறு சிறு குழுக்களாகத் தமது அறைக்கு அழைத்தார். அவரது அறைக்கு வெளியே அமைந்த நடைபாதையில் பிற அனைவரும் காத்திருந்தபோது, பாபா மாடிக்குச் சென்றார்; ‘மண்டே நைட்’ உறுப்பினர்கள் ஒரு குழுவிலும், ஸ்கனெக்டடி குழு, ஸுஃபியிஸத்தின் பல்வேறு நபர்கள், மார்கரெட் க்ராஸ்கேயின் பாலே நடனக் கலைஞர்கள் மற்றும் அரிஸோனாவிலிருந்து ஒரு குழுவினர் அனைவரும் அவரைப் பார்க்கச் சென்றனர்.

பாபா, ஷா குடும்பத்தைச் சேர்ந்த ஐவரையும் தனக்கு முன்னால் விரிக்கப்பட்ட கம்பளத்தில் அமருமாறு சைகையால் தெரிவித்தார். பாபா அவர்களுடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருக்கையில், இதயத்தைத் 'திறந்து' அன்பைக் கொட்டிக் கொண்டிருந்ததாகவும், மேலும் அதை அடையப் பெறுவதற்கு பாபா, அவர்களின் இதய மையங்களைத் திறந்து கொண்டிருந்ததாகவும் தோன்றியது; டார்வின் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "தெய்வீக ஒளியால் சூழப்பட்டிருப்பதை நான் அறிந்திருந்தேன். எங்களுடைய மனம்போன போக்கிலான சிந்தனையின் கொடூரமான தருணங்களில், நாங்கள் அவரை நேசிப்போம் என்று நம்புவது போல் இருந்தது. நாங்கள் அவரைப் போற்றி, புகழ்ந்து வணங்கிக் கொண்டிருந்தோம்."

பாபா அவர்களின் கன்னங்களை அன்புடன் வருடியவாறு கூறினார்:

**நான் எனக்குப் பிரியமான அன்பர்களுடன் இருக்கும்போது, மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்; மிக்க மகிழ்ச்சியாக உணர்கிறேன். சாதாரண உலக மக்கள் எந்த நேரத்தில் மகிழ்ச்சியாக உணர்கிறார்கள்? நல்ல பசியுடன் இருக்கும் வேளையில், அருமையான இரவு உணவை அனுபவிக்கும் போது; அதை அனுபவித்த பின்னர், அவர்கள் ஒருவித திருப்தியையும் மகிழ்ச்சியையும் உணர்கிறார்கள். பசிக்கும் போது உண்பது சுகம். எனது பசி என்பது என்ன? எனது பிரியமான அன்பர்களை சந்திக்கும் போதுதான் எனது பசி அடங்கும்; உங்கள் அன்பைப் பார்க்கும் போது, நான் திருப்தி அடைகிறேன். அதுதான் என் உணவு. உங்கள் அன்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

பாபா, ஹோட்டல் டெல்மோனிக்கோவில் தங்கியிருந்தபோது, டார்வின் தனது சகோதரர் டேரல் ஷாவையும் (DARRELL SHAW) அவரது குடும்பத்தினரையும் பாபாவுடன் நேர்காணலுக்காக அழைத்து வந்தார்.

'மண்டே நைட்' குழுவிலிருந்த சிலரிடம், பாபா கூறினார்:

**இந்த உலகம் ஒன்றுமே இல்லை, ஒரு மாயை. அனைத்திலும் நான் இருக்கிறேன். அனைத்திலும் நான் இருக்கிறேன் என்று என் அதிகாரத்துடன் கூறுகிறேன். அந்த சிந்தனையில் என்னை நேசியுங்கள், பின்னர், உங்கள் பௌதீக உடலைக் கைவிடும்போது, நீங்கள் என்றென்றும் என்னுடன் இருப்பீர்கள்.**

ஸூஃபி குழுவில் சிலருக்கு, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நான் 'அன்பின் இறைவன்' என்றும், அதே வேளையில் என் 'அன்பர்களின் அடிமை' என்றும் பலமுறை கூறியிருக்கிறேன். இது வெற்றுப்பேச்சு அல்ல; இது உண்மை. நான் அன்பின் இறைவன் மற்றும் என் அன்பர்களின் அடிமை.**

பாபா சைகையால் எடுத்துரைத்ததை எரச் தொடர்ந்து விளக்கினார்:

**பாபா, இந்தியாவில் மஸ்துகளைத் தொடர்புகொள்ள வெளியே செல்லும் வேளையில், 'அன்பின் இறைவன்', 'இறை போதை'யில் இருக்கும் ஒருவரை சந்திக்கிறார் என்று கூறுகிறார். சத்தாராவிலிருந்து சுமார் 70 மைல் தொலைவில், தொண்டி புவா என்று அழைக்கப்படும் மஸ்த் வாழ்கிறார். பாபாவிற்கு மிகவும் பிரியமான மஸ்த். அவர் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ்பவர்; ஆடைகள் எதுவும் அணிவதில்லை அல்லது எதையும் விரும்புவதில்லை. நீங்கள் அவருக்கு எதையேனும் வழங்க விரும்பினாலும், அவர் அதை ஏற்றுக்கொள்வதில்லை; அவர் எதையுமே அணியாதபோதும் குளிர்ச்சியை உணர்வதில்லை. குளிர், மழை, கோடை காலங்களிலும் நாம் அவரை ஒரே நிலையில் காண முடியும். பாபா, இரவும் பகலும் பலமுறை சந்திக்கச் சென்றபோதெல்லாம், அவரை ஒரே நிலையில் காண நேர்ந்தது. பாபா, அங்குச் சென்று அவருக்கு ஆறுதலாக இருந்து, அவரது கால்களை முத்தமிட்டு, அவரைத் தழுவுகிறார். பாபா, அவருக்கு அருகில் இருப்பதில் மஸ்த் மிக்க ஆனந்தக் களிப்புடன், மகிழ்ச்சியாக உணர்கிறார். அவர் ஒரு குழந்தையைப் போன்றவர்; ஆனால், இந்த உலகம் மாயையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை அவர் அறிவார். அவர் எதையும் விரும்பவில்லை.**

**நமது ஆசைகளே நம்மை பிணைக்கிறது. நாம் எதையாவது விரும்புகிறோம், அதனால் பிணைக்கப்படுகிறோம். நாம் உண்மையில் எதையும் விரும்பாதபோது, நாம் பேரரசர்களைப் போல் இருக்கிறோம். நாமே எல்லாமும்; எனவே, நமக்கு எதுவும் தேவை இல்லை.**

சார்லஸ் என்ற சிறுவன், "நான் எப்படி நேசிக்க வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்" என்றான்.

டான் ஸ்டீவன்ஸ் பதிலளிக்க முன்வந்தார்: "முடிந்தவரை பாபாவுடன் அல்லது பாபாவின் அருகில் இருக்க வேண்டும் என்று நான் கூறுவேன். அல்லது, பாபாவுடன் இருக்க முடியாவிடில், பிறரில் பாபாவைப் பார்க்கவும், அவர்களை நேசிக்கவும் வேண்டும். ஏனெனில், வெளிப்படையாக, மனிதர்களை நேசிப்பதன் மூலம், ஒருவர் அவர்களாலும் நேசிக்கப்படுகிறார்."

எரச் தொடர்ந்து விளக்கினார்:

**இந்தியாவில் ஒருவர் பாபாவிடம் அவரை எப்படி நேசிக்க வேண்டும் என்று கேட்டார், அதற்கு பாபா அளித்த பதில்: "நீங்கள் என்னை எப்படி நேசிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை, நீங்கள் என்னை நேசிக்க வேண்டிய வழியை, எனக்குக் காட்ட வேண்டும். நான் இறை அன்பின் கடல்; நீங்கள் என்னை எப்படி நேசிக்க வேண்டும் என்பதை நான் எப்படி அறிவேன்? நீங்கள் தான் என்னை நேசிக்க வேண்டும். என்னை நேசியுங்கள் என்று நான் கூறும்போது, என்னை எப்படி நேசிப்பது என்பதை**

**நீங்களே கண்டுகொள்ள வேண்டும் - அன்பின் இறைப்பெருங் கடலாக இருப்பதால், என்னை எப்படி நேசிப்பது என்று எனக்கு எப்படித் தெரியும்? பாபா சொல்வதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா?**

**இதோ பாபாவின் விளக்கம்: நீங்கள் ஓர் அழகான பெண்ணை சந்திக்க நேர்ந்தால், முதல் பார்வையில் அந்தப் பெண்ணின் காதல் வலையில் வீழ்ந்தால், உங்களைப் பொறுத்த வரை, நீங்கள் முற்றிலும் அமைதியற்றவராகி, படபடத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அவளை மிகவும் நேசிக்கத் தொடங்குகிறீர்கள் ஆதலால், உங்களால் தூங்க முடிவதில்லை, உங்களுக்கு பசி இல்லை, உலகில் வேறு எந்த ஆர்வமும் இல்லை. நீங்கள் அவளை மட்டுமே அடைய விரும்புகிறீர்கள். எனவே, உணவு, உறக்கம், ஓய்வு என அனைத்தையும் மறக்கும் அளவுக்கு பாபாவை நேசிக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். ஒருவர் பாபாவுடன் ஒன்றிணைய, அவரை ஆட்கொள்ள முற்றிலும் அமைதியற்றவராகி, துடித்துக்கொண்டிருக்க வேண்டும். இதற்காக நாம், உண்மையில் உணவையோ உறக்கத்தையோ கைவிட வேண்டும் என்று அர்த்தமல்ல. அமைதியின்மை இயற்கையாக, தன்னிச்சையாக வர வேண்டும். எப்படி வரும்? பாபாவை நினைவுகூருங்கள் - அடிக்கடி அவரை நினைத்துப் பாருங்கள்.**

**கிறிஸ்து கூறினார்: "எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்." அவர் கூறியதன் அர்த்தம் என்ன? உடல், உணவு, உறக்கம் போன்ற எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும் என்று பொருள்படும் விதத்தில் அவர் கூறவில்லை. உங்கள் உடைமைகளைப் பற்றிய எல்லா எண்ணங்களையும், எல்லா உலக எண்ணங்களையும் விட்டுவிட்டு, அவரைப் மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.**

**பாபா கூறுகிறார்: "நான் எவ்வளவு தொலைதூரத்தில் இருந்தாலும், என்னைப் பார்க்கும் அளவிற்கு நீங்கள் என்னை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் இப்போது என் உடலை இங்கே பார்க்கிறீர்கள். என் உடல் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், நீங்கள் என்னை உடல் ரீதியாகவும் பார்க்க முடியும். இந்தியாவில், நான் அவர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்தாலும், சிலர் என்னை உடல் ரீதியாக பார்க்கும் அளவுக்கு என்னை நேசிக்கிறார்கள்."**

**கைக்கோபாத் என்று எனது மண்டலி ஒருவர் இருக்கிறார்.**

"சூரியன் சந்திரன்கள் அவரிடமிருந்து, தானே வெளிவருவதைக் காண்பவர் அவர்தானே?" டான் ஸ்டீவன்ஸ் கேட்டார்.

"**ஆம்**" என்று பாபா பதிலளித்தார்.

**இப்போது கைக்கோபாத் எல்லாவற்றிலும் என்னைப் பார்க்கிறார். எல்லாவற்றிலும் என்னையே பார்க்கும் அளவுக்கு இப்போதெல்லாம் அவருடைய அனுபவம் உள்ளது. நான் உடல் ரீதியாக இங்கே இருக்கிறேன், ஆனால் அவர் என்னை எல்லா இடங்களிலும் காண்கிறார். அவர் என்னை பல வருடங்களாக நேசித்து வருகிறார். அவருக்கென ஒரு குடும்பம் இருந்தாலும், அவர் அனைத்தையும் துறந்த நிலையில் இருக்கிறார். குடும்பத்தார் அனைவரும் ஒரே இடத்தில் தங்கியிருக்கிறார்கள்; ஆனால் அவர் என்னுடன் தங்கியிருந்து என்னையே எப்பொழுதும், 24 மணி நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறார்.**

**உங்களால் என்னை நேசிக்க முடியாவிட்டால், கவலைப்படாதீர்கள். நான் உங்களை நேசித்துக் கொண்டிருப்பேன்.**

அப்போது பாபா எதையோ சைகையால் தெரிவித்ததை எரச்சால் புரிந்துகொள்ள சிரமமாக இருந்தது. அவர் எழுத்துக்களைத் திரும்பத் திரும்பக் காட்டி, பாபா 'ஜி' என்ற எழுத்தில் அவரை நிறுத்தியதும், கடைசியாக எரச் அதைக் கண்டுபிடித்தார்: **"உங்கள் அன்பினால் பைத்தியமாகும் அளவிற்கு, நீங்கள் கடவுளை மிகவும் நேசிக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார்!"**

மைக்கேல் ஜே. லோஃப்டஸ் (MICHEL J. LOFTUS) உடனே, "பாபா, நாங்கள் 'முட்டாள் ஸூஃபி'களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டதற்கு, பாபா தனது கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் இணைத்து, ஒளிரும் கண்களுடன் அன்றிலிருந்து அவர்களை '**முட்டாள் ஸூஃபிகள்**' (GOOFY SUFIS) என்று அழைத்தார்.

பல வாரங்களாக, மரியன் ஃப்ளோர்ஷெய்ம் மற்றும் அவரது குழுவினர், மூன்றாம் அவென்யூ, 66ஆவது வீதி, மன்ஹாட்டன் ஹவுஸில் அமைந்த 'லாங்சேம்ப்ஸ்' உணவகத்தில் (LONGCHAMPS RESTAURANT IN MANHATTAN ON THIRD AVENUE), பாபாவிற்காக இரவு சிறப்பு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். பெரும்பாலான அன்பர்களுக்கு, 1956இல் மெஹர் பாபாவின் நியூயார்க் விஜயத்தின் சிறப்பு அம்சமாக இந்த வரவேற்பு அமைந்தது.

1956 ஜூலை 22 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்குள், 135 விருந்தினர்கள், பெரும்பாலும் நியூயார்க் பகுதியைச் சேர்ந்தவர்கள், ஆனால் சில வெளியூர் அன்பர்கள், மன்ஹாட்டன் ஹவுஸில் அமைந்த தோட்டத்தை எதிர்நோக்கி இருந்த லாங்சாம்ப்ஸின் பெரிய 'பாம் ரூம்' (PALM ROOM) அரங்கத்தில் கூடினர். தலைமை மேசையில், பாபாவின் நீண்ட கால சீடர்களான மார்கரெட் க்ராஸ்கே, எனிட் கோர்ஃப், எலிஸபெத் பேட்டர்ஸன், ஜான் பாஸ், டார்வின் ஷா ஆகியோர், பாபா மற்றும் நான்கு மண்டலியுடன் (ஆதி சீனியர், எரச், டாக்டர் நீலு மற்றும் மெஹர்ஜி) அமர்ந்திருந்தனர். பாபா இளஞ்சிவப்பு மேல் கோட்டும்,

வெள்ளை நிற சத்ராவும் அணிந்திருந்தார். மாலை 5:00 மணிக்கு பாபா உள்ளே நுழைந்ததும் அனைவரும் எழுந்து நின்று அவரை வரவேற்றனர்.

ஃபிலிஸ் அந்தத் தருணங்களைத் தெளிவாக நினைவு கூர்ந்தார்:

அனைவரின் கண்களும், ஆழ்ந்த கவனத்துடன், பாபாவைப் பார்க்கவே, எப்பொழுதும் போல் ஒளிர்ந்த முகமலர்ச்சியுடன், அவரது அன்பர்கள் பலருடன் இருப்பதில் வெளிப்படையான மகிழ்ச்சியுடனும் இருந்ததால், அங்கு முழு அமைதி நிலவியது. உணவு பரிமாறுபவர்கள், அமைதியாக ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை திராட்சை ரசத்தைக் கொணர்ந்து, ரொட்டியை மேசையின் மீது வைத்தபோது, பிரியமான பாபாவுடனான இந்தப் 'புதிய இரவு உணவை (LAST SUPPER), புனித விருந்து (HOLY COMMUNION)' என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை. நாங்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதையின் நிமித்தம் கோப்பையிலிருந்த பழரசத்தை ஒரு வாய் அருந்தினோம்; பாபாவும் தமது கோப்பையை உதட்டருகில் கொண்டு சென்றார். அதிர்ஷ்டவசமாக, மேசைகள் அவரது திசையில் சாய்ந்திருந்ததால், அனைவரும் பாபாவைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. பாபா முக்கிய விருந்தினராக இருந்ததால், ஒருவரும் தனக்கு அருகில் இருந்தவருடன் அதிகம் பேசவுமில்லை.

எங்கள் அனைவரின் இதயங்களையும் கவர்ந்த உணர்வில், வெகுநேரம் ஆகாத நிலையில், பாபா (எப்பொழுதும் விருந்தோம்புநராகவும், தெய்வீக விருந்தினராகவும்) குறைவற்ற அருளுடன் எழுந்து, மேசைகளுக்கு நடுவே நடந்து வந்து, தமது அன்பர்களையும் பக்தர்களையும் அன்புடன் வாழ்த்தினார் - ஸ்பரிசம், புன்னகை, மென்மையான வருடல், அன்பான பார்வை. கூட்டத்தில் பலருக்கு, அவர் அறிந்தது போல், இந்த சுற்றுப்பயணத்தின் எஞ்சிய பகுதிக்காக, நகரத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், அவரைப் பார்ப்பதற்கான கடைசி வாய்ப்பு இதுவாகும். ஒவ்வொரு கண்ணும் மேசையிலிருந்து மேசைக்கு வேகமாக நகரும் பாபாவின் உருவத்தைப் பின்தொடர்ந்ததால், அறை முழுவதும் நிசப்தமாக இருந்தது. அவரை நன்றாகப் பார்க்கும் எண்ணத்தில் கழுத்துகள் நெளிந்து, முகங்கள் அங்கும் இங்கும் வேகமாகத் திரும்பின; அவர் கடந்து செல்லும் போது முகங்கள் அவரைப் பார்க்கும் நம்பிக்கையில் முன்னோக்கி சாய்ந்தன.

பாபா மீண்டும் அமர்ந்ததும், மரியன் ஒலிபெருக்கியில் அவரையும் மண்டலியையும் முறைப்படி வரவேற்று, உலகம் எங்கும் சிதறிக் கிடந்த இதர குழுக்களிடமிருந்து வந்த தொலைத்தந்திகளில் சிலவற்றைப் படித்தார். ஹாலிவுட் குழு இவ்வாறு எடுத்துரைத்தது: "...ஒருமை எனும் ஏக இறைவனுடன் இருக்கும் உங்கள் அனைவருடன், நாங்கள் மகிழ்ச்சியுடனும், உள்ளுணர்வுடனும், நன்றியுடனும் இணைந்திருக்கிறோம். பாபா மீண்டும் இந்த மேற்கத்திய

கடலோரக் கரைகளுக்கு வருகை தந்ததை நாங்கள் மிகவும் அதிர்ஷ்டமாக உணர்கிறோம்.”

ஐவி, எலிஸபெத், மார்கரெட், டார்வின், ஃபிரெட் வின்டர்ஃபெல்ட், டான் ஸ்டீவன்ஸ் ஆகியோர் ஒவ்வொருவரும் சில வரவேற்பு வார்த்தைகளை மொழிந்தபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இன்று உங்கள் அனைவருடனும் இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். உங்கள் பக்தி ஒன்றுதான், ஏகாந்தவாச காலகட்டத்திலும், என்னை மேற்கத்திய நாடுகளுக்கு வரச் செய்தது. என் உலகளாவிய உள்ளத்தை, ஏதேனும் ஒன்று தொடுவதாக இருந்தால், அது அன்பு ஒன்றுதான். தெய்வீக அன்பின் எல்லையற்ற, கரையற்ற பெருங்கடலை உங்களிடம் கொண்டு வர, நான் வரையறுக்கப்பட்ட பூமியின் மீதான கடல்களைக் கடந்து வந்தேன். என்னை நேசிக்கத் துணிச்சலற்றவர்கள் கரையில் பாதுகாப்பைத் தேடி ஒதுங்குகின்றனர். என்னை நேசிக்கும் நீங்கள் அனைவரும் இந்த தெய்வீகப் பெருங்கடலில் நீந்துகிறீர்கள். நீங்கள் என்னில் மூழ்கும் வரை என்னை மேலும் மேலும் நேசியுங்கள். ஆழமாக மூழ்கி, எல்லையற்ற ஒருமையின் விலைமதிப்பற்ற ஆழ்கடலின் முத்தை அடையப் பெறுவீர்கள்.**

எரச் பேசுவதை நிறுத்தியபோது, இந்த ‘மெஹர் பாபா’ எனும் தெய்வீகப் பெருங்கடலின் மையப் புள்ளியிலிருந்து வரும் அன்பின் அலைகள் - அங்கிருந்த அனைவரையும், கிட்டத்தட்ட கண்ணுக்குத் தெரியும் விதத்தில் தூய்மைப்படுத்துவதை காலம் உணர முடிந்தது. அவர்கள் தெய்வீக மௌனம் மேற்கொண்ட ஒருவருடன் மௌனமாக அமர்ந்தனர், ஒவ்வொரு நபரும் பாபாவைப் பற்றிய தனது சுய சிந்தனையில் ஆழ்ந்தனர்.

‘**தெய்வீக பேரின்பமும் மனித துன்பமும்**’ (DIVINE BLISS AND HUMAN SUFFERING) என்ற பாபாவின் செய்தியை டான் ஸ்டீவன்ஸ் வாசித்தார். அதில் பாபா, சாதாரண மனிதன், பரிபூரண குருநாதர்கள், அவதார புருஷர் இவர்களுக்கு இடையேயான துன்பத்தின் வேறுபாட்டை விளக்கி, இவ்வாறு கூறி முடித்தார்: **“ஒரு சாதாரண மனிதன், தனக்காகத் துன்பப்படுகிறான்; குருநாதர்கள் மனித குலத்துக்காகத் துன்பப்படுகிறார்கள்; அவதார புருஷர் எல்லா உயிர்களுக்காகவும், அனைத்து பொருட்களுக்காகவும் துன்பப்படுகிறார்.”**



**லாங்சாம்ப்ஸ்** (LONGCHAMPS)**, 22 ஜூலை** (JULY) **1956**



**லாங்சாம்ப்ஸ்** (LONGCHAMPS)**, 22 ஜூலை** (JULY) **1956**

டான் ஸ்டீவன்ஸ் – DON STEVENS (கீழ் இடதுபுறம் – LOWER LEFT), லாரி கெர்ராஷ் - LARRY KARRASCH & பாபி ஃபெரென்ஸ் - BOBBY FERENZ (கீழ் வலதுபுறம் – LOWER RIGHT)





லாங்சாம்ப்ஸ் வரவேற்பு (LONGCHAMPS RECEPTION)

உணவு பரிமாறுபவர்கள் இரவு உணவைப் பரிமாறத் தொடங்கியதும், நியூயார்க் நகரின் பிரபல வானொலி அறிவிப்பாளரும், தொலைக்காட்சி சிறப்பு ஒளிபரப்பாளருமான டேவிட் ராஸ் (DAVID ROSS), பரிபூரண குருநாதர்களான கபீர், ஹ:ஃபீஸ், ரூமி ஆகியோரின் ஒவ்வோர் ஈரடிக் கவிதையையும், மெஹர் பாபாவின் நெருங்கிய அன்பர்கள் - டிலியா, நோரினா, மால்கம், ஜோஸ:ஃபின் ராஸ் (JOSEPHINE ROSS), ஜீன் :ஃபோஸ்டர் (JEAN FOSTER), ருவானோ, :ஃபிரான்சிஸ் பிராபஸோன் மற்றும் மணி - ஆகியோரின் ஆன்மீகக் கவிதைகளையும் உணர்ச்சி பொங்க மொழிந்தார். பாராயணத்தின் போது, பாபா இடையிடையே சில நேரங்களில் அசைவின்றி அமர்ந்திருந்தார்.

பென் ஹேய்மன், மிக்கி :ஃப்ளோர்ஷெய்ம், ஜான் பாஸ் ஆகியோர், பாபாவிற்கு இந்திய நேரத்தைக் குறிப்பிடும் கடிகாரத்தைப் பரிசாக வழங்கினர். இந்த சுற்றுப்பயணத்தில், பாபா விஜயம் செய்யும் இடங்களான லண்டன், மர்டில் பீச், ஸான் :ஃபிரான்சிஸ்கோ மற்றும் ஆஸ்திரேலிய நேர மண்டலங்களுக்கு இணங்க மண்டலிக்கு நான்கு கடிகாரங்களும், மணிக்காக ஒரு கடிகாரமும் வழங்கப்பட்டன. பாபா மகிழ்ச்சியுடன் பரிசுகளை ஏற்றுக்கொண்டு அவற்றை மண்டலிக்குக் கொடுத்தார்.

மரியன் சிறிது நேரம் மௌனமாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்; அதைத் தொடர்ந்து நான்கு அடுக்கு, வெள்ளை நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட பிறந்தநாள் கேக், பல ஒளிரும் மெழுகுவர்த்திகளுடன், நகர்த்தி உள்ளே கொண்டுவரப்பட்டது. இரண்டு குழந்தைகள், லாரி கர்ராஷ் (LARRY KARRASCH) என்ற ஏழு வயது சிறுவன் மற்றும் பன்னிரண்டு வயது சிறுமி பாபி :ஃபெரென்ஸ் (BOBBI FERENZ), பாபாவிற்கு மாலை அணிவித்தனர். நிகழ்வைப் பதிவு செய்யும் பல்வேறு தொலைக்காட்சி, திரைப்பட கேமராக்களுக்காக அதை மீண்டும் செய்தனர். பாபாவின் பிறந்தநாளில் அவருடன் அந்த நாளை சிறப்பிக்க வாய்ப்பு கிடைக்காததால், பாபாவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறி, கோஷமெழுப்ப, பாபா கேக் வெட்டினார்.

மீண்டும், பாபா அறையைச் சுற்றி நகர்ந்து, இதுகாறும் தொடர்பு கொள்ளாதவர்களை வாழ்த்துவதற்காக, வெவ்வேறு மேசைகளில் நின்றார். தமது இருக்கைக்குத் திரும்பிய பாபா, சந்திப்பைத் தவறவிட்டவர்கள் எவரேனும் இருந்தால், இப்போது தனது மேசைக்கு வந்து, பாபாவின் அரவணப்பை அல்லது அவருடன் கைகளைக் குலுக்க வேண்டும் என்று கூறினார். இந்த வழியில், குருநாதரின் தனிப்பட்ட ஆசீர்வாதத்தை அங்கு இருந்தவர்கள் எவரும் தவறவிடவில்லை. அடெல் வோல்கின் என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்ட, ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப்பூர்வ புகைப்படக் கலைஞரான லியோ ரோஸெந்தால் (LEO ROSENTHAL), இந்தத் தருணங்களில் பல புகைப்படங்களை எடுத்தார்.

ஒரு பெண்மணி, இரவு உணவின் போது, அவரது அனுபவத்தை இவ்வாறு விவரித்தார்: “பாபா சாப்பாட்டு அறைக்கு வந்து, தமது மண்டலி மற்றும் அன்பர்களுடன் மேசையில் அமர்ந்திருந்தபோது, ஒருவர் திடீரென மனித உணர்வை இழந்து, இறை ஒளியால் நிரப்பப்பட்டதாக உணர்ந்தார்... அறையின் சூழல் அவரது தெய்வீக அன்பால் வியாபித்திருந்தது. இதன் பின்னர், அங்கு இருந்த எவரும் அதே பழைய உணர்வு நிலையில் இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன்.”

இரவு உணவு நேரம் முழுவதும், ஆல்வா காயில் டெனிஸன் (ALVA COIL DENISON) பியானோவில் தனது சொந்த இசைப்பாடல்களில் சிலவற்றை வாசித்ததோடு, ஜான் ஆலிவர் (JOHN OLIVER) பாடிய பாபாவின் ‘மனமிரங்கி மொழியும் பிரார்த்தனை’யையும் (REPENTANCE PRAYER) இசைத்தார். டேவிட் ராஸ், ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்திலிருந்து, **‘பாபாவின் அறவிளக்க உரை’** (BABA’S SERMON) மற்றும் **‘வாழ்க்கையின் மதம்’** (THE RELIGION OF LIFE) என்ற செய்தி தொகுப்புகளைப் படித்தார். டாம் மார்லோ (TOM MARLOW) ஒரு நடன நிகழ்ச்சியை வழங்கினார். வேடிக்கையான தருணத்தில், நடனக் கலைஞர், பழைய சார்லி சாப்ளின் மற்றும் மேரி பிக்ஃபோர்ட் நடித்த ஊமை திரைப்படங்களின் நகைச்சுவை காட்சிகளை நடித்துக் காட்டினார்.

லாங்ஸ்சாம்ப் ஹோட்டலில் வரவேற்பு நிகழ்ச்சி இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. பாபா மிக அரிதாகவே உண்டார்; உடைந்த ரொட்டி சுருளைத் தவிர அவரது தட்டில் இருந்த உணவு, தீண்டப்படாமல் இருந்தது. ஆனால் அவர் புறப்படும்போது, **”உங்கள் அனைவரிடமிருந்தும் அடையப் பெற்ற அன்பு எனது விருந்து என்பதால், நான் உண்ணத் தேவையில்லை என்று நினைக்கிறேன்! உங்களுக்கு வழங்கிய கேக்கில் இருந்த சிறிய பாபா கொடிகளை உங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று, என்னை நினைவுகூருங்கள்”** என்று அவர் தெரிவித்தார். பாபா பின்பு டெல்மோனிக்கோவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1956 ஜூலை 23 திங்கட்கிழமை காலை 9:00 மணிக்கு பாபா, அவரது நெருங்கிய அன்பர்களில் சிலரை தனது அறைக்கு அழைத்து, **“நான் பல மாதங்களாக ஏகாந்தவாசத்தில் அடைக்கப்பட்டிருந்தேன், இப்போது நீங்கள் என்னை இந்த ஹோட்டலில் அடைத்து வைத்துள்ளீர்கள்! நான் வெளியே செல்ல விரும்புகிறேன்.”** கூட்டத்தில் யாரோ ஒருவர் நியூயார்க் நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று பரிந்துரைத்த போது, பாபா ஒப்புக்கொண்டார், அங்கிருந்த அனைவரையும் உடன் செல்ல அழைத்தார். அன்றைய தினம் உல்லாசப்பயணம் திட்டமிடப்பட்டது.

சிறிது நேரத்தில் மீண்டும் நேர்காணல் தொடங்கியது. அன்றைய தினம், இதர நாட்களைக் காட்டிலும் கூட்டம் அதிகமாகக் கூடியது. பலர் பாபாவிற்கு

பரிசாக வழங்க பூக்கள், அவருக்கென தயார் செய்த ஆடைகள், மிட்டாய்கள் மற்றும் இனிப்புகள் போன்றவற்றைக் கொண்டு வந்தனர்.

இரண்டு பெண்மணிகள் தங்கள் கைகளால் அவரை வடிவமைத்த சிறிய சிற்பங்களைப் பரிசாக வழங்கினர். மற்றுமொரு பெண்மணி, ஒரு பெட்டியில் குட்டி சின்சில்லாவைக் (CHINCHILLA, மென்மயிர் தோலுடைய தென் அமெரிக்க விலங்கு வகை) கொண்டு வந்தார். பாபா அதைத் தொட்டு ஆசீர்வதித்ததால், அடுத்த பிறவியில் மனிதனாகப் பிறக்கும் என்றார். ஒரு சிறுவன் பாபாவின் பெரிய உருவப்படத்தை சித்திரமாக வரைந்தான். பாபா அதைத் தனது கைகளில் ஏந்தி, ஆசீர்வதித்து, பின்னர் அதைத் தனது அறைக்கு எடுத்துச் சென்றார். அன்றைய தினம் பாதாம் பருப்பு பிரசாதமாக வழங்கப்பட்டது.

காலை 11:00 மணியளவில், அனைவரும் நேர்காணல் அறைக்கு அழைக்கப்பட்டனர். என்.பி.சி. தொலைக்காட்சி (N.B.C. TELEVISION) ஒளிப்பதிவாளர்கள் ஒரு குறும்படம் எடுக்கும் ஆயத்தத்தில் வந்தனர். டான் ஸ்டீவன்ஸ், பாபாவின் '**மரணமில்லா வாழ்க்கை**' (DEATHLESS LIVING) என்ற செய்தியைப் படித்தார்; தொடர்ந்து பாபா கூறினார்:

**மகிழ்ச்சியாக இருப்பது ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமை, ஆனால் பெரும்பாலான மக்கள் பரிதாபமாக உணர்கிறார்கள். பரிணாம காலகட்டம் முழுவதும் சேகரிக்கப்பட்ட மனப்படிவங்கள் அல்லது மனப்பதிவுகளின் சுமையே இதற்குக் காரணமாகும். நமது பரிணாம வளர்ச்சியில், கல், புழு, பறவை, மீன், விலங்கு என அனைத்து வடிவங்களிலும், நாம் மனப்படிவங்களை சேகரிக்கிறோம். மனித உணர்வு அடையப்பெற்ற அந்த கணமே, உணர்வு முழுமை அடைகிறது. அதன் பின்னர், இறை உணர்வு எனும் சுதந்திரத்தை அடைவதற்காக, ஒருவரின் கவனத்தை 'நான்' எனும் அகந்தையின் மீது செலுத்துவது ஒன்றுதான் இன்றியமையாதது.**

**எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க முடியும், ஆனால் சிலர் மகிழ்ச்சியாகவும், சிலர் துன்பமாகவும் உணர்கிறார்கள். இடைவிடாது எதையாவது விரும்புபவர்கள் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார்கள். ஆசையை துன்பம் துரத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. தனக்கென இல்லாமல் பிறருக்காக ஆசைப்படுபவர்கள், மகிழ்ச்சியாக உணர முடியும். ஏன்? ஏனெனில் பிறர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.**

**எல்லாவற்றிலும் எல்லோரிலும் நிலைகொண்டிருக்கும் கடவுள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் கோவில்களில் நடத்தும் முறையான சடங்கு சம்பிரதாயங்கள், பிரார்த்தனைகள் அனைத்திற்கும் செவிமடுப்பதில்லை. ஆனால் அவர் இதயத்தின் குரலைக் கேட்கிறார். நீங்கள் பிறருக்கு உதவும் போது, கடவுள் அதை உடனடியாக அறிந்து மகிழ்கிறார்.**

**எவ்வளவுதான் பிரார்த்தனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட்டாலும், அது பிறருக்காகச் செய்யும் உதவிக்கு நிகராகாது.**

**இன்றியமையாத ஒன்று என்னவெனில், என் மீதான அன்பு. நீங்கள் என்னை எப்படி நேசிப்பீர்கள்? கடவுளையும் பிறரையும் நேசிப்பதன் மூலம். நீங்கள் பிறரை மகிழ்வுறச் செய்தால் கடவுளின் கவனம் தானாகவே அதில் ஈர்க்கப்படுகிறது. நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? அனைவரும் ஒன்று என்ற ஒரே செய்தியை, காலங்காலமாகக் கூறி வருகிறேன். நாம் அனைவரும் ஒன்று, நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள்.**

**நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன், எல்லாம் என்னுள் இருக்கிறது. இந்தியாவில் தொழுநோயாளிகள், ஏழைகள், முடவர்கள் அனைவருக்கும் நான் தலைவணங்குகிறேன். நான் ஏன் தலைவணங்குகிறேன்? ஏனெனில் நான் எல்லாவற்றிலும் ஒன்றாகக் கலந்திருக்கிறேன்! கடவுள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார். காலங்காலமாக, நான் ஒரே செய்தியைக் கொண்டு வருகிறேன், ஆனால் மனிதகுலம் அதற்கு செவிமடுப்பதில்லை. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட வேண்டியதாக இருந்தது; இல்லையெனில், மனிதகுலம் அவருக்கு செவிசாய்த்திருக்காது.**

பாபா, "**நான் ஆதிகாலத்தவன்**" என்று சைகையால் கூறி முடித்தார்.

நியூயார்க் நகர தொலைக்காட்சியில் அன்று இரவு வெகுநேரம் பாபாவைப் பற்றிய செய்தி ஒளிபரப்பப்பட்டது.

பாபா நேர்காணல் அறையை விட்டு வெளியேறி, நியூயார்க் நாளிதழ்களின் செய்தியாளர்களை சந்திப்பதற்காக அருகிலிருந்த ஒரு சிறிய அறைக்குச் சென்றார். இந்த நேர்காணலில் கலந்துகொள்ள ஏறக்குறைய ஒரு டஜன் பேர் வந்திருந்தனர். பாபாவின் வாழ்க்கை மற்றும் பின்னணி குறிப்பு குறித்து, ஐவி ஏற்கனவே அவர்களுக்கு விளக்கியிருந்தார். எரச், வழக்கம் போல, பாபாவின் சைகைகளை விளக்கினார்:

**"உங்கள் அனைவரையும் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். சில நிமிடங்களுக்கு முன்பு, நான் நேர்காணல்களை வழங்கிக் கொண்டிருந்தபோது, இந்த நிருபர்-நண்பர் என்னிடம் கேட்டார், 'பாபா, உங்கள் சிறப்புப் பெயர் என்ன?' என்று! 'உங்களுக்கு நினைவில்லையா?'"**

நிருபர், "ஆம், நினைவிருக்கிறது" என்றார்.

**"இந்தியாவில் மக்கள் என்னை அவதார புருஷர் என்று அழைக்கிறார்கள், அதாவது கடவுள் மனித உருவில் இருக்கிறார், கடவுள் மனித உருவில் பூமியில் இறங்கி வருகிறார். ஆனால் நான் எல்லோரிடமும் கூறுவது என்னவெனில், நீங்கள் அனைவரும் அவதார புருஷர்களே! ஏன்? ஏனெனில், கடவுள் எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறார். நானும்**

**நீங்களும் ஒன்றே. அதைத்தான் நான் அனைவருக்கும் கூறுகிறேன். இந்தியாவில் நான் தரிசனம் வழங்க வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும் போதெல்லாம், மக்கள் என்னைத் தலைவணங்க, நானும் அவர்களை வணங்குகிறேன் - வயதானவர்கள், தொழுநோயாளிகள், குழந்தைகள் - ஒரே உண்மைப்பொருள் கடவுள் என்பதை அவர்களுக்கு புரிய வைக்கிறேன். ஒவ்வொரு தனி மனிதனும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், ஆனால் ஒருவரும் மகிழ்ச்சியாக இல்லை. ஏன்? அறியாமை, அறியாமைதான் அதற்குக் காரணம். கடவுள் அனைத்திலும் இருக்கிறார், கடவுள் அனைத்தையும் அறிந்தவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. கடவுளின் விருப்பத்திற்கு அடிபணிபவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், ஏனெனில் அப்போது மகிழ்ச்சியாக உணர்வது எப்படி என்று அவர்களுக்குத் தெரியும். ஒருவர் தன்னையே நினைக்காமல், பிறரைப் பற்றி நினைத்து, அவர்களை மகிழ்விக்க முயற்சிக்க வேண்டும், பின்னர் எந்த சண்டை சச்சரவும் இராது, எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். எல்லாம் இணக்கமாக இருக்கும்.**

**“நேற்று, நான் இந்தச் செய்தியை வழங்கினேன்: அனைத்து சக்தியும், ஞானமும், அன்பும், கருணையும், பேரின்பமும் நிறைந்த கடவுள், நம் அனைவரிடமும் வாழ்கிறார். இந்த அளவிறுதியற்ற குணங்களின் அனைத்து எதிர் அம்சங்களும் நம்மில் உள்ளன. உதவியின்மை, அறியாமை, காமம், கொடுமை மற்றும் துன்பம். கடவுளை விரும்பும் ஒருவன் இரக்கம், தன்னலமற்ற தன்மை மற்றும் சுய மறுப்பின் தூண்டுதலால் துறவறத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றை வளர்த்துக் கொள்கிறான். நிழல் போன்ற தற்காலிக பொருட்கள் மீதுள்ள மோகத்தால், அவற்றைப் பின்தொடர்ந்து செல்பவன், சுயநலம், பேராசை மற்றும் வெறுப்பை வளர்த்துக் கொள்கிறான். இவ்வாறு, கடவுளை விரும்புபவன் பூமியில் அமைதியை நிலைநாட்டும் அதே வேளையில், தற்காலிக பொருட்களைத் தேடி அலைபவன் போருக்கும், அழிவுக்கும் வழிவகுப்பான். கீழ் நிலை மற்றும் தேவையற்ற ஆசைகளைக் கைவிடுங்கள், நீங்கள் பூமியில் சொர்க்கத்தை அனுபவிப்பீர்கள்.”**

வேறொரு நிருபர் பாபாவிடம் வினவினார், “உங்கள் மௌனம் தொடர்பான பல செய்திகளின் தொகுப்புகள் எங்களிடம் உள்ளன. ஒன்றை விட மற்றொன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் ஏதேனும் அறிக்கை அவற்றில் உள்ளதா?”

**“ஆமாம், ஒன்று உள்ளது”** என்று பாபா பதிலளித்தார். **“நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, அவர்கள் எதிர்நோக்கி இருந்த ஏக இறைவன் நானேதான் என்பதை உலகம் அறியும்.”**

“உங்கள் மௌனத்திற்கு தூண்டுதலாக இருந்தது எது?”

**“நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது உலகம் என்னை அறிந்து கொள்ளுமாறு செய்வது.”**

“எந்தவிதமான சூழ்நிலையில் நீங்கள் மௌனம் கடைப்பிடித்தீர்கள்? உங்களுக்கு ஏதேனும் ஒரு காட்சி அல்லது அது தொடர்பான செய்தி இருந்ததா?”

**“எனது ஞானம். இதைப் பற்றி நான் சிந்திக்க வேண்டியதில்லை; எனக்கு அது தெரியும். நான் முதலில் எனது மௌனத்தைத் தொடங்கிய வேளையில், அதைக் கலைக்கும் போது உலகம் என்னை அறிந்துகொள்ளும் என்று எனக்குத் தெரியும், அதனால்தான் நான் அதைத் தொடங்கினேன்.”**

எரச் கேட்டார், “பாபா கூறுவதை நீங்கள் புரிந்துகொண்டீர்களா? அது மிகவும் முக்கியம் என்று பாபா கூறுகிறார்.”

அதற்கு நிருபர், “ஆமாம், நன்றி. பல வருடங்களாக பேசாமல் இருக்கும் ஒருவர், அவரது பேச்சுத் திறனை இழந்துவிடுவது நாம் அறிந்ததே. நேரம் வரும்போது உங்களால் பேச முடியும் என்ற நம்பிக்கை உள்ளதா?”

**“நூறு சதவீதம்”** என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

மற்றுமொரு நிருபர், “எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?”

**“ஏனெனில் எனக்குத் தெரியும்”** என்று பாபா பதிலளித்தார்.

நிருபர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளத் தொடங்கியபோது, பெர்னார்ட் கர்வாலோ (BERNARD CARVALHO) குறுக்கிட்டு, எரச் எப்படி எழுத்துக்களை மொழிகிறார் என்பதை விளக்கி, பாபா தான் விரும்பும் வார்த்தையின் முதல் எழுத்தை ஓர் அடையாளமாக குறிப்பிடும் வரை, தேவைப்பட்டால் எரச் அதை சரியாகப் புரிந்துகொள்ளும் வரை, வார்த்தையை உச்சரிக்க வேண்டிய தேவை உருவாகிறது என்று குறிப்பிட்டார்.

பாபா தொடர்ந்து கூறினார்: **“நான் எனது மௌனத்தைத் தொடங்கியபோது, எழுதுவதையும், படிப்பதையும் நிறுத்திவிட்டேன். அதன் பின்னர் எழுத்துப்பலகையைப் பயன்படுத்த ஆரம்பித்தேன். மக்கள் என் அருகில் வந்தபோது, நான் எழுத்துப்பலகையில் விளக்கினேன், செய்திகளை வழங்கினேன். இப்படி ஒரே நேரத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில், என்னிடம் வந்தனர். நான் எழுத்துப்பலகையில் எடுத்துரைக்கும் செய்தியைக் கேட்க அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர். சமீபத்தில், எனது எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதைக்கூட விட்டுவிட்டேன். மேலும், எனது சைகைகள் மூலம் நான் விரும்புவதை வெளிப்படுத்த முயற்சிக்கிறேன்.”**

எரச் தொடர்ந்தார்: “பாபா என்ன கூற விரும்புகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியாதபோது, அவர் ஓர் அடையாளக்குறியைக் காட்டுகிறார்; நான் உடனடியாக நிறுத்திவிட்டு ஏ, பி, சி, டி, என்ற எழுத்துக்களை மீண்டும் மொழிகிறேன்.”

பாபா கூறினார்: **“உங்கள் அனைவரையும் பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.”**

அதே நிருபர், “நான் மேலும் ஒரு கேள்வி கேட்கலாமா? நீங்கள் சாதிப்பதை, பிறரும் சாதிக்க விரும்பினால், அவர்களும் மௌனம் கடைப்பிடிப்பதைப் பரிந்துரைக்கிறீர்களா?”

பாபா, **“இல்லை”** என்று சைகையால் தெரிவித்தார்.

நிருபர் தொடர்ந்தார்: “அவ்வாறு நீங்கள் பரிந்துரைப்பதில்லை. நீங்கள், பில்லி கிரஹாம் (BILLI GRAHAM) என்ற அமெரிக்க சுவிசேஷ போதகரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் அவரை சந்தித்துப் பேசியிருக்கிறீர்களா?”

மீண்டும் பாபா, **“இல்லை”** என்று சைகையால் தெரிவித்தார்.

“நீங்கள் அவருடைய பணியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?”

**“எனக்குத் தெரியும்.”**

“அவருடைய பணியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கூற முடியுமா?”

**“கடவுள் அல்லது ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்யப்படும் எந்தப் பணியும் நல்ல பணிதான். ஆனால் அது உண்மையாகவும், நேர்மையாகவும், பெருமிதம் கொள்ளாமல், அதன் மூலம் லாபம் எதிர்பாராமல், செய்யப்பட வேண்டும்.”**

இந்த நேரத்தில், பாபா புறப்பட ஆர்வமாக இருந்ததாகத் தோன்றியது, மேலும் மக்கள் அவருக்காக உள்ளே காத்திருந்ததைச் சுட்டிக்காட்டினார். நிருபர் மேலும் ஒரு கேள்வி கேட்டார்: “உங்கள் தற்போதைய அமெரிக்க பயணத்தின் போது, உங்கள் 31 வருட மௌனத்தை கலைப்பீர்களா?”

பாபா பதிலளித்தார்: **“இல்லை, இல்லை. நான் இந்தியாவில் இருந்தபோது, ஒரு வருடம் ஏகாந்தவாசம் மேற்கொள்ள முடிவு செய்தேன். இந்தச் செய்தியை என் அன்பர்கள் அனைவருக்கும் சுற்றறிக்கை மூலமாக அறிவித்தேன். இந்தப் பயணம் எனது ஏகாந்தவாசத்தில் ஒரு மாத இடைவெளி. நான் இந்தியா திரும்பிய பின்பு, மீண்டும் தொடர்வேன். அது முடிவதற்கு இன்னும் ஐந்து மாதங்கள் உள்ளன. ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்னர், எனக்கு ஏற்றது என்று நான் நினைக்கும் போது, எனது மௌனத்தைக் கலைப்பேன்.”**

“ஆனால் இந்த நாட்டில் இல்லையா?”

**“இல்லை.”**

“நீங்கள் இந்தியாவின் தற்போதைய மஹாத்மா காந்தியா?”

**“எனக்கு அரசியலில் அக்கறை இல்லை. காந்தி ஒரு நல்ல உள்ளம் படைத்தவர். அவர் என்னை மிகவும் நேசித்தார். இதைப் பற்றிய விவரங்களை ஆதி ஈரானி உங்களுக்கு எடுத்துரைப்பார். இது திரும்பத்**

**திரும்பக் கேட்கப்பட்ட கேள்வி ஆதலால், எனது பதில் என்ன என்பது அவருக்குத் தெரியும். உண்மை என்னவெனில், காந்தி என்னை மிகவும் நேசித்தார். அவர் என்னை மூன்று முறை சந்தித்தார். திரு. ஆதி ஈரானி உங்களுடன் முழு விபரத்தையும் பகிர்ந்துகொள்வார்.**"

இத்துடன் பாபா நிருபர்களுடான நேர்காணலை நிறைவு செய்ய விரும்பினார்; ஆனால், சில நிருபர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். ஒருவர் கேட்டார், பிரைடி மர்ஃபியின் 'தி ஸெர்ச் ஃபார்' ('THE SEARCH FOR' BY BRIDEY MURPHY) தொகுப்பில் குறிப்பிட்டுள்ளதற்கு இணங்க, மறுபிறவி கோட்பாட்டில் ஏதேனும் உண்மை உள்ளதா?"

பாபா சுட்டிக்காட்டினார், "'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **என்ற புத்தகத்தில் நீங்கள் அந்தக் கேள்விக்கான பதிலைக் காண்பீர்கள். இது பரிணாம வளர்ச்சியின் உணர்வு நிலை, மறுபிறவி, ஆன்மீகத் தளங்களில் உட்சுழற்சி மற்றும் இறுதி அனுபவமான இறைவனுடன் ஐக்கியம் குறித்த ஒவ்வொரு விவரத்தையும் வழங்குகிறது.**"

விடைபெறுவதற்கு முன்னர், இறுதி கேள்வியாக ஒரு நிருபர் கேட்டார், "உலகம் முழுவதும் பாபாவைப் பின்பற்றும் அன்பர்கள் எத்தனை பேர் உள்ளனர்?"

எரச் பதிலளித்தார், "நாங்கள் பாபாவைப் பின்பற்றுபவர்களை ஒருபோதும் கணக்கிடவில்லை; ஆனால் இந்தியாவில், குறிப்பாக, தெற்கு மாகாணமான ஆந்திர பிரதேசத்தில், நடைமுறையில் ஒவ்வோர் இல்லத்தில் வாழும் அனைவரும் பாபாவை அறிந்திருக்கிறார்கள், பாபாவை நேசிக்கிறார்கள், அவர்களின் குழந்தைகள் கூட பாபாவைப் புகழ்ந்து பாடல்களைப் பாடுகிறார்கள். பின்பற்றுபவர்களின் உறுதியான எண்ணிக்கையைக் கணக்கிடுவது சாத்தியமற்றது."

பாபா சைகையால் பதிலளித்தார், "**எப்படி ஒருவர் என்னைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை உறுதியாகக் கூற முடியும்? எனது தலையில் உள்ள ஒட்டுமொத்த மயிர்களின் எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா?**"

அதைத் தொடர்ந்து பாபாவும் மண்டலியும் அங்கிருந்து வெளியேறி, 12:30 மணிக்கு மதிய உணவு உண்டனர்.

ஜூலை 23 மதியம் 2:45 மணியளவில், நேர்காணல் அறையில் புதியவர்களை அல்லது ஏற்கனவே சந்தித்தவர்களை ஒவ்வொருவராக பாபா வரவேற்றார். நேர்காணலுக்குப் பிறகு பலர் அங்கிருந்து வெளியேற முடியாமல் நின்றுகொண்டிருந்தனர். சிலர் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

மாலை 4:00 மணிக்கு, பாபா மீண்டும் மாடிக்குச் சென்றார். லிஃப்ட் தாமதமாக வந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, ஏராளமான குழந்தைகள் அவரை சூழ்ந்து ஒன்றுதிரண்டனர். லிஃப்ட் வரும் வரை, பாபா அவர்களுடன்

விளையாடினார், கேலியும் கிண்டலும் செய்தார், அவர்களின் முகங்களை வருடினார்.

ஐந்து மணியளவில், பாபாவுடன் சுற்றுலா செல்லவிருந்த அன்பர்கள் அனைவரும் முகப்பு அறையில் கூடினர். பாபா ஒரு கருப்பு குடை மற்றும் சிவப்பு 'பைஸ்லி' கம்பளி துண்டையும் ஏந்திய வண்ணம் எரச்சுடன் கீழே வந்தார். கண்ணாடியால் முழுவதுமாக மறைக்கப்பட்ட பேருந்தில் பாபா ஏறினார், அவரது அன்பர்கள் பின்தொடர்ந்தனர். ஓட்டுநரைத் தவிர, ஓர் அதிகாரப்பூர்வ சுற்றுலா வழிகாட்டியும் அவர்களுடன் இருந்தார்.

வெயிலாகவும் வெப்பமாகவும் இருந்தது. முதலாவதாக குழு, ஐக்கிய நாடுகள் (UNITED NATIONS) கட்டிடத்திற்கு விஜயம் செய்தது. முழுப்பயணத்திலும் பாபாவின் விரல்கள் விறுவிறுப்பாக பணிபுரியத் தொடங்கின. பயணத்தின் போது, பாபா விரல்களுக்கு இடையில் ஒரு மெல்லிய தகரத் துண்டை வைத்திருந்தார். ஐ.நா.விலிருந்து அவர்கள் மூன்றாவது அவென்யூவைக் (THIRD AVENUE) கடந்து, ஐந்தாவது அவென்யூவைச் சென்றடைந்தனர்; அங்கு வழிகாட்டி, 'மில்லியனர்ஸ் ரோ' ("MILLIONAIRES' ROW") என்று அழைக்கப்பட்ட அற்புதமான வீடுகளைச் சுட்டிக்காட்டினார். கொலை செய்யப்பட்ட வஞ்சக நிதியாளரான 'ஸெர்ஜ் ரூபின்ஸ்டீனின்' (SERGE RUBINSTEIN) வீட்டை அவர் சுட்டிக் காட்டியபோது, பாபா வேதனையுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் ஓட்டுநரிடம் 'சென்ட்ரல் பார்க்' (CENTRAL PARK), கீழே 'வெஸ்ட் ஸைட் ஹைவே' (WEST SIDE HIGHWAY) வழியாகச் சென்று, துறைமுகத்தில் இருந்த பெரிய பயணிக் கப்பல்களைப் பார்க்க அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார் (இருப்பினும், டிரைவர் சுட்டிக்காட்டியபடி, 'வெஸ்ட் ஸைட் ஹைவே'யில் பேருந்துகள் அனுமதிக்கப்படவில்லை).

ஓர் இளம் பெண், பாபாவின் தலையில் கண்ணாடி கூரை வழியாக சூரியனின் கதிர்கள் விழுவதை கவனித்து, அது பாபாவைத் தொந்தரவு செய்வதாகத் தனது தோழியிடம் கிசுகிசுத்தார். அவர் கூறியதைக் கேட்டிருக்க வாய்ப்பில்லாத போதும், பாபா, அதனால் தொந்தரவு எதுவும் இல்லை என்று உடனடியாகச் சுட்டிக் காட்டினார். ஆயினும்கூட, ஆதி பயணத்தின் எஞ்சிய பாகத்தில், பாபாவின் தலைக்கு மேல் அவரது கழுத்துக் குட்டையை பாதுகாப்பாக வைத்திருந்தார்.

ஃபிலிஸ் ஃபிரடெரிக் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

பாபா கட்டிடங்கள் அல்லது காட்சிகள் எதையும் பார்த்ததாக அல்லது கவனித்ததாகத் தெரியவில்லை, ஆனால் முற்றிலுமாக ஆழ்ந்து உள்வாங்கி, 'அவரது குழந்தைகளான' எங்களுடன் இருப்பதில் திருப்தி அடைந்ததாகத்

தோன்றியது, மேலும் அவரது அற்புதமான புன்னகையால் எங்களை உற்சாகப்படுத்தி, இனிப்புகளை வழங்கி உண்ணுமாறு கூறினார்.

'டைம்ஸ் ஸ்கொயர்' (TIMES SQUARE) சந்திப்பில், நெரிசல் காரணமாக வாகனங்கள் ஸ்தம்பித்த அந்த வேளையில், பாபாவின் விரல்கள் மீண்டும் வேகமாக அதிர்ந்தன; அங்கிருந்து அவர்கள் டெல்மோனிக்கோ ஹோட்டலுக்குத் (கிழக்கு 42ஆவது வீதி, லெக்ஸிங்டன் அவென்யூ - LEXINGTON AVENUE வழியாக) திரும்பிச் சென்றனர்.

அன்று மாலை 7:00 மணிக்கு, பாபா தனது அறையில் 'மெஹர் பாபா விருந்தோம்பல் குழு'வின் கூட்டம் ஒன்றை சிறிது நேரத்திற்காக அழைத்தார். மரியன் ஃப்ளோர்ஷெய்ம் நிதிநிலை அறிக்கையை வாசித்துவிட்டு, பாபாவிடம் 'எஞ்சியிருக்கும் சிறு தொகையை என்ன செய்ய விரும்புகிறீர்கள்?' என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார், **"நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில், பணத்தை ஏற்கவோ வழங்கவோ மாட்டேன்."**

மரியன் வினவினார்: "நீங்கள் பௌதீக உடலைக் கைவிட நேர்ந்தால், பெண் மண்டலியின் நிலை என்னவாகும்?"

**ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் அடுத்த ஐந்து மாதங்களில் நான் என் உடலைக் கைவிடலாம்; ஆனால், நீங்கள் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். என்னை நேசிப்பதைப் பற்றி மட்டும் கவலைப்படுங்கள். எனது** (இறுதி) **பிரகடனத்தில் நான் கூறிய அனைத்தும், அதில் குறிப்பிட்டது போலவே நிறைவேறும்.**

**டாக்டர் தேஷ்முக் ஒருமுறை எனக்கு நிகழவிருக்கும் அவமானத்தை நினைத்து அழுது கொண்டிருந்தார். நான் அவரிடம், "நீங்கள் ஏன் எப்பொழுதும் என் அவமானத்தைப் பற்றி நினைக்கிறீர்கள், என்னை மகிமைப்படுத்துவதைக் குறித்து நினைக்கவில்லை?" என வினவினேன்.**

**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் இப்பொழுதுதான் என்னுடன் பேருந்தில் பயணம் செய்தீர்கள். நான் பிரபஞ்சங்களின் மையம்.** (அவர் பிரபஞ்சங்கள் என்ற வார்த்தையை அழுத்தம் திருத்தமாக மொழிந்து, இடது உள்ளங்கையில் ஒரு புள்ளியையும் வட்டத்தையும், தனது ஆள்காட்டி விரலால் உருவாக்கினார்.) **நான் பேருந்தில் உங்களுடன் இருந்தபோது, நான் எல்லா இடங்களிலும் பணிபுரிந்து கொண்டிருந்தேன்.**

**நான் எப்படித் துன்பப்படுகிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் என்னிடம் வருகிறது. அதே சமயம் ஆனந்தத்தையும் உணர்கிறேன். கிறிஸ்து சிலுவையில் உடல்ரீதியாக துன்பப்பட்டார், ஆனால் அவரது பேரின்பம் குன்றாமல் குறையாமல் அவருடனே இருந்தது.**

1957, **பிப்ரவரி** 15 **அன்று, நான் ஏகாந்தவாசத்தை நிறைவு செய்த பிறகு, நான் மும்பையில் ஒரு பெரிய வெகுஜன தரிசனத்தை நடத்தலாம், பின்னர் ஒரு பெரிய கூட்டத்தையும் அழைக்கலாம். நான் சில மேற்கத்திய பெண்மணிகளையும் ஆண்களையும் அழைப்பேன்... இந்த அறையில் உள்ள அனைவரையும் அழைப்பேன்.**

பாபா அவர்களில் பலரை '**இந்தியாவிற்கு அழைத்தால் வருவீர்களா?**' என்று கேட்டார். அனைவரும் 'ஆம்' என்று பதிலளித்தனர்.

பாபா மேலும் தெளிவுறக் கூறினார், "**உங்களில் சிலர், இயன்றதைச் செய்த பின்னர், உங்களால் முடியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம். எதிர்வரும் மர்ட்டில் பீச், ஸான் ஃபிரான்சிஸ்கோ பயணத்தில் என்னுடன் வருபவர்கள், எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். எனது சகவாசத்தை அடையப் பெற்றதில் மகிழ்ச்சியாக இருங்கள். நான் எனது பௌதீக உடலைக் கைவிடுவதைப் பற்றி நினைக்காதீர்கள்.**"

மரியனிடம், பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**நாம் ஸான் ஃபிரான்சிஸ்கோவை சென்றடைந்ததும், நிதி இருப்புநிலை பற்றி நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.**"

ஒவ்வொரு நபரும் பாபாவின் அரவணைப்பைப் பெற்ற பின்னர், அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

# மேற்கத்திய பயணம் - மர்டில் பீச்

**(Trip To The West - Myrtle Beach )**

மெஹர் பாபாவின் 'வெண்புறா'க்களில் ('DOVES' பாபா, அவர்களை அவ்வாறு அழைத்தார்) நாற்பத்து நான்கு அன்பர்கள் அவருடன் நியூயார்க் நகரிலிருந்து மர்டில் பீச், தொடர்ந்து கலிஃபோர்னியாவிற்கு, அமெரிக்க தேசத்தைக் குறுக்காகக் கடந்து பயணம் செய்யவிருந்தனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி, பெரில் வில்லியம்ஸ், அவரது கடிதம் ஒன்றில், 'அவதார புருஷருடன் பறந்து செல்ல விரும்புகிறோம்' என்று மணிக்கு எழுதிய பின்னர், இது நிகழ்ந்தது. அந்தக் கடிதம், பாபாவின் முன்னிலையில் வாசிக்கப்பட்ட போது, அவருடன் பயணம் செய்ய முடிந்தவர்கள் உடன் செல்ல வாய்ப்பளிக்கப்பட்டனர். 1956 ஜூலை 24 செவ்வாய்கிழமை காலை 6:45 மணிக்கு, டெல்மோனிக்கோ ஹோட்டலில் பாபாவுடன் செல்லவிருந்தவர்கள் ஒன்றுதிரண்டனர். லேசான மழை தூறல் இருந்தது. ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் அனைவரின் பெயர்களையும் சரிபார்த்து, இரண்டு பேருந்துகளில் நெவார்க் விமான நிலையத்திற்கு (NEWARK AIRPORT) அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கேரி பென் ஷம்மாய் (CARRIE BEN SHAMMAI, 54) முதலில், குழுவில் ஓர் அங்கத்தினராக இல்லை. பாபா, அவரிடம் இஸ்ரேலுக்குத் திரும்பிச் செல்லுமாறும், அங்கு அன்பு மற்றும் உண்மைப்பொருள் குறித்த பாபாவின் செய்தியைப் பரப்புவும் அறிவுறுத்தினார். ஆனால் அடெல், பாபாவிடம், கேரி அவர்களுடன் பயணம் செய்ய எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்தபோது, பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, அவரது செலவுகளுக்குத் தேவையான பணத்தை சேகரிக்குமாறு அறிவுறுத்தினார்.

நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த 46 வயதான பார்வையற்ற, பாதி காது கேளாத, வர்ம முறை மருத்துவர், ஹெரோல்ட் லியோனல் கென்மோர் (HAROLD LIONEL KENMORE), இந்த விஜயத்தின் போது பாபாவின் தொடர்பில் வந்தார். சிறு வயதில், ஹாரி கென்மோர் (HARRY KENMORE) ஒரு சிறந்த மாணவராகவும், விளையாட்டு வீரராகவும் இருந்தார். அவர் ஏதோ நடிகராகும் முனைப்பில் இருந்தவர், 'அவர் கேங்' (OUR GANG) என்று அழைக்கப்பட்ட நகைச்சுவை மேடைச் சிரிப்புரைகளில் பங்கெடுத்தார். ஆனால் பதினாறு வயதில், ஹாரி தனது பார்வையை இழந்தார், மேலும் இந்த உடல் குறைபாடுகளுடன் தனது வாழ்க்கையை, அர்த்தம் உள்ளதாக மாற்றியமைக்கும் நீண்ட, கடினமான, உள்ளளவிலான தேடலுக்குப் பின்னர், அவர் ஒரு வர்ம முறை மருத்துவ நிபுணரானார். கென்மோர் உண்மைப்பொருளைத் தேடி அலைந்து, பைபிளை ஒலி இசைத்தட்டுகள் உதவியுடன் ஆழமாகக் கற்றறிந்தார்.

1954ஆம் ஆண்டில், ஹாரியிடம் சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒருவரான அடெல் வோல்கின், பாபாவின் சில சொற்பொழிவுகளை அவருக்காகப் படித்தார். பாபாவின் வார்த்தைகளால் ஹாரி வெகுவாக ஈர்க்கப்பட்டார்; அவர் அந்தப் புத்தகத்தின் ஆசிரியரைப் பற்றி தன்னால் முடிந்த அனைத்தையும் கண்டுபிடிக்க முயன்றார்; அதைத் தொடர்ந்து, டெல்மோனிக்கோ ஹோட்டலில் பாபாவை தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்கு முன்னர், எனிட் கோர்ஃப், மார்கரெட் க்ராஸ்கே ஆகியோரை சந்தித்தார். பார்வையற்றவராக இருந்தாலும், அவரது இதயம் பாபாவின் அன்பின் பிரகாசத்தில் ஒளிர்ந்தது, இவ்வாறு அவர் படிப்படியாக பாபாவின் நெருங்கிய தொடர்பில் வரத் தொடங்கினார்.

நெவார்க் விமான நிலையத்தைச் சென்றடைந்து, பாபா, காலணி சுத்தம் செய்யும் நிலையடுக்கின் மீது, குழுவில் அனைவரையும் சற்று உயரத்திலிருந்து பார்க்கும் விதத்தில் அமர்ந்தார். அப்போது ஒவ்வொருவரும் முன் வந்து, தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அனைவரும் தலைவணங்கிய போது, **"என்னை மேலும் மேலும் நேசியுங்கள்"** என்ற பாபாவின் வார்த்தைகளை எரச் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார். ஆனால் வர்ஜீனியா ரட்டின் முறை வந்த வேளையில், பாபா, எரச் மொழிவதை நிறுத்தக் கூறி, வர்ஜீனியாவிடம், **"நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்"** என்று கூறி, பாபாவின் அருகில் பின்னால் நிற்குமாறு அறிவுறுத்தினார்.

பல அந்நியர்கள் அவரை அணுகி, அறிமுகமாக விரும்பினர். பயண ஏற்பாடுகள் அனைத்தையும் செய்திருந்த திரு & திருமதி நாட்ஸ் (MR. & MRS. KNOTTS) இருவரும் ஊதா நிற ஆர்க்கிட் மலர் மாலையை (GARLAND OF LAVENDER ARCHIDS) பாபாவிற்கு அணிவித்ததும், முதலில் அவர் விமானத்தில் (நேஷனல் - NATIONAL 361) ஏறினார்; விமானம் சரியாக காலை 8:00 மணிக்குப் புறப்பட்டது. பயணிகளின் 'இருக்கை பெல்ட்' அடையாளம் மறைந்ததும், பாபா தனது இருக்கையிலிருந்து எழுந்து, எரச்சிற்கு அடுத்ததாக இருக்கையில் அமர்ந்து, ஒவ்வொருவரையும் தனித்தனியாக அன்புடனும், புன்னகையுடனும் வரவேற்றார். அவர் அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். அவர் விரும்பி ரசிக்கும் பொழுதுபோக்கைத் தொடங்கும் விதத்தில், இனிப்புகள் மற்றும் வெள்ளை பெப்பர்மின்ட் மிட்டாய்களை (WHITE PEPERMINTS) வீசினார். விமானம் முழுவதும், ஒரு பெண் பயணியைத் தவிர, பாபா குழுவினர்களால் நிரம்பி இருந்தது; அந்தப் பெண்மணி, விமான பணிப்பெண் போலவே, பாபாவைப் பற்றி தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் விசாரித்தார். டான் ஸ்டீவன்ஸ் இரு பெண்மணிகளுக்கும் பாபாவைப் பற்றிய அறிமுக துண்டு குறிப்புகளை வழங்கினார்.

விமானத்தில் டார்வின், பாபாவின் அருகாமையில் அமர்ந்திருந்தார். ஒருமுறை பாபா அவரை அழைத்து, வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையே அமெரிக்காவில் நிலவும் இனச் சூழல் குறித்து உரையாடினார்.

1956இல் பாபா அமெரிக்காவிற்கு வந்த சில மாதங்களுக்குப் பின்னர், அமெரிக்க உச்ச நீதிமன்றம் சில பிரிவினைச் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. நீக்ரோக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட்டது; பொதுவாக, ஆஃப்பிரிக்க-அமெரிக்க மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் வலுவடையத் தொடங்கியது. பாபா இந்த விஷயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சமூக உரிமைகள் மற்றும் சமூக நீதிக்கான போராட்டத்தில், கறுப்பர்கள் எப்படி ஒரு புதிய அவசர உணர்வை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை டார்வின் விவரித்தார். ஒரு வருடத்திற்கு முன்னர், அவர்கள் பொதுப் பேருந்துகளைப் புறக்கணிக்கத் தொடங்கினர், ஏனெனில் பேருந்துகள் இன பாகுபாட்டிற்கு இணங்க பிரிக்கப்பட்டன.

விமானம் ரிச்மண்ட், விர்ஜீனியாவில் (RICHMOND, VIRGINIA) சிறிது நேரம் நின்று, வடக்கு கரோலினா, வில்மிங்டன் (NORTH CAROLINA, WILMINGTON) விமானத்தளத்தில் காலை சுமார் 10:35 மணிக்கு தரையிறங்கியது; அங்கு, இதர குழுவினர் அனைவரும் ஏற்கனவே வேறொரு விமானத்தில் வந்திருந்தனர். விமானத்திலிருந்து இறங்குவதற்கு சற்று முன்பு, பாபா, டார்வினிடம் சைகை மூலமாக, **“நாம் தரை இறங்கியதும், என்னை ஆண்கள் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்”** என்றார். ஃபுளோரிடா நகரிலிருந்து ஓட்டோ ட்ரோஜெல் (OTTO TROEGEL FROM FLORIDA) மற்றும் பலர் தரையிறங்கிய போது பாபாவை சந்தித்தனர். டார்வின் விமானத்தை விட்டு வெளியேறும் போது, பாபாவிற்கு மிகவும் பின்னால் இருந்ததால், ஓட்டோவிடம் பாபாவை ஆண்கள் அறைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறியபோது, அதை அவர் செய்தார். இந்த நாட்களில் அமெரிக்காவின் தெற்கு பகுதியில் ‘வெள்ளை’ (WHITE), ‘வண்ண நிறம்’ (COLORED) எனத் தனித்தனி வசதிகள் இருந்ததால், ஓட்டோ ‘வெள்ளை பெருமகன்கள்’ (WHITE GENTLEMEN) என்று எழுதப்பட்ட அறைக்குள் நுழைந்தார்; பாபா உள்ளே சென்றவர், விரைவில் வெளியே வந்து, ‘வண்ண மனிதர்கள்’ (COLORED MEN) என்று எழுதப்பட்ட கழிப்பறைக்குள் நுழைந்தார்.

பாபா, எலிஸபெத் மற்றும் மண்டலியில் இருவர், வில்மிங்டனில் விமான நிலையத்திலிருந்து, எலிஸபெத்தின் சகோதரியின் மகன் ஹாரி ஹார்ட்ஷோர்ன் (HARRY HARTSHORNE) ஓட்டிச் சென்ற ஸ்டேஷன் வேகனில் புறப்பட்டனர்; ஹாரி, 1952இல் பாபாவை சந்தித்த, விஸ்கான்சின் மாகாணத்தில் வாழ்ந்த ஒரு விவசாயி, மீண்டும் அவருடன் அறிமுகமானபோது, பாபா குறிப்பிட்டார், **“நானும் ஒரு விவசாயிதான், பிரபஞ்சம் எனும் நிலத்தை உழுது பயிரிடுகிறேன்.”**

மார்கரெட், டார்வின் இருவரும் இரண்டு மண்டலியுடன் வேறொரு காரில் சென்றனர். பாபா ஓர் ஆன்மீக குருநாதர் என்பதைக் கேள்விப்பட்ட ஒருவர், பென் ஹேய்மன், ஹாரி கென்மோர் இருவரையும் மர்டில் பீச் மையத்திற்கு அழைத்துச் செல்ல முன்வந்தார். லாரா டெலாவினி (LAURA DELAVIGNE), அவரது கணவர் லீ (LEE) ஆகியோர் தங்கள் காரை ஓட்டிச் சென்றனர்; இதர குழுவினர் ஒன்றரை மணி நேரம் பேருந்தில் பயணம் செய்து, மர்டில் பீச் மையத்தைச் சென்றடைந்தனர்.

மர்டில் பீச்சை வந்தடைந்து, பாபாவின் கார் 'பிரையர்கிளிஃப் ஏக்கர்ஸ்' (BRIARCLIFFE ACRES) நுழைவாயில் வழியாக மெஹர் மையத்திற்குள் நுழைந்தது. அவரை வரவேற்க வாயிலில் கிட்டி டேவி (KITTY DAVY), ஃபிராங்க் ஈட்டன் (FRANK EATON), ஃபுளோரிடாவிலிருந்து லேலண்ட் மற்றும் ஹில்டா டி லாங் (LELAND & HILDA DE LONG), அவர்களின் மகள் ஸில்வியா (SYLVIA) மற்றும் ரத் ட்ரோகெல் (RUTH TROEGEL) ஆகியோர் காத்திருந்தனர். பாபா தனது வலது கரத்தை உயர்த்தி அனைவரையும் வாழ்த்தி, கிட்டி டேவியை காரில் அமருமாறு சைகையால் தெரிவித்தார். பாபாவின் கார் 'லாங் லேக்'கை (LONG LAKE) நோக்கி அமைந்த அவரது இல்லத்திற்குச் சென்றது. இதர கார்களும், பேருந்துகளும் பின்தொடர்ந்து வந்து, நெடுஞ்சாலையில் அமைந்த பிரதான வாயிலில் நுழைந்தன.

பாபா உயரமான மரங்களுக்கு அப்பால், ஏரி மற்றும் கடலின் காட்சியைப் பார்த்துக்கொண்டே, தனது இல்லத்தின் வராந்தாவில் நுழைந்தார். பின்னர் அவர் தனக்காகப் போடப்பட்ட புதிய தாழ்வார ஊஞ்சலை இடது பக்கம் பார்த்ததும், பாபா அதில் அமர்ந்தார்; டார்வின் கூறினார், "பாபா, நீங்கள் 1954இல் ஸாக்கோரியில் ஊஞ்சலில் அமர்ந்திருந்தது இப்போது எனது நினைவுக்கு வருகிறது." பாபா, வீட்டின் பிரதான அறைக்குள் நுழைந்த போது, அங்கிருந்த அனைவரும் பின்தொடர்ந்தனர். நான்கு வருட இடைவெளிக்குப் பிறகு கிட்டி, பாபாவை சந்தித்தார். இப்போது, பாபாவின் முன்னிலையில், நீண்ட காலம் இல்லாமலிருந்தது முற்றிலும் மறைந்துவிட்டதாகத் தோன்றியது. 1952 வருகையின் போது மெஹராவும் கிழக்கத்திய பெண் மண்டலியும் தங்கியிருந்த விருந்தினர் மாளிகையில் அவரது மதிய உணவைத் தயார் செய்ய கிட்டி புறப்பட்டுச் சென்றார்.

பாபாவும் மண்டலியும் விரைவில் விருந்தினர் மாளிகைக்குச் சென்றனர். 1952இல் எரச் அவர்களுடன் வராததால், பாபா, அந்த அற்புதமான காட்சியைக் காண்பிப்பதற்காக எரச்சை, ஏரியை ஒட்டிய பாதையின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றார். மதிய உணவுக்குப் பின்னர், விருந்தினர் மாளிகைக்கு அருகில் அமைந்த சிறியதோர் அறையில், உடல்நலம் இல்லாமல் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நோரினா மாட்சபெல்லியைப் (NORINA MATCHABELLI) பார்க்க பாபா சென்றார்.. பாபா அவரை அன்புடன் தழுவி சிறிது நேரம் உரையாடிக்

கொண்டிருந்தார்; அங்கிருந்து பாபா லகூன் (LAGOON) ஏரியின் மீது அமைக்கப்பட்ட நீண்ட, குறுகிய மரப்பாலத்தின் வழியாக மறுபுறம் அமைந்த அறைகளுக்குச் சென்றார்.

அந்த நேரத்தில் நியூயார்க் குழு வந்து சேர்ந்தது. சிலர் மதிய உணவு உண்ணச் சென்றனர், சிலர் பாபாவைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தனர். மர்டில் பீச் மையத்தில் போதுமான தங்கும் வசதி இல்லாததால், பாதி குழு மட்டுமே மையத்தில் தங்கியிருந்தது; பிற அனைவரும் நகரத்தில் உள்ள பல்வேறு ஹோட்டல்கள் மற்றும் மோட்டல்களில் (லாஃபாயெட் - LAFAYETTE, மேனர் - MANOR போன்றவை) தங்க வேண்டியதாயிற்று. பாபாவுடன் மையத்தில் அதிகபட்சமாக 35 நபர்கள் தங்குவதற்கு எலிஸபெத் சிரமப்பட்டு வேண்டிய வசதிகளைச் செய்திருந்தார்; ஆனால், எப்பொழுதும் பாபாவுடன் நிகழ்வதைப் போலவே, 48 நபர்களின் பெயர்கள் பட்டியலில் மேலும் மேலும் சேர்க்கப்பட்டன. இருப்பினும், வெளியில் தங்கியிருந்தவர்கள் உட்பட, அனைவருக்கும் தினமும் தற்பரிமாற்ற மதிய உணவு (BUFFET LUNCH) வழங்கப்பட வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார் - எனவே சில நாட்களில் ஏறக்குறைய 150 விருந்தினர்கள் இருந்தனர். மியுரியல் ஹூஸ்டன் (MURIEL HOUSTON) அனைத்து ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட்டார்; எலிஸபெத்தின் சமையல்கார பெண்மணி பெஸ்ஸி கிரஹாம் (BESSIE GRAHAM) மற்றும் அவரது இரண்டு மகள்கள் உதவியாக இருந்தனர்.

பாபா தன்னுடன் விமானத்தில் வராதவர்களை அன்புடன் வரவேற்று, மர்டில் பீச் மையத்தில் தங்காதவர்களை பிற்பகல் 3:00 மணிக்குள் திரும்பி வருவதை உறுதி செய்து 'பார்ன்' (BARN) கொட்டகைக்கு வருமாறு கூறினார்.

மூன்று மணிக்கு சற்று முன்னதாக, பாபா தனது இலகுவான, வேகமான நடைகளுடன், லகூன் பாலத்தின் குறுக்கே நடந்து கொண்டிருந்தார். டாக்டர் நீலு வெயிலில் இருந்து அவரைக் காக்க, குடை ஒன்றை பாபாவின் தலைக்கு மேல் பிடித்துக்கொள்ள முயன்றவர், உண்மையில் அவருடன் ஓட வேண்டியிருந்தது.

பாபாவைப் பின்தொடர்ந்து சுமார் 70 பேர் உயர்ந்த ஊசியிலை மரங்கள் நிறைந்த காடு வழியாக, 1952இல் அவர் தரிசனம் வழங்கிய 'பார்ன்' எனும் பெரிய செவ்வக வடிவக் கொட்டகைக்குச் சென்றனர். பாபா அந்தக் கொட்டகையை மரியன் ஃப்ளோர்ஷெய்ம் மற்றும் மையத்திற்கு இதற்கு முன்பு வருகை தராத பிறருக்கும் காட்டி, பின்னர் அவர், முந்தைய வருகையின் போது பயன்படுத்திய அதே உயர்ந்த நாற்காலியில் அமர்ந்தார். பாபா இவ்வாறு கூறினார், **"அனைவரும் இங்கே, 1956 ஜூலை 28 சனிக்கிழமை மாலை 7:00 மணிக்கு, கொட்டகைக்குத் திரும்பி வந்து, என்னுடன் மௌனம் காக்க வேண்டும். தவறாமல் இங்கு இருப்பதை உறுதி செய்யுங்கள்."**

'உள்ளூர் மக்களையும் தரிசனத்திற்கு அழைக்கலாமா?' என்று ஒருவர் கேட்டார்.



பாபா, மெஹர் மையத்தில் நடந்து செல்லும் காட்சி, ஜூலை 1956
(BABA WALKING THROUGH MEHER CENTER, JULY 1956)



லகூன் கேபினுக்கு வெளியே, மெஹர் மையம், ஜூலை 1956
(OUTSIDE LAGOON CABIN, MEHER CENTER, JULY 1956)

பாபா தன்னுடன் பயணம் செய்தவர்கள் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து, அருகில் வசித்து வந்தவர்கள் சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டார். கலிஃபோர்னியாவைச் சேர்ந்த லட் டிம்ஃபில், அவரது மனைவி பீ டிம்ஃபில் (BEA DIMPFL) இருவரும் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று பாபா கேட்டார். அவர்கள் வெளியே ஒரு ஹோட்டலில் இருப்பதைக் கேள்விப்பட்டு, அவர்களை மையத்தில் தங்குவதற்காக அழைத்தார்.

பாபா அப்போது பாம்புகளைப் பற்றி குறிப்பிட்டார். "**கவனமாக இருப்பதோடு, சரியான காலணிகளை அணியுங்கள் - கால்விரல்கள் தெரியும் அளவுக்குத் திறந்த காலணிகளைத் தவிர்க்க வேண்டும் - மையத்தில் அமைந்த காடுகளில் விஷப்பாம்புகள் ஏராளம் உள்ளன. நீங்கள் பாம்பைக் கண்டால், 'பாபா' என்று கூறுங்கள், அப்போது அது உங்களுக்குத் தீங்கு விளைவிக்காது. ஆனால் நீங்கள் திறந்த காலணிகளை அணிந்து, பாபா என்று கத்தினாலும் அது அங்கிருந்து போகாது.**" அவர் நகைச்சுவையாக மேலும் கூறினார், "**நீங்கள் நான் கூறுவதற்கு செவிமடுக்காத பட்சத்தில், பாம்பு கடித்தால், நான் உங்களை ஏரியில் தள்ளி விடுவேன்!**"

கிட்டி டேவி இந்தியாவில் இருந்த நாட்களில், கிழக்கத்திய பெண்கள் அவரைக் கேலி செய்ய முடிவு செய்த போது, நடந்த சம்பவங்களை எடுத்துரைக்குமாறு பாபா, கிட்டியிடம் கேட்டுக்கொண்டார். மாவால் வடிவமைத்து, வர்ணம் பூசப்பட்ட போலி பாம்பு ஒன்றை மணி உருவாக்கினார்; கிட்டி அதைப் பார்த்ததும், கொல்லும் நோக்கத்தில் தைரியமாக, கையில் சமையலறை கத்தியுடன் ஆயத்தமானது, அனைவரையும் மகிழ்வித்தது.

அதைத் தொடர்ந்து, குழு வெளியே பாபாவைப் பின்தொடர்ந்தது; அவர் ஓர் உயரமான ஊசியிலை மரத்தின் கீழ் அமர்ந்தார், எரச் குடையை அவர் தலைக்கு மேல் பிடித்திருந்தார். அவர் ஒவ்வொரு நபரையும், ஒருவருக்குப் பின்னர் ஒருவராக, தம்மிடம் அழைத்து, அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தார் அல்லது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்கினார்; கூட்டத்தில் எஞ்சியிருந்த அனைவரும் சற்று தூரத்தில் நின்று, பாபாவைக் கண்டுகளித்தது, கண்களுக்கு சிறப்பு விருந்தாக அமைந்தது. கேமராக்களைக் கைகளில் ஏந்திய சார்மியன், ஆண்ட்ரூ மியோ (ANDREW MUIR) போன்றவர்கள் பாபாவின் பல்வேறு தோற்றங்களைப் படம்பிடித்து, பாபா இளைப்பாறும் நேரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

எலிஸபெத் தனது கிரீம் நிற பிளைமவுத் ஸ்டேஷன் வேகனில், (PLYMOUTH STATION WAGON) பாபாவை, அவரது இல்லத்திற்குத் திரும்ப அழைத்துச் சென்றார். அதன் பின்பு மண்டலியில் ஒருவர் வந்து ஃபிலிஸ், அடெல் இருவரிடமும், பாபாவின் சில ஆடைகளை சலவை செய்யக் கொடுத்தார். பாபா, சுற்றுப்பயண வேளையில் தங்கியிருந்த ஒவ்வோர் இடத்திலும், ஒரு சில

அன்பர்களுக்கு - ஆண், பெண் இருவருக்கும் இந்த அரிய வாய்ப்பை வழங்கியதுண்டு. நியூயார்க் நகரில், பாபா, ஜீன் ஷாவிற்கு இந்த வாய்ப்பை அனுமதித்தார். "**நான் ஏன் இவற்றை வழங்குகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று அவரிடம் கேட்டதற்கு, ஜுன், "ஏனெனில் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்" என்று அவர் பதிலளிக்க, பாபா, '**ஆமாம்**' என தலையசைத்தார்.

ஃபிலிஸ் இது குறித்து இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

நான் பட்டு இளஞ்சிவப்பு, கை வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்ட ஜாக்கெட் மற்றும் வெள்ளை சத்ராவை சலவை செய்து, மரத்தின் கீழ், வரிசையாகத் தொங்கவிட்டபோது, அவை தூய அன்பையும் ஒளியையும் பரப்பியது. ஆடைகள் என்னை தூய்மைப்படுத்துவதாக உணர்ந்தேன்! அவற்றை உலர்த்தி, இஸ்திரி செய்து, காலையில் பாபாவிடம் கொடுப்பதற்காக அன்று இரவு வெகுநேரம் விழித்திருந்தோம்.

1956 ஜூலை 25ஆம் தேதி புதன்கிழமை காலை ஏழு மணிக்கு முன்னதாக, பாபாவின் கார் விருந்தினர் மாளிகைக்கு வந்தது; அங்கு அவர் தனது காலை உணவாக தேநீர் மற்றும் சிற்றுண்டியை உண்டார். சுமார் 7:30 மணியளவில், அவர் தனது அன்பர்கள் காலை உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்த (அசல்) சமையலறைக்குள் நுழைந்தார். மண்டலி வெளியில் இருந்தனர். பாபா பின்பு வெளியே வந்து, லகூன் கேபினுக்கு அருகில் இருந்த மரத்தாலான நீண்ட இருக்கை ஒன்றில் அமர்ந்து, அங்கு அவர் ஃபிலிஸ், ரத் வையிட், மார்கரெட் போன்ற சிலரை தனித்தனியாக, வேடிக்கையான உரையாடலுக்காக அழைத்தார், பிற அன்பர்கள் வெகு தொலைவில் இருந்தனர். அதிகாலை சூரிய ஒளியில், ஒரு மூடுபனி ஏரியின் மீது உயர்ந்து கொண்டிருந்தது; பாபா அந்த அற்புதமான இயற்கை காட்சிகளைச் சுட்டிக்காட்டி, "**இது ஓர் அழகான இடம் அல்லவா?**" என்று கேட்டார்.

மையத்திற்கு வெளியே தங்கியிருந்தவர்கள் எட்டு மணிக்கு வந்து சேர்ந்தனர். லகூன் கேபினில் தனிப்பட்ட நேர்காணல்கள் ஒன்பது மணிக்கு தொடங்க இருந்தது, ஆனால் பாபா உடனடியாகத் தொடங்கும் ஆர்வத்தில் இருந்தார். காலை முழுவதும், பாபா முன்பு பயன்படுத்திய அதே நீல நிற திவானில் சாய்ந்தபடி, பேட்டிகள் வழங்கினார். தென் மாநிலங்களான ஃபுளோரிடா, ஜார்ஜியா மற்றும் வடக்கு கரோலினாவைச் சேர்ந்த பலர் அவரை முதன்முறையாக அன்று சந்தித்தனர்.

மியாமி நகரிலிருந்து வந்தவர்களில், ரால்ஃப் மற்றும் ஸ்டெல்லா ஹெர்னாண்டஸ் (RALPH & STELLA HERNANDEZ) ஆகியோர் அடங்குவர். டேனா ஃபீல்ட் 1954இல் இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் ஃபுளோரிடாவிற்குச் சென்றார்; 37

வயதான ரால்ஃப், டேனா ஃபீல்ட் வழியாக பாபாவைப் பற்றி அறிந்துகொண்டார். அன்று காலை, பாபா, பாலத்தைக் கடக்கும்போது, அவரை ரால்ஃப் சிறிது நேரம் பார்க்க நேர்ந்தது; அவர்களின் கண்கள் சந்தித்த அவ்வேளையில், உள்ளளவில், ரால்ஃபின் ஆழ் இதயத்தை ஏதோ வருடியது போல் இருந்தது. பத்து நிமிடங்கள் எதையும் யோசிக்க முடியாமல் திக்குமுக்காடிப் போனார். லகூன் கேபினில் நடந்த பேட்டியின் போது, பாபா பலருடன் சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்தார். ரால்ஃப் அவரது சமீபத்திய அனுபவத்தை தெரிவிக்க ஆர்வமாக இருந்தார், ஆனால் அவர் ஆயத்தமான ஒவ்வொரு முறையும், வேறொருவர் இடையே பேசியதால் அவரால் எதையும் கூறமுடியாமலாயிற்று.

இறுதியாக, பாபா அந்த நபரை நிறுத்தி, ரால்ஃபை உற்று நோக்கினார். "**நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?**" என்று வினவினார்.

ரால்ப், "ஆம், பாபா. நான் உங்களைப் படகு இல்லத்தில் பார்த்ததும், எனது மூச்சு நின்றுவிடுவது போல் உணர்ந்தேன்" என்றார்.

பாபா பதிலளித்தார், "**நான் மிகக் குறைவாகவே எடுத்துக்கொண்டு, எல்லையற்ற அன்பின் பெருங்கடலைக் கொடுக்கிறேன்!**"

ஆக்னஸ் பேரோன் கலிஃபோர்னியாவின் ஓஹாயிலிருந்து (OJAI) வந்திருந்தார், மேலும் மெஹர் மவுண்டில் (MEHER MOUNT) நிலைமையைப் பற்றி விவாதிக்க அழைக்கப்பட்டார். ஜான் குக் (JOHN COOKE), இளம் பிரிட்டிஷ்காரர், மெஹர் மவுண்ட் நிலத்தைப் பாதுகாப்பதில் சில நிதி சிக்கல்களை சமாளிக்கப் பெரிதும் உதவினார்; மர்டில் பீச் வரவிருந்த அவர் வரவில்லை. பாபா இப்போது ஆக்னஸிடம், '**ஜான் குக், மெஹர் மவுண்டுடனோ அல்லது அவருடைய வேறு எந்தப் பணியுடனோ தொடர்பு கொள்வதை அவர் விரும்பவில்லை**' என்று தெரிவித்தார். ஜான் போலியோ நோயால் தாக்கப்பட்டிருந்தார், அது அவரது மனதை பெரிதும் பாதித்தது.

பாபா, ஆக்னஸுக்கு சில அறிவுரைகளை வழங்கி, "**இப்போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று கேட்டார்.

"இல்லை, பாபா, நான் முன்னெப்போதையும் விட மிகவும் குழப்பமாக இருக்கிறேன்," என்று கூறி ஆக்னஸ் லகூன் கேபினை விட்டு வெளியேறினார். அவரைப் பொறுத்தவரை இது ஒரு சாக்குபோக்கான பதிலாக இருந்தது; எனவே,, பாபா அவரை, மறுநாள் மீண்டும் அழைத்து, அனைத்து விஷயங்களைக் குறித்தும் பேசுவார் என்று நினைத்தார்! இவ்வாறு, அவர் அங்குத் தங்கியிருந்த நாட்களில் பலமுறை பாபாவைத் தனியாக சந்திக்க நேர்ந்தது.

பாபா, மதிய வேளையில், நேர்காணல் வழங்குவதை நிறுத்திவிட்டு, மதிய உணவுக்குப் பிறகு, பிற்பகல் 2:30 மணிக்கு, ஒரு மணி நேரம் அதைத் தொடர்ந்தார். இந்த நேரத்தில் இரண்டு வர்ம முறை மருத்துவர்களான டாக்டர்

ஆர்.சி. போலன் (DR. R.C. BOLEN) மற்றும் டாக்டர் ஸ்டார் (DR. STAR) ஆகியோர் பாபாவை சந்தித்தனர். மூன்று வகையான ஞானம் குறித்து விளக்கமளித்த வேளையில், டாக்டர் போலன் அறிவித்தார், "பாபா, நீங்கள் உலகின் மிகப்பெரிய ஒளி!"

பிற்பகல் 3:30 மணியளவில், அவர் நேர்காணல்களை நிறைவு செய்ததும், பாபா அனைவரையும் தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். ஒட்டுமொத்தக் குழுவும், இப்போது சுமார் 80 பேர், அவர் பின்னால் அரை மைல் தூரம் காடுகளின் வழியாக அவரது இல்லத்திற்குச் சென்றனர். பகல் நேரம் வெப்பமாகவும் ஈரத்தன்மை நிறைந்ததாகவும் இருந்தது, பாபா லேசான காட்டன் காலுறை மற்றும் சத்ராவை மட்டுமே அணிந்திருந்தார். அவர்கள் வந்ததும், பாபா குன்றின் ஓரத்தில் இருந்த பெரிய ஓக் மரத்தின் கீழ் அமர்ந்தார். ஃபிலிஸ் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: "அன்பான குருநாதரை எதிர்கொள்ளும் ஓர் அரை வட்டத்தில் நாங்கள் அமர்ந்திருந்தோம், வரலாறு மீண்டும் உருவெடுத்து, பழங்கால நடைமுறை வழக்கத்தை மீண்டும் வடிவமைத்தது போலத் தோன்றியது, மேலும் மரங்களின் கிளைகள் வழியாக ஊடுருவி பிரகாசிக்கும் ஏரி, கலிலியின் ஏரியாக (LAKE OF GALILEE) இருக்கலாம்."

அவர் மீண்டும் அணிந்திருந்த இளஞ்சிவப்பு கோட்டின் மேல், பாபா 'எலினோர்கிட்' (ELINORKIT, எலிஸபெத்-நோரினா-கிட்டி) வழங்கிய ஏழு விதமான கடற் சிப்பிகளால், ஏழு வண்ண நாடாக்களில் கோர்க்கப்பட்ட ஓர் சிறப்பு அடையாள மாலையை அணிந்திருந்தார். ஏழு விதமான கடற் சிப்பிகள், ஏழு வண்ண நாடாக்களோடு ஒரு சரம் வடிவில் ஒன்றாக இணைக்கப்பட்டது, உணர்வற்ற கல்லிலிருந்து, முழு உணர்வுடன் வெளிப்படும் மனிதன் வரை, ஏழு முக்கிய பரிணாம நிலைகளை குறிக்கும் ஓர் அடையாளச் சின்னமாகத் திகழ்ந்தது. பாபா, அவர் அணிந்திருந்த மாலையைச் சுட்டிக்காட்டி, "**இது மனிதனின் ஏழு நிலைகளைக் குறிக்கிறது**" என்றார். ஒரு சிப்பி சிறிது உடைந்திருப்பதை கவனித்த அவர், "**விலங்குகள் ராஜ்யத்தில் ஓர் இனம் மறைந்துவிட்டது... காணாமல் போன இணைப்பு!**" என்று கூறி, பின்னர் அவர் விளையாட்டாக பென் ஹேய்மனின் வெள்ளை குழிப்பந்தாட்ட தொப்பியை எடுத்து தனது தலையில் வைத்து, மீண்டும் அனைவரையும் மகிழ்வித்தார்.

மகிழ்ச்சியான தோற்றத்துடன் பாபா அவர்களிடம் கூறினார்:

**நான் பற்பல இடங்களில் தங்கியிருக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிய விரும்புகிறேன். இந்தியாவில், நான் மஸ்த் பயணத்தில் பல்வேறு இடங்களுக்குச் சென்றபோது, சில சமயங்களில் அரண்மனைகளிலும், சில சமயங்களில் தர்மசாலைகள் அல்லது சிறப்பு ஓய்வு இல்லங்களிலும், சில சமயங்களில் கோயில்களிலும், குடிசைகளிலும், சில சமயம் மரத்தின் கீழும், ரயில் நிலைய நடைமேடைகளிலும்**

**தங்கியிருந்தேன்; அங்கே துப்புரவு தொழிலாளர்கள் அல்லது பிற்படுத்தப்பட்டவர்கள் என்னைப் பின்தொடர்ந்து வந்தனர். ஆனால் இங்கே** (அவரது வீட்டை நோக்கி சைகையால் காட்டி), **எலிஸபெத் எனக்காக மிகவும் வசதியான வீட்டைக் கட்டியுள்ளார். இங்கு இருக்கும் எல்லாமே எனக்கான அவரின் பங்களிப்பு. 500 ஏக்கர் நிலத்தையும் எனக்கு அன்புப் பரிசாக வழங்கியிருக்கிறார். அவர், என் மீதான அன்பின் மூலம், எல்லாவற்றையும் சாத்தியமாக்கியுள்ளார். நாளை எலிஸபெத்தின் பிறந்தநாள். நான் அவருடைய பிறந்த நாளை சிறப்பிக்கும் சரியான அந்த நேரத்தில் இங்கு இருக்கிறேன். நாளை நான் அவரை ஏழு முறை தழுவ வேண்டும்! எதுவாயினும், உங்களில் எவரும் பரிசுகளை வழங்கக்கூடாது.**

**இப்போது வீடு திறக்கப்பட்டுள்ளது. உள்ளே சென்று எல்லாவற்றையும் பாருங்கள், ஆனால் எதையும் எடுத்துக்கொண்டு ஓடிவிடாதீர்கள்! கால்கள் வழுகிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; இது ஒருவித சிறப்புக் கம்பளம் ஆதலால் தரை மிகவும் வழுக்கும்.**

அனைவரும் சிரிக்கவே, பாபா தொடர்ந்து கூறினார், “**உலகில் உள்ள எல்லா இடங்களிலும், இந்த வீட்டில் நான் மிகவும் சௌகரியமாக உணர்கிறேன்; இங்கு வெப்பமாகவும், ஈரத்தன்மை மிகுந்ததாக இருந்தாலும், இந்த இடத்தை நான் விரும்புகிறேன்.**”

அவரது அன்பர்கள் ஒவ்வொருவராக அவரைக் கடந்து வீட்டிற்குள் நுழையும்போது, பாபா ஒரு கருணைமிக்க விருந்தோம்புநரைப் போல தாழ்வாரத்தில் நின்றார். ஒரு மனிதர் தனது காலணிகளைக் கழற்றி வெறுங்காலுடன் நுழைய முயன்றார், ஆனால் பாபா அவரைத் தடுத்தார். அனைவரும் பாபாவின் படுக்கையறையில் நின்றதும், பாபா தனது படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து அவர்களுடன் சிறிது நேரம் உரையாடினார்.

மீண்டும் ஒருமுறை வெளியே, அவர்கள் விடைபெற ஆயத்தமானபோது, பாபா கூறினார், “**உங்கள் அறைகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள், நீச்சல், ஓய்வு, உணவு, சண்டை சச்சரவு அனைத்துடனும் வாழுங்கள்; இப்படி, சண்டையிட்டு வாழும் வாழ்க்கையிலும் என்னை நேசிக்க மறவாதீர்கள்!**”

அன்று மாலை, பாபாவின் அழைப்பின் பேரில், மேலும் பல ‘தன்னிச்சையான, திடீர்’ விருந்தினர்கள் மையத்தில் அவர்களுடன் இணைந்தனர்: ஸ்டெல்லா ஃபெரென்ஸ் (STELLA FERENZ, நியூயார்க் நகரத்தைச் சேர்ந்தவர்) மற்றும் அவரது மகள்; பாலே நடனக் கலைஞர்களான பன்டி கெல்லி (BUNTY KELLY) மற்றும் பீட்டர் ஸால் (PETER SAUL); மேலும் ஹெரோல்ட் & வர்ஜீனியா ரட் (HAROLD & VIRGINIA RUDD) ஆகியோர்.

அன்று இரவு பயங்கரமான மின்சாரப் புயல் ஒன்று தாக்கியது. பாபா முதன்முறையாக மர்டில் பீச் மையத்திற்கு விஜயம் செய்தபோது ஏற்பட்ட புயல்களைப் போலவே மின்னல்கள் ஏரியில் வீழ்ந்தன.

1956 ஜூலை 26 வியாழன் அன்று காலை, பாபா விருந்தினர் மாளிகைக்கு நடந்து சென்றார், அருகில் அமைந்த 'லான்டர்ன் கேபினில்' (LANTERN CABIN) தங்கியிருந்த ஐந்து பெண்மணிகளால் பாபா வரவேற்கப்பட்டார்: ஃபிலிஸ் ஃபிரடெரிக், அடெல் வோல்கின், பிலி ஈட்டன், பெரில் வில்லியம்ஸ் மற்றும் ஸில்வியா கெய்ன்ஸ். பாபா சோர்வாகத் தோற்றமளித்த அந்த நேரத்தில், ஐவி கூறினார், "பாபா, நீங்கள் இரவு முழுவதும் பணிபுரிந்தீர்கள்..."

பாபா வேதனையுடன் தலையில் கைகளை வைத்து, "**ஆமாம், நான் இரவு முழுவதும் பணிபுரிந்தேன். உங்களுக்கு எதுவும் தெரியாது. பிரபஞ்சத்தின் பாரம் எனது தலைமேல் உள்ளது. இன்று காலை நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்**" என்றார்.

சமையலறைக்குச் செல்லும் வழியில், பாபா, படகு வீட்டில் நின்று, அதில் முகாமிட்டிருந்த, ஹெரோல்ட், வர்ஜீனியா ரட் இருவரிடமும் '**அவர்கள் நன்றாக தூங்கினார்களா, மின்னலுக்கு அஞ்சினார்களா?**' என்று கேட்டார். அவர்கள் நலமாக இருப்பதாகவும், வேறு இடத்திற்கு செல்ல விரும்பவில்லை என்றும் பதிலளித்தனர். ஹெரோல்ட் அங்கேயே இருக்க வேண்டும் என்று பாபா கூறினார், ஆனால் வர்ஜீனியா குன்றின் மீது அமைந்த கேபினில் பீ டிம்ப்ஃபில்லுடன் அறையைப் பகிர்ந்து கொள்ள இருந்தார்.

ஏரிக்கரையில், ஈரச் தரையில் ஒரு கைக்குட்டையை விரித்த போது, பாபா, சுமார் பதினைந்து நிமிடங்கள் அமர்ந்து, கண்ணுக்குப் புலப்படாத அவரது உலகளாவிய பணியைச் செய்தார். பின்னர் அவர் சமையலறைக்குச் சென்று தனது அன்பர்களுடன் காலை உணவுக்காக அமர்ந்தார்.

காலை 7:45 மணியளவில், மணல் நிறைந்த போக்குவரத்து சந்திப்பை சுற்றி அனைவரும் ஒன்றுதிரண்டனர். பாபா ஏரியை நோக்கி வரிசையில் அமைந்த உயரமான பசுமை நிறைந்த ஊசியிலை மர வேலியில் அமர்ந்தார். ஃபிலிஸ் அந்தக் காட்சியை இவ்வாறு விவரித்தார்:

தற்பொழுது, அவர் எழுந்து மேற்கு நோக்கி நின்று, பணிபுரிந்து கொண்டிருந்தார் - அவரது விரல்கள் வேகமாக, தனித்தன்மை மிக்க அசைவுகளுடன் அதிர்ந்தன. பாபாவின் தலை குனிந்திருந்த அவ்வேளையில், முகம் துன்பத்தால் நிறைந்திருந்தது. முழு உலகின் துன்பமும், உண்மையில் அவர்மீது திணிக்கப்பட்டதைப் போலத் தோற்றமளித்தார். அக்கம் பக்கத்திலிருந்து வந்தவர்கள் எங்களுடன் இணைந்து அமைதியாக இருந்தனர்;

சிறிது நேரம் முழு நிசப்தம் நிலவியது; ஆனால் உரத்த குரல் எழுப்பும் பூச்சிகளின் சத்தமும், ஏரியில் அலைகள் மடியும் ஒலியும் கேட்டது.

தொடர்ந்து பாபா போக்குவரத்து சந்திப்பின் எதிர்புறத்தைக் கடந்து, கிழக்கு நோக்கிச் சென்று பணிபுரிந்தார். மேலும் இரண்டு முறை நகர்ந்து, நின்று, தமது பணியைத் தொடர்ந்தார்; அப்போது அவர் நான்கு திசைகாட்டி புள்ளிகளில் நின்றார். இறுதியில், அவரது முகம் தெளிவடைந்து, தோரணை மாறியது; அவரது உள் ஆன்மீகத் தளத்தின் விரைவான மாற்றத்துடன், அவர் மீண்டும் மகிழ்ச்சியாகவும் பிரகாசமாகவும் தென்பட்டார்.

பாபா தனது அன்பர்களைப் பின்தொடருமாறு சைகையால் தெரிவித்து, பார்ன் கொட்டகைக்குச் செல்லும் பாதையில் நடந்தார். சில நூறு அடிகளைக் கடந்ததும், அவர் அனைவரையும் அங்கேயே நிற்குமாறு சைகையால் தெரிவித்து, பாபாவின் கண்களைக் கூர்மையாக உற்று நோக்கி, ஒரு நிமிடம் முழு கவனத்தையும் செலுத்தும்படி எரச் மூலமாகக் கூறினார். ஃபிலிஸின் கூற்றுப்படி: “நாங்கள் அனைவரும் அவரைச் சுற்றி நின்று கீழ்ப்படிந்தோம், ஒரு நிமிடம் அல்ல, ஆனால் ஒரு முடிவில்லாத காலமாகத் தோன்றியது; நாங்கள் அந்த ஆழமான கருப்பு கண் குளங்களை வெறித்துப் பார்த்தோம்.” பின்பு பாபா அனைவரையும் நான்கு வெவ்வேறு குழுக்களாகப் பிரித்து, அவர்கள் மூலம் உலகத்திற்காக உழைப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

ஒருவேளை பாபாவின் பணி, உலக நிகழ்வுகளுடன் தொடர்புடையதாகவோ அல்லது வெளிப்பட்டதாகவோ இருக்கலாம்; ஏனெனில், அதே நாளில் ஸூயஸ் கால்வாய் (SUEZ CANAL), எகிப்தின் புதிய ஆட்சியாளரான கர்னல் கம்மல் அப்தெல் நாஸரால் (COLONEL GAMMAL ABDEL NASSER) கைப்பற்றப்பட்டு தேசியமயமாக்கப்பட்டது. நைல் (NILE) நதியின் குறுக்கே அமைந்த அஸ்வான் உயர் மட்ட அணைக்கு (ASWAN HIGH DAM), எகிப்துக்கு நிதியுதவி அளிக்கும் அமெரிக்க மற்றும் பிரிட்டனின் ஒப்பந்தத்தைத் திரும்பப் பெற்றதற்கு பதிலடியாக (நாசரின் ஏறக்குறைய சர்வாதிகார ஆட்சி வீழ்ச்சியடையும் என்ற நம்பிக்கையில் செய்யப்பட்டது) எகிப்து இராணுவத்தால் இந்த அபகரிப்பு நிகழ்ந்தது. அன்றைய தினம் ஆண்ட்ரியா டோரியா (ANDREA DORIA) என்ற கடல்-கப்பல் மூழ்கி 46 பேர் உயிரிழந்தனர்.

பாபா அப்போது, மாடா லவ் (MAHDAH LOVE) மற்றும் ஃபுளோரிடாவின் ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க் (ST. PETERSBURG, FLORIDA) நகரிலிருந்து காரில் பயணம் செய்து வந்த, லிண்டா (LINDA) என்ற தோழியையும் சந்தித்து வாழ்த்தினார். மாடா, 1952இல் மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்தார், ஆனால் சமீபத்தில் அவர் ஸந்த் கிர்பால் ஸிங்கைப் பின்பற்றத் தொடங்கினார். பாபா பின்னர் அவரை அழைத்து, சில கணங்கள் உரையாடி, தழுவிக்கொண்டார். பின்னர் அந்தப்

பெண்மணிக்கு ஒரு தனிப்பட்ட நேர்காணலை வழங்கி, அவர் இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

பாபா மீண்டும் லகூன் கேபினுக்குச் சென்று, காலை 9:00 மணியளவில், அவர் அன்பர்களை, தனிப்பட்ட முறையில் சந்திக்கத் தொடங்கினார். டார்வின் குடும்பத்தினர் அவரை முதலில் சந்தித்தனர். லீட்ரைஸ் ஷா, அவரது ஒரு கண் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமா என்று அவரிடம் கேட்டதற்கு, பாபா, இது குறித்து அவருடனும், பெற்றோருடனும் பின்பு விவாதிப்பதாக பதிலளித்தார். **"இப்போதைக்கு, எதற்கும் கவலைப்படாமல், என்னை மேலும் மேலும் நேசிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துங்கள்"** என்று அவர்களுக்கு உறுதியளித்தார்.

டார்வின் ஷாவின் பெற்றோர்களான ஆரோன் & ஹெலன் ஷா (AARON & HELEN SHAW), மருமகள் டோலோரஸ் (DOLORES) மூவரும் பாபாவை சந்தித்தனர்.

அடுத்ததாக லாரா & லீ டெலாவினி (LAURA & LEE DELAVIGNE), இருவரும் 1952இல் பாபாவை சந்தித்தனர். இந்தத் தம்பதியினர் ஓய்வுபெற்ற பின்பு, பிரயர்க்ளிஃப் ஏக்கர்ஸ் (BRIARCLIFF ACRES) எனப்படும் குடியிருப்புப் பகுதியில் அமைந்த மையத்திற்கு அருகில் சென்றனர். பாபா, டெலாவினி தம்பதியரை '**அவரது அண்டை வீட்டார்**' (HIS NEIGHBORS) என்று அழைப்பதுண்டு. அவர் லாராவிடம், "**நீங்கள் எப்போதும் என் அண்டை வீட்டாராக இருந்தீர்கள்; மேலும் நாம் அனைவரும் கடவுளில் அண்டை வீட்டார்களே**" என்று கூறினார்.

தொடர்ந்து ஐவி, எலிஸபெத், 'எனர்ஜி' (மரியன்) ஃப்ளோர்ஷெய்ம் ஆகியோருடன் பாபா கலந்துரையாடினார். மையத்தில் இரண்டு விடுதிகள் கட்டப்படுவதைப் பற்றி மரியன் கேட்டார். '**எலிஸபெத்தை தவிர வேறு எவராலும் மர்டில் பீச் மெஹர் மையத்தில் எதையும் இணைக்க முடியாது**' என்றார் பாபா. நிதி திரட்டுவது பற்றிய கேள்வியும் விவாதிக்கப்பட்ட அவ்வேளையில், பாபா கூறினார், "**எனக்கு இப்போது பணம் எதுவும் வேண்டாம். பிப்ரவரி 15ஆம் தேதிக்குப் பின்னர், ஆண், பெண் அன்பர்களை உள்ளடக்கிய ஒரு பெரிய கூட்டத்திற்கு எனக்குப் பணம் தேவைப்படும். இப்போது நன்கொடையாக எதுவும் கேட்க வேண்டாம்.**"

எலிஸபெத், மரியன் இருவரும் அங்கிருந்து சென்றதும், டான் ஸ்டீவன்ஸ் அழைக்கப்பட்டார். அவருக்கும் ஐவிக்கும் இடையே உருவான கருத்து வேறுபாடுகள் பாபாவின் முன்னிலையில் வைக்கப்பட்டன, அவர் இவ்வாறு முடிவு செய்தார்: "**அனைத்து வருமானமும்** (SUFISM REORIENTED, 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' செயல்பாடுகளின் வரவு) '**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகம், உலகின் ஒவ்வொரு மூலையிலும்**

**பரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். நான் விளம்பரத்தைப் பற்றி கவலைப்படவில்லை.**"

ஒரு கட்டத்தில், பெர்னார்ட் கர்வாலோவின் ஆளுமையைப் பற்றி விவாதித்த பாபா, "**அவர் என்னை நேசிக்கிறார், ஆனால் அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. அவர் பணிபுரிய விரும்பினாலும், எப்படியோ அவர் ஆதரவற்ற நிலையில் இருப்பதால், அதைச் செய்ய முடியவில்லை**" என்று கூறினார்.

மர்டில் பீச் நகரில் வாழும் டாக்டர் லிண்ட் (DR. LIND), அவரது மனைவி இருவரும் பாபாவை அடுத்ததாக சந்தித்தனர். டாக்டர், பாபாவிடம், "நான் எப்போது உயிரைத் துறக்கப் போகிறேன் என்று கூற முடியுமா?" என வினவினார்.

"**நீங்கள் இன்னும் ஏழு ஆண்டுகள் வாழ்வீர்கள்**" என்று பாபா உறுதியளித்தார்.

டாக்டர் அதை நம்பாமல். "என்னால் உடன்படமுடியவில்லை," என்று அவர் கூறினார்.

'**இன்னும் ஏழு வருடங்கள் உயிர் வாழ்ந்தால், கடவுளுக்காக மட்டுமே வாழ்வீர்கள் என்று எனக்கு வாக்குறுதி வழங்குங்கள்**' என்றார் பாபா. லிண்ட் மனமுவந்து உறுதியளித்தார்.

டாக்டர் போலன் (DR. BOLEN) மீண்டும் பாபாவை சந்தித்தார், இந்த முறை அவரது மனைவி, மகள் மற்றும் மூன்று மகன்களை அழைத்து வந்தார்.

கேரி பென் ஷம்மாயிடம், பாபா கூறினார், "**நான் நிரந்தரமாக உங்கள் இதயத்தில் நுழைந்துவிட்டேன், நீங்களும் அவ்வண்ணமே என் இதயத்தில் நுழைந்துவிட்டீர்கள். நீங்கள் எங்கிருந்தாலும், எல்லா சூழ்நிலைகளிலும் நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன்.**"

பாபாவைத் தனியாக சந்தித்த, அடுத்ததாக வந்த பெண்மணியிடம், பாபா, "**என்னை நேசியுங்கள். உங்களுக்குள் என்னை நீங்கள் காண்பீர்கள். 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படியுங்கள், எதற்கும் கவலைப்பட வேண்டாம்**" என்று வலியுறுத்தி கூறினார்.

"நான் ஓர் அனாதை, எனது பெற்றோரை எனக்குத் தெரியாது," என்று அவர் கூறினார்.

"**உங்களைக் கடவுளின் குழந்தையாகக் கருதி, அனைத்தையும் அவரிடம் விட்டுவிடுங்கள்.**" அவர் அவ்வாறு செய்யத் தயாரா என்று பாபா கேட்க, அந்தப் பெண்மணி உறுதியுடன் பதிலளித்தபோது, நள்ளிரவில் தனியாக

அமர்ந்து பதினான்கு முறை பாபாவின் நாமத்தை மொழியுமாறு அவரிடம் கூறினார்.

பீட்டர் திபோடோ (PETER THIBODEAU) என்ற 14 வயது சிறுவன் மர்டில் பீச் மையத்தில் சிறிய சிறிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். பீட்டரின் தந்தை, டாக்டர். ஜே. ஹெரோல்ட் திபோடோ, (DR. HAROLD THIBODEAU, 39, எலிஸபெத்தின் வர்ம முறை மருத்துவராக இருந்தார், மேலும் அவர் பாபாவை சந்திக்க மருத்துவரை அழைத்தார். டாக்டர் திபோடோவின் தாயார் சமீபத்தில் காலமானார், அவர் பாபாவிடம், "எனது வாழ்நாளில் நான் தாயாரை மீண்டும் பார்க்கலாமா?" என்று கேட்டதற்கு பாபா அதைச் செய்வதாகக் கூறினார்.

"எனது நினைவாற்றலுக்கு உதவ நான் ஏதாவது செய்யலாமா?" அவர் கேட்டார்.

**"உங்களுக்கு என் மீது நம்பிக்கை உள்ளதா?"** என்று பாபா கேட்க, திபோடோ 'ஆம்' என்றார். **"அப்படியானால் ஒவ்வொரு நாளும் படுக்கையிலிருந்து எழும்பும் முன், 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்து' என்று பதினான்கு முறையும், நீங்கள் படுக்கைக்குச் செல்லும் வேளையில் ஏழு முறையும் அவரது பெயரை மொழியுங்கள்"** என அறிவுறுத்தினார்.

திபோடோ குடும்ப நண்பர்களான டாக்டர் லீ ஸெஷன்ஸ் (DR. LEE SESSIONS), மனைவி விக்கி (VICKIE), அவர்களது மகன் (தெற்கு கரோலினாவின் சார்லஸ்டன் நகரைச் சேர்ந்தவர்கள்) ஆகியோரிடம் பாபா, **"சொல்வதற்கென ஒன்றுமில்லை. அன்பாக இருங்கள், அன்பை மட்டும் அள்ளி வழங்குங்கள்!"** என்றார்.

டேனா ஃபீல்ட், மியாமி நகரிலிருந்து திரு. மில்லரையும் (MR. MILLER) அவரது மனைவி மேரியையும் பாபாவிடம் அழைத்து வந்தார். அவர்களிடமும் பாபா 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் படிக்குமாறு அறிவுறுத்தினார்.

பிரையர்க்ளிஃப் ஏக்கர்ஸில் வாழ்ந்த எலீன் கோட்ஸ் (EILEEN COATES), அடுத்ததாக பாபாவை சந்தித்தார். அவர் எலிஸபெத் மற்றும் மர்டில் பீச் மையத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்.

அவரைத் தொடர்ந்து, திரு. ஃப்ளெமிங் (MR. FLEMING), பாபாவை சந்தித்தபோது, அவர் கூறினார், **"ஒருவர் என்னை நேசித்தாலும் இல்லாவிடிலும், அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்!"**

ஹாரி கென்மோர் அன்று காலையிலும், பின்பு ஸூஃபி குழுவின் மைக் லோஃப்டஸ் (MIKE LOFTUS) என்பவரும் பாபாவை சந்தித்தனர்.

ஃபுளோரிடாவைச் சேர்ந்த ஒரு பார்சி மருத்துவர், ஃபேரடூன் பிர்டி (FAREDOON BIRDI) என்பவரும், கடைசியாக மர்டில் பீச் நகரில் வாழந்த திரு &

திருமதி கென்னத் எல்ஸ்வொர்த் (MR. & MRS. KENNETH ELLSWORTH) இருவரும் பாபாவை சந்தித்தனர்..

ஏற்கனவே குறிப்பிட்டபடி, வர்ஜீனியா ரட் கர்ப்பமாக இருந்தார், பாபா அவரையும் அவரது கணவர் ஹெரோல்டையும் (ஒரு நடிகராகும் முனைப்பான விருப்பம் மிக்கவர்) லகூன் கேபினில் பார்த்ததும், வர்ஜீனியாவின் நிலையை முழுமையாக புரிந்துகொண்டது போல, பாபா, தனது வயிற்றைத் தடவி கூறினார்: "**இந்தக் குழந்தை எனது தனிப்பட்ட விருப்பத்திற்கு இணங்க தேர்ந்தெடுக்கப்பட்டது; இது உங்களுக்கு நான் வழங்கும் வரப்பிரசாதம். அது வளர்ந்து வரும்போது சிறந்த ஒன்றாக இருக்கும்.**"

அவர் வர்ஜீனியாவிடம், "**அது பிறக்கும் போது, எனது பெயரை ஏழு முறை மொழியுங்கள்**" என்று அறிவுறுத்தினார். பாபா, வர்ஜீனியாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, அவருடைய கண்களைப் பார்த்து, பாபாவின் பெயரை அவர் முன் திரும்பத் திரும்ப சொல்லிப் பழகுமாறு அறிவுறுத்தினார், அதை அவர் செய்தார். ஹெரோல்டைச் சுட்டிக்காட்டி, பாபா, "**அவர் இதைச் செய்யவில்லை, நான் செய்தேன்!**" என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா தனது அன்பர்கள் சிலரிடம், "**நான் இந்த ஆன்மாவைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு வழங்குவதற்கு முன்பு, பல இடங்களிலும் தேடினேன்**" என்று கூறினார்.

வர்ஜீனியா ரட் தனது கால்களில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு உதவும் வகையில், ஒரு ஜோடி காலணிகளைக் கண்டுபிடித்தார். அப்போது பாபாவின் கால் வலியைக் குறைக்கும் எண்ணத்தில் ஒரு ஜோடி காலணிகளையும் வாங்கினார். பாபா, அவரிடம் ஒன்றை தனது வலது காலில் அணிவிக்குமாறு கூறியதும், அவர் அதைச் செய்தார்; ஆனால் பாபா '**அதை, தான் அணியப்போவது இல்லை என்றும், அது அவரது காலில் அணியப்பட்டதால் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறும்**' அறிவுறுத்தினார். மேலும், "**எனது பாதத்தைத் தொட நேர்ந்ததால் நீங்கள் மிகவும் பாக்கியசாலி**" என்றும் கூறினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ஹெரோல்ட், வர்ஜீனியா ரட் இருவரும், மேலும் சிலருடன் லகூன் கேபினில் இருந்த வேளையில், பாபா, சிறிது நேரம் அமைதியாக இருக்கவே, அனைவரும் அங்கு வந்து ஒன்றிணைந்தனர். அப்போது பாபா, ஹெரோல்ட்டை நோக்கி, "**நான் வர்ஜீனியாவை மிகவும் நேசிக்கிறேன். உங்களுக்குப் பொறாமையாக இல்லையா?**" என்று கேட்டதும் ஹெரோல்ட் புன்னகைத்தார்.

மீண்டும் அதே கேள்வியைக் கேட்கவே, ஹெரோல்ட் புன்னகைத்து, "நீங்கள் அவரை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறீர்களோ, நானும் அவ்வளவு

மகிழ்ச்சியாக இருக்கிறேன்; அவர் உங்களை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறாரோ, அவ்வளவு மகிழ்ச்சியாக நான் இருக்கிறேன்" என்றார்.

இருப்பினும், பாபா இது தொடர்பான கேள்வியைத் தொடர்ந்து எழுப்பினார். **"நீங்கள் பொறாமைப்படவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா?"** என்று கேட்டதும், ஹெரோல்ட் மக்களைக் கடந்து, விரைந்து முன்னால் சென்று, கைகளை நீட்டி, கண்களை மூடிக்கொண்டு, பாபாவின் முன்னால் தரையில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து, உரத்த குரலில் கத்தினார்: "என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போதே - இந்த நிமிடத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்!" மூன்று முறை அவர் இதைத் திரும்பத் திரும்ப மொழிந்தார், ஒவ்வொரு முறையும் அதை மொழிவதற்கு முன்னர், எழுந்து, மீண்டும் தரையில் விழுந்து கூறினார்.

பாபா மிகவும் பவித்ரமாகத் தோற்றமளித்தார். நான்காவது முறையாக ஹெரோல்ட் அதை மொழிய எழுந்தபோது, பாபா அமைதியாகக் கூறினார்: **"நீங்கள் இவ்வாறு மொழிவதற்கு பதிலாக, வர்ஜீனியாவின் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புங்கள்."**

பாபா மிகவும் தீவிரமான தொனியில் எடுத்துரைத்தார்: **"அனைத்தும் நான் அறிவேன். ஹெரோல்ட் நடந்துகொண்ட விதம், நாடகமோ நடிப்போ அல்ல என்று எனக்குத் தெரியும். ஹெரோல்ட் உண்மையில் நடிப்பதாக மக்கள் நினைக்கிறார்கள், ஆனால் பாபாவிற்கு நன்கு தெரியும்"** என்றார். அவர் வர்ஜீனியாவை அழைத்தார், தம்பதியினர் பாபா முன்னிலையில் ஆரத்தழுவியதும், விரைவில் அனைவரும் வெளியேறினர்.

அன்றைய தினம் பாபாவின் அட்டவணை சற்று பரபரப்பாகவும், மக்கள் கூட்டம் மிகையாகவும் இருந்தது. ஏனெனில், நியூயார்க் வந்ததும், பாபா, எலிஸபெத்திடம் '**மர்டில் பீச்சில், அவரது முழு நேரமும் நேர்காணல்களில் செலவிட விரும்பவில்லை; தமது வருகையின் ஒரு பகுதியாக, ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும் என்றும், பல்வேறு குழுக்களுடன் இணைந்திருக்க, கணிசமான அளவு ஓய்வு நேரத்தை விரும்புவதாகவும்**' வெளிப்படையாகக் கூறியிருந்தார். இதனால், முதலில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவிருந்த நேர்காணல் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களுக்கு மாற்றப்பட்டது. அப்படியிருந்தும், சிலர், காலை நேர சந்திப்பைத் தவறவிட்டனர். பாபா அவர்களை அன்று மதியம் பார்ன் கொட்டகையில் இருக்குமாறு அழைப்புவிடுத்தார்.

பாபா லகூன் கேபினை விட்டு வெளியேறி, விருந்தினர் மாளிகையில் மதிய உணவை உண்டார். பின்னர் அவர் ஐவி, டான் ஸ்டீவன்ஸ் மற்றும் பிறருடன் உரையாடிக்கொண்டிருந்த வேளையில், ஸெயிண்ட் ஃபிரான்சிஸைக் (ST. FRANCIS) குறித்து மேக்ஸ் ஹெஃப்லிகரிடம் கூறியதை மீண்டும்

எடுத்துரைத்தார்: **“மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்த மிகச் சில புனிதர்களில், அஸிஸியின் ஸெயின்ட் ஃபிரான்சிஸ் மட்டுமே மகத்தான, பரிபூரண குருநாதர் (சத்குரு) ஆவார்.”**

டான் கேட்டார், “பாபா, உயிர் வாழும் பரிபூரண குருநாதரின் உதவியின்றி, ஒரு தனிமனிதன், இறை உணர்வை அடைய முடியாது என்று சொற்பொழிவுகள், ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகம் மற்றும் பிற இடங்களில் நீங்கள் விளக்கியுள்ளீர்கள். அப்படியானால், மேற்கில் பரிபூரண குருநாதர்கள் இல்லாத பட்சத்தில், ஸெயின்ட் ஃபிரான்சிஸால் எவ்வாறு இறை உணர்வை அடைய முடிந்தது?”

பாபா உடனே ஐவியின் பக்கம் திரும்பி, **“பழங்கால ஸூஃபி தீர்க்கதரிசியான குவாஜா கிஸரைப்** (KHWAJA KHIZR) **பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?”** என்று கேட்டார். ரபியா மார்ட்டின் அவரைப் பற்றி கூறியதைக் கேட்டதாக ஐவி பதிலளித்தார். பாபா இவ்வாறு விளக்கினார்: **“குவாஜா கிஸர் சில நேரங்களில், முற்றிலும் தேவைப்படும் சில ஆன்மீக சூழ்நிலைகளில், பௌதீக உடலை அடையப்பெறுகிறார்; இதுபோன்ற சூழ்நிலையில்தான் ஃபிரான்சிஸ் இறை உணர்வை எய்தினார். ஏனெனில் அவருக்கு இறை உணர்வை வழங்க ஒரு பரிபூரண குருநாதர் இல்லாத காரணத்தால், வரலாறுகளில் நாம் காண்பதுபோல, குறிப்பிட்ட அந்த இரவில், அஸிஸிக்கு அருகிலமைந்த லா வெர்னா மலையில், புனித ஃபிரான்சிஸ் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் காயங்கள் போன்ற வடுக்களை தனது உடலில் கண்டுகொண்டார்; உண்மையில், குவாஜா கிஸர், தனது தற்காலிக மனித ரூபத்தில், இந்த அன்பான மேற்கத்திய துறவிக்கு வழங்கிய கருணையின் ஸ்பரிசம், அவரை ஒரு சத்குரு அல்லது பரிபூரண குருநாதராக மாற்றியது.”**

இந்த விளக்கத்திற்குப் பிறகு, பாபா, எரச், ஆதி, மெஹர்ஜி, நீலு ஆகியோர் மதியம் 1:30 மணி வரை ஓய்வெடுக்க பாபாவின் இல்லத்திற்கு திரும்பிச் சென்றனர். அவர்களுடன் இளம் அன்பர்கள் குழு ஒன்று பின்தொடர்ந்து சென்றது. அவர்கள் இல்லத்தின் வேலி இடப்பட்ட நுழைவாயிலுக்கு வந்ததும், பாபா அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்.

குழு, பாபாவின் இல்லத்தின் முன் சிறிய இடைவெளியில் நின்று உரையாடலைத் தொடர்ந்தது, ஆனால் பிலி ஈட்டன் பாபாவைப் பின்தொடர்ந்தார். மண்டலி முன்னால் சென்றனர். பிலி இந்த சம்பவத்தை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

என்னால் பாபாவை விட்டு விலக முடியவில்லை. நான் அவருடன் பிணைக்கப்பட்டது போல் உணர்ந்தேன். அதிக தூரம் செல்லத் துணிவில்லாததால் வாயிலில் நின்றேன். பாபா, திரும்பி என்னைப் பார்த்தார்,

அவர் கண்களில் அற்புதமான அன்பு ஒளிர்ந்தது. நான் பார்க்கும் நேரமெல்லாம் அவர் கண்கள் பிரகாசிக்க, என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். இனம்புரியாத ஓர் ஈர்ப்பை உணரமுடிந்தது போல் இருந்தது. நான் பிற அனைவரையும் பார்த்தேன், ஆனால் அவர்களில் எவரும் கவனிக்காமல் அங்கேயே நின்று கொண்டிருந்தனர். மண்டலி, முன்னால் நடந்து சென்றதால் அவர்களும் கவனிக்கவில்லை. பாபாவும் நானும் உலகில் தனியாக இருப்பது போலத் தோன்றியது.

பாபா என்னிடம் திரும்பிச் செல்லுமாறு சைகையால் தெரிவித்து, தமது இல்லத்திற்குச் செல்லும் பாதையில் நடந்து சென்றார். நான் நகர முடியாமல் அங்கேயே நின்றேன். பாபா மீண்டும் திரும்பிப் பார்த்தார், அவருடைய கண்கள் பிரகாசித்தன. அவர் என்னைப் பார்த்த அந்த கணத்தில், வெகுவான ஈர்ப்பை உணர முடிந்தது. அவரும் புன்னகைத்துக் கொண்டே, அதே சைகையை செய்தார். அவர் மூன்றாவது முறை திரும்பிய வேளையில் நான் சைகையால் கேட்டேன், “ஏன் என்னை ஒரே நேரத்தில் ஈர்க்கவும், விலகவும் செய்கிறீர்கள்?” அவர் ஓர் அற்புதமான புன்னகையுடன் முகம் மலர்ந்து, என்னை விடுவித்து, வீட்டை நோக்கி தொடர்ந்தார்; ஆனால் இந்த முறை என்னால் நடக்க முடிந்தது. அவ்வளவு எளிதாக இல்லாமல் இருந்தாலும், என்னால் நகர முடிந்தது.

எனக்கு ஏற்பட்ட உணர்வை விவரிக்க முயற்சிப்பதில் எந்த பயனும் இல்லை. பரவசமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. நான் அதை மறக்க மாட்டேன்! இது எனக்கு கிடைத்த மிக அற்புதமான அனுபவம்.

உலகில் வேறு எந்த அன்பும் இல்லை. கணவன் அல்லது மனைவி, குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் என எத்தனை உறவுக்காரர்கள் உங்களுக்கு இருந்திருக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு கவலையில்லை; அந்த அன்பு அனைத்தையும் ஒன்றாக இணைத்தாலும், அதற்கு ஈடு இணையாகாது.

மதியம் 1:30 மணிக்கு ஆதி, பாபாவை மீண்டும் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். மழை பொழிந்து கொண்டிருந்த அவ்வேளையில், பாபா சமையலறைக்குச் சென்றார்; அங்கு மதியம் 2:00 மணிக்கு எலிஸபெத்தின் பிறந்தநாள் விழா தொடங்கியது. பாபா, தானே கேக் வெட்டி, உறுதியளித்தபடி எலிஸபெத்தை ஏழு முறை தழுவினார். அனைவரும் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலைப் பாடி, கேக், ஐஸ்கிரீம் உண்ட பின்னர், எலிஸபெத்திற்கு ஒரு பிறந்தநாள் வாழ்த்து அட்டை வழங்கப்பட்டது, அதில் பாபா ஒரு பக்கத்திலும், பிற அனைவரும் மறு பக்கத்திலும் கையெழுத்திட்டனர்.

அதைத் தொடர்ந்து அனைவரும் பாபாவைப் பின்தொடர்ந்து பார்ன் கொட்டகைக்குச் சென்ற வேளையில், அவரது அன்பர்கள் அனைவரும் சிறு குழந்தைகளைப் போலத் தோற்றமளித்தனர்; எப்பொழுதும் அவருடன் இயன்றவரை நெருங்கிச் செல்ல முயன்றனர். அவர்கள் பார்ன் கொட்டகைக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஒருமுறை, பெண்மணி ஒருவர், பாபாவைப்

பின்தொடர்ந்து, சரியாக பத்து அடிகள் பின்னால் சென்றார். வழியில், அவரது காலணியில் ஒரு மரக்கிளை சிக்கிக் கொள்ளவே, அதை அகற்ற அவர் நின்று காலைத் தூக்கியதும், பாபாவும் நின்றார். '**இதெல்லாம் பரவாயில்லை செல்லம்**, **நான் உங்களுக்காகக் காத்திருப்பேன்**' என்று சொல்வதுபோல, திரும்பி அவரைப் பார்த்துப் புன்னகைத்தார். அந்தப் பெண்மணி மரக்கிளையை அப்புறப்படுத்தி, தனது காலை கீழே வைத்ததும், பாபா மறுபடியும் நடையைத் தொடர்ந்தார்.

ஆன்டி மியோ இந்தக் குறு-நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார், மேலும் இது தனது வாழ்க்கையில் இதுவரை கண்டிராத, மிகவும் மனதை நெருடும் நிகழ்வுகளில் ஒன்றாக நினைவில் கொண்டார். பாபா மிகவும் அன்பு நிறைந்து, அக்கறை உள்ளவராகக் காணப்பட்டார். அவர் தமது முதுகுப்புறத்தைக் காட்டி முன்னால் நடந்து சென்றாலும், தாமதம் குறித்து அந்தப் பெண்மணி கவலைப்பட வேண்டிய தேவையில்லை என்பதை வெளிப்படுத்தியது.

அனைவரும் ஒன்றுதிரண்டதும், முழுக் குழுவின் சார்பாக, பாபா எலிஸபெத்திற்கு ஒரு பெரிய பூங்கொத்து, மஞ்சள் சாமந்தி (CHRYSANTHEMUMS, ஒளிர் நிறமும் பந்து போன்ற வடிவமும் உடைய பெரிய தோட்டத்துப் பூ வகை) மற்றும் (வாள் வடிவ) ஊதா நிற கிளாடியோலியை (GLADIOLI) அன்புப் பரிசாக வழங்கினார். உலகின் எல்லா இடங்களிலும், மர்டில் பீச் மையத்தில் தான் மிகவும் சௌகரியமாக இருந்ததாக பாபா முந்தைய நாள் கூறியதை, மறுபடியும் எடுத்துரைத்தார்.

முந்தைய நாள் பாபாவுடனான தனது நேர்காணலின் போது, மரியன் ஃப்ளோர்ஷெய்ம், பாபாவிடம், மர்டில் பீச் மையத்தைக் குறித்து ஆலோசனை ஒன்றை வழங்கினார்; பாபா இப்போது அவரிடம் அதை மீண்டும் கூறுமாறு கேட்டுக் கொண்டார். மரியன் எழுந்து நின்று விளக்கினார்: “இங்கே அனைத்தும் அழகாக, அற்புதமாக இருக்கும் இந்த சூழலில், ஒவ்வொருவரும் அதைப் பகிர்ந்துகொள்வதில் எவ்வளவு ஆர்வமாக உணர்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, எலிஸபெத் அதைக் குறித்து மகிழ்ச்சியடைவதாக இருந்தால், மேலும் அவரது திட்டத்தில் இடம்பெற வாய்ப்பிருந்தால், எங்கள் அன்பின் நிமித்தம், ஆண்கள், பெண்கள் இருவருக்காகவும் தனித்தனி தங்குமிடம் ஒன்றை எழுப்பலாம்.”

உடனே எரச் கேட்டார், “ஆமாம், அதற்கு பாபா என்ன பதிலளித்தார்?”

மரியன் தொடர்ந்து கூறினார்: “எலிஸபெத் முழு இடத்தையும் உருவாக்கியதாகவும், உலகின் இதர எல்லா இடங்களுக்கும் மேலாக, பாபா அதை விரும்புவதாகவும், எலிஸபெத்தின் கைகள் அனைத்தையும் செய்ததாகவும், எனவே, அது அப்படியே இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதாகவும் பாபா கூறினார்.”

அதற்கு பதிலளித்த பாபா, "**நீங்கள் இங்கு காண்பது அனைத்தும் எலிஸபெத்தின் அன்பின் உழைப்பால் உருவானது. அவர் என்மீது கொண்ட அன்பின் மூலம், இந்த மையத்தில் எனக்கு வசதியாக எல்லாவற்றையும் செய்திருக்கிறார். வெளியிலிருந்தும் வந்து சேர்வதானால், இது இப்படி.....?** என்று கூறி நிறைவு செய்யாத பட்சத்தில்...

பாபா கூறியதன் அர்த்தத்தை மொழிபெயர்ப்பதற்கான சரியான ஆங்கில வார்த்தையை எரச்சால் கண்டுகொள்ள முடியவில்லை; பார்வையாளர்களிடமிருந்து பல குரல்கள் எழுந்தன; 'ஒழுங்கற்றது' அல்லது 'பொருத்தமற்றது' என்று பரிந்துரைக்கப்பட்டன.

மரியன் தொடர்ந்தார்: "பாபா மேலும் ஒரு செய்தியைத் தெரிவித்தார். அவர் மேற்கிலிருந்து திரும்பிச் சென்றதும், 1957 பிப்ரவரி 15 வரை, ஐந்து மாதங்கள், இந்தியாவில் ஏகாந்தவாசம் மேற்கொள்வார் என்றும், இந்தக் காலகட்டத்தில் அவர் எந்தப் பணத்தையும் ஏற்க மாட்டார், இந்தியாவிற்கு பணம் எடுத்துச் செல்லமாட்டார் என்றும் கூறினார். நியூயார்க் குழு, சேகரித்து வைத்திருக்கும் மெஹர் பாபா விருந்தோம்பல் நிதி சேமிப்புத் தொகையில் ஏதேனும் மீதம் இருந்தால், (பாபா மற்றும் குழுவின் முழு விமானக் கட்டணங்கள் மேலும் நியூயார்க்கில் அவர்களுக்கான செலவுகளும் இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டது) நமது பயணத்தின் முடிவில், ஸான் ஃபிரான்சிஸ்கோவில் பாபா அதைக் குறித்த வழிமுறைகளை நமக்கு வழங்குவார்.

"பாபா இந்தியாவிற்குத் திரும்பும்போது, அவர் ஐந்து மாதங்கள் ஆழ்ந்த, தீவிரமான ஏகாந்தவாசமும், உபவாசமும் கடைப்பிடிப்பார்; அவர் சத்தாராவில் தங்காமல் இருக்கவும் வாய்ப்புள்ளது."

பாபா கூறினார்: "**நான் சத்தாராவில்** (பங்களாவில்) **அடைத்து வைக்கப்படலாம் அல்லது வேறு இடத்திற்குச் செல்லலாம்; நான் மலையின் உச்சிக்கு அல்லது மலையடிவாரத்திற்கும் போகலாம். ஆனால் ஐந்து மாதங்கள், நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன், மிகவும் தீவிரமாகப் பணிபுரிய உள்ளேன். ஏன்? எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம் நெருங்கிவிட்டது.**"

மரியன் தொடருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்: "ஐந்து மாத ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மேற்கத்திய நாடுகளிலிருந்தும் ஆண்கள், பெண்கள், புனிதர்கள் பலரை வரவழைத்து, இந்தியாவில் மிகப் பெரிய கூட்டம் ஒன்றை நடத்த, பாபா நினைத்துள்ளார். அது மிகப் பெரிய அளவில் இருக்கும். இந்தியா செல்வதற்கான கட்டணத்திற்காகவும், பிறருக்கு உதவுவதற்காகவும் நாங்கள் நன்கொடைகளை சேமிக்க வேண்டும் என்றும் கூறினார். வர வசதியுள்ளவர்கள் இந்தியாவிற்கு

வரவேண்டும், வசதியுள்ளவர்கள் பங்களிப்பாக நன்கொடை வழங்க வேண்டும். இந்தியா வர முடியாதவர்கள், கூட்டத்தின் போது, பாபாவின் இதயத்தில் நிலைகொண்டிருப்பார்கள் என்று பாபா கூறுகிறார். பயணச்செலவுகளை சந்திக்க இயலாதவர்கள் மற்றும் பங்களிப்பாக வழங்க முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம்."

பாபா சைகை மூலமாக வினவினார்: "**பாபா கூறியதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டீர்களா? யார் கவனமாக செவிமடுக்கவில்லை? டான், தயவு செய்து மீண்டும் ஒருமுறை கூறுகிறீர்களா?**" என்று கேட்டார். டான் ஸ்டீவன்ஸ் இந்தச் செய்தியின் சாராம்சத்தை மீண்டும் எடுத்துரைத்தார், இது பலருக்குச் செய்தியாகவே இருந்தது.

பாபா தொடர்ந்தார்: "**இந்தியாவில் பல மகத்தான துறவிகள் உள்ளனர். சிலர் ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர். சிலர் மேல்நிலை ஆன்மாக்கள். டெக்கன் பீடபூமியில் காட்கே மஹாராஜ் என்று அழைக்கப்படும் சிறப்பான துறவி ஒருவர் உள்ளார்.**

"**டான், நீங்கள் அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா, அவரைப் பார்த்தீர்களா?**" டான் இல்லை என்று பதிலளித்தார்.

"**காட்கே மஹாராஜைப் பின்பற்றுபவர்கள் பலர் உள்ளனர். அவருக்கு ஏறக்குறைய 90 வயது, அவர் எல்லா நேரங்களிலும் அலைந்து திரிந்து, பிறரிடம் கடவுளை நேசிக்க வேண்டும் என்று கூறுகிறார். மேலும் காட்கே மஹாராஜுக்கு என் மீது அளப்பரிய பிரியம். இந்தியாவில், 1954இல் சகவாச கூட்டம் நடந்தபோது, பல மேற்கத்திய அன்பர்கள் அங்கு இருந்தனர்; காட்கே மஹாராஜ் எனது தரிசனத்திற்காக வந்த அந்த நேரத்தில், உங்களில் யார் அவரைப் பார்த்தார்கள்?**" ஃபிரெட் வின்டர்ஃபெல்ட், டார்வின் ஷா, ஜான் பாஸ், டேனா ஃபீல்ட், ஜோஸஃப் ஹார்ப் மற்றும் பலர் தங்கள் கைகளை உயர்த்தினர். பென் ஹேய்மன் மிகவும் தாமதமாக இந்தியா வந்ததாகக் கூறினார்.

"**காட்கே மஹாராஜ் என்னிடம் வந்து, என்னை வணங்கினார்; நான் அவரை என் அருகில் அமர வைத்தேன், நீண்ட நேரம் அமர்ந்திருந்தார்; அவர் டெக்கன் பீடபூமியில் பணிபுரிந்தாலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மிகவும் பிரபலமானவர். அவர் எங்குச் சென்றாலும், அவர் கூறுவதைக் கேட்க ஒரு பெரிய கூட்டம் அவரைச் சுற்றி கூடுகிறது, மேலும் அவர் என்னை நேசிக்கிறார், எனது மகத்துவத்தை அவர் அறிவார்.**"

ஆதி அப்போது தெரிவித்தார், "ஒருமுறை காட்கே மஹாராஜ் என்னிடம் கூறினார்: 'பாபாவிடம் என்னை ஆசீர்வதிக்கச் சொல்லுங்கள். அவர் 'உலக போதகர்', நான் ஒரு சாதாரண துறவி. அவர் 'பெரிய சூரியன்', அதில் நான் ஒரு சுடர். என்னை ஆசீர்வதிக்கச் சொல்லுங்கள்!'"

பாபா தொடர்ந்தார், "**இந்தியாவில், பல துறவிகள் உள்ளனர், ஆனால் அவர்களில் ஏழு பேர் எனது பிரியமான குழந்தைகள். ஒருவர் காட்கே மஹாராஜ்... அவர் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ளார். மேலும் ஆறு பேர் உள்ளனர்: கிர்பால் ஸிங்** (KIRPAL SINGH), **கம்மு பாபா** (KAMMU BABA), **மும்பையின் நித்யானந்தா** (NITYANANDA), **மலபாரின் (சுவாமி பாப்பா) ராம்தாஸ்** (SWAMI PAPA - RAMDAS), **இமயமலையில், விஷ்ணு தத் திகம்பர்** (VISHNU DATT DIGAMBAR) **என்று ஒருவர் இருக்கிறார்; (சுவாமி) ஷிவானந்தா**, SHIVANANDA **(ரிஷிகேஷின்) ஆகியோர் என் அன்புக் குழந்தைகள்.**

"**பிப்ரவரி 15ஆம் தேதிக்குப் பின்னர், ஒரு பெரிய கூட்டத்தை நிகழ்த்தலாம் என்று நினைக்கிறேன். நான் இந்த ஏழு புனிதர்களையும் அழைக்க விரும்புகிறேன். இந்த சந்திப்பு மிகவும் சிறப்பானதாக இருக்கும்; நீங்கள் இந்த வாய்ப்பை இழப்பதை நான் விரும்பவில்லை. நான் உங்களை அழைத்தால், வர முயற்சி செய்யுங்கள். எலிஸபெத், நீங்கள் முயற்சி செய்ய வேண்டாம், ஆனால் நிச்சயமாக வர வேண்டும். அந்தக் கூட்டத்திற்குப் பின்னர், எனது மௌனத்தைக் கலைப்பது, என்னை மகிமைப்படுத்துவது, எனது வெளிப்பாடு, எல்லாமே நான் அறிவித்தபடி வரிசையாக விரைவில் நடக்கும்.**"

"**நீங்கள் அனைவரும் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். 1957 பிப்ரவரி 15ஆம் தேதிக்குப் பிறகு, நீங்கள் விரும்பினால், நன்கொடைகளை வழங்கலாம்; இந்திய பயணத்திற்காக இப்போதே சேமிக்கத் தொடங்குங்கள், ஆதலால், நீங்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். நீங்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டால், கலந்துகொள்ளத் தேவையான பணத்தை சேமிக்க முயற்சிக்கவும். அதனால் நீங்கள் பயணக் கட்டணம் மற்றும் பலவற்றை எளிதாக சமாளிக்க முடியும். இப்போது பாபாவிற்கு வழங்குவதைப் பற்றி நினைக்காதீர்கள்.**"

பாபா, எரச்சிடம் விளக்குமாறு சைகையால் தெரிவித்தார்: "பாபா இந்தியாவில் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில், அவர் ஓர் அறையில் தன்னைப் பூட்டிக்கொள்கிறார்; கதவுகள், ஜன்னல்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும்; சுவாசிக்க காற்று அரிதாகவே இருக்கும். பாபா எவரையேனும் தன்னுடன் இருக்க அனுமதித்தால், உள்ளே இருப்பவர் முற்றிலும் மூச்சுத் திணறியதாக உணர்கிறார். ஆனால், பாபா நாள் முழுவதும் அங்கேயே அமர்ந்து, அறை முற்றிலுமாக மூடிய வண்ணம் உள்ளே இருக்கிறார். அவர் ஏகாந்தவாசத்தில் அமரும்போது, உலகம் முழுவதும் அவருக்கு அருகில் இருப்பதாக பாபா கூறுகிறார்."

பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, டான் ஸ்டீவன்ஸ் எழுந்து நின்று, அவருடைய மூன்று செய்திகளை வாசித்தார்: '**கட்டுப்படுத்தும் கடந்த காலம்**'

(THE BINDING PAST), **'கர்மவினையின் விதிமுறை'** (THE LAW OF KARMA) மற்றும் **'எதிர்வினைகளிலிருந்து விடுதலை'** (FREEDOM FROM OPPOSITES).

டான் வாசித்து முடித்ததும், பாபா கைகளைத் தட்டினார். யாரோ ஒருவர் தூங்கிவிட்டார், எனவே பாபா, டானிடம் அவற்றை மீண்டும் வாசித்து, விளக்குமாறு கூறினார். ஒரு செய்தி, கடந்த காலத்தை மாற்ற முடியாது மற்றும் உறைந்த ஏரி போன்றது, ஆனால் அது வரையறுக்கப்பட்ட 'நான்' எனும் அகந்தையின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தொடர்ந்து வடிவமைக்கிறது என்பதை வலியுறுத்துகிறது. மற்றொன்று, பௌதீக உடலைத் துறந்த பின்பு, நாம் சொர்க்கம், நரகம் எனும் ஆழ் மன நிலைகளை அனுபவிக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**"உங்களுக்குப் புரிகிறதா?"** என்று பாபா கேட்டார்.

டான் 'ஆம்' என்று தலையசைத்தபோது, பாபா, **"நல்லது, ஏனெனில் என்னால் புரிந்துகொள்ள முடிவதில்லை!"** என்றார்.

சிரிப்பொலி அடங்கியதும், பாபா கேட்டார், **"சொர்க்கம், நரகம் இரண்டும் எங்கே உள்ளன? டான், நீங்கள் விளக்குங்கள்."**

டான் பதிலளித்தார், "நான் புரிந்து கொண்டதற்கு இணங்க, இவை பொய்யும் போலியுமான மாயையின் நிலைகள், அவை மனதில் மட்டுமே உள்ளன. அவை உண்மை அல்ல; மாயையின் ஓர் அங்கம்."

பாபா கூறினார்:

**நான் சுமார் 13 வயது இளைஞனாக இருந்தபோது, மிகவும் தடித்த, வலிமையான, ஆரோக்கியமான, நாகரீகமான ஓர் ஈரானி ஆண் மகன் மற்றும் அவருடைய இரண்டு அல்லது மூன்று நண்பர்களை சந்தித்தேன். என்னை அழைத்து அருகில் அமர வைத்தனர். நான் ஒரு குழந்தையாக இருந்தேன். அவர்களில் ஒருவர் 'பாங்'** (BHANG) **எனும் இந்திய போதைப்பொருளைத் தயார் செய்து கொண்டிருந்தார். மூவரும் அதை அருந்தி மகிழ்ந்தனர். அவர்களில் ஒரு புத்திசாலி ஈரானி, எனது தந்தை ஷெரியார்ஜியை அறிந்தவர் ஆதலால், அவர் என்னை அழைத்து அருகில் அமரச் செய்தார். பெருமளவில் அருந்திவிட்டு, "நான் இன்று சொர்க்கத்தில் இருக்கிறேன்" என்று கலகலப்பான குரலில் பிறரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.**

**அவர்களின் உரையாடலை நான் மிகவும் ரசித்தேன். பின்னர் அவர் எழுந்தபோது, அவருடன் பிறரும் எழுந்து நடக்க ஆரம்பித்தனர். முன்னே, சாலையைக் கடக்கும் வேளையில், அங்கே சிறிதளவு தண்ணீர் தேங்கி இருப்பதை நான் கண்டேன்; பாங்கின் எதிர்வினையானது, ஒரு துளி நீரைக்கூட கடல் போல தோன்றச் செய்யும் என்று இந்தியாவில் அனைவருக்கும் தெரியும். போதையில் இருந்த அந்த நபர், சாலையின்**

**குறுக்கே ஒரு பெரிய நீரோடை இருப்பதாக நினைத்து, அங்கேயே நின்று, அதில் குதிக்க விரும்பினார்! அவர் அதை ஒரே முழு நீள தாண்டுதல் மூலம் கடக்க தன்னால் முடிந்தவரை முயற்சித்து, கடினமாக குதித்ததில் அவரது கால் உடைந்தது. அப்போது அவர், "நான் இப்போது நரகத்தில் இருக்கிறேன்!" என்றார். எனவே இந்த சொர்கம், நரகம் இரண்டையும் அனுபவிக்க முடிந்தாலும், நிஜத்தில் அப்படி எதுவும் இல்லை. அவை மாயையின் ஒரு பாகம்.**

டான் '**கர்மவினையின் விதிமுறை**'யை இரண்டாவது முறையாகப் படித்தார், அதன் சாராம்சத்தை விளக்கும்படி பாபா மீண்டும் அவரிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு டான் பதிலளித்தார்: "பாபா, முழுப் பிரபஞ்சமும் விதிமுறைகளால் ஆளப்படுகிறது என்ற உண்மையை இதிலிருந்து நான் புரிந்துகொள்கிறேன். இந்த விதிமுறைகளைப் பொறுத்தவரை, பொருளுலகம் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கலாம், ஆனால் முழுப் பிரபஞ்சமும், ஒரு சிறந்த வியாபாரத்தைப் போல விதிமுறைகளால் நிர்வகிக்கப்படுகிறது."

பாபா கூறினார்:

**முழுப் பிரபஞ்சமும் மாயை என்றாலும், அது சட்டதிட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறது, ஒரு திட்டவட்டமான சட்டம்; அந்தச் சட்டம் ஒவ்வொரு விவரத்தையும் கையாளுகிறது. கர்ம வினையின் சட்டத்திலிருந்து நாம் தப்ப முடியாது. ஆனால் நாம் மாயையை மீறும்போது, சட்டம் நம்மை மேலும் பிணைக்காது.**

**கிருஷ்ணா குருக்ஷேத்திரா போரில் அதையே அர்ஜுனனிடம் கூறினார் "உன் உறவினர்களையும், நண்பர்களையும் கொன்று விடு!" புகழ்பெற்ற குருக்ஷேத்திரா போரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அர்ஜுனன் மறுத்து, "எனது சொந்த பந்தத்தை நான் எப்படிக் கொல்ல முடியும்?" என வினவியபோது கிருஷ்ணா, "நான் சட்டத்திற்கு மேலானவன். முழுப் படைப்பும் என்னிடமிருந்து வந்தது; நீங்கள் எவ்வகையிலும் பிணைக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டீர்கள்" என்று அறிவித்தார்.**

**இப்போது நான் உங்களிடம், இங்கே ஓர் எறும்பு இருப்பதாகக் கூறவே, திடீரென டான் அதைக் கொன்றுவிட்டால், நிச்சயமாக, ஒரு பிணைப்பு உருவாக்கப்படுகிறது - அதாவது கொல்லும் செயலால் விளையும் மனப்படிவங்கள். அந்தப் பிணைப்பிலிருந்து நீங்கள் விடுபட முடியாது. நீங்கள் ஒரு எறும்பைக் கொன்றதால் பிணைக்கப்பட்டீர்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், நல்லது, தீயது அனைத்தும் உங்களைப் பிணைக்கிறது. நல்ல செயல்கள் உங்களைப் பிணைக்கும்போது, நீங்கள் தங்கச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளீர்கள் என்று சொல்லலாம். மேலும்,**

**செயல்கள் தீயதாக இருந்தால், நீங்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்படுகிறீர்கள்.**

**"எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்" என்று கிறிஸ்து கூறினார். அதன் அர்த்தம் என்ன?**

டான் பதிலளித்தார், "எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்களுக்குள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதே இதன் அர்த்தம் என்று நான் கருதுகிறேன்."

பாபா தொடர்ந்தார்:

**ஆனால் அதற்குப் பின்னால் புதைந்திருந்த பொருள், இந்தப் பொருளுலகை விட்டுவிட வேண்டும் என்பதல்ல; உலகத்தைத் துறக்க வேண்டும் என்பதும் அல்ல, கீழ்ப்படிய வேண்டும் என்பதே! எல்லா எண்ணங்களையும், உங்கள் எல்லா சுயநல எண்ணங்களையும் விட்டுவிட்டு, எனக்குக் கீழ்ப்படியுங்கள். பிறகு, நீங்கள் விடுதலை அடைவீர்கள், சுதந்திரமாக இருப்பீர்கள். ஆனால் உங்களால் முடியாத பட்சத்தில், ஒவ்வொரு செயலும் ஒரு பிணைப்பை உருவாக்குவதால், மேலும் மேலும் பிணைப்புகள் உருவாக்கப்படுகின்றன.**

**நீங்கள் மிகவும் பழமையானவர், டான், நீங்கள் காலாதிகாலமாக வாழ்கிறீர்கள்! மேலும் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். மேலும் மேலும் நீங்கள் பிணைக்கப்படுவீர்கள், காலத்திற்கு பின் காலமாக நீங்கள் கட்டுண்டவராகவே இருப்பீர்கள். காலத்திற்கு பின் காலமாக, அதே பிணைப்புகள் உருவாக்கப்படும், நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்ள முயற்சிப்பீர்கள், அவ்வாறு செய்யும் வேளையில், மீண்டும் பிணைக்கப்படுவீர்கள். ஆனால் நீங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டதும், பிணைப்பு என்று எதுவும் இருந்ததில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அது வெறும் கற்பனை - ஒரு கனவு; நீங்கள் ஒரு கனவை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்.**

**இங்கே நீங்கள் அனைவரும் மிகவும் பழமையானவர்கள், ஆதிகாலத்தவர்கள். அனைவரும் கடவுள், கடவுள் ஒவ்வொருவருள்ளும் இருக்கிறார், கடவுள் காலத்திற்குக் கட்டுப்பட்டவர் அல்ல: அவர் நித்தியமானவர். நீங்கள் அனைவரும் நித்தியமானவர்கள். இப்போது நீங்கள் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் பிணைக்கப்பட்டிருப்பதை உணர்கிறீர்கள், நீங்கள் தொடர்ந்து பிணைக்கப்படுகிறீர்கள்; ஆனால் ஒவ்வொரு தனிமனிதனும் விடுதலை அடையும் காலம் வரும். பின்னர் அந்த நபர் தனது பிணைப்புகள் அனைத்தும் ஒரு கனவாக இருந்ததை உணர்கிறார் - அவர் ஒரு கனவைக் கண்டுகொண்டிருந்தார்.**

**கிறிஸ்து பிறரின் துன்பங்களைத் தன் மீது ஏற்றுக்கொண்டார். ஏன்? மனித குலத்தை விடுவிப்பதற்காக. இருந்தாலும், பிணைப்புகள் இன்னமும்**

**உள்ளன. மனிதகுலம் இன்னமும் பிணைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், விடுதலைக்கு காலம், நேரம் என்ற தேவை எதுவும் இல்லை. நீங்கள் யுகங்களுக்குப் பின் யுகங்களாகக் கட்டுண்டிருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் விடுதலை அடையும் அந்தத் தருணத்தில், அது உடனடியாக - ஒரே நொடிப்பொழுதில் நிகழ்கிறது!**

**சற்று சிந்தித்துப் பாருங்கள். கடவுள் எல்லோருள்ளும், ஒவ்வொருவரிலும் இருக்கிறார், அவர் எல்லையற்றவர்; எல்லாம் வல்லவர், பேரின்பத்தின் பொக்கிஷமாக இருப்பவர். மேலும், கடவுள் ஒவ்வொருவருள்ளும் இருந்தாலும், நாம் எவ்வளவு உதவியற்றவர்களாக உணர்கிறோம்! கடவுள் எல்லையற்ற சக்தியும் பேரின்பமும் படைத்தவராக இருந்தாலும், நாம் அழுகிறோம், வலியையும், துக்கத்தையும் உணர்கிறோம், ஏன்? அதற்கு நமது சொந்த பிணைப்புகளே காரணம். ஆனால் இந்தப் பிணைப்புகளிலிருந்து அன்பின் மூலமாக விடுபடும் ஒரு வழி உள்ளது."**

டான் ஸ்டீவன்ஸ் **'எதிர்வினைகளிலிருந்து விடுதலை'** என்ற மூன்றாவது செய்தியை மீண்டும் ஒருமுறை வாசித்தார். பாபா மேலும் கூறுகையில்:

**இந்தச் செய்தியை நீங்கள் வாசிக்கக் கேட்டீர்கள், அனைவரும் கவனமாகக் கேட்டீர்கள். ஆனால் இது நடைமுறை அனுபவம் அல்ல - இவை அனைத்தையும் காதால் கேட்பது மட்டுமே. ஆனால் மனதளவில் புரிந்து கொள்ள முடியும். மனம் இதையெல்லாம் புரிந்து கொண்டு பாராட்ட முடியும். ஆனால், இன்றியமையா தேவை என்னவெனில் உண்மையான அனுபவம். இறை அனுபவம் அடையப்பெற்றதும் நீங்கள் அனைத்தையும் அறிந்துகொள்வீர்கள்! எல்லாமே மாயை என்றும், கடவுள் உண்மைப்பொருள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.**

**நான் பள்ளி, கல்லூரியில் படிக்கும் போது, இதையெல்லாம் படிக்கும் ஆர்வம் இருந்ததில்லை. ஆன்மீகத்தில் எனக்கு நாட்டமும் இல்லை. நான் தத்துவ அல்லது ஆன்மீகப் புத்தகங்களைப் படித்ததுமில்லை. எனது தந்தை ஷெரியார்ஜி, எல்லா நேரமும் கடவுளையே நினைத்து, அவரைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் ஒரு சிறந்த ஆன்மீக ஆர்வலர், இறை நாட்டம் மிக்கவர். ஈரான் நாட்டை விட்டு வெளியேறி, நடந்து, ஆங்காங்கே அலைந்து திரிந்த அவர், பின்னர் இந்தியா வந்தார். அவர் தேடிக் கொண்டிருந்த இறைவனை அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. இந்தியாவில் திருமணம் செய்து கொண்டார். ஏன்? கடந்த கால தொடர்புகள், கடந்த கால மனப்பதிவுகள் அல்லது மனப்படிவங்களே அதற்குக் காரணம்.**

**நான் கல்லூரியில் படிக்கும் போது, பாபாஜானை சந்தித்தேன். நான் சைக்கிளில் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தேன், அங்கே ஒரு மரத்தின்**

கீழ் பாபாஜான் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி சில பட்டான்களின் குழு ஒன்று இருந்தது. அவர்கள் மிகவும் உறுதியான மக்கள், மிகவும் கடுமையான தோற்றம் கொண்டவர்கள். பாபாஜான், ஒரு வயதான பெண்மணி, சைகையால் என்னை அழைத்தார், நான் சைக்கிளிலிருந்து கீழே இறங்கினேன். பின்னர் அவர் எனது நெற்றியில் முத்தமிட்ட அந்த கணமே - நான் எனது இறை அனுபவத்தை உணர்ந்தேன். அந்த நேரத்தில், எல்லாம் மறைந்தது, முற்றிலும் மறைந்துவிட்டது. ஏன்? ஏனெனில் நான் என்னை 'எல்லையற்றவனாக'க் கண்டேன். என்னைத் தவிர வேறு எதற்கும் இடமில்லை. என்னைத் தவிர அனைத்தும் மறைந்துவிட்டன! அந்த அனுபவத்தை நான் எப்படி உங்களுக்கு விளக்க முடியும்? ஆனால் அந்த அனுபவத்தை அடையப் பெறும் வேளையில் நீங்களும் அதை அறிவீர்கள்.

அந்தப் பேரானந்தத்தை, இடைவெளியே இல்லாத அந்த எல்லையற்ற ஆனந்தத்தை நான் அனுபவித்தபோது, அது தொடர்ச்சியாக இருந்தது - அது இப்போதும் தொடர்கிறது. நிச்சயமாக, அது நித்தியமானது, அதற்கு இடைவெளி எதுவும் இல்லை. அதைத் தொடர்ந்து நான் உபாஸனி மஹாராஜால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, அவரிடம் சென்றேன் - எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. அவர் என்னை சாதாரண இயல்பு நிலைக்கு கொண்டு வந்தார்.

சாதாரண உணர்வு நிலைக்கு வருவதன் பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியாது. ஒவ்வொரு சிறிய விஷயத்திலும், ஒவ்வொரு கணமும், நான் சிலுவையில் அறையப்படுவதைப் போல் உணர்கிறேன். அந்த எல்லையில்லா பேரின்ப நிலையிலிருந்து, இந்த மாயை எனும் பொருளுலகின் இயல்பான உணர்வு நிலைக்கு வருவது என்பது, சிலுவையில் அறையப்படுவதற்கு சமம்.

இந்த நேரத்திலும் அப்படித்தான். நீங்கள் அனைவரும் என்னை, மகிழ்ச்சியாக, முகமலர்ச்சியுடன் காண்கிறீர்கள், ஆனால் உள்ளத்தில், உள்ளளவில் நான் எல்லையற்ற வேதனையில் இருக்கிறேன். ஏன்? ஏனெனில், உங்கள் சுய அடிமைத்தனத்தை உங்கள் அனைவரின் மூலமாகவும் நான் அனுபவிக்கிறேன்.

உங்களால் என்னை நேசிக்க முடிந்தால், கடவுளை நேசியுங்கள், அப்போது உங்கள் அன்பு என்னை யார் என அறிய வைக்கும். உங்களது சுய மகிழ்ச்சியைத் தேடாமல், உங்கள் அன்பின் மூலம் பிறரை மகிழ்விக்க முடிந்தால், இந்த அடிமைத்தனத்திலிருந்து உங்களை விடுவிக்க முடியும். நான் உண்மையில் இருப்பது போல நீங்கள் என்னைக் கண்டுகொள்ள முடியும். அந்த அனுபவத்தை அடையப் பெற்ற அடுத்த கணமே, நீங்கள் விடுதலையடைந்து எல்லையற்ற பேரின்பத்தை அனுபவிப்பீர்கள்.

பாபா பின்பு விறுவிறுப்பாக நடந்து மையத்தின் முக்கிய பகுதிக்குச் சென்றார். குழந்தைகள் அனைவரும் படகு இல்லத்தில் இருந்தனர், கருப்பு வெனிஸ் கோண்டோலாவில் (BLACK VENETIAN GONDOLA) ஏரிக்கு வெளியே செல்ல காத்திருந்தனர். பாபா படகு இல்லத்திற்குள் நுழைந்து, ஒவ்வொரு குழந்தையையும் அன்புடன் அரவணைத்தார். மையத்தில் இருந்த கறுப்பின கையாள் ஒருவர் கோண்டோலாவில் குழந்தைகளை சவாரிக்குக் கூட்டமாக அழைத்துச் செல்வதை, பாபா அனைவருடனும் புல்வெளியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்.

பாபா மீண்டும் செங்கல் படிகளில் ஏறி, குன்றின் விளிம்பில் ஒரு நீள் வெள்ளை மர இருக்கையில் அமர்ந்தார். அங்கிருந்து அவர் பிரசாதமாக கூட்டத்திற்கு இனிப்புகளை வீசத் தொடங்கினார். இனிப்புகள் தீர்ந்துவிட்டதால் கிட்டி அவற்றை எடுத்து வர ஓடினார். அன்பான புன்னகையுடன், பாபா வீசிய மிட்டாய், ஹாரி கென்மோரின் திறந்த உள்ளங்கையில் விழுந்தது. மாலை 6:30 மணிக்கு, பாபா தனது இல்லத்திற்கு ஓய்வெடுக்கச் சென்றார். புறப்படுவதற்கு முன்னர், அவர் கூறினார்: "**நான் உங்களுடன் நடப்பேன், நான் உங்களுடன் உரையாடுவேன், நான் உங்களுடன் விளையாடுவேன், ஆனால் நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.**"

1956, ஜூலை 27 வெள்ளிக்கிழமை காலை, தொலைக்காட்சிப் படக்குழுவினர் விரைவில் வருவதாகத் திட்டமிடப்பட்டதால், பாபா காலை உணவை உட்கொண்டார். அவர் சில தனிப்பட்ட நேர்காணல்களையும் வழங்கினார்; முதலாவதாக, நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த மைக்கேல் & ஆன் கோஹனோவுடன் (MICHAEL & ANNE KOHANOW) நடந்த நேர்காணலில், பாபா, மைக்கேலிடம், "**என்னை உங்கள் குருநாதராக ஏற்றுக்கொள்கிறீர்களா?**" என வினவினார்.

மைக்கேல் பதிலளித்தார், "எனது மனம் உங்களை ஏற்றுக்கொள்கிறது."

பாபா அவருக்கு விளக்கினார், "**அன்பு, ஆழ் இதயத்தில், கடலின் ஆழம் போல் அமைதியானது. மேலோட்டமான நீர் மேற்பரப்பில் சஞ்சலத்தை ஏற்படுத்துகிறது.**"

1937இல் கேன்ஸ் நகரில் பாபாவை சந்தித்த ஸாம் கோஹன் (SAM COHEN), அதற்குப் பின்னர் அன்று காலை அவரை சந்தித்தார். 'பாபா மர்டில் பீச் மையத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்பு, நள்ளிரவில் தனது பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிக்கத் தொடங்குமாறு' ஸாமிடம் கூறினார்.



பார்ன் கொட்டகை, ஜூலை **1956** - ஆதி (சீ), நீலு,
மெஹர்ஜி, பென் ஹேய்மென், எரச்
(INSIDE THE BARN, ADI SR., NILU, MEHERJI, BEN HAYMAN, ERUCH, JULY 1956)



குழந்தைகள் படகுகளில் செல்வதைப் பார்க்கும் காட்சி
(WATCHING THE CHILDREN RIDE IN THE GONDOLA)





குழுவினிடையே பிரசாதத்தை வீசி எறிதல்,
பாபாவின் அருகில் ரத் வைட்
(TOSSING PRASAD TO THE GROUP, RUTH WHITE NEXT TO BABA)

பாபாவை முதன்முதலில் சந்தித்தவர்களில் ஒருவர் வாஷிங்டன் டி.சி.யைச் (WASHINGTON D.C.) சேர்ந்த 47 வயதான வழக்கறிஞர், எட்வர்ட் ‘நெட்’ ஃபூட் (EDWARD ‘NED’ FOOTE). 1954இல் ஐவி டியூஸ் மூலமாக, பாபாவைப் பற்றி தெரிய வந்த வழக்கறிஞரின் மனைவி டோரோதியா (DORATHEA, 47) தனது கணவரிடம் அதைப் பகிர்ந்து கொண்டார். ஐவியின் கணவர் டெர்ரி, நெட் இருவரும் வணிகம் சம்பந்தமாக உரையாடிக்கொண்டிருந்த வேளையில், அது முடிவடையும் வரை, மனைவிமார் இருவரும் பாபாவைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர். டோரோதியா, 1944 முதல் ஒரு குருநாதரைத் தேடிக்கொண்டிருந்தார், மேலும் பாபாவைக் குறித்து ஐவி அவரிடம் கூறியதைக் கேட்டு, மிகுந்த ஆர்வத்தால் தூண்டப்பட்டார். அவர் பெக்கி & ஆன்டி மியோ (PEGGY & ANDY MUIR) மற்றும் பதினொரு ஸூஃபிகளுடன் வாஷிங்டனிலிருந்து மர்டில் பீச் வரை காரில் பயணம் செய்தார். நெட் தனது மனைவியின் ஈடுபாட்டைக் குறித்து கவலைப்பட்டார், ஆனால் டோரோதியா மர்டில் பீச் மையத்திலிருந்து கணவரை தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்ட போது, அவர் தெற்கு நோக்கி வந்து பாபாவை சந்திக்கும் விருப்பத்தைத் தெரிவித்தார். லகூன் கேபினுக்குள் நுழைந்த நெட், பாபாவின் கண்களை நேராகப் பார்த்த அந்த கணத்தில், பாபா யார் என்பதை உடனடியாக அறிந்து கொண்டார். பாபா உலர்ந்த பழத்தை பிரசாதமாக அவருக்கு ஊட்டினார்.

ஷிகாகோவைச் சேர்ந்த மார்வின் & ஜீனி கேம்பென் (MARVIN & JEANNIE CAMPEN OF CHICAGO) இருவரும் முதல் முறையாக பாபாவை சந்தித்த மற்றுமொரு திருமணமான ஜோடி. 38 வயதான மார்வின், 1949இல் டான் ஸ்டீவன்ஸுடன் தொடர்பில் வந்த பின்பு, மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தில் இணைந்தார். ஜீனியும் ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்டிருந்தாலும், அவர் ஒருபோதும் ஸூஃபி பாரம்பரியத்தில் இணையவில்லை. இருவரும் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, அவருடைய ஆன்மீக நோக்கத்திற்காக, அர்ப்பணிப்புடன் இருந்தனர்.

மையத்தில் இரண்டு நாள் தங்கியிருந்த வேளையில், லகூன் கேபினில் பாபாவை ஐவியுடன் சந்தித்தனர். மார்வின் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: “நாங்கள் பாபாவின் முன்னிலையில் வந்து, அவரைத் தலைவணங்கிய போது, ஒரு பெரிய சக்தி என் உடலின் பின்புற நரம்பு மண்டலத்தைத் தாக்கியது. பின்னர் என் உடலின் எல்லா பாகங்களிலும் வெப்பத்துடன் கூடிய பிரகாசம் வெளியே பாய்ந்தது. அதைத் தொடர்ந்து, கண்களில் நீர் வழிய அமைதியும், ஒருவித திருப்தியும் ஏற்பட்டது, அதை நாங்கள் பாபாவின் பௌதீக உடல் பிரசன்னத்தை விட்டு வெளியேறிய பிறகும், நீண்ட நேரம் உணர முடிந்தது.”

மியோ தம்பதியருக்கு, அவர்களின் வேண்டுகோளின் பேரில், கிட்டி ஒரு தனிப்பட்ட நேர்காணலை ஏற்பாடு செய்தார். பெக்கி தம்பதியர் ஸூஃபி

போதகர்களாக தங்கள் பணியைத் தொடர வேண்டுமா என்பதை பாபாவிடமிருந்து தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் இருந்தனர். லகூன் கேபினில், பாபாவின் நாற்காலி அந்த அறையின் மத்தியில் போடப்பட்டிருந்தது. அவர்கள் பாபாவின் முன்னால் மண்டியிட்டு வணங்குவதற்கு போதுமான இடம் இருந்தது. இருவரும் அழுது கொண்டே எடுத்துரைத்த வார்த்தைகள் ஏறக்குறைய புரிந்துகொள்ள முடியாமல் இருந்தன, ஆனால் அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பியதை பாபா அறிந்திருந்தார். பாபா அவர்களிடம் வினவினார், "**ஐவி** (அவர்களின் பணியைப் பற்றி) **என்ன சொல்ல விரும்புகிறார்?**"

அதற்கு அவர்கள், "அவர், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறார் என்பதை உணர்கிறோம்."

பாபா தனது வலது கையை பெக்கியின் தலையிலும், இடது கையை ஆன்டியின் தலையிலும் வைத்து, "**இருவரும் ஒன்றிணைந்து செயல்படுங்கள்**" என்றார்.

சமையலறைக்குச் செல்லும் வழியில், பாபா, அடெல், பிலி, பெரில், ஃபிலிஸ் ஆகியோரிடம் '**இந்தியாவில் மெஹராவிற்கும் இதர பெண் மண்டலிக்கும் கடிதம் எழுதினீர்களா?**' என வினவினார். மீண்டும், அவர் படகு இல்லத்தில் நின்றபோது, ஹெரோல்ட் ரட்டிடம், '**அவர் நன்றாக தூங்கினாரா?**' என்று கேட்டார்.

அன்றைய நிகழ்ச்சிகளில் மர்டில் பீச் மையத்தின் அர்ப்பணிப்பு விழாக்களும் இடம்பெற்றன. அந்த விழாவில் மர்டில் பீச் நகரின் மேயர் அழைக்கப்பட்டார், மேலும் என்.பி.சி - தொலைக்காட்சி (N.B.C. TELEVISION) ஒளிப்பதிவாளர்கள் நியூயார்க்கிலிருந்து வந்து, தேசிய அளவில் ஒளிபரப்பப்படும் 'டேவ் கரோவே ஷோ' (DAVE GARROWAY SHOW) நிகழ்ச்சியை படம்பிடிக்க இருந்தனர். மர்டில் பீச் நகர மக்கள் இன்றைய தினத்தில் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர், மேலும் இந்த நிகழ்வு உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது.

காலை 8:30 மணிக்கு பாபா, 'பார்ன்' கொட்டகைக்கு வந்தார். தரிசனத்திற்கு வருபவர்களின் பெயர்களை எழுதுவதற்காக மார்கரெட் க்ராஸ்கே, ஆக்னஸ் பேரோன் இருவரும் முன் வாசலில் நிறுத்தப்பட்டனர். மார்கரெட் ஒவ்வொருவருக்கும் கீழ் வரும் செய்தியை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டார்: "**பாபாவிடமிருந்து உங்களுக்காக ஒரு செய்தி உள்ளது. நீங்கள் கேள்விகள் கேட்க வேண்டாம், இன்று தனிப்பட்ட நேர்காணல்கள் எதுவும் இராது. பாபாவின் அன்பையும், தரிசனத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.**" அதைத் தொடர்ந்து, '**பாபா வழங்கும் பிரசாதத்தை அவர்கள் உண்ண வேண்டும்**' என்று ஜீன் ஷா கூற வேண்டியிருந்தது.

முதலில் ஒரு சிலரே வந்திருந்தனர். பாபா சிறிது நேரம் கொட்டகைக்குப் பின்னால் சென்றார்; பின்பு, மறுபடியும் உள்ளே வந்து, பின்புறம் உயர்ந்த முதுகு நாற்காலியில் அமர்ந்தார். முதலில், மெஹர் மையத்திலும், மர்டில் பீச்சிலும் தங்கியிருந்த அனைவரும் வெளியே வரிசையாக நின்று, செர்ரி பழத்தையும், மின்டையும் (CHERRY & MINTS) பாபாவிடமிருந்து பிரசாதமாகப் பெற்றுக்கொண்டனர்.

பின்னர், அமைதியான சூழ்நிலை ஒன்று நிலவியது; பாபா, அடெல், பிலி, பெரில், ஃபிலிஸ் ஆகிய நான்கு பெண்மணிகளை அழைத்து, மெஹராவிற்கு அவர்கள் இணைந்து எழுதிய கடிதத்தைப் படிக்குமாறு கூறினார். அவர் அடெல் மற்றும் பெரில் வரைந்த பகுதிகளை மாற்றி எழுதுமாறு அறிவுறுத்தினார். பாபா, அடெலிடம் பின்வரும் வரிகளை எழுதுமாறு எடுத்துரைத்தார்:

“**பாபா ஆத்மாக்களின் பரமாத்மா**,<br>**கடவுள்களில் பிரியமானவர்**,<br>**அவரது அன்பர்களின் இறை வாழ்வாக இருப்பவர்**,<br>**மேலும் அவரது இதயத்தோடு நெருங்கியவர்களின்**<br>**அடிமையாகத் திகழ்பவர்**.”

ஆனால் அடெல், பாபா விரும்பியதற்கு இணங்க, தனது சொந்த வார்த்தைகளாக இந்தப் பகுதியை உருவாக்குவதற்கு பதிலாக, பாபாவை மேற்கோள் காட்டினார். மீண்டும் பாபா அடெலை மாற்றி எழுத வைத்தார். அடெல் சற்று சோக உணர்வை வெளிப்படுத்தியதும், பாபா, “**நான் ஏன் இதையெல்லாம் செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாதா? அதனால் நீங்கள் அனைவரும் என் அருகில் இருக்கும் வாய்ப்பை அடையப் பெறுகிறீர்கள்**!” அடுத்த முறை இந்த நான்கு பெண்மணிகளையும் அழைத்தபோது, அவர்களுடன் ஸில்வியா டி லாங் (SYLVIA D LONG) என்பவரும் அழைக்கப்பட்டார்.

பதினோரு மணியளவில், பாபா வராந்தாவில் வெளியே வந்த வேளையில், ஃபிலிஸ், பாபாவிற்கு மாலை அணிவித்து, “மர்டில் பீச் மேயர் இதை உங்களுக்கு அணிவித்திருக்க வேண்டும், ஆனால் அவர் வெளியூர் சென்றிருப்பதால் இங்கு வர இயலவில்லை” என்று கூறினார். இருப்பினும், ‘மர்டில் பீச் ஸன்’ (MYRTLE BEACH SUN), ‘தி மர்டில் பீச் நியூஸ்’ (THE MYRTLE BEACH NEWS) மற்றும் ‘சார்ல்ஸ்டன் நியூஸ் & கொரியர்’ (CHARLESTON NEWS & COURIER) பத்திரிகைகளின் நிருபர்கள் வந்து, பாபாவுடனான நேர்காணலில் ஒவ்வொருவரும் பங்கெடுத்து, புகைப்படங்களை எடுத்தனர்.

பாபா ‘பார்ன்’ கொட்டகைக்குத் திரும்பிச் சென்று, மதிய உணவுக்கு முன்னதாக ஒரு சிலருக்கு தரிசனம் வழங்கினார். அன்று காலை நிகழ்ச்சியில் நூற்று அறுபத்தொரு பேர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

மதிய உணவுக்குப் பின்னர் 1:30 மணியளவில், விருந்தினர் மாளிகைக்கு வெளியே அமைந்த வளாகத்தில் பாபா, ரோஜா மலர்கள் பூத்திருந்த வேலியின் நிழலில் அமர்ந்திருந்த வேளையில், அனைவரும் ஒன்றுதிரண்டனர். '**பென் ஹேய்மன் எங்கே?**' என்று பாபா கேட்டார். மைக் லோஃப்டஸ் (MIKE LOFTUS), பாபாவின் உரையாடல்களை கொட்டகையிலும், மையத்தின் இதர இடங்களிலும் 'ஒலி பதிவு பெட்டி'யில் பதிவு செய்து கொண்டிருந்தார், வழக்கம் போல தனது 'ஒலி பதிவு பெட்டி'யுடன் பாபாவின் முன்னால் தலை குனிந்து அமர்ந்திருந்தார். அவர் பென் ஹேய்மனைத் தேடி அழைத்து வர முன்வந்தார், ஆனால் அவர் தனது 'ஒலி பதிவு பெட்டி'யை விட்டு வெளியேற தயங்கிய நிலையில், அவர் டிக் கேலோரிடம் (DICK GAL0R) அதை கவனித்துக் கொள்ளுமாறு கூறிச் சென்றார்; அப்போது பாபா, டிக்கிடம் கேலி செய்தார், "**என்னை யார் கவனிப்பது? நீங்கள் கவனமாக இல்லை என்றால், நான் அதைத் திருடிவிடுவேன். நான் உலகளாவிய திருடன்! அனைவரின் இதயங்களையும் திருடுபவன்!**"

பென், பாபா முன் தோன்றிய போது, எரச் அவரிடம், "பாபா இன்று காலை மூன்று முறை உங்களை நினைவுகூர்ந்து அழைத்தார்" என்றார்.

பாபா உடனே கருத்துரைத்தார், "**என்னை நேசிப்பவர்கள் எல்லோரும் பித்துபிடித்தவர்கள் போலாகிவிட்டனர்! சந்தேகத்திற்கு இடமின்றி, சுட்டெரிக்கும் சூரியன் அவர்களின் மூளையை பாதிக்கிறது!**

"**மார்கரெட்** (க்ராஸ்கே) '**பார்ன்' கொட்டகையில் இருந்த அனைத்து பார்வையாளர்களிடமும் என்னிடம் கேள்விகள் கேட்டு நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். எனவே அவர் இதை சுமார் இருநூறு அல்லது முந்நூறு பேரிடம் கூறியிருக்க வேண்டும்; நான் அவரை எச்சரித்து, 'மார்கரெட், நீங்கள் இவ்வாறு ஆறு வார்த்தைகளை அவர்களிடம் தொடர்ந்து சொல்வதானால், உங்கள் தொண்டை வலிக்கும் - எனவே உங்கள் தொண்டையைப் பாதுகாக்க மாத்திரைகளை வைத்துக்கொள்ளுங்கள்' என்றேன். பிரியமான பிலி இதைக் கேட்டு, எனக்குத் தொண்டை புண் இருப்பதாக நினைத்திருக்க வேண்டும்; எனவே நான் சில மாத்திரைகளை எடுத்துக்கொள்வது நல்லது என்ற எண்ணத்தில் கிட்டி, எனர்ஜி** (மரியன்) **இருவருக்கும் தகவல் தெரிவித்தார்.**

"**பிலி ஈட்டன் மறுபடியும் சமையலறைக்கு ஓடிவந்து, கிட்டியிடம் 'தொண்டைக்கான ஏதேனும் மருந்து இருக்கிறதா' என்று கேட்டார். யாரோ ஒருவர் தனது அறையில் இருப்பதாகக் கூறி அதை எடுத்துவர ஓடினார், மேலும், எனர்ஜி, ஊருக்குச் சென்றபோது, ஆறு பாக்கெட்டுகளை வாங்கி வந்தார். மதிய உணவு வேளையில், பாபாவின் தொண்டை எப்படி இருக்கிறது என்று கிட்டி கேட்டார், இப்படித்தான் முழுக்கதையும் வெளிவந்தது.**"

பாபா தொடர்ந்தார், **“எனக்குத் தொண்டை புண் வர முடியாது என்று அர்த்தம் அல்ல, எனக்குத் தொண்டை புண் வரும், எனக்கு சளி பிடிக்கும், நான் அனைத்து நோய்களுக்கும் ஆளாகிறேன். உலகளாவிய துன்பங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் தற்பொழுது நான் நன்றாக இருக்கிறேன்.**

**“இன்று காலை, திருமதி டியூஸ், டான் ஸ்டீவன்ஸ் இருவரும் என்னிடம் வந்து, ‘பாபா, டிவி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், 12:30 மணிக்குத் தயாராக இருக்க முயற்சி செய்யுங்கள், 12:30க்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்’ என்று கூறினர். எனவே நான் ‘பார்ன்’ கொட்டகையை விட்டு வெளியேறி, என் இல்லத்திற்கு நடந்து சென்று, அங்கு அவசரமாக மதிய உணவை உண்ட பின்பு, நான் சரியாக 12:30 மணிக்கு இங்கு வந்தேன். இப்போது மணி 1:30 ஆகிவிட்டது, டான் ஸ்டீவன்ஸ் அல்லது தொலைக்காட்சி நபர்கள் வந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஐவி டியூஸையும் காணவில்லை!”**

ஐவி முன்னோக்கி வந்து, “நான் இங்கே இருக்கிறேன்” என்றார்.

பாபா தொடர்ந்தார், **“பிற்பகல் 2:30 மணிக்கு, நான் ‘பார்ன்’ கொட்டகையில் இருப்பேன், ஏனெனில் மக்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். உள்ளூர் செய்தித்தாளில், நான் 2:30 முதல் பார்வையாளர்களுக்கு தரிசனம் வழங்குவேன் என்று அறிவிக்கப்பட்டதாக எலிஸபெத் என்னிடம் கூறுகிறார். பின்பு, கிட்டி என்னிடம், ‘பாபா, தயவு செய்து அங்குச் செல்ல வேண்டாம், ஏனெனில் தொலைக்காட்சி நிகழ்ச்சி இங்கிருந்து** (விருந்தினர் மாளிகை) **தொடங்குகிறது. இப்போது, நான் இங்கேயே இருக்க வேண்டுமா என்று உங்கள் அனைவரையும் கேட்கிறேன்! உங்கள் பதில் எனக்கு வேண்டும், திருமதி டியூஸ், நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?”**

பென் ஹேய்மன், “நீங்கள் அதை அவரிடம் விட்டுவிடலாம், அது அப்படித்தான் இருக்கும்!” என்றதும் அனைவரும் சிரிப்பில் ஆழ்ந்தனர்.

ஐவி, “பாபா, நான் என்ன சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?” என்று ஆர்வத்துடன் கேட்டார்.

பாபா, ஐவியிடம் பேசுமாறு சைகையால் தெரிவித்தார்; அப்போது அவர், “நல்லது; நேரம் இன்னும் 2:30 ஆகவில்லை. அதுவரை நீங்கள் காத்திருக்கலாம்” என்றார். அதன்பின், பாபா, எலிஸபெத், ஐவி மூவருக்குமிடையே, தொலைக்காட்சி நபர்கள் வரும் வேளையில் பாபா என்ன செய்வார் என்பது குறித்து மேலும் விவாதம் நடந்தது. இறுதியாக, ஐவி, “பாபா, நீங்கள் ஏன் 2:30 வரை நீங்கள் விரும்பியதைச் செய்யக்கூடாது, அதற்குள் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்றார்.

அதற்கு பாபா பதிலளித்தார்: "**நான் விரும்பியதைச் செய்வேன். நான் யாருடைய பேச்சையும் கேட்க மாட்டேன். அது எனது பழக்கமாக இருந்து வருகிறது - பன்னெடுங்காலமாக இருந்து வரும் பழக்கம் - உங்கள் அனைவருக்கும் சிறந்தது என்று எனக்குத் தெரிந்ததைச் செய்கிறேன். நான் எந்த ஆலோசனைகளுக்கும் செவிமடுப்பதில்லை. உங்கள் அனைவருக்கும் எது சிறந்ததோ, அதை நான் செய்கிறேன், ஏனெனில் எனக்குத் தெரியும்.**

"**இப்போது நீங்கள் கலைந்து செல்லலாம், ஆனால் நீராட வெளியே செல்ல வேண்டாம். மதிய உணவிற்கு சற்று முன்பு கடற்கரையில் இருந்தவர் யார்? எவரேனும் வெளியே நீச்சலுக்காகச் சென்றீர்களா?**"

கிறிஸ்டின் வைஸ் (CHRISTINE WISE) பதிலளித்தார், அவர் தனியாக நீச்சலுக்குச் சென்றதாகக் கூறினார். '**எப்போதும் தனியாக இல்லாமல் குழுவாக கடற்கரைக்குச் சென்றால் நல்லது**' என்று பாபா குறிப்பிட்டார்.

அனைவரும் கலைந்து செல்லவிருந்த வேளையில் மாடா லவ்வை (MAHDAH LOVE) அவரது இல்லத்திற்கு அனுப்புவது பற்றி பாபா விளக்கினார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, மாடா லவ், ஸந்த் கிர்பால் ஸிங்கைப் பின்பற்றுபவர். பாபா, பிலி ஈட்டனிடம் அவர் எடுத்துரைத்த விளக்கக் குறிப்புகளை வாசிக்கச் சொன்னார். அந்தக் குறிப்பில், மாடா, ஃபுளோரிடா நகரிலிருந்து அவரைப் பார்க்க வந்ததாக பாபா விளக்கினார். பாபா அவரை ஆரத்தழுவி, தான் அவரை நேசிப்பதாகவும், அவர் நல்லுள்ளம் படைத்தவர் என்றும் கூறினார். 1952இல் பாபாவை சந்தித்ததிலிருந்து, பாபா தனக்கு மிகவும் உதவியதாக அவர் கூறினார். கிர்பால் ஸிங் தனது 62வது வயதில் பாபாவை தரிசனம் செய்வதற்காக டெல்லியிலிருந்து சத்தாரா வரை, கடும் வெப்பமான காலநிலையிலும் வந்ததை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர் அதை முக்கியத்துவம் வாய்ந்ததாக நினைத்தார். பாபா அவருக்கு பதிலளித்தார், "**நான் கிர்பால் ஸிங்கை மிகவும் நேசிக்கிறேன், நான் பிரபஞ்சத்தின் இறைவன் மற்றும் அனைத்து புனிதர்களும் எனது குழந்தைகள்.**"

மேலும், "**என்னை சந்தித்த பின்பு கிர்பால் ஸிங் நேரடியாக டெல்லிக்குத் திரும்பிச் சென்றதைப் போல, நீங்களும் ஃபுளோரிடாவிற்குத் திரும்பிச் செல்லுங்கள்**" என்று அவர் மேலும் கூறியபோது, அவர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

மாடா லவ், பாபாவிடம் மர்டில் பீச் மையத்திற்குத் மறுபடியும் வருவாரா என்று கேட்டபோது, "**இது எல்லாம் எனது விருப்பத்தைப் பொறுத்தது. நான் எதிர்காலத்தில் இங்கு வந்து நீண்ட காலம் தங்கியிருக்கலாம்**" என்று பதிலளித்தார்.

குறிப்புகள் வாசிக்கப்பட்டு, அங்கிருந்த அனைவருக்கும் அதன் நகல் கொடுக்கப்பட்ட பிறகு, பாபா கேலி செய்தார், "**62 வயதான ஒரு 'முதியவருக்கு'**

**இந்தப் பிரச்சினை இருக்கிறது! எனவே, கிர்பால் ஸிங்கிற்கு 62 வயது, மேலும் வயதானவர் என்று அவர் அழைக்கப்படுவதானால், என்னையும் அவ்வாறே அழைக்க வேண்டும்!"**

கூட்டத்தில் யாரோ ஒருவர், "பாபாவிற்கு 62 வயதாகிறது!" என்று குறிப்பிட்டதற்கு அவர், **"நான் ஆதிகாலத்தவன், மிகவும் பழமையானவன்"** என்று பதிலளித்தார்.

பாபா, பென் ஹேய்மனை (அவருக்கு வயது 66) நோக்கி, **"பென், நீங்களும் நானும் இளமையாக இருக்கிறோம்!"** என்றார்.

தொலைக்காட்சி குழுவினர் இதுகாறும் வராததால், பாபா 'பார்ன்' கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மேகங்கள் மூடி, மழை வருவது நிச்சயம் எனத் தோன்றியதால், பாபா அனைவரையும் உள்ளே அழைத்தார். ஏறக்குறைய 91 பேர் அவரை தரிசனம் செய்தனர். டான், ஃப்ரெட், பின்பு சார்மியன் மூவரையும் பாபா, விமான நிலையத்திற்குச் சென்று தொலைக்காட்சி குழுவினருக்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார்.

அவர் ஐவியை பதினைந்து நிமிடங்களுக்கு மர்டில் பீச் மையத்தின் நுழைவாயிலிலும், பதினைந்து நிமிடங்கள் 'பார்ன்' கொட்டகையில் ஆன்டி மியோவின் காரிலும், இடம் மாறி மாறி காத்திருக்குமாறு கேட்டுக்கொண்டார். அன்று காலை, தொலைக்காட்சி படப்பிடிப்பைப் பற்றி பாபா, ஐவியிடம், **"ஒன்று நான் அதை சீராகச் செய்வேன், அல்லது அதில் சிறிது உரசலை உருவாக்குவேன்"** என்று குறிப்பிட்டிருந்தார். அவரது வார்த்தைகள் உண்மையாகிவிட்டதாகத் தோன்றியது; உண்மையில், இயந்திரக் கோளாறு காரணமாக, குழுவினரின் விமானம் ரத்து செய்யப்படவே, நீண்ட நேர முயற்சிக்குப் பிறகு, பெர்னார்ட் கர்வாலோ இறுதியாக ஒரு சிறிய தனியார் விமானத்தைக் கண்டுபிடித்து, அவர்களைத் தானே, புயலுக்கு நடுவிலும் மர்டில் பீச்சுக்கு அழைத்து வந்தார்.

அவர்கள் காத்திருந்த அவ்வேளையில், பாபா, தன்னைச் சுற்றி நாற்காலிகளிலும் தரையிலும் ஒரு வட்டத்தில் அமர்ந்திருந்த அன்பர்களுடன் மனம்விட்டு உரையாடினார். அவர் குறிப்பிட்டார், **"நான் கூறுவதை நீங்கள் அனைவரும் மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். இது மிக்க எளிதானதாகத் தோன்றினாலும், என் அன்பர்களுக்கு இது மிகவும் இன்றியமையாதது. என்னை நேசிப்பது என்பது என்னுள் உங்களை இழந்து, என்னை உங்கள் பரமாத்மாவாக** (ஏக இறைவனாக) **கண்டுகொள்வதோடு, உங்களது இன்ப துன்பங்கள் அனைத்தையும் என்னிடம் விட்டு விடுவதாகும். அதன் அர்த்தம் என்ன?"**

ஒரு பெண் குரல் கூட்டத்திலிருந்து பதிலளித்தது, "மிகவும் எளிமையானது - எல்லாவற்றையும் பாபாவிடம் விட்டு விடுங்கள்!"

ஆமாம், **“எல்லாவற்றையும்!”** பாபா வலியுறுத்தி கூறினார். **“மகிழ்ச்சியாக இருங்கள்! உங்களின் இன்பம், துன்பம் இரண்டையும் என்னிடம் விட்டு விடுங்கள் - அதன் பின்பு நீங்கள் சுதந்திரமாக இருங்கள்! ஆனால் இது ஒரு பெரிய விஷயம், கடினமான விஷயம். உங்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர், அவர்கள் மூவரும் ஒரே நேரத்தில் இறந்துவிடுகிறார்கள். இயற்கையாகவே, நீங்கள் என்ன சொல்ல முடியும்? நீங்கள் சொல்வது மட்டுமல்லாமல், ‘இதையெல்லாம் பாபாவிடம் விட்டுவிடுகிறேன், இது அவருடைய விருப்பம், இது அவரது சந்தோஷம்’ என்று உணர வேண்டும்.**

**“கபீர் அதை அறிவார்ந்த முறையில் எடுத்துரைத்தார். இன்று காலை நான் இங்கு உலா வரும் போது, அதை எரச்சிடம் எழுதிக் கொள்ளுமாறு கூறினேன்.”** எரச் பின்னர் ஆதி இருவரும், ஹிந்தியில் வசனத்தை திரும்பத் திரும்ப மொழிந்தனர். எரச் கூறினார், “கபீர் ஒரு சத்குரு. இந்தியா முழுவதும், மக்கள் அவரை மனமார போற்றி, புகழ்ந்து, நேசிக்கின்றனர். அவர் தனது குருநாதரிடம் கூறியதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நான் உங்களுக்கு வழங்குகிறேன்”:

என்னிடம் உள்ளது எதுவும் எனக்கு உரியது அல்ல.
என்னிடம் இருப்பதெல்லாம் உனக்குச் சொந்தம்.
உன்னிடம் சரணடைந்தால் நான் இழப்பது என்ன?
உனக்கு என்றென்றும் சொந்தமானதை மட்டும்!

பாபா அழுத்தம் திருத்தமாகக் கூறினார், **“என் அன்பர்களிடம் நான் கூற விரும்புவது இதுதான்: உங்கள் இன்ப துன்பங்கள் அனைத்தையும் என்னிடம் விட்டு விடுங்கள்.”**

‘பார்ன்’ கொட்டகையில் மிகவும் வெப்பமாக இருந்தது, ஆனால் மழை பொழியத் தொடங்கியதைத் தொடர்ந்து, விரைவில் பெரிய ஆலங்கட்டி கற்கள் கீழே விழுந்தன. பாபா, அவர்கள் அனைவரும் சீக்கிரமாக வெளியேற முயற்சிக்க வேண்டும் என்று சைகையால் தெரிவித்த அந்த நேரத்தில் ஒரு சிலர் வெளியேறினர்.

புயல் வீசியபோது, பாபா தனது இருக்கையிலிருந்து எழுந்து, அமைதியின்றி நடந்து கொண்டிருந்தார். அவர் வராண்டாவில் இறங்கிய அந்த நேரத்தில், அவரது விரல்கள் அதி விரைவில் அதிர்ந்தன. பின்பு மீண்டும் அமர்ந்தார். விரைவிலேயே தொலைக்காட்சி குழுவினர் விமான நிலையத்தில் இருப்பதாகக் கூறி, கிட்டி உள்ளே நுழைந்தபோது, பாபா கூறினார், **“தொலைக்காட்சிக்காரர்கள் தங்களுடன் மழையைக் கொண்டு வந்துள்ளனர்!”**



முன் இருக்கையில் பாபா, மெஹர் மையம்
(BABA SEATED IN THE FRONT SEAT, MEHER CENTER)





**'புரூக்கிரீன் பூங்கா', 27 ஜூலை 1956**
(BROOKGREEN GARDNS, 27 JULY 1956)

அடுத்த நாள் நிகழவிருந்த 'மௌன சந்திப்பு' (SILENCE-MEETING) குறித்து பாபா இவ்வாறு கூறினார்:

**நீங்கள் இங்கே இருக்கும் வேளையில், எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறேன்; விழிப்புடனும் புத்துணர்ச்சியுடனும் இருக்க முயற்சி செய்யுங்கள். நாளை மாலை வரும் வேளையில், ஒருவரும் தூங்கி விழக்கூடாது. நாளை ஒரு முக்கியமான நாள். இந்த 'பார்ன்' கொட்டகையில் நான் உங்களுக்கு வழங்க விரும்பும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

**நான் உங்களுடன் கலந்து, மகிழ்ச்சியாக, முகமலர்ச்சியாக, விளையாட்டுத்தனத்துடன் தோன்றும் அளவுக்கு நான் உங்கள் நிலைக்கு இறங்கி வருகிறேன். (ஆனால்) எனது தெய்வீகத்தைப் பற்றியோ, நான் எங்கும், எதிலும் வியாபித்திருக்கும் நிலையைப் பற்றியோ உங்களுக்குத் தெரியாது. கிருஷ்ணாவைப் போலவே எனக்கும் நகைச்சுவை உணர்வு மிகவும் அதிகம். அந்த நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடு, உங்களைத் தவறாக வழிநடத்தவோ அல்லது நான் யார் என்பதை மறந்துவிடச் செய்யவோ கூடாது. உங்களைப் போல் என்னையும் உங்களில் ஒருவனாகக் கருதக்கூடாது! ஆன்மீக மேல் தளங்களில் நிலைகொண்டுள்ள சாதுக்கள், துறவிகள் மட்டுமே என்னை சிறிதளவேனும் தெரிந்துகொள்ள முடியும். உங்களுக்கு எனது உண்மை நிலையைப் பற்றிய ஒரு கண நேர பார்வை இருந்தாலே, நீங்கள் உங்கள் உடல் உணர்வை முற்றிலும் இழந்துவிடுவீர்கள்.**

**நான் ஒரு குழந்தையைப் போல, விளையாட்டுத்தனமாக, சுதந்திரமாக, அதேவேளையில் ஒரு வயதான மனிதனைப் போலவும் இருக்கிறேன். நான், ஒரே நேரத்தில், வெண்ணெய் போல மென்மையாகவும், இரும்பு போல கடினமாகவும் இருக்கிறேன். முழு மனதுடன் என்னை நேசிப்பவர்களால் மட்டுமே என்னை சிறிதளவேனும் அறிய முடியும். மனதால் என்னை அறிய முடியாது, மனம் என்னை தொடவும் முடியாது. நான் அதற்கு அப்பாற்பட்டவன், மனதிற்கு அப்பாற்பட்டவன்.**

**இங்கே, நாம் அனைவரும் அமர்ந்து, தொலைக்காட்சி குழுவினர் வருவார்கள் என்று பொறுமையாகக் காத்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை இதெல்லாம் முக்கியமற்றது. திட்டங்களுக்குக் கட்டுண்டு இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால் உங்கள் அன்பில் கட்டுண்டவனாக இருப்பதை நான் விரும்புகிறேன். உலக மக்கள் என்னைப் பற்றி அறிந்து கொள்வதைப் பார்க்க, என் அன்பர்கள் முயற்சி செய்கிறார்கள். நான் என்னுடன் கொண்டு வரும் உண்மையை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள், மேலும் அவர்கள் ஏதோ ஒரு வழியில், இயன்றவரை முயற்சி செய்கிறார்கள். அவர்கள் இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை**

திட்டமிட்டுள்ளனர். ஆதலால், நான் விரும்பாவிட்டாலும், அதற்குக் கட்டுப்படுவதில் எனக்குக் கவலையில்லை. எனவே, நீங்கள் அனைவரும் என்னுடன் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். வெளியே செல்ல வாய்ப்பே இல்லை. நீங்கள் தாகமாக உணர்ந்தாலும், அதைப் பற்றி எண்ணாமல் அமைதியாக இருக்க வேண்டும்.

டானிடம் நான் பத்து நிமிடத்தில் வருமாறு கூறினேன். அவர், 'ஆம், பாபா, பத்தே நிமிடம்' என்றார். 30 நிமிடங்களுக்குக் குறையாமல் கடந்திருக்கும் என்று நினைக்கிறேன்! 'ஏதாவது ஒன்றைச் செய்ய, நீங்கள் எவ்வளவு நேரம் எடுப்பீர்கள்?' என்று நான் இங்கு எவரிடமாவது கேட்டால், நீங்கள் வெறுமனே, "பாபா, ஒரு நிமிடம், ஒரே நிமிடம் பொறுமையாக இருங்கள், நான் அதைச் செய்கிறேன்! ஐந்து நிமிடம், பாபா, நான் இதோ வந்து விடுகிறேன்!" ஆனால், அதை ஐந்தால் பெருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்!

அவர் தொடர்ந்தார்:

அஹமதுநகரிலிருந்து 40 மைல் தொலைவில் அமைந்த டோக்காவில் எனக்கு ஒரு மையம் இருந்தது; அங்கே பல சிறுவர்கள் இருந்தனர். அதைப் பற்றி 'அழுகையும், துடிப்பும்' (SOBS AND THROBS) என்ற புத்தகம் ஒன்று உள்ளது. டோக்காவில், சிறுவர்களுக்கெனத் தனிப் பிரிவும், ஆண், பெண் மண்டலிக்கென, வேறுவேறு பிரிவுகளும் இருந்தன. அது ஒரு பெரிய, ஏறக்குறைய 500 பேர் அடங்கிய மக்கள் குடியிருப்பு. அப்போது நான் பெரிய மர மேஜையில் தங்கியிருந்தேன்; உங்களில் சிலர் மெஹராபாத்தில் இருக்கும் மேஜை வீட்டைப் பார்த்திருப்பீர்கள். மேஜைக்கு அடியில் ஒரு சிறிய அறை உள்ளது, அந்த நேரத்தில், நான் அதில் வாழ்ந்து வந்தேன். ஒன்றாக பல நாட்கள், நான் உபவாசம் கடைப்பிடித்து, சில நேரங்களில் நீர் அல்லது காஃபி மட்டுமே அருந்தி வந்தேன். ஆனால், அந்நாட்களில் நான் ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கவில்லை. மக்கள் என் அருகில் வருவதை அனுமதித்தேன். இந்தியாவில் நாம் சொல்வது போல், என்னைப் பார்க்கவும், சந்திக்கவும், என் ஆசிர்வாதத்தையும் அன்பையும் அடையப்பெறுவதற்கும் அவர்கள் எனது தரிசனத்தை நாடி வருகின்றனர். நான் மேஜையின் கீழ் அமைந்த அறையில் இருந்தாலும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தேன்.

ஒருமுறை, தாடியுடன் ஒரு நபர், மஞ்சள் நிற உடை அணிந்து, மணிகள் மற்றும் கையில் நீண்ட ஜெபமாலையுடன் அங்கு வந்தார். இந்தியாவில் இதுபோன்ற பல துறவிகளை நீங்கள் காணலாம். நாங்கள் அவர்களை மஹாத்மாக்கள், சாதுக்கள் என்று அழைக்கிறோம்: அடையாளம், நீண்ட தாடி, நீள் அங்கி, ஜெபமாலை மற்றும் மணிகளால் செய்யப்பட்ட ஆரம். அவர் என்னிடம் வந்து, 'பாபா, நான் உங்களிடம் சரணடைகிறேன்' என்றார்.

**அவர் என்னை அணுகியதும், ஸாஷ்டாங்கமாக வணங்கி, 'என்னிடம் உள்ள அனைத்தையும், நான் உங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்' என்று கூறினார்.**

**"சரி, நல்லது" என்றதும், அவர் திரும்பிச் சென்றார்.**

**அடுத்த நாள், அவர் மீண்டும் தனது மனைவி மற்றும் ஏழு குழந்தைகளுடன் வந்து, "பாபா, என்னிடம் உள்ள அனைத்தும் இதோ, உங்களிடம் ஒப்படைக்கிறேன்!" என்றார்.**

அவர் கூறியதைக் கேட்டு, அனைவரும் சிரிக்கவே, பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**ஏழை மனிதர் பசியால் வாடினார். அவரால் குடும்பம் நடத்த எதுவும் சம்பாதிக்க முடியவில்லை. இந்தியாவில், ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்களுக்கான அடையாளம், அவர்கள் உடல், மனம், தனம் மற்றும் வாழ்வை அர்ப்பணிப்பதுதான். ஆன்மீக ரீதியில் பரிபூரணமான குருநாதர் ஒருவரை அணுகும்போது, 'உடல், மனம் உடைமைகள் என அனைத்தையும் நான் அர்ப்பணிக்கிறேன்' என்று சொல்வது வழக்கம் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே நான், "சரி, நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று கூறினேன்; அடுத்த நாள், அவர் தனது எல்லா உடைமைகளையும் என்னிடம் கொண்டு வந்தார்.**

**இப்போது, என்னிடமிருந்து பிரசாதத்தை அடையப்பெறாத ஆறு பேர் யார்? இந்தியாவில், மக்கள் பிரசாதத்தை மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக் கொள்கிறார்கள்; இது மனிதனுக்கு கடவுள் வழங்கும் அன்பின் பரிசு என்று தெரிந்து கொள்கிறார்கள்." 'யார் இந்தப் பரிசைப் பிடிக்க முடியும்?'** என்று கேட்டு இனிப்புகளை வீசத் தொடங்கினார்.

பாபா மீண்டும் பிரசாதம் வழங்கினார். கடைசியில் தொலைக்காட்சிக் குழுவினர் வந்தனர். அவர்கள், பாபா தமது அன்பர்களை நோக்கி பிரசாதத்தை வீசியதைப் படம்பிடிக்கத் தொடங்கினர்; நிகழ்ச்சி நிறைவடைந்தபோது, நேரம் மாலை 6.00 மணியைத் தாண்டிவிட்டது. அனைவரும் பாபாவைப் பின்தொடர்ந்து மையத்தின் முக்கிய பகுதிக்குத் திரும்பினர் - பெரிய குட்டைகளைச் சுற்றி வேகமாக அடியெடுத்து வைத்துச் செல்லவே, வழியில் பாபா அவர்களைக் கேலியும், கிண்டலும் செய்தார். ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் நாள் முழுவதும் அவரது பணிகளில் மும்முரமாக இருந்ததால், பாபாவுடன் இருக்கும் வாய்ப்பைத் தவறவிட வேண்டியதாயிற்று; மாலை 6:30 மணியளவில், பாபாவின் காரை ஃப்ரெட் விருந்தினர் மாளிகைக்குக் கொண்டு வரவே, பாபா, அவரிடம் தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். ஃப்ரெட் அளவிலா மகிழ்ச்சியடைந்த நிலையில், பாதையைத் தவறவிட்டு, தற்செயலாக, பாதை முடிவடைந்த முட்டுச் சந்தை சந்திக்க நேர்ந்தது. "பாபா, காருக்கு முன்னால்

இப்போது மரங்கள் வளர்ந்துள்ளன!" என்று கூறி, ஃப்ரெட் திரும்பி அவரை இல்லத்திற்கு அழைத்துச் சென்றபோது, பாபா, மனமார சிரித்தார்.

தொலைக்காட்சிக் குழுவினர் அன்று இரவை மர்டில் பீச் மையத்தில் கழித்து, அடுத்த நாள் அதிகாலை, 1956 ஜூலை 28 அன்று, ஏரியை எதிர்நோக்கி இருக்கும் இடத்தில் பாபாவை ஒளிப்பதிவு செய்தனர். ஐவி, பாபாவின் அருகில் அமர்ந்து, "கடவுளின் அளவற்ற அன்பும் கருணையும் இருந்தபோதிலும், பூமியில் ஏன் துன்பம் நிரந்தரமாக இருக்க வேண்டும்?" என்று அவரிடம் கேட்கவே, ஒளிப்பதிவு தொடர்ந்தது.

பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"எல்லாவற்றிலும் எல்லோரிலும், ஏக இறைவனான பரமாத்மா ஒருவரே நித்திய பேரின்பத்தின் ஆதாரமாக இருக்கிறார். நிரந்தரமான துன்பத்திற்குக் காரணம் அனைவரின் சுயநலமே. சுயநல ஈடுபாடுகள் மூலமாகத் திருப்தி அடையும் வரை, துன்பம் இருந்துகொண்டே இருக்கும்.**

**"கடவுளின் எல்லையற்ற அன்பு மற்றும் கருணையின் காரணமாக மட்டுமே, பூமியில் எதிர்கொள்ளும் துன்பத்தின் படிப்பினைகளின் மூலம், மனிதன், அவனே அளவிறுதியற்ற இறை இன்பத்தின் ஆதாரம் என்பதையும், அனைத்து துன்பங்களும் தனது எல்லையில்லா ஏக இறைவனை வெளிப்படுத்தும் அன்பின் உழைப்பு என்ற உண்மையையும் புரிந்து கொள்ள முடியும்."**

சில தனிப்பட்ட நேர்காணல்களுக்குப் பிறகு, 'விருந்தோம்பல் நிதி' (HOSPITALITY FUND) தொடர்பாக, லகூன் கேபினில் ஒரு குறுகிய கூட்டம் நடைபெற்றது. பாபா, மொத்த தொகையில் எஞ்சி இருந்ததை மெஹர் மையம், மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம் மற்றும் நியூயார்க் 'மண்டே நைட்' குழுவிற்கிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பின்னர், அவர் வின்டர்ஃபெல்ட், ஃபிலிஸ் ஃப்ரெடரிக் ஆகியோரிடம், 'மண்டே நைட்' குழுவின் பங்கின் ஒரு பகுதியை 'தி அவேக்கனர்' (THE AWAKENER) பத்திரிகைக்கு வழங்க விரும்புவதாகக் கூறினார்; அந்த நேரத்தில் 'தி அவேக்கனர்' பத்திரிகை நிதி நெருக்கடியை சந்தித்தாலும், எவரும் பாபாவிடம் இதைக் குறிப்பிடவில்லை.

காலை 8:30 மணியளவில், 'அர்ப்பணிப்பு' சிறப்பு நிகழ்ச்சிகளுக்காக அனைவரும் 'பார்ன்' கொட்டகைக்குச் சென்றனர். தொலைக்காட்சிக் குழுவினரும், மேலும் பலரும் அவரை ஒளிப்பதிவு செய்தபோது, பாபா தனது கைகளை விரித்து ஆசீர்வதித்து, 'பார்ன்' கொட்டகையின் மேற்கு பகுதியில், பசுமை மாறாத சிறிய ஊசி இலை மரம் ஒன்றை நட்டார். ஆதி அதன் மேல் மண்ணை அள்ளிக் கொட்டினார், டான் ஸ்டீவன்ஸ் ஒரு செய்தியை வாசித்தார். சிறுமி ஜூலி கட்ஸ் (JULIE KATZ), பிற குழந்தைகளைப் போலவே பாபாவின் கழுத்தில் அன்றலர்ந்த மலர் மாலையை அணிவித்தார். ஜோஸஃப் ஹார்ப்,

டார்வின் ஷா ஆகியோர், மரத்தின் கீழ் பாபா இளைப்பாறும் தருணங்களைப் புகைப்படம் எடுத்தனர். பீட்டர் திபோடோவும் அவருக்கு மாலை அணிவித்தார்.

விருந்தினர் மாளிகையில் பாபாவின் மதிய உணவுக்குப் பிறகு, கிட்டி, மார்கரெட், எலிஸபெத் ஆகியோர் பாபாவுடன் அமர்ந்தனர்; மதியம் 2:30 மணியளவில், அனைவரும் மையத்திலிருந்து 20 மைல் தொலைவில் அமைந்த புரூக்கிரீன் பூங்கா (BROOKGREEN GARDNS), 300 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட சிற்பக் கலைக்கூடம் மற்றும் வனவிலங்குகள் காப்பகத்திற்குச் சென்றனர். பாபாவும் மண்டலியும் கிட்டியுடன் ஃப்ரெட் ஓட்டிச் சென்ற காரிலும், பிற அனைவரும் இரண்டு பேருந்துகளிலும் சென்றனர். தோட்டத்தை வந்தடைந்ததும், முழுக் குழுவும் பாபாவின் பின்னால் சென்றது, அவர் அழகிய தோட்டங்கள் வழியாக வேகமாக நடந்து சென்றார்; பிரதான அலுவலகத்தைப் பார்வையிட்டு, பின்பு சிற்பக் கலைக்கூடத்தையும், அதைத் தத்ரூபமாகப் பிரதிபலிக்கச் செய்யும் பரந்த குளத்தையும் சுற்றி வந்தார். பின்னர் அவர் புல்வெளிக்கு வெளியே வந்தபோது, அங்கு இரண்டு அமைதியான, கருப்பு உடை அணிந்த காவலர்கள், புதுமையான அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஃபிலிஸ் தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டார்: "ஆம், இதோ அவர் மீண்டும் இங்கே, அவரை நேசிக்காத அதே கூட்டத்தால் பின்தொடரப்படுகிறார்!"

பாபா தோட்டத்தின் ஒதுங்கிய மூலையில் ஒரு சிறிய பழ மரத்தின் கீழ் அமர்ந்தார், அவரது அன்பர்கள் அனைவரும் அவரை சூழ்ந்து புல் வெளியில் அமர்ந்தனர். 86 வயதான ரத் வைட் (RUTH WHITE) என்ற பெண்மணி, அமெரிக்காவில் 'பஹாய்' (BAHAI) இயக்கத்துடன் தொடர்பில் வந்ததைத் தொடர்ந்து, 1945 ஜூலை மாதத்தில், மால்கம் ஸ்க்லோஸ் மூலம் பாபாவைப் பற்றி முதன்முதலில் அறிந்துகொண்டார். அவர் பாபாவுடனான கடிதப் பரிமாற்றத்திற்கு மத்தியில் அவருடைய செயல்களில் மிகவும் ஈடுபாடு கொண்டார். கூட்டத்தில் அவர் தென்படாததைக் குறிப்பிட்டு, பாபா அவரைக் கண்டுகொள்ளுமாறு கிட்டியை அனுப்பிவைத்தார். ரத் வைட் மிகவும் சோர்வாக உணர்ந்ததால் அவருடன் செல்ல முடியாமலாயிற்று.

பாபா தனது விரல்களால் ஒருவித விளையாட்டில் ஈடுபடவே, பீட்டர் திபோடோவையும் (PETER THIBODEAU) அவ்வாறே செய்ய அழைத்தார். பீட்டர், பாபாவின் சாமர்த்தியத்தனமான அசைவுகளைப் பின்பற்ற முயன்றார், ஆனால் முடியவில்லை. பின்னர் அவர் மார்கரெட்டின் நடனக் கலைஞர்களில் ஒருவரை அழைத்தபோது, அவர் முயற்சித்தார்.

அடர்ந்த பசுமையான புல்வெளியில் தம்மைச் சுற்றிலும் சிதறியிருந்த அன்பர்களைப் பார்த்து பாபா கூறினார், "**புத்தர் மரத்தடியில் அமர்ந்திருந்த கடந்த காலத்தை இது எனக்கு நினைவூட்டுகிறது. புத்தர் பல வாரங்கள் உபவாசம் கடைப்பிடித்தபோது, ஒரு வயதான பெண்மணி அவருக்கு**

**உதவினார். ஒரு கிண்ணம் நிரம்ப அரிசி கூழை உண்டு, மரத்தடியில் அமர்ந்த வேளையில், அங்கு புத்தர் அவரது இறுதி இலக்கான இறை உணர்வை எய்தினார்; எனக்கு பாபாஜான் இருந்ததைப் போல், அந்த வயதான பெண்மணி புத்தருக்காகக் காத்திருந்தார்; பாபாஜான் வழங்கிய அதே இறை உணர்வை புத்தருக்கு வழங்கினார்.**"

யாரோ அந்த வயதான பெண்மணியின் பெயரைக் கேட்டபோது, எரச் தனக்குத் தெரியாது, அது எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று கூறினார். பாபா ஒரு கணம் யோசிப்பது போல பாவனை செய்து, "**நெடுங் காலத்திற்கு முன்னதாக நடந்ததால் நினைவுகூர முடியவில்லை**" என்று கேலி செய்தார்.

பாபா தீவிரமான தோரணையில், அன்று மாலை நிகழவிருந்த முக்கியமான சந்திப்பைக் குறித்து கீழ்வரும் அறிவுரைகளை வழங்கினார்: "**இன்றிரவு 8:00 முதல் 8:30 வரை, நீங்கள் அனைவரும் 'பார்ன்' கொட்டகையில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் கைகள், முகங்களைக் கழுவி, காலணிகள் இல்லாமல், நாற்காலிகளில் அல்ல, கொட்டகையின் தரையில் அமருங்கள். நான் வழங்கும் அறிவுரைகளுக்கு செவிமடுத்து அதன்படி செய்யுங்கள்.**"

எரச் பேச்சினிடையே தெரிவித்தார்: "இந்தியாவில், நாங்கள் கூட்டங்களுக்காகத் தரையில் அமரும் முன்பு, கைகளையும் முகங்களையும் மட்டுமல்ல, கால்களையும் கழுவ வேண்டும் என்று பாபா அறிவுறுத்துகிறார்."

பாபா தொடர்ந்தார், "**நான் பூமியில் உங்கள் மத்தியில், உங்கள் நிலைக்கு வரும் வேளையில் மகிழ்ச்சியாக இருந்து, முகமலர்ச்சியுடன் தோற்றமளித்து, உங்களோடு கலந்து, உங்களுடன் நடமாடுகிறேன்; அதே நேரத்தில், ஒவ்வோர் ஆன்மீகத் தளத்தின் உறுப்பினர்களுடனும் நான் இருக்கிறேன், ஆனால் நீங்கள், இங்கு நான் புரியும் பணியை மட்டுமே பார்க்கிறீர்கள். இந்தப் பௌதீகத் தளத்தில் எனது பணி மற்றும் நான் எடுத்துரைக்கும் அனைத்தும் ஒரு வரையறுக்கப்பட்ட உங்கள் பார்வையின் அளவுக்கு மட்டுமே புலப்படும்.**"

பாபா எழும் போது, ஃப்ரெட்டின் உதவிக்காகக் கைகளை நீட்டினார்; ஆனால் அவர் எழுந்ததும், பாபா தனது முழு எடையுடன் ஃபிரெட்டின் மீது விளையாட்டாக வீழ்ந்தார். கைகளைக் குலுக்குவது போல ஜான் பாஸிடம் கையை நீட்டினார், மாறாக அவர் முதுகில் அறைந்தார்.

அடர்ந்த மரங்களின் நிழல்கள், பிரகாசமான சூரியன் அல்லது யாரோ ஒருவரின் பரந்த தொப்பி, ஒளிப்பதிவு கருவியின் இடையே குறிக்கிட்டதால், மர்டில் பீச் மையத்தில் பாபாவின் திரைப்படங்களை எடுப்பது கடினமாக இருந்தது. ஆனால் ஆன்டி மியோ தன்னால் முடிந்தவரை முயற்சி செய்தார். பாபா, புரூக்கிரீன் தோட்டத்திற்குச் செல்ல இருக்கிறார் என்பதை அறிந்ததும்,

இது தனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பாக ஆன்டி உணர்ந்தார். ஓக் மரங்களாலான அழகிய பாதையில் பாபா நடந்து செல்வதையும், பசும் தாவர வகை பாசிகள் கீழே தொங்குவதையும், அவரது வெண்ணிற சத்ரா காற்றில் மெதுவாக அசைவதையும் அவர் கற்பனை செய்து கொண்டார், மேலும் அவர் தனக்குள்ளே நினைத்துக் கொண்டார், “இதுவரை எடுக்கப்பட்ட மெஹர் பாபாவின் திரைப்படங்களில், பிற அனைவரையும் விட நான் ஒளிப்பதிவு செய்தவை மட்டுமே சிறந்ததாக இருக்கும்” என்ற பெருமிதத்தில் இருந்தார்.

அவர் பாபா வருவதற்கு முன்பாக வந்து, நுழைவாயிலில் திரைப்பட கருவியுடன் தயாராக நின்று கொண்டிருந்தார். பாபா அருகில் வந்ததும் கேமராவை உயர்த்தி ஒளிப்பதிவு செய்யத் தொடங்கினார். பாபா நேராக அவரிடம் சென்ற வேளையில், கையை மிக அருகில் நீட்டி, தலையை ஒரு பக்கம் சாய்த்து சிரித்தார். ஆன்டி பின்னர் அன்று மதியம் முழுவதும் பாபாவைப் பின்தொடர்ந்து, அவரால் கற்பனை செய்ய முடியும் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் திரைப்படங்களை எடுத்தார். இருப்பினும், அவர் திரைப்பட சுருளைத் திரும்பப் பெற்றபோது, பாபா வாகனங்கள் நிற்கும் இடத்தை அணுகுவதைக் கண்டார். பாபா அவரது கையை நீட்டித் தலையை சாய்ப்பதை ஆன்டி பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்திலிருந்து சரியாக ஒரு புகைப்படத்தைக் கூட அவரால் பதிவு செய்ய முடியவில்லை. புரூக்கிரீன் தோட்டத்தில் அவரைப் படமாக்கிய மூன்று 7” திரைப்பட சுருள்கள் வீணாகி, வெறுமையாக இருந்தன. ஆன்டி மிகுந்த ஏமாற்றம் அடைந்தார், ஆனால், பாபா தனது அகந்தையை செயல்களின் விளைவுகளோடு ஒன்றிணைத்து பாராமல் இருக்கும் விதத்தில் பாடம் கற்பிக்கிறார் என்பதை அவர் உணர்ந்தார்.

குழு மர்டில் பீச் மையத்திற்குத் திரும்பி வந்து, இரவு உணவுக்குப் பிறகு, பாபா சிலரை லகூன் கேபினுக்கு அழைத்தார்; அங்கு அவர் சார்மியன் டியூஸ் மற்றும் ஜே கொரினெட்டின் திருமண நிச்சயதார்த்தத்தை அறிவித்தார். “**நான் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் மற்றும் எது சிறந்தது என்பதையும் அறிவேன்**” என்று அவர் கூறினார்.

அன்று இரவு ‘பார்ன்’ கொட்டகையில் நடந்த முக்கியமான ‘தியானக் கூட்டத்தை’த் தவிர, ‘மண்டே நைட்’ குழுவிற்கும் ஸூஃபிக்களுக்கும் இடையேயான சில கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு, பாபா லகூன் கேபினில் ஏழு மணிக்கு ஒரு கூட்டத்தை அழைத்தார். பாபா நேரத்திற்கு முன்பே அங்கு இருந்தார், அவருக்கு அருகில் ஒட்டிக்கொண்டிருந்த சிலர், அந்தி வேளையில், வெளியே உயரமான ஊசி மரங்களினூடே ஒளிக் கதிர்கள் மறையும் அவ்வேளையில், அமைதியாக அவருக்கு அருகில் அமரும் வாய்ப்பை அடையப்பெற்றனர். ஃபிலிஸ் ஃபிரடெரிக் இதைத் தெளிவாக நினைவு கூர்ந்தார்: “பாபாவின் முகம், பாதி வெளிச்சத்தில், ஒருவருடைய இதயத்தில் என்றென்றும்

பதிந்திருக்கும் அந்த அற்புதமான, தெய்வீக அழகுடன் பிரகாசித்தது. ஒவ்வொரு கதிரும், ஒவ்வொரு நிழலும், ஒவ்வோர் அசைவும், அவருடைய தெய்வீகத்தை பறைசாற்றி மெருகூட்டுவது போல் இருந்தது."

பாபா அவர்களுக்கு விளக்கினார்: "**இமயமலையில் வருடக்கணக்கில் தியானத்தில் அமர்ந்து, எனது தரிசனத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் ரிஷி முனிவர்களுக்கும் கூட, நீங்கள் என்னுடன் இருக்கும் தருணத்தைப் போல கிடைத்ததில்லை. இங்கே நீங்கள் அனைவரும் அதை அனுபவிக்கிறீர்கள்! எனவே பாபாவைத் தவிர வேறு எதையும் நினைக்காதீர்கள்.**"

உள்ளூர் நகரிலிருந்து அழைக்கப்பட்டவர்கள் இதுகாறும் வராததால், பாபா நேரம் இல்லை என்று முடிவு செய்து, கூட்டத்தை (குழுக்கள் தொடர்பாக) மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ஒத்தி வைத்தார். அவர் கூறினார்: "**இந்தியாவில் பல்வேறு மொழிகள், பழக்கவழக்கங்கள், மதங்கள் மற்றும் வாழும் விதங்களைக் கொண்ட 100க்கும் மேற்பட்ட குழுக்கள் உள்ளன, ஆனால் அனைவரும் எனக்காக அன்பில் ஒன்றிணைகிறார்கள். எனக்காக எப்படி ஒருங்கிணைந்து பணிபுரிவது என்பதை நாளை விளக்குகிறேன்.**"

அப்போது பாபா, "**நான் உங்களுக்கு, சிறப்பு மிக்க, அளப்பரிய அன்பை அள்ளி வழங்க விரும்புவதால், விழிப்புடன் இருங்கள், இன்றிரவு 'தியான-கூட்டத்தில்' உங்கள் முழு இதயத்தையும் ஈடுபடுத்துங்கள்**" என்று கூறினார்.

கூடிய விரைவில் கூட்டத்தைத் தொடங்க பாபா ஆர்வமாக இருந்தார், மேலும் தனது அன்பர்கள் நெருக்கமாகப் பின்தொடர, 'பார்ன்' கொட்டகைக்கு நடந்து சென்றார்; அங்கு, ஒவ்வொருவரும் தனது காலணிகளை அகற்றிவிட்டு, வெளியே குழாயின் கீழ் முகத்தையும் கைகளையும் கழுவினர். பாபா இதற்கிடையில் சிந்தனையில் ஆழ்ந்து, கொட்டகையைச் சுற்றி முன்னும் பின்னுமாக நடந்தார். பின்னர் அங்கிருந்த ஒருவர் கூறினார்: "பாபா மிகவும் அழகாகத் தோற்றமளித்தார்; வெகு தொலைவில், ஏதோ ஒரு பிரம்மாண்டமான ஆன்மீக சக்தி பணிபுரிந்து கொண்டிருப்பதைப் பற்றி ஒருவர் நன்கு உணர்ந்திருந்தார். அந்த அமைதியின் சூழல் 'எல்லா புரிதலுக்கும் அப்பாற்பட்டதாக' இருந்தது."

தியானம் இரவு 7.30 மணிக்குத் தொடங்கியது. மொத்த குழுவும் மௌனமாக இருந்த பாபாவுடன் கொட்டகைக்குள் அமைதியாக அவரை நினைந்து தியானம் செய்து கொண்டிருந்தது. தாமதமாக உள்ளூரிலிருந்து வந்த பலர் தாழ்வாரத்தில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தங்கள் அறைகளுக்குள் கண்களை மூடிக்கொண்டு, முழு கவனத்துடன் தியானத்தில் அமர முடியாதவர்கள், இதுபோன்ற முக்கியமான சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும்போது, முழு கவனத்தையும் அவர் மீது செலுத்தும்படி பாபா கேட்டுக் கொண்டார்.



கடற்கரையில் "முதல் மனிதனை" வடிவமைக்கும் காட்சி
(SCULPTING THE “FIRST MAN” AT THE BEACH)

கூட்டம் நிறைவடைந்ததும், பாபா இருண்ட காடுகளின் வழியாக திரும்பிச் சென்றார், அவர்களின் பாதையில் மின்விளக்குகள் ஒளிர்ந்தன. ஒருமுறை பாபா, மிக உயரமான ஊசியிலை மரத்தின் அருகே நின்று, அதைத் தனது கைகளால் பற்றிக் கொண்டு, சாலையில் அமைதியாகக் காத்திருந்தார். மங்கலான ஒளி வட்டத்தில், பாபாவின் முகம், உள்ளார்ந்த தோற்றத்துடன், துன்பம் நிறைந்ததாகக் காணப்பட்டது, அவர் ஒரு பயங்கரமான ஆற்றலை இழந்திருந்ததைப் போலத் தோன்றியது. பின்னர் அவர் மீண்டும் ஒரு வேக நடையுடன் முன்னோக்கிச் சென்றார். அவரைப் பின்தொடர அனைவரும் கிட்டத்தட்ட ஓட வேண்டியிருந்தது.

மறக்கமுடியாத மாலை, லட் டிம்ஃபில் மற்றும் பலர் ஏரியில் ஒரு படகில் அமர்ந்து நிகழ்த்திய வாணவேடிக்கைக் காட்சிகளுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. முதலில் பாபா புல் மேட்டு விளிம்பில் குழுவுடன் நின்றார்; பின்னர் அவர் லகூன் பாலத்தின் குறுக்கே நடந்து சென்று, விருந்தினர் மாளிகைக்கு வெளியே, கிட்டி, எலிஸபெத் இருவருடன் சிறிது நேரம் உரையாடிய பின்பு, தனது இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1956 ஜூலை 29 ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை உணவுக்குப் பிறகு, பாபா, பைந்நீல நிற சட்டை அணிந்து, தனது அன்பர்களை மண் சாலை வழியாக கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். பாபா முதலில் குழுவுடன் முதலை ஏரிக்கு நடந்தார். குழு, பாதையில் காத்திருக்க, பாபா, எலிஸபெத் மற்றும் மண்டலியை மட்டும் ரீனே ஷா ஏரிக்கு அழைத்துச் சென்று திரும்பி வந்தார். "**முதலைகள் எங்கே?**" என்று பாபா சைகையால் வினவினார். எலிஸபெத் அவை அங்கு வழக்கமாக இருப்பதாகக் கூறினார், ஆனால் ஒன்று கூட கண்களில் தென்படவில்லை.

கடற்கரையைச் சென்றடைந்த பாபா, வெறுங்காலுடன் கடல் நீரில் நடந்து அட்லாண்டிக் பெருங்கடலைப் புனிதப்படுத்தும் விதத்தில், அலைகளுக்குள் ஒரு கல்லை எறிந்தார். அவர் விரல்கள் ஒரு கணம் வேகமாக நகர்ந்தன. பின்னர் அவர் கரையில் அமர்ந்து தனது கால்களை மணலால் மூடத் தொடங்கினார். அவர் ஒரு மணல் முகத்தைக் கட்டி எழுப்பி, அதில் கண்களையும் வாயையும் வரைந்தார். அது என்ன என்று ஒருவர் கேட்டபோது பாபா, "**ஆதி மனிதன்!**" என்று கூறி பின்னர் அதை உடைத்தார்.

மெஹராவிற்கு ஏழு கடற் சிப்பிகளை வழங்க உறுதியளித்ததாக பாபா கூறினார், எனவே குழுவினர் கடற்கரையில் சிதறிக் கிடந்த, சிறந்த சிப்பிகளைத் தேடத் தொடங்கினர். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாக, பாபாவிடம் கொண்டு வந்த வேளையில், அவர் சிலவற்றை ஏற்றுக்கொண்டார், சிலவற்றை நிராகரித்தார். பலர் அவர் கைகளால் தொட்ட சிப்பிகளை பாபாவின் பிரசாதமாக

பாதுகாப்பாக வைத்திருந்தனர். டேனா ஃபீல்டிடம் பாபா கூறினார், "**கடலுக்கு ஒரு கரை உள்ளது, ஆனால் நான் கரையற்ற இறைப்பெருங்கடல்.**"

பாபாவே ஒரு கட்டத்தில் கடற் சிப்பிகளைத் தேடிச் சென்றார். ஃபிலிஸ் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "அதிகாலை சூரிய ஒளியில் பளபளக்கும் கடலின் பரந்த வெளியில், அன்பான தந்தையின் அருகில் குழந்தைகளைப் போல, கவலையின்றி மகிழ்ச்சியாக நாங்கள் மணலில் அவருக்குப் பின்னால் நடந்தோம்."

இறுதியில், ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட், பாபாவிடம் கூறினார், "முழு நிறை கடற் சிப்பிகளை கண்டுகொள்ள முடியாது; அது ஆன்மீகப் பரிபூரணத்தைப் பிரதிபலிப்பது - இந்தக் கடற்சிப்பி எனும் உடலை நாம் கைவிடும்போது மட்டுமே அதைக் கண்டுகொள்ள முடியும்." பின்னர் அவர் ஓர் அழகான இரட்டை கடற் சிப்பி ஒன்றை எடுத்து பாபாவிடம் கொடுத்தார். பாபா அதை இரண்டாக உடைத்து எல்லா, ஃப்ரெட் இருவரிடமும் கொடுத்தார்.

காலை 8:00 மணிக்கு பாபா, மீண்டும் மையத்திற்கு, குழுவுடன் மெதுவாக நடந்து சென்றார். உள்ளூர் நகரிலிருந்து பேருந்தில் வந்தவர்கள் குருநாதருடன் காலை நடைபயணத்தைத் தவறவிட்டதை அறிந்து சோகமும், ஏமாற்றமும் அடைந்தனர். சில நிமிடங்கள் நடந்து சென்று பின்னர், அவர் உயர்ந்த ஊசி இலை மரத்தின் கீழ் ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்த வேளையில், அனைவரும் முந்தைய இரவில் ஒத்திவைக்கப்பட்ட குழுக்களின் கூட்டத்திற்காக அவருக்கு எதிரே அமர்ந்தனர். ஹில்டா டி லாங், பாபாவின் காலை உணவு தட்டில் ஒரு மஞ்சள் வெள்ளை நிற பூங்கொத்தை வைத்திருந்தார், பாபா இப்போது அதை தனது நீல நிற ஜாக்கெட்டில் அணிந்திருந்தார். பாபா அவரது உரையை இவ்வாறு தொடங்கினார்:

**இந்தியாவில் 100 வெவ்வேறு குழுக்கள் இருப்பதாக, நேற்று மாலை, நான், ஜான் பாஸ் மற்றும் பிறரிடம் கூறினேன். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் உள்ளார்; அனைவரும் என் மீதுள்ள அன்பின் நிமித்தம் பணிபுரிகின்றனர். அனைவரும் என்னை நேசிக்கின்றனர். குழுவினர் புரியும் பணிகளுக்கு, குழுத் தலைவர்கள் பொறுப்பு. இந்தியாவில், பல்வேறு குழுக்களில், பல்வேறு சாதிகள், மதங்கள், பொருளாதார சூழலில் பின்னிப் பிணைந்தவர்கள் உள்ளனர். சீக்கியர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள் - ஆனால் அனைவரும் பாபாவை நேசிக்கின்றனர். அனைவரும் எனக்காக உழைக்கவும், இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை பரப்பவும் விரும்புகின்றனர். முஸ்லீம்களை அழைத்து வரும் நோக்கத்தில் முஸ்லீம்கள் தங்கள் சொந்த இடங்களில் பணிபுரிகின்றனர்; பார்சிகளும் கிறிஸ்தவர்களும் அதையே செய்கிறார்கள். இங்கே அமெரிக்காவில் இரண்டு குழுக்களைப் பற்றி, நீண்ட காலமாக நான்**

**கேள்விப்பட்டு வருகிறேன், ஆனால் குழுக்களிடையே சில தவறான புரிதல்கள் இருப்பதாக அறிகிறேன். என்ன பிரச்சினை?**

நியூயார்க் நகரின் 'மண்டே நைட்' குழுவின் தலைவரான ஜான் பாஸ் எழுந்து நின்று, "சில நேரங்களில், பாபா, ஒருவரையொருவர் ஒன்றிணைக்கும் அல்லது ஒவ்வொரு பிற உறுப்பினரைக் கவர்ந்திழுக்கும் போக்கு உள்ளது" என்று கூறினார்.

பாபா, மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தின் தலைவரான ஐவியின் பக்கம் திரும்பி, **"ஐவி, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? எப்படி உணர்கிறீர்கள்?"** என்று கேட்டதற்கு, அவர் தலையை அசைத்த போது, பாபா, **"சரி. நீங்கள் ஒரு நல்ல மோதலுக்குத் தயாரா? எப்படி உணர்கிறீர்கள்?"** என வினவினார்.

சிரிப்பு ஆரவாரத்திற்கு மத்தியில், ஜான் பாஸ் தொடர்ந்தார், "1952இல் பாபாவை சந்தித்தவர்களுக்கு எந்த 'இஸமும்' தேவையில்லை, பாபாவின் சொந்த போதனைகளைப் படித்து, புரிந்துகொள்ள வேண்டும் என்பதை நான் எப்போதும் வலியுறுத்துகிறேன்."

ஐவி பதிலளித்தார், "பாபாவே மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபி அமைப்பிற்காக ஒரு சாசனத்தை வடிவமைத்து உருவாக்கியிருப்பதால், 'இஸம்' தேவையில்லை என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமானது. பாபா தமது 'இஸத்தை' விரும்புகிறார்."

பாபா உடனடியாகத் தலையிட்டு கூறினார்:

**நீங்கள் அனைவரும் ஒன்றை மனதில் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். ஆந்திரா கூட்டத்தில் (1954) நான் அனைவரையும் ஒன்றாக அழைத்தபோது, இந்தியாவில் நான் வலியுறுத்திய ஒரு விஷயத்தை இப்போதும் செய்ய விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை, வெவ்வேறு இடங்களுக்கு மையங்கள் தேவையில்லை, வெவ்வேறு குழுக்கள், வெவ்வேறு தலைவர்கள் அல்லது பெயர்கள் தேவையில்லை. எனது மையம் ஒவ்வோர் அன்பனின் இதயம். பாபாவை நேசிக்கும் இதயம் படைத்த அன்பர் ஒவ்வொருவரும் ஒரு மையம். நான் வலியுறுத்த விரும்பும் இரண்டாவது விஷயம் என்னவெனில், இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைக் குறித்த எனது செய்தியைப் பரப்புவதில் பணியாற்ற விரும்புவோருக்கு, ஒரு மைய அலுவலகம் மற்றும் அந்த மைய அலுவலகத்திலிருந்து செயல்படக்கூடிய சேவகர், குழுக்கள் முற்றிலும் தேவை. ஒரு குழுவிற்கு எப்போதும் ஒரு மையம் இருக்க வேண்டும். நீங்கள் இதுபோன்ற பல மையங்களை வைத்திருக்கலாம் - மர்டில் பீச் அத்தகைய மையங்களில் ஒன்று - அது பல மைல்களுக்கு நீண்டுள்ளது!**

ஆனால் ஒத்துழைப்பு, நல்லிணக்கம் இரண்டும் நிலவ வேண்டும்; குழுத் தலைவர்கள் பிற உறுப்பினர்களை ஒன்றிலிருந்து இதர அமைப்பிற்கு வெல்லவோ, மாற்றவோ முயற்சிக்கக்கூடாது. ஏன்? எதற்காக? அனைவரும் பாபாவுக்காகப் பணிபுரியும்போது. நல்லிணக்கம், ஒத்துழைப்பு என்பது இன்றியமையா தேவை.

ஐவி ஒருமுறை என்னிடம், நான் கட்டளையிடுவதானால், அவர் ஸூஃபி அமைப்பைக் கலைத்துவிட்டு, அத்துடன் எந்த சம்பந்தமும் இல்லாமல் இருக்க முடியும் என்று என்னிடம் கூறியதற்கு, நான் இல்லை என்று சொன்னேன். மாறாக, கூட்டங்கள், அமைப்புகள் மற்றும் அலுவல்களை நடத்துவதற்கு நான் அவருக்கு ஒரு சாசனத்தை வழங்கினேன். நான் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்காலத்தின் மிகச் சிறந்த ஸூஃபி. நான் ஸூஃபிகளைத் தொடருமாறு உத்தரவிட்டுள்ளேன், மேலும் திங்கட்கிழமைகளில் அவரது குழு, கூட்டங்களை நடத்துமாறு ஜான் பாஸுக்கு அறிவுறுத்தியுள்ளேன், மேலும் முடிந்தவரை பல புதிய அன்பர்களை ஒன்றிணைக்க, ஒருவர் தனது சொந்த குழுவை வைத்திருக்க முடியும் என்று டேனா ஃபீல்டிடம் கூறினேன்.

போட்டி, பொறாமை கூடாது. ஒவ்வொருவரும், குறிப்பாக குழுத் தலைவர்கள், பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் - துகள் போல் அடக்கமாக இருங்கள். கடவுளுக்காகப் பணிபுரிய ஒருவர் துகள் போல் ஆக வேண்டும். பதவி, பதவியைக் குறித்த 'நான் ஒரு குழுத் தலைவர்!' என்ற அகந்தை தலைதூக்கக் கூடாது. குறிப்பிட்ட குழுத் தலைவர்களின் கீழ் பணிபுரிபவர்கள் அவர்களை விட்டு வெளியேறக்கூடாது.

சில சூழ்நிலைகளில், ஒருவர் அவரது குழுவை மாற்றலாம், ஏனெனில், அனைவரும் எனது பணியைச் செய்கிறார்கள்; ஆனால் இந்தியாவில் நாம் கூறுவது போல், ஒவ்வொரு சேவகரும் 'மத்தளத்தின் இருபுறமும்' தனது கையை வைத்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் இதர குழுவுடன் இணக்கமாக இருக்கக்கூடாது என்று அர்த்தமல்ல. உண்மையில், எனது பணிக்கு எப்பொழுதும் அன்பான ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

ஐவி என்னை நேசிக்கிறார். அவர் தனது ஸூஃபி குழுவிடம் என்னை நேசிக்கச் சொல்கிறார். ஜான் பாஸும் தனது குழுவிடம் அதையே சொல்கிறார். ஒவ்வொன்றும் என்னை வந்து சேருகிறது; ஒவ்வொன்றும் என்னிடம் சொன்னது போல் உள்ளது. நீங்கள் ஒருவரையொருவர் வம்புப் பேசக்கூடாது; அனைவரும் நண்பர்களாக இருக்க வேண்டும். ஐவி, நீங்கள் ஜானைப் பற்றி அற்புதமான கடிதங்களை எழுதியுள்ளீர்கள்.

ஜான் குறுக்கிட்டு, “குறிப்பாக ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) என்ற புத்தகம் வெளிவந்த நாளிலிருந்து!” அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர், ஏனெனில் ஜான் ஏராளமான புத்தகங்களை விற்பனை செய்தார்.

ஐவி ஆட்சேபனை தெரிவித்தார், “இது, எனது நன்மைக்காக நான் காட்டும் போலி அன்பாக ஒலிக்கச் செய்கிறது; இது இரக்கமற்றது!”

பாபா கூறினார், “**‘இஸம்’ மூலம் மக்கள் பாபாவிடம் வரக்கூடாது என்று சொல்வது தவறு. உங்கள் தலைவருடன் உங்கள் சுய பாதையை நீங்கள் தேர்வு செய்ய வரவேற்கப்படுகிறீர்கள். ஆனால் நீங்கள் முன்னும் பின்னுமாக செல்லக்கூடாது. அனைவரும் ஒருங்கிணைந்த பாபா திட்டத்தில் ஒன்றிணைய வேண்டும்.**”

மெஹர்ஜி பாபாவிடம், “இப்போது வேறு கூட்டத்தில் கலந்துகொள்வதில் என்ன தவறு?” என வினவினார்.

பாபா பதிலளித்தார், “**அவர்கள் போகலாம், ஆனால் அது பொதுவாக சில தவறான புரிதலை உருவாக்குகிறது. உங்கள் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் உங்களுக்கு சொந்தமானது - கைகள், கால்கள், ஆனால் நீங்கள் எவ்வளவுதான் கடினமாக முயற்சி செய்தாலும், உங்கள் சொந்த கைகளால் நீங்களே உங்கள் கழுத்தை நெரிக்க முடியாது. உங்களால் அதைச் செய்ய முடியாது. டான், நீங்கள் விளக்குங்கள்.**”

டான் ஸ்டீவன்ஸ் எழுந்து நின்று, “பாபா கூறுகிறார், நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய சொந்த இரண்டு கைகள் உள்ளன. உங்கள் கைகள் உங்களுடைய கழுத்தை நெரிக்கும் என்று நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? அவர்கள் முயற்சி செய்யலாம், ஆனால் அவர்களால் முடியாது. அவர்களால் மற்றொரு நபரின் கழுத்தை மட்டுமே நெரிக்க முடியும்.”

பாபா தொடர்ந்து கூறினார்:

**ஜான் பாஸ் என் இடது கை, ஐவி எனது வலது கை, நீங்கள் அனைவரும் எனது தொண்டை! அப்படியென்றால் இந்த இரண்டு கைகளும் எப்படி எனது கழுத்தை நெரிக்க முடியும்? இது சாத்தியமா? ஒரு சிவப்பு எறும்பு இருப்பதாக வைத்துக் கொள்வோம்; அதைக் கொல்வதற்காக வலது கை இடது கையை அறையலாம்.**

**எலிஸபெத்தைப் பற்றி என்ன சொல்ல? அவர் எந்தக் குழுவைச் சேர்ந்தவர்? இருப்பினும், எந்தக் குழுத் தலைவர்களையும் அல்லது சில குழுக்களில் பணிபுரிபவர்களையும் விட அவர் என்னை அதிகமாக நேசிக்கலாம். குழுத் தலைவர்களை விட பாபாவின் மீது அதிக பிரியமான அன்பர்கள் இருக்கலாம்; இருப்பினும், இதுபோன்ற எண்ணங்களை மனதில் சுமந்த வண்ணம், தீர்ப்பளிக்கக் கூடாது. ஒருவேளை, எந்தக் குழுவையும் சார்ந்திராத ஒருவர் அனைவரிலும் மிகப் பெரிய அன்பராக இருக்கலாம்!**

**நான் விரும்புவது அன்பு மற்றும் 'ஏக இறைவன்' எனும் உண்மைப்பொருளைப் பற்றி பிறருக்குத் தெரியப்படுத்துவது - அதாவது, மானிடனுக்கான அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றி நான் கூறுவது.**

**எனவே இயற்கையாகவே, உங்களிடம் குழுக்கள் மற்றும் அமைப்புகள் உள்ளன. எல்லாவற்றையும் இணக்கமான முறையில் செய்ய வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும். எவரேனும் இன்று ஸூஃபி குழுவைச் சேர்ந்தவர், ஜான் பாஸின் குழுவில் சேர விரும்பினால், அவர் அவ்வாறு செய்யலாம். ஆனால் அவர் ஜானிடம், அவரது குழு நம்பிக்கையற்றது, பயனற்றது என்று கூறிவிட்டு, மீண்டும் ஸூஃபி குழுவில் சென்று, ஜானின் குழுவைக் கண்டித்தால், என் அன்பின் கருணை ஒதுக்கி வைக்கப்படுகிறது என்று பொருள்படும். தவறான புரிதலையும் குழப்பத்தையும் உருவாக்கும் புறங்கூறுதல் அல்லது விமர்சனம் எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் குழுக்களை மாற்ற விரும்பினால், அதைச் செய்யுங்கள், ஆனால் முன்னும் பின்னுமாகச் செல்ல வேண்டாம்.**

ஸாம் கோஹன் கேட்டார், "ஒருவர் சுயமாக தியானிப்பது, சேவை என்று நினைக்கிறீர்களா? நான் 'மண்டே குழு'வை சந்திக்க விரும்புகிறேன், ஆனால் எல்லா நேரத்திலும் இல்லை."

அதற்கு பாபா பதிலளித்தார், "**நீங்கள் அனைவரும் சில குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏன்? ஏனெனில் நீங்கள் ஒத்துழைப்பை வழங்கி, என்னைப் பற்றி பிறருக்குச் சொல்லலாம் மற்றும் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். நீங்கள் தனியாக இருப்பதை விட அதிகம் கற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைகிறது. நீங்கள் கவனமாகக் கேட்கும்போது, எண்ணங்கள், பிரார்த்தனைகளைப் பரிமாறிக்கொள்ளும் வேளையில், எனது பிரசன்னம் அங்கே இருக்கும்; ஐந்து பேர் ஒன்றிணைந்தால் அங்கே பரமேஷ்வரன் இருக்கிறார், நான் இருக்கிறேன், நீங்கள் என்னைப் பற்றி பேசுகிறீர்கள், என் மீது அன்பு வைத்தால், அங்கே நான் இருக்கிறேன், இதை எல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்கிறீர்களா?**"

பிலி ஈட்டன், 'பாபா கூட்டங்கள்' எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்ற கேள்வியை எழுப்பினார், அதற்கு பாபா, "**எனது அறிவுறுத்தல்களுக்கு கட்டுண்டவர்களாக ஏன் இருக்க வேண்டும்? சுதந்திரமாக இருங்கள்!**" என்றார்.

குழுக்கள் கூட்டாக ஒரு முறை மாலையில் சந்திக்க வேண்டும் என்று கிட்டி பரிந்துரைத்தார். அவர்கள் பாபாவின் பிறந்தநாளில் செய்ததாக ஐவி கூறினார், ஆனால் பிற அன்பர்கள் அது போதாது என்று கூறினர்.

பாபா தொடர்ந்தார்:

**இந்தியாவில், கூட்டங்களில், கலந்துகொள்பவர்களுக்கு அனைத்து விபரங்களும் வழங்கப்படும். இந்த சந்திப்பு குறித்து நான் எதுவும் கூற விரும்பவில்லை. இதற்கு முன்னர் இது போல் எதுவும் நடந்ததில்லை. இது வரை நீங்கள் செய்தது போல தொடர்ந்து செய்யுங்கள். எல்லாம் சரியாகிவிடும். நீங்கள் அனைவரும் இன்று காலை நான் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க, தொடர்ந்து அடுத்த சந்திப்பு வரை செய்து வந்தால், அனைத்தும் உங்களுக்கு தெளிவாகிவிடும். அதுவரை பணியைத் தொடருங்கள்.**

**ஜான் பாஸின் அறிவுக்கு ஏதேனும் நல்ல செய்தி வந்தால், பிறருடன் பகிர்ந்து கொள்வது அவருடைய கடமை; இதர குழுத் தலைவர்கள் இதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்; அதேவேளையில் நேர்மாறாகவும் நிகழ வேண்டும். அப்போதுதான் அனைவரும் என்னை நேசிக்க முடியும். நான் தலையையும்** (அறிவு) **இதயத்தையும்** (அன்பு) **சமநிலையில் உருவாக்க விரும்புகிறேன்.**

பாபா சிறிது நேரம் நிறுத்திவிட்டு, பென் ஹேய்மனை நோக்கி, "**பென், உங்கள் மனதில் என்ன இருக்கிறது?**" என்று கேட்டார்.

டாக்டர் ஹேய்மன் எழுந்து நின்று பேசினார்: "பாபா, நான் ஒரு சிறந்த பேச்சாளராக இருந்தாலும், உங்களுடன் இருப்பதில் எங்களின் அரும்பெரும் பாக்கியத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் கிடைக்குமா என்பது எனக்கு சந்தேகம்.

"எங்கள் இதயங்கள் திறந்த புத்தகங்கள். எலிஸபெத் பேட்டர்ஸன், ஐவி டியூஸ் மற்றும் மரியன் ஃப்ளோர்ஷெய்ம் ஆகியோர், உங்களின் இந்த வருகையை மகிழ்ச்சிகரமான சூழலில், முடிந்தவரை வசதியாக மாற்றுவதற்கு செய்த மகத்தான பணியை நீங்கள் அறிவீர்கள். திரைக்குப் பின்னால் நிகழும் பரந்த, விரிவான பணியின் மறைக்கப்படாத பார்வையை நான் பெற்றிருக்கிறேன். எங்களின் நன்றி கலந்த வார்த்தைகள் மூலம் பாராட்டுகளை தெரிவிப்பதே நாம் குறைந்தபட்சம் செய்யக்கூடிய ஒன்றாக எனக்குத் தோன்றுகிறது."

அப்போது, மொத்த குழுவினரும் எழுந்து நின்று கைகளைத் தட்டினர். பாபா மேலும் கூறினார்: "**எலிஸபெத், கிட்டி, ஐவி, மரியன், நோரினா - ஐவரும் என் ஐந்து விரல்கள்.**"

ஃபுளோரிடாவைச் சேர்ந்த இளம்பெண் ஏஞ்சலா மில்லர் (ANGELA MILLER), தனது புல்லாங்குழலில் பாபா விரும்பிய, சார்லஸ் கூனோவின் 'ஆவே மெரியா' (CHARLES GOUNOD'S 'AVE MARIA') மற்றும் சிலவற்றை இசைத்தார். பாபாவின் கண்கள் கனவு உலகில், தொலைதூரத்தை நோக்குவது போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தன.

அதைத் தொடர்ந்து, ஹாரி கென்மோரை வருமாறு பாபா சைகையால் அழைத்தார்; மேலும், பார்வையற்ற, வர்ம கலை மருத்துவர் தனது முகத்தை உணரலாம் என வாக்குறுதியளித்ததற்கு இணங்க, பாபா, ஹாரியின் கைகளைத் தனது கைகளில் எடுத்து, உள்ளங்கைகளை அவரது கன்னங்களுக்கு மேல் பலமாக மேலிருந்து கீழே வருடினார். ஹாரி பின்பு தனது விரல்களை விடுவித்த வேளையில் பாபாவின் வெளியளவிலான அம்சங்கள் அனைத்தையும் தெரிந்துகொள்ள முடிந்தது.

பாபா தொடர்ந்து ஹெரோல்ட் ரட் 'பாபாவைப் போல தோற்றமளிக்கும்' சிறிய இத்தாலிய ஐஸ்கிரீம் மனிதரைப் பற்றி அவர் இயற்றிய ஒரு கவிதையின் ஒலிப்பதிவை இசைக்க அழைத்தார். ஹெரோல்ட் தனது இசைத்தட்டை வாசித்தபோது அனைவரும் திரை வராண்டாவில் ஒன்றாக அமர்ந்தனர். ஏறக்குறைய முழு நேரமும் பாபாவின் கண்கள் ஹெரோல்டின் மீதே இருந்தன. அவர் பாராயணம் முழுவதையும் மனமார ரசித்ததாகத் தோன்றியது; இறுதியில் ஹெரோல்டை பாபா அன்புடன் தழுவினார்.

வெளியே, ஸரூஹி பஹ்ஜெஜியன் (ZAROUHI BAHJEJIAN, நியூயார்க்) பாபாவிற்காக ஒரு கவிதையை வாசித்தார். வில் பிலொட் (WILL BELOTE, விர்ஜீனியா) அதைத் தொடர்ந்து, பாபாவிடம் 'சிறிய நம்பிக்கையாளர் மற்றும் சிறிய அவநம்பிக்கையாளர்' (THE LITTLE OPTIMIST AND THE LITTLE PESSIMIST) பற்றிய கதையை எடுத்துரைத்த வேளையில் பாபாவும் சேர்ந்து சிரித்தார்.

அன்றைய தினம் மையத்தை விட்டு புறப்பட இருந்தவர்களுக்கு பிரியாவிடை அளித்து தழுவினார். எலிஸபெத் மதிய உணவுக்காக பாபாவை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்.

அன்றைய முழு தினமும் பாபா அவரது அன்பர்களை சந்திக்கவில்லை. அவர்கள் அடுத்த நாள் மையத்தை விட்டு வெளியேற இருந்ததால், அவர் அனைவரையும் தயாராக இருக்குமாறு கூறினார். மாலை 4:00 மணி அளவில் ஆதி, பாபாவை சமையலறைக்கு அழைத்துச் சென்று, பீட்டர் திபோடோவை அழைத்து, அவருடன் பாபா தனது இல்லத்தில் பிங்-பாங் விளையாட விரும்புவதாகக் கூறினார். பாபா தனது வீட்டிற்கு குழுவை அழைத்துச் சென்ற அன்று, பீட்டர் பிங்-பாங் மேஜையைப் பார்த்து, பாபாவிடம் விளையாட முடியுமா என்று கேட்டார். பாபா அப்போது தனக்கு நேரமில்லை என்று பதிலளித்தார், ஆனால் இப்போது அவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஒவ்வோர் ஆட்டத்திலும் பாபா வெற்றி பெற்றார். விளையாடி முடித்ததும், பாபாவும் அந்த சிறுவனும் முன் மண்டபத்தில் அமர்ந்து பலவிதமான விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர். 'பாபா, மறுபடியும் எப்போது மர்டில் பீச் மையத்திற்கு திரும்பி வருவார்?' என்று பீட்டர் கேட்டதற்கு,

பாபா, “கவலைப்படாதீர்கள்; இன்னும் இரண்டு வருடங்களில்” என்று சைகையால் தெரிவித்தார். பாபா, பீட்டருக்கு ஒரு பெட்டி நிறைய இனிப்பை வழங்கினார்.

ஆனால், பீட்டர், பாபாவை மீண்டும் பார்க்கவே இல்லை.

மர்டில் பீச் மையத்திலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கின, 1956 ஜூலை 30 திங்கட்கிழமை காலை, பாபா அவருடன் பயணித்த குழுவில் அனைவரையும் சந்திக்க வந்தார். குழுவில் மேலும் ஒரு சிலர் - எனிட் கோர்ஃப், ஆன் கின்ஸ்பர்க் (ANNE GINSBERG) மற்றும் கிறிஸ்டின் வைஸ் (CHRISTINE WISE) - அவர்களுடன் கலிஃபோர்னியாவிற்கு பயணிக்க இருந்தனர். பாபா, ஹெரோல்ட் ரட்டிடம் தமது புதிய குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனைவியுடன் வீடு திரும்புமாறு அறிவுறுத்தினார்.

கேரி பென் ஷம்மாய், பாபாவுடன் செல்ல ஆசைப்பட்டாலும், அவர் இஸ்ரேலுக்குத் திரும்பிச் சென்று அங்கேயே தனது பணியைத் தொடருமாறு அறிவுறுத்தினார். கேரி இவ்வாறு நினைவு கூர்ந்தார்: “நீண்ட நெடிய தேடலுக்குப் பிறகு, பௌதீக உடலில் இருக்கும் எனது குருநாதரைக் கண்டுபிடித்த இவ்வேளையில், நான் எப்படி அவரை இவ்வளவு சீக்கிரம் விட்டுவிட முடியும்?”

பாபா அவருடைய நெற்றியில் முத்தமிட்டு, “**நீங்கள் இந்த முறை நியூயார்க் மற்றும் மர்டில் பீச்சுக்கு வந்திருந்தது போதுமானது**” என்று ஆறுதல் கூறினார்.

பாபாவுடன் வாஷிங்டன் டி.சி.க்கு செல்லாதவர்களை, கடைசியாக அவர் தழுவிக்கொண்டார். பாபா தனது அன்பான நூர்ஜஹான் (NURJEHAN) - நோரினாவிற்கும் இறுதி தரிசனம் வழங்கினார். குருநாதர் தனது சீடரைக் கடைசியாக அரவணைத்துக் கொள்வதற்கு முன்னர், அவர்கள் ஒருவரையொருவர் அமைதியாகப் பார்த்துக் கொண்டனர். பாபா தனது சட்டைப் பையிலிருந்து மெல்லிய புல்வெளி போன்ற கைக்குட்டை ஒன்றை எடுத்து, மடித்து தனது இதயத்தில் அழுத்தி, “**தினமும் இரவு இதை உங்கள் தலையணைக்குக் கீழே வைத்துக்கொள்ளுங்கள். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்**” என்று கூறி நோரினாவின் சட்டைப் பாக்கெட்டில் அதை வைத்தார்.

காலை 10:00 மணியளவில் பாபா மர்டில் பீச் மையத்தை விட்டு வெளியேறினார். அவர் கடைசியாக நோரினாவின் முகத்தைப் பார்த்து, திரை வாசலில் நின்று விடைபெற்றுக் கொண்டார். நோரினா, பாபாவைக் காண்பது இதுவே கடைசி முறையாக இருந்தது.

பாபாவும் மண்டலியும் சென்ற கார் வடக்குக் கரோலினாவின் வில்மிங்டன் விமான நிலையத்திற்கு முன்னால் நின்றது, அவரைத் தொடர்ந்து அனைவரும் பேருந்துகளில் வந்தனர். விமான நிலையத்தில், பாபா ஒரு மர

இருக்கையில் அமர்ந்து, கிட்டி வழங்கிய ஒரு சிறிய கிண்ணம் உணவை உண்டார். நியூயார்க் நகரத்திற்குப் புறப்பட இருந்தவர்கள் அவரிடம் விடைபெற வந்தனர்; சிலர் எதிர்வரும் பிரிவை எண்ணி கண்கலங்கினர். எவரும் கேள்வி கேட்கக் கூடாது; பாபா எழுந்து தன் அன்பர்களிடையே நடந்து, சிலரிடம் கேலி செய்தும், சிலரை இதமாகத் தட்டிக் கொடுத்தும் சென்றார். அவர் கேரி பென் ஷம்மாயை மீண்டும் தழுவினார். ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட், பாபாவை மகிழ்விப்பதற்காக ஒரு கோடிட்ட ஸ்காட்டிஷ் கம்பளி தொப்பியையும், பிலி ஈட்டனின் இறகு தொப்பியையும் அணிந்தார். பாபா வந்து அவருக்கும் பென் ஹேய்மனுக்கும் அருகில் நின்று, கேமரா வைத்திருந்தவர்களிடம் புகைப்படம் எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

குழு வில்மிங்டன் விமான நிலையத்திலிருந்து மதியம் 1:10 மணிக்கு 'நேஷனல் 320' (NATIONAL FLIGHT 320) விமானத்தில் பறந்தது. பாபா கலிஃபோர்னியா செல்லும் வழியில் வாஷிங்டன், டி.சி.யில் அன்று பகல் வேளையில் தங்க இருந்தார். விமானத்தில் இருந்தபோது, எரச், பாபாவின் தலைமுடியை வாரி, பின்னலிட்டார். அதன் பிறகு, பாபா அவரிடம், சீப்பின் இடையே சிக்கிக்கொண்ட மயிரிழைகளை எடுத்து அருகில் அமர்ந்திருந்த ரத் வைட்டிடம் கொடுக்குமாறு கூறினார்.

அதன் பின்னர், ஒரு வெள்ளை தலையணையில் சாய்ந்து, பாபா கண்களை மூடினார். அப்போதுதான் கிறிஸ்துவை நினைவூட்டும் துன்பத்தின் சுவடுகளை ஒருவர் காண முடிந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா புன்னகைத்துக் கொண்டே, தனது அன்பர்களிடம் வினவினார், **"நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?"** இரண்டரை மணி நேர விமானப் பயணத்தின் போது, பலமுறை பாபா தலைக்கு மேல் ஒரு போர்வையை வைத்து, சில கணங்கள் தனது உள் பணியில் ஆழ்ந்தார். விமானம் 'பட்டோமேக்' நதி (POTOMAC RIVER) மற்றும் 'வெர்னன்' மலை (MOUNT VERNON) மீது வட்டமிட்டு 50 நிமிடங்களுக்கு முன்னதாக, மாலை 3:45 மணிக்கு தரை இறங்கியது. வடக்குக் கரோலினாவின் நியூ பெர்ன் (NEW BERN), மற்றும் விர்ஜீனியாவின் ரிச்மண்ட் (RICHMOND) ஆகிய நகரங்களில் அஞ்சலுக்காக விமானம் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும், ஆனால் 'இரு நகரங்களிலும் விமானம் தரை இறங்காது' என்று ஒலிபெருக்கி அறிவித்தது - கேள்விப்படாத ஒன்று.

அமெரிக்காவின் அரசியல் தலைநகரான வாஷிங்டனில் மெஹர் பாபாவின் வருகையை தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர்கள் மற்றும் நிருபர்கள் அடங்கிய குழுவினர் செய்தியாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் பாபா தனது சொந்த காரணங்களுக்காக, அவர்களை சாதுரியமாகத் தவிர்த்துவிட்டார். வாடகைக்கு எடுக்கப்பட்ட விலை உயர்ந்த சீருந்து வாகனமும் இதுவரை வரவில்லை. பெர்னார்ட் கர்வாலோ, போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் இருக்க,

காவல்துறை மோட்டார் சைக்கிள் மெய்காவலர்களையும் ஏற்பாடு செய்திருந்தார். மர்டில் பீச் மையத்தில் இருந்த வேளையில், இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் பாபா கேள்விப்பட்டபோது, அவர் ஐவியிடம் சுட்டிக் காட்டினார், **"பத்திரிகையாளர்களின் பரபரப்பான நேரடி பேட்டிகளும், சொல்வதைத் திரித்துக் கூறும் இந்த செய்தியாளர் சந்திப்புகளையும் நான் விரும்பவில்லை - விளம்பரம், தொலைக்காட்சி, அதுபோன்ற எதுவும் வேண்டாம்!"**

**"இயேசு வாஷிங்டன் வழியாக, காவல்துறை துணையுடன் சென்றிருப்பார் என்று நினைக்கிறீர்களா?"** என்று கேட்டு முடித்தார்.

பாபா, மண்டலி, எலிஸபெத், ரத் வைட், மார்கரெட் க்ராஸ்கே ஆகியோர் ஐவி டியூஸின் இல்லத்தில் இருந்தபோது, பிற குழுவினர் வாஷிங்டன் நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றனர் - ஆனால் திரைப்படத்திற்குச் செல்ல அனுமதி இல்லை. அவர்களுக்காக ஒரு சிறப்புப் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, பின்பு பாபா, டேனா ஃபீல்டிடம், **"நீங்கள் நகரில் சவாரி செய்யும் போது, நான்** (உங்கள் மூலமாக) **பணிபுரிந்தேன்!"** என்று கூறினார்.

3201, உட்லேண்ட் டிரைவில் (WOODLAND DRIVE) அமைந்த ஐவியின் பங்களாவின் புல்வெளியில், ஆன்டி & பெக்கி மியோ (அனைத்தும் தயாராக இருப்பதை கவனிக்க ஒரு நாள் முன்னதாக மர்டில் பீச் மையத்தை விட்டு வெளியேறினர்) மற்றும் பிற வாஷிங்டன் ஸூஃபிகள் பாபாவை அன்புடன் வரவேற்றனர். பாபா, சமையலறை உட்பட வீட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்றார், அங்கு பாபா, அவர்களுக்காக மீன் விருந்து தயார் செய்து கொண்டிருந்த ஊழியர்களை வரவேற்றார். சார்மியன் தனது திருமண ஆடையை அவரிடம் காட்டியபோது, பாபா, அதைத் தொட்டு ஆசீர்வதித்தார். டோரோதியா ஃபுட் தனது கடற் சிப்பிகளின் தொகுப்பை அவர் முன்னால் பரப்பியபோது, அதிலிருந்து பாபா சிலவற்றை இந்தியாவிற்கு எடுத்துச் செல்லத் தேர்ந்தெடுத்தார்.

பாபா ஓய்வெடுக்க ஒர் அறைக்குச் சென்றார், இரவு உணவிற்குப் பிறகு, சுமார் பதினெட்டு அன்பர்களுடன் தனிப்பட்ட நேர்காணல்களை நிகழ்த்தினார். அவரை தரிசனம் செய்ய இந்திய தூதரகத்தின் கல்வி உதவியாளர் உட்பட கிட்டத்தட்ட 200 பேர் வந்தனர். அமெரிக்காவில் கிர்பால் ஸிங்கின் பிரதிநிதியான திரிலோச்சன் ஸிங் கன்னாவின் (TRILOCHAN SINGH KHANNA) வாஷிங்டன் சீடர்கள் பாபாவை தனித்தனியாக சந்தித்து அவரிடமிருந்து ஒரு செய்தியை அடையப் பெற்றனர்.

இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்த, மெஹர் பாபாவின் ஆரம்பகால தொடர்பில் இருந்த மோகன் ஷஹானே (MOHAN SHAHANE) என்பவர், சிறுவனாக 1920 ஆண்டுகளில் மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தார்; அவர் பாபாவுக்காக ஒரு மராட்டி ஆரத்தியை இசையமைத்தார். மோகன் ஷஹானே தனது மேல்

படிப்புக்காக அயல்நாடு புறப்பட்டபோது, பாபா, பாதிரியின் பக்கம் திரும்பி, "**அவர் 700 ஆண்டுகளுக்கு என்னைப் பார்க்கமாட்டார்**!" என்று கூறினார். பாபா வாஷிங்டன் வந்ததாக ஷஹானேவிற்குத் தெரிவிக்கப்பட்டாலும், அவர் பாபாவைப் பார்க்க வரவில்லை.

ஹெரோல்ட் சேஸ் டேவிஸ் (HAROLD CHASE DAVIS) என்ற புகழ்பெற்ற வாஷிங்டன் புகைப்படக் கலைஞரை ஐவி வரவழைத்த போது, அவர் பாபாவின் பல உருவப்படங்களையும், நெருப்புக்கூடத்தின் முன்னால் சில புகைப்படங்களையும், மண்டலியுடன் பாபாவின் ஒரு படத்தையும் எடுத்தார்.

'நியூஸ்' (NEWS), 'ஈவினிங் ஸ்டார்' (EVENING STAR), 'வாஷிங்டன் போஸ்ட்' (WASHINGTON POST) ஆகியவற்றின் நிருபர்களுக்கும் பாபா பேட்டி அளித்தார். ஸ்டார் பத்திரிகையின் நிருபர், சார்லஸ் பஃபென்பார்கர் (CHARLES PUFFENBARGER), அவரது வருகைக்கான காரணம் என்ன என்று கேட்டதற்கு பாபா, சிரித்துக்கொண்டே சைகையால் தெரிவித்தார்: "**கடவுள் ஒருவரே உண்மையானவர் என்று நான் திரும்பத் திரும்பக் கூறி வருகிறேன். கடவுள் எல்லோரிடமும் இருக்கிறார். எல்லோரும் கடவுளை நேசிக்க வேண்டும். நீங்கள் அவரை எல்லோரிடமும் பார்க்கும் அளவுக்கு, கடவுள் மீது உங்கள் அன்பு அளப்பரியதாக இருக்க வேண்டும்**."

அவரது மௌனத்தைப் பற்றி பாபா இவ்வாறு கூறினார்: "**கடவுள், தமது 'எல்லையில்லா மௌனத்தை' அனுபவிப்பவர்களைத் தவிர, கவனிக்கப்படாமல், கேட்கப்படாமல் எப்பொழுதும் அமைதியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எனது மௌனம் பேச முடியவில்லை என்றால், நாவால் பேசுவதால் என்ன கிடைத்துவிடும்**?"

'நியூஸ்' பத்திரிகையின் நிருபரான ஜார்ஜ் கிளிஃபோர்டிடம் (GEORGE CLIFFORD), பாபா கூறினார்: "**சுயநலமே போர்களுக்கு முதன்மையான காரணம். உலகில் அமைதி நிலவ அது தன்னலமற்ற தன்மையால் மாற்றப்பட வேண்டும்**."



மெஹர்ஜி, எரச், பாபா, ஆதி சீனியர், நீலு, வாஷிங்டன் டி. சி., **30 ஜூலை 1956**
(MEHERJI, ERUCH, BABA, ADI SENIOR, NILU, WASHIGTON D.C., 30 JULY 1956)




**லாஸ் ஏஞ்சலஸ் விமான நிலையம், 1956,**
**கிளாடிஸ் கா, மாகரீட் போலி, ரத் வைட் & ஹில்டா ஃபக்ஸ்**
(LOS ANGELES AIRPORT, 1956, GLADYS CARR, MARGUERITE POLEY,RUTH WHITE, HILDA FUCHS)



**நேர்காணல் வேளை**
**ஹாலிவுட் ரோஸ்வல்ட்**
**ஹோட்டல், 31 ஜூலை 1956**
(DURING AN INTERVIEW AT THE
HOLLYWOOD ROSEWELT HOTEL,
31 JYLY 1956)

# லாஸ் ஏஞ்சலஸ், ஓஹாய் & ஸான் ஃபிரான்சிஸ்கோ

(**Los Angeles, Ojai & San Francisco**)

மெஹர் பாபாவும் மண்டலியும் இரவு சுமார் **9:30** மணியளவில், வாஷிங்டன் விமான நிலையத்திற்குத் திரும்பினர், அங்கு அவருடன் பயணித்த குழுவின் எஞ்சிய அன்பர்களை சந்தித்தார். விறுவிறுப்பான நாளுக்குப் பின்னர் அவர் சோர்வாகக் காணப்பட்டார். **60** பேர் அடங்கிய குழு 'அமெரிக்க விமானம் **655**'இல் (AMERICAN FLIGHT 655), அன்று இரவு **10:20** மணிக்கு கலிஃபோர்னியாவிற்குப் (CALIFORNIA) புறப்பட்டுச் சென்றது. பாபா விமானத்தின் வால் பகுதியில் அமர்ந்திருந்தார். டிசி-**6** (D.C-6) விமானம் டல்லாஸ் (DALLAS), டெக்ஸஸில் (TEXAS) தரையிறங்கிய போது, பாபா உட்பட பலர், அரை மணி நேர இடைவேளைக்காக விமானத்திலிருந்து இறங்கினர். மீண்டும் விமானத்தில் ஏறுவதற்கு முன்னர், அவர் விமான ஓடுபாதையில் பல முறை நடந்தார். பிற அனைவரும் விமானத்தில் தூங்கிக் கொண்டிருந்தாலும், பயணம் முழுவதும் எரச், நீலு, மெஹர்ஜி, ஆதி ஆகியோரைத் தூங்க விடாமல் பாபா தடை செய்தார்.

எரச், பாபாவின் அருகிலும், டார்வின் ஷா அவர்களுக்குப் பின்னாலும் அமர்ந்திருந்தனர். டார்வினும் பயண வேளையில் தூங்காமல் விழித்திருந்தார். ஆதிக்கு விழித்திருப்பதில் சிரமம் ஏற்பட்டது; பாபா அதைக் கிண்டல் செய்தார். இரவு முழுவதும் பாபாவின் இருக்கைக்கு மேலே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. **"நான்** (பயணத்தின் போது) **நிறைய பணிபுரிந்து கொண்டிருந்தேன்"** என்று பாபா பின்பு தெரிவித்தார்,

பாபாவின் 'பணி' என்பது மெஹர்ஜியைப் பொறுத்தவரை, அவமானத்தில் பல பாடங்களை உள்ளடக்கியது! எடுத்துக்காட்டாக, விமானம் அதிகாலை **1:00** மணிக்கு டல்லாஸில் தரையிறங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவ்வாறு அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு, மெஹர்ஜியிடம் பாபா, '**விமானம் எப்போது தரையிறங்கும்**' என்று பணிப்பெண்ணிடம் கேட்குமாறு அறிவுறுத்தினார். பத்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவரிடம் அதையே மீண்டும் கேட்கக் கூறினார். இப்படி இது பல முறை தொடர்ந்தது; "பாபா, நாங்கள் பைத்தியங்களா அல்லது காட்டுமிராண்டிகளா என அந்தப் பணிப்பெண் ஆச்சரியப்படுவார்!" என்று மெஹர்ஜி கூறினார்; இருப்பினும், பாபா தனக்கே உரிய காரணங்களுக்காக, அவரிடம் மீண்டும் மீண்டும் கேட்கக் கூறினார், அந்தப் பணிப்பெண் எப்பொழுதும் புன்னகைத்து, முகம் கோணாமல், கண்ணியமான பதிலை வழங்கினார்.

ஒருமுறை வேறொரு விமானப் பயணத்தின் போது, இரவு உணவுக்குப் பின்னர் அனைவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். பணிப்பெண்களும் சோர்வடைந்து, விமானத்தின் பின்பகுதியில் தூங்கிக் கொண்டிருக்க, பாபா, மெஹர்ஜியிடம், "**எனக்கு காலை உணவு எப்போது வழங்கப்படும் என்று நீங்கள் பணிப்பெண்ணை அணுகி கேளுங்கள்**" என அறிவுறுத்தினார்.

"ஆனால், பணிப்பெண்கள் ஓய்வெடுக்கிறார்கள் பாபா," என்று மெஹர்ஜி கூறினார்.

"**அவரை எழுப்பி அவரிடம் கேளுங்கள்**" என்றதும், மெஹர்ஜி கீழ்ப்படிய வேண்டியிருந்தது. புன்முறுவல் செய்து கொண்டே அந்தப் பணிப்பெண் காலையில் உணவு வழங்கப்படும் என்று கூறினார். அவர் திரும்பி வந்து பாபாவிடம் கூறியபோது, பாபா, "**எனக்குப் பசியாக உள்ளது**, **இப்போது உண்ண ஏதாவது எடுத்து வாருங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். மெஹர்ஜி திரும்பிச் சென்று அந்தப் பணிப்பெண்ணை மீண்டும் எழுப்பி கேட்டபோது, அவர் தானிய பொட்டலம் மற்றும் கா∴பியை வழங்கினார். பாபா அதை சிறிதளவும் உண்ணாமல், ஓரிரு தானியங்களை விரல்களுக்கு இடையே நசுக்கிக் கொண்டிருந்தார். மேலும் தட்டை அப்படியே திருப்பித் தர வேண்டிய நிலையில் மெஹர்ஜி அவமானத்திற்கு ஆளானார்.

இதர நேரங்களில், நள்ளிரவில், பாபா மண்டலியைப் பணிப்பெண்ணிடம் அனுப்பி, '**அவர்களை எப்போது தூக்கத்திலிருந்து எழுப்பப் போகிறார்**, **எப்போது விமானம் லாஸ் ஏஞ்சலஸைச் சென்றடையப் போகிறது**' என்று கேட்குமாறு அறிவுறுத்தினார். "ஆனால், பாபா, அவர் தூங்குகிறார்" என்று கூறினாலும் "**அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்பி கேளுங்கள்**!" என அவர்கள் உத்தரவிடப்பட்டனர்.

உதாரணமாக, "மிஸ், மிஸ், நாம் எப்போது லாஸ் ஏஞ்சலஸ் செல்வோம் என்பதை எங்கள் தலைவர் தெரிந்துகொள்ள விரும்புகிறார்." ஆச்சரியப்படும் விதத்தில், பணிப்பெண்கள் அதைக் குறித்து ஒருபோதும் முகம் சுளிக்கவில்லை என்பதை மண்டலி கண்டுகொண்டனர். பாபாவும் இப்படி நடந்துகொண்டதற்கு அவருக்கே உரித்தான காரணங்களைக் கொண்டிருந்தார். ஒருவரை எழுப்புவதன் மூலம், அந்த நபருக்கு அவர் தனது தொடர்பின் ஆசீர்வாதத்தை வழங்குகிறார்.

பாபாவும் குழுவினரும் 1956 ஜூலை 31 செவ்வாய் அன்று காலை 5:50 மணிக்கு, லாஸ் ஏஞ்சலஸ் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். மழை தூறலிட்டுக் கொண்டிருந்தது; வானம் மேகங்களால் மூடி இருந்தது.

லாஸ் ஏஞ்சலஸ் விருந்தோம்பல் குழுவின் மூன்று பெண்மணிகள் பாபாவை வரவேற்றனர், அவர்களில் எவரும் - ஹில்டா ∴பக்ஸ் (HILDA FUCHS), கிளாடிஸ் கா (GLADYS CARR) மற்றும் மாகரீட் போலி (MARGUERITE POLEY) - அவரை இதற்கு முன் சந்தித்ததில்லை: அவர்கள் பாபாவின் கழுத்தில் சிவப்பு மற்றும்

வெள்ளை நிற நீண்ட மலர் மாலையை அணிவித்தனர். ஒன்பது வருடங்களாக பாபாவை சந்திப்பதற்காக மாகரீட் போலி காத்திருந்தார். வெண் குதிரையில் பாபாவின் பல ஓவியங்களை வரைந்திருந்த மாகரீட், அதில் ஒன்றை 1948ஆம் ஆண்டு மெஹராஸாத்திற்கு அனுப்பிவைத்தார். பாபா அவரை ஆரத் தழுவினார், பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "அவருக்கு ஓர் உடல் இருப்பதை என்னால் உணர முடியவில்லை. நாங்கள் மேகங்களில் ஒன்றாக இருப்பதைப் போல் உணர்ந்தேன்; அங்கு வேறு எதுவும் இல்லை."

பாபாவும் மண்டலியும் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட, '7000 ஹாலிவுட் பூலவாடில்' மையமாக அமைந்துள்ள 'ஹாலிவுட் ரூஸ்வெல்ட்' ஹோட்டலுக்கு (HOLLYWOOD ROOSEVELT HOTEL AT 7000 HOLLYWORD BOULEVERD) அழைத்துச் செல்லப்பட்டனர். குழுவில் சிலர் பாபாவுடன் அந்த ஹோட்டலிலும், பல அன்பர்கள் 'வில்காக்ஸ்' (WILLCOX) போன்ற இதர ஹோட்டல்களிலும் தங்கினர். அப்போது, 'லாஸ் ஏஞ்சலஸ் டைம்ஸ்' (LOS ANGELES TIMES) மற்றும் இதர பத்திரிகைகளின் செய்தித்தாள் நிருபர்கள், ஒருவர் பின் ஒருவராக பாபாவை அவரது அறையில் சந்தித்து, நேரடி பேட்டியை நிகழ்த்தி, புகைப்படம் எடுத்தனர்.

'எல்.ஏ. மிறர் நியூஸ்' (L. A. MIRROR NEWS) பத்திரிகையின் நிருபர் ஒருவர், உலகிற்காக அவர் வழங்கும் செய்தி என்ன என்று கேட்டதற்கு, பாபா கூறினார்:

**தத்துவவாதிகள், நாத்திகர்கள் மற்றும் பலர் கடவுள் இருப்பதை உறுதிப்படுத்தலாம் அல்லது மறுக்கலாம், ஆனால் அவர்கள் உயிர்வாழ்வதை மறுக்காத வரை, கடவுள் மீதான நம்பிக்கைக்கு தொடர்ந்து சாட்சியமாக இருக்கிறார்கள்; ஏனெனில் கடவுள் நித்தியமாகவும், எல்லையற்றவராகவும் உளதாயிருக்கிறார் என்று நான் உங்களுக்கு தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன். அவரே எல்லாம். மனிதனைப் பொறுத்தவரை, வாழ்க்கையில் ஒரே ஒரு குறிக்கோள் உள்ளது, அது கடவுளுடனான தனது ஐக்கியத்தை உணர்வது.**

மேலும் ஒரு நிருபரிடம், பாபா இவ்வாறு கூறினார்:

**என்னிடம் வழங்குவதற்கென ஒரே ஒரு செய்தி மட்டுமே உள்ளது; இதை நான் காலங்காலமாக, மீண்டும் மீண்டும் கூறிவருகிறேன். அனைவருக்கும் நான் கூறுவது: கடவுளை நேசியுங்கள். ஒருவர் தனது சுயத்தை முழுவதுமாக அன்பில் இழக்கும் அளவிற்கு, கடவுளை முழு மனதோடு, உண்மையாக நேசிக்க வேண்டும். மேலும் ஒருவர் கடவுளை எப்படி நேசிக்க வேண்டும்? ஒருவர் தனது சொந்த மகிழ்ச்சியைப் பொருட்படுத்தாமல், பிறரை மகிழ்ச்சியாக உணரச் செய்ய, தன்னால் இயன்றவரை முயற்சி செய்வதன் மூலம், கடவுளை, அவர் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நேசிக்க முடியும்.**

காலை 10:00 மணியளவில் பாபா, கீழே நேர்காணல் அறைக்கு வந்தபோது சோர்வாகக் காணப்பட்டார். அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த முக்கிய பெண் அன்பர்களுடன் தனிப்பட்ட முறையில் உரையாடிய பின்பு, தனித்தனியாக அல்லது குழுவாக நேர்காணல் தொடங்கியது. ஜாய்ஸ் ராம்னி (JOYCE ROMNEY பின்பு ஜாய்ஸ் ஆர். ஸ்டெமர் - JOYCE R. STERMER, 35), மற்றும் அவரது 6 வயது மகன் ராம்னி மெரன் (ROMNEY MEYRAN) போன்ற பலர், பாபாவை முதல் முறையாக சந்தித்தனர். பாபா ஒவ்வொருவருக்கும் பிரசாதம் வழங்கினார். ஒரு சிறிய மூன்று வயது கண் பார்வையற்ற சிறுவனின் பெற்றோரிடம், பாபா, இனிப்பு மிட்டாய் ஒன்றைக் கொடுத்து, "**இன்றிலிருந்து சரியாக ஒரு வருடத்திற்குப் பின்னர் இதை அவனுக்குக் கொடுங்கள்**" என்றார்.

டார்வின் ஷா வாசலில் நின்று, நேர்காணலுக்குச் செல்லும் மக்களின் நகர்வை வரிசையில் ஒருங்கிணைத்தார். பிற்பகலில் மக்களின் எண்ணிக்கை குறைந்து, அமைதி நிலவிய போது, பாபாவும் மண்டலியும் மீண்டும் மாடியில் தங்கள் அறைக்குச் சென்றனர். விரைவில், அதிகமான எண்ணிக்கையில் மக்கள் வரவே, டார்வின் அவர்களுடனான சந்திப்பைக் குறித்து, பாபாவிடம் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தார். அவர் அங்கிருந்து சென்று பாபாவின் அறையை அணுகியதும், பாபா வெளியே வந்தார். பாபா கையை உயர்த்தி '**டார்வின் ஏன் வந்தீர்கள்?**' என்று கேட்க, "அதிகமான எண்ணிக்கையில் மக்கள் தரிசனத்திற்காக வந்துள்ளனர், பாபா" என்றார் டார்வின்.

பாபா, டார்வினைப் பார்த்து முணுமுணுத்தார், "**அதாவது நான் மீண்டும் கீழே செல்ல வேண்டுமா?**"

பாபா சோர்வாக இருப்பதைக் கண்ட டார்வின், "நான் அப்படித்தான் நினைக்கிறேன்" என்று பதிலளித்தார். பாபா முன்னோக்கிச் சென்று, நகைச்சுவையுடன் களைப்பாகத் தோன்றும் விதத்தில் சில நொடிகள் அவர் தோளில் சாய்ந்து, பின்பு கீழே சென்றார்.

அன்று மாலை 4:45 மணிக்கு, '1524 கிழக்கு கிரெஸண்ட் ஹைட்ஸ் பூலவாடில்' (1524 NORTH CRESCENT HEIGHTS BOULEVARD) அமைந்த ஹில்டா ஃபக்ஸின் (HILDA FUCHS) இல்லத்திற்கு சென்ற போது, அங்கு அவரது நண்பர்கள் ஏறக்குறைய 30 பேர் பாபாவை சந்தித்தனர். ஹில்டா, வியன்னாவில் (VIENNA) பாபாவைப் பற்றி முதன்முதலாக 1932இல் ஆலஸ் ட்ரா-ஃபிஷர் (ALICE TRAU-FISHER) மூலம் தெரிய வந்தார். ஹில்டாவின் கணவர் விக்டர், யூதராக இருந்ததால், ஹிட்லர் ஆட்சிக்கு வந்தபோது அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆலஸ் அப்போது, நியூயார்க் நகரில் நோரினாவை சந்திக்குமாறு பரிந்துரைத்தார்; அதை அவர் மிகுந்த சிரமத்திற்குப் பிறகு செய்ய முடிந்தது. நோரினா, ஹில்டாவை, பிற பாபா அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தி, பாபாவின் மகத்துவத்தைக் குறித்த திடமான நம்பிக்கையை உள்ளளவில் உணரச் செய்தார்.

அவர் நோரினாவின் விரிவுரைகளை ஏற்பாடு செய்யத் தொடங்கினார்; 1940 ஆண்டுகளில், நோரினாவும் எலிஸபெத்தும் பாபாவின் மையத்திற்குப் பொருத்தமான ஒரு நிலத்தை தேடும் வேளையில், ஹில்டா அவர்களுடன் மேற்கு கடற்கரையை நோக்கிய சுற்றுப்பயணத்தில் இணைந்தார்.

பாபாவின் மண்டலியைத் தவிர, எலிஸபெத், கிட்டி, மார்கரெட், ஐவி, சார்மியன், டான் ஸ்டீவன்ஸ், ஷா குடும்பத்தினர், மரியன், ஸ்பார்க்கி லூக்ஸ், டேனா, ஜான் பாஸ் ஆகியோரும் ஹில்டாவின் இல்லத்திற்குச் சென்றனர். ஃபிலிஸ், அடெல், ஜீன் ஷா ஆகியோர் அங்கு வந்த மக்களுக்கு பழரசம் மற்றும் கேக்குகளை வழங்க உதவினர். பாபாவைப் பற்றிய ஓர் அறிமுக உரையை வழங்க டான் முன்னதாகவே வந்திருந்தார். **“உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்”** என்று பாபா அவர்களிடம் கூறினார். ஹில்டா ஒவ்வொரு விருந்தினரையும் பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார், அவர்கள் பாபாவுடன் கைகளைக் குலுக்க முன்னோக்கிச் சென்றனர். அதைத் தொடர்ந்து டான் ‘**நம்பிக்கையுடன் இருங்கள்**’ (HAVE HOPE) மற்றும் ‘**தனிமனித ஆணவத்தின் அறியாமை**’ (THE IGNORANCE OF THE SEPARATIVE EGO) என்ற செய்திகளைப் படித்தார்.

பாபா, ஐவியிடம், **“என்ன சிந்தனையில் ஆழ்ந்துள்ளீர்கள்?”** என வினவினார்.

ஐவி பதிலளித்தார், “நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்!”

பாபா இவ்வாறு கூறினார், **“உங்கள் ஒவ்வொருவருள்ளும் வாழும் கடவுள் சுதந்திரமானவர், எல்லையற்றவர் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்; ஆனாலும், அவர் உங்கள் ஒவ்வொருவரிடமும் தன்னைப் பிணைத்துக் கொண்டிருப்பதாக உணர்கிறார், அதனால் அவர் துன்பப்படுகிறார். நான் எல்லையற்ற மகிழ்ச்சியாக இருக்கிறேன், அளவிறுதியற்ற ஆனந்தமாக உணர்கிறேன், ஆனால் நான் உங்கள் மூலம் ஒவ்வொரு நொடியும் அவதிப்படுகிறேன், ஏனெனில் உங்கள் அனைவரிடமும் நான் வாழ்கிறேன்.”**

ஐவி, “ஆனால் ஏன் இந்தத் துன்பம், பாபா?”

அதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்: **“உங்கள் அனைவரிடத்திலும் நான் நித்தியமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை நான் உணர்கிறேன். உதாரணமாக டார்வினுக்கு கைகள், கண்கள், விரல்கள் உள்ளன. விரல், புண்ணினால் வலித்தால், அவர் அதை உணர்கிறார், ஆனால் புண் விரலில் உள்ளது, டார்வினில் அல்ல. எனவே நீங்கள் அனைவரும் என்னுள் இருப்பதால் உங்கள் துன்பங்களை நான் உணர்கிறேன்.**

**"இயேசு கிறிஸ்து தானே சிலுவையில் அறையப்பட்டார். எல்லையில்லா வல்லமை மிக்கவராக இருந்தாலும், துன்பங்களை ஏற்றுக்கொண்டு, மனிதகுலத்திற்காக தன்னைத் தானே ஆதரவற்ற நிலைக்கு ஆளாக்கினார். எல்லையற்ற பேரின்பத்தை உணர்ந்த அதேவேளையில், மனித துன்பத்தையும் உணர்ந்தார். எல்லா உலக துன்பங்களையும் உணர்ந்தார். எல்லையற்ற பேரின்பம், மனித துன்பம் இரண்டையும் நான் தொடர்ந்து உணர்கிறேன்."**

பாபா, ஹில்டாவை நோக்கி, **"அந்த அறை எங்கே?"** (டார்வினின் ஆலோசனையின் பேரில், இரவு உணவிற்கு முன்னர் அவர் ஓய்வெடுக்க அறை ஒன்றை ஹில்டா தயார் செய்திருந்தார்.) ஆனால் அவருடைய பதிலுக்காகக் காத்திராமல், பாபா பிரசாதத்தின் தன்மையை விளக்கத் தொடங்கினார்: **"இந்தியாவில், இது மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது; அது கடவுளிடமிருந்து வருவது என்பது அவர்களுக்குத் தெரியும்."** பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு திராட்சையை வழங்கி (முதலில் மண்டலிக்கு வழங்கப்பட்டது), **"அதை உண்ணுங்கள்"** என்று கூறினார். மக்கள் பாபாவிடம் மெதுவாக வந்தனர்; அவர்களில் சிலர் தங்களுக்கு வழங்கப்பட்டதை பயபக்தியுடன் அல்லது பாராட்டுவது போலவும், சிலர் அதை சாதாரணமாக எடுத்துக்கொண்டதாகவும் தோன்றியது.

ரத் வைட், ஹில்டா ஃபக்ஸ் இருவரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்த பிறகு, பாபா சில நிமிடங்கள் படுக்கையறையில் ஓய்வெடுத்தார். பாபாவும் குழுவினரும், அன்று இரவு உணவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹில்டாவின் இல்லத்திற்கு அருகில் அமைந்த 'தி கார்டன் ஆஃப் அல்லா' (THE GARDEN OF ALLAH) என்ற பெரிய உணவகத்திற்குப் புறப்பட்டனர். அனைவரும் அங்கு ஒன்றுதிரண்டு, பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். பாபாவை டான் ஸ்டீவன்ஸ் வரவேற்றார், ரத் வைட் ஒரு கவிதையை மொழிந்தார்.

மார்கரெட்டின் நடனக் கலைஞர்களான பீட்டர் ஸால் (PETER SAUL), டெக்ஸ் ஹைடவர் (TEX HIGHTOWER) ஆகியோர், இரவு உணவிற்காக முன்பதிவு செய்து, பணம் செலுத்தியிருந்தாலும், அவர்கள் வந்தபோது, அனைத்து இருக்கைகளும் நிரம்பியிருந்ததைக் கண்டனர். அவர்கள் நின்றுகொண்டிருப்பதை கவனித்த பாபா, என்ன விஷயம் என்று விசாரித்து, பின்னர் எரச், மெஹர்ஜி இருவரையும் எழுந்திருக்குமாறு சைகையால் தெரிவித்து, அவர்களை இருபுறமும் அமரச் செய்தார்.

டான் ஸ்டீவன்ஸ், பாபாவின் செய்திகளில் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தபோது, டெக்ஸ், பாபாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்: "அப்படியானால் இது கடவுள்..." என்று நினைத்துக் கொண்டிருந்த வேளையில்,

பாபா அவர் பக்கம் திரும்பி, '**என்னைப் புரிந்து கொள்ள முயற்சிக்காதீர்கள்**' என்பது போல் அவரைப் பார்த்தார்.

டான் வாசித்து முடித்ததும், பாபா, "**நான் இங்கே இருப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கிறேன். நான் இப்போது புறப்பட வேண்டும், ஆனால் நீங்கள் அமைதியாக இருந்து இரவு உணவை மனமார உண்ணுங்கள்**" என்றார்.

பாபாவும் மண்டலியும் சில நிமிடங்களில் ஹோட்டலுக்குப் புறப்பட்டுச் சென்றனர். புறப்படும்போது, பாபா, ஹில்டா ஃபக்ஸிடம் அவர் அமர்ந்திருந்த நாற்காலியில் அமருமாறு கூறினார்.

மறுநாள் காலை, 1956 ஆகஸ்ட் 1 புதன்கிழமை, ஃபிலிஸ், அடெல் இருவரும் சீக்கிரமாக வந்ததால், பாபாவுடன் சில பொன்னான தருணங்களைத் தனியாகக் கழிக்க நேர்ந்தது. முதல்முறையாக பாபா நன்றாக ஓய்வெடுத்ததாகத் தோன்றியது. '**அவர்கள் இருவரும் ஓய்வெடுத்தார்களா?**' என்று கேட்டு, பாபா, "**நான், நாள் முழுவதும் சந்திப்புகளில் மும்முரமாக இருக்கிறேன்; நான் விரும்பும் அளவுக்கு உங்களுடன் இருக்க எனக்கு நேரம் போதாது**" எனக் கூறியபோது, அவர்களும் அவ்வாறே உணர்வதாகக் கூறினர். பாபா ஒவ்வொருவரையும் நோக்கி ஒரு பெரிய பீச் பழத்தை வீசினார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அனைவரையும் அழைத்தார், ஆனால் பலர் அந்த நேரத்தில் அங்குத் தென்படவில்லை, சிலர் காலை உணவை உண்டுகொண்டிருந்தனர் அல்லது இந்த அதிகாலை நேரத்தில் தூங்கிக்கொண்டிருந்தனர். பாபா தனது அறைக்கு வெளியே அமைந்த நடைபாதையில் ஒன்று திரண்டு இருந்தவர்களை நோக்கி, சைகையால் தெரிவித்தார், "**நான் உங்கள் அனைவருக்கும் ஒரு செய்தியை வழங்க விரும்பினேன், ஆனால் அனைவரும் இந்த நேரத்தில் இங்கு இல்லை; இல்லாதவர்கள் 700 வருடங்களுக்குப் பின்னர் என்னைப் பார்க்கலாம்!**"

பாபாவிற்கு முன்னால் அனைவரும் நெருக்கமாக அமர அவர்களிடையே ஓர் அவசர நிலை உருவானது. பெரில் வில்லியம்ஸ் அருகில் வந்தபோது, பாபா, "**நீங்கள் மறைந்துவிட்டதாக நினைத்தேன்!**" என்றார்.

ஜான் பாஸ், பென் ஹேய்மன் இருவரும் வெளியே உலாவச் சென்றிருந்தனர். பாபா அவர்களிடம் கூறினார், "**நீங்களும் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டீர்கள் என்று நான் நினைத்தேன் - நீங்கள்** (ஜானை நோக்கி), **பென் அல்ல! பென்னும், நானும் இளமையாக இருக்கிறோம்; ஆனால் நீங்கள், பென்னை விட வயதானவர் என்பதால், நீங்கள் முதலில் உயிரைத் துறந்து விடுவீர்கள்**" என்ற போது அனைவரும் சிரித்தனர், ஏனெனில் ஜான், பென்னை விட பத்து வயதுக்கு மேல் இளையவர்.

பாபா அவர்களிடம் கூறினார்: **“நீங்கள் அனைவரும் இங்கு வந்து என்னுடன் இருக்க, ஏராளமான பணம் செலவழித்தீர்கள், ஆனால் எல்லோரையும் தனித்தனியாக சந்திக்க இப்போது நேரம் இல்லை. ஆனால் நாளை, ஓஹாயில்** (OJAI), **நான் உங்கள் அனைவருடனும் இருக்க விரும்புகிறேன், உங்களுடன் உண்டு, உங்களுடன் விளையாடி, உங்களுடன் சண்டையிடப் போகிறேன்!”**

காலை நேரம் நேர்காணல்களால் நிறைந்தும், இடை மாடி முகப்பு முழுவதும் மக்களால் நிரம்பியும் வழிந்தது. ஹில்டா தனது இல்லத்தில் சந்திப்புகளை நடத்த எவரேனும் அவருக்கு உதவியாக இருப்பதை விரும்பினார். பாபா, ரத் வைட்டிடம் கேட்டுக்கொள்வதாக கூறினார். பாபா, ஹில்டாவிடம், **“நீங்கள் எப்போதும் என்னுடன் இருப்பீர்கள். நீங்கள் என்னுள் இருக்கிறீர்கள்”** என்று உறுதியளித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில், ஃபிலிஸ் தனது தாயாரை பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார்.

அன்று காலை பாபாவை சந்தித்த மற்றுமொரு நபர், அமெரிக்காவிற்குச் சென்றிருந்த சௌத்தரி (CHOUDHARY) என்று அழைக்கப்பட்ட ஓர் இந்தியர். அவர் தனது சந்திப்பை, பின்வருமாறு விவரித்தார்:

செய்தித்தாளில் மெஹர் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்ததும், உடனடியாக சந்திப்பிற்கான நேரத்தைக் கோரினேன்; காலை 9:00 மணிக்கு, நான் வரிசையில் கடைசியாக நின்று கொண்டிருந்தாலும், பாபா தோன்றிய அந்த வேளையில், அவர் என்னை முதலில் அழைத்தார். அவர் பாதங்களில் ஸாஷ்டாங்கமாக விழுந்து, தலைவணங்கி, கண்ணீரால் நீராட்டினேன். ஒரே நொடியில், எனது வாழ்நாளில் நான் விரும்பிய அனைத்தையும் அவர் எனக்கு வழங்கினார்; பாபா யார் என்ற உடனடி அங்கீகாரத்தை அடையப்பெற்றேன்.

நான் பல மகான்களை அறிவேன்; ஆனால் நான் சந்தித்தவர்களில் மிகப் பெரிய மனிதர் அவர்தான். அப்படியொரு தெய்வீகப் புன்னகை! பாபாவின் அன்பு அவரது தோற்றத்தில், முதல் பார்வையில் பிரதிபலிக்கிறது, மேலும் அவரை நேருக்கு நேர் சந்திப்பவர் அதிர்ச்சிக்குள்ளாயினர், திடீரென எதிர்கொள்ளும் அவரது முழு அழகையும் புரிந்து கொள்ள இயலாமல் இருந்தனர். அவரது முகத்தைப் பாருங்கள்! முழு உலகமும் அதில் உள்ளது: அது பாசம், பணிவு, நல்லொழுக்கம், அறிவு அனைத்தும் நிறைந்தது! அவருடனான எனது சந்திப்பு, அன்பெனும் கடலில் விழும் நதி போலவும், நடக்கக் கற்றுக் கொள்ளும் குழந்தை தாயின் மடியை நோக்கி ஓடுவது போலவும் இருந்தது. புனிதர்களின் மாபெரும் மையமான ஆக்ரா மற்றும் பெனாரஸிலிருந்து வந்த நான், மேற்கு நோக்கி வந்து, பாபாவை இங்கு சந்திக்க நேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது அல்லவா?

பாபா, பின்னர் அனைவரையும் அழைத்த போது, டான் ஸ்டீவன்ஸ் **“இறைவன், மனிதன் மற்றும் இறை-மனிதன்”** (GOD, MAN AND THE GOD-MAN) என்ற செய்தியை வாசித்தார். பாபா மேலும் கூறினார்:

**இறை-மனிதனில், இறைவன், பிதா, குமாரன் மற்றும் மனிதனாக ஒன்றே உருவானவர். இறைவன் எல்லா புரிதலுக்கும் அப்பாற்பட்ட அளவிறுதியற்றவர்; குமாரன் எல்லையற்ற மனம்; மனிதன் இறைவனின் மனித பக்கம். இறை-மனிதன் மூன்று நிலைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கிறார்; அவருக்குள், பிதா, குமாரன், மனிதன் மூன்றும் ஒன்றே. கிறிஸ்துவின் உணர்வு நிலையில், அவர் மூன்று நிலைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கிறார். பிதாவாக, அவர் எல்லையற்றவர், அனைத்து கருத்தாக்கத்திற்கும் அப்பாற்பட்டவர்; குமாரனாக, அவர் எல்லையற்றவர், ஆனால் அவர் நமது நிலைக்கு வருபவர்; மனிதனாக, அவர் தன்னை மனிதனாக உணர்கிறார். இறை-மனிதன் அல்லது அவதார புருஷரான இயேசு கிறிஸ்து, அனைத்து மனிதகுலத்தின் துன்பத்தையும் தம்மீது ஏற்றுக்கொண்டார்.**

மதிய உணவுக்கான ஒரு மணி நேர இடைவேளைக்குப் பிறகு, குழுவினர் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தனர். மேனொன் க்ளெமென்ட் டி'ஆர்லைன் (MANON CLEMENT D’ARLAINE) என்ற இனிமையான, வயதான ஃபிரெஞ்ச்-பெல்ஜிய (FRENCH-BELGIAN) பெண் பத்திரிகையாளர் உட்பட அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாபாவை சந்திக்க வந்தனர்.

ஃபிலிஸ் வாசலில் அமர்ந்திருந்த போது, ஓர் அழகான, இளம் பெண் வந்து, இங்கே என்ன நடக்கிறது என்று கேட்டார். ஏன் இத்தனை நபர்களின் சலசலப்பு? அதற்கு ஃபிலிஸ், “மெஸையா (அவதார புருஷர்) உள்ளே இருக்கிறார்” என்று பதிலளித்தார். அவரும் பாபாவை சந்திக்க முடியுமா என்று கேட்க, ஃபிலிஸ் அவரை ஆதியிடம் அழைத்துச் சென்றார். அந்த இளம் பெண், பாபாவை சந்தித்து வெளியே வந்த வேளையில், அவரது கண்கள் பளிச்சென பிரகாசித்தன; ஃபிலிஸுக்கு நன்றி கூறி விடைபெற்றார். அவர் அங்கு வந்த வழிப்போக்கர்களில் மிகுந்த அதிர்ஷ்டசாலி.

நான்கு மணியளவில், பாபா, **“ஒருவர் பாபாவிற்கு எப்படிப் பணிபுரிகிறார்?”** என்ற செய்தியைக் கேட்க மீண்டும் குழுவை அழைத்தார். நேர்காணல் அறைக்குப் பின்புறம் ஒரு பெரிய கூடத்தில் அனைவரும் அமர்ந்திருக்க, பாபா அங்குச் சென்று முன்னும் பின்னும் வேகமாக நடந்தார். மீண்டும், அவர் தனது அன்பர்களை ‘**கடவுளுக்குத் தம்மைத் தெரியாது என்ற நிலையிலிருந்து, கடவுள் தம்மை ‘பரமாத்மா’ என்று தெரிந்துகொள்வது வரை**’ (GOD KNOWS NOT, TO GOD KNOWS ‘SELF’) என்ற செய்தியைக் கேட்க சிறிய

அறைக்கு அழைத்தார். அதைத் தொடர்ந்து நடந்த குறுகிய தனிப்பட்ட சந்திப்பில், 78 வயதான அறிஞரும் எழுத்தாளருமான டாக்டர். டபிள்யூ. ஒய். எவன்ஸ்-வென்ட்ஸ் (DR. W. Y. EVANS-WENTZ), பாபாவை சந்தித்தார். எவன்ஸ்-வென்ட்ஸ் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் பற்றி ஒரு சாதகமான மதிப்பாய்வை எழுதியிருந்தார், மேலும் 'உன்னதமான வாழ்க்கை' (LIFE AT ITS BEST) என்ற தலைப்பில் இந்த சுற்றுப்பயணத்தின் செய்திகளின் தொகுப்புக்கு ஓர் அறிமுகத்தை எழுதுவீர்களா என்று பாபா அவரிடம் வினவ, டாக்டர் எவன்ஸ்-வென்ட்ஸ் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அமைதியாக மாடியிலிருந்த தனது அறைக்குச் சென்றார். டேனா ஃபீல்ட், பாபாவிற்காக வீட்டில் தயாரிக்கப்பட்ட காஃபி-கேக்கைக் (COFFEECAKE) கொண்டு வந்தபோது, பாபா அதில் ஒரு துண்டை டேனாவிற்கு ஊட்டினார்.

டான்டே லியோ கார்டெல்லா (DANTE LEO CARDELLA) என்பவர் பலமுறை பாபாவை ஹோட்டலில் பார்க்க வந்திருந்தார். ஒவ்வொரு புதன்கிழமையும், ஆன்மீக ஆர்வலர்களின் குழு ஒன்று, டான்டேயின் குடியிருப்பில் சந்தித்து வந்தது; பாபா அந்தக் குழுவில் உரையாற்ற வேண்டும் என்று டான்டே ஆர்வமாக இருந்தார். இரவு 7:00 மணிக்கு, பாபா 1401, வடக்கு டெட்ராய்ட் வீதி, அபார்ட்மெண்ட் #1இல் (1401 NORTHE DETROIT STREET, APARTMENT #1) அமைந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு ஏறக்குறைய 50 பேர் அவருக்காகக் காத்திருந்தனர். டான்டே, பாபாவை வரவேற்றார்:

ஒரு சிறந்த ஆன்மீக ஆசிரியரும், குருநாதருமான மெஹர் பாபா, நம்முடன் இருப்பது உண்மையில் நம் அனைவரின் அதிர்ஷ்டம். அவர் ஒரு தெய்வீக அவதாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளையில், முக்கியமாக, அவர் 'அவதார புருஷராகவே' இருக்கிறார். உங்களில் ஆழமாகக் கற்றறிந்தவர்களுக்கு அதன் அர்த்தம் தெரியும். பாபாவின் மகத்துவத்தை, இறுதி ஆய்வில், இதயத்தால் மட்டுமே அளவிட முடியும் என்பதால், பாபாவை அறிவுப்பூர்வமாக ஆழங்காண முடியாது.

கார்டெல்லா, பாபாவின் '**அன்பு மற்றும் இறை அன்பு**' (LOVE AND GOD LOVE) என்ற செய்தியிலிருந்து சில பகுதிகளைப் படித்தார். குழு, சில நிமிடங்கள் ஒன்றாக தியானத்தில் ஈடுபடுவது வழக்கம்; இந்த வாரம், பாபா இருந்ததால், கார்டெல்லா குழுவிடம் அவர் மீது முழு கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி, மேலும் கூறினார்: "பாபாவின் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு, அவருக்கு அன்பு நிறைந்த பக்தியையும், முழு கவனத்தையும் அளிப்பது ஒன்றுதான் இன்றியமையாதது, ஏனெனில் இந்த இரண்டும், அவர் உங்கள் வாழ்க்கையில் நேரடியாகச் செயல்படக்கூடிய மற்றும் உதவக்கூடிய

விஷயங்கள்... அனைத்திலும் மிகப்பெரிய அதிசயம், இதயத்தை விழிப்படையச் செய்வது, அதில், பாபா உண்மையில் நமக்கு உதவ முடியும்."

சில நிமிட அமைதியான தியானத்திற்குப் பின்னர், ஒவ்வொரு புதன் கிழமையும் நள்ளிரவில் பாபாவின் நாமத்தை நினைந்து தியானம் செய்யுமாறு பாபா, குழுவினருக்கு அறிவுறுத்தினார். எரச் மூலமாக, அவர் கீழ்வரும் உரையை வழங்கினார்:

**உங்களை சந்திப்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்... டான்டே பாபாவை நேசிக்கிறார். இன்று பாபாவைப் பற்றிய அனைத்தையும் உங்களுக்கு எடுத்துரைத்தார். பாபா அவரை நேசிக்கிறார், ஆனால் முக்கியமான விஷயம் என்னவெனில், ஒருவர் எல்லோரிடமும் என்னைப் பார்க்க வேண்டும். உங்களால் முடிந்தால், பாபா அறிவுரையாக வழங்குவதைக் கடைப்பிடியுங்கள்: ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை, நள்ளிரவில் பதினைந்து நிமிடங்கள், முழு இருளில் அமர்ந்து, நள்ளிரவு பன்னிரண்டு மணியிலிருந்து தியானத்தைத் தொடங்கி, திறந்த கண்களுடன் 'பா-பா' என்று ஒவ்வொரு மூச்சையும் உள்வாங்கி, வெளிவிடும் வேளையில் திரும்பத் திரும்ப அதை மொழியுங்கள்; மேலும் தியான நேரத்தில் நீங்கள் அடையப்பெறும் எந்த அனுபவத்திலும் கவனம் செலுத்தவேண்டாம். நீங்கள் பாபாவைப் பார்க்க நேர்ந்தால், அதில் உங்கள் கவனத்தைச் செலுத்தி, நாமத்தை உச்சரிப்பதைத் தொடருங்கள். அப்போது நீங்கள் அனைவரிடமும் பாபாவைக் காண்பீர்கள். இதைத் தவற விடாதீர்கள் என்கிறார் பாபா.**

**நான் எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன். நான், நீங்கள் எனது பௌதீக உடலில் என்னை பார்ப்பது போல மட்டுமல்லாமல், இறைப் பெருங்கடலாக இருக்கிறேன். இந்த இறைப் பெருங்கடலில் மூழ்கத் துணிச்சல் உள்ளவர்கள் முத்தை அடையப் பெறலாம்.**

'நம்பிக்கையுடன் இருங்கள்' (HAVE HOPE) என்ற செய்தியை டான் ஸ்டீவன்ஸ் வாசித்த வேளையில், பாபா தொடர்ந்து கூறினார்:

**கடவுளை விவரிக்கும் தொகுப்புகள் பல உள்ளன, அவற்றில் உண்மைப்பொருள், சத்தியம், அன்பு குறித்து பல விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **என்ற புத்தகத்தையும், பற்பல செய்திகளையும் பாபா நமக்கு வழங்கியுள்ளார். ஆனால் அவை உங்களுக்கு மனதின் எல்லைக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை வழங்காததால் அவை உதவுவதில்லை. மனதை, மனதின் எல்லையை நாம் கடந்து, எல்லாவற்றிலும் கடவுளைக் காண வேண்டும் என்ற எண்ணத்தை, ஒரு வகையான அறிவார்ந்த நம்பிக்கையை, அவை நமக்குத் தருகின்றன. ஒருவர் கடவுளைப் பார்க்கும்போது, அவர், தனது பௌதீகக் கண்களால் பௌதீகப் பொருட்களைப் பார்ப்பதை விட, மிகத் தெளிவாகப் பார்க்கிறார். பின்னர்**

**எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறார். அந்த ஆனந்தமான அனுபவத்தைப் பற்றி உங்களுக்கு எந்தக் கருத்தும் இருக்க முடியாது!**

**ஆனால் அதில் மேலும் ஒரு விஷயம் உள்ளது; அது அடுத்தபடியாக, கடவுளைக் கண்கூடாகக் கண்டு, என்னுடன் ஐக்கியமாவது. இது, நிச்சயமாக, எனது செய்திகளின் வடிவத்தில் விளக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் மக்கள் உண்மைப்பொருள், சத்தியம், அன்பு குறித்த கருத்துக்களை அறிவுப்பூர்வமாகப் புரிந்துகொள்வார்கள். ஒருவர் கடவுளை எங்கும், எதிலும் காண வேண்டுமானால், அவர் என்னை முழு மனதோடு, முழு பக்தியோடு நேசிக்க வேண்டும்.**

பாபா தொடர்ந்தார்:

**அன்பு என்ற வார்த்தையை நாம் மிகவும் தளர்வாக, தவறாகப் பயன்படுத்துகிறோம். ஆண்மகன் ஒருவன், மிக அழகான பெண்ணைப் பார்த்து, அவள் மீது காதல் வயப்படுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனது காதல், அந்தப் பெண்ணைத் தனக்கு சொந்தமாக்க விரும்புகிறது. அவன் அமைதியற்றவனாக மாறுகிறான்; அவனுக்கு பசி இல்லை, தூக்கம் இல்லை, எப்பொழுதும் அந்தப் பெண்ணையே நினைக்கிறான். ஆனால் என்னை நேசிப்பது என்பது, உலகில் அன்பு என்று அழைக்கப்படுவதை விட, ஆண் ஒருவன் பெண் ஒருவரை நேசிப்பதை விட மேலானது. அளவிறுதியற்ற அளவுக்கு அதிகமானது.**

**என்னை நேசிக்கத் துணிந்த ஒருவரால் மட்டுமே, நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் என்னை நேசிக்க முடியும். உண்மையில் என்னை நேசிப்பது என்பது, ஒருவர் தனது தலையைத் துண்டித்து, தன் உள்ளங்கையில் வைத்து, அதை எனக்கு வழங்க வேண்டும். துண்டிப்பது என்பது அதைத் துண்டிக்கும் அர்த்தத்தில் அல்ல. அது மிகவும் எளிதானது. 'தலை' என்பது உங்கள் எண்ணங்கள், ஆசைகள் அனைத்தையும் குறிக்கிறது. அவற்றை என்னிடம் கொண்டு வருவது, எனது காலடியில் அர்ப்பணிப்பதாகும். அப்போது, நீங்கள் என்னை நேசிக்கத் தொடங்குகிறீர்கள்; அதன் பின்னர் என்னைக் கண்டுகொள்வீர்கள், எல்லோரிலும் எல்லாவற்றிலும் என்னைக் காண்பீர்கள்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"நான் அன்பின் இறைவன், அதே நேரத்தில், நான் என் அன்பர்களின் அடிமை."**

டான் ஸ்டீவன்ஸால் மேலும் இரண்டு செய்திகள் சத்தமாக வாசிக்கப்பட்டன; அப்போது பாபா கூறினார்:

**இவை அனைத்தும் கனவே தவிர வேறொன்றுமில்லை. தூக்கத்தில் நீங்கள் ஒரு கனவைக் காணும்போது, நீங்கள் பேசுவதையும், ரசிப்பதையும், சில நேரங்களில் நீங்கள் அழுவதையும், மகிழ்ச்சியாக இருப்பதையும்**

**உணர்கிறீர்கள். கனவில் துன்பம், இன்பம் இரண்டும் உண்டு. ஆனால் நீங்கள் விழித்திருக்கும் வேளையில், கனவில் நீங்கள் உணர்ந்த வலி, துக்கம் அனைத்துமே ஒரு கனவைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை உணர்வீர்கள். நீங்கள் என்னுடன் இப்போது அமர்ந்திருப்பது கூட ஒரு கனவுதான்; வெளியில், வீதியில் பேருந்துகள், வாகனங்களின் சத்தம், இந்த இடம், முழு நகரம், இவையெல்லாம் ஒரு கனவைத் தவிர வேறொன்றுமில்லை.**

**உதாரணமாக, இன்றிரவு உங்கள் கனவில், பாபா உங்களருகில் அமர்ந்து, 'இவற்றில் சிக்கிக் கொள்ளாதீர்கள், உண்மையில் நீங்கள் ஒரு கனவு காண்கிறீர்கள், கனவைத் தவிர வேறு எதுவும் இல்லை,' என்று உங்களுக்கு விளக்குவதை நீங்கள் காண்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். 'பாபா, அது எப்படிக் கனவாக இருக்க முடியும்? நான் பல இன்ப துக்கங்களை அனுபவித்து வருகிறேன். என்னைச் சுற்றி எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறேன். நான் உங்களைப் பார்க்கிறேன். அது எப்படிக் கனவாகும்?' என்று நீங்கள் என்னிடம் கேள்வி எழுப்புவீர்கள். அடுத்த நாள், நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன், பாபா உங்கள் கனவில் தோன்றி, அது ஒரு கனவு என்று கூறினார் என்பதை நீங்கள் உணர்கிறீர்கள்.**

**இப்போதும், இந்த நேரத்திலும், நீங்கள் கனவு காண்கிறீர்கள் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன். அது கனவாக இருந்தும், உங்கள் மனம் எப்படி எதிர்வினையாற்றுகிறது? அது உடனே, 'அது எப்படிக் கனவாக இருக்க முடியும்? இந்த அறையில் இத்தனை பேர் அமர்ந்து இருக்கிறார்கள், பாபா எங்களுடன் அமர்ந்து, நமக்கு விளக்கம் கொடுக்கிறார், எரச் விளக்குகிறார். பாபா நம்முடன் இருக்கிறார், எப்படி இவை எல்லாம் கனவாக இருக்க முடியும்?' அப்போது நான் சொல்கிறேன்: "உண்மைப்பொருளை நீங்கள் உணரும்போது, அந்த இறை உணர்வுக்குப் பிறகு நீங்கள் விழிப்படையும்போது, நான் கூறியது அனைத்தும் உண்மை என்பதை நீங்கள் உணருவீர்கள் - இது ஒரு கனவைத் தவிர வேறொன்றுமில்லை."**

**என்னை மேலும் மேலும் நேசிப்பதன் மூலம் என்னுடனான இந்தத் தொடர்பை சிறப்பான முறையில் பயன்படுத்த முயற்சிக்கவும்.**

டான்டே கார்டெல்லாவின் மனைவி காலீன் (COLLEEN), பாபா 45 நிமிடங்கள் மட்டுமே அங்கு இருப்பார் என்று கூறியதற்கு இணங்க கடிகாரத்தை அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் பாபா தனது மணிக்கட்டில் இல்லாத கடிகாரத்தை சுட்டிக்காட்டி, **"இல்லை"** என்று தலையசைத்து, கவலைப்பட வேண்டாம் என்று கூறினார்.

பாபா, **"நானே எல்லையற்ற இறைப்பெருங்கடல்; கடலில் மூழ்கியவர்கள் முத்தை அடையப்பெறுவார்கள்"** என்று குறிப்பிட்டார்.

பாபா, டான்டேயைத் தழுவிக்கொண்டார், பின்னர் ஒவ்வொருவரும் பாபாவுக்காக ஒரு பூவை கையில் ஏந்திய வண்ணம் அவரிடம் வந்தனர். சிலருக்கு, பாபா ரோஜா இதழ்களை பிரசாதமாக உண்ண வழங்கினார். அதைத் தொடர்ந்து, பாபா, **“பாதிக்கும் மேற்பட்ட குழு உறுப்பினர்கள் என்னை நேசிக்கின்றனர்”** என்று கருத்துரைத்தார். பாபா, விடைபெறுவதற்கு முன்னர் இல்லத்தின் அனைத்து இடத்திற்கும் சென்று, அதை புனிதப்படுத்தினார்; பின்னர் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

டான்டே கார்டெல்லா, வரவிருக்கும் ‘பேரிடர் காலத்திற்காக’ ஆயத்தமாகும் விதத்தில் மலைகளில் உணவு மற்றும் தண்ணீரை சேமிப்பதற்காக, தனது குழுவை ஊக்குவித்து வந்தார். இதைக் கேட்ட பாபா, ஃபிரெட் வின்டர்ஃபெல்டிடம், **“கடவுளின் அருளால் மட்டுமே அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்!”** என்றார்.

இந்த நேரத்தில் டான் ஸ்டீவன்ஸ் இந்தியாவில் மணிக்கு எழுதிய கடிதத்தின் நகல் கீழே வழங்கப்பட்டுள்ளது, இது, பாபாவின் இதுவரையிலான அமெரிக்க பயணத்தின் சாராம்சத்தை விளக்குகிறது:

ஹாலிவுட் ரூஸ்வெல்ட் ஹோட்டல்,
**ஆகஸ்ட் 1, 1956.**

அன்புள்ள மணி,

திரு. பீட்ஹோவன் (BEETHOVEN) தனது மிகப்பெரிய இசைக் குழுவின் மூலம், ஆக்கப்பூர்வமாக முன்னேறுவதைப் பற்றி உங்களால் நினைத்துப் பார்க்க முடியுமா: இப்போது நுணுக்கமாக, நுட்பமாக, துரிதமாக; பின்னர் ஆழ்ந்த உரத்த ஒலி எழுப்பும் கம்பீரத்துடன்; சில நேரங்களில் சத்தமாக, சில நேரங்களில் மென்மையாக; மெல்லிசையை வடிவமைக்கும் வயலின்கள், தொடர்ந்து இசைக் கொம்புகளின் ஒலியுடன், இசையின் உச்சத்தை எட்டி, பின்பு மெதுவாக, இனிமையான மெல்லிசையுடன் மந்தமாகிக் குறைகிறது.

பாபாவுடன் இதுவரை நாம் அனுபவித்த வண்ணமயமான, வேகமாக மாறும், எல்லையற்ற, பரபரப்பான பன்னிரண்டு நாட்களை விவரிக்கத் தொடங்கும் வேறு எந்த ஒரு வழியையும் என்னால் நினைக்க முடியவில்லை. நாங்கள் அவருடன் விளையாடினோம், அவருடன் சிரித்தோம், அவரது தோளில் அழுதோம், அவர் கடுமையாக இருக்கும்போது எங்கள் கால்களில் நடுங்கினோம், எங்கள் தலையையும் இதயத்தையும் அவர் காலடியில் வைத்தோம்.

நியூயார்க் நகரில், முழு மூன்று நாட்கள் நேர்காணல்கள் நடந்தன, இடையிடையே சில இடங்களைப் பார்வையிடச் செல்வது, ஒரு சிறப்பு வாய்ந்த, விரிவான, முறையான இரவு உணவு மற்றும் குழுக்களுடன் நிகழ்த்திய

சந்திப்புகளில் பாபா, கதைகள் கூறினார், தத்துவம் பேசினார், பழங்களை வீசினார். (இது என்ன தெய்வீக அருளின் செயல்பாட்டில் நுட்பமான பொருட்கள் குறித்த பாடமா?)

ஒரு செவ்வாய் கிழமை அதிகாலையில், நாங்கள் நியூயார்க் நகரிலிருந்து மர்டில் பீச் மையத்திற்குப் புறப்பட்டுச் சென்றோம்; அங்கே வேடிக்கை, குதூகலம், உணர்ச்சிகளைத் தூண்டும் நிகழ்ச்சிகள் அனைத்தும் உச்சக்கட்டத்தை எட்டியது. எனது அறை தோழர்கள், மார்கரெட் க்ராஸ்கேயின் பாலே குழுவில் ஒரு ஜோடி - பீட்டர் ஸால், டெக்ஸ் ஹைடவர் இருவரும் சிறந்த ஆற்றல், புத்தி கூர்மை மற்றும் நல்ல உற்சாகம் படைத்தவர்கள். எனவே, அவர்களின் தன்னிச்சையின் நிலையான பின்னணியில், சர்வவல்லவரான பாபாவின் ஒளிரும், நுட்பமான, அற்புதம் நிறைந்த காட்சி முழு வீச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அங்கிருந்த மக்கள் - இளைஞர்கள், முதியவர்கள் அனைவரும், அதிகாலை முதல் இரவு வரை எதற்கும் தயாராக இருந்தனர்; மேலும் நாங்கள் அனைவரும் முறையான, உயர் சுருதி பாடாமல் எப்படி இந்த அளவுக்கு அதிர்வுறுகிறோம் என்பது எனது கற்பனைக்கு அப்பாற்பட்டது. இசையின் இறை அரசன் இசைக்கருவியின் சரியான வலிமையை அறிந்திருக்க வேண்டும்.

கடற்கரை விருந்துகளும் தனிப்பட்ட மற்றும் குழு நேர்காணல்களும் நிகழ்ந்தன; மேலும் மக்கள் நீராடுவதற்காக, குளியலறை அருகில் வரிசையில் காத்திருந்தனர்; பாபா பார்க்க விரும்பிய, கிட்டத்தட்ட அண்மையில் புதிதாக வந்த நபர்கள் அவரை நோக்கி விரைந்தனர்; அனைத்து வகையான அவசர பணிகளுக்காக, நகரத்திற்கு முன்னும் பின்னுமாக கார்கள் பறந்து கொண்டிருந்தன. இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், மர்டில் பீச் மையத்தின் அர்ப்பணிப்பு விழா நிகழ்ந்தது, 'பார்ன்' கொட்டகைக்கு வெளியே பாபா ஒரு மரத்தை நட்டார்; புகழ் வாய்ந்த 'டேவ் கரோவே' (DAVE GARROWAY) நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் தொலைக்காட்சி ஒளிபதிவு குழுவினர், பாபாவிற்கு மாலை அணிவித்து, அவரிடம் 'உலகில் துன்பம் மற்றும் துயரத்திற்கான காரணம்' குறித்த கேள்விக்கு, பாபாவின் பதிலை, எரச் மிகவும் எளிமையாகவும், சுவாரஸ்யமாகவும் வழங்கினார். ஒளிப்பதிவின் கடைசி அம்சமாக, 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் அதி விரைவு 52-வினாடி நேர்காணலில் எரச், திருமதி டியூஸ், நான் மூவரும் கலந்துகொண்டோம்.

ஒரு நீண்ட நெடிய இடியுடன் கூடிய மழை அடிவானத்திலிருந்து முன்னும் பின்னுமாகத் தாவிக்கொண்டிருந்த அந்த இரவில், நாங்கள் அனைவரும் உயிரிழந்தவர்களைப் போல தூங்கினோம்.

அடுத்த நாள், மர்டில் பீச் மையத்தில் இன்னும் ஒரு நாள் மட்டுமே இருக்கப் போகிறோம் என்பதை உணர்ந்து, சோகத்தின் விளிம்பில்

வேடிக்கையாகவும், மும்முரமாகவும் இருந்தோம். மக்கள் பாபாவிடம் விடைபெற்று வெளியேறத் தொடங்கினர்.

நான் ஒரு கட்டத்தில் பாபாவின் அறைக்குள் சிக்கிக் கொண்டேன், பதினைந்து நிமிடங்களுக்கு அவர் வாசலில் நின்றவர்களிடம் பிரியாவிடை அளித்ததை பார்க்க வேண்டியிருந்தது. எனது முழங்கால்கள் வலுவிழந்தன மற்றும் ஒரு மணி நேரத்திற்குப் பின்னரும் என் உள் உறுப்புகளின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் இதை மீண்டும் விரைவில் செய்ய வேண்டியதில்லை என்று நம்புகிறேன்.

திங்கட்கிழமை அதிகாலையில், நாங்கள் வாஷிங்டனுக்குப் புறப்பட்டோம், ஒரு குறுகிய இடைவெளி, பல நேர்காணல்கள், மேலும் பத்திரிகை நிருபர்கள். நியூயார்க்கில் பத்திரிகைகள் செய்த தவறான மேற்கோள்களுடன் விளக்கங்களைப் பார்த்து பாபா மகிழ்ச்சியாக இல்லை, எனவே பத்திரிகைகளைக் கையாளுவதற்கான அடிப்படை விதிகள் பலப்படுத்தப்பட்டன; மேலும் முடிவுகள் சிறப்பாக வரத் தொடங்கின. பெர்னார்ட் கர்வாலோ தனது மனைவியுடன் வந்து, பாபாவை வாழ்த்திய வேளையில், இந்தப் பெண்மணி பாபாவிடம் உருகிய விதம், தொடர்ந்து பாபா அவருக்கு அளித்த ஆதரவு - இதுபோன்ற மனதைத் தொடும் எதையும் நான் பார்த்ததில்லை. ஒரு நாள், எப்போதாவது, நீண்ட நாட்களுக்குப் பிறகு, பாபாவுடனான அவர்களின் முதல் சூறாவளியை ஒத்த, அமைதி நிறைந்த, பரவசமான வாரத்தை, நான் கதையாக எழுத விரும்புகிறேன்...

இங்கே, இப்போது நாங்கள் லாஸ் ஏஞ்சலஸில் இருக்கிறோம், இரண்டு நாட்கள் கடந்துவிட்டன, பாபா முழு நேரமும் நேர்காணல்கள், முத்தங்கள், அரவணைப்புகளில் தம்மை ஈடுபடுத்தும் தருணத்தில், மக்கள் திகைப்பில் ஆழ்ந்து அரை மயக்கத்தில் நடந்து செல்கின்றனர். பத்திரிகை இங்கு மிகச் சிறப்பாக இருந்தது. நாளை, நாங்கள் மெஹர் மவுண்ட், பிறகு ஸான் ஃபிரான்சிஸ்கோ செல்கிறோம்.

நாங்கள் எங்கள் அன்பை இத்துடன் அனுப்புகிறோம்... இத்தியாதி... இத்தியாதி...

டான்

1956 ஆகஸ்ட் 2 வியாழன் அன்று, அதிகாலை நான்கு மணி முதல், கலிஃபோர்னியாவில் அமைந்த ஓஹாய்க்கு (OJAI) 85 மைல் தூரம் காரில் பயணம் செல்வதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன; அங்கு ஆக்னஸ் பேரோன் (AGNES BARON), பாபாவிற்காக 'மெஹர் மவுண்ட்' (MEHER MOUNT) என்று அழைக்கப்படும் மையத்தை ஓர் அழகான மலை உச்சியில் நிறுவினார். ஃபிலிஸ் அதிகாலையில் ஹோட்டலுக்கு வந்து பாபாவை சந்தித்தார். அவருடைய நாட்குறிப்பு பின்வருமாறு:

அதிகாலை நான்கு மணிக்கு பாபாவின் சத்ரா, கால்சட்டை மற்றும் சில கைக்குட்டைகளை இஸ்திரி செய்து முடித்தோம். அதிர்ஷ்டவசமாக ஹோட்டலுக்குச் செல்ல உதவி கிடைத்தது (இந்த நேரத்தில் லாஸ் ஏஞ்சலஸில் வாடகைக்கார் வேலை நிறுத்தம் தொடர்ந்தது). பாபா உடனே என்னை அழைத்து, முந்தைய நாள் அவரைப் பார்க்கும் வாய்ப்பை இழந்ததற்காக, என் இதயத்தில் இருந்த பிரிவின் ஆதங்கத்தை சரி செய்தார். பாபாவுடன் பயணம் செய்த ஒவ்வொருவரின் உள்ளார்ந்த மனநிலைகள் மற்றும் தேவைகள் குறித்த அவரின் அலாதியான அறிவைப் பற்றிய, இதே போன்ற அனுபவம் பிறருக்கும் இருந்தது என்று நான் நம்புகிறேன். இறுதியில், 'நான் கிறிஸ்து' என்று பொருள்படும் குணாதிசயமான சைகையில், அவர் தனது இரண்டு ஆள்காட்டி விரல்களைக் குறுக்காக வைத்து காட்டினார். பாபாவை எவரேனும் ஒரு நாள் இப்படிச் சித்தரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆக்னஸ், பாபாவையும் மண்டலியையும் தனது ஸ்டேஷன் வேகனில் (STATION WAGON) முன்னே ஓட்டிச் சென்றார்; இதர குழுவினர் பேருந்தில் பின்தொடர்ந்தனர். 1952 ஜூன் மாதத்தில் பாபா 'மெஹர் மவுண்ட்'டிற்குச் செல்லவிருந்தார், ஆனால் ப்ராக், ஓக்லஹோமாவில் (PRAGUE, OKLAHOMA) நிகழ்ந்த வாகன விபத்து காரணமாக, அவரது பயணம் ரத்து செய்யப்பட்டது. வழி நெடுகிலும் வளமான விவசாய நிலத்தைப் பார்த்து ரசித்த பாபா, "இதில் என்ன விளைகிறது, நிலத்தில் நீர் பாசனம் எப்படி நிகழ்கிறது, பழத்தோட்டங்கள் உள்ளனவா... என எண்ணற்ற கேள்விகளைக் கேட்டு, 'பாபா 'ரியல் எஸ்டேட்' (REAL ESTATE) முகவர் போல பேசிக் கொண்டிருந்தார்!" ஆக்னஸ் வேடிக்கையாகக் கூறினார்.

அவர்கள் மேல் மலையை வந்தடைந்த போது, ஓஹாய் பள்ளத்தாக்கில் மூடுபனி நிரம்பியிருந்தது. பாபா, ஆக்னஸிடம் கூறினார், "**நான் மெஹர் மவுண்டை மிகவும் நேசிக்கிறேன், மிக்க மகிழ்ச்சியாக உணர்கிறேன்.**"

ஆக்னஸ் உள்ளே சென்றதும், "பாபா, இதோ மெஹர் மவுண்டின் ஆவி" என்று கூறி, பாபாவின் அருகில் நிதானமாக இருந்த தனது அழகான, புத்திசாலித்தனமான, குட்டையான, தங்க நிற 'கலி' (KALI) என்று அழைக்கப்பட்ட பாதி-'கோலி' (PART-COLLIE), மறு பாதி-'கிரேஹவுண்ட்' (PART-GREYHOUND) நாயைக் காட்டினார்.

பேருந்து வந்ததும், பாபா அனைவரையும் விருந்தினர் மாளிகையின் 'பாபா-அறை'க்கு அழைத்து, "'**மர்டில் பீச்' மையத்திற்கு அடுத்ததாக, இந்த இடம் எனக்கு மிகவும் பிடிக்கும்**" என்றார். பாபா அவர்கள் அதை எப்படி விரும்பினார்கள் என்று பலரிடம் கேட்டார். ஒருவர் கூறினார், "இது ஓர் ஆன்மீக சூழலைக் கொண்டுள்ளது"; மற்றொருவர், "இது மெஹராபாத் மேல்மலையுடன்

ஒத்ததாக உள்ளது" என்றார். மூன்றாமவர் அற்புதமான நறுமணத்தைப் பற்றி கருத்துத் தெரிவித்தார். ஃபிலிஸ், "இது எனக்கு அஸிஸி மலைகளை நினைவூட்டுகிறது" என்றார். ஜீன் ஷா, "இது உடனடியாக ஒருவரை ஈர்க்கும் தன்மைமிக்கது" என ஒப்புக்கொண்டார்.

பாபா தலையசைத்து மேலும் கூறினார், "**இந்த நிலம் மிகவும் பழமையானது, நான் முற்காலத்தில் இங்கு இருந்தேன். இரவை இங்கே கழிக்க விரும்புகிறேன், ஆனால் அதற்கான நேரமில்லை.**"

ஒவ்வொரு நபரும் அறையை விட்டு வெளியேறும்போது, பாபா, விளையாட்டுத்தனமான மனநிலையில், பென் ஹேய்மன், மார்கரெட் க்ராஸ்கே இருவரையும் வெளியே தள்ளிவிட்டார். சிறிது நேரம் கழித்து, பாபா திராட்சைக் கொடியால் மூடிய தாழ்வாரத்தில் எலிஸபெத்தின் கழுத்தைச் சுற்றி அணியும் சிவப்பு நிற துண்டை, தலைப்பாகை போல தலையில் அணிந்த வண்ணம் தோன்றினார். பாபா நிதானமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார், மேலும் தனி நபர்களை, தனிப்பட்ட தரிசனத்திற்காக அழைக்கத் தொடங்கினார். அவர் சிலரிடம் கூறினார், "**என்னுடன் இவ்வளவு நெருக்கமாக இருக்கும் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, ஏனெனில் இந்தியாவில் எனக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருப்பவர்கள், என்னைப் பார்க்க வரிசையில் நின்று என்னைக் கடந்து செல்ல வேண்டும்; மேலும் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால், யாரோ ஒருவர் அவர்களை பின்னால் இருந்து தள்ளும் முன்னால் என்னிடமிருந்து ஒரு பார்வை அல்லது ஸ்பரிசத்தை அடையப் பெறுவதற்கான நேரம் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கிறது.**"

பாபா ஒவ்வொருவரையும் அழைத்து, "**இதுவே நீண்ட காலத்திற்கான எனது கடைசி தழுவல்**" என்று குறிப்பிட்டார்.

வெளியே மரங்களுக்கு நடுவே, சார்லஸ் ரீட் (CHARLES READE), ஹெலன் வைட் (HELEN WHITE) இருவரும் வீட்டில் சூடாகத் தயார் செய்த ரொட்டி மற்றும் ருசியான மதிய உணவை, குழு மனமார ரசித்தனர்.

சிறிது நேரத்தில், பல புதிய நபர்கள் வந்தனர். அவர்களை சந்தித்ததும், பாபா தமது அன்பர்களை உள்ளே அழைத்தார். பாபா ஒரு பெரிய நாற்காலியில் குதூகலமான மனநிலையில் அமர்ந்திருந்தார். அவர் டேனா ஃபீல்டை அழைத்து, "**டேனா என்னை மிகவும் நேசிக்கிறார், அவர் பயணத்திற்காக தனது வழக்கமான பத்திய உணவை விட்டுவிட்டார்!**" (டேனா ஆரோக்கியமான உணவு வகையான உலர்ந்த பழங்கள் மற்றும் பருப்புகளை தனது பைகளில் எடுத்துச் சென்றார்.)

டேனா எழுந்து நின்று, "நான் இப்போது உண்ட சுவையான மதிய உணவு, பாபாவின் பிரசாதம்" என்றார்.

"**நீங்கள் என்ன உண்டீர்கள், உலர்ந்த பழங்கள்?**" பாபா வினவினார்.

"வித்தியாசமான உணவு வகைகள் பாபா. பழம் வீட்டில் பயிரிப்பட்டது என்று நினைக்கிறேன், ரொட்டி உங்களுக்காக பிரத்யேகமாக சுடப்பட்டது."

"நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க விரும்பும் உங்கள் பருப்பு வகைகள்?"

"அற்புதம்!" டேனா பதிலளித்தார்.

"**பழங்கள்!**" பாபா ஆச்சரியத்துடன் கேட்டார். "**சிறுவயதிலிருந்தே எனக்கு பால், பழங்கள் பிடிக்காது. உபவாச வேளையில் நீர் மட்டுமே அருந்துவேன், பால் அருந்துவதில்லை. மஸ்த் பயணங்களில், சில நேரங்களில் மூன்று நாட்கள் வரை, நான் விரும்பும் உணவு எனக்குக் கிடைப்பதில்லை, அதனால் மண்டலி என்னிடம் சிறிதளவு பால் அல்லது பழங்களை எடுத்துக் கொள்ள வேண்டினர்; ஆனால் நான் பசியோடு, தண்ணீர் மட்டும் அருந்தி வாழ்வதையே விரும்பினேன்.**"

எரச் மேலும் கூறினார், "சில நேரங்களில் பாபா தண்ணீர் கூட இல்லாமல் உபவாசம் இருப்பதுண்டு; அவர் எதையும் உட்கொள்வதில்லை."

பாபா தொடர்ந்தார், "**டேனா என்னிடம், 'பாபா, நீங்கள் திராட்சை சாப்பிடுங்கள், அது உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது' என்று கூறினார். இன்று, நான் இந்த அறைக்குள் நுழைந்தவுடன், இங்கே பழங்களைக் கண்டேன்** (அவரது நாற்காலியின் அருகில் வைக்கப்பட்டிருந்த பழங்கள் நிரம்பிய கிண்ணத்தை நோக்கி சைகையால் குறிப்பிட்டார்). **அப்போது நான் ஒரு முழு கொத்து திராட்சையை உண்டேன்; கிண்ணத்தில் இதர பழங்களுடன் பிளம் பழமும் இருந்தது, இப்போது, கேளுங்கள்...!**" பாபா அவரது வயிற்றைத் தட்டினார், அனைவரும் வயிற்றினுள்ளே எழுந்த குமுறலைக் கேட்டு, அவருடன் அடக்க முடியாமல் சிரித்தனர்.

தலையின் உச்சியைத் தட்டி, "**நான் முழுப் பிரபஞ்சத்தையும் எனது தலையில் சுமக்கிறேன், ஆனால் இது சிலுவையில் அறைப்படுவது போன்ற ஒரு வகை மிகையான கொடுமை, ஏனெனில் உணவு எனக்கு உடன்படவில்லை!**"

"ஒருவரின் மருந்து இன்னொருவரின் விஷம்" என்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கூறினார் டேனா.

அப்போது பாபா, "**நீங்கள் அனைவரும் ஐந்து நிமிடம் கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வேறு எதையும் நினைக்காமல், பாபாவை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்**" என்றார். பணிவுடன், குழுவில் உள்ள அனைவரும் அமைதியாக அமர்ந்து, கண்களை மூடி, தியானம் செய்தனர். ஒரு நிமிடத்தில், பாபாவின் வயிற்றில் குமுறல் சத்தம் மறுபடியும் கேட்டது, அனைவரும் அடக்க முடியாமல் சிரித்தனர்.

டேனா, "நானே அவற்றை உண்பதை நிறுத்தப்போகிறேன்!" என்றார்.



**மெஹர் மவுண்ட், ஓஹாய், 2 ஆகஸ்ட் 1956**
(MEHER MOUNT, OJAI, 2 AUGUST 1956)



**மெஹர் மவுண்ட், ஓஹாய், 2 ஆகஸ்ட் 1956**
**எரச், ஆக்னஸ் பாரன், மெஹர்ஜி**
(MEHER MOUNT, OJAI, 2 AUGUST 1956, ERUCH, AGNES BARON, MEHERJI)

பாபா புன்முறுவல் செய்துகொண்டே, "**இன்று மதியம், நீங்கள் அனைவரும் சிரித்து மகிழ்ச்சியாக உணரும் வாய்ப்பை அடையப் பெற்றீர்கள். இங்கே பாபாவும் ஐந்து நிமிடங்கள் ஓய்வெடுக்க முடிந்தது. நியூயார்க்கில் உங்களுக்கு இத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை; மர்டில் பீச்சில், சிறிய வாய்ப்பு; லாஸ் ஏஞ்சலஸில் எதுவுமில்லை. ஆனால் இன்று, இங்கு நாம் ஓய்வெடுத்து, மகிழ்ச்சியாக உணர்கிறோம். நான் உங்கள் நிலைக்கு இறங்கி வருகிறேன். அதன் மூலம் நாம் ஒன்றாக இருக்கவும், சிரிக்கவும், சுதந்திரமாக நேரத்தைக் கழிக்கவும் முடிகிறது. ஆனால், அதேவேளையில் நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்பதை மறந்துவிடாதீர்கள்.**"

"**டேனா?**" என்று பாபா அழைத்தார்.

"நான் இனி திராட்சையைப் பரிந்துரைக்க மாட்டேன், பாபா!"

"**டேனா என்னை மிகவும் நேசிக்கிறார்; பிறரும் என்னை நேசிக்க வேண்டும் என்பதற்காக அவர் மிகவும் கடினமாக உழைக்கிறார் - ஆனால் அவர் உலர்ந்த பழங்களில் வாழ்கிறார்! ஃப்ரெட், மூடுபனி விலகிவிடும் என்ற உங்கள் முன்னறிவிப்பான வாசகத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**"

"எனக்கு உங்கள் உதவி தேவை, பாபா," ஃப்ரெட் பதிலளித்தார்.

வெளிப்புறத்தை நோக்கி சைகையால் தெரிவித்து, பாபா கூறினார், "**இப்போது, வெளியே சென்று காட்சியைப் பார்த்து, இயற்கையின் மூலம் பாபாவை நேசிக்க முயற்சி செய்யுங்கள். இதற்கெல்லாம் என் அன்பே காரணம்... இந்த முழுப் படைப்பு, இந்த இயற்கை, நீங்கள் பார்க்கும் அழகு அனைத்தும் என்னிடமிருந்து வந்தன.**"

அவர்கள் வெளியே சென்ற வேளையில், வானம் தெளிவுறத் தொடங்கியது. 'ஸல்ஃபர் மலை' (SULPHUR MOUNTAIN) மீது, 2,500 அடி உயரத்தில் இருந்த இந்த மையத்திலிருந்து, பல மைல்களுக்குக் கீழே, அழகான அலை அலையாக, லேசான சாய்வுகளுடன் தோற்றமளிக்கும் மலைகளை ஒருவர் பார்க்க முடியும். சிறிது நேரம் கழித்து, பாபா, ஐவி, ஸ்பார்க்கி மற்றும் சிலரை மீண்டும் உள்ளே அழைத்தார். பாபா முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்தார். அவர் அவர்களை அமைதியாகப் பார்த்து, விரல்களை நகர்த்தி, "**நான் முடிவெடுத்துவிட்டேன்!**" என்றார்.

என்ன முக்கியமான முடிவு என்று அனைவரும் திகைத்துப்போய் நின்றனர். "**நான் 700 ஆண்டுகளில் திரும்பி வரும்போது, பூமியில் திராட்சைப் பழம் இருக்காது - மேலும் அது மதுபான** (துஷ்பிரயோகம் செய்யும்) **பிரச்சினைக்கும் உதவியாக இருக்கும்!**" என்று கேலி செய்தார்.

டேனா தனது 'குரோனிக்கிள்' (CHRONICLE) தொகுப்பிற்காக சுற்றுப்பயணத்தின் போது குறிப்புகளை பதிவு செய்துவந்தார். பாபா அவரை அழைத்து, 700 **ஆண்டுகளுக்குப் பிறகு திராட்சை இருக்காது என்று**

**சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டும்** என்று கூறினார். “**இரண்டாவது சிந்தனை ஓட்டத்தில், திராட்சை ஏன் இல்லை என்று அவர்கள் யூகிக்கட்டும்!**” என்று கூறினார்.

சிரிப்பொலி அடங்கியதும், டேனா, “அவதார புருஷரின் வயிற்றில் ஏற்பட்ட குமுறலுக்குக் காரணமாக இருந்த திராட்சைக் கனி, இனி இருக்காது என்று நான் கூறுவதானால் பாபா, அவர்கள் என்ன சொல்வார்கள்?” என்று கேட்டார்.

அதன் பின்னர், ஆக்னஸ் பேரோன், பாபாவை மெஹர் மவுண்ட் நிலத்தின் சுற்றுப்பயணத்திற்கு அழைத்துச் சென்றார். அனைவரும் பின்தொடர்ந்தனர் - பாபாவின் வேக நடையைப் பின்தொடர்ந்த அனைவரும் மூச்சுத் திணறிப் போயினர். ஒருவருக்கு பாபாவின் குடையைப் பிடிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது, ஆனால் பாபா அதி விரைவாக வேறு வேறு திசைகளை நோக்கித் திரும்பியது, குடை பிடித்தவரைத் திக்குமுக்காடச் செய்தது. பாபா கந்தக நீர் (SULFUR-WATER) நீச்சல் குளத்தை, அதன் இலைகளால் அடர்ந்த மரத்தினூடே கடந்து செல்லும்போது, அவர் திராட்சைக் கொடிகளை சைகையால் காட்டி, “**மீண்டும் திராட்சை!**” என்றார். பாபா, குறிப்பாக வடக்கு-தெற்கு மற்றும் கிழக்கு-மேற்கு எல்லை கோடுகள் எங்கே என்று கேட்டதற்கு, ஆக்னஸுக்கு அது குறித்து தெளிவாகத் தெரியாததால், பாபா அவரை வேடிக்கையாகப் பார்த்தார்.

‘மெஹர் மவுண்ட்’டின் உச்சியில், கடற்பரப்பை ஒட்டியுள்ள நிலப்பகுதியில் ‘பாபா மரம்’ (BABA’S TREE) என்று அழைக்கப்படும் ஒரு பெரிய ஓக் மரம் இருந்தது. பாபா அந்த மரத்தின் கீழ், உலர் இலை மெத்தை மீது அமர்ந்தார். வேறு எவரும் அமர வேண்டாம் என்று சைகையால் தெரிவித்தார். அவரது கண்கள் பிரகாசித்தன, அவர் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறினார். பின்னர் அவர் வேகமாக எழுந்து, குழுவை மீண்டும் தூசி நிறைந்த பாதையில் அழைத்துச் சென்றார். ஆக்னஸின் நாய் ‘கலி’ பாபாவிற்குப் பின்னால் சென்றது.

பாபா மீண்டும் அனைவரையும் ஒன்றாக அழைத்துக் கூறினார்:

“**இன்று என்னிடமிருந்து எந்த ஒரு சொற்பொழிவையும் எதிர்பார்க்காதீர்கள். நேற்று, நான் உங்கள் அனைவரிடமும், இங்கே விளையாடி, நிதானமாக ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினேன். ஒரு விஷயத்தை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். நான் உங்கள் அனைவரையும் அரவணைக்கும்போது, நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை நீங்கள் உணரவில்லை. இந்தியாவில், நான் தரிசனம் வழங்க வெளியே செல்லும் வேளையில், தென்னிந்தியாவில், ஆந்திரா மாநிலத்தில், கிழக்கிலிருந்து மேற்காகப் பயணம் செய்யும்போது, ஆயிரக்கணக்கான மக்கள் எனது தரிசனத்திற்காக வருகிறார்கள்; அவர்கள் அனைவரும் என்னை மிகவும் நேசிக்கிறார்கள்; அவர்களில் பலர் எனக்காக உயிரைக்**

**கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். இருந்தும் என் அரவணைப்பு அல்லது என்னுடனான நெருங்கிய சகவாசத்திற்கு அவர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை; ஏனெனில், அந்த அளவிலான மக்கள் நெரிசலில், அனைவரும் அவசரமாக உள்ளனர். அவர்கள் என்னை அணுகும்போது, பின்னால் இருப்பவர் அவர்களைத் தள்ளுவதால், ஒரே வினாடியில், அவர்கள் எனது பிரசாதத்தையும், ஸ்பரிசத்தையும் அடையப்பெற நேர்ந்த அடுத்த கணமே அனைத்தும் முடிந்தது. அவர்கள் என் மீது அளப்பரிய அன்பு வைத்திருந்தாலும், என் அருகில் அமரவோ, என்னைத் தழுவவோ வாய்ப்பில்லை.**

**லாஸ் ஏஞ்சலஸில், இன்று நீங்கள் என்னுடன் அமர்ந்திருப்பது போல், உங்கள் அனைவருக்கும் என் அருகில் அமர நேரம் இல்லை, ஏனெனில் பல பேர் அங்கு வந்துகொண்டிருந்தனர், நான் மிகவும் மும்முரமாக இருந்தேன். எனவே, நான் இங்கு ஒரு நாளை ஓய்வு நாளாகக் கருத விரும்பினேன்.**

**“லண்டனில் நிகழ்ந்தது போல் எனது மனநிலை மாறுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.”**

எரச் இடையே எடுத்துரைத்தார்: “சில நேரங்களில், திடீரென பாபா, மிகவும் இனிமையான மனநிலையில், மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றுகிறார், அதே நேரத்தில் அவர் நம்மை மிகவும் மகிழ்ச்சியாக உணரச் செய்கிறார். அவர் குழந்தைகளுடன் ஒன்று கலந்து, அவர்களுடன் விளையாடுகிறார், ஒரு குழந்தையைப் போல் ஓடுகிறார், மேலும் அவர் மிக மிக மகிழ்ச்சியாகத் தோன்றுகிறார். திடீரென பாபாவின் மனநிலையில் மாற்றம் ஏற்படவே, அவர், நமக்கு மிகவும் சோர்வாக, உடல்நலம் குன்றி, அவருக்கு ஏதோ நடந்தது போலவும் தோற்றமளிக்கிறார். ஆனால், நாம் அவரில் பார்க்கும் அளவுக்கு எதுவும் இல்லை. சில நேரங்களில் மிகவும் அன்பாக அவர் நமக்குத் தோன்றுகிறார் - அன்பினால் நிறைந்து, அன்பினால் நிரம்பி வழிந்து, நாம் அவரை நேசிப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய விரும்பாததைப் போல் உணர்கிறோம். மீண்டும், மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறது, மேலும் அவர் மிகவும் கடுமையானவராக அல்லது உக்கிரமானவராக நமக்குத் தோன்றுகிறார்; அத்தகைய தருணங்களில், நாங்கள் அவரை நேசிக்கும் நிலையில் இல்லாமல், அவருக்கு மரியாதை செலுத்தவும், அவருடைய உத்தரவு மற்றும் அறிவுறுத்தல்களுக்காகக் காத்திருக்கவும் விரும்புகிறோம்.”

பாபா, **“எனது வழிகளையும் முறைகளையும் எவராலும் புரிந்து கொள்ள முடியாது. நான் உங்கள் புரிதலுக்கு அப்பாற்பட்டவன். பரிபூரண குருநாதர்களால் மட்டுமே என்னையும் எனது வழிகளையும் அறிய முடியும்.**

“**மேலுமொரு விஷயம்,**” பாபா தொடர்ந்தார். “**நீங்கள் அனைவரும் என்னுடன் நெருக்கமாக பழகும்போது, என்னுடன் நெருங்கி வரும் தருணங்களுக்கான வாய்ப்புகள் வரும்போது, உங்களுக்குள் இருக்கும் நல்லது, தீயது அனைத்தும் தீப்பொறிகளாக வெளிப்படுகின்றன.**

“**கடந்த காலத்தின் அனைத்து மனப்படிவங்களும், நல்லது, தீயது இரண்டையும் உள்ளடக்கிய மாய உலகப்பொருட்களின் மனப்படிவங்களும் ஒன்று திரண்டு வெளிவருகின்றன. எனது சகவாசம், என்னுடனான நெருக்கம், அந்த மனப்படிவங்களின் மொத்த நிறைகளை மாற்றுகிறது, சில சமயங்களில் நல்லது, தீயது அனைத்தும் தீப்பொறிகள் போல வெளியே பறக்கின்றன.**”

ஒரு கட்டத்தில், பாபா அவர்களைத் திடுக்கிடச் செய்து, “**இனி எதுவும் படிக்க வேண்டாம். நீங்கள் அனைவரும் படிப்பதை நிறுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன் - இது மனதைக் குழப்பமடையச் செய்கிறது**! **பாபா எழுதியதையும் படிக்க வேண்டாம்**!” என்றார்.

அடுத்த கணமே, விளையாட்டாக மார்கரெட் பக்கம் திரும்பி, “**கடவுள் பேசுகிறார்** (GOD SPEAKS) **புத்தகத்தை எத்தனை முறை படித்திருப்பீர்கள்? பத்து முறை, ஒருமுறை முடித்ததும் மறுபடியும் படியுங்கள்**!” என்றார்.

“**நான் மாலை 6:00 மணிக்குள் திரும்பிச் செல்ல விரும்புகிறேன், ஆறு மணிக்குப் பின்னர் எவரும் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். உங்கள் பெட்டி படுக்கைகளைத் தயார் செய்யவோ அல்லது இதர விஷயங்களில் ஈடுபடவோ சுதந்திரமாக இருக்கிறீர்கள்**” என்று பாபா குழுவிடம் கூறி முடித்தார்.

மேலும் சில தனிப்பட்ட நேர்காணல்களுக்குப் பிறகு, பாபாவும் மண்டலியும் தேநீர் அருந்தினர். ஒரு தனிப்பட்ட நேர்காணலின் போது, பாபா மர்டில் பீச் மையத்தில் செய்ததை போல், ஒரு காதல் விவகாரத்தை சீராக்கினார். குழுவில் ஒருவரின் வருங்கால மனைவி, தனது வருங்கால கணவனின் நெருங்கிய நண்பரை காதலித்து வந்தார். பாபா மூவரையும் அழைத்து அந்த இளைஞனுக்கு விளக்கினார், “**அந்தப் பெண்ணும், உங்களின் நெருங்கிய தோழரும் ஒருவரையொருவர் நேசிக்கின்றனர், ஆனால் உங்கள் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை, எனவே அந்தப் பெண்ணை விடுவிக்கும்படி நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்,**” என்று கூறியபோது, அந்த இளைஞன் கண்ணீருடன் அதை ஏற்றுக்கொண்டார்.

ஓஹாயின் இயற்கை எழில் சூழ்ந்த மலைகளில் சூரியன் மறையும் போது, பாபா, நாய் ‘கலி’யின் தலையை வருடிக் கொடுத்து, அவரின் தொடர்பில் வந்ததால், அதன் அடுத்த பிறவியில் மனிதனாகப் பிறக்கும் என்று கூறி,

ஸ்டேஷன் வேகனில் ஏறி அமர்ந்தார். பாபா, ஆக்னஸிடம் அவரை நீண்ட கடற்கரைப் பாதை வழியாக ஓட்டிச் செல்லுமாறு அறிவுறுத்தினார், மேலும் வழியில் அவர் பளபளக்கும் நீல நிற பசிஃபிக் பெருங்கடலை (PACIFIC OCEAN) முழுமையாக ரசித்ததாக அடிக்கடி குறிப்பிட்டார்.

'தீப்பொறிகள் பறக்கின்றன' என்று பாபா கூறியிருந்த இந்த நேரத்தில், மெஹர் மவுண்ட்டிற்குச் சென்றபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஆக்னஸ் தனது விருந்தினர்களை விட்டுவிட்டு பாபாவிடம் செல்ல, ஐவி டியூஸ் ஏதோ கேட்டார். ஆக்னஸ் மிகவும் அவசரமாக இருந்ததால், அவர் ஐவியின் கோரிக்கையை நிறைவேற்றாத பட்சத்தில், ஐவி, ஆக்னஸைப் பற்றி சில விரும்பத்தகாத கருத்துக்களைத் தெரிவித்தார். சீற்றமடைந்த ஆக்னஸ், பாபாவிடம் வந்து, "நான் எல்லோரையும் நேசிக்கவில்லை - அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?" என வினவினார்.

பாபா அவரைப் பார்த்து கூறியதை ஆதி எடுத்துரைத்தார், "**ஆக்னஸ், நீங்கள் எல்லோரையும் நேசிக்கிறீர்கள், ஆனால் நீங்கள் எல்லோரையும் உங்கள் மனதிற்கு உகந்தவராக ஏற்றுக்கொள்வதில்லை**!"

காரில் லாஸ் ஏஞ்சலஸ் திரும்பிச் செல்லும் போது, பாபா முன் இருக்கையில் ஆக்னஸின் அருகில் அமர்ந்திருந்தார். அப்போது ஆக்னஸ், "பாபா, ஐவி டியூஸ் என்னைப் பற்றி என்ன கூறினார் தெரியுமா… நான் அதை நம்பவில்லை, ஆனால் அது உண்மையாக இருந்தால் நான் அதற்காக என்ன செய்யப் போகிறேன்?" என்று கேட்டார்.

பாபா அவர் தோளில் தட்டி, அமைதியாக சிரித்து கூறினார்: "**நீங்கள் நடந்துகொள்ளும் விதத்தை நான் விரும்புகிறேன்**; **உங்கள் உற்சாகமும்**, **உயிர்த்துடிப்பும்** (SPIRIT) **எனக்குப் பிடித்திருக்கிறது**!"

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா, மெஹர் மவுண்ட்டிற்கு வந்ததில் ஆக்னஸ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்; பாபா கூறியதை அவர் முட்டாள்தனமாக உணர்ந்து கொண்டது போல, வேடிக்கையாக வினவினார்: "உங்களுக்கு எந்த வகையான 'ஸ்பிரிட்' (ஆவி - SPIRIT) பிடிக்கும் - கடினமான (மதுபான) வகையா அல்லது அமைதியானதா?"

பாபா, ஆக்னஸை '**பிரியமானவரின் கண்காணிப்பு நாய்**' (BELOVED'S WATCHDOG) என்று அழைப்பதுண்டு. பல ஆண்டுகளுக்குப் பிறகு, பல பாசாங்குக்காரர்கள் அவரை சூழ்ந்திருந்த காரணத்தால், பாபா, 'ஆக்னஸ், 'குரைக்க'லாம் - ஆனால் 'கடிக்க'க் கூடாது - மேலும், அவர்களை வென்று வீழ்த்தவேண்டும் என்று விரும்பினார்' என்ற முடிவுக்கு வந்தார்!

ஆக்னஸ், பாபாவுடன் காரில் வந்து சேருவதற்கு முன்பே, பேருந்து ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தது, பாபா லிஃப்ட்டில் ஏறி இரவு ஓய்வெடுக்கச்

செல்வதற்கு முன்னர் அவரது அன்பர்களை நோக்கி கையசைத்து விடைபெற்றார்.

**1956 ஆகஸ்ட் 3 காலை 9:00** மணிக்கு ஸான்ஃபிரான்சிஸ்கோவிற்கு (SAN FRANCISCO) பாபா லாஸ் ஏஞ்சலஸிலிருந்து 'யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானம் **465'**இல் (UNITED AIRLINES FGIGHT 465) புறப்பட்டார். ஹில்டா ஃபக்ஸ், கிளாடிஸ் கா, மாகரீட் போலி ஆகியோர் அடங்கிய வரவேற்புக் குழு அவருக்குப் பிரியா விடையளிக்க, சிலருடன் அங்குச் சென்றது. ஹில்டா, பாபாவிற்காக சிவப்பு ரோஜாக்களின் சிறிய பூங்கொத்தை கொண்டு வந்திருந்தார்.

'டக்ளஸ் டிசி-**4'** (DOUGLAS DC-4) விமானம் வானத்தில் சென்றதும், பாபா தன்னுடன் வந்த ஒவ்வொருவரையும் வரவேற்று, இடையேயான நடை பாதை வழியாக நடந்து சென்றார். அதன் பின்பு, சிலர் பாபாவின் இருக்கைக்கு வந்து, அவருடன் சில விஷயங்களைப் பற்றி விவாதித்தனர், சிலர் அவருடைய புகைப்படத்தை எடுத்தனர். ஃபிலிஸ் சத்தமாக தும்மியபோது, பாபா, "**முழு விமானத்தையும் வீழ்த்திவிடுவீர்கள்!**" என்றார்.

அனுபவம் வாய்ந்த பயணி அல்லாத லீட்ரைஸ் ஷா, ஜன்னலுக்கு அருகில் அமர விரும்பினார், ஆனால் அவரது சகோதரி ரெனே, ஏற்கனவே அந்த இருக்கையை ஆக்கிரமித்திருந்தார், எனவே அவர் நடை பாதையை ஒட்டிய இருக்கை ஒன்றில் அமர்ந்தார். அவர் பாபாவைப் பற்றி நினைக்க வேண்டும் என்று நினைத்தாலும், அவர் முற்றிலும் 'ஆர்வமின்றி, வெறுமையாக' உணர்ந்தார். அவரால் பாபாவை நினைக்க முடியவில்லை; இனிமையான எண்ணம் எதுவும் வரவில்லை. அந்த நேரத்தில், பாபாவின் முன் அமர்ந்திருந்த தந்தையிடமிருந்து கேமராவை எடுத்து வருமாறு அவருடைய தாயார் கேட்டுக்கொண்டார். பாபாவைப் பார்க்க லீட்ரைஸ் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திய அவ்வேளையில், பாபாவும் அவரை எதிர்நோக்கி இருந்தது போல தோற்றமளித்தார். "அவர் என்னைப் பார்த்த அந்த ஒரு பார்வையில் என் இதயத்தின் கோப்பை நிரம்பியது, பாபாவைத் தவிர எனக்கு வேறு எந்த எண்ணமும் வரவில்லை."

குழு இரண்டு மணி நேரத்தில் **11:00** மணிக்கு ஸான் ஃபிரான்சிஸ்கோவிற்கு வந்து சேர்ந்தது; மேலும் பாபாவை ஓர் உற்சாகமான கூட்டத்தினர் சந்தித்த வேளையில், குழுவில் இருந்த குழந்தைகள் பாபாவிற்கு மாலை அணிவித்தனர். அன்று மிகவும் குளிராக இருந்தது, பிலி ஈட்டன் (BILI EATON), பாபாவிடம் தனது மேல் கோட்டைக் கொடுத்தபோது, அவர் சில கணங்கள் அதை அணிந்து, பின்னர் அவரிடம் திரும்பக் கொடுத்தார். 'வான் நெஸ் அவென்யூ'வில் அமைந்த 'ஹாலிடே லாட்ஜ்' என்ற புதிய மோட்டலுக்கு (THE HOLIDAY LODGE AT 1901 VAN NESS AVENUE) பாபா அழைத்துச் செல்லப்பட்டார். (இந்த நேரத்தில் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்ததால்,

இதர எல்லா ஹோட்டல்களும் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன.) பாபாவிற்கு மத்திய நீதிமன்றத்திலிருந்து வெகு தொலைவில் இரட்டை மாடி அறை ஒன்று வழங்கப்பட்டாலும், அது அவரது அன்பர்களிடமிருந்து வெகு தொலைவில் இருந்ததால், அவர் அதை விரும்பவில்லை; மேலும், மண்டலியுடன் தொடர்புகொள்ள இணைப்பு அறை வசதியும் இல்லை. இதர ஹோட்டல்கள் பரிந்துரைக்கப்பட்டு, அறைகள் வழங்கப்பட்ட பின்னரும், ஏற்பாட்டுக் குழுவினரின் பொறுமையை சோதித்துக்கொண்டிருந்தார் பாபா.

அவர் ஐவியிடம், **"நான் பணிபுரியும் வழி இதுதான்"** என்று குறிப்பிட்டார்.

பின்னர் அவர் லட் டிம்ஃபில்லிடம் கூறினார், **"இதர எல்லா இடங்களிலும், ஏற்பாடுகள் பிரம்மாதமாக இருந்தன. எனது தேவைகள் மிகவும் எளிமையானவை - இணைக்கப்பட்ட இரண்டு அறைகள். ஆனால் இங்கே, அறைகள் மட்டுமின்றி, எனக்கு இந்த இடம் மனதிற்கு உகந்ததாக இல்லை. எனவே, நான் ஸான் ஃபிரான்சிஸ்கோ நகரை விட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை, இரண்டு நாட்கள் முன்னதாகப் புறப்படுகிறேன்."**

ஸான் ஃபிரான்சிஸ்கோ நகரில் பிறந்து வளர்ந்த லட் டிம்ஃபில்லின் இதயம் நொறுங்கியது. பாபா, லாஸ் ஏஞ்சலஸில் இருந்தபோது, ஸான் ஃபிரான்சிஸ்கோ நகரில் அவருக்கு விளம்பரம் வேண்டாம், பத்திரிகை நிருபர்களை சந்திக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தியிருந்தார்; இதனால் அவர் அமெரிக்காவை விட்டு வெளியேறும் முன்னர் அவரது நெருங்கிய அன்பர்களுடன் அதிக நேரத்தை செலவிட வாய்ப்பாக அமைந்தது. இப்போது கடைசி நிமிடத்தில் நியமனங்கள் மற்றும் நேர்காணல்களை மறுசீரமைக்கும் கட்டாயம் ஏற்படவே, மீண்டும், மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதாயிற்று.

திடீரென, பாபா, ஸான் ஃபிரான்சிஸ்கோ நகரில் ஏற்பாட்டுக் குழுவிற்குப் பொறுப்பான கரோலின் ஃப்ரேயிடம் (CAROLINE FRAY) திரும்பி, **"இணைக்கப்பட்ட இரட்டை அறைகளில் தங்கி இருப்பவர்கள் நாளை மதியம் ஒரு மணிக்கு முன்பு கிளம்புவதானால், மேலும் இங்கே உணவு நன்றாக இருந்தால், நான் இங்குத் தங்குவேன்"** என்றார்.

பாபாவிற்குத் தற்காலிக தங்குமிடம் வழங்கப்பட்டது, மேலும் அவர் விரும்பிய மதிய உணவை உண்டார். பின்னர் அவர் தனது அன்பர்களில் சிலரை மாடிக்கு அழைத்தார். ஒரு டஜன் குழந்தைகளால் சூழப்பட்ட பாபா, திவானில் அமர்ந்திருந்ததை அவர்கள் கண்டனர். அவர் ஒரு அப்பாவி குழந்தையைப் போல் அற்புதமான மனநிலையில் அகன்ற புன்னகையுடன் தோற்றமளித்தார். **"இப்போது குழந்தைகள் என்னில் ஏகபோக உரிமையை எடுத்துக்கொண்டதால், பிற ஒருவருக்கும் வாய்ப்பே இல்லை!"**

மேலும், **"நானும் ஒரு குழந்தை"** என்றார்.



**ஸான் ஃபிரான்சிஸ்கோ** (SAN FRANCISCO), **3 ஆகஸ்ட்** (AUGUST) **1956**,
**ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட்** (FRED WINTERFELDT), **மெஹர்ஜி** (MEHERJEE),
**ஆதி சீனியர்** (ADI SENIOR)





**ஹாலிடே லாட்ஜ்,**
**ஸான் ஃபிரான்சிஸ்கோ,**
**ஆகஸ்ட் 1956**
(HOLIDAY LODGE,
SAN FRANCISCO,
AUGUST 1956)

பாபா மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறினார்; அவர் உணவை விரும்பினார்; அங்கேயே தங்குவதாகத் தெரிவித்தார். அருமையான மனநிலையில், அவர் குழந்தைகளுடன் சிறிது நேரம் விளையாடினார், அவருடன் பயணத்தில் பங்கெடுக்காத ஸான் ஃபிரான்சிஸ்கோ அன்பர்களை சந்தித்தார், அனைவரையும் அன்புடன் அரவணைத்தார். பாபா, எனிட் கோர்ஃபிடம் '**அவர் என்ன நினைக்கிறார்**' என்று கேட்டதற்கு, எனிட் கூறினார்: "நீங்கள் எனிட் (ENID) என்ற பெயரிலிருந்து 'ஐ'யை ('I') வெளியே எடுத்தால் அதுதான் முடிவு (END) என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்!" பாபா அந்தக் கருத்தை ரசித்தார்.

பிற்பகல் 2:30 மணிக்கு, நகரின் சுற்றுப்பயணத்திற்காக, லட் டிம்ஃபில் ஓட்டிச் சென்ற ஆக்னஸ் பேரோனின் ஸ்டேஷன் வேகனில் பாபா அழைத்துச் செல்லப்பட்டார். எரச், டாக்டர் நீலு, ஐவி, லட் டிம்ஃபிலின் மகள் டயன் (DIANE) ஆகியோர் அவருடன் சவாரி செய்தனர். பிற அனைவரும் பேருந்தில் சென்றனர். ஜோஸஃப், காரி ஹார்ப் (JOSEPH & KARI HARB) ஆகியோரும் தங்கள் காரில் பின்தொடர்ந்தனர். அவர்கள் 'சைனா டவுன்' (CHINA TOWN), 'ஃபிஷர்மேன் வார்ஃப்' (FISHERMAN'S WHARF), 'டெலிகிராப் ஹில்' (TELEGRAPH HILL) போன்றவற்றைப் பார்வையிட்டனர்; பின்னர் அவர்கள் துறைமுகத்தைப் பார்க்க 'கொயிட் டவரில்' (COIT TOWER) இறங்கினர். அதைத் தொடர்ந்து, அவர்கள் 'லோம்பார்ட் வீதி' (LOMBARD STREET, உலகின் மிகவும் வளைவு, நெளிவுகளைக் கொண்ட வீதி' என்று அழைக்கப்பட்டது) வழியாக 'ப்ரெசிடியோ' தோட்டத்திற்குச் (PRESIDIO GARDENS) சென்றனர். திடீரென, பாபா, லட் பக்கம் திரும்பி, '**நான்கு மணிக்குள் ஹோட்டலுக்குத் திரும்ப வேண்டும்**' என்று சைகையால் தெரிவித்தார்.

அப்போது மாலை 3:45 மணி. மேலும் பாபா அவரிடம் பேருந்தை கண்டுபிடித்து, பிற அனைவருக்கும் தெரிவிக்குமாறு கூறினார். இரண்டையும் ஒரே நேரத்தில் எப்படிச் செய்வது என்று லட் திகைப்பில் ஆழ்ந்தார். பேருந்து எங்கும் தென்படவில்லை; ஆனால் கடைசியில் அவர் அதைக் கண்டுபிடித்து அசுர வேகத்தில் ஹோட்டலுக்குத் திரும்பி, சரியாக நான்கு மணிக்கு அதை வந்தடைந்தார்.

குழு திரும்பி வந்ததும், பாபா அவர்களை மீண்டும் அறைக்கு அழைத்தார். அவர் துயரார்ந்த தோற்றத்தில் காணப்பட்டார். 'கொயிட் டவரை' விட்டு வெளியேறும் அவசரத்தில், கோபுரத்தின் மேலே சென்று கொண்டிருந்த ஸ்பார்க்கி லூக்ஸ் (SPARKIE LUKES), சிறுமி தாரா ஃப்ரே (TARA FREY) இருவரையும் உடன் அழைத்து வரத் தவறிவிட்டனர்.

உள் அலங்கார நிபுணரான ஃபிரெட் ஃப்ரே (FRED FREY), செடி கொடிகளுடன் ஒரு பெரிய சந்திப்பு அறையை அழகுபடுத்துவதில், முந்தைய நாள், பல மணிநேரத்தை செலவிட்டார். யாரோ அவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தில்

அறையைக் குளிரூட்டம் செய்யவே, அனைத்து செடி கொடிகளும் பாழாயின. எனவே ஃப்ரெட் தனது இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, மேலும் பலவற்றைக் கொண்டு வர வேண்டியதாயிற்று. அவர் திரும்பி வந்ததும், பாபா அவரிடம் அறையை நோக்கி வழி நடத்துமாறு கூறினார்; ஆனால் ஃப்ரெட்டால் அறையைக் கண்டுகொள்ள முடியவில்லை.

"**ஃப்ரெட் இப்போது மனநோயால் பாதிக்கப்பட்ட எனது சீடர்களில் ஒருவராகிவிட்டார்**!" பாபா கிண்டல் செய்தார். அறையில் பாபாவின் முன் குழு அமர்ந்திருந்தது, அவர் ஒரு நீண்ட ஸோஃபாவில் அமர்ந்தார், இருக்கையைச் சுற்றி பூச்செடிகளின் அழகான காட்சி அமைக்கப்பட்டிருந்தது. பாபா தொடர்ந்து கூறினார், "**எப்போது என்னை நினைத்து பைத்தியமாக மாறுகிறீர்களோ, உண்மையில் பைத்தியம், ஆனால் உலக அர்த்தத்தில் அல்ல, நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள். என் மீதுள்ள அன்பினால் பைத்தியமானவர்கள் என்னைக் கண்டுகொள்கிறார்கள்.**"

அவர்கள் மாலையில் 'ஐஸ் கேபேட்ஸ்' (ICE CAPADES) நிகழ்ச்சி ஒன்றைப் பார்க்கச் செல்லவிருந்தனர், அப்போது பாபா கூறினார், "**நான் சீக்கிரமாக கிளம்பி வந்தாலும், நிகழ்ச்சி முடியும் வரை அனைவரும் அங்கே இருக்க வேண்டும்.**"

அன்று மாலை, அவர்கள் 'கௌ பாலஸுக்கு'ப் (COW PALACE) புறப்பட்டுச் சென்றனர்; மூடு பனியிலிருந்து தன்னை பாதுகாக்க, பாபா, கம்பளி சாக்ஸ், சிவப்பு கம்பளி ஜாக்கெட், வெள்ளை காட்டன் கால்சட்டை மற்றும் சிவப்பு பைஸ்லி (வளைவு நெளிவுகளால் அச்சிடப்பட்ட) கழுத்து துண்டை அணிந்திருந்தார். அவர்கள் கார்களை எதிர்நோக்கி காத்திருந்தபோது, பாபா, நகைச்சுவையாக சார்மியனின் வெள்ளை ஃபர் (FUR) வட்டத் தொப்பியை எடுத்து அணிந்தார். அவர்கள் அரங்கிற்கு வந்தவுடன், ரத் வைட் எங்கே என்று பாபா கேட்டு, அவரை, தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள கிட்டியை அனுப்பி வைத்தார்.

பாபா, சீக்கிரமாகப் புறப்பட முடிவு செய்தார்; உடல்நிலை சரியில்லாத லுட், பாபாவை திருப்பி அழைத்துச் செல்லும் வேளையில், பாபா அவரிடம் இரண்டு அனாசின் மாத்திரைகளை உண்டு, ஓய்வெடுத்து, காலையில் மருத்துவரை சந்திக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா தனது அறையில் இரவில் ஓய்வெடுத்த வேளையில், கண்காணிப்புப் பணிபுரிந்த எரச்சிடம், நேரத்தைக் கழிக்கும் நோக்கத்தில், அந்த அறையிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை சத்தமின்றி இயக்குமாறு அறிவுறுத்தினார்.

எரச் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அதிகாலை 2:30 மணியளவில், தொலைபேசி ஒலித்தது. அந்த அழைப்பு நியூயார்க் நகரிலிருந்து ஹாரி கென்மோரிடமிருந்து வந்தது. பாபாவுடன் கலிஃபோர்னியாவிற்குச் சென்றிருக்கலாம் என்று எவரும் அவருக்குத் தெரிவிக்காததால், அவர் உடனடியாக அங்கிருந்து விமானத்தில் வரலாமா என்று கேட்டார். "**இப்போது வராதீர்கள். என்னிடம் வருவதற்கான பல வாய்ப்புகள் உங்களுக்கு எப்போதும் வரலாம்**" என்று கென்மோரிடம் கூறுமாறு பாபா எரச்சிடம் சைகையால் தெரிவித்தார்.

1956 ஆகஸ்ட் 4 சனிக்கிழமை அன்று காலை 9:30 மணிக்கு, பாபா, நேர்காணலுக்காக சந்திப்பு அறைக்கு வந்தார். பாபாவை சந்தித்தவர்களில் பெரும்பாலானோர் ஸான் ஃபிரான்சிஸ்கோ ஸூஃபிகள்; ஆனால், ஒரு சீக்கிய ஆன்மீக ஆசிரியரும் எழுத்தாளருமான டாக்டர் பகத் ஸிங் தின்ட் (DR. BHAGAT SINGH THIND, 63), உட்பட மேலும் பலர் வந்தனர். ஜோஸஃப் ஹார்ப் போன்ற பாபா அன்பர்களில் சிலர், பாபாவின் தொடர்பில் வருவதற்கு முன்னர், டாக்டர் பகத் ஸிங், அவர்கள் மீது வலுவான செல்வாக்கைக் கொண்டிருந்தார். பாபா பின்னர் அனைவரையும் சந்தித்தார்; மேலும், டான் 'கடவுளின் தெய்வீக வணிகம்' (GOD'S DIVINE BUSINESS) என்ற தலைப்பில் ஒரு செய்தியை வாசித்தார்.

ஏறக்குறைய 60 வயதைத் தாண்டிய, மன்மத நாத் சாட்டர்ஜி (MANMATHA NATH CHATTERJEE), நன்கு கற்றறிந்த பிராமண வம்சத்தைச் சார்ந்த மற்றுமோர் இந்தியரும் அன்று பாபாவை சந்தித்தார். சாட்டர்ஜி, ஒஹையோ (OHIO) மாநிலத்தில் 'ஆன்றியாக் கல்லூரி'யில் (ANTIOCH COLLEGE) முன்னாள் சமூகவியல் பேராசிரியராகவும், அவரது முன்னாள் மாணவர்களில் ஒருவரான ஆக்னஸ் பேரோனின் அன்பான நண்பராகவும் இருந்தார். ஆக்னஸ் பல ஆண்டுகளாக மெஹர் பாபாவை சந்திக்கும் விதத்தில் 'சாட்டர்ஜி'யிடம் ஒரு நம்பிக்கையை உருவாக்க முயன்றார்; ஆனால் அவர் ஆக்னஸின் முயற்சிகளை நிராகரித்தார்: "மேற்கத்தியர்களான நீங்கள் படு முட்டாள்கள்! பின்விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதைத் தெரியாமல், நீங்கள் இந்த ஆன்மீகப் பேர்வழிகளின் பின்னால் ஓடுகிறீர்கள். உங்கள் வாழ்க்கையை உள்ளளவில் மாற்றத் தயாராக இருக்கும் வரை, அவர்களிடமிருந்து விலகி இருங்கள்!"

தற்செயலாக சாட்டர்ஜி அன்று காலை 11:00 மணிக்கு ஆக்னஸை தொலைபேசியில் தொடர்புகொண்டு மதிய உணவுக்காக அழைத்தார். ஆக்னஸ் சீற்றமடைந்து, "மெஹர் பாபாவை சந்திக்க வரவில்லை என்றால், நான் உங்களிடம் மீண்டும் பேசமாட்டேன்!" என்று அச்சுறித்தினார். அதனால், தயக்கத்துடன் அவர் ஹோட்டலுக்கு வந்தார். மதிய உணவுக்கு நேரமாகிவிட்டது, இருந்தாலும், சாட்டர்ஜியை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு ஆக்னஸ்,

ஆதியிடம் வேண்டினார். அவர்கள் பாபாவின் அறைக்கு வெளியே ஒரு நீள் இருக்கையில் அமர்ந்திருந்த வேளையில், அங்கு வந்த பாபாவிடம் ஆதி தகவல் தெரிவிக்க, சாட்டர்ஜியின் கையை பாபா, அவரது உள்ளங்கைகளுக்கு இடையே பற்றிக்கொண்டு, அவரை அறைக்குள் அழைத்துச் சென்றார். ஆக்னஸ் வெளியே காத்திருந்தார்.

அரை மணி நேரம் கழித்து சாட்டர்ஜி, எப்பொழுதும் மிகவும் நேராக, கிட்டத்தட்ட இராணுவ அதிகாரியின் தோற்றத்துடன் இருப்பவர், கூனி குறுகி சிரமத்துடன் வெளியே வந்தார். ஆக்னஸ் அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். சாட்டர்ஜி ஏறக்குறைய மயங்கிய நிலையில், "நான் வந்திருக்க வேண்டும், நான் வந்திருக்க வேண்டும்!" என்று முணுமுணுத்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அங்கிருந்து வெளியேறினார். அதைத் தொடர்ந்து அவர் தனது புத்தகம் ஒன்றின் பிரதியை பாபாவிற்கு அனுப்பி வைத்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர், அவரது உடலின் இடது பாகம் செயலிழந்து, உயிரைத் துறந்ததாக ஆக்னஸுக்குத் தகவல் வந்தது. பக்கவாதத்திற்கான காரணத்தை மருத்துவர்களால் கண்டறிய முடியவில்லை, அவர்களில் ஒருவர் அவருக்கு 'ஒருவித அதிர்ச்சி' ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

34 வயதான ஹெர்மன் அல்வாரடோ (HERMAN ALVARADO), 1950ஆம் ஆண்டு தனது சக ஸூஃபி ஜோஸஃப் ஹார்ப் மூலம் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார். ஆனால் பாபாவின் ஸான் ஃபிரான்சிஸ்கோ விஜயம், ஹெர்மன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு, பாபாவை சந்திக்கும் முதல் வாய்ப்பாக அமைந்தது. அவருடைய தனிப்பட்ட நேர்காணலில், பாபா அவரை அன்புடன் நோக்கி, "**நீங்கள் எதற்காக ஏங்குகிறீர்களோ, அதைக் கண்டுகொள்ள நான் உங்களுக்கு உதவுவேன்**" என்று கூறினார். அடுத்த நாள் நடந்த நேர்காணலில், பாபா, ஹெர்மன், அவரது மனைவி ஹெலன் (HELEN) இருவரையும் சந்தித்தார். பாபா அவர்களின் தலைகளை ஒன்றாக இணைத்து, "**கடவுள் உங்கள் இருவரையும் கணவன் மனைவியாக ஒன்றுசேர்த்து வைத்தார்**" என்று கூறினார்.

4ஆம் தேதி மதிய உணவுக்குப் பிறகு, பாபா, ஃபிலிஸ் ஃபிரடெரிக்குடன் 'தி அவேக்கனர்' (THE AWAKENER) பத்திரிகை குறித்து ஒரு சுருக்கமான சந்திப்பை நிகழ்த்தினார். அதை முழுவதுமாக பாபாவிற்கு அர்ப்பணித்து, பொருளாதார ரீதியாக சிரமங்கள் இருந்தாலும், அதைத் தொடர வேண்டும் என்ற ஃபிலிஸின் தீர்மானத்தில் அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாபா, ஃபிலிஸிடம், "**நான் இந்தப் பௌதீக உடலைக் கைவிட்ட பிறகு, புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் அனைத்தும் போய்விடும். நான் உங்களுக்கு உதவுவேன்**" என்றார்.

நேர்காணல்கள் தொடர்ந்தன, மேலும் டான் ஸ்டீவன்ஸ் பல குறுஞ்செய்திகளை வாசித்தார். மாலை 4:00 மணிக்கு, பாபா மண்டலியுடன் '406, ஸட்டர் வீதி'யில் (SUTTER STREET) அமைந்த 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' (SUFISM REORIENTED) மையத்திற்கு விஜயம் செய்தார். பாபா, பிரதான நாற்காலியில் அமர்ந்து, தமது ஆள்காட்டி விரல்களை குறுக்காக வைத்து, சிலுவையைக் குறிப்பிட்டு சைகையால் தெரிவித்தார் (இதை ஆதி மொழிபெயர்த்து வழங்கினார்), "**நான் கிறிஸ்து என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நான் எனது மௌனத்தைக் கலைக்கும் அந்தத் தருணத்தில், உலகம் முழுவதும் அதை அறிந்து கொள்ளும்**."

ஐவி கண்கலங்கி அழத் தொடங்கினார். பாபா அவரை அழைத்து தன் அருகில் அமர வைத்தார். வலிமை மற்றும் வழிகாட்டுதலின் மௌன ஆசீர்வாதத்தில் பாபா, ஐவியின் தலையில் கை வைத்து, "**இப்போது நான் இந்த இடத்தை ஆசீர்வதித்துவிட்டேன்; இதைப் பாதுகாக்க முயற்சி செய்யுங்கள்**" என்று கூறினார்.

பாபா 1926ஆம் ஆண்டு, மெஹராபாத் மேல் மலையில் அமைந்த தனது எதிர் கால சமாதியில் ஒரு வருட உபவாசம் மற்றும் ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். அவர் இருந்த இடத்திலேயே, அவரைத் தள்ளி அசைக்க முயற்சிக்குமாறு அவர் மண்டலியிடம் கேட்டுக் கொண்டார். ஏறக்குறைய 20 பேர் அவரது முதுகில் கைகளை வைத்து, அசைக்க முயற்சித்தனர், ஆனால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. மேலும் பாபா ஆறு மாதங்களாக, காஃபி மட்டுமே அருந்தி வாழ்ந்து வந்தார்!

ஆரம்ப காலத்தில் பாபா அதிகாலையில் எழுந்து பாடுவதை வழக்கமாகக் கொண்டார் என்று ஆதி மேலும் கூறினார். "அவருடைய குரல் வளமையாகவும், ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் உணர்வு நிறைந்ததாகவும் இருந்தது.

பாபா பின்னர் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்று லட் டிம்ஃபிலை அவரது அறையில் பார்த்தார். லட் நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்தார். "**நீங்கள் உடல் நலமின்றி இருப்பதில் மகிழ்ச்சியாக இல்லையா? இந்த நேரத்தில் பாபா உங்களை நேரில் பார்க்க வந்துள்ளார். நான் இங்கு இருக்கும் வேளையில், நோய்வாய்ப்பட்ட உங்களைப் பார்க்க வந்ததில் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று பாபா கேட்டார். லட் மகிழ்ச்சியில் சிரித்தார். பாபா, அவரது மனைவிக்கு (பீ, BEA) அறிவுரைகளை வழங்கி, அவர் இரண்டு நாட்களில் சரியாகிவிடுவார் என்று கூறினார்.

டாக்டர் ஆச்சரியப்படும் விதத்தில், சரியாக இரண்டு நாட்களில் லட் முழுமையாக குணமடைந்தார். பாபா பின்னர் இவ்வாறு வெளிப்படுத்தினார், "**சில**

**மாதங்களில் ஏற்படவிருந்த மிகப் பெரிய அளவிலான இடர்பாட்டிலிருந்து லூட்டைக் காப்பாற்ற நான் இந்த நோயைத் தூண்டினேன்.**"

பாபா, லட் டிம்ஃபிலின் பதிமூன்று வயது மகள் டயானுக்கு 'த்ரீ-பி' - (THREE-B) அதாவது பாபாவின் பிரியமான குழந்தை (BABA'S BELOVED BABY) என்று அன்புடன் பெயர் சூட்டினார். அவர் த்ரீ-பியிடம் கூறினார்: "**அடுத்த முறை நான் வரும் வேளையில், உங்களை இந்தியாவிற்கு அழைப்பேன்.**"

1956 ஆகஸ்ட் 5 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், ஃபிலிஸ் ஃபிரடெரிக், அடெல் வோல்கின், பிலி ஈட்டன், பெரில் வில்லியம்ஸ் ஆகியோர் பாபாவின் அறைக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களுடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர், அவர் ஐவி, டான் ஸ்டீவன்ஸ் இருவரையும் அழைத்து, இந்தப் பயணத்தில் வழங்கப்பட்ட அனைத்து செய்திகளையும் தொகுத்து, ஐந்து மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்ற தனது விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தபோது, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டனர், ஆனால் மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸத்தின் வெளியீட்டில் உருவான 'உன்னதமான வாழ்வு' (LIFE AT ITS BEST) என்ற குறுகிய புத்தகம் வெளிவர ஒரு வருடத்திற்கும் மேலானது.

அப்போது பிற அனைவரும் வரவழைக்கப்பட்டனர், பாபா தனது எதிர்வரும் திட்டங்களைப் பற்றி கூறினார்: "**நேற்று இரவு நான் எல்லாவற்றையும் யோசித்தேன். நான் பல உலகளாவிய பணிகளில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. எனது ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்பு, நான் அழைக்க விரும்பும் கூட்டத்தைப் பற்றி முடிவு செய்தேன். (1957) நவம்பர் 7ஆம் நாள் தொடங்கி, சில நாட்களுக்குத் தொடரும் என்று முடிவு செய்தேன். நான் மேற்கத்திய நாடுகளிலிருந்து அழைக்கவிருக்கும் அனைவருக்கும், இந்திய அன்பர்களுக்கும் அறிவுறுத்தல்களை அனுப்புவேன். மேற்கத்திய குழு எப்போது வர வேண்டும், எவ்வளவு காலம் தங்க வேண்டும் - எடுத்துக்காட்டாக ஒரு மாதம், என்பதைத் தெரிவிக்கும் வழிமுறைகள் இதில் அடங்கும். கூட்டத்திற்காக அழைக்கப்படும் அனைவருக்கும் 1957 மார்ச் மாதம் அறிவுறுத்தல்களை அனுப்புவேன்; மேலும், தங்கும் வசதிகள் மற்றும் ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்யவேண்டி இருப்பதால், அவர்களின் பதில்களையும் பரிந்துரைகளையும் விரைவில் எதிர்பார்க்கிறேன். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் குழு, ஒரு மாதம் இங்கு இருக்க வேண்டும். டேனா, செவ்வாய் கிரகத்தில் இருப்பவர்களும் நீங்கள் கூறுவதைக் கேட்கும் வகையில் இதையெல்லாம் உரத்த குரலில் மொழியுங்கள்!**" என்றார் பாபா.

டேனா செவ்வாய் கிரகத்தை தொடர்பு கொள்ளும் விதத்தில், அவரால் முடிந்த வரை குரல் கொடுத்தார்!

எலிஸபெத் பேட்டர்ஸன் உடனே, “இப்போதே பதில் சொல்ல முடியுமா?” எனக் கேட்டார்.

பாபா தொடர்ந்து விளக்கினார்: **“ஏற்பாடுகளுக்கு எனக்கு ஆறு மாதங்கள் தேவைப்படும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து - அனைத்து இந்திய குழுக்களும் - அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்ய நேரம் எடுக்கும். டான், இதையெல்லாம் மிகவும் சத்தமாகக் கூறுங்கள், கடல் மீன்கள் கூட நீங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்!** (தொடக்கத்திலிருந்து) **தொடங்குங்கள். மூடுபனியாக இருப்பதால் பாபாவால் கேட்க முடியாது!”**

சிரிப்பொலி அறையை அதிர வைத்தது. “அவரது அன்பர்களிடையே மிகப்பெரிய, அரிதாகவே அடக்க முடிந்த உற்சாகத்தின் சூழல் நிலவியது; அன்பிற்குரியவரே அவர்களை இந்தியாவிற்கு வருமாறு அழைப்புவிடுத்தார்!” என்று காலம் பறைசாற்றியது.

பாபா தொடர்ந்து கூறினார்: **“ஒவ்வொருவரும் தத்தமது பயணச் செலவுகளை செலுத்த வேண்டும். கூட்டத்திற்கான தொகையை பிப்ரவரி 15க்குப் பிறகு வழங்கலாம். இந்திய குழுக்களிடமிருந்தும் பங்களிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு மாத காலம் தங்குவதற்கான ஏற்பாடுகளுக்கு கணிசமான பணம் தேவைப்படும்.”**

பென் ஹேய்மன் கேள்வி எழுப்பினார், “கூட்டம் ஆண்களுக்காக பிரத்தியேகமாக இருக்குமா?” உடனடியாக எதிர்ப்புக் கூச்சல்கள் பெண் குழுவிலிருந்து எழுந்தன.

பாபா பதிலளித்தார், **“இந்தியப் பெண்மணிகள் என் மீது கோபமாக இருக்கிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு** (வாக்குறுதி வழங்கியதற்கு இணங்க) **எனது சகவாசத்தை வழங்க முடியவில்லை. இந்த சந்திப்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது. இது எனது செயல்பாடுகளின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாததாக இருக்கும். நான் எனது பிரியமான ஏழு புனிதர்களையும் கூட்டத்திற்காக அழைப்பேன்.”**

**“90 சதவிகிதம் பெண்கள், 10 சதவிகிதம் ஆண்கள்”** என்று பாபா கிண்டல் செய்தார்.

மரியன் ஃப்ளோர்ஷெய்ம் கேட்டார், “எவ்வளவு தொகையைத் திரட்ட முயற்சிக்க வேண்டும், பாபா?”

**“இரண்டு கோடி டாலர்கள்!”** என்று கேலி செய்தார். **“நீங்களும் ஐவியும் அதை சேகரிக்க வேண்டும்!”**

காலை 8:00 மணியளவில், குழுவினர் காலை உணவுக்காக கலைந்து சென்றனர். அன்று காலை, பாபா, மண்டலி மற்றும் பலர், ஐவி டியூஸ் (‘45 ஓல்ட்

லா ஹோண்டா சாலை', உட்ஸைட் - 45 OLD LA HONDA ROAD IN WOODSIDE), டான் ஸ்டீவன்ஸ் ('323 ஓக்வுட் பிளேஸ்', மென்லோ பார்க் - 323 OAKWOOD PLACE MENLO PARK) மற்றும் ஃபிரெட் ஃப்ரே ('1326 மார்ல்போரோ சாலை, ஹில்ஸ்பரோ - 1326 MARLBOROUGHROAD, HILLSBOROUGH) ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்றனர். ஐவியின் இல்லத்தில், பாபா எல்லா மூலை முடுக்குகளுக்கும் நடந்து சென்ற அவ்வேளையில், அவரது விரல்கள் தொடர்ந்து நகர்ந்த வண்ணம் பணிபுரிந்தன.

மென்லோ பார்க்கிற்குச் செல்லும் வழியில், டான் ஸ்டீவன்ஸ், பாபா குழுவின் கூட்டங்களை மனதில் வைத்து தனது இல்லத்தைத் தேர்ந்தெடுத்ததாக விளக்கினார், ஏனெனில் அது மிகப் பெரிய மற்றும் அழகான வரவேற்பு அறையை உள்ளடக்கியது என்பதால் இது சிறப்பான சூழலைக் கொண்டதாக இருக்கும் என்று டான் உணர்ந்தார். தொடர்ந்து டான், முரண்பாடான நகைச்சுவை தொனியில் கூறினார்: "ஆனால் அவதார புருஷரின் மனதில் யோசனைகளைத் திணிக்க முயற்சிக்க வேண்டாம் என்று பாபா எனக்குக் கற்றுத் தந்தார்." பாபா வீட்டை வெளியிலிருந்து பரிசோதித்த அடுத்த கணமே, வானில் கைகளை உயர்த்தி, வீட்டை விரைவில் கைவிடுமாறு அறிவுறுத்தி, டானை முழு அதிர்ச்சிக்குள்ளாக்கினார்!

ஃப்ரே தம்பதியினர் இல்லத்தில் அனைவரும் அரிசி இடியாப்ப வகை உணவுடன் இறால் மீன் உண்டனர். பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ராபர்ட் என்ற இளைஞரை ஃப்ரெட் பணியமர்த்தி இருந்தார், பாபாவைப் பற்றி அவருக்கும் அவருடைய முழுக் குடும்பத்திற்கும் தெரியும்.

ஒரு சந்தர்ப்பத்தில், ராபர்ட், ஃப்ரெட்டிடம் "(பிலிப்பைன்ஸ்) தீவுகளில் வாழும் பலருக்கு இறைவன் பூமியில் மனித உருவில் இருக்கிறார் என்பது தெரியும்" என்று கூறினார்.

பாபா ஹோட்டலுக்குத் திரும்பியதும், மார்கரெட்டின் நடனக் கலைஞர்கள் அவர் முன்னிலையில் நடனமாட, நீண்ட காலமாக வாக்குறுதியளித்ததற்கு இணங்க நிகழ்ச்சிக்காகக் காத்திருந்தனர்.

மர்டில் பீச் மையத்தில் பாபா அவர்களிடம், **"நீங்கள் எனக்காக நடனமாட விரும்புகிறீர்களா?"** என வினவி, இரண்டு நாட்களில் தயாராக இருக்குமாறு கூறினார். நடனக் கலைஞர்கள் தயாராக வரவில்லை என்றாலும், அவர்கள் கடற்கரைக்குச் சென்று ஒன்றாக நடனப் பயிற்சியில் ஈடுபட்டனர். அவர்களிடம் இசைக் கருவிகள் இல்லாததால், தாளத்தை முணுமுணுத்துக் கொண்டே கைகளைத் தட்ட வேண்டியிருந்தது. பாபா அவர்களின் நடன நிகழ்ச்சியை நடத்தக் கூறவில்லை. அவர்கள் ஸான்ஃபிரான்சிஸ்கோ வந்தடைந்த பிறகுதான், **"நாளை மதியம் 2:00 மணிக்கு நீங்கள் எனக்காக நடனமாடுவீர்கள்"** என்று அவர்களிடம் கூறினார்.

நடனக் கலைஞர்களுக்காக நேர்காணல் அறையை பாபா மூடிவிட்டார். பாபா, மண்டலி, மார்கரெட் மற்றும் பிலி ஈட்டன் மட்டுமே உள்ளே இருந்தனர். மேரி அடேர் (MARIE ADAIR), டெக்ஸ் ஹைடவர், பன்டி கெல்லி, பீட்டர் ஸால் ஆகியோர் ஆரம்பத்தில் 'ஹைலேண்ட் ஃபிளிங்' (HIGHLAND FLING) ஒன்றை நிகழ்த்தினர், மேலும் டெக்ஸ், பன்டி இருவரும் 1920ஆம் ஆண்டுகளில் பிரபலமான 'பிளாக் பாட்டம்' (BLACK BOTTOM) என்று அழைக்கப்படும் நடனத்தை நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து, ரஷ்ய பாலே 'லேண்ட் ஆஃப் தி மிட்நைட் ஸன்' (RUSSIAN BALLET "LAND OF THE MIDNIGHT SUN") தொகுப்பிலிருந்து மேரி அடேர் தனியாகப் பங்கெடுத்த 'டான்ஸ் ஆஃப் தி ஸன் மெய்ட்' (DANCE OF THE SUN MAID) வழங்கப்பட்டது. பீட்டர் ஸால் சில வித்தியாசமான காலணிகளுடன் பாபாவுக்காக தனியாக நடனமாடினார். பிற அனைவரையும் போலவே, அவரும் பாபாவின் அன்பான அரவணைப்பை வெகுமதியாக அடையப்பெற்றார்.

மகிழ்ச்சியாக, நிதானமான மனநிலையில் இருந்த பாபா, "**இத்தகைய நடனத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புகிறேன்!**" என்ற உணர்வை வெளிப்படுத்தினார். அவர் மார்கரெட் மற்றும் குழுவினருடன் இணைந்து நிற்க, சார்மியன் புகைப்படம் எடுத்தார். பின்னர் அவரது அறையில் நடனக் கலைஞர்களுக்காக அவருடன் தனியாக சில நிமிடங்களை வழங்கினார். பாபா, அவர்களைக் கேலி செய்து, மார்கரெட் எதிர்பாராத நேரத்தில் அவரது கன்னத்தில் தட்டி தனது பழைய விளையாட்டு வித்தையைக் காட்டினார்.

பலமுறை பாபா தனிநபர்களை இரண்டு அல்லது மூன்று சிறிய குழுக்களாக சந்தித்தார். அவர் ஒரு சிறுவனிடம் வலியுறுத்தி கூறினார், "**என்னை மேலும் மேலும் நேசிக்கவும்.**"

இன்னொருவரிடம் பாபா, "**நான் ஓர் அப்பாவி குழந்தை, உங்களையும் அவ்வண்ணமே மாற்றுவேன்**" என்று குறிப்பிட்டார்.

புதிதாக வந்த ஒரு நபரிடம், பாபா கூறினார், "**நான் எல்லோரிலும் இருக்கிறேன் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். நான் இந்த உடல் அல்ல. நான் இறை பெருங்கடல். நீங்கள் என்னை அதி தீவிரமாக நேசித்தால், என்னை எல்லா இடங்களிலும் காண்பீர்கள்.**"

குடும்ப பிணைப்புகள் இல்லாத ஒருவரிடம், அவர் கூறினார்: "**நீங்கள் பிணைக்கப்படாமல் இருப்பதால் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று உங்களுக்குத் தெரியாது.**"

அவரிடம் வந்த மூன்று சகோதரிகளுக்கு பாபா அறிவுரை வழங்கினார்: "**தூய்மையான இதயத்துடன் இருங்கள்.**"

ஏறக்குறைய கண்கலங்கி அழுதுகொண்டே பிலி ஈட்டன், பாபாவிடம், "நீங்கள் எனது குருநாதர் இல்லை என்று யாரோ ஒருவர் என்னிடம் கூறினார்கள்!"

**“குருநாதர்கள், குருநாதர்கள்!”** பாபா எரிச்சலுடன் பதிலளித்தார். **“குருநாதர்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை! நான் உங்கள் கடவுள்!”**

இளமையான தீயணைப்பு வீரர் ஒருவர், பழங்களைப் பரிசாகக் கொண்டு வந்து பாபாவிடம், “என் இதயத்தைத் திறந்து மேலும் அதிகமாக நேசிப்பது எப்படி?” என்று கேட்டதற்கு, **‘நள்ளிரவில் பாபாவின் நாமத்தை 100 முறை திரும்பத் திரும்ப மொழியுமாறு’** அறிவுறுத்தினார்.

பாபாவிற்கு எதிராக விரோத மனப்பாங்குடன் இருந்த ஒரு பெண்மணி, அவரை சந்தித்த மறுநாளே, கண்ணீருடன் தனது தவறை ஒப்புக்கொண்டார், “அந்த அழகான மனிதரைத் தவிர வேறு எதையும் என்னால் நினைக்க முடியாது. நான் கொஞ்சம் பாரபட்சமாக இருந்ததை ஒப்புக்கொண்டாக வேண்டும்... நான் அவரைப் பார்த்ததிலிருந்து நான் செய்ததற்கெல்லாம் கடவுள் என்னை மன்னிப்பாராக என்ற ஒரே ஒரு பிரார்த்தனையை மட்டும் மொழிந்தேன்.”

ஒரு சிறுமியிடம் பாபா **“நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?”** என்று கேட்டதற்கு, அந்த சிறுமி, “நீங்கள் என் அம்மாவை நேசித்தால் நான் உங்களை நேசிக்கிறேன்!” என்றதும் பாபாவின் முகத்தில் அருமையான புன்னகை மலர்ந்தது.

மதியம் 2:30 மணிக்கு, மெஹர் பாபாவுடனான விருந்தோம்பல் குழுவின் கூட்டத்தில், மரியன் ஃப்ளோர்ஷெய்ம் நிதி மற்றும் இறுதி இருப்பு அறிக்கையை வழங்கினார். பாபா, **“அனைவரும் உங்களை நம்புகிறார்கள், நானும் உங்களை நம்புகிறேன், அதனால் எல்லாம் சரியாக இருக்கிறது”** என்று கூறினார். ஐவி, அனைவரின் சார்பாகவும் மரியனுக்கு நன்றி தெரிவித்தார், பின்னர் எலிஸபெத் பேட்டர்ஸன், பாபாவின் அமெரிக்க வருகைக்காக குழுவின் நன்றியைத் தெரிவிக்க எழுந்தார்.

பாபா பதிலளித்தார்: **“உங்கள் கடலளவான அன்பையும் உணர்வையும் நான் காணும்போது, எல்லையற்ற இறை பெருங் கடல், அவரது அன்பர்களின் அன்பால் கிளர்ந்தெழுகிறது. உங்கள் அன்பு அளவிறுதியற்ற அந்தக் கடலில் அலைகளை உருவாக்குகிறது. எத்தனை அலைகள் என்று உங்களுக்குத் தெரியாது.**

**“கடந்த நாட்களில் நிகழ்ந்த அனைத்தும் எனது தெய்வீகத் திட்டத்தின்படியே நடந்தன. நீங்கள் என் மீது கொண்ட அன்பினால் நான் அளப்பரிய மகிழ்ச்சி அடைகிறேன்.”**

தொடர்ந்து மூன்று செய்திகள் வாசிக்கப்பட்டன: ‘வாழ்க்கையின் மீற முடியாத ஒருமைத்தன்மை’ (THE INVIOLABLE UNITY OF LIFE), ‘அனைத்தும் ஆழ் இதயத்திலிருந்து’ (ALL IS FROM WITHIN) மேலும் ஒன்று.

பிற்பகல் 3:15 மணிக்கு, முழுக் குழுவும் பாபாவின் அறையில் மீண்டும் ஒன்று கூடியபோது, இந்தியப் பயணத்தைப் பற்றி மேலும் விவாதம் நடந்தது. பாபா விரிவாகக் கூறினார்:

**உங்களில் பெரும்பாலானோர் என்னைப் போலவே பணம் காசு இல்லாதவர்கள் என்பதை நான் அறிவேன். நான் பிரபஞ்சத்தின் இறைவன் என்றாலும், எனது பைகளில் எப்பொழுதும் ஓட்டைகளாகவே நிறைந்திருக்கும்! இந்தியா வந்து போகத் தேவையான பயணக் கட்டணங்களில் மிகுந்த சிரமம் இருக்கும். உங்களில் சிலர், பயணக் கட்டணத்தை விட அதிகமாக கூட்டத்திற்காகப் பங்களிக்க முடியும். எதுவும் இல்லாத ஒருவரின் ஒரு டாலர் பங்களிப்பு, அதிகமாக வைத்திருப்பவர்கள் வழங்கும் லட்சம் டாலர்களுக்கு சமம் என்பது எனக்குத் தெரியும். இந்த சந்திப்பின் போது நிறைவேற்ற வேண்டிய இதர திட்டங்களும் என்னிடம் உள்ளன. இந்த சந்திப்பு ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் முழு உலகையும் உலுக்கக்கூடியது. நான் ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதால், பிப்ரவரி 15ஆம் தேதிக்கு முன்னர் எந்தப் பங்களிப்பையும் அனுப்ப வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளவும். உங்கள் பங்களிப்புகளை ஆதிக்கு அனுப்பவும், ஆனால் 15ஆம் தேதிக்குப் பின்னரே அனுப்பவேண்டும். 15ஆம் தேதிக்குப் பிறகு, கூட்டத்தின் முழுச் செலவுக்கும் நன்கொடைகள் போதுமானதாக இருப்பதைக் கண்டால், கூட்டத்திற்கான அனுமதியை நான் வழங்குவேன். போதுமான நிதி இல்லை என்றால், ஆதி பங்களிப்பாளர்களுக்குத் தொகையைத் திருப்பித் தருவார். இந்தியாவில் உள்ள பங்களிப்பாளர்களுக்கும் இது பொருந்தும்.**

**நான் கூட்டத்தை நடத்த விரும்பவில்லை என்ற கேள்விக்கே இடமில்லை. அந்தக் கூட்டத்தில் நீங்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஏனெனில் அது மிகப்பெரிய ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது.**

**இந்தியாவில் வாழும் என் அன்பர்கள், சேவகர்கள், பக்தர்கள், புனிதர்கள் அனைவரையும் அழைக்கப் போகிறேன். கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு அதிக செலவு ஏற்பட வாய்ப்பில்லை. அவர்களின் தங்குமிடங்களை எளிதான முறையில் ஏற்பாடு செய்யலாம். ஆனால், மேற்கத்திய அன்பர்களின் வாழ்க்கைத் தரம் காரணமாக, ஒரு மாதம் தங்குவதற்கு கணிசமாகச் செலவாகும். அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கெடுப்பதை விரும்புகிறேன். அடுத்த 700 ஆண்டுகளுக்கு இப்படி ஒரு வாய்ப்பு வரப்போவதில்லை. இந்த சந்திப்புக்குப் பிறகு, மேற்கத்திய நாடுகளில் எவரும் என்னைப் பார்ப்பதில் உறுதியாக இருக்க முடியாது.**

எலிஸபெத் வெளியளவில் மர்டில் பீச் மையத்தை உள்ளடக்கிய சில உதவிகளை வழங்கியிருந்தார், ஆனால் பாபா கூறினார்:

**கூட்டத்திற்கு எனக்கு பணம் தேவை, ஆனால் மர்டில் பீச் மையத்திற்குச் சொந்தமான பணத்தைத் தொடக்கூடாது, நான் எனது பௌதீக உடலைக் கைவிட்ட பின்னர், அது ஒரு புனித ஸ்தலமாக மாறும்; ஏனெனில் அதில் பாபாவின் இதயம் உள்ளது. எலிஸபெத்தின் சேவை, அவரின் அதீத அன்பு, அர்ப்பணிப்பு அனைத்தும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. மர்டில் பீச் மையத்தைத் தவிர, அவர் எனக்கு ஏராளமாகச் செய்துள்ளார்; உங்களுக்கு அதைக் குறித்த சிறிதளவு யோசனையும் இருக்க வாய்ப்பில்லை.**

அவர் தொடர்ந்து கூறினார்:

**உங்கள் பயணக் கட்டணத்திற்காகவோ அல்லது பங்களிப்புகளுக்காகவோ நீங்கள் கடன் வாங்குவதை நான் விரும்பவில்லை. இருப்பினும், தவணைத் திட்டத்தின் கீழ் உங்கள் பயணச் சீட்டுகளை வாங்கலாம். உங்கள் பங்களிப்புகள், 'இது மெஹர் பாபாவிற்கு வழங்கும் நிபந்தனையற்ற அன்பளிப்பு' என்ற குறிப்புடன், ஆதி ஈரானிக்கு நேரடியாகவோ அல்லது குழுத் தலைவர்கள் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.**

**இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நான் கிறிஸ்துவாக இருந்தபோது, 'அனைத்தையும் விற்றுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்' என்று கூறினேன். இப்போது நான் என் அன்பர்களிடம், 'அனைத்தையும் விற்று விலையாக்கி என்னிடம் கொடுங்கள், ஏனெனில் நான் ஏழைகளில் ஏழை' என்று வெளிப்படையாக எடுத்துரைக்க இந்தக் கூட்டத்தை அழைக்கிறேன். இந்த சந்திப்பில், எனது தெய்வீகத் தன்மையைக் குறித்த ஒரு குறுகிய காட்சியை வழங்கி, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு என்னை வெளிப்படுத்தப் போகிறேன். நீங்கள் அனைவரும் அங்கு வருவதானால் நான் மிக்க மகிழ்ச்சியாக இருப்பேன்.**

**இந்தப் பங்களிப்புகளுக்காக எவரும் பிறரின் ஆதரவை நாட வேண்டாம். வீதிகளில் வலம் வந்து நன்கொடைக்காக யாசிக்க வேண்டாம். என்னை நேசிப்பவர்களிடமும், அன்புடன் வருபவர்களிடமும் கேளுங்கள். ஒருவரால் எதையும் அன்பளிப்பாக வழங்க முடியாவிட்டால், சிறிதும் கவலைப்பட வேண்டாம். அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது. நீங்கள் என்னை நேசிப்பதால், நீங்கள் எனக்கு கொஞ்சம் கொடுத்தீர்கள். உங்களுக்கு குழந்தைகள் இருந்தால், அவர்களின் பராமரிப்பை உங்கள் இல்லத்திலேயே ஏற்பாடு செய்ய முயற்சிக்கவும். கூட்டத்திற்கு குழந்தைகளை அழைத்து வரக்கூடாது. இது ஒரு மாதம் முழுவதும் நீடிக்கும். ஒரு முழு மாதம் தங்கமுடியுமானால் மட்டுமே வரவேண்டும். உங்களுக்கு வழங்கும் முதல் 25**

**நாட்களில் நான் உங்களுடன் விளையாடுகிறேன், பின்னர் 26ஆவது நாளில் உங்கள் அனைவருக்கும் எனது சுய ரூபத்தைக் குறித்த குறுகிய பார்வை ஒன்றை வழங்குகிறேன். அந்த அன்பளிப்பை நான் எப்படித் தள்ளிப்போட முடியும்? நீங்கள் அனைவரும் ஒரு முழு மாதம் அங்கு வர முயற்சிக்க வேண்டும். நான் வரவழைத்தவர்கள் மட்டும் வரலாம். அவர்களின் தங்கும் வசதி மற்றும் இதர செலவுகளை அங்குள்ள குழு ஏற்றுக்கொள்ளும்.**

'நிச்சயம் பங்கெடுக்கும்' 50 அன்பர்களின் பெயர்களை வரிசையாக எடுத்துக் கூறி, வலியுறுத்தும் விதத்தில் கைமுட்டியை உள்ளங்கையில் அடித்தார். **"'நிச்சயம் வர வேண்டும்' என்று நான் இந்த அடையாளக் குறிப்புடன்** (அவரது கைமுட்டியை உள்ளங்கையில் அடிப்பது) **கூறிய பின்னரும் அவர் வராவிடில், அந்த நபருக்கு எந்த பயனும் இருக்காது, அது அவருக்கு சிரமமாக இருக்கும்."**

பாபா தொடர்ந்தார்: **"எலிஸபெத், எந்த கேள்விக்கும் இடமில்லை... திருமதி (ரத்) வைட், அவர் உடலைக் கைவிடப் போவதாக இருந்தாலும்... ஹாரி (மிக்கி) ஃப்ளோர்ஷெய்ம் உடலைத் துறக்காமல் இருந்தாலும், அவர்கள் கண்டிப்பாக வரவேண்டும்... (ஹென்ட்ரிக்) ஃபிராங்கைப் பொறுத்தவரை இது ஓர் உண்மையான முயற்சியாக இருக்கும். பென் ஹேய்மன்... "**

பென் பதிலளித்தார், "நான் இல்லை என்றால் அது அதிகாரப்பூர்வமாக இருக்காது!"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**இந்த அறையில் இருப்பவர்கள் ஏற்கனவே அழைக்கப்பட்டவர்கள் எனவே, வேறு எந்த அழைப்பையும் அடையப் பெற மாட்டார்கள், அறிவுறுத்தல்கள் மட்டுமே. எனக்குக் கீழ்ப்படிதல் மற்றும் எனது அன்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் வரக்கூடிய அன்பர்களின் பட்டியலை குழு தலைவர்கள் உருவாக்க வேண்டும்.**

**இது உங்கள் அனைவருக்கும் உல்லாசப்பயணமாக இருக்காது. இந்த சந்திப்பு மிகவும் சிறப்பாக அமைய உள்ளது. நான் இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர், ஐந்து மாதங்களில் எனக்கு ஏராளமான இடர்பாடுகள் இருக்கும்; அதாவது,** (உலகத்திற்காகச் செய்ய வேண்டிய) **கடினமான உழைப்பு. எனவே, பிப்ரவரி 15ஆம் தேதிக்கு முன்னர் எவரும் தங்கள் பங்களிப்பை அனுப்ப வேண்டாம் என்று நான் கூறுகிறேன். பிப்ரவரி 15ஆம் தேதிக்கு முன்னர் என்ன நடக்கப் போகிறது என்பது யாருக்கும் தெரியாது.**

பீ டிம்ஃபில் அன்று மதியம் ஷா குடும்பத்தை மியோ உட்ஸுக்கு (MUIR WOODS) அழைத்துச் சென்றார். அவர்கள் திரும்பி வந்ததும், ஜீன், அவர்கள் பரிசுக் கடையில் வாங்கிய சிவப்பு மரத்தால் செய்யப்பட்ட ஒரு சிறிய முட்டைக்

கோப்பையை (EGGCUP MADE OF REDWOOD) பாபாவிற்கு வழங்க அனுமதி கோரிய வேளையில் அது வழங்கப்பட்டது. அதி உற்சாகத்துடன் பாபாவிடம் மியோ உட்ஸ் மற்றும் அங்கு வளர்ந்துள்ள மிகப்பெரிய, பழமையான மற்றும் உயரமான 'ரெட்வுட்' மரத்தைப் பற்றி கூறத் தொடங்கினார். முடிவில், "மியோ உட்ஸில் நாம் பார்த்த பழங்கால மரத்தின் கீழ் ஆதிகால புருஷர் அமர வேண்டும்" என்று குறிப்பிட்டார். மறுநாள் காலை, முழுக் குழுவுடன் பாபா அங்குச் செல்வதாக அறிவித்தார்.

மாலை 6:30 மணியளவில், பாபா ஃபிலிஸ், அடெல், பெரில், பிலி, ஸில்வியா ஆகியோரை அழைத்து, அவர்கள் மெஹரா, மணி இருவருக்கும் எழுதிய கடிதங்களைப் படிக்க ஒப்புதல் அளித்தார். பாபா அவர்களிடம் கூறினார்: **"எனக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆஸ்திரேலிய நிகழ்ச்சியைப் பற்றி நான் கேள்விப்பட்டபோது, நான் சோர்வாக உணர்ந்தேன். எனக்கு எந்த விதமான ஓய்வும் இல்லை. எனது ஒரே ஓய்வு, என் அன்பர்களை என் அன்பை உணர வைப்பது ஒன்றுதான். நான் இங்கிருந்து புறப்படுவதைப் பற்றி நீங்கள் வருந்த வேண்டாம். நாம் அனைவரும் இந்தியாவில் ஒன்றாக இருப்போம். இந்தியாவில் நடக்க இருக்கும் சந்திப்பைப் பற்றி சிந்தியுங்கள்."**

அன்று மாலை, ஷேக்ஸ்பியரின் நாடகமான 'எ மிட்ஸம்மர் நைட்ஸ் ட்ரீம்' என்ற பொம்மை நிகழ்ச்சியை (PUPPET SHOW OF SHAKESPEARE'S PLAY "A MIDSUMMER NIGHT'S DREAM") பாபா, யூனியன் வீதிக்கு அருகில் அமைந்த ஃபில்மோர் வீதியில், உலகிலேயே மிகச்சிறிய, 'லில்லிபுட்' தியேட்டரில் (LILLIPUT THEATER, FILLMORE STREET NEAR UNION STREET) பார்க்கச் சென்றார்.

தியேட்டர் வரவேற்பு அறையில், எலிஸபெத்தின் தொப்பியை அணிந்துகொண்டு பாபா வேடிக்கையான மனநிலையில் காணப்பட்டார். அந்த சிறிய தியேட்டர் முழுவதும் பாபாவின் அன்பர்களால் நிரம்பி வழிந்தது. பாபா பின்னால் அமர்ந்திருந்தார்; டிம்ப்ஃபிலின் மகள் த்ரீ-பி அவருக்கு அருகில் அமர்ந்தார். பாபா, 20 நிமிடங்களுக்குப் பிறகு (முதல் பகுதியின் முடிவில்) வெளியே சென்ற அதேவேளையில், அவர் விரும்பியபடி, அவரது அன்பர்கள் முழு நாடகத்தையும் பார்த்தனர்.

அன்று நள்ளிரவில் ஹாலிடே லாட்ஜில் (HOLIDAY LODGE) கொள்ளைக் கும்பல் ஒன்று புகுந்தது. மறுநாள் காலை, திங்கட்கிழமை, 1956 ஆகஸ்ட் 6, மேலாளர் பாபாவின் தரிசனத்திற்கான வாய்ப்பை அடையப்பெற்ற வேளையில், பாபா அங்கு இருந்ததால், மேலும் கடுமையான தீங்குகளைத் தவிர்க்க முடிந்ததை அவர் உறுதியுடன் நம்புவதாகக் கூறினார்.

காலை உணவுக்குப் பிறகு பாபாவின் அறையில் அமெரிக்காவின் 'யுனிவர்சல் ஸ்பிரிச்சுவல் லீக்'கின் (UNIVERSAL SPIRITUAL LEAGUE OF AMERICA) ஒரு சிறிய கூட்டம் நடைபெற்றது. பாபா, அமெரிக்காவில் இருந்தபோது வருமானம் எதுவும் அடையப் பெறவில்லை என்று வருமான வரி அனுமதிச் சான்றிதழைப் பெறுவதற்காக மண்டலி மற்றும் ஐவியுடன் வருமான வரி அலுவலகத்திற்குச் சென்றார்.

அவர் திரும்பி வந்ததும், குழுவை கீழே சந்திப்பு அறைக்கு அழைத்தார். பாபா அப்போது தீவிரமான மனநிலையில் காணப்பட்டார். அவர் கூறியதாவது:

**நேற்று இரவு, என்னால் ஒரு கண நேரம் கூட ஓய்வெடுக்க முடியவில்லை. பணிபுரிந்து கொண்டிருந்தேன். இதுவே கடைசி நாள் என்பதால், நாளை நான் புறப்பட இருப்பதால், முடிந்தவரை குழுவுடன் இருக்க வேண்டும், காரில், ஒருவேளை, உங்கள் அனைவரோடும் குறுகிய பயணம் ஒன்று மேற்கொள்ளலாம் என்றும் நினைத்துக் கொண்டிருந்தேன்; ஆனால் இன்று காலை பணம், நிதி சமாச்சாரம் மற்றும் பலவற்றைப் பற்றி ஏதோ ஒரு பேச்சு எழுந்தது. நான் அனைத்தையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். விருந்தோம்பல் குழு என்பது ஒரு சிறிய விவகாரம். இந்தப் பயணத்தின் சிறிய விவகாரத்தில் குழப்பம் ஏதேனும் இருந்தால், பெரிய விவகாரத்தை - இந்தியாவில் நிகழவிருக்கும் சந்திப்பை எவ்வாறு நிர்வகிப்பீர்கள்?**

**நான் உங்கள் நிலைக்கு வரும்போது, உருவாகும் பரிச்சயம் மற்றும் நெருக்கம் காரணமாக, நீங்கள் எனது தெய்வீகத் தன்மையை முற்றிலும் மறந்துவிடுகிறீர்கள்; ஒவ்வொரு சிறிய விஷயமும் எனக்குத் தெரியும் என்பதை மறந்துவிடுகிறீர்கள். நான் உங்கள் அனைவரோடும் அமர்ந்திருக்கும் போது, உங்கள் உடல் நலம் மற்றும் பலவற்றை விசாரிக்கும் போது, நீங்கள் ஒவ்வொரு விவரத்தையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும், அதே சமயம் எனக்கு எல்லாம் தெரியும் என்பதை மறந்துவிடுகிறீர்கள்.**

**உங்கள் குழந்தைகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று நான் கூறுவதாக வைத்துக்கொள்வோம்! கடவுளிடமிருந்து வந்த எனது வார்த்தையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் நான் கடவுள்! கடவுள் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? கடவுள் அனைவரையும் அறிந்திருக்க வேண்டும், அனைத்தையும் செய்ய வேண்டும். எனவே, 'உங்கள் குழந்தைகளைப் பற்றி கவலைப்படாதீர்கள்' என்று அவர் கூறும்போது, நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று அர்த்தம். நான் எனது திறவுகோலை சுழற்ற, நாளை ஒரு பூகம்பம் உருவாகி, ஐந்தே நிமிடங்களில் நீங்கள் அனைவரும் மறைந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அதன் பின்னர் உங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளைப் பற்றிய உங்கள்**

**கவலைகள் என்னவாகும்? ஆதலால், நான் உங்களுக்கு என்ன அறிவுரைகளை வழங்கினாலும், நான் கூறுவதை வார்த்தைக்கு வார்த்தை கடைப்பிடியுங்கள் என்று கூறுகிறேன். அது ஒன்றுதான் இன்றியமையாதது.**

விருந்தோம்பல் குழுவின் கணக்கு வழக்குகள் பற்றிய முழு விளக்கத்தை மரியன் ஃப்ளோர்ஷெய்மிடம் எடுத்துரைக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார்; பின்னர் ஒரு திரைப்பட கேமரா தொடர்பான மற்றுமொரு விவாதத்தில், சம்பந்தப்பட்ட நபர்களை (ஐவி மற்றும் பென் ஹேய்மன்) பேச அழைத்தார். ஒரு கட்டத்தில், “**எனது விருப்பத்தையோ அல்லது ஆர்வத்தையோ எவரும் கவனிக்க விரும்பவில்லை! உங்கள் விருப்பம், ஆர்வம் மட்டுமே நிறைவேறட்டும்**” என்றார்.

பிற அன்பர்கள் அமைதியாக அமர்ந்திருந்தாலும், ஒவ்வொருவரும் மறைமுகமாக, அவரவர் மனப்படிவங்களும் அதீத தாக்குதலுக்கு உள்ளாகியதாக உணர்ந்தனர்.

பாபா தொடர்ந்தார்:

**பாபா முடிவெடுக்கும் அனைத்திலும் உங்கள் இதயங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். நீண்ட நேரம் நிலைத்திருக்கும் தவறான புரிதல் வேண்டாம். நான் கிறிஸ்து என்ற அன்பும், நம்பிக்கையும் உங்கள் அனைவருக்கும் இருந்தால், நான் அவராகவே இருக்கும் வேளையில், நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்; நீங்கள் என்னை நேசிக்க வேண்டும். நீங்கள் எனக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லை என்றால், உங்கள் மனதில் சந்தேகம் நிலைகொண்டிருந்தால் அல்லது உங்கள் சுய விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினால், நீங்கள் என்னை விட்டுவிட வேண்டும். நீங்கள் என்னை நேசிப்பீர்களேயானால், என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். இன்று காலை, காலை உணவுக்காக மண்டலிக்கு அரை மணி நேரம் விரிவுரை வழங்கினேன்.**

எரச் விளக்கினார், “நாங்கள் காலையில் தேநீர் அல்லது காஃபி அருந்தி, மதிய வேளையில் மதிய உணவு உண்கிறோம். ஆனால் இன்று காலை நாங்கள் இரண்டாவது முறையாக காலை உணவை வரவழைத்தோம்.”

**நான் அவர்களிடம், “நீங்கள் உதவ விரும்பினால், இந்த வழியில் பங்களிப்பாக வழங்கப்பட்ட பணத்தை நீங்கள் பயன்படுத்தக்கூடாது.” மண்டலி என் அருகில் இருக்கிறார்கள், நான் கிறிஸ்து என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் காலை உணவை வரவழைத்திருக்கக் கூடாது. இந்த உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் ஒரு நாளைக்கு ஒரு முழு உணவை மட்டுமே உண்கிறார்கள், இந்தியாவில் பலருக்கு அது கூட இல்லை.**

**நீங்கள் என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள விரும்பினால், உங்களுக்கு சுத்தமான இதயம் வேண்டும். சில நேரங்களில் நம்பிக்கையும்,**

**சில நேரங்களில் சந்தேகமும் கொள்வதானால் எந்த பயனும் இல்லை. அப்படியானால் என்னை விட்டு விலகுவதே சிறந்தது; அப்போது உலகில் நீங்கள் விரும்பிய வாழ்க்கையை வாழ்ந்து சுதந்திரமாக இருக்கலாம். நீங்கள் என்னை நேசிக்க விரும்பினால், உங்களுக்குள் குழப்பத்தை உருவாக்க முயற்சிக்காதீர்கள். நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள், ஆனால் நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பதன் மூலம் என்னை மிகச் சிறந்த முறையில் நேசிப்பீர்கள். ஒருவருக்குப் பின்னால் புறங்கூறுவதானால், என் அன்பை எப்படி உலகுக்குச் சொல்ல முடியும்? நீங்கள் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புவதைப் போல, நீங்கள் அனைவரும் என்னை நேசிக்க முடியாவிட்டால், என்னைப் பற்றி உலகத்திடம் பேசாமல் இருப்பது நல்லது.**

**எல்லா பாசாங்குத்தனங்களுக்கும் முடிவு கட்டுவோம்! பாசாங்குத்தனம் உங்கள் இதயங்களிலிருந்து முற்றிலும் அகற்றப்படட்டும்! நான் அதைப் பார்க்க விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் ஒரே தூய்மையான இதயத்துடன், பாரபட்சமின்றி இருக்க வேண்டும். நான் நாளை உங்கள் அனைவரிடமிருந்தும் விடைபெறுகிறேன். இன்று கடைசி நாள். இப்போது நாம் வாக்குறுதி அளிப்போம். மனம் வருந்தி மொழியும் பிரார்த்தனையை யார் கூற முடியும்? யாரிடம் அதன் நகல் உள்ளது?**

பிரார்த்தனையை எவரும் துல்லியமாக மனப்பாடம் செய்யவில்லை. ஒரு நகலைத் தேடி ஒருவர் அலுவலகத்திற்கு விரைந்தார். அதை மொழிந்த பின்பு, பாபா கூறினார், "**நம்முடைய தவறான புரிதலுக்காகவும், தேவையின்றி பிறரின் உணர்வுகளை புண்படுத்தியதற்காகவும், நமது தவறுகளுக்காகவும், கடவுளிடம் மன்னிப்புக் கோருவோம். பாபாவின் எல்லையற்ற பொறுமையில் ஒரு சதவீதத்தை கடவுள் உங்களுக்கு வழங்கட்டும்! கடவுளிடம் மன்னிப்புக் கோருவோம். இப்போது ஒவ்வொருவராக வந்து என் அன்பின் அரவணைப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**"

மெதுவாக, அவர்கள் ஒரு வரிசையை உருவாக்கி, ஒவ்வொருவரும் மேசையின் அருகே நின்றுகொண்டிருந்த பாபாவைத் தழுவினர். '**இதுவே ஒவ்வொருவரின் கடைசி அரவணைப்பாக இருக்க வேண்டும், ஏனெனில் பாபா மறுநாள் புறப்படுகிறார், அதன் பின்னர் எந்தத் தழுவுதலையும் நான் அனுமதிக்க மாட்டேன்**' என்று கூறினார்.

பாபாவின் மதிய உணவைத் தயார் செய்ய, கூட்டம் நிறைவடைவதற்குள் கிட்டி நழுவிச் சென்றதால், பிரார்த்தனை மற்றும் பாபாவின் அரவணைப்பைத் தவறவிட்டார். பாபா அவரைக் கடிந்துகொண்டார், "**நான் உங்களிடம் உணவு தயார் செய்து, முழு நேரமும் மும்முரமாக இருக்கச் சொன்னேனா அல்லது முடிந்தவரை என்னுடன் இருக்குமாறு**

**அறிவுறுத்தினேனா?"** பாபா பின்பு கிட்டியை மன்னித்து அவர் தவறவிட்ட அரவணைப்பை அன்புடன் வழங்கினார்.

அன்றைய தினம், மியோ உட்ஸுக்குப் பயணம் செய்வது குறித்த ஜீன் ஷாவின் ஆலோசனைக்கு பாபா இணக்கம் தெரிவித்தார். கூட்டம் தாமதமாக நிறைவடைந்தாலும், விரைவில் அனைவரும் பேருந்துகளில் 'கோல்டன் கேட்' பாலம் (GOLDEN GATE BRIDGE) வழியாக சவாரி செய்து, 'தமல்பயஸ்' மலையில் (MOUNT TAMALPAIS) ஏறினர். பாபா காரில் பயணம் செய்து, முதலில் ஜோஸஃப் & காரி ஹார்பின் (837 ஃபாக்ஸன் அவென்யூ - FOXON AVENUE) இல்லத்திற்கு விஜயம் செய்தார்; அனைத்து அறைகளுக்கும் சென்று, அனைவருக்கும் பிரசாதம் வழங்கி, ஜோஸஃப் விரும்பி பயன்படுத்தும் நாற்காலியில் அமர்ந்தார்.

பாபா, அங்கு வந்ததும், டார்வின் & ஜீன் ஷாவிடம் மியோ உட்ஸின் பிரம்மாண்டமான மரங்கள் (இயற்கையாக வளர்ந்த மிகவும் பழமையான மரங்கள்) நிறைந்த 'ரெட்வுட்' (REDWOOD) காட்டுக்குள் செல்லும்படியும், பழங்கால மரத்தை அவருக்குக் காட்டுமாறும் கேட்டுக்கொண்டார். குழந்தைகள் அவரைச் சுற்றி ஒன்று திரண்டு, ஒளிரும் பறவைகள் போல் அவரது கைகளில் தொங்கினர். ரெட்வுட் மரங்களுக்கு இடையே நடந்து சென்ற ரத் வைட் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "எங்கள் பார்வை மரங்களின் நம்பமுடியாத உயரத்திற்கு மேல்நோக்கிப் பறந்தது, இந்த "ரெட்வுட்' மரங்கள் பூமியில் உள்ள ஒவ்வோர் உயிரினத்திற்கும் மேலாக உயர்ந்தது போல், ஆன்மீக ரீதியில் எங்கள் அருகில் இருந்தவர் எங்களுக்கும் மேலே உயர்ந்தவர் என்பதை நாங்கள் அறிந்தோம்."

1,800 ஆண்டுகளுக்கும் மேலான பெரிய மரத்தின் முன் பாபா சிறிது நேரம் நின்று, தடித்த நடுமரத்தின் உட்குழிந்த இடத்தில் அமர்ந்து, கண்களை மூடிய வேளையில், உயிரோடு புத்தர் திரும்பி வந்து, புனிதமான போதி மரத்தின் கீழ் அமர்ந்ததுபோல தோற்றமளித்தார். டார்வின் ஒரு புகைப்படத்தை எடுத்தார். பாபா எழுந்து நின்று மரத்தைப் பார்த்து, பின்பு, பூங்காவின் பிற பகுதிகளைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அவர் கிட்டியிடம் மதிய உணவு எப்போது திட்டமிடப்பட்டது என்று கேட்க, அவர்கள் தாமதமானதை அறிந்து, அனைவரும் உடனடியாகத் திரும்பி வரும்படி சைகையால் தெரிவித்தார்.

அன்று மதியம், ஹோட்டலில் பாபா தனிநபர்களை சந்தித்தார். பாபா, ஷா குடும்பத்தினரை தேநீருக்காக தனது அறைக்கு அழைத்தார். எரச் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். லீட்ரைஸின் கண்களில் அறுவை சிகிச்சை செய்து பார்வையை சீராக்குவதற்கான வாய்ப்பைப் பற்றி விவாதித்த வேளையில், பாபா, அவர் அதைத் தொடர முடிவு செய்தார்.



**மியோ உட்ஸ்** (MUIR WOODS)**, 6 ஆகஸ்ட்** (AUGUST) **1956**



ஹாலிடே லாட்ஜ் - (மேலே) எனர்ஜி ஃப்ளோர்ஷெய்ம், (கீழே)
மார்கரெட் க்ராஸ்கே, எனிட் கோரஃப், அடெல் வோல்கின், பெரில் வில்லியம்ஸ்
AT HOLIDAY LODGE, (TOP) ENERGY FLORSHEIM,
(BOTTOM) MARGARET CRASKE, ENID KORFE, ADELE VOLKIN, BERYL WILLIAMS

**“கவலைப்படாதீர்கள், எல்லாம் சரியாகிவிடும். உங்கள் கண்கள் நன்றாக இருக்கும். பதட்டப்பட வேண்டாம்”** என்று உறுதியளித்தார். பாபா சிறிது நேரம் ஒரு கனமான காகித எடையை கையில் வைத்திருந்து, லீட்ரைஸை நோக்கி வீசினார்; அதை மருத்துவமனையில் வைத்திருக்கும் படி அவரிடம் கூறி, குறிப்பிட்ட தேதிகளுக்கு இடையில் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் அறுவை சிகிச்சை செய்யுமாறு அறிவுறுத்தினார்.

அதற்குப் பிறகு, பாபாவுடன் தனியாக இருந்தபோது, அவர், ஜீனிடம் மீண்டும் கேட்டார், **“எனது சத்ராவை சலவை செய்ய நான் அனுமதிப்பதன் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?”**

ஜீனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல், “இல்லை, பாபா” என்று எளிமையாக பதிலளித்தார். பாபா, எரச்சை விவரிக்கத் தூண்டும் விதத்தில் பார்த்தபோது, ஜீன் தொடர்ந்தார், “ஆனால், இந்தப் பணியை எனக்கு சாதகமாக அடையப்பெற்றதில் நான் மிகவும் பாக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன்.”

பாபா மகிழ்ச்சியில், **“நல்ல பதில்”** என்று சைகையால் தெரிவித்தார்.

இந்தக் கடமையின் காரணமாக, ஜீன் ஒன்று அல்லது இரண்டு முறை பாபாவிற்கு ‘காலை வணக்கம்’ தெரிவிப்பதைத் தவறவிட்டார்; ஆனால் பாபா எப்பொழுதும் அந்த வாய்ப்பை அவருக்கு வழங்கத் தவறியதில்லை. ஒருமுறை பிற அனைவரும் அறையை விட்டு வெளியேறிய பிறகு, ஜீன் வரும் வரை காத்திருந்தார். வேறொரு சமயம், அன்பர் ஒருவரின் இல்லத்திற்கு விஜயம் செய்ய, காலையில் மண்டலியுடன் புறப்படுவதற்கு ஹோட்டலுக்கு வெளியே காரில் காத்திருந்தார். ஜீனை அழைத்து, கன்னத்தில் முத்தமிட்டு, பின்னர் அவர் காரில் விரைந்து சென்றார்.

மாலை சுமார் 4:00 மணியளவில், பாபா தனது அறையிலிருந்து ஒரு பொட்டலம் இனிப்பு மிட்டாய்களுடன் (ரபியா மார்ட்டினின் மகள் எட்டா மெஹ்தி - ETTA MEHDY, அவருக்கு வழங்கினார்) வெளியே வந்தார். அவர் ஒவ்வொரு குழுவிற்கும் வெண்மையான தூள் நிரம்பிய, நட்சத்திர வடிவிலான இனிப்பு மிட்டாயை வழங்கினார். அவரது வெள்ளை தூசி படிந்த விரல்களால், பெரில் வில்லியமின் முகத்தில் ஒரு மீசையை வரைந்தார்; விளையாட்டுத்தனமாக அவர் எனிட் கோர்ஃப், மார்கரெட் க்ராஸ்கே ஆகியோரின் கன்னத்தில் தொட்டு, லட் டிம்ஃபிலின் சகோதரி எலெனர் ஸ்மித்தைத் (ELEANOR SMITH) தழுவினார். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு வழக்கமான 6:00 மணிக்கு பதிலாக, அரை மணி நேரம் முன்னதாகவே குழுவிடம் கலைந்து செல்லுமாறு பாபா கூறினார், இடையிடையே அவர் நேரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

1956 ஆகஸ்ட் 7 செவ்வாய் அன்று அதிகாலையில், பாபா, தனக்கு நெருக்கமான அன்பர்களைக் கடைசியாக அறைக்கு அழைத்தார். அவரைத் தழுவவோ, அவருக்கு மாலை அணிவிக்கவோ கூடாது என்று வலியுறுத்தியிருந்தார். ஃபிலிஸ், தான் கொண்டுவந்த ஒரு நீள் மலர் மாலையை மேசை மீது வைத்தார். பின்னர் அதை பாபா கழுத்தில் அணிந்து த்ரீ-பியிடம் கொடுத்தார்.

பாபா புறப்படத் தயாராக இருந்த வேளையிலும், சில புதிய நபர்களை சந்தித்தார்; அங்கு நியூயார்க் நகரில் அவரை சந்திக்கும் வாய்ப்பை இழந்த பெண்மணியும் அவர்களில் ஒருவர். அன்றைய தினம் வந்திருந்த மற்றொரு பெண்ணிடம், ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள ஒரு குழுவைச் சேர்ந்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. பாபா அவருக்கு உறுதியளித்தார், "**என்னைப் பின்பற்றுபவர்களில் பலர் எந்தக் குழுவிலும் இல்லை; இருந்தாலும், எனது உண்மையான குழுவைச் சேர்ந்தவர்கள், அதில் என் அன்பர்களும், எனது அனைத்து குழுக்களும் உள்ளனர். எனது உண்மையான மையம் என்னை நேசிக்கும் அனைவரின் இதயமாகும்.**"

நிமோனியாவிலிருந்து உடல்நலம் சீரான, லட் டிம்ஃபில், பாபாவையும் மண்டலியையும் விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். காற்றின் வேகத்தை விரும்பாததால், ஜன்னலை மூடும்படி பாபா கேட்டுக்கொண்டார், ஆனால் லட், பாபாவை அழைத்துச் செல்லும் உற்சாகத்தில், கவனக்குறைவாக அதைக் கீழே சுழற்றினார்! பாபா, மறுபடியும் அதை மேலே சுழற்றுமாறு கேட்க வேண்டியதாயிற்று. "இப்போது நான் அந்தக் காரின் ஜன்னல் கைப்பிடியைத் தொடும்போதெல்லாம், நான் அவரைப் பற்றி நினைக்கிறேன்," என்று லட் பின்பு கூறினார்.

முழுக் குழுவும் பாபாவிற்குப் பிரியாவிடை அளிக்க விமான நிலையத்திற்குப் பின்தொடர்ந்தனர், ஆனால் அவர் முன்னர் அறிவுறுத்தியபடி, அவர்களில் எவரும் பாபாவைத் தழுவுவதைத் தடை செய்தார். ஒரு பெண்மணி உரத்த குரலில் அழுது பாபாவை ஒரே ஒரு முறை அணைத்துக்கொள்ளுமாறு கெஞ்சியபோது அவர் முகம் சுளித்தார். ஆனாலும், ஆங்காங்கே நின்ற ஒவ்வொருவரிடமும், "**தைரியமாக இருங்கள்! மகிழ்ச்சியுடன் இருங்கள்**" என்று சொல்வது போல, கன்னத்தை அல்லது கீழ் வாய் தாடையை அன்புடன் தட்டிக் கொடுத்தார்.

ஓர் அந்நியர் பாபாவின் தோற்றத்தையும், அவரது அன்பர்கள் வெளிப்படையாக உணர்ச்சிவசப்படும் நிலையையும் கண்டு அங்கேயே நின்று "அந்த மனிதர் யார்?" என்று கேட்டார்.

ஃபிலிஸ், "அவர்தான் கிறிஸ்து, அவதார புருஷர்" என்று தைரியமாக பதிலளித்தார்.

உணர்வைப் புண்படுத்தாத வகையில், "அவர் அப்படியாக இருக்கலாம்" என்று அந்த நபர் கருத்துத் தெரிவித்தார்.

பிலி ஈட்டன் அழவில்லை என்றாலும், அவரும் நிச்சயமாக சோகமாக உணர்ந்தார். அவர் கூறியதாவது:

பாபா அவர்களை விட்டு பிரிந்து செல்வதால், அனைவரும் கண்கலங்கி அழுதனர். நான் அழவில்லை, அழப்போவதுமில்லை! நான் எனது மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தேன். நாங்கள் அனைவரும் பாபாவைச் சுற்றி ஒரு வட்டத்தில் நின்றோம், பிற அனைவரும் கதறி அழுதுக் கொண்டிருந்தனர். திடீரென பாபா எனது தோளில் கையை வைத்ததும் 'அதோ…' கண்கள் நிரம்பி கண்ணீர் வழிய ஆரம்பித்தது. பாபா உங்களிடம் வர விரும்பினால், அவர் தவறாமல் வருவார்; நீங்கள் தப்பிக்க வழி இல்லை!

ஃபிலிஸ் பின்னர் அந்த இறுதி, இதயத்தை உலுக்கும் பிரிவை விவரித்தார்:

மிக விரைவில் செல்ல வேண்டிய நேரம். விடைபெறும் வேகத்தில் பாபா தாழ்வான சரிவில் இறங்கிய போது, டஜன் கணக்கான கைகள் அவரை நோக்கி நீண்டன. அவர் ஒன்றை இறுக்கமாகப் பற்றிப் பிடித்து, தொடர்ந்து வேறொருவர் கையையும் பிடித்தார். இளம் வயது சிறுமி ஒருவர் அவருக்கு முன்னால் இருந்த பாதையில் ஓடி, பாபாவின் தலையில் ஒரு ஆர்க்கிட் மாலையை நழுவ விட்டார். பாபா அந்த சிறுமியைத் தழுவி மாலையைத் திருப்பிக் கொடுத்தார். அவர் படிக்கட்டுகளில் ஏறி, கடலைப்போல விசாலமான (TRANSOCEANIC) விமானத்திற்குள் அடியெடுத்து வைத்ததை நாங்கள் பார்த்தபோது அது உண்மையான பிரியாவிடையாகத் தோன்றியது. மூன்றாவது ஜன்னலிலிருந்து அவருடைய தெய்வீகக் கரம் எங்களை நோக்கி மெதுவாக அசைந்தது. இப்போது எனது கன்னங்களில் வழிந்த கண்ணீர் உதவியற்றதாக உணர்ந்தது. காலங்காலமாக அனுபவித்த பிரிவினை மீண்டும் ஆரம்பமானது.



**ஸிட்னி விமான நிலையம்** (SYDNEY AIRPORT), **9 ஆகஸ்ட்** (AUGUST) **1956**



மெஹர் ஹவுஸ் ஸிட்னியில் ஆதி சீனியர், எரச், நீலு
(ADI SR., ERUCH, NILU AT MEHER HOUSE SYDNEY )

# ஸிட்னி, மெல்போர்ன் & ஆஸ்திரேலியா

(**Sydney & Melbourne, Australia**)

பாபாவுடனான முதல் சந்திப்பிற்குப் பின்னர், 1956 பிப்ரவரி மாதத்தில் மும்பையை விட்டு வெளியேறும் முன்பு, பாபாவை ஆஸ்திரேலியாவிற்கு வரவழைக்க மெஹர்ஜியால் ஊக்குவிக்கப்பட்டவர் ஈனா லெமன் (ENA LEMMON) ஆவார். ஈனா இந்த சிந்தனையில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார், மேலும் அவர் பாபாவின் பிறந்தநாளில் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பியபோது, அவரை அழைப்பது பற்றி ஃபிரான்சிஸ் பிராபஸோன் மற்றும் பிறரிடம் பேசினார். இது உகந்த நேரம் அல்ல என்று சிலர் உணர்ந்தாலும், பல அன்பர்கள் ஆதிகால புருஷரை வரவழைப்பதற்கான வாய்ப்பை எண்ணி மிகவும் உற்சாகமாக இருந்தனர். ஈனா, பாபாவிற்கு முறையான அழைப்பை அனுப்பினார், மேலும் பாபா அழைப்பை ஏற்றுக்கொண்டதாகவும், இந்தியா திரும்பும் வழியில் ஆஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்வதாகவும் ஒரு செய்தி வந்தது.

1956 ஜூன் 4ஆம் நாள், ஐவி டியூஸுக்கு எழுதிய கடிதத்தில், பாபாவை ஆஸ்திரேலியாவிற்கு முறையாக அழைத்ததற்கு, ஃபிரான்சிஸ் பிராபஸோனின் எதிர்வினையை மணி இவ்வாறு விவரித்தார்:

ஆஸ்திரேலியாவிலிருந்து எவரேனும் பாபாவை அங்கு வருமாறு 'அழைப்பு விடுக்கும்' எண்ணத்தில் ஃபிரான்சிஸ் சற்று வருத்தத்தை வெளிப்படுத்தினார். அவர், பாபாவையும் அவரது வழிமுறைகளையும் பற்றி ஆழமான புரிதல் கொண்டவர்; மேலும் நான் இங்கே மேற்கோள் காட்டப் போகும் சில பகுதிகளைப் பெரிதும் விரும்பினேன்:

"பாபா கடவுள் இல்லையா? இதே கடவுள் நம்மிடம், நாமாக அவரிடம் எதையும் கேட்க வேண்டாம் என்றும், ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு உகந்த நேரத்தில், அவர் கொடுக்கத் தகுந்ததைக் கொடுப்பார் என்றும் கூறியுள்ளார் அல்லவா? அவர் ஏக இறைவனாக அனைத்தையும் எடுப்பவர் என்பதால் நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும் - அதாவது கடவுளைத் தவிர வேறொன்றும் நம்மிடம் இல்லாதவரை அவர் நம்மிடமிருந்து எடுத்துக்கொள்வார் என்று அவர் கூறவில்லையா?"

பாபாவிடம் நாம் எதையும் கேட்பது பற்றி, ஃபிரான்சிஸ் கூறுகிறார்: "... ஏனெனில், அவரிடம் எதையும் கேட்கக் கூடாது, ஆனால் ஒருவரின் முழு வாழ்வும், அன்பான இறை மனிதனுக்கு ஓர் உயிரோட்டம் நிறைந்த தியாகமாக மாறும் வரை, அவர் நேசிக்கப்பட வேண்டும், அவருக்கு சேவை செய்ய வேண்டும், அவருக்கு அள்ளி வழங்க வேண்டும். ஒருமுறை அல்ல, எல்லா நேரங்களிலும், பாபாவின் அளப்பரிய கருணையால், பொதுவாக இல்லாவிடிலும், மக்களின் விருப்பத்திற்கு அடிபணிந்து, அவர்கள் விரும்பியதை செய்ததை,

கூறியதை நான் கவனித்திருக்கிறேன், ஆனால் இது அவருடைய உண்மையான செய்கையாக, சொற்களாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்று அனைவருக்கும் விளக்கினேன்.

பாபா வர வேண்டும் என்பதில் அவர்கள் எவ்வளவு ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்று கூறி முடிக்கிறார்: "... நமக்கே விளையும் நன்மையைத் தவிர, ஒரு பரிபூரண குருநாதரின் புனித பாதங்கள் பதியாத நாடு உயிரூட்டம் இல்லாத நாடு என்று நாங்கள் நம்புகிறோம்; அத்தகைய ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவரால், ஒரு நாட்டுக்கு விஜயம் செய்வது என்பது அந்த நாட்டில் ஒரு விதையை விதைப்பதாகும், அது இறுதியில் அந்த நாட்டை உண்மையான அர்த்தத்தில் வாழவும், நாகரீகம் தழைக்கும் நாடாகவும் மாற்றும். பாபா இங்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், ஆனால் அது உண்மையான அவருடைய விருப்பத்தைப் பிரதிபலிக்கும் விஷயமாக இருக்க வேண்டும் - அது அவரது சுய இரக்கத் தன்மையால், அவரது இதயத்திலிருந்து தானாகவே எழுவதாக இருக்க வேண்டும். நாம் கேட்பதனால் அல்ல... "

மணி தனது கடிதத்தை இவ்வாறு முடித்தார்.

இதில் நான் மேலும் இணைக்க முடிவது மிகக் குறைவு. நான் (ஃபிரான்சிஸுக்கு) ஒரு தொலைத்தந்தியை அனுப்பினேன்: "பாபா, உங்களின் துல்லியமான புரிதலில் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். ஐந்து நாட்களுக்கு ஆஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்வதற்கான தனது முடிவை அவர் இப்போது அறிவிக்கிறார். அனைவருக்கும் தெரிவிக்கவும்." (நான் எனது சிந்தனை ஓட்டத்திலிருந்து எழுதுவதால் இந்த வார்த்தைகள் துல்லியமாக இருக்காது, ஆனால் அது கிட்டத்தட்ட அப்படித்தான்.)

இந்தத் தெளிவான விளக்கத்தை அடையப் பெற்றதும், ஃபிரான்சிஸ் ஸிட்னி நகரின் வடக்குப் பகுதியில், பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் அமைந்த 'பீக்கன் ஹில்' (BEACON HILL) என்ற இடத்தில், தனது இறுதிக் கட்ட கட்டிட வேலைகளின் வேகத்தை அதிகரித்தார். இங்கு, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவின் பயன்பாட்டிற்காக, மணற்கல் மையம் ஒன்றை அமைக்க ஃபிரான்சிஸ் முடிவு செய்திருந்தார். ஈனா லெமனுடனான 'கருத்து வேறுபாடு' இருந்தபோதிலும், பாபா ஒரு நாள் ஆஸ்திரேலியாவிற்கு வருவார் என்று ஃபிரான்சிஸ் உள்ளளவில் ரகசியமாக நம்பிக் கொண்டிருந்தார். அவர் முதலில் தனது ஸூஃபி அமைப்பின் அடித்தளமாக அமையக்கூடும் என்று கருதி, ஃபிரான்சிஸ், மெஹர் பாபாவின் பக்தர்களுக்கென விரிவான 'பயிற்சி மையத்தின்' வடிவமைப்புகளை உருவாக்கினார்; அதை அவர் உள்ளூர் 'ஷைர் கவுன்சிலில்' (SHIRE COUNCIL) சமர்ப்பித்தார். ஸிட்னி நகரில் வாழ்ந்த ஆரம்பகால பாபா அன்பர்களின் முக்கிய பணியாக, பல ஆண்டுகளாக கட்டுமானப் பணி நடந்து வந்த காலகட்டத்தில், ஃபிரான்சிஸ் ஒரு சிறிய 'குகை கேபின்' (CAVE CABIN)

தளத்தில், கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தார். பிற ஆரம்பகால ஆஸ்திரேலிய பாபா அன்பர்கள், இந்தப் பணியில் உதவுவதற்காக, தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை தற்காலிக கூடாரங்களில் அல்லது கட்டுமான பணி நடந்து கொண்டிருக்கும் இடத்திற்கு அருகில் அமைந்த வேறு ஏதேனும் கட்டமைப்புகளில் தங்கினர். ஆகவே, ஈனாவின் அழைப்பிற்கு ஃபிரான்சிஸின் அணுகுமுறை கடுமையாக இருந்தது, ஏனெனில் பாபா அவரது சுய விருப்பத்தின் பேரில் வருகிறார், ஃபிரான்சிஸின் ரகசிய விருப்பத்தின் காரணமாக அல்ல என்பதில் உறுதியாக இருக்க விரும்பினார்.

இறுதியில் பாபா, ஃபிரான்சிஸ் நிறுவிய மையத்திற்கு 'மெஹர் ஹவுஸ்' (MEHER HOUSE) என்று பெயரிட்டார், மேலும் இது ஆஸ்திரேலியாவின் இரண்டு முக்கிய பாபா மையங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இது கடுமையான காட்டுப் பூக்கள் நிறைந்த கடலோர புதர் நிலத்தின் ஒரு பெரிய, உயரமான பகுதியை ஆக்கிரமித்தது. அந்த நாட்களில், இது ஸிட்னியின் (SYDNEY) புதர் நிறைந்த புறநகர்ப் பகுதி, பாம்புகள் மற்றும் பிற வனவிலங்குகள் நிறைந்த இடமாக அமைந்திருந்தது. இந்த விசாலமான தளம், ஸிட்னி துறைமுகத்தின் மீது பரந்த காட்சிகளை ஆதிக்கமாகக் கொண்டது; இது வடக்கு ஸிட்னியில் அமைந்த ஒரே மலையாகும்.

ஃபிரான்சிஸ் தனது சொந்தக் கைகளால் கட்டிடத்தின் பெரும்பகுதியைக் கட்டி எழுப்பினார், மிகப்பெரிய மணற்கல் பாளங்களை வடிவமைத்து, நிலைநிறுத்துவதற்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அது நிறைவடைந்ததும், முதலில் ஆடம்ஸ் (ADAMS) குடும்பத்தினர் அதை ஆக்கிரமித்தனர்; அதற்குப் பிறகு, பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், பில் லெ பாஜ் குடும்பத்தினர், ஃபிரான்சிஸ் பிராபஸோன் ஆகியோர் அங்கு வாழ்ந்தனர்.

ஆகஸ்ட் **7** அன்று காலை **11:00** மணிக்கு, பாபா, எரச், ஆதி, நீலு, மெஹர்ஜி ஆகியோருடன், ஸான் ஃபிரான்சிஸ்கோவிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு 'பான் ஆம் விமானம் **841**'இல் (PAN AM FLIGHT 841) பயணத்தைத் தொடந்தார். குழுவினர் மாலை **5:15** மணிக்கு ஹொனலுலு, ஹவாயை (HONALULU, HAWAI) வந்தடைந்தனர்; அங்கு மூன்றரை மணி நேரம் காத்திருப்பு நேரமாக அறிவிக்கப்பட்டது. விமான நிலைய முனையத்தில் முழு நேரமும் அமருவதற்கு பதிலாக, அவர்கள் உலா வரலாமா என்று மண்டலி கேட்டதற்கு, பாபா இல்லை என்றார்; அது ஒரு சர்வதேச விமான நிலையம் மற்றும் அவர்கள் அங்கேயே அமர்ந்து கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

சில நிமிடங்களுக்குப் பிறகு, திடீரென ஒரு ஜோடி பாபாவின் முன் வந்து நின்று, பயபக்தியுடன் வணங்கிய வேளையில், பாபா அவர்களை அன்புடன்

தட்டிக் கொடுத்தார். அருகிலிருக்கும் தங்கள் இல்லத்திற்கு பாபா வருவாரா என்று கேட்டதற்கு, அவர் அமைதியாக மறுத்தாலும், அவர்களின் அன்பு தன் இதயத்தைத் தொட்டதாகத் தெரிவித்தார். சிறிது நேரத்தில் அந்தத் தம்பதியர் வெளியேறினர். பாபா இவர்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாக நினைத்த மண்டலி, அவர்கள் இப்போது வெளியே சற்று உலாவச் செல்லலாமா என்று மீண்டும் கேட்டனர். பாபா மறுபடியும் இல்லை என்றார். விமான நிலையத்தில் நெடுநேரம் அமர்ந்து அமைதியிழந்த ஆதி, பாபாவின் முன்னிலையில் அவர்களின் கோரிக்கையை வைத்தார்.

ஒரு மணி நேரத்திற்குப் பின்பு, அதே தம்பதியர் திரும்பி வந்தனர் - இந்த முறை பாபா மற்றும் நான்கு மண்டலிக்கு உணவு நிரம்பிய காகித பைகளைக் கொண்டுவந்தனர். “இதோ உங்களுக்காக சிறிதளவு சிற்றுண்டி; தயவு செய்து இதில் கொஞ்சம் சாப்பிட மாட்டீர்களா?” என்று இருவரும் கெஞ்சினர். பாபா, மண்டலியுடன் அந்த உணவை உண்ட பின்னர், அவர் கடற்கரையில் நடக்க ஒப்புக்கொண்டார். ஆனால் மண்டலியால் அதை அனுபவிக்க முடியவில்லை. விமானம் புறப்படும் நேரம் விரைவில் நெருங்கிவிட்டதால், விமானத்தைத் தவறவிட நேரிடும் என்று அவர்கள் கவலைப்பட்டனர்!

‘பான் ஆம் விமானம் 841’இல் தொடர்ந்து ஹொனலுலுவில் இருந்து இரவு 8:45 மணிக்குப் புறப்பட்டுச் சென்று, அதிகாலை 3:00 மணிக்கு ‘கான்டன் தீவில்’ (CANTON ISLAND) தரையிறங்கி ஒரு மணி நேரம் நின்றது. 1956 ஆகஸ்ட் 9 அன்று காலை 8:15 மணிக்கு, சர்வதேச எல்லைக் கோட்டைக் கடந்த விமானம், எரிபொருள் நிரப்ப ‘ஸுவா, ஃபிஜி’ தீவுகளில் (SUVA IN THE FIJI ISLANDS) தரையிறங்கியது. பாபாவும் மண்டலியும் விமானத்திலிருந்து இறங்கி காஃபியும், ரொட்டிச் சுருளும் உண்டனர். ஸுவாவில் வானிலை தெளிவாகவும், உற்சாகமளிப்பதாகவும் இருந்தது. ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்னர், (காலை சுமார் 9:45 மணிக்கு) அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

அன்று பிற்பகல் 3:45 மணிக்கு ஸிட்னியில் அமைந்த ‘மாஸ்காட் விமான நிலையம்’ (MASCOT AIRPORT) வழியாக, குழு ஆஸ்திரேலியாவிற்குப் பறந்து சென்றது. ஆஸ்திரேலிய சுங்கம் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்க பயணிகள் மற்றும் பணியாளர்களைத் தவிர வேறு எவரும் விமான ஓடுபாதையில் இருப்பதைத் தடைசெய்ததால், பாபாவும் மண்டலியும் இறங்கிய வேளையில், அவர்களை சந்திக்க அங்கு எவரும் இல்லை. பாபா ஆச்சரியத்தில், “அவர்கள் எங்கே?” என்று எரச்சிடம் சைகை செய்தார். அப்போது, கணிசமான தூரமாக இருந்தபோதிலும் - அருகிலுள்ள விமான நிலைய கட்டிடத்தின் ஜன்னல்களிலிருந்து ஆஸ்திரேலிய அன்பர்களை பாபா பார்த்தார்; அவர் உற்சாகமாகக் கையசைத்து அவர்களைப் பார்த்து புன்னகைத்தார்.

விமான நிலைய கட்டிடத்திற்குள் நுழைந்ததும், பாபாவை, ஃபிரான்சிஸ், பில் லெ பாஜ், ப்ரூஃபோர்ட் (BRUFORD) குடும்பத்தினர் மற்றும் சிலர் வரவேற்றனர். அவர்களை, பொது மக்களில் பலர் கவனித்துக் கொண்டிருந்தாலும், பாபா 'அவரது' குழுவில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வாழ்த்துத் தெரிவித்தார். ஒரு நபர், 'அவரது குழுவில் யார் யார் இருக்கிறார்கள் என்பது பாபாவிற்குத் தெரியும்!' என்று எண்ணி, பாராட்டுணர்வை வெளிப்படுத்தினார். அலைமோதிய மக்கள் கூட்டத்தில், ஒருவரையொருவர் தவறவிடும் பதட்டத்தில், ராபர்ட் ரவுஸ் (ROBERT ROUSE), பாபாவைப் பார்க்க முயற்சித்ததை நினைவு கூர்ந்தார். திடீரென, அவர் கன்னத்தில் ஒரு மென்மையான வருடலை உணர்ந்தார். பாபா இதுவரை அவரைப் பார்த்ததில்லை அல்லது சந்தித்ததில்லை என்றாலும், அவரை அணுகும் நோக்கத்தில் பரபரப்பான கூட்டத்தினூடே எப்படியோ சமாளித்துச் சென்றார் பாபா.

விமான நிலையத்திலிருந்து, பாபாவை, பாரன் வான் ஃபிராங்கன்பெர்க்கின் (BARON VON FRANKENBERG) கருப்பு 'ட்ரையம்ப்' காரில் பில், மெஹர் ஹவுஸுக்கு அழைத்துச் சென்றார். ஸிட்னி குழுவின் இதர உறுப்பினர்கள், மெல்போர்ன் (MELBOURNE) நகரிலிருந்து ஒரு சிலரும், கான்பெரா (CANBERRA), நியூகாஸல் (NEWCASTLE) மற்றும் ஆர்மடேல் (ARMIDALE) ஆகிய இடங்களிலிருந்து தலா ஒருவரும் அவரை வரவேற்க அங்கே காத்திருந்தனர். பாபா ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவி, தமது இல்லத்தில் சிறிது நேரம் இளைப்பாறி, பின்னர் இரவு உணவை உண்பதற்காகச் சென்றார். பாபா என்ன விரும்புவார் என்று தெரியாமல், லோர்னா ரவுஸின் (LORNA ROUSE) இந்திய உணவு வகைகளை ருசித்த ஃபிரான்சிஸ், லோர்னாவிடம், பாபா, பீக்கன் ஹில்லுக்கு வந்ததும் அவருக்குப் பரிமாற ஒரு குறிப்பிட்ட கறி வகையைத் தயார் செய்யுமாறு கூறினார். பாபா வந்த சிறிது நேரத்திலேயே இரவு உணவை உண்ணும் விருப்பத்தைத் தெரிவித்தார்; லோர்னா சாதம், கறி மற்றும் முந்தைய கோடையில் தயார் செய்த மாங்காய் ஊறுகாய் போன்றவற்றைப் பரிமாறினார். பாபா, லோர்னா தயார் செய்த கறியை உண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்; மண்டலிக்காக மேலும் பரிமாறுமாறு பாபா கேட்டுக்கொண்டார். (அவர் இந்த சமையல் குறிப்புகளை பெண் மண்டலிக்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார்.)

பாபாவின் அறை 30x20 அடி அளவில் அமைந்திருந்தது. இது ஃபிரான்சிஸ் கைகளால் செதுக்கிய மணற்கல்லால் செய்யப்பட்ட நான்கு சுவர்களைக் கொண்டிருந்தது; புதர் நிலத்தை நோக்கி, ஸிட்னி மற்றும் அதன் துறைமுகங்களைச் சுற்றியுள்ள காட்சிகளைக் காணும் விதத்தில் ஒரு பெரிய ஜன்னல் அமைக்கப்பட்டிருந்தது. ஃபிரான்சிஸ், கிழக்குச் சுவரின் பெரும்பகுதியை மூடி, தற்காலிக மேஸனைட் (MASONITE) மரப்பலகையால் அமைத்து, ஃபிரான்சிஸ்

தங்கியிருந்த மலைக்கு மேல் வாழ்ந்த ஃபிரான்ஸெஸ் லீ (FRANCES LEE) என்பவர், பாபாவை பிரபஞ்சத்தின் படைப்பாளராக சித்தரிக்கும் ஒரு சுவரோவியத்தை வரைந்திருந்தார். பாபா ஓவியத்தைப் பெரிதும் பாராட்டினார், ஆனால் மானின் உருவத்தை குரங்காக மாற்றுமாறு லீயிடம் கூறினார். முக்கால் ஏக்கர் நிலம் 1949இல் பாரன் வான் ஃபிராங்கன்பெர்க் மற்றும் பிற ஸுஃபிகள் பங்களிப்பாக வழங்கிய பணத்தில் பாபாவுக்காக வாங்கப்பட்டது.

பாபா வருவதற்கு முன்பு, பில் குடும்பத்தினர் பாபாவின் பயன்பாட்டிற்காக வீட்டை காலி செய்தனர். பாபா தங்குமிடத்திற்கு வருகை தந்த ஆஸ்திரேலியக் குழுவில் பெரும்பாலானோர் மெஹர் ஹவுஸுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கொட்டகை மற்றும் மூன்று கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டனர். பிற அன்பர்கள் அனைவரும் மெஹர் ஹவுஸிலிருந்து அரை மைல் தொலைவில் இரண்டு இல்லங்களில் தங்கினர்.

பாபாவின் வருகையின் அந்த முதல் இரவின் போது, குழந்தைகளை குளிருக்கு எதிராக, போர்வைகளால் போதுமான அளவு பாதுகாக்க வேண்டும் என்று பாபா கூறி அனுப்பினார்.

அடுத்த நாள் காலை, 1956 ஆகஸ்ட் 10 வெள்ளிக்கிழமை, பாபா, எரச், ஃபிரான்சிஸ், பில் லெ பாஜ், ராபர்ட் ரவுஸ் ஆகியோருடன் 'பணி குறித்த ஒரு சந்திப்பை' நிகழ்த்தினார். பாபா, அவரது பெயரில் ஃபிரான்சிஸ் செய்து வரும் பணியின் விபரத்தை அவரிடம் கேட்டார், மேலும் அவரது அன்பு மற்றும் சேவை தொடர்பான செய்தியைப் பரப்புவது குறித்து அவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதையும் விவாதித்தார். விவாதத்தின் இடையே, பாபா திடீரென, ஃபிரான்சிஸ், டான் ஸ்டீவன்ஸ் இருவரும் 1955ஆம் ஆண்டு இந்தியாவில் நிகழ்ந்த சகவாச நிகழ்ச்சிகளைப் பற்றிய புத்தக தொகுப்புகளைக் குறிப்பிட்டு, **"ஃபிரான்சிஸ், எனது புத்தகம் எங்கே?"** என வினவினார். ஃபிரான்சிஸ் தனது செயலற்ற தன்மையைத் தற்காத்துக்கொள்ள இருந்த நிலையில் (நிச்சயமாக அவர் நம்பமுடியாத அளவிற்கு இதர பணிகளில் மும்முரமாக இருந்தார்) அதைச் செய்யாமல், "மன்னிக்கவும், பாபா. நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர், உடனடியாக நான் அதைத் தொடங்குவேன்" என்று பதிலளித்தார். பாபா எதிர்காலத்தை உற்று நோக்கி, **"நல்லது"** என்று பதிலளித்தார். இந்த உரையாடலின் மகத்துவம், 1955ஆம் ஆண்டு நிகழ்ந்த சகவாசத்தைக் குறித்த எளியதொரு நாட்குறிப்பு போன்ற தொகுப்பு, எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை மறுபரிசீலனை செய்யும் அளவுக்கு, ஃபிரான்சிஸ் மற்றும் ராபர்ட் ரவுஸைத் தூண்டியது; இறுதியில் 'இறைவனோடு இணைந்திருங்கள்' (STAY WITH GOD) என்ற மாபெரும் படைப்பு ஒன்று உருவானது.

அப்போது பாபா, தனது ஆஸ்திரேலியா வருகைக்கான காரணங்களை எடுத்துரைத்தார்: **"முதலாவதாக, நான் இந்த நாட்டில் அன்பின் விதையை**

**விதைக்க வந்தேன்; இரண்டாவதாக, நீங்கள் எனக்காக மிகவும் அன்புடன் கட்டி எழுப்பிய வீட்டில் தங்குவதற்காகவும், மூன்றாவதாக, என்னை மிகச் சிறிய அளவில் நேசிப்பவர்கள், எனக்காக ஒரு சிறிய பணியைப் புரிந்தவர்கள், அனைவரையும் ஒன்றிணைத்து என் அன்பில் ஆழமாக மூழ்கச் செய்யவும் நான் இங்கு வந்துள்ளேன்.**"

பாபா தனது படுக்கையில் அமர்ந்து, தரை விரிப்பில் கால்களை உரசிக் கொண்டிருந்தார். உரையாடலின் போது, "**பில் (லெ பாஜ்), ஃபிரான்சிஸின் வலது கரம்; ராபர்ட் (ரவுஸ்), ஃபிரான்சிஸின் இடது கரம்**" என்று கூறி, கூட்டத்தின் முடிவில், "**நீங்கள் மூவரும் என்னை விட்டுப் பிரிய மாட்டீர்கள், இறுதிவரை என்னுடன் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்**" என்று பாபா கூறினார்.

பாபா, பில் லெ பாஜின் மூன்று குழந்தைகளான ருத்தி (RUTHIE), ஜென்னி (JENNY), மைக்கேல் (MICHAEL) ஆகியோருடன் மேலும் சிலரை அழைத்து அவர்களோடு விளையாடினார்.

தொடரந்து பாபா முழுக் குழுவையும் அழைத்தார். ஒவ்வொரு நபரும் பெயரால் அறிமுகப்படுத்தப்பட்டனர். பாபா உடனே, "**உங்களில் யார் நன்றாகத் தூங்கினீர்கள்?... யார் தூங்கவில்லை?**" என்று கேட்டபோது, ஒரு சிலர் கைகளை உயர்த்தினர்.

அவர் கேட்டார், "**நீங்கள் பாபாவை நினைத்துக் கொண்டிருந்தீர்களா? விழித்திருந்து பாபாவை நினைத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. தூங்கும் நேரம் தூங்குவதற்கான நேரம். நீங்கள் தூங்க வேண்டும். உங்களால் முடியாவிட்டால், கவலைப்படாதீர்கள், சிந்தியுங்கள்: நான் தூங்கச் செல்ல வேண்டும். நான் தூக்க மாத்திரை சாப்பிட வேண்டும். நேரத்தை அதற்காகப் பயன்படுத்தி என்னைப் பற்றி சிந்தியுங்கள்.**"

அப்போது பாபா, "**என்னை நேசிக்க உங்களில் யார் தயாராக இருக்கிறார்கள்?**" என்று கேட்க, ஒருவரும் கையை உயர்த்தாத போது, பாபா காரணம் கேட்டார்.

"உங்களை நேசிப்பதற்கு நான் குறைபாடுடையவனாக உணர்கிறேன்," என்று ஒருவர் பதிலளித்தார்.

"**நான் உங்களிடம், உங்கள் குழந்தைகளைக் கடலில் தள்ளும் அளவுக்கு நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?**" என்று கேட்டதற்கு, 'பாபா கட்டளையிட்டால் அவருக்காக அதைச் செய்யத் தயாராக இருப்பதாக' அந்த மனிதர் கூறினார்.

"**அன்பு என்பது பிரியமானவரின் விருப்பத்தை எப்பாடுபட்டேனும் நிறைவேற்றுவதாகும்.**"

வேறொரு நபரிடம் திரும்பி, "**அன்பு இருக்கும் இடத்தில் அச்சம் இருக்க முடியுமா?**" என வினவினார்.

“அன்பானவரின் அதிருப்திக்கு ஒருவர் அஞ்சலாம்” என்பது அந்த நபரின் பதில்.

**“இது முற்றிலும் வேறுபட்ட அச்சம்”** என்று பாபா கூறினார்.

அவர் தொடர்ந்து கூறினார், “ **நீங்கள் எனக்காகக் கட்டி எழுப்பிய இந்த வீட்டில் இன்று உங்கள் அனைவருடன் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், எனது சகவாசத்தில் இருக்கும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**”

இரண்டு குழந்தைகளை வருடிக் கொடுத்து பாபா குறிப்பிட்டார், “**ஒருவர், ஒரு சிறு குழந்தையைப் போல் அல்லது அன்பில் நிறைந்திருக்கும் ஒரு முதியவரைப் போல் ஆக வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**”

அடுத்த ஆண்டு மெஹராபாத்தில் நிகழவிருக்கும் பெரிய கூட்டத்தைப் பற்றிப் பேசிய அவர், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்தும் சிலரை வரவழைப்பதாக அங்கிருந்த அன்பர்களுக்கு உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து பாபா இரண்டு வகையான அகங்காரத்தைப் (EGO) பற்றிய ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கினார்:

**அகங்காரத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று, எண்ணற்ற ஆசைகளையும் விருப்பங்களையும் உள்ளடக்கிய பொய்யும் போலியுமான அகங்காரம். அது கூறுகிறது, ‘நான் ஓர் ஆண் - எனக்கு இது வேண்டும்; நான் ஒரு பெண் - எனக்கு அது வேண்டும்; எனக்கு உடல்நலம் இல்லை - என் உடலில் ஒரு வலி உள்ளது; நான் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறேன் - நான் மகிழ்ச்சியாக இல்லை; என் மனைவி என்னை நேசிக்கவில்லை; நான் மிகவும் பணக்காரன்; நான் மிகவும் ஏழை.’**

**எப்பொழுதும் ‘நான்’ என்ற பேச்சுதான். ஆனால் அது அழிக்கப்படும் வேளையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது; பொய்யான ‘நான்’, உண்மையான ‘நான்’ எனும் தெய்வீக அகங்காரமாக மாற்றப்படுகிறது; அப்போது ‘நான், ஆசைகள் மற்றும் விருப்பங்களிலிருந்து விடுபடுகிறேன்’ என்ற அனுபவம் அடையப் பெறப்படுகிறது. “நான் அளவிறுதியற்றவன்; நான் கடவுளுடன் ஒன்றாக இருக்கிறேன்; நான் கிறிஸ்து” - அதுதான் உண்மையான, தெய்வீக அகங்காரம்.**

ஆஸ்திரேலிய குழுவில் உறுப்பினர் ஒருவரை நோக்கி, பாபா அவரிடம் கூறினார்:

**கடவுளைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதை அறிவுப்பூர்வமாகப் படித்துப் புரிந்து கொண்டதால், ‘நான் கடவுள்’ என்று உறுதியாகக் கூறுகிறீர்கள். ஆனால் நீங்களும் உங்கள் மனமும் ஒன்றுபடாததால், ஒன்றே உருவான ஏக இறைவனாக இல்லாததால், ‘நான் கடவுள்’ என்ற இந்த உறுதிப்பாடு பிரிந்து விடுகிறது. மனதில் எண்ணங்கள் இருப்பதே இந்தக்**

கூற்றுக்குக் காரணம். எண்ணங்கள் இருக்கின்றன; அதாவது இருமைத் தன்மை நிலைகொண்டுள்ளது. இங்கே நேரடி அனுபவம் இல்லை, ஆனால் அவர் கடவுளின் ஒருமைப்பாட்டை புரிந்துகொள்வதன் மூலம், கடவுளுடனான ஐக்கியத்தைப் பற்றிய ஒரு கருத்தை அனுபவிக்கிறார்; எனவே, இது உண்மையான அனுபவம் அல்ல, உண்மையான தெய்வீக அகங்காரமும் அல்ல. இதில் எந்த சமரசமும் இருக்க முடியாது; எந்த விதமான சமரசத்திற்கும் இடமில்லை. கடவுள் ஒருவரே, ஒருவர் கடவுளுடன் ஐக்கியமாக வேண்டும். நீங்கள் உலக மனிதனாக இருக்கும் அதே நேரத்தில், கடவுளுடன் ஒன்றிணைந்தும் இருக்க முடியாது.

உங்களுள் நிலைகொண்டுள்ள கடவுளை நீங்கள் உணர்ந்திருந்தால், கடவுள் எல்லாம் வல்லவர் என்பதை நாம் அறியும் தருணத்தில், நீங்களும் எல்லாம் வல்லவராக இருக்க வேண்டும். பின்னர் ஏன் உதவியற்றவராக உணர்கிறீர்கள்? இந்த இயலாமைக்கு என்ன காரணம்? அமைதியாக சிந்தித்து பாருங்கள். இதை ஏற்றுக்கொண்டு ஜீரணிக்க முயற்சி செய்யுங்கள்; படிப்படியாக, நீங்கள் முயற்சி செய்தால், அது புலப்படும். அதை அமைதியாக சிந்தித்து பாருங்கள், நான் பிரபஞ்சத்தின் இறைவன் என்று படிப்படியாக வெளிப்படும்.

நான் அதே நித்திய ஏக இறைவனாக, எல்லாவற்றிலும் இருக்கிறேன்; எனவே நீங்கள் அனைவரும் கடவுள், இருந்தும் நீங்கள் மிகவும் உதவியற்றவர்களாக உணர்கிறீர்கள். இதன் காரணம் என்ன? ஏனெனில் கடவுளிடமிருந்து உங்களை மறைக்கும் ஒரு வகையான முகத்திரை அல்லது முக்காடு உள்ளது. நீங்களே அந்த முகத்திரையாக இருக்கிறீர்கள், அதை விலக்குவது உங்களால் இயலாத காரியம். மிகவும் சிறியதாக இருக்கும் உங்கள் கண்கள் ஒரு பரந்த நிலப்பரப்பையும் அதில் அடங்கியுள்ள அனைத்து பொருட்களையும் பார்க்க முடியும், ஆனால் அவை தங்களைப் பார்க்க முடியாது. தமது சொந்த கண்களைப் பார்க்க, ஒரு கண்ணாடி தேவை. எனவே, எனது அருள் எனும் கண்ணாடியை அடையப்பெறும் போது, உங்கள் சொந்த உண்மையான ஏக இறைவன் எனும் சுயம் ஒரே நொடியில் வெளிப்படும்.

ஆனால் என் அருளை எப்படி அடையப்பெறுவது? இது மிகவும் கடினம். லட்சக்கணக்கான நபர்களில் ஒருவர் மட்டுமே அதை அடையப் பெற முடியும். என் அன்பெனும் இறை பெருங் கடலில், நீங்கள் உங்களை முழுவதுமாக மூழ்கடிக்க வேண்டும்; அப்போது என் அருளை அங்கே காண்பீர்கள். நான் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளாக இருப்பதை நீங்கள் கண்டுகொள்ள விரும்பினால், அன்பெனும் இறை பெருங் கடலில் மூழ்கி விடுவதுதான் ஒரே வழி!

இது என்ன அன்பு? அன்பு பற்றிய புத்தகங்களின் தொகுப்புகள் பல உள்ளன, ஆனால் அவை உங்களுக்கு அன்பை வழங்க முடியாது. அன்பு தன்னைத்தானே கொடுக்க விரும்புகிறது. அது தனக்கென எதையும் விரும்பி எடுத்துக்கொள்வதில்லை. அது எப்பொழுதும் கொடுக்க மட்டுமே விரும்புகிறது. இப்போது, உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறார், நீங்கள் அவரை மிகவும் நேசிக்கிறீர்கள். நீங்கள், உங்களோடு அவர் இருப்பதையே விரும்புகிறீர்கள். நீங்கள் அவர் மீது வைத்திருக்கும் அன்பு அளப்பரியது. நீங்கள் அவரை விட்டு ஒரு கணம் கூட பிரிந்து இருக்க விரும்பவில்லை; அவர் வேறொரு நபருடன் பேசினால் நீங்கள் தொலைந்து போவதாக உணர்கிறீர்கள். இந்த வகையான 'உடைமை காதல்', அதன் ஒரு வடிவமாக இருந்தாலும், உண்மையான காதல் அல்ல, ஏனெனில், அதில் அடங்கியுள்ள உடைமைக்கான ஏக்கம் - பொறாமை, பயம் இரண்டையும் வளர்க்கிறது. நீங்கள் உங்கள் மனைவியின் மகிழ்ச்சியை பார்க்காமல் உங்கள் சுயநலத்தை மட்டுமே பார்க்கிறீர்கள்.

இப்போது நாம் பேசிக்கொண்டிருந்த தெய்வீக அன்பில், இரண்டு நிலைகள் உள்ளன. முதல் கட்டத்தில் ஒன்றே உருவான அன்பானவருடன் ஐக்கியமாகும் ஏக்கம் உள்ளது; நிச்சயமாக அதில் 'நான் கடவுளுடன் ஐக்கியமாக விரும்புகிறேன்' என்ற அளப்பரிய வெறி உள்ளது. ஆனால் அடுத்த கட்டத்தில் அன்பன் தனது அன்பிற்குரிய இறைவனிடம் எதையும் விரும்பவில்லை. எல்லா சூழ்நிலைகளிலும் அவரை மகிழ்விப்பதில் அவன் திருப்தி அடைகிறான். உண்மையான அன்பு என்று சொல்லக்கூடிய ஒரே இறை அன்பு அதுதான். அன்பு என்று பொதுவாக அழைக்கப்படுவதில், நிலையான மகிழ்ச்சியைக் காண முடியாது; மகிழ்ச்சி, துன்பம் இரண்டுமே உள்ளன. நீங்கள் ஒருமுறை தெய்வீக ஆனந்தத்தை அனுபவித்தால், அது தொடர்ச்சியாக நிலைபெற்றிருக்கும்.

மூன்று வகையான இறை ஆர்வலர்களைக் குறித்த இந்தக் கதையை பாபா எடுத்துரைத்தார்:

**பல ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் நான் தரிசனம் வழங்கிய வேளையில், நகரம் மற்றும் அண்டை ஊர்களிலிருந்து மக்கள் வருவதுண்டு. அந்த தரிசன நிகழ்ச்சிகளில் வந்த மூன்று நபர்களைப் பற்றி நான் இப்போது சொல்கிறேன். முதல் மனிதர் என் அருகில் வந்து, "எனக்கு எதுவும் வேண்டாம் பாபா" என்றார். நான் மிக்க மகிழ்ச்சியாக உணர்ந்தேன். அதைத் தொடர்ந்து அவர், "பாபா, எனக்கு உடல்நலம் சரியில்லை. எனக்கு சீரான உடல்நிலை மட்டுமே வேண்டும். எனக்கு வேறு எதுவும் வேண்டாம்" என்றார். படிப்படியாக அவர் தனது பல்வேறு இடர்பாடுகளைப் பற்றி என்னிடம் கூறினார் - அவருடைய பெரிய குடும்பம் மற்றும் நிதி சிக்கல்கள் போன்ற**

பல. பின்னர், “எனக்கு அதிகம் வேண்டாம் பாபா; இது ஒரு சிறிய விஷயம். எனக்கு கடவுள் வேண்டும்” என்றார்.

இறுதியில், நான் அவரிடம் கூறினேன், “உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஆரோக்கியம், செல்வம் - இவை அனைத்தும் வேண்டும், கடைசியாக, கடவுள்; அதற்கு மேல் வேறு ஒன்றும் வேண்டாம், அப்படித்தானே?”

இரண்டாமவர் கூறினார், “நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்க வேண்டும் பாபா; நான் உங்களுக்கு சேவை புரிய விரும்புகிறேன், எப்பொழுதும் உங்கள் அருகில் இருக்க ஆவலாயுள்ளேன். எனக்கும் இந்த உலகத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, எனக்கு எதுவும் வேண்டாம். நீங்கள் எனக்கு உணவு மற்றும் சில உடைகள் மட்டுமே கொடுத்தால் போதுமானது; நான் இங்கேயே தங்கி உங்களுக்கு சேவை செய்வேன்.” நான் அவரிடம் அங்கேயே இருக்குமாறு அறிவுறுத்தினேன். சிறிது நேரம் கழித்து அவர் கூறினார், “எனக்கு ஒரு பிணைப்பு உள்ளது; நான் இதிலிருந்து விடுபட்டால், இந்த உடலை கைவிடும் வரை, திரும்பி வந்து உங்களுடன் இருப்பேன்.” அவர் கூறிய அந்தப் பிணைப்பு அவருடைய கடன் சுமை. அவர் அதைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும், அது அவருக்கு ஒரு பெரிய சுமையாக இருந்தது.

மூன்றாவது மனிதர் (பிளீடர்) என்னிடம் வந்து, “பாபா, எனக்கு இறை உணர்வு வேண்டும்” என்றார். ‘உங்களுக்கு வேறு எதுவும் வேண்டாமா?’ என்று கேட்டேன். அவர் பதிலளித்தார், “இறை உணர்வை தவிர வேறு எதுவும் தேவை இல்லை.” மூன்று வருடங்கள் ஒரே அறையில் தன்னைப் பூட்டிக் கொள்ளுமாறும், பால் மட்டுமே அருந்த வேண்டும், வேறு எந்த உணவும் இல்லை, படிக்கவோ எழுதவோ கூடாது என்றும் கூறினேன். அந்த மனிதர் இதைச் செய்தார். இதைச் செய்யும் அளவுக்கு அவருக்குத் துணிச்சல் இருந்தது. இந்த மனிதர் தன் அறையை விட்டு வெளியேறவில்லை, ஒரு நாள் அறையில் ஒரு நாகப்பாம்பு இருந்ததைக் கண்டதும், அவருக்கு பால் கொண்டு வந்த சிது அங்கே வந்து அதைக் கொல்லும் வரை காத்திருந்தார்.

என் மீதான அன்பிற்கு எந்தக் கோரிக்கையும் விருப்பமும் இருக்கக்கூடாது என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். “நான் என்னை அறிய விரும்புகிறேன். நான் யார் என்பதை அறிய விரும்புகிறேன்” என்ற கடவுளின் மூல முதலான தற்போக்கு எண்ணத்தின் தூண்டுதலில், ஆசையின் தோற்றம் இருந்தது.

மூல முதலான அசல் ஆசை, பலவிதமான விருப்பங்கள், பொய்யும் போலியுமான மாய உலகின் விருப்பங்களாக விரிவடைந்துள்ளது: “நான் என்னை அறிய விரும்புகிறேன், எனக்கு இது மற்றும் அது வேண்டும்.” இது

**ஒரே தொடர்ச்சியாக உருவெடுத்து வந்தது. வாழ்க்கைக்குப் பின் வாழ்க்கை, மாய உலகின் விருப்பங்களின் பரிணாமம், ஒருவர் சோர்வடைந்து எதையும் விரும்பாத வரை தொடர்கிறது. அந்த நொடியில் அவர் தனது முதல் 'நான் யார்?' என்ற கேள்விக்கான 'நான் கடவுள்' எனும் பதிலை அடையப் பெறுகிறார்:**

**ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, பாபாவை நேசிக்க வேண்டும்; உலகில் வாழ்வதில் பற்றுதல் எதுவும் இருக்கக்கூடாது. அப்போது உங்களில் உருவாகும் பாபாவின் அன்பெனும் முகத்திரை, உங்களை உலகத்திலிருந்து பாதுகாக்கும். பிணைக்கப்பட்டதாக உணர வேண்டாம். எப்படி? என்னை நேசிப்பதன் மூலமும் என்னை நினைவுகூருவதன் மூலமும்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**கிறிஸ்துவின் மகத்துவம் அவருடைய வல்லமையிலோ அல்லது அற்புதங்களிலோ இல்லை; மாறாக, சிலுவையில் அறையப்பட்ட அவரது பணிவில் இருந்தது. அவருடைய பணிவு அவரது உண்மையான மகத்துவம்.**"

அப்போது பாபா முழுக் குழுவையும் வெளியே அனுப்பி, ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து பிரசாதம் வழங்கினார். அவரிடம் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது என்று பாபா கட்டளையிட்டார், ஆனால் ஒரு பல்கலைக்கழக மாணவியான தன்முனைப்புடைய இளம் பெண்மணி ஒருவர், "நான் கேள்விகளைக் கேட்கப் போகிறேன், நான் கேள்விகள் கேட்கவில்லை என்றால், அவர் கடவுள் என்பதை நான் எப்படி அறிவேன்?" என்று கூறி, பின்னர் அவர் பிரசாதத்திற்காக சென்றார். வெளியே வந்தபோது, வாசலில் நின்றுகொண்டிருந்த கிளாரிஸ் ஆடம்ஸை (CLARICE ADAMS) அந்தப் பெண் திகைப்புடன் பார்த்து, "என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை, வாசலுக்குள் நுழைந்ததும், நான் முடங்கிவிட்டதாக உணர்ந்தேன், நான் எனது முழங்காலில் நின்றுகொண்டிருந்தேன்" என்றார்.

பாபா, பெரில் கிட்டன்ஸிற்கு (BERYL GIDDENS) தனது சில துணிமணிகளை துவைக்கும் பாக்கியத்தை வழங்கினார்.

பாபா தமது மதிய உணவை உண்டு முடித்ததும், அதில் பாதியை சமையலறையில் இருந்த பணிப்பெண்களுக்குப் பிரசாதமாக வழங்க அனுப்பிவைத்தார், அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

மதிய உணவுக்குப் பின்னர் அந்தக் குழுவை பாபா தனது அறைக்கு அழைத்து, 'கவலை'யைப் (WORRY) பற்றி விளக்கினார்:

**கவலைப்படாதீர்கள்! அனைத்து கவலையும் ஒன்றாகக் குவிந்து, அதன் ஆற்றல் அதிகரிக்கிறது; அந்தக் கவலையின் பின்புலமாக இருந்த அசல் காரணம் மறைந்த நீண்ட காலத்திற்குப் பின்னரும், அது ஒரு**

பழக்கமாக மாறிவிடுகிறது. (அவர் ஒரு மனிதரிடம் அவருடைய வயதைக் கேட்டு) நீங்கள் இளமையாக இருந்தபோது, இது, அது என பல நிகழ்வுகள் நடந்தன; நீங்கள் கண்கலங்கி அழுதீர்கள், நீங்கள் சோகமாக உணர்ந்தீர்கள், கவலைப்பட ஆரம்பித்தீர்கள், 50 ஆண்டுகளுக்குப் பிறகும் நீங்கள், இப்போதும் கவலைப்படுகிறீர்கள், இருப்பினும் உங்களுக்குள் கவலை உருவான காலம் கடந்துவிட்டது. மேலும் 50 வருடங்கள் கடந்துபோனால், அந்தக் காலத்தின் முடிவில், இப்போது நடக்கும் ஒன்றைப் பற்றி நீங்கள் தொடர்ந்து கவலைப்படலாம். இது சிறுபிள்ளைத்தனம்.

நீங்கள் இப்போது சில சூழ்நிலைகளைப் பற்றி கவலைப்படுகிறீர்கள், ஆனால் நீங்கள் எல்லா சூழ்நிலைகளையும் அனுபவித்திருக்கிறீர்கள். நீங்கள் குருடராக, நோயாளியாக, ஏழையாக, வயதானவராக, இளைஞராக, அழகானவராக, அழகற்றவராக இருந்திருக்கிறீர்கள். உங்கள் குழந்தைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் - நீங்கள் எண்ணற்ற குழந்தைகளை ஈன்றெடுத்திருக்கிறீர்கள், அவர்களுக்கும் எண்ணற்ற பெற்றோரும் குழந்தைகளும் இருந்திருக்கிறார்கள். உங்கள் வேலையைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் - நீங்கள் எல்லா வகையான தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் மனைவியைப் பற்றி கவலைப்படுகிறீர்கள் - உங்களுக்கு பல மனைவிகள் இருந்தனர். நீங்கள் எல்லாமாக இருந்திருக்கிறீர்கள், எல்லா நிலைமைகளையும் அனுபவித்திருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் எதிர்கொள்ளும் சிறிய விஷயத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள்.

அனைத்தும் என்னிடமிருந்து வெளிப்படுகிறது, ஆனால் அது உண்மையானது அல்ல. நீங்கள் கனவு காணும் வேளையில், நான் உங்கள் கனவில் தோன்றி, நீங்கள் கனவு காண்கிறீர்கள் என்று சொன்னால், அது உண்மையல்ல என்று நீங்கள் சொல்வீர்கள்: “பாபா, நான் இவற்றை அனுபவிக்கிறேன்; இவை உண்மையானவை என்று எனக்குத் தெரியும்.” புரிந்து கொள்வது கடினம். நீங்கள் விழித்திருக்கும் வேளையில் காணும் கனவைப் பற்றி நான் இப்போது உங்களுக்குச் சொல்கிறேன், எதுவும் உண்மையானது அல்ல, எனவே கவலைப்படாதீர்கள். அதை எப்படி நிறுத்துவது? என்னை நினைவுகூருங்கள், என்னை நேசியுங்கள்.

கிறிஸ்து அனைத்து தெய்வீக அதிகாரத்துடன் கூறினார், “உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன,” நான் எனது தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன், “என்னை நேசியுங்கள், உங்கள் கவலைகள் அனைத்தும் மறைந்துவிடும்!”

யதார்த்தத்தை, ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை விவரிக்க இயலாது, அதை அடைவது கடினம். லட்சத்தில் ஒருவர் கடவுளை

**நேசிப்பவராக இருக்கும் வேளையில், பல லட்சம் அன்பர்களில் ஒருவரே இறை உணர்வை அடையப் பெறுகிறார். இது சாத்தியமற்றது போல தோன்றலாம். பாபா கூறுகிறார், நான் இங்கே உங்களுடன் இருப்பதால் உங்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது; இப்போதும் நான் கூறுகிறேன்: "என்னை நேசியுங்கள்".**

அதன்பிறகு, பாபா, நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்களுக்காக கட்டப்பட்டிருந்த குடில்களுக்கு விஜயம் செய்து, மெஹர் ஹவுஸுக்குப் பின்னால், ஃபிரான்சிஸும் அவருடைய உதவியாளர்களும் பாபாவுக்காகப் பிரத்யேகமாக கட்டி எழுப்பிய 'தியானப் பாதை'யின் (MEDITATION PATH) ஒரு பகுதிக்கு நடந்து சென்றார்.

ஃபிரான்சிஸ் பிராபஸோன், 'தி க்வெஸ்ட்' (THE QUEST) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதியிருந்தார்; இது, பிரியமான கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஒரு கதை; அன்று பிற்பகல் 3:45 மணிக்கு, குழு அந்த நாடகத்தை பாபாவுக்காக அரங்கேற்றியது, கடவுளைத் தேடும் பாத்திரத்தில் ஃபிரான்சிஸ் நடித்தார். பாபா அவர்களின் நடிப்பைப் பாராட்டி, நாடகம் இதர நாடுகளிலும் வெளியிடப்படும் விதத்தில் விநியோகிக்கப்பட வேண்டும் என்று கூறினார். பாபா இந்த நாடகத்தில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்; அவர் ஃபிரான்சிஸிடம் அவருக்கு ஒரு 'வெகுமதி' வழங்கப் போவதாகக் கூறினார். பலரும் ஆச்சரியப்படும் விதத்தில், அந்த வெகுமதியானது 28 நாட்கள் - 1957 பிப்ரவரி முழுவதும் - பால், தேநீர் அல்லது காஃபி மட்டுமே அருந்தி உபவாசம் இருப்பதோடு, அந்தக் காலகட்டத்தில் ஃபிரான்சிஸ் எதையும் படிக்க அனுமதிக்கப்படவில்லை. ஃபிரான்சிஸ் கூப்பிய கரங்களுடன் பணிவாக, "நன்றி, பாபா" என்றார்.

பாபா பின்னர் இரவு ஓய்வுக்காக விடைபெற்றார். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, மேல் கூரையிலிருந்து எழுந்த சத்தத்தின் காரணத்தைக் கண்டறிய ஃபிரான்சிஸ் பிராபஸோன், பில் லெ பாஜ், ரெக் பாஃபில் (REG PAFFLE) மூவரையும் பாபா அழைத்தார். பலத்த காற்று வீசத் தொடங்கியது. அவர்கள் ஏணிகளில் ஏறி என்ன என்பதைக் கண்டுகொள்ள முயன்றனர். சாத்தியமான காரணமாகக் கருதிய வரவேற்புப் பலகையை ஏந்திய சட்டத்தை அவர்கள் சரிபார்த்தனர், ஆனால் அது திடமாக இருப்பதைக் கண்டறிந்தனர். அப்போது பாபா சிரித்துக்கொண்டே, **"என்னைப் பார்க்க இது உங்களுக்கு மேலும் மூன்று வாய்ப்புகளை வழங்கியுள்ளது"** என்றார்.

அன்றைய 'டெய்லி டெலிகிராஃப்' (DAILY TELEGRAPH) நாளிதழ் பாபாவின் வருகையைக் குறித்த "நாவன்மை மிக்க மனிதன் ஆனால் நாவால் எதுவும்

மொழியவில்லை" (MAN OF TONGUES AND OF NONE) என்ற தலைப்புடன் ஒரு செய்தியை வெளியிட்டது: அந்தக் கட்டுரையில் இவ்வாறு கூறப்பட்டது:

"மெஹர் பாபாவிற்கு நாவால் பேசும் வரம் உள்ளது - அவர் ஆறு மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். ஆனால் அவர் அவற்றில் எதையும் நாவால் மொழிவதில்லை."

பாபா செய்தியாளரிடம், "**நான் ஒரே கடவுள், ஒரே மனித இனம், ஒரே சகோதரத்துவம் ஆகியவற்றில் மக்களை விழிப்படையச் செய்ய வந்தேன்; நான் புதியதொரு மதத்தைக் கற்பிக்க வரவில்லை, ஆனால் ஏற்கனவே உருவான மதங்களை உயிர்ப்பிக்க வந்துள்ளேன்**" என்று கூறினார்.


மறுநாள், 1956 ஆகஸ்ட் 11 சனிக்கிழமை காலை 8:00 மணிக்கு, குழு பாபா முன்னிலையில் கூடியது. பாபா, அவர்களின் உடல்நிலை குறித்தும், அவர்கள் எப்படித் தூங்கினார்கள் என்றும் கேட்டு, அவர்களிடம் நகைச்சுவையாக உரையாடினார். அதைத் தொடர்ந்து பாபா, குழந்தைகளுடன் கோலி விளையாடினார். 13 வயதான பெர்னார்ட் ப்ரூஃபோர்ட் (BERNARD BRUFORD) என்ற சிறுவனுக்கு பாபா ஒரு தந்திர விளையாட்டு முறையைக் காட்டினார். அவர் பெர்னார்டிடம் தனது விரல் நுனியில் கோலியை வைத்து காற்றில் பிடிக்கச் செய்து, நான்கு அடிகள் பின்வாங்கி மற்றொரு கோலியை இலக்கு வைத்து காற்றில் அடித்தார். பாபா முதல் முறை தவறவிட்டாலும், பெர்னார்ட் வைத்திருந்த கோலியை தொடர்ச்சியாக இரண்டு முறை தாக்கினார். குழந்தைகள் வெளியேறும் வேளையில் வாசலில் நின்று கொண்டிருந்த பாபா, அவர்களில் பலரிடம், "**நான் யார்?**" என்று வினவ வெவ்வேறு பதில்கள் வழங்கப்பட்டன. பெர்னார்ட் கூறினார், "பூமியின் மிகச் சிறந்த மனிதர்!" இதைக் கேட்டு பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து, உற்சாகத்தில் கைகளை உயர்த்தினார்.

தொடர்ந்து காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை பொதுமக்களுக்கான பொது தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. கிட்டத்தட்ட 150 பேர் வந்திருந்தனர். பாபா மெஹர் ஹவுஸின் வாசலில் அமைந்த மணற்கல் பாளத்தின் மீது நின்று, கூட்டத்தை அன்புடன் வரவழைத்து வாழ்த்தினார்; சில பணியாட்களின் குழந்தைகள் உட்பட அனைத்து குழந்தைகளின் மீதும் சிறப்பு கவனம் செலுத்தினார். பாபா உலர் பழங்கள் மற்றும் பருப்புகளைப் பிரசாதமாக வழங்கினார். அன்று பாபாவின் மதிய உணவை (மீன்), மே லன்ட்குய்ஸ்ட் (MAY LUNDQUIST) தயார் செய்தார்.

டொனால்ட் இங்க்ரம் ஸ்மித் (DONALD INGRAM SMITH) என்ற பத்திரிகையாளருக்கும் பாபா நேரடிப்பேட்டி வழங்கினார். பாபாவின் சைகைகளுக்கு எரச் விளக்கம் அளித்த வேளையில், அவர்களின் உரையாடல் பதிவு செய்யப்பட்டது. ஸ்மித்தின் முதல் கேள்வி அறிவுப்பூர்வமான நம்பிக்கையைப் பற்றியது. எரச் இவ்வாறு தொடங்கினார்:



மெஹர் ஹவுஸ் ஸிட்னி (MEHER HOUSE SYDNEY), **11** ஆகஸ்ட் (AUGUST) **1956**



அறிவுப்பூர்வமான நம்பிக்கை தேவையற்றது, ஏனெனில் அது எந்த விதத்திலும் உதவாது என்று பாபா கூறுகிறார். இது ஆன்மீகப் பாதையில் ஒரு படிக்கல் மட்டுமே. அறிவார்ந்த நம்பிக்கைக்குப் பிறகு, பார்வையின் மூலம் அடையப் பெறும் உறுதியான மற்றுமொரு படிக்கல் இருப்பதாக பாபா கூறுகிறார்; அந்த நம்பிக்கையையும் மீறி, கடவுளுடன் ஐக்கியமாகும் அனுபவத்தின் மூலம் கடந்து செல்ல வேண்டும். நாம் அறிவார்ந்த நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

இப்போது, எடுத்துக்காட்டாக, இங்கே ஃபிரான்சிஸ் பிராபஸோன், அவர் படிப்பறிவற்றவர் என்று வைத்துக் கொள்வோம்; அவர் எதையும் கற்றறியவில்லை, அவர் எதையும் கற்க விரும்பவுமில்லை, ஆனால் அவருக்கு ஒன்றே ஒன்று தெரியும் - அவர் எங்கோ, எப்படியோ, கடவுள் எனும் ஒரு குறிப்பிட்ட விஷயம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்; மேலும் கடவுள் இருக்கிறார் என்று அவர் உறுதியாக நம்புகிறார். அவர் கூறுகிறார்: "நான் கடவுளைப் பார்க்க வேண்டும், நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன்." அவர் கடவுளைக் காண ஏங்குகிறார், அவர் அவரை மிகவும் நேசிக்கிறார்; அவர் நீரிலிருந்து வெளியே வந்த மீன் போல தவிக்கிறார். அவர் தனது பசியை இழக்கிறார். அவருக்கு தூக்கம் என்பது அறவே இல்லை, கடவுளைப் பார்ப்பது மட்டுமே அவரது ஒரே சிந்தனையாக உள்ளது. அவருக்கு அறிவார்ந்த நம்பிக்கை இல்லாதபோதும், அவருக்கு இதயமும், அந்த இதயத்தில் கடவுளைக் காணும் ஏக்கமும் இருப்பதால் அவர் கடவுளைக் காண்கிறார்..

இப்போது, இன்னொருவரை எடுத்துக்கொள்ளுங்கள் - அவர் நன்கு கற்றறிந்தவர், அதி புத்திசாலி, நிறைய கேள்விப்பட்டிருக்கிறார், அவர் தொடர்ந்து படித்து வருகிறார். இவ்வாறு படிப்பதன் மூலம் அவர் அறிவுபூர்வமான நம்பிக்கையை அடையப்பெறுகிறார். அவர் அறிவார்ந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பதால், இப்போது, இதையெல்லாம் கேட்டும் படித்தும், அவர் கூறுகிறார்: "கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன்." ஆனால் அது அறிவுபூர்வமான நம்பிக்கை மட்டுமே. இதுபோன்ற நம்பிக்கையைக் கொண்ட இந்த மனிதனுக்கு கடவுள் மீது அன்பு இல்லை; அவர் தனது அறிவுத்திறன் மூலமாக வெறுமனே நம்புகிறார்; இதனால் அவர் ஓர் இக்கட்டான நிலையை எதிர்கொள்கிறார். அவர் கூறுகிறார்: "இதோ நான், அதிகம் படித்தேன், அதிகம் கேள்விப்பட்டேன், தொடர்ந்து புத்தகங்களைப் படித்து வருகிறேன் - மெஹர் பாபாவின் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தையும் நான் படித்தேன். கடவுள் உளதாயிருக்கிறார், ஒன்றே உருவான கடவுள் உண்மைப்பொருளாக இருக்கிறார் என்று அறிவுப்பூர்வமாக நான் ஆணித்தரமாக நம்புகிறேன்."

**கடவுளை நேசிக்கும் இதயம் வேண்டும் என்று பாபா மீண்டும் மீண்டும் கூறுகிறார். அறிவார்ந்த நம்பிக்கையும், அன்பும், கடவுளைக் காண வேண்டும், அவரோடு ஐக்கியமாக வேண்டும் என்ற ஏக்கமும் இருந்தால், அந்த அன்பும் ஏக்கமும்தான் அவர் இலக்கை அடைய உறுதுணையாக இருக்கும்.**

**எனவே, எதையும் கற்றறியாத, அறிவார்ந்த நம்பிக்கை இல்லாத, ஆனால் இதயத்தில் அன்பைக் கொண்டிருக்கும் ஃபிரான்சிஸ் நம்முடன் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இங்கே, இந்த இரண்டாம் மனிதர், அதீத புத்திசாலித்தனமும், அறிவார்ந்த நம்பிக்கையும் கொண்டவர், ஆனால் அன்பும் இதயமும் இல்லாதவர். அடுத்ததாக, அறிவுப்பூர்வமாக உறுதியான நம்பிக்கையும், அன்பின் இதயத்தையும் கொண்ட மூன்றாவது மனிதர் ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் இலக்கை அடைகிறார், அவர் கடவுளைக் காண்கிறார், கடவுளோடு ஐக்கியமாகிறார்; அதேவேளையில் இதயம் இல்லாத, அறிவார்ந்த நம்பிக்கை மட்டுமே உள்ளவர் கடவுளைக் காண முடியாது. அறிவார்ந்த நம்பிக்கையும், இதயமும் உள்ளவர் கடவுளைக் காண முடியும், பிறரையும் கடவுளைக் காணச் செய்ய முடியும்; அதேசமயம் இதயம் மட்டுமே உள்ளவர் தானாகவே கடவுளை உணர்ந்து கொள்கிறார், பிறரைக் கடவுளைக் காண உதவுவதில்லை. அதுதான் வித்தியாசம். இப்போது பாபா கூற விரும்புவதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா?**

அந்த பத்திரிக்கையாளர், “ஐயா, உங்களால் அன்பைப் பற்றி விளக்க முடியுமா? நீங்கள் ‘அன்பு’ எனக் கூறும் வார்த்தையின் அர்த்தம் என்ன?” என வினவினார்.

இதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா கேட்டார்:

**அன்பு? அன்பு என்றல் என்ன? முதலில், இதோ எனக்குப் பிரியமானவர், இயல்பாகவே நான் அவரை நேசிக்கிறேன். நான் எனக்குப் பிரியமானவரை நேசிக்கிறேன். இப்போது, அது என்ன நேசம், பிரியமானவர் மீதான நேசம்? இதன் பொருள் என்னவெனில் நான் பிரியமானவருக்காக அனைத்தையும் தருகிறேன் - அனைத்தையும் விட்டுவிடுகிறேன், பதிலுக்கு எதையும் விரும்பவில்லை. நான் கொடுக்க விரும்புகிறேன், எனது பிரியமானவருக்கு எல்லாவற்றையும் கொடுக்க விரும்புகிறேன், அவரை மகிழ்விக்க வேண்டும், அவரை மனநிறைவடையச் செய்ய வேண்டும். எனது சொந்த மகிழ்ச்சியையும் பொருட்படுத்தாமல் எல்லாவற்றையும் கொடுக்க விரும்புகிறேன். அதுதான் அன்பு என்று அழைக்கப்படுகிறது.**

**ஆனால், இதுபோன்ற கொடுப்பதும், பிரியமானவரின் இன்பத்தை நாடுவதும் ஒருவரை அதி தீவிரமான அளவிற்கு அழைத்துச் செல்கிறது**

என்றால், அன்பன் தனது முழு வாழ்க்கையையும் பிரியமானவருக்காகத் துறக்கவும், தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறான் என்று பொருள்படும். அதுதான் அன்பின் மகத்துவம்: பதிலுக்கு எதையும் விரும்பாதது! பாபா, பதிலுக்கு எதையும் விரும்புவதில்லை.

இப்போது உலக அன்பு, ஆண் ஒருவர், ஒரு பெண் மீது வைத்திருக்கும் அன்பு, அதுவும் அன்புதான். காதலன் பெண்ணுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க விரும்புகிறான், அல்லது பெண் ஆணுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க விரும்புகிறார், ஆனால் அதில் ஏதோ ஒன்றை அடையும் சுயநல நோக்கம் உள்ளது. அதுதான் 'உடைமை காதல்'. உலகின் காதல் - ஓர் ஆண் ஒரு பெண்ணை நேசிப்பது அல்லது ஒரு பெண் ஓர் ஆணை நேசிப்பது - அன்பின் சில அம்சங்களைக் கொண்டுள்ளது, ஆனால் அதில் தனக்கென உடைமையாக்கும் நோக்கம் உள்ளது. அது எதையேனும் விரும்புகிறது, எதையேனும் அடைய ஏங்குகிறது.

இங்கே, அன்பிற்குரியவர் மீதான அன்பு, ஐக்கியத்தை அடைய விரும்பும் தெய்வீக அன்பு - இந்த தெய்வீக அன்பிலும் நிச்சயமாக தர வரிசைகள் உள்ளன. அன்பனின் நோக்கமே அன்பிற்குரியவருடன் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்பதே, அந்த அன்பு உச்சத்தை எட்டும் போது அன்பன் எதையும் விரும்புவதில்லை, அன்பிற்குரியவருடன் இணைவதைக் கூட விரும்பவில்லை. எதையும் தனக்கென வைத்திருப்பது அல்லது எதையும் விரும்புவது என்ற கேள்விக்கே இடமில்லை, கொடுப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறான்.

"உங்கள் நோக்கம் என்ன ஐயா, அல்லது உலகில் உங்கள் பணி என்ன?" என்று டொனால்ட் ஸ்மித் கேட்டார்.

எனது அன்பை அள்ளி வழங்கி, மனிதகுலத்தை விழிப்புறச் செய்து, அனைத்தும் மாயை, கடவுள் மட்டுமே உண்மையானவர் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதே எனது நோக்கம். கடவுளை நேசிப்பவர், அந்த உண்மைப்பொருளை அடைய முடியும். அனைவரும் ஒன்றே, ஆனால் அந்த ஒருமைத்தன்மை எவருக்கும் தெரியாது. கடவுள் உங்களுக்குள் இருக்கிறார். ஆனால் உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு முகத்திரை அல்லது முக்காடு உள்ளது; நீங்களே அந்த முகத்திரை. கடவுள் எனக்குள் இருக்கிறார். எல்லா மனிதர்களும், கடவுள் தமக்குள்ளே இருக்கிறார் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்பதற்காக, நான் இந்த மனித வடிவத்தை எடுத்துக்கொண்டேன். மனிதனை கடவுளிலிருந்து மூடி மறைக்கும் அந்த முகத்திரையை அகற்றி, மனித குலத்தை விழிப்புறச் செய்து, எல்லாவற்றிலும் கடவுள் ஒருவரே வாழ்கிறார், ஏக இறைவன்

**ஒருவரே உண்மைப்பொருளாக இருக்கிறார், இதர அனைத்தும் மாயை என்பதை அறியச் செய்வதே எனது பணி.**

டொனால்ட் ஸ்மித் குழப்பமடைந்து, திக்கித் திணறினார், "அப்படியானால் உண்மைப்பொருள் உள்ளேயும் வெளியேயும் உள்ளதா?"

**அகத்திலும் இல்லை, புறத்திலும் இல்லை என்று பாபா கூறுகிறார். உண்மைப்பொருள் எங்கும் வியாபித்திருக்கிறது. நிஜத்தில் உண்மைப்பொருளுக்கு அப்பால் எதுவும் இல்லை. அகம், புறம், மேல், கீழ் என்று எதுவும் இல்லை. உண்மைப்பொருள் எங்கும் நிறைந்துள்ளது, எங்கும் வியாபித்திருப்பது. ஆனால் மாயை என்று அழைக்கப்படுவது, நாம் கூறுவது போல், உண்மைப்பொருளான ஏக இறைவனிடமிருந்து வெளிவருகிறது. இது உண்மைப்பொருளின் நிழல்.**

**நீங்கள் நடக்கும் வேளையில், நிழல் உங்களைப் பின்தொடர்கிறது, ஆனால் நீங்கள் நிழலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. நீங்கள் அதற்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்க முடியாது, ஏனெனில் அது நிழலைத் தவிர வேறொன்றுமில்லை. நிழல் உங்களிடமிருந்து வந்தது; உங்களைப் பின்தொடர்வது உங்கள் சொந்த நிழல். நீங்கள் நிழலைப் பின்தொடர்வதில்லை. சரியாக நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு, நிழல் மறைந்துவிடும். ஏன்? ஏனெனில் அது அங்கு இல்லாமல் மறைந்துவிட்டது. நீங்கள் மட்டுமே நிஜமான உண்மைப்பொருள், நீங்கள் நிழல் அல்ல; நிழல் உளதாயிருப்பது இல்லை.**

பின்னர் ஆகஸ்ட் 11 மாலை 4:15 மணிக்கு, பாபாவும் மண்டலியும் ஸிட்னியிலிருந்து 660 மைல்கள் தெற்கே அமைந்த மெல்போர்ன் (MELBOURNE) நகருக்கு விமானத்தில், 20 ஆஸ்திரேலியா அன்பர்களுடன் (பாபாவை சந்திக்க ஸிட்னிக்கு வந்தவர்கள்) சென்றனர். ராபர்ட் ரவுஸ் மெல்போர்ன் நகருக்கு விமான முன்பதிவு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். விமானக் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய ஜான் கிரான்ட் (JOHN GRANT) மூலம், 'டக்ளஸ் டிசி-6பி' (DOUGLAS DC-6B) என்ற ஆஸ்திரேலியன் நேஷனல் ஏர்லைன்ஸ் (AUSTRALIAN NATIONAL AIRLINES) நிறுவனத்தின் புதிய பயணிகள் விமானத்தைத் தேர்ந்தெடுத்தார். இது ஆஸ்திரேலியாவில் உள்ள இதர விமானங்களை விட வேகமானது மற்றும் விமானத்தின் பின்புறத்தில் ஆறு பேர் அமர்ந்து செல்லும் சிறிய சந்திப்பு அறையை உள்ளடக்கியது. பாபாவின் அனுமதியுடன் ராபர்ட் இந்தப் பிரிவில், பாபா, நான்கு மண்டலி, ஃபிரான்சிஸ் ஆகியோரை பதிவு செய்தார்; குழுவின் பிற அன்பர்கள் இதர பயணிகளுடன் அமர்ந்தனர்.

அன்று மாலை 6:30 மணிக்கு மெல்போர்ன் எஸென்டன் விமான நிலையத்திற்கு (MELBOURNE ESSENDON AIRPORT) வந்த பாபா, அவரது மண்டலி மற்றும் ஸிட்னி குழுவை மெல்போர்ன் அன்பர்கள் வரவேற்றனர். விமானத்திலிருந்து

ஃபிரான்சிஸுடன் வெளியே வந்த பாபாவை ஈனா லெமன் (ENA LEMMON), முதன்முதலில் சந்தித்தார். பாபா, ஈனாவின் கையைப் பற்றிக்கொண்டு முனையத்திற்குள் சென்றார்; அங்கு அவர் வேறு சில அன்பர்களையும் சந்தித்தார். அவரைப் பின்தொடர வேண்டாம் என்று பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். கேம்பர்வெல் (CAMBERWELL) புறநகர்ப் பகுதியில், 26 ஃபேர்மாண்ட் அவென்யூவில் (26 FAIRMONT AVENUE) அமைந்த டாக்டர் டெனிஸ் ஓ'பிரையன் (DR. DENIS O'BRIEN) மற்றும் அவரது மனைவி ஜோன் (JOAN) ஆகியோரின் இல்லத்தில் பாபா தங்கவிருந்தார். கிளாரிஸ் ஆடம்ஸின் கணவர் ஸ்டான் (STAN) அவரை அங்குக் காரில் அழைத்துச் சென்றார்.

ஆடம்ஸின் மகள் ஸிந்தியா (CYNTHIA), பன்னிரெண்டு வயதான போதும், பாபாவை மிக அருகில் பார்க்க வேண்டும் என்ற தீவிர ஆவல் கொண்டிருந்தாள். பாபாவை கேம்பர்வெல்லுக்கு அழைத்துச் செல்லப் புறப்பட்டபோது, அவள் தனது சகோதரனுடன் விளையாடுவதற்காக வெளியே சென்று, கவனக்குறைவாக ஒரு மூலையில் திரும்பி பாபாவின் காரை, நேருக்கு நேர் எதிர்கொண்டார். பின்புறமாக அமர்ந்திருந்த பாபா அவர்களை நேராக பார்த்து, கை அசைத்து சிரித்தார். பாபாவைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டாம் என்ற கட்டளையை மீறிவிட்டதாக எண்ணி, அவர்கள் கைகளை அசைத்து உள்ளே ஓடினர். கார் புறப்படத் தயாராக இருந்த வேளையில், பாபா, ஸ்டானிடம் சில நிமிடங்கள் காத்திருக்குமாறு கூறி, பாபாவை அருகாமையில் பார்க்க விரும்பிய சிறுமியின் அமைதியான பிரார்த்தனைக்கு அவர் பதிலளித்தார்.

43 வயதான ஸ்டான் ஆடம்ஸ், இதற்கு முன் பாபாவை சந்தித்ததில்லை, ஆனால், காரில் ஏறியதும், பாபா சிரித்துக்கொண்டே, **"என்னை நினைவிருக்கிறதா?"** என வினவினார்.

"இல்லை," என்றார் ஸ்டான்.

**"உங்களுக்கு நினவு வரும்,"** என்று பாபா அவருக்கு உறுதியளித்த போது அவர் புறப்பட்டுச் சென்றார்.

வழியில், பாபா ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஓ'பிரையனின் இல்லத்தில் இருக்க விரும்புவதாகக் குறிப்பிட்டு, ஸ்டானிடம் அவரால் இயன்றவரை வேகமாக ஓட்டுமாறு அறிவுறுத்தினார். டெனிஸ் ஓ'பிரையன், அவருடைய காரில் பின்தொடர்ந்து சென்ற வேளையில், ஸ்டானின் கார் அதிவேகத்தில் சென்றதை அவதானித்தவர், பாபாவைப் பார்த்ததும் ஸ்டானின் மனம் குழம்பிவிட்டதாக நினைத்தார்!

அவருடன் பேசிக் கொண்டிருந்த போது, பாபா, ஸ்டானை **'மிஸ்டர் ஆடம்ஸ்'** என்று அழைத்தார். அப்போது பாபாவிடம் பக்தியும், ஈடுபாடும் இல்லாத ஸ்டான், வேடிக்கையாக, "அப்படி அழைக்காதீர்கள்! நானும் ஆதிகாலத்தவன் என்று என்னை நினைக்கச் செய்வீர்கள்!" என்றதும், பாபா அவர்

முதுகில் தட்டிக் கொடுத்து அவர் கூறியதை நினைத்து மகிழ்ந்தார். ஜோன் ஓ’பிரையன், அவரது சகோதரி டோரிஸ் ஓ’கீஃப் (O’KEEFE) இருவரும் பாபாவை வரவேற்க காத்திருந்தனர். பாபாவும், மண்டலியும் பயன்படுத்தும் விதத்தில் வீட்டை முழுவதுமாக காலி செய்தனர்.

மாலை 5:00 மணியளவில், அவர்கள் ஓ’பிரையன் இல்லத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, பாபா மீண்டும் ஸிட்னி குழுவை சந்தித்தார். பாபா தனது இரண்டு நாள் மெல்போர்ன் விஜயம் முழுவதும் ஓ’பிரையனின் இல்லத்தில் தங்கினார்.

அடுத்த நாள் 1956 ஆகஸ்ட் 12 ஞாயிற்றுக்கிழமை காலையில் மெல்போர்ன் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஓ’பிரையனின் இல்லத்தில் ‘ட’ வடிவ ஓய்வறையைச் சுற்றி ஒன்றுதிரண்டனர், மேலும் ஒவ்வொருவரும் பாபாவிடம் அறிமுகப்படுத்தப்பட்டு, அவரது அரவணைப்பைப் பெற்றுக்கொண்டனர். ஆகஸ்ட் மாதம் மெல்போர்னில் குளிர்கால மாதங்களில் ஒன்றாகும், மேலும் வீட்டின் சில அறைகள் குளிர்ச்சியாக இருந்தன. பாபா அனைவரையும் தனது முன்னால் அமருமாறு கூறியபோது பலர் தரையில் அமர்ந்தனர்.

அவர் முதலில் கூறினார்: “**நீங்கள் அனைவரும் தயக்கமின்றி சௌகரியமாக உணருங்கள்; உங்கள் கால்களை நீட்டி இளைப்பாறும் விதத்தில் அமருங்கள். ஒருமுறை, இந்தியாவில் என்னுடனான சந்திப்பு இரண்டு மணி நேரம் நீடித்தது, மேலும் சிலர் தங்கள் கால்களைத் தமக்குக் கீழே வைத்துக்கொண்டு, முழு நேரமும், அசௌகரியமாக உணர்ந்தனர். எனவே, உங்கள் அனைவரையும் நிம்மதியாக உணரவும், உங்கள் கால்களை நீட்டி வசதியாக அமரவும் கேட்டுக்கொள்கிறேன்.**”

ஒரு நபர் உடனே, “ஆனால் பாபா, மரியாதையின் நிமித்தம் நாங்கள் எங்கள் உள்ளங்கால்களை உங்களை நோக்கி நீட்டக்கூடாது, பாபா, நீங்கள் கடவுள்!” என்றார்.

அதற்கு பதிலளித்த பாபா கூறினார்: “**கடவுள் எங்கும் இருக்கிறார். நான் எல்லா இடங்களிலும் இருக்கிறேன், உங்கள் உள்ளங்கால்களுக்குக் கீழேயும் இருக்கிறேன். நீங்கள் உங்கள் கால்களை எங்கு நகர்த்தினாலும், நான் அங்கேயும் இருக்கிறேன். எனவே, உங்கள் கால்களைத் தயக்கமின்றி நீட்டுவதில் தவறில்லை. பாபா உங்கள் நிலைக்கு வந்து உங்களுடன் ஒன்றிவிடுகிறார்.**”

எரச் கூறினார்: “ஸிட்னியில், குழுவிற்கு பல விஷயங்களை பாபா எடுத்துரைத்தார், மேலும் மெல்போர்ன் மக்கள் எதையும் தவறவிடக் கூடாது என்ற எண்ணத்தில், அங்குக் கூறியதை மீண்டும் எடுத்துரைப்பது சிறந்தது என்று

அவர் நினைக்கிறார். அவரது சுற்றுப்பயணத்தின் இறுதி கட்டத்தில், அவர் ஆஸ்திரேலியா விஜயத்தை ரத்து செய்ய விரும்பி, தகவல் தெரிவிக்க முன்வந்தார். பின்னர் ஈனா (லெமன்), கிளாரிஸ் (ஆடம்ஸ்) இருவரும் மனம் வருந்துவார்கள் என்று நினைத்தார், மேலும் கடினமாக உழைத்த பிற அன்பர்களும் மகிழ்ச்சியாக உணர மாட்டார்கள்; ஆதலால் அவர் இங்கு வர முடிவு செய்தார்."

பாபா தொடர்ந்து கூறினார்:

**அமெரிக்காவில் அனைத்து நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடந்தன, ஆனால், நேரம் மிகவும் குறைவாக இருந்தது. நான் பல செய்திகளை வழங்க வேண்டியிருந்தது; பல தனிநபர்கள், குழுக்கள், நிருபர்கள் மற்றும் தொலைக்காட்சி நபர்களை சந்திக்க வேண்டியிருந்தது. இது அனைத்தும் என் மீதுள்ள அன்பினால் செய்யப்பட்டது.**

**நான் இந்தியாவிற்கு விரைவில் திரும்பிச் செல்வது குறித்து நினைத்துக் கொண்டிருந்தேன்; அதனால் நான் எனது ஓராண்டு ஏகாந்தவாசத்தை மீண்டும் தொடரலாம். நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் காலகட்டத்தில், மேற்கத்திய நாடுகளுக்கு எனது ஒரு மாத சகவாசத்தை மட்டுமே வழங்க இணக்கம் தெரிவித்தேன். இந்தியாவில், எவரும் விமான நிலையத்திற்கு வந்து விடையளிக்கவும், நான் திரும்பும்போது என்னை வரவேற்கவும் வர வேண்டாம் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் திரும்பி வரும்போது இந்தியாவில் எவரையும் சந்திக்காமல் அடுத்த ஐந்து மாதங்களுக்கு எனது சகவாசத்தை மீண்டும் தொடர்வேன்.**

**நான் என் அன்பர்களின் குழுவுடன் இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். நான் இங்கு உங்கள் நண்பர்கள் அல்லது கூட்டத்தினருடன் இருக்கவோ, பிறருக்காக நிகழ்ச்சிகளை நடத்தவோ வரவில்லை, பாபாவின் அன்பின் நிமித்தம், இங்கு இருப்பவர்களுக்காக மட்டுமே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. எனவே வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பாபாவின் அன்பை உள்வாங்க முயற்சி செய்யுங்கள்; பாபாவின் சகவாசத்தில் இருங்கள். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்ல எனக்கு வேறு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம், ஏனெனில் எனது நேரம் மிக அருகாமையில் உள்ளது. இது அதி வேகமாக நெருங்கி வருகிறது.**

இரண்டு வகையான அகங்காரம் மற்றும் மூன்று வெவ்வேறு இறை நாட்டம் மிக்க ஆன்மீக ஆர்வலர்கள் குறித்து ஸிட்னியில் வழங்கிய இரண்டு சொற்பொழிவுகளை பாபா மீண்டும் எரச்சிடம் வாசிக்கக் கூறினார். ஒரு கட்டத்தில், ஈனா, ஜோன் ஓ'பிரையன் இருவரையும் பாபா தனக்கு இருபுறமும்

அமர அழைத்தார். பின்னர், 1957 நவம்பர் 7ஆம் தேதி தொடங்கி, ஒரு மாதத்திற்கு இந்தியாவில் ஒரு பெரிய கூட்டத்தை நடத்துவதற்கான தனது திட்டத்தைப் பற்றி பாபா, அவர்களுக்குத் தெரிவித்தார்; மேலும் ஆஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்து பல குழுக்களை அழைக்க விரும்புவதாக விளக்கினார்:

**அமெரிக்காவில் வாழும் எனது அன்பர்கள் 50 பேரை அழைத்திருக்கிறேன். இருபது பேர் ஐரோப்பாவிலிருந்தும் சிலர் ஆஸ்திரேலியாவிலிருந்தும் வருவார்கள். இந்தியாவிற்கு வரும் எனது மெல்போர்ன் அன்பர்கள் எனது அறிவுறுத்தல்களை முற்றிலுமாகப் பின்பற்ற தயாராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உணவு மற்றும் தங்குமிடத்தைப் பற்றி எந்தக் கவலையும் வேண்டாம்; ஆனால் அழைக்கப்படுபவர்கள் ஒவ்வொருவரும் கட்டணம் செலுத்த வேண்டும்.**

**1957இல் அடையப்பெறும் வாய்ப்பைப் போன்ற மற்றொரு வாய்ப்புக்காக மக்கள் அடுத்த 700 ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்க வேண்டும்.**

**இயேசு கிறிஸ்து இறைப் பெருங்கடலாக ஒரே நேரத்தில் பிதாவும், குமாரனுமாக இருந்தார். அவரை எவராலும் அறிய முடியாது. அப்போது அவர் கூறியதை எவரும் உணரவுமில்லை. அவர் சர்வ வல்லமையுள்ளவராக இருந்தாலும் அவர் மிகவும் உதவியற்றவராகத் தோன்றினார். இறுதியில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். ஏன்? மனிதகுலத்திற்கு, பணிவு என்றால் என்ன என்பதைக் கற்பிப்பதற்காக. இன்று கிறிஸ்தவ உலகம் தேவாலயங்களுக்குச் செல்கிறது. அவர்கள் பிரசங்கங்கள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களில் ஈடுபட்டு மனக்கலக்கத்தில் இருக்கிறார்கள்; மேலும் இயேசு உலகளவில் என்ன செய்ய விரும்பினார் என்பதை மறந்துவிடுகிறார்கள்.**

பாபாவின் அழைப்பை ஏற்று ஸிட்னி, மெல்போர்ன் நகர்களிலிருந்து இந்தியா வருபவர்களின் பட்டியலை ஃபிரான்சிஸ், ஆதி இருவரும் தொகுத்தனர்.

பாபா குழுவிற்குள் எழுந்த முந்தைய கருத்து வேறுபாடுகளுக்கு முழுமையான தீர்வு கண்ட பின்னர், அன்று காலை 10.00 மணிக்கு, கூட்டம் நிறைவடைந்தது. அனைவரும் வெளியில் ஒன்றுதிரண்ட வேளையில், மதிய உணவு நேரம் காலை 11:30 வரை, பாபா தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். பாபா தமது அன்பர்களிடம் மதிய நேரத்தில் தத்தமது இருப்பிடத்திற்குச் செல்லுமாறும், மாலையில் டோரிஸ் ஓ'கீஃபின் இல்லத்தில் மீண்டும் ஒன்றுகூடி, ஃபிரான்ஸிஸ் வாசிக்கும் பாபாவின் சில செய்திகளைக் கேட்குமாறும் கூறினார். கூட்டத்தில் பாபா கலந்து கொள்ளவில்லை.

மெல்போர்னுக்கு பாபா வருவதற்கு முன்னர், அவர் தங்குவதற்கென ஆறு இல்லங்களின் பட்டியல் வழங்கப்பட்டது. ஒன்று மட்டுமே பயன்படுத்தப்பட்டதால், பாபா அன்று மதியம், பிற ஐந்து இல்லங்களுக்கும் விஜயம் செய்து, ஒவ்வொன்றையும் புனிதப்படுத்தினார். மெல்போர்ன் நகரில் வீடுகள் பல்வேறு பகுதிகளில் பரந்து விரிந்து கிடந்ததாலும், ஸிட்னியிலிருந்து முந்தைய நாள் இரவு அவர் வந்திருந்ததாலும், இது பாபாவின் கருணை மிகுந்த தாராள மனப்பான்மையின் வெளிப்பாடாகப் பார்க்கப்பட்டது. ஆனால் பாபா இதைச் செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்; மேலும், மெல்போர்ன் நகரின் இதயத்துடிப்பாக அமைந்த முக்கிய பாகங்கள் வழியாகப் பயணம் செய்தார். ஓர் இல்லத்தில் இருந்தபோது பாபா, இவ்வாறு குறிப்பிட்டார், "**நான் இந்தியாவில் வீடுகளுக்கு விஜயம் செய்யும்போது, ஆரத்தி நிகழ்த்தி, மாலை அணிவித்து, பூஜை செய்வது போன்ற பலவற்றுடன் நான் போராட வேண்டும். இங்கு நான் சாதாரணமான முறையில், பல வீடுகளுக்குச் செல்லும் புதுமையான, வழக்கத்திற்கு மாறான அனுபவங்களை அடையப் பெற முடிகிறது.**"

பாபா, ஈனா லெமன், மண்டலி ஆகியோருடன் கீழ்வரும் வீடுகளுக்கு விஜயம் செய்தார்:

எல்ஸி எம். ஸ்மார்ட், 29, பார்க்லி ஸ்ட்ரீட், ரிங்வுட் (ELSIE M. SMART, 29, BARKLY STREET, RINGWOOD);

ஸ்டான் & கிளாரிஸ் ஆடம்ஸ், 12 ஜெல்லிகோ தெரு, பாக்ஸ் ஹில் (STAN & CLARICE ADAMS, 12 JELLICOE STREET, BOX HILL);

ஜான் & பெட்டி பர்ஸ்டன், 40, வில்லியம் தெரு, மவுண்ட் வேவெர்லி (JOHN & BETTY BURSTON, 40 WILLIAM STREET, MOUNT WAVERLEY);

ஜான் & ஜோன் ப்ரூஃபோர்ட், 335, வாட்டெல்ட்ரீ சாலை, கிழக்கு மால்வென் (JOHN & JOAN BRUFORD, 335 WATTLETREE ROAD, EAST MALVERN);

ஓஸ்வால்ட் & பெட்டி ஹால், 9, கெர்ரி கிரஸெண்ட், எல்தம் (OSWALD & BETTY HALL, 9 KERRIE CRESCENT, ELTHAM).

கிழக்கு மால்வெர்னில் அமைந்த ப்ரூஃபோர்டின் இல்லம் ஸூஃபி அமைப்பின் கூட்டங்களுக்கும், விக்டோரியாவில் நடந்த பல முதல் பாபா சந்திப்புகளுக்கும் ஒரு முக்கிய நிகழ்விடமாகத் திகழ்ந்தது. அவர்கள் காரில் ப்ரூஃபோர்ட் இல்லத்திற்குச் செல்லும்போது, பாபா, ஈனாவின் கையைப் பற்றிக்கொண்ட அந்த கணத்தில் ஈனா, தன்னை மறந்து சொர்க்கத்தில் இருப்பது போல் உணர்ந்தார்!

மெல்போர்னுக்கு வரும்போது, பாபா வீடு வீடாக விஜயம் செய்வார் என்பது அதற்கு முன்னதாகத் தெரியாது. ஸிட்னியில் பாபாவை சந்திப்பதற்காக மெல்போர்னிலிருந்து அவசரமாக ப்ரூஃபோர்ட் தம்பதியினர் புறப்பட்டு, பாபாவின் வருகைக்கு சற்று முன்னதாக வீடு திரும்பிக் கொண்டிருந்ததால்,

எல்லாவற்றையும் ஒழுங்காக சீரமைக்க அவர்களுக்கு மிகக் குறைந்த நேரமே கிடைத்தது. இளம் சிறுவனின் (பெர்னார்ட்) அறையில் அனைத்தும் அந்த அளவுக்கு நேர்த்தியாக இருந்ததை பாபா பார்த்ததும், அவர் பளிச்சிடும் கண்களுடன் கேட்டார், "**இது எப்பொழுதும் இப்படித்தான் இருக்குமா?**"

"இல்லை!" பெர்னார்ட்டின் உறுதியான ஆனால் நேர்மையான பதில். தொடர்ந்து, வரவேற்பு அறையில், பாபா குடும்பத்தினருடன் முன்னும் பின்னுமாக ஒரு பந்தை வீசி விளையாடினார்.

ஒருவர் வீட்டிற்குள் நுழைந்ததும், இடதுபுறத்தில் இருந்த முதல் அறை ஜான் ப்ரூஃபோர்டின் தொழிற்கூடம். அதில் அவரது மின்னணு பொறிகள், மரத்தளபாடங்கள், உலோக மற்றும் கலை வேலைப்பாடுகள் அனைத்தும் - மேலும் பழுதான தூசகற்றும்கருவி மற்றும் ஒரே நாளில் சரிசெய்யக்கூடிய அனைத்தும் இருந்தன. மரக்கூழ் தரையில் குவிந்திருந்தது; ஒரு காலத்தில் கம்பளமாக இருந்தவற்றில், உருகிய உலோகக் கலவையின் துகள்கள் அட்டை போல் ஒட்டிக்கொண்டிருந்தன. அறை எப்போதேனும் சுத்தம் செய்யப்பட்டிருந்தாலும், அதன் கதவு மூடியே இருக்கும். குடும்பத்தார் தவிர வேறு எவரும் உள்ளே துணிந்து சென்றதில்லை. பாபா அந்தக் கதவைச் சுட்டிக்காட்டி, "**மேலும் இந்த அறை?**" என வினவியதும் ஜான் வெட்கப்பட்டு, "இது அதிர்ச்சியூட்டும் நரகம் என்று அறியப்படுகிறது!" என்று கூறவே, சிரித்துக்கொண்டே உள்ளே சென்ற பாபா, ஒளிரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மெல்போர்ன் நகரில் ஆரம்பகால பாபா சந்திப்புகளுக்கு ஆடம்ஸின் இல்லம் மற்றுமோர் இடமாக இருந்தது. இந்த இல்லத்தின் தாழ்வாரத்திற்கு வெளியே, கிளாரிஸ் ஆடம்ஸ் சில இந்திய வண்ணக் கோலங்களின் வடிவமைப்புகளை வரைந்திருந்தார் (அத்தகைய வண்ணமிகு கோலங்கள் இந்திய வீடுகளில் எப்பொழுதும் பண்டிகை நாட்களில் போடப்பட்டிருக்கும்). இந்த வடிவமைப்புகளை வழங்கியவர் யார் என்பதை பாபா அறிய விரும்பினார். கேட்டி ஈரானி, மும்பையில் இருந்தபோது அவற்றைக் கொடுத்ததாக கிளாரிஸ் கூறினார்.

நியூ சவுத் வேல்ஸ், ஆர்மிடேல் நகரைச் சேர்ந்த கிளாடிஸ் ஹியுவெட், (GLADYS HEWITT FROM ARMIDALE, NEW SOUTH WALES), ஆடம்ஸ் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்; ஆனால், ஆடம்ஸுக்காக மட்டுமே பாபா அங்கு வருகை தருவதாக அவர் நினைத்ததால், பிற அன்பர்களுடன் வெளியில் தங்குவது நல்லது என்று முடிவு செய்தார். இருப்பினும், கிளாடிஸின் கரத்தை பாபா உறுதியாகப் பற்றிக்கொண்டு, ஆடம்ஸ் இல்லத்திற்கு திரும்பி வரச் செய்தார்.

கிளாரிஸின் குழந்தைகளான நோயல், ஸிந்தியா, கொலின் மூவரும் அப்போது அவர்களுடன் வசித்து வந்த பீட்டர் என்ற நண்பருடன் பாபாவிற்கு

அறிமுகம் செய்து வைக்கும் நோக்கத்தில் வரிசையில் நின்றனர். ஸிந்தியாவை அறிமுகப்படுத்திய போது, பாபா சிறுமியிடம், **"நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?"** என வினவியதும்...

"எனக்குத் தெரியாது, ஆனால் நான் நேசிக்கிறேன் என்று நினைக்கிறேன்," என்று பதிலளித்ததும் பாபா அவளைத் தழுவினார்.

அறையில் அமர்ந்து பாபா குடும்பத்தினரின் இசை நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார். ஸ்டான் வயலினும், முதல் பையனான நோயல் புல்லாங்குழலும் இசைத்துக் கொண்டிருந்தனர். பாபா பத்து வயது கொலினிடம் அவனது இசைத்தட்டுகளை இசைக்கச் சொன்ன போது, கொலின், "என்னால் முடியாது!" என்று கூறி, காயப்பட்ட விரலை உயர்த்தினான். "ஆனால் நான் உங்களுக்காக ஆரஞ்சு பழம் வெட்டிய வேளையில் விரலை வெட்டினேன்!" என்று தீவிர தொனியில் கூறினான்; பாபா பரிவுடன் தலையசைத்தார்.

பாபா சமையலறை உட்பட பல்வேறு அறைகளைப் பார்வையிட்டார். அவர் சிறுவர்களின் படுக்கையறைக்குள் நுழைந்தபோது, சிறுவர்கள் அமைத்திருந்த ஒரு பெரிய ரயில் பெட்டிகளின் ஒருங்கிணைப்பை எதிர்கொண்டார். பாபா சிறிது நேரம் ரயில்கள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரும் அதையே பார்த்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென பாபா கையை உயர்த்தியதும், ரயில் நின்றது. அவர் அதை கீழே வைத்ததும், ரயில் மீண்டும் இயக்கப்பட்டது. வாசலில் நின்றுகொண்டிருந்த ஸிட்னி நகரின் அன்பர் ஒருவர், "அதிசயம்!" என்று அடக்கமான தொனியில் குறிப்பிட்டார். அதிசயம் என்னவெனில், நோயல் தனது பார்வையை பாபாவின் மீது உறுதியாகக் கொண்டு, ரயிலை இயக்கும் கட்டுப்பாடுகளில் கைகளை வைத்திருந்தார்! இருவரும் ஒருவரையொருவர் கண்களால் ஜாடை செய்து கொண்டிருந்ததால் அவர்கள் 'அதிசயத்தை' சரியான ஒத்திசைவில் நிகழ்த்த முடிந்தது.

அதைத் தொடர்ந்து, பாபா சிறுவர்களுடன் கோலி விளையாடினார்; கொலின், கேட்டிக்கு அனுப்பிய கடிதத்திற்கு பாபா, மௌனமாக பதிலளித்தார். அந்தக் கடிதத்தில், "பாபாவுடன் கோலி விளையாடி, அவரை நான் வெல்ல முடியும் என்று பந்தயம் கட்டுகிறேன்!" என்று குறிப்பிட்டிருந்த சவாலை பாபா ஏற்றுக்கொண்டார். எனவே அவர்கள் இந்திய பாணியில் விளையாடினர், இறுதியில், பாபா வென்றார். நிபுணத்துவ வீரராக இருந்த நோயலால் எதையும் அடிக்க முடியவில்லை. இறுதியாக, பாபா அவருக்கு ஒரு பெரிய கோலியைக் கொடுத்தார், அது சாதாரணமாக இலகுவான இலக்காக இருந்திருக்கும் - ஆனால் அதையும் நோயல் தவறவிட்டார்!

மவுண்ட் வேவெர்லியில் அமைந்த ஜான் மற்றும் பெட்டி பர்ஸ்டனின் இல்லத்தில், பாபா இதர இல்லங்களில் செய்ததைப் போலவே ஒவ்வோர்

அறையையும் பார்வையிட்டார். அருகிலிருந்த மண் சாக்கடையில் பாபாவின் கார் சிக்கிக் கொண்டது. எரச் கீழே இறங்கி, சிரமமின்றி காரை பள்ளத்திலிருந்து தூக்கி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

பாபா, ரிங்வுட்டில் அமைந்த எல்ஸி ஸ்மார்ட் என்பவரின் இல்லத்திலும் ஒவ்வோர் அறையையும் பார்வையிட்ட வேளையில், கண்ணாடிகளாலான சூரிய அறையில் நின்று, பாபா பரிபூரணத்துவத்திற்கான அடையாளத்தைக் காட்டினார். எல்ஸி பாபாவை தனது இரண்டு குழந்தைகள், பில், ஜீன் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தினார். பாபா அவரிடம், "**உங்கள் இல்லத்தில் நான் இருப்பது பெரும் பாக்கியம்**" என்றார்.

எல்ஸி பின்னர் எழுதினார்:

இறை உருவான ராஜாதி ராஜா எங்கள் அமைதியான புறநகர் பகுதிக்கு வந்திருந்தார், எங்கள் வீட்டையும் தோட்டத்தையும் கடந்து சென்றார். ஆரவாரமோ, விளம்பரத் துகிற்கொடிகளோ எதுவும் இல்லை. அது அப்படியே இருக்க வேண்டும் என்பது அவரது விருப்பம், ஆனால் பாபாவின் வருகையின் உயிரோட்டமான நினைவு, ஒருபோதும் மங்காது. நான் அறையை இளஞ்சிவப்பு கமலி மலர்களால் அலங்கரித்தேன். அவரது வருகைக்கு மூன்றரை வாரங்களுக்குப் பின்னரும் அவை ஒளிரும் உயிரோட்டத்துடன் இருந்தன!

டெனிஸ் ஓ'பிரையன் இந்த நேரத்தில் பாபாவை காரில் அழைத்துச் சென்று கொண்டிருந்தார்; ஒருமுறை அவர்கள் ஒரு மலை மீது பயணம் செய்து கொண்டிருந்த வேளையில், அவர், பாபாவிடம் ஆன்மீகத்தைப் பற்றி ஒரு கேள்வி எழுப்பினார். பாபாவின் துல்லியமான மற்றும் விரிவான பதிலைக் கேட்ட டெனிஸ், உள்வாங்கப்பட்ட நிலையில் ஒரு தவறான திருப்பத்தை எடுத்ததால் இரண்டு மைல் தூரம் பாதைக்கு வெளியே செல்ல வேண்டியதாயிற்று!

பாபா முக்கியமாக வீடுகளைச் சுற்றி, வேறுவேறு அறைகளுக்குச் சென்று, ஓஸ்வால்ட் & பெட்டி ஹாலின் இல்லத்தில், 9, கெர்ரி கிரஸென்ட், எல்தம் நகரில், பிரத்தியேகமாகத் தயார் செய்யப்பட்ட ஸோஃபாவில் அமர்ந்து, இல்லத்தின் மகிழ்ச்சியூட்டத்தக்க சூழலைப் பாராட்டினார். '**மண் செங்கல் கட்டிடத்தை அவர்களே கட்டி எழுப்பினார்களா**' என்று பாபா கேட்டார். ஓஸ்வால்ட் பதிலளித்தபோது, பாபா சில கணங்கள் சுவரில் உயரமாக வெறித்துப் பார்ப்பது போல தோன்றியது, பின்னர் எரச்சின் மூலமாக, "**இந்த வீட்டின் கட்டிடப் பணியில் கணிசமான அளவு அன்பு நிறைந்துள்ளது**" என்று குறிப்பிட்டு, அவர் சிறிது நேரம் அமைதியாக இருக்குமாறு அழைப்பு விடுத்து, ஒரு நிமிடத்திற்குப் பிறகு, "**நான் இப்போது இந்த வீட்டை ஆசீர்வதித்துள்ளேன். எப்பொழுதும் இங்கேயே வாழுங்கள். இதை ஒருபோதும் கைவிட வேண்டாம்**

**அல்லது பணத்திற்காக வாடகைக்கும் விடாதீர்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாபா, ஓஸ்வால்டின் கண்களை வெகுநேரம் உற்று நோக்கினார். ஓஸ்வால்ட் பின்னர் அந்த அனுபவத்தைப் பற்றிய கவிதை ஒன்றை எழுதினார், அதில் அவர் கூறியதாவது:

"அவர் பார்வை அதி தீவிரமாக, மென்மையாக,
நீண்ட நெடிய நேரம் நிலைக்கவே;
அந்த அன்பின் ஆழங்களில் என்னை இழக்கும் வரை
மிக இனிமையாக நீந்தினேன்,
அவை குறிப்பிடத்தக்க வகையில் எனக்கு
சொந்தமானவை என்பதைக் கண்டேன்."

விடைபெறுவதற்கு முன்னதாக, பாபா, ஓஸ்வால்டின் ஓவியங்களைப் பார்வையிட்டார். புறப்படும் நேரம் வந்ததும், பாபா, '**சாலையில் விரைந்து செல்லும் நேரம்**' என்று சொல்வது போல தோளில் தட்டினார். ஓஸ்வால்ட், பாபாவை 20 மைல் தொலைவில் அமைந்த ஓ'பிரையன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். காரில் பாபா அவரிடம், "**நீங்கள் ஒரு நல்ல ஓட்டுநர், நீங்கள் அவதார புருஷரை, காரில் அழைத்துச் செல்லும் அளவுக்கு எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பது உங்களுக்குத் தெரியாது**" என்று கூறினார்.

பாபா மிகவும் அழகிய கிழக்கு புறநகர்ப் பகுதிகள் மற்றும் அருகிலமைந்த கிராமப்புற காட்சிகள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டார்; அந்த நேரத்தில் அது காடுகள் மற்றும் பண்ணைப் பகுதிகளின் கலவையாக இருந்தது. எல்தமின் கிட்டத்தட்ட கிராமப்புற கோட்டம் வழியாக அமைந்த சாலையோரத்தில், பூர்வீக புதர் மற்றும் சில பெரிய, பழைய பிசின் மரங்கள் நிறைந்திருந்தது, அந்த இடம் இந்திய கிராமப்புறங்களின் பகுதிகளைப் போலவே இருப்பதாக பாபா கருத்துத் தெரிவித்தார். பாபா கைகளை மெதுவாக வீசியபடி நிலப்பரப்பை சுட்டிக்காட்டி, "**இது அழகானது; மிகவும் அருமையானது! அனைத்தும் என்னிடமிருந்து வந்தது. ஆனால் இது எல்லாம் மாயை**" என்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

காரின் பின் இருக்கையில் எரச்சுடன் ஃபிரான்சிஸ் பிராபஸோன் அமர்ந்திருந்தார். பாபா அவருடன் கண்டிப்பான விதத்தில் நடந்து கொண்டார், ஆனால் பயணத்தின் போது அவர் ஓஸ்வால்டிடம் மெதுவாகக் கூறினார், "**ஃபிரான்சிஸ் எனக்கு மிகவும் பிரியமானவர்.**"

மற்றுமொரு தருணத்தில், பாபா ஓஸ்வால்டின் கையைத் தொட்டு, பாளம் போல் ஊடுருவும் சூரிய ஒளியில், மலைப்பகுதியில் சில வெள்ளை, பனி போன்ற தோற்றமுடைய கோழிகளைச் சுட்டிக்காட்டினார். ஓஸ்வால்ட், "ஆம், இரவு முழுவதும் கோழிகளின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சுவதால், அவை அதிக

முட்டைகளைக் கொடுக்கும்" என்று கேலியாகக் கூறி, அந்த அற்புதமான தருணத்தைக் கெடுத்தார். பாபாவின் வெளிப்பாடு மிகவும் கடினமாக இருந்ததாக ஓஸ்வால்ட் நினைவு கூர்ந்தார்.

திரும்பி வரும் வழியில், ஜோனின் சகோதரர் நார்மன் ராட்க்ளிஃப் (NORMAN RADCLIFFE) வாழ்ந்துவந்த ஜோன் ஓ'பிரையனின் பெற்றோரின் இல்லத்தில் (2 ஃபேர்மாண்ட் அவென்யூ - FAIRMONT AVENUE) சில வீடுகளுக்கு முன்னால், கீழே கார்களை நிறுத்துமாறு பாபா கூறினார்; மேலும், பாபாவின் உணவு அங்கிருந்து வருவதை அவர் அறிவார். ஈனா காரிலிருந்து இறங்கி, அங்கிருந்தவர்களுக்கு பாபா வந்திருப்பதைத் தெரிவிக்க உள்ளே சென்றார். பாபா உள்ளே நுழைந்து, நார்மனின் அருகே சென்று, எதிர்பாராத விதத்தில், வழிப்பாதையில் அவரைத் தழுவினார். ராட்க்ளிஃப் மூலமாக ஈனா மற்றும் குழுவில் உள்ள அனைவரும், அவரது சகோதரிகளை சந்தித்து, ஸுஃபி அமைப்பின் தலைவர் பாரன் வான் ஃபிராங்கன்பெர்கின் தொடர்பிலும், அதைத் தொடர்ந்து மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்ததும் குறிப்பிடத்தக்கது. ராட்கிளிஃப், பாபா மீது ஆர்வம் காட்டாததால் அவரைப் பார்க்க வரவில்லை, எனவே பாபாவே அவரை சந்திக்க வந்தார்!

மாலை 5:00 மணிக்கு ஓ'பிரையன் இல்லத்திற்குத் திரும்பிய பாபா, ஈனாவை உள்ளே அழைத்து, ஃபிரான்சிஸுடன் அமர்ந்து பேசினார்; ஒரு கட்டத்தில் பாபா, ஈனாவின் கன்னத்தில் அன்புடன் முத்தமிட்டார்.

மறுநாள், 1956 ஆகஸ்ட் 13 திங்கட்கிழமை காலை, பாபாவின் முன்னிலையில் முழுக் குழுவும் கூடியது. பாபா, குழந்தைகளையும் அழைத்து வருமாறு கூறியிருந்தார். பாபாவின் கண்கள் சற்று மேல் நோக்கி இருந்தன; அவரது ஆன்மீக உள் பணியில் மூழ்கி, மகத்தான தோற்றத்தில் காணப்பட்டார், ஆனால் அவரை சூழ்ந்து இருந்தவர்களிடமிருந்து முற்றிலும் விலகியிருந்தது போலத் தோன்றியது. பின்னர் அவர், "**இரவில் நான் எனது உலகளாவிய பணியில் மிகவும் மும்முரமாக இருந்தேன். இப்போதும் நான் அந்தப் பணியின் சுமையை உணர்கிறேன். நான் புத்துணர்ச்சியுடனும் பிரகாசமாகவும் உணரவில்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ளவோ, உணரவோ முடியாது**" என்றார்.

தொடர்ந்து எரச் கூறினார், "பாபா இப்போது இந்தியாவைப் பற்றி உங்களுக்கு எடுத்துரைப்பார்." பாபா சைகையால் உரையைத் தொடங்கினார்:

**எனது தற்போதைய ஏகாந்தவாசம் 1956 பிப்ரவரி 15 அன்று நிறைவுக்கு வரும். அதற்குப் பிறகு, மார்ச் மாதம், இந்தியாவில் நிகழவிருக்கும் கூட்டத்தைப் பற்றிய வழிமுறைகளை உங்களுக்கு அனுப்புவேன் - நீங்கள் எப்போது ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்பட**

**வேண்டும், இந்தியாவில் நீங்கள் எப்போது எதிர்பார்க்கப்படுகிறீர்கள், நீங்கள் எங்கெங்குச் செல்ல வேண்டும், எங்கெங்குத் தங்க வேண்டும், நீங்கள் விமானம் அல்லது கப்பலில் வருவதற்கான, அறிவுறுத்தல்கள் அனைத்தும் வழங்கப்படும். மெஹர்ஜி உங்கள் அனைவரையும் வரவேற்பார். கூட்டம், நவம்பர் 7ஆம் தேதி தொடங்கி, ஒரு மாதம் நீடிக்கும். நவம்பர், டிசம்பர் மாதங்கள் இந்தியாவில் குளிர்காலமாக இருக்கும், எனவே அனைவரும் தேவையான பாதுகாப்புடன் வர முயற்சிக்கவும்.**

**நான் எனது பணியில் பெரும் சுமையை உணர்கிறேன். நேரம் மிகவும் நெருங்கி வருகிறது. போர் வெடிப்பதற்கு ஒரே ஒரு தீப்பொறி போதுமானது. நான் பணிபுரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் புத்துணர்ச்சியின்றி காணப்பட்டாலும், வெளியே நான் நடக்கச் சென்றால், என்னைப் பின்தொடர நீங்கள் அனைவரும் ஓட வேண்டும். நீங்கள் என்னுடைய வேகத்தில் நடக்க முடியாது! எனது நடையின் வேகம் மிக அதிகம்.**

**இன்று காலை ஃபிரான்சிஸ், ஒரு குழந்தையைப் போல் அழுது கொண்டிருந்தார். (ஃபிரான்சிஸ்) இப்போது இங்கே அழத் தொடங்காதீர்கள்! இன்று காலை நான் என் அறையிலிருந்து வெளியே வந்ததும், நான் சீக்கிரம் புறப்பட வேண்டும் என்று ஃபிரான்சிஸிடம் கூறினேன். நாம் திட்டமிட்டதற்கு முன்னதாக விமானம் உள்ளதா? மாலை 4:00 - 5:00 மணிக்கு ஒன்று இருப்பதாக ஃபிரான்சிஸ் என்னிடம் கூறினார். நான் சீக்கிரமாகவே புறப்பட்டால், ஜோன், டெனிஸ், ஈனா, கிளாரிஸ் ஆகியோர் ஏமாற்றமடையக்கூடும் என்று அவரிடம் கூறினேன். அப்போது, ஃபிரான்சிஸ் என்னிடம் கூறினார், "அவர்கள் உங்களை நேசிக்கிறார்கள், நீங்கள் என்ன செய்தாலும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்."**

**இது உண்மையா? அவர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்கள் என்ன கூறுவார்கள்? நீங்கள் என்ன நினைப்பீர்கள், ஈனா? நீங்கள் ஏமாற்றமடைவீர்களா? ஜோன், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இரண்டு பெண்மணிளும், "உங்கள் விருப்பம் என்னவோ, அவ்வாறே ஆகட்டும் பாபா" என்று பதிலளித்தனர்.

**உங்களிடமிருந்து இதைக் கேட்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவில், எனது வழிகளை அவர்கள் அறிவார்கள். அவர்கள் திடீர் மாற்றங்களுக்குப் பழகிப்போனவர்கள். ஒரு பெரிய கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன, பிறகு நான் அங்கு வர விரும்பவில்லை, எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்ய வேண்டும் என்று கூறி அனுப்பினேன். அதைத் தொடர்ந்து நான் வர விரும்புகிறேன் என்று தெரிவித்த போது, அவர்கள் புதிய ஏற்பாடுகளை செய்ய வேண்டியதாயிற்று.**

**நான் எங்கும், எல்லோரிலும் இருக்கிறேன். பரிபூரண குருநாதர்கள், தங்கள் சீடர்களை சோதிப்பதில்லை. அவர்கள் அனைவருடனும் ஒன்றாக இருப்பதால், சோதனை என்ற தேவைக்கு இடமில்லை. ஆன்மீகப் பாதையில் முன்னேறிய ஆர்வலர்கள், தங்கள் சீடர்களை சோதிக்கின்றனர், ஆனால் பரிபூரண குருநாதர்கள் அவ்வாறு செய்வதில்லை.**

**இயேசு தமது சீடர்களிடம் கூறினார்: "எல்லோரும் என்னுடன் ஒட்டிக்கொள்கின்றனர். உங்களில் சிலர் என்னைக் காட்டிக்கொடுக்கும் காலம் வரும்." அது ஒரு சோதனை அல்ல; அது இறை மனிதனின் வேலை. யூதாஸ் அவருக்கு எதிராகத் திரும்பினார். யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது, ஆனால் அது ஒரு பெரிய உதவி. இது யூதாஸ் செய்த துரோகம் அல்ல, இயேசுவின் பணியை நிறைவேற்ற யூதாஸ் உதவினார். இது அனைத்தும் தெய்வீக திட்டத்தின் ஓர் அங்கம்.**

**எனவே, நான் எந்த நேரத்தில் புறப்பட வேண்டும்?**

முதலில், பாபா அன்றிரவு 7:15 மணிக்கு 'டிரான்ஸ் ஆஸ்திரேலியன் ஏர்லைன்ஸ்' (TRANS AUSTRALIAN AIRLINES) மூலம் புறப்படவிருந்தார், ஆனால் இப்போது 4:10 மணிக்கான 'என்ஸெட் விமானம் 920'இல் (ANSETT FLIGHT 920) இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. பாபா, ஆந்திராவில் 50000 - 60,000 பேர் வந்திருந்தபோது வழங்கப்பட்ட தரிசன நிகழ்ச்சியைப் பற்றி விவரித்தார், மேலும் அவர் '**இரண்டு கைகளாலும் மணிக்கணக்கில் இடைவிடாது பிரசாதம் வழங்க வேண்டியிருந்தது; அதை விவரிக்க முடியாது**,' என்று அவர் கூறினார்; அதன் பின்பு **"நேற்று இரவு நான் நிறைய பணிபுரிந்தேன்; உலகளாவிய பணியில் ஈடுபட்டேன்"** என்றார்.

இறுதியில், '**இந்த இல்லம் அவரது மெல்போர்ன் மையமாக இருக்கும், அனைத்து முக்கிய கூட்டங்களும் இங்கு நடத்தப்பட வேண்டும்**' என்றும் பாபா டெனிஸ் & ஜோன் ஓ'பிரையனுக்கு அறிவுறுத்தினார். '**ஓ'பிரையன் தம்பதியர் வீட்டை தம்முடன் வைத்துக்கொள்ளவும், அதில் வாழவும், அதை விற்க வேண்டாம்**' என்றும் அறிவுறுத்தினார்.

பாபாவுடன் சிறிது நேரம் மௌனம் நிலவியது; அதைத் தொடர்ந்து பெரியவர்கள் அனைவரும் வெளியே செல்ல, குழந்தைகளை அழைத்து வந்து, பெற்றோர்கள் பாபாவிடம் அவர்களை அறிமுகப்படுத்தினர். சிறுவர்கள் அனைவரும் கம்பளத்தின் மீது அமர்ந்து பாபாவை நிமிர்ந்து பார்த்துக்கொண்டிருந்தது மகிழ்ச்சிகரமான காட்சியாக இருந்தது. அவர் அவர்களின் தலைகளை வருடி, சிலரைத் தழுவினார். பாபா அவர்களுடன் மீண்டும் கோலி விளையாடினார். அவர் துல்லியமாக, இரு கைகளின் ஆள்காட்டி விரல்களைப் பயன்படுத்தி, இந்திய பாணியில் விளையாட வேண்டும் என்று பாபா வற்புறுத்தியதால் சிறுவர்கள் மிகவும் குழப்பமடைந்தனர். பாபா, பின்னர்

அவர்களுடன் பந்து விளையாடினார், ஒரு குழந்தையைப் பார்த்த வண்ணம், விரைவாக பந்தை எதிர் திசையில் வீசினார்.

குழந்தைகளுடன் விளையாடிய பின்பு, பாபா கேக்கை வரவழைத்தார், ஆனால் அது அவரிடம் கொண்டுவரப்பட்டதும், அவர் அதை மறுத்து, வேறொரு கேக்கை எடுத்துவரக் கூறினார். உடனடியாக குளிரூட்டப்பட்ட கனி வகைகளின் கேக் ஒன்று கொண்டு வரப்பட்டது, அதை அவர் வெட்டி, துண்டுதுண்டாக்க எரச்சிடம் கொடுக்கவே, அவர் அதை அனைத்து குழந்தைகளுக்கும் பகிர்ந்தளித்தார்; அவர்கள் தங்கள் பிரசாதத்தை பேராவலுடன் பெற்றுக்கொண்டனர்.

ஸிந்தியா ஆடம்ஸின் பங்கு கடைசியாக வழங்கப்பட்டது; ஒருவேளை பாபா தன்னை மறந்துவிடப் போகிறார் என்று கூட நினைத்தார். ஆனால் பாபா எவரையும் மறக்கவில்லை; மாறாக, அவர் ஒரு பெரிய துண்டை சிறுமியிடம் கொடுத்தார். கேக்கை, பாபா அவர் முன்னிலையில் அங்கேயே உண்ணுமாறு அனைவரையும் அறிவுறுத்தினார்; ஆனால், பாவம், சிந்தியாவால் அதை முழுவதுமாக உண்ண முடியவில்லை. பாபா, பரவாயில்லை, போதும் என்று கூறி கடைசியாகச் சென்றவர்களுடன் அனுப்பி வைத்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபாவின் முன்னிலையில் அதிக நேரம் இருக்கும் வாய்ப்பை அடையப் பெற்றதால், தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை அவள் உணர்ந்தாள்.

குழந்தைகளுடனான நிகழ்ச்சிக்குப் பிறகு, குழுவில் இருந்த அனைத்து அன்பர்களுடன் பாபா, சில நிமிடங்கள் தனிப்பட்ட நேர்காணலை நிகழ்த்தினார்.

பாபா இப்போது மெல்போர்ன் நகரிலிருந்து முன்னதாகவே புறப்பட இருந்ததால், மதியம் 2:00 முதல் 5:00 மணி வரை, திட்டமிடப்பட்டிருந்த பொது மக்களுக்கான நேர்காணல் நிகழ்ச்சி, மதியம் 1:00 மணிக்கு மாற்றப்பட்டது. 1:30 மணிக்கு பாபா, ஃபிரான்சிஸ் பிராபஸோனுக்கு இந்தத் தீவிர உணர்வைத் தூண்டும் வரிகளை எடுத்துரைத்தார்:

**பாபாவில் உயிரைத் துறக்க, பாபாவுக்காக இறக்க,**
**பாபாவுடன் உங்களை இழக்கும் காலையில்,**
**நீங்கள் பாபா எனும் ஏக இறைவனாக வாழ்வீர்கள்!**

**உங்கள் பொய்யான சுயத்தை நிராகரிக்கும் வேளையில்,**
**உண்மையான சுயமாக, உங்களை உறுதிப்படுத்திக் கொள்கிறீர்கள்!**
**எதையும் கேட்காத (விரும்பாத) நேரத்தில்**
**நீங்கள் அனைத்தையும் அடையப் பெறுவீர்கள்!**
**இறுதியில் துறவையும் துறக்கத் தூண்டும் அளவுக்கு**
**எல்லாவற்றையும் துறந்துவிடுங்கள்!**

**என்னை நேசிப்பது என்பது உங்களை முற்றிலுமாக மறந்து விடுவதற்கு சமம்.**
**எனது உண்மை நிலையை அறிய, (இதயத்தில்) ஒரு குழந்தையைப் போல மாறவேண்டியது அவசியம்.**
**மேலும் தெய்வீக ஞானமுள்ள இறை மனிதனைப் போன்ற ஞானத்துடன் இருப்பது முக்கியம்!**

பெரும்பாலும் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பிற பார்வையாளர்கள் அடங்கிய ஒரு பெரிய கூட்டம் பாபாவை சந்தித்தது. ஒவ்வொருவராக உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு, பாபாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அவர்கள் விரும்பும் எந்தக் கேள்வியையும் கேட்க அனுமதிக்கப்பட்டனர். நிகழ்ச்சி மதியம் 2:30 மணிக்கு நிறைவடைந்தது.

மெல்போர்ன் விமான நிலையத்தில், பாபாவின் ஒரு கடைசிப் பார்வைக்காக அனைவரும் ஒன்றுதிரண்டனர். ஆனால் அது கடைசிப் பார்வையாக இல்லை என நிரூபணமானது, ஏனெனில், பாபா விமானத்தில் ஏறியதும், அதன் ஓடுபாதையில் நகரத் தொடங்கிய சற்று நேரத்தில், என்ஜின் கோளாறு காரணமாக அது திரும்ப வேண்டியதாயிற்று.

ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்த பாபா, அங்கிருந்த அன்பர்களை நோக்கி கையசைத்தார். அவர் கிண்டலாகக் குறிப்பிட்டார், **“அவர்களின்** (விமான நிலையத்தில் இருந்தவர்கள்) **அன்பு, என்ஜினை செயலிழக்கச் செய்தது, எனவே நாங்கள் மீண்டும் திரும்பி வர வேண்டியதாயிருந்தது!”** மெல்போர்னிலிருந்து மாலை 4.30 மணியளவில் விமானம் புறப்பட்டு, மாலை 6:15 மணிக்கு ஸிட்னி நகரை வந்தடைந்ததும், பாபாவும் மண்டலியும் மெஹர் ஹவுஸுக்குச் சென்றனர்.

மறுநாள் 1956 ஆகஸ்ட் 14 செவ்வாய்க் கிழமை காலை, பாபாவை ‘ப்ளூ மவுண்டன்ஸுக்கு’ (BLUE MOUNTAINS) ஒரு நாள் பயணமாக அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்ததால், ராபர்ட் ரவுஸ் அதற்குத் தேவையான ஆயத்தங்கள், பாதுகாப்பான தங்குமிடங்களை ஏற்பாடு செய்ய முன்கூட்டியே அனுப்பப்பட்டார்; ஆனால் அன்று காலை, எரச், பாபாவின் தலைமுடியை சீர்செய்து கொண்டிருந்த போது, பாபா, பில் லெ பாஜை அழைத்து, பயணத்தை ரத்து செய்யுமாறு கூறினார்; அவர் பீக்கன் ஹில்லிலே தங்கி ஓய்வெடுக்கவும், தனது ஆன்மீக உள் பணிகளைச் செய்யவும் விரும்புவதாக அவருக்குத் தெரிவித்தார். இருப்பினும், பாபா, அன்று காலையில் ‘வேக்ஹஸ்ட் பார்க்வே’யில் (WAKEHURST PARKWAY) அமைந்த காடுகளின் ஒரு பகுதியிலும், ‘டீ வை’ (DEE WHY) கடற்கரையிலும் சிறிது நேரம் பயணம் செய்தார் - ஆஸ்திரேலியாவின் கடல் அலைமிதவை பலகையின்

மீதான விளையாட்டுக் (SURFING) கலாச்சாரத்தின் மையமான கடற்கரைகளுக்கு அவர் சென்ற ஒரே ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

அன்று காலை 11:00 மணிக்கு, பாபா, குழுவுடன் ஜான் கிரான்ட் மற்றும் நார்மன் & ஃபிரான்சிஸ் லீ ஆகியோரின் இல்லங்களுக்கு (106 ஆல்ஃபிரட் வீதி, நெர்வீனா மற்றும் 58 டிரிஸ்ட்ராம் வீதி, பீக்கன்ஸ் ஹில் - 106 ALFRED STREET IN NARRAWEENA & 58 TRISTRAM STREET IN BEACON'S HILL) விஜயம் செய்தார். இந்தக் குடியிருப்புகளில் குழுவின் உறுப்பினர்கள் தங்கியிருந்தனர். அவர்கள் ஸிட்னியின் வீதிகளில் உயரமான கட்டிடங்களைக் கடந்து சென்றபோது, ஓட்டுநராக இருந்த பில்லின் மனதில் 'எப்படி பாபா இதையெல்லாம் படைத்தவராக இருக்க முடியும்?' என்ற எண்ணம் அலைமோதியது.

எண்ணம் உதயமான அந்த கணத்தில், அவரருகில் அமர்ந்திருந்த பாபா, **"படைப்பு என்னிடமிருந்து வெளிவந்தது"** என்று சைகையால் தெரிவித்தார். ஜான் கிரான்டின் இல்லத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியில், திருமதி கிரான்ட் தயார் செய்திருந்த கேக்கை வெட்டி, பாபா அன்பர்களுக்கு விநியோகித்து, அவரது புகைப்படத்திற்கு மாலையும் அணிவித்தார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா மீண்டும் குழுவை சந்தித்தார். அன்று மதியம் 1:30 மணிக்கு, ஸிட்னி நகரின் மையப்பகுதியில் அமைந்த 73, கேஸல்ரீ(க்) வீதி, 'ஹாயிட்ஸ் மேஃபெயர் தியேட்டரில்' (HOYTS MAYFAIR THEATER AT 73, CASTLEREAGH STREET) திரைப்படம் பார்க்க பாபா அழைத்துச் செல்லப்பட்டார். ஸிட்னிக்கு திரும்பிவந்த பிறகு, முதல் முறையாக, பாபா மேற்கத்திய ஆடைகளை அணிந்திருந்தார் - கலிஃபோர்னியாவில் டெக்ஸ் ஹைடவர் ஒரு நீல நிற ஜாக்கெட்டை அவருக்காக வடிவமைத்திருந்தார். பாபா, இதை அணிந்துகொண்டு வெளியே வந்து, சுழன்று நின்ற வண்ணம் **"நான் எப்படித் தோற்றமளிக்கிறேன்?"** என்று வினவியதை ராபர்ட் ரவுஸ் நினைவு கூர்ந்தார்; பாபாவின் இந்த வார்த்தைகளால் மனம் நெகிழ்ந்து போன ராபர்ட், "நீங்கள் அற்புதமாகத் தோன்றுகிறீர்கள் பாபா" என்று தலையசைத்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் பில், பாபாவை தியேட்டருக்கு அழைத்துச் சென்றபோது, அவர் மனதில் எழுந்த எண்ணங்களைப் பற்றி கலக்கமுற்றார். அவரது மனதை அறிந்த பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், **"எண்ணங்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அவை வந்து போகட்டும். உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதும் மிகவும் கடினம், ஆனால் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். உணர்வுகள் செயல்களாக மாற இடந்தராதீர்கள். நீங்கள் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்."**

திரைப்படம் தொடங்கிய அந்த நேரத்தில் பாபாவும், அவரது குழுவினரும் தியேட்டருக்குள் நுழைந்தனர். உள்ளே கும்மிருட்டாக இருந்தது. பாபா வழக்கம் போல மாடி முகப்பில் நின்று கொண்டு, குழுவில் ஒவ்வொருவரும் அமர வேண்டிய இடத்தைக் காட்டிக் கொண்டிருக்க, இயற்கையாகவே, பாபாவுடன் சுமார் 20-40 பேர் வந்திருந்ததால், இதர பார்வையாளர்களுக்கு இது பெரிய இடையூறாக இருந்தது மட்டுமின்றி, பின் வரிசையில் இருந்தவர்களுக்குத் தொந்தரவாக இருந்தது. பாபாவிற்கு சற்று பின்னால் அமர்ந்திருந்த ஒருவர் உரத்த குரலில் தனது நண்பரிடம், "இவர் என்ன இயேசு கிறிஸ்து என்று நினைக்கிறாரா?" என்று கூறிய வேடிக்கையான ஆனால் அறிவார்ந்த கூற்றை, பாபாவுடன் இருந்தவர்கள் மனமார ரசிக்கத் தவறவில்லை. "நீங்கள் கூறும் அவரேதான் இவர்!" என அனைவரும் குரல் கொடுக்க விரும்பினர்.

'யாட் ஆன் தி ஹை ஸீ' (YACHT ON THE HIGH SEA) என்ற குறும் திரைப்படம் தொடங்கிய சில நிமிடங்களுக்குப் பிறகு, திரைப்படம் நன்றாக இல்லை என்று பில் லெ பாஜ் முடிவு செய்து, ஒரு கணம் கண்களை மூடி, பாபாவின் இறைத்தன்மையைப் பற்றி யோசித்தார். திடீரென அவரது முழங்காலில் யாரோ தட்டுவதை உணர்ந்து, திரும்பிப் பார்த்த போது, பாபா அவரை உற்று நோக்கி, **"ஆம், பார்க்கத் தகாதது என்று நானும் ஒப்புக்கொள்கிறேன்"** என்பது போலத் தலையசைத்தார்.

திரைப்படத்தின் போது, சில நேரங்களில் பாபா, தலையை மூடிக்கொண்டார். ஆனால் 20 நிமிடங்களுக்குப் பிறகு, பிரதான திரைப்படம் (இரண்டாம் உலகப் போரின் உளவுப் பணியைப் பற்றியது, 'தி மேன் ஹூ நெவர் வாஸ்' - THE MAN WHO NEVER WAS) தொடங்கியவுடன், பாபா தியேட்டரை விட்டு வெளியேறி, முன்கூடத்தில் அமர்ந்திருந்தார். அவர் அங்குக் காத்திருந்த வேளையில், திரைப்படம் பார்க்க விரும்புபவர்களைத் தொடர்ந்து பார்க்க அனுமதித்தார். இயற்கையாகவே, குழுவில் பலர் பாபாவைப் பின்தொடரவே, சிலர் மட்டுமே உள்ளே அமர்ந்திருந்தனர். பாபா குழுவினருடன் சிறிது நேரம் அமர்ந்து, அன்பர்களுக்கு சாக்லேட் விநியோகம் செய்தார். அவ்வேளையில், ஒரு பூனை அங்கே தோன்றி பாபாவை அணுகியபோது, அவர் அதை வருடிக் கொடுத்தார். விரைவில் பிற அனைவரும் பாபாவுடன் இணையவே, பில், நகர வீதிகளின் நீண்ட நெடிய பாதை வழியாக மெஹர் ஹவுஸுக்குத் திரும்பிச் சென்றார்.

மதியம் தேநீருக்குப் பிறகு, பாபா, அனைவரையும் உள்ளே அழைத்து, அமருமாறு கூறி, ஃபிரான்சிஸிடம் ஹஃபீஸின் கவிதைத் தொகுப்பு ஒன்றை மொழிபெயர்க்கக் கூறினார். பாபா, புத்தகத்தைத் தற்செயலாகத் திறந்து, பின்வரும் கஸலை வாசிக்க ஃபிரான்சிஸிடம் கொடுத்தார்:

ஓ எதுவும் அறியாதவரே! இறை ஞானத்தின்
குருநாதராக மாற முயற்சி செய்யுங்கள்:
நீங்களே இந்தப் பாதையைக் கடக்காத வரை,
பிறருக்கு எப்படி வழிகாட்டுவீர்கள்?

அன்பு மகனே! கடவுளின் பாடசாலையில் இறை அன்பைப்
பயிற்றுவிக்கும் ஆசிரியரிடமிருந்து
கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள்,
அதனால், ஒரு நாள், ஒரு வேளை நீங்கள்
இறைத் தந்தைகளில் ஒருவராவீர்கள்.

உறங்குவதும் உண்பதும் உங்களை இறை அன்பின் அரியணைகளைப்
அடைவதிலிருந்து வெகு தொலைவில் வைக்கும்;
உணவும், உறக்கமும் இல்லாத நிலை உங்களை
இறைத் தோழனை நோக்கி வழிநடத்தும்.

இறை அன்பின் ஒளி உங்கள் இதயத்திலும் ஆன்மாவிலும்
வீழ்ந்தால் - கடவுளின் மீது சத்தியம்,
வானத்து சூரியனை விட, நீங்கள் மிகவும்
அழகாக இருப்பீர்கள் என்பது நிச்சயம்.

ஆன்மீகப் பாதையில் செல்லும் மனிதர்களைப் போல,
தாமிரமான சுய வாழ்வை தியாகம் செய்யுங்கள்,
அப்போது நீங்கள் அன்பின் வேதியியல் முறையால்
சுத்தத் தங்கமாக மாறுவீர்கள்.

மாட்சிமை மிக்கவரின் பாதையில் முழு உடலையும்,
அர்ப்பணிக்கும் அந்த நேரம்,
இறை ஒளி உங்கள் தலை முதல் கால் வரை
மிகையாகப் பிரகாசிக்கும்.

இறைப்பெருங்கடலில் ஒரு கணம் மட்டும்
மூழ்கிவிட்டால்,
உங்கள் தலையின் ஒரு முடி கூட, ‘ஏழு கடல்’ நீரால்
ஈரமாகும் என நினைக்க வேண்டாம்.

கடவுளின் முகம் ஒன்றே உங்கள் பார்வையின்
இலக்காக இருந்தால்;
நீங்கள் **இறை ஞானி**யாக இருப்பீர்கள் என்பதில்

சந்தேகமில்லை இனிமேல்.

உங்கள் உலக வாழ்வின் அடித்தளங்கள் தகர்க்கப்படும்போது,
எண்ணாதீர்கள் உங்கள் இதயமெனும் வீடு
அழிக்கப்படும் என்று!

ஓ ஹஃபீஸ்! அன்பானவருடன் ஐக்கியமாகும் ஏக்கம்
உங்கள் மனதில் இருந்தால்,
ஆன்மீக பகுத்தறிவாளர் வாசல் முன்,
ஆக வேண்டும் தூசி போல்.

பாபா அப்போது புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு அறிவுறுத்தினார். யாரோ ஒருவர் அவருக்குப் பரிசாக வழங்கிய, முழுவதுமாக நிரப்பப்பட்ட கோலா கரடியை (KOALA BEAR) அவர், ஜோன் லி பேஜின் இரண்டு வயது மகள் ஜென்னிக்கு வழங்குவதற்காகக் கொடுத்தார். அன்று இரவு, பாபா விமான நிலையத்திற்குச் செல்வதற்கு சற்று முன்பு, வீட்டிற்கு வெளியே, பாபாவிற்கான மரியாதையின் நிமித்தம், பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. ராக்கெட்டுகளும், குண்டுகளும் வானத்தில் வெடிக்கவே, பாபா, வீட்டை விட்டு வெளியே வந்து, ஆச்சரியத்துடன் வானில் உற்று நோக்கி, வீட்டிற்குள் திரும்பிச் சென்று, "**இவர்கள் எதற்காக இதையெல்லாம் செய்கிறார்கள்? அவர்கள் ஆபத்தான நெருப்பை உருவாக்குவார்கள்!**" என்று கூறிய இரண்டே நிமிடத்தில், இருள் நிறைந்த புதரில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக, அனைவரும் தண்ணீருடன் புதரை நோக்கி விரைந்தனர். இந்த சம்பவத்திற்குப் பின்னர், அன்பர்கள் அனைவரும் பாபா மற்றும் மண்டலிக்குப் பிரியாவிடை அளிக்க விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றனர்.

பாபா, மெஹர் ஹவுஸில் (MEHER HOUSE) இருந்தபோது, ஒருமுறை அவர் பில் லெ பாஜிடம் எலுமிச்சை பழரசம் அல்லது எலுமிச்சை ஸோடா கேட்டார். பாபா ரேடியேட்டருக்கு அருகில் வைத்திருந்த குளிர் பாட்டிலை அவருக்காக பில் எடுத்து வந்தபோது, அது சற்று சூடாகவே இருந்ததை அவர் அருந்தினார். விமான நிலையத்தில் காத்திருந்த வேளையில் (அவர்களின் விமானம் தாமதமானது), பாபா ஒரு பாட்டில் ஆரஞ்சு ரசம் கேட்டார். பில் குளிர்ச்சியாக இல்லாத ஒன்றைத் தேடிச் சென்றார், ஆனால் சாதாரண வெப்பநிலையிலான கேனைக் கண்டுபிடிக்க முடியாததால், குளிர்ச்சியான ஒன்றை வாங்கி வந்து, அதன் மீது வெந்நீரை ஊற்றி சூடாக்கினார். பாபாவிற்காக வெதுவெதுப்பான பழரசம் கொண்டு வருவதற்காக தனது அன்பான அனைத்து முயற்சிக்கும் பிறகு, பாபா ஒரே வாய் அருந்திவிட்டு, அதை பில்லிடமே திருப்பிக் கொடுத்து, அருந்துமாறு கூறினார்; பில் அதை மிக்க சிரமத்துடன் அருந்தினார்!

பாபா இந்த விஜயத்தின் போது, மெஹர் ஹவுஸில் தங்கியிருந்ததால், அதை பாபாவின் பயன்பாட்டிற்காக மட்டுமே பாதுகாக்கவும், தனது குடும்பம் வேறு இடத்தில் வாழ வேண்டும் என்றும் பில் கருதினார். எனவே, பாபா விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்னர், இதை அவரிடம் தெரிவித்தார். '**ஃபிரான்சிஸின் அன்பால் உருவாக்கி**, **வழங்கப்பட்ட இந்த வீடு**, **பாபாவால் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது**' என்றும் பாபா உறுதி செய்தார்; '**ஆனால் பில் அதன் பராமரிப்பாளராகத் தொடர வேண்டும்**' என அறிவுறுத்தினார். '**அவரும் அவரது குடும்பத்தினரும் அந்த வீட்டில் வசிக்க வேண்டும்**, **ஆனால் அதை ஒருபோதும் விற்கக்கூடாது**' என்றும் கூறினார்.

பாபா புறப்பட்டுச் சென்ற பிறகு, ஜோன் & பில் லெ பாஜ், பாபா பயன்படுத்திய படுக்கை, போர்வை அனைத்தையும் பயன்படுத்தினர்; அவர்களின் குழந்தைகளில் எவரேனும் உடல்நலம் குன்றி காணப்பட்டால், பில் தம்பதியினர் அவர்களை இந்தப் படுக்கையில் தூங்க வைப்பதும், பில் இல்லாத வேளையில் குழந்தைகளும் சில நேரங்களில் அதைப் பயன்படுத்துவதும் வழக்கம். பல ஆண்டுகளுக்குப் பிறகு, மெஹர் ஹவுஸைப் பழுதுபார்ப்பது குறித்து பரிசீலித்தபோது, பில், பாபாவிற்குக் கடிதம் எழுதினார். அவர் விரும்பியதைச் செய்யுமாறு பாபா அவருக்கு ஒரு செய்தி அனுப்பினார்: "**அங்கு நிலவும் எனது பிரசன்னத்தை எதுவும் அழிக்காது**" என்று உறுதியளித்தார்.

1956 ஆகஸ்ட் 14 அன்று, ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் 'குவாண்டாஸ் ஏர்லைன்ஸ் ஈ.எம். 535' விமானத்தில் (QANTAS AIRLINES EM 535), பாபாவும் மண்டலியும் இரவு 10:30 மணிக்குப் புறப்பட்டுச் சென்றனர். விமானம் டார்வின் (DARWIN), ஜகார்த்தா (JAKARTA) வழியாக மதியம் 2:00 மணிக்கு சிங்கப்பூரில் தரையிறங்கி, ஆகஸ்ட் 15ஆம் தேதி, ராஃபிள்ஸ் ஹோட்டலில் (RAFFLES HOTEL), குளிரூட்டப்பட்ட அறையில் இரவும் பகலும் தங்க வேண்டியிருந்தது. பாபாவின் மனநிலை சரியில்லை. டாக்டர் நீலு, பாபா அருகில் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். பாபா தனது அறையில் இருந்த குளிரூட்டக் கருவியை நிறுத்தி, ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் மெஹர்ஜி, எரச், ஆதி ஆகியோரை திரும்பத் திரும்ப அழைத்தார். ஸூயஸ் கால்வாய் நெருக்கடி (SUEZ CRISIS) காரணமாக அவர்களின் விமானம் தாமதமாகலாம் என்று பாபா குறிப்பிட்டார், ஆனால் அது சாத்தியமில்லை என்று மண்டலி நினைத்தனர். இரவில் பாபா மிகவும் ஓய்வின்றி, ஜுரத்தால் அவதியுற்றார். அவர் மெஹர்ஜியிடம், 'காலை உணவு எத்தனை மணிக்கு வழங்கப்படுகிறது என்று விசாரிக்குமாறு' அறிவுறுத்தவே, காலை ஆறு மணிக்குப் பின்னரே தயாராகும் என்று மெஹர்ஜி தெரிவித்தார். ஆனால், இதற்கு முன்னதாக அவர்கள் புறப்பட வேண்டியிருந்ததால், பாபா அவரை மீண்டும் அனுப்பி, அவர்கள் புறப்படுவதற்கு முன்னர், அதிகாலை 4:00 மணிக்கு, உணவு வகைகள் எதையேனும் ஏற்பாடு

செய்ய முயற்சி செய்தார். அவர் முயற்சி செய்து முடியாமல் போனதில், பாபா மகிழ்ச்சியாக இல்லை.

அதிகாலையில் நீராடாமல், தேநீர் அருந்தாமல், பாபாவும் மண்டலியும் காலை 5:00 மணிக்கு, கீழே வரவேற்பு அறைக்கு வந்தனர். பி.ஓ.ஏ.சி - BOAC (பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் எயர்வேஸ் கார்பொரேஷன், BRITISH OVERSEAS AIRWAYS CORPORATION) பேருந்தில் விமான நிலையத்திற்குச் செல்வதாகத் திட்டம். அங்கு இரண்டு பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன; மெஹர்ஜி, முதல் பேருந்து சீக்கிரம் கிளம்பிவிடலாம் என்று எண்ணி, பாபாவை அதில் அழைத்துச் சென்றார். பேருந்தின் ஓட்டுநர் வராததால் வேறு எவரும் இல்லை. காலை உணவு கிடைக்காத காரணத்தால் ஆதியின் மனநிலை சீராக இல்லை, அதே வேளையில், பாபா இதர மண்டலி மூவரையும், அவரை எரிச்சலூட்டும் பல்வேறு விஷயங்களுக்காக நிம்மதியாக இருக்க அனுமதிக்கவில்லை. அப்போது, முதல் பேருந்து விமான நிலையத்திற்கு செல்லவில்லை என்பது தெரியவந்தது. அவரை அதில் அமர வைத்ததற்காக, பாபா, மெஹர்ஜி மீது மிகுந்த அதிருப்தி அடைந்தார். பின்னர், இரண்டாவது பேருந்தில் ஏறி விமான நிலையத்தைச் சென்றடைந்து கொழும்பு (COLOMBO) நோக்கி புறப்பட்டனர்.

ஸூயஸ் கால்வாய் நெருக்கடி காரணமாக, கொழும்பிலிருந்து மும்பை செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பாபா மண்டலியிடம் கேட்டார், **"நேற்று இரவு நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, எனக்கு பைத்தியம் பிடித்ததாக நினைக்கிறீர்களா?"** பாபா கோபமடைந்ததன் மூலம், ஸூயஸ் நெருக்கடி ஒரு சிறிய விவகாரமாக நிரூபிக்கப்பட்டதால், அவர் மிகவும் மோசமான சூழ்நிலையைத் தவிர்த்துவிட்டார் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

முதலில் பாபா, ஆகஸ்ட் 16ஆம் தேதி மாலை 6:45 மணிக்கு மும்பையில் தரையிறங்குவதாக இருந்தாலும், இப்போது கொழும்பில் 20 மணிநேரம் காலதாமதம் ஆனதால், அவர்கள் நகரத்திற்கு வெளியே ஏழு மைல் தொலைவில், கடல்நில உயர்முகட்டில் அமைந்த 'கிராண்ட் மவுண்ட் லவீனியா' ஹோட்டலில் (MOUNT LAVINIA HOTEL) இரவைக் கழிக்க வேண்டியிருந்தது. இந்தியாவிற்குத் திரும்புவதற்கு முன்பு, விமானம் தடுத்து நிறுத்தப்படலாம் என்றும், அவர் எங்கேயேனும் இரண்டு நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியது அவசியம் எனவும் பாபா ஏற்கனவே கூறியிருந்தார் - அது இயற்கையான வழியில் இறுதியில் அவ்வாறே நடந்தது.

ஸூயஸ் நெருக்கடியின் காரணமாக அவர்கள் கொழும்பில் தாமதமாகிவிட்டதாகவும், ஒரு நாள் தாமதமாக சத்தாராவிற்கு வருவார்கள் என்றும் விளக்கி, தொலைத்தந்தி அனுப்புமாறு மெஹர்ஜிக்கு பாபா

உத்தரவிட்டார். பணத்தை மிச்சப்படுத்த மெஹர்ஜி முகவரியை 'கேம்ப்-சத்தாரா' (CAMP-SATARA) என்று ஒரு வார்த்தையில் எழுதினார்.

முகவரியை இரண்டு வார்த்தைகளாக எழுதுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார், ஆனால் மெஹர்ஜி, "நான் எப்போதும் இதுபோன்ற தொலைத்தந்திகளை இந்த முகவரிக்குத்தான் அனுப்புகிறேன், பாபா, அவை எப்போதும் சரியான இடத்தைச் சென்றடைகின்றன" என்றதும், பாபா சீற்றமடைந்தார்; ஆனால், அவரது கருத்தை மேலும் விவாதிக்கவில்லை, மெஹர்ஜி ஒரே வார்த்தை முகவரியுடன் தொலைத்தந்தியை அனுப்பினார். அது ஒருபோதும் சென்றடையவில்லை; இதற்கிடையில், சத்தாராவில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும் பாபா இருக்குமிடத்தைப் பற்றி அறியமுடியாமல் மிகவும் கவலையுற்றனர்.

கொழும்பிலிருந்து 1956 ஆகஸ்ட் 17 காலை 9:00 மணிக்கு புறப்பட்ட விமானம், அன்று மதியம் 1:00 மணிக்கு மும்பையில் தரையிறங்கியது. காலம் இதை இவ்வாறு குறிப்பிட்டது: "அவதார புருஷர் 30 நாட்களில், நான்கு கண்டங்களில், 30,000 மைல்கள் உலகை வட்டமிட்டு வானில் பறந்தார்."

பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, பாவ் கல்சூரி, இஸ்மாயிலுடன் சத்தாராவிலிருந்து மும்பைக்கு வந்தார் (பாபா இல்லாதபோது பாவ் கல்சூரி அவருக்கு பயிற்சி அளித்தார்), இருவரும் நரிமனுடன் விமான நிலையத்தில் பாபாவை சந்தித்தனர். வாமன், ஆதியின் காரை அஹமதுநகரிலிருந்து கொண்டு வந்திருந்தார். பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக வேறு அன்பர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

மும்பை விமான நிலையத்தை விட்டு வெளியேறி, பாபாவும் மண்டலியும் ஆஷியானாவிற்குச் சென்றனர். தேநீர் அருந்திவிட்டு, பாபா, எரச், நீலு, மெஹர்ஜி, பாவ், இஸ்மாயில் ஆகியோர் அன்றே சத்தாரா சென்றடைந்தனர். மும்பையிலிருந்த வேளையில் சத்தாராவில் வாழ்ந்த பெண்மணிகளுக்கு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது - ஆனால் பாபா செல்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அது அவர்கள் கைகளை எட்டியது. ஆதி, மும்பையில் தங்கி, 19ஆம் தேதி அஹமதுநகர் திரும்பிச் சென்றார்.

சத்தாரா வந்ததும், மெஹர்ஜி அனுப்பிய தொலைத்தந்தி பற்றி பாபா கேட்டார். அது சென்றடையாததைக் கேள்விப்பட்ட அவர், மிகவும் கலங்கிப்போய், **"ஏன் நான் கூறியபடி செய்யவில்லை? அந்தத் தொலைதந்தி இப்போது எங்கே இருக்கிறது?"** என்று மெஹர்ஜியைத் திட்டினார். மெஹர்ஜி, சிறிது பணத்தை சேமிக்க முயன்ற தனது தவறை ஒப்புக்கொண்டு வருந்தினார். மறுநாள் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.




**ஸிட்னி விமான நிலையம்** (SYDNEY AIRPORT), **ஆகஸ்ட்** (AUGUST) **1956**





கடவுள் ஒருவரே
உண்மையானவர்
என்று நான்
திரும்பத் திரும்பக்
கூறி வருகிறேன்.
கடவுள்
எல்லோரிடமும்
இருக்கிறார்.
எல்லோரும்
கடவுளை நேசிக்க
வேண்டும். நீங்கள்
அவரை
எல்லோரிடமும்
பார்க்கும் அளவுக்கு,
கடவுள் மீது உங்கள்
அன்பு
அளப்பரியதாக
இருக்க வேண்டும்



-அவதார் மெஹர் பாபா